உ

சிவமயம்

# சோமாஸ்கந்தராஜ தரிசனம்





நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சோமாஸ்கந்தராஜ தரிசனம்

## காப்பு

### விநாயகர் துணை

சீரார்செம் வேழமுகத் தேவே நினையடைந்தேன்
ஆராயமுதே வெள்ளிவிழா மலாராக்குதற்கு - நேரே
பின்னங்கள் வாராமற் பேதையே னுள்ளத்தில்
முன்னின்று காத்தல் முறை

### நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் துதி

ஐயையித்தி மாநிழல்மேவு மன்னையே நின்புயத்தில்
வையத்தில் தொண்டர் மகிழ்ந்தணியும் - துய்யநறும்
பூமாலை யோடு புனைந்தருள்வாய் என்னுடைய
மாமலர் தன்னையுமன் பாய்

நாடுமிக வுடையாள் நெல்லண்டையெம் பதியுறைவாள்
சாடும்வினைகள் தகர்த்திடும் சால்புடையாள் - பீடுடைய
தக்கன்செய் மமதை வேள்விதனை மாய்த்திடும்
மிக்கமதிநலத்தாள் மலர்ந்தாள் சரண்.

### சரஸ்வதி துணை

பூவில் மணம்போலப் பூதலத்தி லேமனிதர்
நாவில் கொலுவிருக்கு நாயகியே - தேவியான்
ஆக்கப்பு குந்திட்ட வெள்ளிவிழா நூல்சிறக்க
வாக்காய் வரந்தா வரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | :- | "சோமாஸ்கந்தராஜ தரிசனம்" |
| தொகுப்பாசிரியர் | :- | சிவஸ்ரீ சைவ சித்தாந்த பண்டிதர் சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் (M.A MARP student) |
| முகவரி | :- | நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் பிரதமகுரு, தும்பளை, பருத்தித்துறை, இலங்கை. |
| மொழி | :- | தமிழ் |
| பதிப்பு | :- | முதற்பதிப்பு |
| ஆண்டு | :- | ஆவணி2008 |
| உரிமை | :- | நூலாசிரியர் |
| சமர்ப்பணம் | :- | நூலாசிரியரின் அன்புக்குரிய வித்யாகுருமார் அனைவருக்கும் |
| வெளியீடு | :- | நெல்லண்டையான் வெளியீட்டுக்கழகம் இலட்சுமணன் தோட்டம் நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை. |
| அச்சகம் | :- | தமிழ்ப்பூங்கா அச்சகம் நெல்லியடி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# "சோமாஸ்கந்தராஜ தரிசனம்"

அன்னபூர்ணே ஸதாபூர்ணே ச'ங்கர ப்ராணவல்லபே!
ஜ்ஞான வைராக்ய ஸித்யர்த்தம் பிஷாம்தேஹி ச பார்வதி!!

மாதா ச பார்வதி தேவி பிதா தேவோ மஹேச்'வர:!
பாந்தவா: சி'வபக்தாச் ஸ்வதேசோ' புவணத்ரயம்!!

வேதாரணியம் குருக்கள் பரம்பரையைச் சேர்ந்தவரும்
நந்தி கேஸ்வர கோத்திர வழித்தோன்றலுமான

## சைவ சித்தாந்த பண்டிதர்
## சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்

(B.A. Dip in Edu, M.A MARP student)

(நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் பிரதமகுரு இலட்சுமணன் தோட்டம் வீரமாகாளியம்மன் வட பத்திரகாளியம்மன் தேவஸ்தான ஆதீனஹர்த்தா)

அவர்களின் ஆச்சார்யபிஷேக வெள்ளிவிழா சிறப்பு மலராக நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகத்தினரால் தொகுக்கப்பட்டது.

**நெல்லண்டையான் வெளியீடு**
**இல: 24**
**2008.09.04**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருள் அடக்கம் பக்கம்


1. வாழ்த்தியல் 1 – 73 – II

௨. தோத்திரவியல் 74 – 15௨

3. கட்டுரையியல் 153 – ௨05

4. சோமாஸ்கந்தராஜ தரிசனவியல் ௨06 – ௨6௨


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குலதெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாதா

ஸ்ரீ. இராஜலக்ஷ்மி அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிதா

சிவஸ்ரீ க. தியாகராஜாக்குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீட்சா குரு

சிவஸ்ரீ. கந்தசிவபாதசுந்தரக்குருக்கள்

(மயிலிட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரு

திருமதி. அருள்நங்கை சண்முகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லண்டையான் வெளியீட்டுக்கழகச் செயலாளர் வேல் நந்தகுமார் அவர்கள் வழங்கிய வெளியீட்டுரை

சிறந்த தமிழ் பேரறிஞர்களுக்குப் பேர்போன இடம் பருத்தித்துறை. சமயப்பற்றும், மொழிப்பற்றும், பண்பாட்டிலும் அன்றும் இன்றும் வழுவாது வாழ்கின்ற மக்கள் இவ்விடத்தில் குடிகொண்டுள்ளார்கள். நமது சமயம், மொழி, பக்தி, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை பேணிப் பாது;காத்து வளர்கின்ற நோக்கில் பலநூல்களுக்கு உரைகண்டவரும், பலநூல்களைப் பரிசோதித்து பதிப்பித்தவருமாகிய சோமசுந்தர ஐயர் உதித்த தொன்மைசீர் சைவக்குருமரபில் (தாய்வழி) வந்துதித்து இன்று எமது சமூக அறிவுச் சொத்தாக பல்துறை அறிவுக் களஞ்சியமாக நடமாடும் தெய்வீக அருட்சக்தியின் வடிவமாக எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மதிப்புமிகு எம் குருவானவராகிய சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள் அவர்களது குருப்பட்ட வெள்ளி விழாவைச் சிறப்பிக்கும் வகையில் நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகமானது **"சோமாஸ்கந்தராஜ தரிசனம்"** என்ற இவ்வரலாற்று ஆவணப் பொக்கிஷத்தினை வெளியிடுவதையிட்டு பெருமை கொள்கின்றது.

ஏற்கனவே சைவாலயக்கிரியை, ஆலய வழிபாடு, வேதங்கள், யோகசித்து என பலநூல்களை வெளியிட்டு சைவசமய தத்துவ வளர்சிசிக்கும் பரவலாக்கத்திற்கும் வித்திட்ட எமது நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம் அதன் தொடர்ச்சியாக இன்று 24வது சோமாஸ்கந்தராஜ தரிசனம் என்ற பெருமை மிகு இந்நூலை வெளியிடுகின்றது. ஒரு வரலாற்றுப் பணியின் ஆவணத் தொகுப்பாய் வாழ்த்தும் உள்ளங்களின் மனவெளி விரிவாய் தோத்திரங்களின் தத்துவ அறிவுப் பெட்டகமாய் விளங்கும் இத்தரிசனம் படிப்போர் மனதை இன்னும் பல தரிசனங்களுக்கு அழைத்துச் செல்லும் பான்மையுடையது. ஒரு சைவகுல அந்தணக் குருவானவ்ர் சமூகத்தின் அத்தனை உள்ளங்களிலும் எப்படி மதிப்பு மிகுந்தவரானவர் என்பதற்கு இந்நூலின் வாழ்த்தியலே சாட்சி.

இந்நூலின் கதாநாயகர் நம் குருவானவர் அம்பிகையின் அருட்குமாரர், நெல்லண்டை அம்பிகையிலும் வீரமாகாளியிலும் கலந்துறையும் உபாசகராய் வேதம், சாத்திரம், வைத்தியம் என அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்குவதுடன் கல்வியால் ஹாட்லியின் ஆசிரியராகி இன்று குடத்தனை மெ.மி.த.க. பாடசாலையில் அதிபராய் கடமை புரியும் சீர்மியக் கல்வியாளர்.
கல்வியில் டிப்பிளோமா, தமிழில் முதுகலைமாணி, சைவத்தில் 'சித்தாந்தபண்டிதர்' என குறுகியகாலமதில் அறிவால் தன்னை ஆழமாக்கிக் கொண்டவர். இவை யாவற்றுக்கும் மேலாய் எல்லோரோடும் பழகுவதற்கு எளியவர் மாணவரை அன்பால் அரவணைத்து ஆசியும் அறிவுரையும் கூறி ஆற்றுப்படுத்துபவர். தன்னை நாடிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியவரின் குறைகளைந்து அவர்தம் வாழ்வினை நிறையவைக்கும் ஆற்றலின் வடிவமாகவும் பொலிவுற்று விளங்குகிறார். கண்ணன் ஐயாவாய் எம் அறிவுக்கண்ணுக்குள் நிறைந்துள்ளார். அவரிடம் தமிழ்ப்பாடம் கேட்டவன் என்ற வகையிலும் எனது பாட்டனார் பண்டிதர் மு. பொன்னையா அவரின் தந்தையாரின் குருவானவர் என்ற வகையிலும் எமது குருவின் 10ம் ஆண்டு நிறைவு விழாவில் இத்தொடர்பை பண்டிதர் மு. பொன்னையாவின் வாழ்த்துரையிலிருந்து விபரமாக தெரிந்து கொள்ளலாம். நான் படித்துயர பல நூல்களைத் தந்தவித் தேடலை ஊக்குவித்து அறிவுலகில் எனை உயரவைத்த ஏணிப்படி என்றவகையிலும் அவர் நடுநிலமையில் பல பட்டிமன்றங்களில் பங்கு கொண்டவன் என்ற வகையிலும் கண்ணன் ஐயாவிற்கும் எனக்குமான உறவு அநாதியானது. அறாத்தொடர்ச்சியானது ஆசிகூறி எமை என்றும் வழிநடத்தும் அந்த அருளாளரின் வெள்ளிவிழா மலரை நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகத்தின் செயலாளராய் ஐயாவின் அன்புமிகு மாணவனாய் இருந்து வெளியிடக் கிடைத்த வாய்ப்பை அந்த அம்பிகையின் அருட்பேறாக கருதி அக மகிழ்கின்றேன் அத்துடன் இன்றைய நெருக்கடியான சூழலிலும் ஒரு காலத்தின் பதிவாய் வரலாற்று ஆவணமாய் வெளிவரும் இந்நூலில் இடம்பெறவுள்ள ஐயாவின் வாழ்த்தியல் பகுதிக்கு வாழ்த்து வழங்கியவர்களுக்கும், ஏனைய கட்டுரை, கவிதை, பாடல் ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும் இவ்விழா சிறப்புற பாடுபட்டுழைத்த ஐயாவின் ஏனைய மாணவர்களுக்கும், குறிப்பாக ஐயாவின் அன்புநிறை மாணவனும் ஆசிரியர் சிவமுகுந்தன் அவர்கட்கும்,மற்றும் அன்புநிறை மாணவன் ராஜீஸ் அவர்கட்கும், ஐயாவின் இனிய மனையாளுக்கும், புத்திரர்கள், மருமக்களுக்கும், ஏனைய உறவினர்க்கும் ஐயாவில் பற்றுள்ள அனைவருக்கும் எமது வெளியீட்டுக்கழகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் ஐயா அவர்கள் சைவகுல அந்தணக் கல்வி உலக வாழ்வில் இன்னும் பல சீரும் சிறப்புக்களையும் பெற்று பொன்விழா, பவளவிழா, நூற்றாண்டுவிழாக் கண்டு சிறக்க வேண்டும் என எல்லாம் வல்ல அம்பிகையின் பாதம் பணிந்து அமைகின்றேன்.

"தோன்றின் புகளொடு தோன்றுக அஃதிலர்
தோன்றலில் தோன்றாமை நன்று"

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்"

நெல்லண்டையான் வெளியீட்டுக்கழகம் எதிர்காலத்தில் ஈழத்து சைவத்தமிழ் உலகிற்கு காத்திரமான படைப்புகளை தரும் என்றுகூறி மீண்டும் ஒரு படைப்பில் சந்திக்கும் வரை

என்றும் ஆசியுடன்
ஆசிரியர்
வேல் நந்தகுமார் (B.A.Hons)
செயலாளர்
நெல்லண்டையான் வெளியீட்டுக்கழகம்
தும்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழாநாயகன் உள்ளத்தில் இருந்து

அம்பிகையின் அருட்குமாரர் விநாயகப் பெருமானுடைய திருவருளை முன் துணைக்கொண்டு எங்கும் எல்லாவற்றிலும் உறைந்து வளங்கும் அன்னையாம் அருள்சக்திமிகு நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்மன், இலட்சமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளியம்மன் வடபத்திரகாளியம்மன் பாதாரவிந்தங்களை சிரசின் கண்ணே சூடிக்கொண்டு தெய்வநலம் குருநலம் எல்லாவற்றையும் வாழவைக்கும் மனிதன் புனிதனாவதற்குக் குருவருள்மூலம் முதலில் திருவருள் சுரக்க வேண்டும்.

குரு என்பவர் அஷ்டமங்களம் சாந்தித கலைகள், சப்த ரிஷிகள், சப்த (7) ஆசனங்கள், சப்த தளங்கள் ஆகியவற்றையும் 14 லோகங்களையும் ஒரு கணப் பொழுதில் மனத்திரையில் பதித்து பஞ்சப்புலனையும் பார்த்தியாதி ஐக்கியத்தில் மூவகை சுத்திகளுடன் ஐவகைக் காரணங்களையும் .பவித்திரமாக்கி நிர்வாண நிலையில் சிவா.அர்ச்சனை செய்து சிவா அர்ச்சனா தீபிகையின் 358ம் இலக்கத்திற்கு இணங்க இயங்க வேண்டும்.

வேதங்களின் விளக்கமாக விளங்கும் பிராமணங்களை அடிப்படையாகக் கொண்டு அதன் விரிவாகிய ஆகமங்கள் கூறியதற்கிணங்க தெய்வத்திடம் குருநிலை கொண்டு அடியார்களின் அல்லல்களைப் போக்குவது குருவுக்கு அத்தியாவசியமாகிறது.

இத்தகைய குருத்துவப் பயிற்சி வேதங்களை ஓதி, தோத்திர வடிவங்களாக்கி, நாதலய கீதமாக இறையை நினைந்து இசைக்கும் போது இகபரசுகம் கிட்ட வழிசெய்யும். ஒன்றினூடாகவே ஒன்றைப்பார்ப்பது அல்லது காண்பது மனித இயற்கை ஆகும். ஆக்கும் இயல்புடைய ஆண்டவனே அழிக்கும் தன்மை உடையவனாக, காக்கும் இயல்புடையவனாக, பின் மறைத்து, அருளும் பாங்குடையவான விளங்குகன்றான்.

இத்தகைய இயல்புடைய இறைவன் காலதேசங்களிற்கும் நாமரூபங்களிற்கும் அப்பால் பட்டவனாய் அணுவுக்கணுவாய் அமைகின்றான். புலன்களுக்கெட்டாத இறையை சித்திரவர்ண உருவப்படிவ வடிவங்களுக்குண்டாக்கி அவற்றிற்கு உயிர் கொடுக்கும், "மனோபக்குவம் உள்ளவனே குருவானவன்" அதன் அடிப்படையிலேயே ஆசனத்தில் அமர்ந்து, அருகதையுடைய அடியார்களுக்கு அருள்வேண்டும் உன்னத பணியை தன்னகத்தே ஆளும் அன்னை அருட்சக்தியைக் கொண்டு வினைதீர்க்க முடிகின்றது.

என்னை தனிமனித விமர்ச்சனங்களுக்கு அப்பால் சித்தாகாச நிலையும் காம, குரோத பகைகளை மறந்து, மத வெறி விலக்கி மனிதநேயம் உள்ள, எல்லாம் கடந்த, சமநிலை கொண்டு, வாழப்பண்ணியவள் எம் அன்னை நெல்லண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வீரபத்திரகாளியாவாள். பல்லாயிரம் பக்கம் படித்ததும் பல்லறிவாளர்கள் கூற்றைக் கேட்டும் பட்டறிவுடன் இறையுணர்வை எனக்கு முதலில் வழங்கியவள் என்னை பெற்ற அன்னை. அடுத்து நன்னிலைப் படுத்தியவர்கள் நல்லிதயம் கொண்ட நல்ல நண்பர்கள். அந்த நண்பர்கள் வளர்பிறை போலவும் நல் அகத்தை புத்தகமாக்கியவர்கள் குறிப்பாக என்னை புதுக்கிய(புத்தகம்)மாக்கியவர்கள் இவர்களே.

ஆசைக்கும் உணர்வுகளிற்கும் நல்ல விருந்தாக இருந்த பேரறிவாளர் திருவைக் காட்டியவர்கள் அதாவது "நெல்லண்டையான் வெளியீட்டுக்கழகம் என்ற ஒன்றை உருவாக்கி நல்ல வித்துவ ஆலோசகர்களைத் தந்து, அவர்களே மகோன்னத வழி நிலைகளைச் சீர்மியாக்கியவர்கள். அவ்வகையில் எனது ஆரம்பகாலத்தில் வித்தியா குருவாக அறிவை ஊட்டியவர்கள் ஆ.வடிவேலு, திரு. ஆழ்வார்ப்பிள்ளை செல்வரட்ணம், சாரதா ஆசிரியை, திருநாவுக்கரசு முதலி சிறிய தந்தையார் சோமசுந்தரக் குருக்கள், செல்வி மங்களம். அருனந்தி (MA), த. சந்திரசேகரம் (ஓய்வு பெற்ற அதிபர்) தந்தையாரின் நண்பர் தில்லையம்பலம், உயர்திரு R. கார்த்திகேசு (பம்பலபிட்டி இந்துக்கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியர்) பாலபண்டிதர் மு. வேலாயுதபிள்ளை, இந்திரா கிருஷ்ணகுமார் (MA), திக்கம், வேலாயுதம் பண்டிதர் (ஓய்வுபெற்ற அதிபர்), கோகிலா ஆசிரியை, திலகவதி ஆசிரியை, ரத்தினம் ரீச்சர்,(செல்வரட்ணம் ஆசிரியரின் மனைவி) றெமிசியர் ஆசிரியர், திருமதி. சேதுநாயகம், வடிவேலு கணிதம் (ஓய்வு பெற்ற அதிபர்) பானுமதி ஜெயராஜா, திருமதி. அருள்நங்கை சண்முகநாதன், திருமதி. மீரா, உயர்திரு குழந்தைவேல், உயர்திரு குமாரவேல், கிருபானந்தமனுநீதி ஆகியோர்கள் ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, க.பொ.த.உயர்தர கல்வி, ஆகியவற்றை தந்துதவினார்கள்.

இக்காலத்திலே சமஸ்கிருத கல்வியைஎனது தந்தையார் தியாகராஜக்குருக்கள் மூலம் யாழ்ப்பாணம் சிவானந்தா குருகுலத்தில் சேர்க்கப்பட்டேன். நானும் எனது சகோதரன் வேதையாக் குருக்களும், மைத்துனன் சிவராஜாக் குருக்களும் நாயன்மார் கட்டு விக்னேஷ்வரக் குருக்களும் (ராசன்) ஒன்றாக சமஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ சி. சதாசிவக்குருக்கள் நியாய சிரோன்மணி பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ. நாராயண சாஸ்திரிகள் ஆகியோர்களிடம் குரு சிஷ்ய முறைப்படி பயின்றோம். அக்காலத்தில் ஆத்தியடி கிருஸ்ண சிங்கத்திடமும் சிறிது காலம் சமஸ்கிருதம் கற்றோம்.

சோதிடக் கலையை முதலில் மட்டுவில் பிரம்மஸ்ரீ. சி. சதாசிவக் குருக்களிடமும் தொடர்ந்து ஆத்தியடி சோதிடர் சோமசுந்தரத்திடமும் அயனாம்சம் பாகை, சோதிட நாடி ஆகியவற்றை செல்லத்தம்பி என அழைக்கப்படும் கனகசபையிடமும் வரரிஷி சாதக அலங்காரம், பலன் ஆகியற்றை தும்பளை ச.கு. அம்பலவாணப்பிள்ளை அவர்களிடமும் நுணுக்கமான சோதிடக் கலையை எமது சிறிய தந்தையார் சோமசுந்தரக் குருக்களிடமும், அன்பர் கற்கோவளம் காளிதம்பி, மற்றும் தம்பு இராமச்சந்திரனிடமும் மேலும் சோதிட ஆய்வாளன் சிவத்திரு கணபால சுவாமிகள் க.வீணுகோபால் (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களிடமும் பெற்றுக்கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சித்தாந்தக் கல்வியை பண்டிதா் பேரின்ப நாதன், பேராசிரியா் கலாநிதி. வேதநாதன், பன்மொழி அறிஞா். சபாரத்தினம் (ஓய்வு பெற்ற அதிபா், காந்தி சேவா சங்க செயலாளா்) அவா்களிடமும் கற்றுக் கொண்டேன். பண்டித வகுப்பில் யாப்பு செய்யுள் இலக்கணத்தை பண்டிதா் கடம் பேஸ்வரன், வித்துவான் சொக்கலிங்கம் (சொக்கன்), கவிஞா் சோ. பத்மநாதன், சி. சிவப்பிரகாசம், இலக்கண வித்தகா் இராமசாமி நமசிவாய தேசிகா், வித்துவான் சந்திரசேகரம் எனது மாணவா் சிவமுகுந்தன் வேல். நந்தகுமாா் ஆகியோருடன் கற்றேன்.

இவ்வேளையில் தொடா்ந்து கட்டுவன் மயிலிட்டி தெற்கு கிரியாவித்தகா் கந்த சிவபாத சுந்தரக்குருக்களிடம் குருத்துவத்திற்கான பயிற்சிகளையும் நிா்வாண தீட்சிசையையும், குருப்பட்டத்தையும் 1993.09.04 அன்று என்னை உருவாக்கிய அன்னை ஸ்ரீநெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தில் அன்பா்கள், அடியாா்கள், அறிஞா்கள், எனது இனிய நண்பா்கள், என் மதிப்பாா்ந்த அருள்நங்கை சண்முகநாதன், மீரா ஆசிரியை வாழ்த்த எனது தம்பியாா் வேதையாக் குருக்களிற்கும் குருப்பட்டம் திருவருளோடு அன்னை அருட்சக்திகூட ஒப்பேறியது.

குருத்துவ நண்பா்களாக பண்டைத்தரிப்பு நடராஜக்குருக்கள் (ஆசிரியா்) மதிப்பாா்ந்த பாலமனோன் குருக்கள், சிறப்பாா்ந்த பாலகிருஷ்ண குருக்கள் அன்பாா்ந்த கேதீஸ்வரக்குருக்கள், பாலபத்மநாபக் குருக்கள் 1999 தொடக்கம் 2001ம் ஆண்டுவரை குருத்துவ இடைஞ்சல் வந்த காலத்தில் அதாவது நெல்லண்டைப் பத்திரகாளி அண்டையாய் இருந்த வேளையில் மன ஆறுதல் தந்த சிவஸ்ரீ சுந்தரராஜக்குருக்கள்(சுழிபுரம்) இரங்கேஸ்வர குருக்கள் அவா்கட்கும் (ரங்கன்) எனது சிறிய தந்தையாா் சோமசுந்தரக் குருக்கள் அரவணைப்பில் சிவஸ்ரீ. சதா. மகாலிங்க சிவக்குருக்கள், தண்டபாணிக தேசிக குருக்கள், விவேகானந்தராஜாக் குருக்கள் (சந்திரன்) ஆகியோா்களுக்கு என்றென்றும் கடப்பாடும் நன்றிக்கண் பாா்வையும் நிறைவும் கொண்டவராய் இருப்பேன்.

3ம் நிலை உயா்தரக்கல்வியை வழங்கிய மதிப்பாா்ந்த அருள்நங்கை சண்முகநாதன், பேராசிரியா் கலாநிதி S. சிவலிங்கராஜா, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியா் பொன்பால சுந்தரம்பிள்ளை, பேராசிரியா் சபா. ஜெயராஜா, பேராசிரியா் குகபாலன் கலாநிதி கலாமணி, கலாநிதி அன்ரனிராஜன், பேராசிரியா் சிவச்சந்திரன், கலாநிதி வேதநாதன் ஆகியோா்களையும் என்றென்றும் மறக்கமாட்டேன். என்னுடைய தொழில் தகமை வலுவூட்டற் பொருட்டு எனக்கு வாய்த்த நல்ல ஆசான்களாக அமா்ந்திருந்த மா.சின்னத்தம்பி, செல்வி. அருளானந்தம், திருமதி. ஜெயலட்சுமி இராசநாயகம் ஆகியோரையும் இவ்வேளையில் நினைத்து வணங்குகிறேன். இவா்கள் அனைவரும் என் உயிரோடும் உணா்வோடும் ஒன்றி அபிமானத்துக்கும், கௌரவத்திற்கும் உருத்தானவா்கள். அவா்களிற்காக என்றென்றும் என் அன்னையின் அடிக்கமலத்தில் அா்ச்சனைப் பூக்களைச் சொரிந்து வாழ்த்துவேன் **"சததம் சந்ததம் நமதுப்யம் நமஸ்தெ குருதேவா சிவம்சக்தீம்!!"** என்று தினமும் குருப்பிரம்மமாக வணங்குவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து என்னுடைய பத்தாவது குருத்துவ பெருவிழாவில் நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகமும், பருத்தித்துறை புலோலி பசுபதீஸ்வரர் பார்வதி வத்தினி மண்டபத்தில் **'ஆலய வழிபாடும் தத்துவமும்'** என்ற நூல் வெளியீட்டைத் தொடர்ந்து பலவகை ஊக்கங்களைத் தந்த கழகத்தார்க்கு எம் அன்னை அருளை அள்ளி வழங்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

வேண்டிய வேளையில் வேண்டியவாறு வேற்றுரைகள் பகராது வாழ்த்துரைகள் வழங்கி வான்மைமிக்க அத்தனை மன உள்ளங்கொண்ட அனைத்து அறிஞர்களையும் தனித்தனி கூற வார்த்தைகள் வார்ப்பதற்கில்லை. ஆகவே என்னுள் மனத்தால் உண்மையாக அவர்களைத் திருநாவுக்கரச சுவாமிகள் கூறிய **" நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாது ஒரு பொழுதும் இருந்தறியேன்"** என்ற வார்த்தையை சமர்ப்பணம் செய்கின்றேன்.

1981.04.21ம் திகதி வல்வெட்டித்துறையில் கிருபானந்தவாரியார் அவர்களிடம் **"அன்பனே இரைதேடுவதோடு இறையும் தேடு"** என்ற ஆசியுடன் உருவாகிய பிரசங்கமும் பின்னர் பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலயத்தில் கொடியேற்ற காலத்தில் பிரம்மஸ்ரீ வாசுதேவக்குருக்கள் அனுசரணையுடன் வடமராட்சி முழுவதிலும் சமயச் சொற்பொழிவு ஆற்றினேன். தொடர்ந்து அருட்கவி விநாசித் தம்பிப்புலவர் பாடிய ஒலிப்பதிவு நாடா வெளியீட்டின்போது **"சிவஉமாஸ்கந்த"** அருளோடு நிறைந்த அருட்கொடையாகப் பெற்றுக்கொண்டேன்.

அதன்பின்னா மானிப்பாய் முருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகள் **"குருமணி"** என்ற பட்டத்தைத் தந்து இறையருளில் ஆழவைத்தார். சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் மோகனதாஸ் அவர்கள் சொற்பொழிவுகள் வெளியீட்டுரைகள் மதிப்பீட்டுரைகள் தாம் வெளியிடும் **"ஞானசுடர்"** மலரிற்கு ஆற்றும்படி கட்டளையிட்டார். அத்தொண்டும் முருகப் பெருமான் அருளால் சிறப்பெய்தி வருகின்றது. தொடர்ந்து நெல்லண்டை வீதியில் இயங்கும் **"அஞ்சலி அகம்"** அமைப்பாளர் அருட்திரு டேமியன் அடிகளார் வெள்ளிவிழாவின் போது பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததோடு தமது அஞ்சலி சஞ்சிகையை முதன்முதலில் வாழ்த்துச் செய்தியை பிரசுரித்தமையை நான் என்றும் மறவேன்.

1993.09.01 அன்று ஆசிரிய நியமனம் பெற்ற குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் பதவி ஏற்றபோது முதலாவது அதிபர் என்ற பெருமையை அன்புக்குரிய உயர்திரு. க. வீணுகோபாலு அவர்களையும் என்றும் ஏற்றுவேன். தொடர்ந்து அம்பன் அ.மி.த.க பாடசாலையில் அதிபரான துன்னாலை மண் பெற்றெடுத்த மதிப்புமிக்க ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களை என்றும் நினைத்த வண்ணமே உள்ளேன். 1998.01.01 யா/ ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரிய கடமை ஏற்று உயர்திரு. வேணுகோபால் வாணிதாஸன் அவர்களிடம் பெற்ற ஆலோசனைகள் என்றும் நிழலாடிய வண்ணமே உள்ளது. தொடர்ந்து பதிலதிபர் உயர்திரு. குணசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எனக்கு ஓர் சீர்மியர் 2000ம் ஆண்டு அதிபர் உயர்திரு. மு. ஸ்ரீபதி அவர்கள் என் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தவர் என்றும் மறக்க முடியாத அனுபவங்களைத் தந்தவர். 2002ம் ஆண்டு தொடக்கம் 2005.08.26 வரையும் உயர்திரு வே. பத்மநாதன் அவர்கள் காலநேர சூழ்நிலைக்கேற்ப என் மகன் சித்பவனை இழந்த வேளையில் மனமறிந்து உதவிசெய்த உத்தம மனிதர் ஆவார். மனித பண்பின் சிறப்பினை அவரிடம் நான் கண்டேன்.

2005.12.05ம் திகதி ஹாட்லியின் மறுமலர்ச்சி **"எங்கள் தெய்வம்"** என்று அன்பாக அழைக்கும் உயர்திரு நடராஜா, தெய்வேந்திரராஜா அவர்கள் நான் சந்தித்த அனைத்து அதிபர்களிலும் நிலைநிறுத்திப் பார்க்கக்கூடியவர். அன்புக்கும் பரிந்துரைப்பிற்கும் வரவேற்று நல்லதைக் கண்டு வாழ்த்தும் உயர்ந்த பண்பு அவரிடம் நான் கண்ட உண்மையாகும். அதுவே குடும்ப நண்பராக சிறந்த அதிகாரியாக நான் இன்றும் அவரிடம் காண்கிறேன். அவரை என்றும் நான் மறவேன். மதிப்பேன்.

ஹாட்லிக் கல்லூரியில் கடமை ஆற்றிய காலத்தில் அனைத்து ஆசிரியர்களும் என்னுடன் எந்தவிதமான முரண்பாடுகள் இன்றி அன்பு நெறியோடு குருக்கள் என்ற மதிப்புடன் நடாத்தியவர்கள். அவர்களில் எல்லோரும் சிறந்த நண்பர்களே! தனித்து ஒரு சிலரின் பெயரைக் குறிப்பிடுவது என் உள்ளத்தைப் புறக்கணிக்கும் என்பதால் எல்லோரையும் அன்பு நெறி நண்பர்களாகவே என்றும் காண்பேன். அவர்கள் தம் உரையாடலை என்றும் மறவேன். சமய விழுமியம் வழிபாட்டு விழுமியம் நன்னிமித்த சோதிட விழுமியம் மேலும் இந்து மா மன்றம், தமிழ் மன்றம், சமூக விஞ்ஞான மன்றம் மற்றும் இதர மன்றங்கள் என்னை நிறைதரும் அறிவுக்களஞ்சியமாக்கியது. எல்லாவற்றையும் விட ஹாட்லி அன்னையின் பிரார்த்தனை மண்டபமும் நூல் நிலையமும் என்னுடைய கல்வியிலும் உயர் கல்வியிலும் உயிருக்கு உரமாக உதவியது. குறிப்பாக பகுதித் தலைவர்ளும் இணைபாடவிதான இணைப்பாளர்களும் என்றென்றும் இனிமையுடையவர்களே.

ஹாட்லிக் கல்லூரியில் நான் பெற்ற மாணவர்களே அருஞ்செல்வங்கள் ஆயிரத்திற்கும் அவர்கள் மேற்பட்டவர்கள். இன்றும் என் அன்புச் செல்வங்களாக ஹாட்லி மாணவர்கள் என் நெஞ்சில் நிணைப்பில் நீங்காதவர்கள் ஆகின்றனர்.

இத்தொடர்பை எதிர்காலத்தின் என் ஆளுமையும் விழுத்துணையானவைகள் அதன் பெரும் கொடை அல்லது பிரதிக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. S. நந்தகுமார் அவர்களின் வாக்குப்படி எனக்கோர் வரப்பிரசாதமாகும். நான் துவளுகின்ற காலத்திலும் அன்பு மகிளுகின்ற காலத்திலும் என் உயிர்க்கும் உடலுக்கும் உதவுகின்ற நல்ல மாணவச் செல்வங்களையும் ஹாட்லி அன்னை தந்திருக்கின்றாள். அக்கடன் இப்பிறவியில் தீராது.இந்த வரப்பிரசாதம் யா/ குடத்தனை கரையூர் மெ.மி.த.க பாடசாலை அதிபராக்கியது. அங்குள்ள ஆசிரியர்களையும் மாணவச் செல்வங்களையும் சகல வழிகளிலும் உயர வைப்பதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மூச்சாகும் அச்சமூகத்தில் பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆசிரியர்கள் எல்லோர்க்கும் நான் கடமைப்பட்டவன் காரணம் எனது குருப்பட்ட வெள்ளிவிழாவை முதன்முதலில் செய்தவர்கள் அவர்கள்.

நண்பர்கள் என்ற வரிசையில் குருத்துவ நண்பர்களைப் பற்றி குருமணிகள் பற்றி ஏற்கனவே கூறிவிட்டேன். என் பாலிய சிநேகிதர் இரத். யோகமூர்த்தி, அன்புநிறை தம்பு. இராமச்சந்திரன் என் மாணவனும் எனது அதிப்பிரிய ர.தினேஸ், ர.ராஜீஸ், சிவமுகுந்தன். வேல். நந்தகுமார் முல்லையோகநாதன் ஆகியோர்க்கு நட்புடனும் மதிப்புடனம் உரிமையன்புடனும் சரியான வழியில் நடாத்துவதற்கு அவர்கள் என்னுடையவர்கள் அவர்களிற்கு என் அன்னை அம்பிகையின் வாழ்த்துக்களே அருளாகும்.

இவ்வெள்ளிவிழாவின் நிகழ்வின் நிழலாக உயிருடன் ஒன்றி என் உரிமையுடையவர்களாக விளங்குபவர்கள் நெல்லண்டையான் வெளியீட்டுக்கழக வித்துவ ஆலோசகர்கள், நிர்வாக உறுப்பினர்கள் எல்லோரும் அன்புக்கும் வாழ்த்துக்கும் உரியவர்கள். அவர்களிற்கு வாழ்த்து தெரிவிப்பது எனக்கு நான் கூறுவது போல் ஆகும். ஆகவே அவர்களைப் பாராட்டுகிறேன். சோமாஸ்கந்தராஜா தரிசனத்தில் இடம் பெறும் வாழ்த்தியல், தோத்திரவியல், கட்டுரையியல், சோமாஸ்கந்தராஜா தரிசனவியல் எல்லாவற்றையும் தொகுத்து வழங்கிய என் அன்புக்குரிய ரவிதாசன் ராஜீஸ் அவர்களை என்றும் வாழ்த்துகிறேன். வேண்டிய காலத்தில் வேண்டியவைகளை தொகுத்து கோவைபண்ணி ஆவணத்துக்கு உரியதாக்கிய இக்கழகத்தின் தலைவர் இராமச்சந்திரனுக்கும் ஆசி கூறுகிறேன்.

நீண்ட கனதியுள்ள நிறைந்த இம்மலரை பலவகையான சிரமங்களுக்கு மத்தியில் மிக விரைவாக சகிப்புத்தன்மையோடு நேர்த்தியாகச் செய்து தந்த நெல்லியடி தமிழ்ப்பூங்கா அச்சக உரிமையாளர் கணேசலிங்கம் (சின்னதம்பி) அவர்களிற்கும் அவர்தம் இனிய உதவியாளர்களுக்கும் இதயபூர்வமான நிறைவு உரையை நினைத்த வண்ணமுள்ளேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக குருத்துவ வாழ்வின் செழுமையயை முழுமையாக்கிய என் அன்னை இராஜலட்சுமி அம்மா, என் மனைவி புவனேஸ்வரி அம்மா, என் மக்கள், என் மருமகன் இராமலிங்க குருக்கள். சுந்தரலிங்க குருக்களிற்கும் என் பேரன் விபூசன் அவர்களிற்கும் உரிமையுடன் கூடிய அன்பையே காணிக்கையாக்குகின்றேன்.

சிறைச்சாலை வாழ்க்கையில் என்னுடன் கூட இருந்த அன்னை அருளாளர் தும்பளை நில அளவையாளர் சி.வாமதேவன் என் இதயத்திலும் உயிரிலும் கலந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் குருத்துவ சேவையை நடாத்துவதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து பரிபாலன சபையினர்க்கும் அன்புக்குரியவர்களுக்கும், அடியார்களிற்கும் ஆர்வலர்களிற்கும் அன்னையருள் கிட்டுவதாக. அல்வாய் சாமணன் தறை, ஆலடி ஐங்கரன் பரிபாலன சபையினருக்கும் ஔவொல்லை பிள்ளையார் தேவஸ்தான அடியார்கள் அனைவர்களுக்கும் ஏனைய அனைத்து ஆலய அடியார்கள் யாவருக்கும் இந்நேரத்தில் இப்பெருவிழாவில் அவர்கள் எல்லோரையும் நினைத்துப் பார்க்கிறேன்.

2008.09.04. அன்று தினகுரலில் வெளிவந்த வெள்ளிவிழா மலருக்கு பொருளுதவி வழங்கிய மகாலட்சுமி பல்பொருள் வாணிப உரிமையாளர் பெரும் கொடை வள்ளல் பொன். இராசதுரை அவர்களிற்கும் பிரத்தியங்கரா தேவஸ்தான அன்பர்களிற்கும் சுசீலாநகைமாட உரிமையாளர் நடராஜா சற்குணராஜாவிற்கும், நண்பன் வேலுப்பிள்ளை உதயமோகனிற்கும் (ஆசிரியர்), சிவமுகுந்தனிற்கும் எனது சகோதரன் வியோமகேசக் குருக்கள் குடும்பத்தினருக்கும் தும்பளை மேற்கு இராசநாதன் சிவராஜ் (லண்டன்) அவர்கட்கும் எனது மதிப்பார்ந்த வித்தியாகுரு கலாநிதி. த. கலாமணி அவர்களுக்கும் எனது உடன்பிறவா சகோதரி சாந்தமலர் இரட்ணகுமார் அவர்கட்கும் என்றும் கட்டுப்பாடும் நன்றியும் உடையவனாவேன்.

உலகாண்ட நாயகியாய் காட்சி தந்தாய்
உக்கிரமமாய் தாண்டவமும் ஆடிக்கொண்டாய்
சிலகாலம் சிவன் நோக்கி நிட்டை கொண்டாய்
சீட்டர்களுக்கு அபயகரம் நீட்டி நின்றாய்
பலவாய தருமங்கள் போதித் தாண்டாண்டாய்
பக்குவமாய் என்பாசவினை நீக்கினாய்
நலம்சேரும் சோமாஸ்கந்தராஜதரிசனம்தனை
அருளோடு பொருள்கொண்டு ஆண்டாயே

அன்னையின் அடியார்
சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜக் குருக்கள்

நெல்லண்டை
தும்பளை
பருத்தித்துறை
04.09.2008





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகியற் குருவும் தெய்வீக குருவும் வாழ்க

மனிதன் மனிதனாக இருப்பதுவும், மற்றவர்களுடன் இசைவுடன் வாழ்வதுவும், உலகியல் அன்பு எனலாம். தனிமனிதனுக்கும் தெய்வீகத்திற்கும் இடையிலான இணைப்புப் பாலமாக அமைவது, தெய்வீக அன்பு எனலாம். மற்றவர்களுக்காக, எதையும் செய்தல், சேவை, அக்கறை ஆகியன மனிதனின் உன்னதபணி. இது அறிவூட்டல் மூலம் கிடைப்பது. எனது அன்பு மாணவன் என்னிடம் சிவானந்தா குருகுலத்தில் 1980 - 1982 வரையுள்ள காலப்பகுதியில் சமஸ்கிருதம், சோதிடம் கற்றார். 1983 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 04 ஆம் திகதி அவரின் குரு சிவஸ்ரீ. கந்தசிவபாதசுந்தரக்குருக்கள் ஊடாக நிறுவான தீட்சை, ஆச்சாரியார் அபிடேகம் பெற்றுக் கொண்டார்.

எந்தக் காரியம் செய்வதென்றாலும் குடும்பத்துடன் வருகைதந்து நான் இருக்கும் இடம் தேடி வந்து வீழ்ந்து வணங்கி ஆசிபெற்று அதன் மூலம் அருள் பெற்றவர். அந்தவகையில் உற்சவங்கள் செய்யும்போது, வித்தியாரம்பம் செய்யும்போது, நூல்கள் வெளியிடும் போதும் ஆசிபெறுவார்.

சமய, சமஸ்கிருத, சோதிட தந்தைவழி வைத்திய, மந்திரக்கல்வியிற் தேர்ச்சி பெற்ற இவர் எனது மாணவன் என்பதில் பெருமையடைகின்றேன். இந்த குருவிற்கு 25 ஆம் ஆண்டு வெள்ளிவிழா கொண்டாடும் அவரை அம்பாள் எல்லா நலன்களும் பெற அருள் தருவாளென்று பிரார்த்தித்து ஆசிகூறி அருள் வேண்டுகின்றேன்.

**பிரம்மஸ்ரீ. கி. சதாசிவக்குருக்கள்**
சமஸ்கிருத பண்டிதர்,
சிஷ்ச நிபுண.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி
# குருவருளின் திருவருளும் வாழ்க

என் அன்புக்கினிய ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் முதல் மாணவனாக என்றும் நிலைத்து நிற்பவர் தான் அன்பாக அழைக்கும் சோமையா. இவருக்கு இன்று குருப்பட்டாபிஷேகம் நடந்து இருபத்து ஐந்து வருட வெள்ளிவிழா ஆகும். குருவருளையே முழுக்க முழுக்க பிரம்மமாகக் கண்டு திருவருளைப் பெற்றவர் எமது மாணவரும் எமது நிறுவனத்தின் பகுதிநேர விரிவுரையாளருமான சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் இவரை பதின்ஏழு வயதில் இருந்து இன்று வரை நன்கு அறிவேன் இவரின் பத்தொன்பதாவது வயதில் குருப்பட்டம் பெற்ற அன்று நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்திற்கு நானும் எனது சினேகிதியும் ஆகிய மீரா அவர்களும் சென்றோம் அன்றிலிருந்து இன்று வரை குருத்துவநெறியில் கற்ற கல்வியின் செயற்களாமாக விளங்குகின்றார்.

எமது நிறுவனத்தின் முதல் மாணவனான சோமையா அவர்கள் இன்று எமது நிறுவனத்தின் M.pil மாணவனாக திகழ்கின்றார் குருவே கடவுளாக இன்றும் எந்த நற்கருமத்திலும் வழிபாடு செய்து அனுபவத்தில் வெற்றி கண்டவர். இத்தகைய உண்மையான மாணவனுக்கு குருவருளின் திருவருளும் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்தி வணங்கி அவர்மேலும் பொன்விழா, மணிவிழா, பவளவிழா, அமுதவிழா என பலவற்றையும் கடந்து நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும் பெற்று வாழப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி அருள்நங்கை சண்முகநாதன்**
யாழ்ப்பாணம் ஆரியகுளம் புதிய உயர்கல்லூரி
இந்துநாகரிக விரிவுரையாளரும்,
அதிபரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருளாசிச் செய்தி

அன்புள்ளவர்களுக்கு,

சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக்குருக்கள் தனது 25வது குருப்பட்டாபிசேக வெள்ளிவிழாவை கொண்டாடுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். இவர்கள் ஆசிரியராகவும் ஆலய குருவாகவும் பணியாற்றுவது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. அன்பும் அறிவும் எல்லோரோடும் இனிமையாக பழகும் சுபாபமும் எடுத்த செயலை எல்லோருக்கும் விளங்கிக் கொள்ளும் வகையில் விளக்குவது. நம்சமய மக்களுக்கு வழிகாட்டியாக அமைகின்றது. பாடசாலைக் கல்வியில் நல்ல மாணாக்கர்களை உருவாக்கியமை, சமய விடயங்களில் சமுதாயத்திற்குரிய பணிகளை ஆற்றுவது சிறப்பம்சம். குருக்களுடைய சேவை எல்லோரையும் மனம் மகிழ வைக்கின்றது. 25 ஆண்டுகள் குருத்துவப் பணியை ஆற்றியமைக்கு இறைவனுக்கு நன்றியை கூறுகின்றோம். தொடர்ந்து பல ஆண்டுகள் இப்பணியை நிறைவாகச் செய்து. சமயத்துக்கும், சமய மக்களுக்கும் வழிகாட்டியாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இஃது தனது குருப்பட்டம் பெற்ற
வெள்ளிவிழாக்காணும்
சிவஸ்ரீ தியாகராஜக்குருக்கள்
சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் M.A. தமிழ்
அவர்களுக்கு

# வழங்கும் வாழ்த்திதழ்

**(பல்லவி)**

குருவருள் துணைக்கொண்டு குருமணியே தங்களுக்குக்
குமரவேள் அருள்பெருகிச்
சர்வமங்களமும் ஆகுக அனவரதம்
சர்வவாக்குப் பலிதமும் பெருகவென. (குருவருள்)

**(அனுபல்லவி)**

கல்லூரி அதிபராகக் கண்நிறை சேவை ஆற்றலுடன்
கருணை மொழி ஸ்ரீ பத்திரகாளியம்மன் தேவஸ்தான
நல்லருளை அடியார்க்கு நலம்பெருக வழங்குகின்ற
நற்குரு மணியார்நின் பதமல் பணிகிறமே. (குருவருள்)

**(சரணம்)**

வேதத்தின் அங்கங்களாம் சோதிடமென் வைத்தியமென்
மேதகு தத்துவமென யாவிலும் வித்தகராய்
மேதா விலாசம் பதித்தொளிர் குருமணியே
வேண்டுவ யாவும் பெற்று மிளர்க மிளிர்கவென. (குருவருள்)

குருசிஷ்ய மரபினிலே வித்தைகளை மிகத்தேர்ந்து
குவலயம் நனியோங்க இறைவியருள் பெறுதற்குத்
திருவருட் பிரசாதம் வழங்குகின்ற திவ்யகுரு
சர்வமங் களமான மணிவிழாக் காண்கவென (குருவருள்)

மேன்மைகொள் சைவநீதி வியனுலகம் வியாபிக்க
மேதகு அறிவை நூல்களிடை நாவன்மையால்
ஆன்ம நலம் பேண ஆற்றுக எம்குருபணியே
ஆயிரம் பிறைகாண் அகவை விஞ்சி வாழ்கவே. (குருவருள்)

**ஆச்சிரம குரு**
தொண்டைமானாறு. **சந்நிதியான் ஆச்சிரமம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் அவர்களின்

# வாழ்த்துரை

சீரும் திருவும் நிறைந்த சிவஸ்ரீ தியாகராஜாக்குருக்கள் சோமாஸ்கந்தராஜக் குருக்களின் குருத்துவ சேவையின் வெள்ளிவிழாக் குறித்து வாழ்த்துவதில் மிகுந்த ஆனந்தமடைகிறேன். கல்வியாலும், குருத்துவப்பணியாலும் நிறைந்த புகழுடன் வாழும் குருக்கள் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு சிறக்க துர்க்கை அம்பாளைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன். நெல்லண்டை பத்திரகாளி அம்மாளின் பிரதமகுருவாக விளங்கி, மரபுவழி தவறாது மக்களின் உடல் உளப்பிணிகளைத்தீர்த்து வைக்கும் உன்னத பணியில் குருக்கள் ஆற்றும் தொண்டு மகத்தானது. சமய விழாக்களை நடாத்துவது முதல் ஆன்மீக இலக்கிய அன்பர்களைக் கௌரவிக்கும் இவரது பண்பு தனித்துவமானது அறிவால், ஆற்றலால், அன்பால், ஆளுமையால் பிரபல்யம் பெற்றுத் திகழும் குருக்கள் ஐயாவின் அருட்பணி தொடர அம்பாளை இறைஞ்சி, வாழ்த்தி அமைகிறேன். யாவர்க்குமாம் என்றும் இன்றுரைதானே.

**விழிப்பு நிலையில் கனவில் காணப்பட்ட நகரம்போல இந்த உலகம் இருக்கிறது. இதை உணர்ந்துகொண்ட நிலையில் விவேகமுடையவனுக்கு எவ்வாறு ஆசை தோன்றக்கூடும்?**

**- பிரம்ம கீதை -**

**உண்மையான கோயில்கள் அவரவர்களுடைய இதயத்தில்தான் அமைந்துள்ளன.**

**- லத்தீன் பழமொழி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனைத்துலக சைவகுருமார் அர்ச்சகர் பேரவை ஒன்றிய உபபீடாதிபதி சிவஸ்ரீ. ச. சட்டநாதக்குருக்கள் அவர்களின்

# அருளாசியுரை

இந்துசமய சிவாச்சாரியார் பட்டாபிஷேகம் பெற்று 25 ஆண்டுகளை நிறைவு செய்து வெள்ளி விழாக்காணும் சிவஸ்ரீ.தியாகராஜக்குருக்கள் சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களுக்கு அருளாசி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இவர் குருப்பட்டம் பெற்ற 25 வருட காலப் பகுதியில் தனியே குருத்தொழிலில் மட்டும் நின்று விடாது கல்வியில் முதுமானிப் பட்டத்தையும், யா/ குடத்தனை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபராகவும், சோதிடராகவும், சித்த வைத்தியராகவும், வாஸ்துசாஸ்திரியாகவும், சைவசித்தாந்த விழுமியக் கருத்துக்களைப் போதிப்பவராகவும் இவர் விளங்கியுள்ளார்.

இவற்றோடு இவர் யோகசித்து முதலான பல நூல்களின் நூலாசிரியராகவும், சஞ்சிகையாசிரியராகவும், சமயப் பிரசுரங்களை எழுதுபவராகவும் விளங்குவதோடு சைவத்தினதும் தமிழினதும் வளர்ச்சிக்கு ஆறாம் குருவாக இருந்து செயற்பட்டிருக்கின்றார் என்று கூறின் அது சாலப் பொருத்தமானதாகும்.

குருத்துவத்தில் வெள்ளிவிழாக்காணும் தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களை வாழ்த்தி ஆசிகூறுவதோடு இனிவருங் காலங்களிலும் அவர் சமயம், கல்வி, தமிழ் என்பனவற்றின் வளர்ச்சிக்கு அவர் மேலும் பங்காற்றுவதோடு அவரும் பல பட்டங்கள் பெற்று சிறப்புற எல்லாம் வல்ல கரணவாய் மூத்தவிநாயகரை வேண்டி அருளாசி கூறி அமைகின்றேன்.

நன்றி.

**பழுத்த பழங்கள் மரத்திலிருந்து உதிர்வதுபோல்**
**மனிதர்களும் இறக்க வேண்டியவர்களே - புத்தர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உளவளத்துணை சீர்மியர் அஞ்சலி அகம் இயக்குனர்

# அருட்தந்தை சு. டேமியன் அ.மி.தி.

## அவர்கள்

# வழங்கிய ஆசியுரை

தும்பளை பதிவாழ் மக்களால் "கண்ணன் ஐயா" எனசெல்லமாக அழைக்கப்படுபவர் தான் சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜாக் குருக்கள் அருட்பணியாம் ஆண்டவன் திருப்பணியில், இருபத்தைந்து ஆண்டுகளாய் தனை இணைத்து, இன்று தனது குருப்பட்டாபிஷேகத்தின் வெள்ளிவிழாக்காணும் குருக்கள் அவர்களை மன நிறைவோடு வாழ்த்துவதில் நான் பேருவகை அடைகின்றேன். ஐயம் திரிவற தாம் கற்ற ஆகமத்தை, தம் வாழ்வியல் ஆன்மீக அனுபவங்களோடு இணைத்து, தம் மக்களுக்கு அரும் பெரும் சேவையாற்றும் ஆசானாம் குருக்கள் அவர்களை இந்நாளில் வாழ்த்துவது சால பொருத்தமானது.

ஆன்மீகம் என்பது ஆலயத்தோடு மட்டும் வரையறுக்கப்பட்ட ஒன்றல்ல என்பதை நன்குணர்ந்த குருக்கள், சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் அப்பால் தென்படும் "முழு மனித வளர்ச்சி" யின் தேவையை உணர்ந்து மக்களுக்கு ஆற்றும் சேவையும் அயரா உழைப்பும் மிகவும் போற்றுதற்குரியது. "தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற கூற்றுக்கிணங்க, தனது அயரா உழைப்பாலும் விடா முயற்சியாலும் பெற்றுக் கொண்ட அறிவு, அனுபவ மறையை, விழுமியக் கல்வி, சைவ சித்தாந்த தத்துவம், மரபு வழி வைத்தியம், நூல் வெளியீடுகள், சமய பிரசங்கங்கள் என்ற வடிவங்களில் மக்களுக்கும் தம் மாணவர்களுக்கும் பொழிந்து யாவரும் பயன்பெற உரைக்கும் உயர் பண்பாளரே இந்தகுருக்கள்.

பின் நவீனத்துவத்தில் பயணிக்கும் இவ்வுலகில் காலத்தின் அறிகுறிகளை உய்த்துணர்ந்து காலத்தின் தேவைக்கேற்ப மக்களதும் மாணவர்களதும் உளநிலைகளை நன்குணர்ந்து, புதிய சிந்தனைகளை தம் சம்பிரதாயங்களோடு சேர்த்து கொடுத்து, புதியதோர் சமூகத்தை உருவாக்க உரைக்கும் ஒரு தீவிர பண்பாளர் இவர் என்றால் அது மிகையாகாது. அத்துடன் மனிதன் மதங்களுக்கு அப்பாற்பட்டவன் என்ற உண்மையை உணர்ந்து மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை உருவாக்கி ஓர் ஆரோக்கிய சமூகத்தை கட்டி எழுப்ப அயராது முன்னின்று உழைக்கும் ஒருவராகவும் குருக்கள் அவர்கள் விளங்குகின்றார்.

இத்தகைய ஒரு பண்பாளருக்கு இறைவன் அளிக்க அருட்பெரும் கொடைகளுக்காக பரம்பொருளாம் இறைவனுக்கு நன்றி கூறி, இந்த நன்நாளில் குருக்கள் அவர்களை நெஞ்சார வாழ்த்துவதோடு, இவரது பணி மென்மேலும் வளர்ந்து, சிறப்புற்று அனைவர்க்கும் நற்பிரசாதமாக கிடைக்க இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"ஆகம கிரியா ஜோதி" துவஜாரோஹண துரந்தரர் "கிரியா கிரம விஷாரத" சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக்குருக்கள் J.P பிரதமகுரு அரசடிப்பிள்ளையார் ஆலயம் - நாயன்மார்கட்டு, செயலாளர் - அகில இலங்கை சைவக்குருமார் அச்சகர் சபை திருநெல்வேலி, தலைவர் - சைவக்குருமணிகள் மிஷன் நாயன்மார் கட்டு அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

குருவருளும் திருவருளும் ஒன்றுகூட நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. க. தியாகராசாக்குருக்கள் அவர்களின் மூத்த புதல்வன் சோமஸ்கந்தராஜா அவர்கள் 1983 ஆம் ஆண்டு இதே நாளில் எமது குருநாதர் குருமணி சிவஸ்ரீ கந்த சிவபாதசுந்தரக் குருக்கள் அவர்களை தனது தீட்சா குருவாக வரித்து அவர்களுக்கு சிஷ்யனாகி குருசிஷ்ய வழியில் நின்று குருப்பட்டாபிஷேகம் பெற்றார். அன்றிலிருந்து தனது குருத்துவப்பணியை ஆரம்பித்த சோமஸ்கந்தராஜக் குருக்கள் தனது குல தெய்வம் பத்திரகாளி அம்பாளுக்கு நித்திய பூஜையுடன் நைமித்திய, காமிய, நிஷ்காமிய பூஜைகளை மிகவும் சிறப்பாக ஆற்றிவருகின்றமை எல்லோருக்கும் தெரிந்ததே.

இதன் வெளிப்பாடாக அன்னையின் திருவருள் கை கூடியது. குருக்கள் அவர்களின் அறிவுத்தேடல் பெருகியது. உயர் கல்விக்கு ஆயத்தமானார். படிப்படியாக உயர் கல்வியில் வெற்றி கண்டார். ஆசிரியப் பணியும் கிடைத்தது. குருமரபினருக்கே உரிய சமய பிரசங்கங்கள் ஆற்றும் பணியும் கூடவே "சைவ சித்தாந்த பண்டிதர்" பரீட்சையில் சித்தி பெற்று வெற்றி கண்ட குருக்கள் விடாமுயற்சியால் மேலும் மேலும் உயர் கல்வியில் தன்னை இணைத்து "முதுகலைமாணி" பட்டத்தைப் பெற்றதோடு அதிபர் கடமையையும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

குருத்துவ பணியையும் ஆசிரியப் பணியையும் சிறப்பாக ஆற்றிவரும் குருக்கள் ஐயாவை குருப்பட்டாபிஷேக வெள்ளி விழா நாளில் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சைவ சித்தாந்த பண்டிதர், அருட் பிரபாகரசீலர், சிவாகம உபதேச வாசஸ்பதி கிரியா கிரமயோதி, சக்தி உபாசக பிரதிஸ்டா சிரோன்மணி நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளியம்பாள் பிரதமகுரு, அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டம், இலட்சுமணன்தோட்டம் ஸ்ரீ வீரமாகாளியம்மன், வடபத்திரகாளி தேவஸ்தான ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவும் B.A. Dip.in.Edu. M. A. அதிபர் (யா/ குடத்தனை அ.மி.த.க. பாடசாலை) சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களின் குருப்பட்டாபிசேக 25 வது வருட வெள்ளிவிழாக் காணும் அதி வணக்கத்திற்குரிய குருக்கள் அவர்களுக்கு**

# வாழ்த்துச் செய்தி

வரலாற்றுப் புகழ்மிக்க நெல்லண்டை பத்திரகாளியம்மன் தேவஸ்தானத்தில் சைவக்குருக்கள் பரம்பரையில் சீனி ஐயர், முத்துச்சாமி குருக்கள், தியாகராஜக்குருக்கள் இவரின் சிரேஸ்ட புத்திரன் சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் மகன் தனஞ்சயன் 8ம் பரம்பரைக்குரியவர்கள். தந்தையும் இவருமாக 45 வருடங்கள் பூசைசெய்து குறிப்பாக நெல்லண்டை பரிபாலன சபையினராலும் அவ்வூர் மக்களாலும் சிறிய தந்தையார் சோமசுந்தரக்குருக்களின் அஜராமுயற்சியாலும் 25 வருடம் குருத்துவம் செய்து வெள்ளிவிழாக் கொண்டாடும் இவர் தமிழ், சமஸ்கிருதம், புராணம், சோதிடம், சமயப் பிரசங்கம், வாஸ்து சோதிடம் (வீட்டிற்கு நிலையம் எடுத்தல்), நூல் வெளியீடுகள், சைவசித்தாந்தம், ஆங்கிலம் ஆகியவற்றில் சிறந்த பாண்டித்தியம் பெற்றவர். அவ் அறிவைக் கொண்டு மிகச்சிறந்த சேவைகளை செய்துவருபவர் குறிப்பாக ஓதும் வேத ஸ்தோத்திரங்கள் தொனி, இராகம் தப்பாது இறைவனை மெய்யுணர்வோடு லயப்படுத்தும் தன்மை வாய்ந்தது.

நந்தமிழில் வடமொழியில் ஆகமத்தில்
நவிலு முறைப்பத்ததியில் கண்ணன் ஐயாவாழி
சிந்தழகு உற்சவங்கள் செய்யும் பாங்கில்
சிறந்த பல கும்பாபிசேகங்கள் யாகம் வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தி மகிழ் பி. ஏ. டிப்ளோமா எம். ஏ. அதிபர்
சித்தாந்தத்துடன் சோதிடமும் வாழி
நல்லவிதம் சேவையினை நயந்தேசெய்து
நற்குரு மாமணியரே குருவே வாழி, வாழி.

எங்கும் எப்போதும் தூய்மையான எண்ணங்களே எவரையும் மதித்து மனோலயத்தின் மூலம் மனிதனைப் பக்குவப் படுத்துவது இதில் இவர் விவேகசூடாமணி ஆவார். இவர் பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவென்று எல்லாம்வல்ல அன்னை மனோன்மணி அம்பாளை பிரார்த்திக்கிறேன்.

சுபம்

**அருள்ஞான கிரியாமணி**
**சிவஸ்ரீ. இ. பாலகிருஸ்ணக்குருக்கள்**
பிரதமகுரு மனோன்மணி
அம்பாள் திருக்கோயில்
கொம்மாந்துறை உடுப்பிட்டி.

**எப்போதும் இறைவனை நினைத்து வாழ்பவர்கள்**
**பிறப்பு, இறப்பு என்பதைப் பொருட்படுத்துவதில்லை. – பக்திநெறி**

**இறைவனை வழிபட, தியானிக்க, தொடர்புகொள்ள**
**பிரார்த்தனையே தகுந்த சாதனமாகிறது – அறநெறி**

**தவறான செயல்களைச் செய்துவிட்டு,**
**அகந்தையின் காரணமாக அதை மறைத்தல் கூடாது. – ரமணமகரிஷி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாந்திரிகத்தில் சிறந்து விளக்கும் குரு வாழ்க!

சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் அவர்கள் தம்முடைய குருபணி 25 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு விழாக்கோலம் எடுப்பதை நினைத்து மகிழ்ச்சி அடைகின்றேன். நீண்டகாலமாக தம்மை சேவைக்கென அர்ப்பணித்து வரும் குருக்கள் இந்த நாட்டில் மககளுக்கு புராண இதிகாசங்கள் சமூகத்தில் நிறை பெறுவதற்கு பலவகைகளிலும் தொண்டு ஆற்றியவர். பல ஆலயங்களில் கும்பாபிஷேகம், மகோற்சவம் திறம்பட நடாத்திய பெருமைக்குரியவர். பாடசாலையில் ஆசிரியராகவும் ஆலயங்களில் சிவாச்சாரியாராகவும் ஆழ்ந்த அறிவும் அடக்கமான செயற்பாடும் எதனையும் சிந்தித்து செயற்படும் குருவுக்கு உரித்தான இலட்சணங்களும் ஓதல் ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் எனும் 6 அம்சங்களும் இவரிடத்தே சிறப்பாக அமைந்துள்ளது. அனைவரும் அறிந்த உண்மை புண்ணிய பூமியாக விளங்கும் வடமராட்சி பகுதியில் தும்பளையில் பிறந்த இவர் சாதி மத இன வேடுபாடின்றி எல்லா இனங்களினும் இதயத்தில் ஆண்டவன் இருக்கின்றான் என்கின்ற பெரு நோக்கோடு அதர்மவேதம் சொல்கின்ற மாந்திரிகத்தில் சிறந்து விளங்குகின்ற குருவானவர் மக்களின் துயரான துன்பங்களை நீக்கி சுபீட்சமாக வாழ்வதற்கு அவருடைய குலதெய்வம், இஷ்டதெய்வம் அவருக்கு என்றென்றும் உறுதுணையாக இருக்க எல்லாம் வல்ல அல்வாய் முத்துமாரி அம்மனை பணிந்து அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதில் மிகவும் சந்தோஷமடைகின்றேன்.

**சிவப்பிரம்மஸ்ரீ. சி. சுரேஸ்வரகுருக்கள்**

லண்டன் உயர்வாசல் குன்று முருகன் ஆலய குரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளிவிழா நாயகனின் சேவை சிறந்து, பொன்விழாக்காண வாழ்த்துகின்றேன் மனதார!

சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் அவர்களுக்கு குருப்பட்டாபிஷேக "25 வருட பூர்த்தி விழா" வெளியிடுவதற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். சைவசித்தாந்த பண்டிதர், அருட்பிரபாகரசீலர், சிவாகம உபதேச வாசஸ்பதி சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள் பாடசாலையில் மாணவர்களை வழிநடத்தி, சிறந்த முறையில் கல்வியூட்டி நிர்வகித்து அதிபராக நெல்லண்டை பத்ரகாளி அம்மன்கோவில், இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் போன்ற பல ஆலயங்களிற்கு பிரதம குருவாகவும், ஆதீனகர்த்தாவாகவும் விளங்குவதுடன் அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டம் என்பதை நிர்வகித்து அதனை தலைமை தாங்கி நடாத்தி ஒரே நேரத்தில் மூன்று பணிகளை செய்வதென்பது ஒருவராலும் முடியாத காரியம் அதாவது கல்விப்பணி, குருப்பணி, சமூகப்பணி.

இதுமட்டுமன்றி சோதிடம் கூறுதல், சமயப்பிரசங்கங்கள், வாஸ்து நிலையமெடுத்தல், சைவசித்தாந்தப்பணி. மரபுவழிக்கல்வி, போன்ற பணிகளையும் செய்து வருகின்றமையையிட்டு மகிழ்வடைவதுடன் போற்றப்படவேண்டிய ஓர் விடயமுமாகும்.

இவர் குருப்பட்டாபிஷேகம் நிறைவடைந்து 25 வருட பூர்த்திவிழாவைக் கொண்டாடுவதையிட்டு இவரை பாராட்டுவதுடன் இவரது சமய, சமூக, கல்விப்பணி மென்மேலும் வளர்ந்து பொன்விழாக்காணவேண்டும் என வாழ்த்தி வல்வை நகரின் காவல்தெய்வமாக விளங்கும் முத்துமாரி தாயை வணங்கி, புற்றளைபதிதனில் வீற்றிருக்கும். சித்தி விநாயகப் பெருமானையும் வேண்டி எனது சார்பிலும் எனது சபை சார்பிலும் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள், ஆசிகள் பல உரித்தாகட்டும்

**"சிவாகம சித்தாந்த ஞானதேசிகபானு"**
**"பிரதிஷ்டாலங்கார சித்தாந்த ஸாகரம்"**
**"பிரதிஷ்டா சிரோமணி"**
**சிவஸ்ரீ. சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் J.P**
பிரதம குரு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.
சிவாச்சார்ய பீடாதிபதி அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்.

"அன்னை இல்லம்"
வன்னிச்சி அம்மன் கோயிலடி
வல்வெட்டித்துறை.
T.P 021 226 3185



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ் பல்கலைக்கழகத்தில் முன்னாள் கலைத்துறைப் பீடாதிபதியும் இந்துநாகரீகத்துறைத் தலைவரும், வாழ்நாட் பேராசிரியருமான பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ. ப.கோபாலகிருஸ்ணஐயர் அவர்கள்

# வழங்கிய ஆசியுரை

சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ. தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் குருப்பட்டம் பெற்று வெள்ளிவிழா காணும்பேறு பெற்றுள்ளமை இறைவன் திருவருளாலன்றி வேறில்லை.

நல்லாசிரியனாக, அதிபராக, சமயப்புலமையாளராக சைவசித்தாந்த பண்டிதராக வாஸ்து சாஸ்திர நிலையம் எடுத்தல், சோதிடம் ஆகிய துறைகளில் ஆற்றலுள்ளவராக மற்றும் மரபு வழிவைத்தியராக விளங்கி எமது சமூகத்திற்கு நற்பணியாற்றிவரும் சிறந்த பண்பாளர். அத்துடன் சமயப்பிரசுரங்கள், நூல்வெளியீடுகள் மூலம் நல்ல சமய தத்துவ சிந்தனைகளை மக்கள் மத்தியில் பரப்பி வருபவர்.

கல்வித்துறையில் பட்டதாரியாக விளங்கும் சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் உயர்பட்டப்படிப்புகளிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருபவர். இதன் வழி ஆசிரியத்துறையில் தமக்குரிய சிறந்த ஆற்றலையும் அனுபவத்தையும் பெற்றுள்ளார்.

நெல்லண்டை பத்திரகாளி அம்மன்கோவில் பிரதமகுருவாகவும் ஆதீனகர்த்தாவாகவும் விளங்கிவருவதோடு வடமராட்சியில் உள்ள பல ஆலயங்களில் குருத்துவப்பணியாற்றிவருபவர் குருப்பட்டம் பெற்ற காலப்பகுதியில் ஏனையோர் பாராட்டும் வண்ணம் தம்மைச்சிறந்ததொரு குருவாக உருவாக்கிக் கொண்டவர் சிவஸ்ரீ குருக்கள்.

குருப்பட்டம் பெற்று வெள்ளிவிழாக்காணும் சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக் குருக்கள், கல்விச்சேவை, ஆலயசேவை, குருத்துவப்பணி. சமயப்பிரசாரம், சஞ்சிகைகள் மற்றும் சமய நூல்களின் வெளியீடு ஆகியதுறைகளில் மேல்மேலும் சிறந்து விளங்கி, எமது சைவப்பண்பாட்டின் கலங்கரை விளக்காகத் திகழ்ந்து, மேன்மைகொள் சைவநீதி உலகமெலாம் பரவும்வகையில் பணியாற்ற, எமது நல்லாசிகளைத் தெரிவிப்பதோடு அவருக்கு மகிழ்ச்சிகரமான இந்நன்நாளில் எல்லா நலன்களும் சிறக்க நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்மனின் திருவருள் பொலிவதாகுக என வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரம்மஸ்ரீ தானு வாசுதேவக்குருக்கள்
## ஐயப்பகுருசுவாமி சிவதர்மசாஸ்த்தா
## தேவஸ்தான குரு அவர்களின்
# குருபட்டாபிஷேக வெள்ளிவிழா
# வாழ்த்து

தியாகராசாக்குருக்கள் சோமஸ்கந்தராஜாக்குருக்கள் யாழ் பல்கலைக்கழக மாணவனும் (M.A.R.P) நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில் ஆதீனகர்த்தா இலச்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன், வடபத்திரகாளி தேவஸ்தானம் தும்பளை பிரதம குருவும், யா/ குடத்தனை அ. மி. த. க. பாடசாலை அதிபருமான பெருமதிப்புக்குரிய ஐயா அவர்கள். குருப்பட்டாபிஷேக வெள்ளிவிழா காணும் இன்றயநாள் சிறந்த நாளாகும் குருக்கள் அவர்கள் சைவசித்தாந்தம், விழிமியக்கல்வி, மரபுசார்ந்த கல்வி தத்துவம், சாஸ்திரம், நிலையம் எடுத்தல், சோதிடம் பார்த்தல், தந்தைவழி மரபு வைத்தியம், பிரசுரங்கள், நூல் வெளியீடுகள், சமயசஞ்சிகைகள், சமய பிரசங்கங்கள் என்பவற்றில் தலைசிறந்தவர்களாக விளங்குகின்றார். குருக்கள் அவர்கள் மென்மேலும் வளர்ந்து சைவத்தை வளர்த்து சபரிமலை சாஸ்த்தா ஆசியோடு என்னுடைய ஆசியோடும் வாழ்க வாழ்க என்று வாழ்த்தி அமைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனைத்துலக சைவக்குருமார் அர்ச்சகர் பேரவை ஒன்றியத் தலைவர் சிவஶ்ரீ. பாலபத்மநாதக் குருக்கள் அவர்களின் வழங்கிய

# குருத்துவத்தின் வெள்ளி விழா வாழ்த்து

ஆகமத்தின் வழி நின்று குருத்துவத்தின் வெள்ளிவிழா நிறைவினைப் பெறுகின்றார் சிவஸ்ரீ. தியாகராஜ. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள். ஆண்டவன் சந்நிதானத்தில் அனைத்துயிர்களும் சமம் என்பது ஆகமத்தின் கூற்று. அங்கே எந்தவித வேறுபாடுகளையும் காட்டக்கூடாது. சந்நிதானத்திற்கு வரும் அடியார்கள் தமது குறைகளையும் காட்டக்கூடாது. சந்நிதானத்திற்குவரும் அடியார்கள் தமது குஜறகளையும் மனப்பாரங்களையும் அங்கே இறக்கி வைத்துவிட்டு அருள்நிறைவைப் பெற்று மனச்சாந்தியுடன் தமதில்லம் திரும்புகின்ற சேவையைச் செவ்வனே ஆற்றுகின்றார் குருக்கள்.

மனக்குறையோடு வரும் அடியார்களை மனநிறைவோடு வீடு திரும்பலைக்கும் குருத்துவத்தின் உயர்நிலையை வகிக்கின்றார் விழாநாயகன்.

நெல்லண்டைப் பத்திரகாளிகோவில் பிரதமகுருவாகவும் இலட்சுமணன்தோட்டம் வீரமாகாளி அம்மன் ஆதீனகர்த்தாவுமாக காளியின் மைந்தனாகவே அவதரித்து மக்கள் துயர் போக்குகின்றார்.

இத்தொண்டுக்குறுதுணையாக இவருடைய இளங்கலைமானி முதுகலைமானிக்கல்விப் பேறுகள் புலவர் பாலபண்டிதர் ஆகிய கல்விப் பேறுகள் சமய குருத்துவம் மட்டுமன்றி கல்விக்கூட குருத்துவம் ஆகிய அனைத்து சேவைகளும் குருத்துவத்தின் பூரண பயனைப் பயப்பனவாகின்றன இவரது வாழ்வில்.

இத்தகைய நிலைபேறுடைய தியாகராஜ சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் காளியின் மைந்தனாக நீடுழி காலம் குருத்துவ சேவையை குறைவற நிறைவு செய்வாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பு நிறை வாழ்த்து

மங்களம் நிறைதர எமது சம்பந்திரியார் சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் பல்துறையும் பெற்று பலரும் போற்ற பெரும் சேவையாற்றி பல்லாண்டு பல்லாண்டு வாழ்க, வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**மாந்திரீக பூசனம், சைவம்**
**சிவஸ்ரீ. வே. இராமலிங்கக்குருக்கள்**
சாஸ்திரியர் மடம்
சங்கரத்தை.

**உயர்மிகு**

**சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தகுருக்கள் குருஞான வெள்ளிவிழா வாழ்த்து**

## குருவெள்ளிவிழா ஞானம் பெறும் வாழி

கற்பதில் அம்பிகையின் அருட்குமாரர் கணபதி ஞானம்
கல்வியில் சரஸ்வதி கடாச்ச ஞானம்
சொற்பெருக்கிலே கந்தக் கடவுளின் தமிழ் ஞானம்
பற்றுதலிலே பல்கி பெருகிய சைவக்கிரிகா ஞானம்
சாஸ்திரத்தில் குறிதவறா ராசிகோன் ஞானம்
பாத்திரத்தில் மனிதநேயம் தீர்க்கும் பகீர்த்தி ஞானம்
தமிழும் குடும்பமும் முன்வர தத்துவ ஞானம்
தழர்விலா கல்வி நேயம் வாழீ!

சுபம்

**அல்வையூர் கவிஞர் ம. கணேசலிங்கம் ஓ.ஏ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீடு வாழி பல்லாண்டு

நீண்குடல் சுருங்கியிருந்து அறுசுவையுண்டிதனை
ஊன் வாங்கி பாசமெனுமல மகற்றி - உலாவும்
விண்ணுலகம் சுற்றியொடுங்கி யிருக்கும் முளையோ
மண்ணுலகம் ஆளுமே அஃதே
நின்னுடன் கல்விசோதிட முற்சாகம்
பண்புடமையூக்கம் மனமகிழ்ச்சி உள்வாங்கி - ஆளும்
மும்மலநீக்கி ஞானமெனும் தெளிவுடன்
உலகாளும் உத்தமமைத்துனரே நீடு வாழி பல்லாண்டு

**சிவத்திரு. சி. சச்சிதானந்த ஐயர்.**
சச்சியா இரும்பகம்
வட்டுக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புக்கு ஒரு வித்து

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மனை பரம்பரை பரம்பரையாய் பூசித்து வைத்திய சிரோன்மணியாக இந்தியாவிலே கற்று வேதவேதாரணிய ஈஸ்வரனை பூசித்து மலையாள மாந்திரிக பூசணமாகத் திகழ்ந்த தியாகராஜாக்குருக்கள் பெற்ற சிரேஸ்ட்ட புத்திரன் சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் குருப்பட்டம் தரித்தது நெல்லண்டை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்திலேயே அன்னையின் அன்புக்கு ஒரு வித்தாக விளங்கும் அன்புக்குரிய கண்ணன் ஐயா அவர்கட்கு இன்று வெள்ளிவிழா தமிழிலும் சமயத்திலும் சமஸ்கிருதத்திலும் சிறந்து விளங்கும் கல்விமானான இவர் அண்டியவர்களை ஆதரித்து அன்பு செலுத்தும் மனிதபண்பாளன் குருவுக்குரிய அனைத்து இலக்கணங்களையும் பெற்று வடமராட்சி மக்கள் அனைவர்களது உள்ளத்திலும் நிறைந்த குருக்கள் உலகெங்கிலும் புகழ் பரப்ப எங்கள் பரம்பரைத் தெய்வமாகிய வழக்கம்பிராய் சுழிபுரம் மகாமாரி அம்பாள் அருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

**சிவஸ்ரீ. சு. சுந்தரராஜக்குருக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசாங்க அதிபரின் ஆசிச்செய்தி

ஆரோக்கியம் என்பதில் ஆன்மீக ஆரோக்கியம் வகிக்கும் பங்கு இன்று மேலைத்தேய நாடுகளிலும் உணரப்பட்டதொரு விடயமாகின்றது. இதனாலேயே உடல், உள, சமூக, ஆன்மீக, ஆரோக்கியம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

ஆன்மீக ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் மதத் தலைவர்களின் பங்கு அளப்பெரியது. "எவன் வேள்விகளைப் பிழையறச் செய்ய வல்லவனோ அவனே பிராமணன்" என்கின்றன வேதங்கள்.

இல்லற தர்மத்தினைக் கடைப்பிடித்து வாண்மை விருத்திக்குரிய ஆசிரியப் பணி ஆற்றியவாறே நித்திய, நைமித்தியக் கிரியைகளைச் செவ்வனே நிறைவேற்றி வரும் தியாகராஜாக் குருக்கள் சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் தனது குருப்பட்டம் தரித்த இருபத்தைந்தாண்டு நிறைவைக் கொண்டாடுவது மனதுக்கு மகிழ்வளிக்கும் ஒரு நிகழ்வாகும்.

இந்துசமயம் மறுமலர்ச்சியை வேண்டிநிற்கும் இத்தருணத்தில் நிகழும் இத்தகைய நிகழ்வு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. சடங்குகள் மக்களால் உணரப்பட்டு பின்பற்றப்பட வேண்டியன. பார்வதி பரமசிவனாகப் பாவனை பண்ணிப் பந்தத்தில் இணையும் தம்பதியர் வாழ்வியல் போராட்டத்தில் இணைந்து வெற்றிபெற வேண்டியவர்களே தவிர ஒருவருடன் ஒருவர் முரண்பட்டு தலைகுனிவுக்கு உள்ளாகக்கூடாது.

ஆலயங்களில் ஆண்டவனின் சந்நிதானத்திற்கே முதன்மை அளிக்கப்பட வேண்டும். உள்ளத்து உணர்வில் இறைதன்மையை உணர்ந்து அகங்காரம் அழிந்து அடியார்களாகப் பணியாற்ற வேண்டும்.

அதாவது இன்றைய இவ்விழாவில் விழா நாயகனிடம் நான் வேண்டுவதெல்லாம் சமூகத்தின் அடிப்படை அலகான குடும்பங்கள் ஆழமான அத்திவாரத்துடன் மனங்களின் சங்கமமான திருமணமாக மலர்ந்து மணங்கமழவும், சமுதாயத்தின் நிலைக்களனாக விளங்கும் கோவில்களினூடாக ஆன்மீக ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் வல்ல செயற்திறன் மிக்க செயற்பாட்டுத் திட்டத்தை தான் பெற்றுள்ள படிப்பறிவு, பட்டறிவு என்பவற்றினூடாக பிராந்திய திட்டமிடலின் அம்சங்களை முழுமையாக உள்வாங்கி யாழ் மாவட்டத்தில் வாழும் இந்து மக்களின் வாழ்வை ஆரோக்கியமாக்க அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும் என்பதாகும்.

இருபத்தைந்து வருட குருப்பட்ட நிறைவுநாளில் நூற்றாண்டைக் கடந்து ஆயுள் ஆரோக்கியத்துடன் விழா நாயகனும் அவர்தம் குடும்பத்தினரும் சகல சௌபாக்கியங்கள் பெற்று வாழவும் அவர்கள் ஆற்றும் சமயப்பணி காலத்தைக் கடந்து நிலைபேறடையவும் உளமார வாழ்த்துகிறேன்.

**க. கணேஷ்**

அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,
யாழ் மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச செயலரின் வாழ்த்து

சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் M.A அவர்கள் குருப்பட்டாபிசேகம் பெற்று 25 ஆண்டுகள் நிறைவடைந்து வெள்ளிவிழா கொண்டாடும் இவ்வேளை எனது நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

நெல்லண்டை பத்திரகாளி கோயில், இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீவீரமாகாளியம்மன், வடபத்திரகாளியம்மன், பிரதமகுரு ஆதீனகர்த்தாவாக இருந்து ஹாட்லிக் கல்லூரியில் 10 வருட ஆசிரிய பணியை முடித்து தற்போது யா/ குடத்தனை அ. மி. த. க. பாடசாலையில் அதிபராக கடமையாற்றும் இவர் சைவத்தமிழ் பற்றுள்ள சமூக சேவையாளருமாவர்.

இவர் பல கோவில்களிற்கு கும்பாபிசேகம் செய்துள்ளதுடன் கோவில் கொடியேற்றங்களையும் நடாத்தியுள்ளார். சிறந்த எழுத்தாளராவார். பல நூல்களையும் சஞ்சிகைகளையும் வெளியிட்டுள்ளார். கல்வி போதிப்பதிலே வல்லவரான இவர் கற்கவேண்டும் என்ற ஆவவில் திட்டமிடலில் முதுகலைமாணி பட்டம் பெறுவதற்காக பல்கலைக்கழகம் சென்று கொண்டிருக்கிறார்.

எனது அன்பு தாயார் சிவபதமடைந்த செய்தி அறிந்து ஓடோடி வந்து எனக்கு ஆறுதல் கூறியதையும் "தாயன்பே உலக அன்பு" என்பதை உணர்த்தும் வகையில் தாயாரின் நினைவு மலரிற்கு ஓர் ஆக்கத்தினை தந்தமையையும் என்னால் மறக்க முடியாது.

இவர் தனது குரு பணியில் தொடர்ந்தும் நிறைவான சேவை செய்ய வேண்டும் எனவும் சமூக சேவைகளிலும் கல்வியிலும் பல சாதனைகளை புரியவேண்டும் எனவும் வாழ்த்தி இவர் தம் குடும்பத்தினருடைய நல்வாழ்வுக்காகவும் இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

**இ. வரதீஸ்வரன்**
பிரதேச செயலர்,
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட நீதிபதியின் வாழ்த்து



சிவஸ்ரீ தியாகராஜாக் குருக்கள் சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள் நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில், இலட்சுமணன் தோட்டம், ஸ்ரீ வீரமாகாளி அம்மன் வடபத்திரகாளி தேவஸ்தானம் ஆகிய ஆலயங்களின் பிரதம குருக்களாக இருந்து இந்து மத சேவை செய்வதோடு யா/ குடத்தனை அ. மி. த. க பாடசாலையின் அதிபராக இருந்தும் வருகின்றார்.

இவற்றுக்கும் மேலதிகமாக, விழுமியக்கல்வி, சைவசித்தாந்தம், மரபு சார்ந்த கல்வி, தத்துவம், வாஸ்து சாஸ்திர நிலையம் எடுத்தல் சோதிடம், போன்ற துறைகளிலும் தமது சேவைகளை ஆற்றி வருகின்றார்.

நூல் வெளியீடுகள், சஞ்சிகையில் ஆக்கங்கள், சமயப்பிரசங்கம் செய்தல் போன்றவற்றிலும் ஈடுபாடுடையவர்.

இவற்றுடன் தற்போதும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கள் பீடத்தின் பிரதேச திட்டமிடல் (M.A.R.P) மாணவனாக இருக்கிறார்.

மேற்குறித்தவற்றுக்கு மேலாக தமது குருப்பட்டாபிசேகத்தில் வெள்ளி விழாவினையும் காணக்கூடிய பெரும்பேறு வெற்றவர்.

இவரது கல்வி, சமயப்பணிகள் மேன் மேலும் சிறக்கவும், பெருகவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

**திருமதி ச. இளங்கோவன்**
மாவட்ட நீதிபதி,
மல்லாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தந்தை வழிநின்ற தனயன்

இருபத்தைந்து ஆண்டுகள் தந்தை விட்டுச் சென்ற குருத் தொழிலைச் சிறப்பாகவும் யாவரும் போற்றும் வண்ணமும் கோவில்களை நடாத்திவரும் கல்விச் சமூகத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ தியாகராஜாக் குருக்கள் சோமாஸ்கந்தராஜாக் குருக்களை இவ்வெள்ளி விழாத்தினத்தில் வாழ்த்துவது பேறாகவும் பெருமையாகவும் உள்ளது. சைவசமயம் மேலோங்கவும் பண்புகளைக் காக்கவும் சைவ சமயப் பிரசங்கங்கள், சைவசமய நூல் வெளியீடுகள், சைவசித்தாந்தப் பெருமைகள் கூறுதல், சோதிடம் போன்ற பல சைவக் கடமைகளையும் செய்து சைவசமயம் மேலோங்க உழைத்த சிவஸ்ரீ தியாக. சோமஸ்கந்தக்குருக்கள் பன்னெடுங்காலம் இறைபணி செய்ய எல்லாம் வல்ல நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் அருள் பாலிப்பார்.

**வே. தி. செல்வரத்தினம்**

மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,

யாழ்ப்பாணம்.

**அறிவை மேலும் மேலும் கூர்மையாக்கிக் கொள்வதற்கு பயன்படும் கருவி கல்வி - யங்**

◆ ◆ ◆

**ஒரு நல்ல பள்ளி ஆசிரியர் ஆயிரம் பாதிரிமார்களுக்கு ஈடாவர்**

**- ராபர்ட் இங்கர்லால்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

குருப்பட்டம் பெற்று வெள்ளிவிழாக்காணும் சிவஸ்ரீ. தி. சோமாஸ்கந்தராஜாக்குருக்களுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன்.

அதிபராக, சோதிடராக, மரபு வைத்தியத்தில் கைதேர்ந்தவராக, சைவசமயம் சார் நூல்களின் ஆசிரியராக சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக்குருக்களை நாம் காணலாம். இன்றும் சைவசமயப் பிரசங்கங்களில் வல்லவராகவும், மக்கள் மனங்கவர்ந்த ஒருவராகவும் இவர் விளங்குகிறார். தமிழ் மொழியில் முதுகலைமாணிப்பட்டம் பெற்ற இவர் மாணவர் மனங்கவர் ஆசானாகவும் விளங்குகிறார். பல்வேறு துறைகளிலும் ஆற்றல் கொண்ட சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து சேவையாற்ற வாழ்த்துகின்றேன்.

**திரு. வ. செல்வராசா**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.

பகவத் கீதையின் பொருளையும், சங்கீதத்தின்
பேரின்பத்தையும் உன் மனதிலேயே காணலாம்
– **ஸ்ரீதியாகராஜர்** –

அன்னையும் பிதாவும் அன்பாக இருக்கிறார்கள். ஆனால்,
ஆண்டவன் அவர்களையும் விட அன்பாக இருக்கின்றான்.
– **அறநெறி** –

இறைவனோடு கலத்தல் என்பது உலகயில் சார்ந்த
எல்லாவற்றிலிருந்தும் விடுபடுவது ஆகும்.
– **பக்தியோகம்** –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

நெல்லண்டைப் பத்திரகாளி கோயில், லட்சுமணன் தோட்ட வீரமாகாளியம்மன் கோயில் என்பவற்றின் பிரதம குருவும் யா/ குடத்தனை அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் அதிபருமாகிய திரு. தியாகராஜாக் குருக்கள் சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள் குருத்துவப் பட்டம் பெற்று இன்று வெள்ளிவிழாக் காணும் நன்நாளில் அவரை வாழ்த்துவதில் அகமகிழ்வடைகின்றேன்.

திரு. தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள் யா/ ஹாட்லிக் கல்லூரியில் சிறந்த ஆசிரியராக செயற்பட்டு இன்று அதிபர் பதவிக்கு உயர்ந்துள்ளமை அவரது கல்விப் பணிக்கு கிடைத்த வரமாகும்.

சமயத்தில், தமிழில், சமஸ்கிருதத்தில், இந்து நாகரிகத்தில் சிறந்த புலமைபெற்று சைவசித்தாந்த பண்டிதராகத் திகழ்வதுடன் காமராஜர் பல்கலைக்கழகத்தில் தமிழில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றதுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பிரதேச திட்டமிடல் தொடர்பான முதுமானிக் கல்விக்கான கற்கை நெறியை தொடர்வது இவரது வாண்மை விருத்தித் திறனை வெளிப்படுத்தியுள்ளது.

சமயப் பிரசங்கங்கள், சமயச் சடங்குகள், வாஸ்து நிலையங்கள் எழுதுதல், சோதிடம் கணித்தல் என்பவற்றின் மூலன் வடமராட்சி மக்களிடத்தே என்றும் பக்திக்குரிய அன்பைப் பெற்றுள்ள திரு. தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள் சமய நூல் வெளியீடுகள், சஞ்சிகை வெளியீடுகள், சமய பிரசுரங்கள் வெளியீடுகள் என சமய ஆக்கங்களை வெளியீடு செய்து குடாநாட்டு மக்களினதும் நன்மதிப்பைப் பெற்ற குருக்களாகத் திகழ்கின்றார்.

வடமராட்சியிலே பருத்தித்துறைப் பிரதேசத்தின் தும்பளைக் கிராமத்தில் உள்ள இரு பிரபல்யமான அம்மன் ஆலயங்களின் பிரதம குருவாக இருந்து சைவப்பாரம்பரியங்களை முறைதவறாது கடைப்பிடித்து, பாதுகாத்து, வளர்த்து வருவதுடன் வடமராட்சி பிரதேச மக்களினால் என்றும் அன்போடும் பக்தியோடும் வணங்கப்படுகின்ற திரு. தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் இன்று தனது குருத்துவவாழ்வில் வெள்ளிவிழா நாயகனாக திகழ்கின்றார்.

என்றும் எனது அன்புக்கும் பக்திக்கும் உரிய திரு. தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் பாதுகாவலனாக இருக்க வாழ்த்துவதுடன் குருத்துவ வாழ்வில் பொன் விழாவையும் காணவேண்டும் என எல்லாம் வல்ல பத்திரகாளி அம்மனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**சி. நந்தகுமார்**

பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம்,
வடமராட்சி, புலோலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

"கண்ணன் ஐயா" என்று நாங்கள் அன்புடனும் நட்புடனும் அழைக்கும் சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் குருப்பட்டம் பெற்று இறைபணியிலே இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். பருத்தித்துறை, தும்பளை நெல்லண்டை அருள்மிகு வீரபத்திரசுவாமி சமேத பத்திரகாளியம்பாள் ஆலயத்தின் பிரதம குருவாக இவருடைய தந்தையார் இருந்தகாலத்தில் இவரைச் சிறுபராயத்தினராகக் கண்டுள்ளேன். அவருடைய வளர்ச்சியினை உற்றுநோக்கக் கூடிய வாய்ப்பும் இருந்தது. தந்தையாருயை மறைவுக்குப்பின்னர். நெல்லண்டை பத்திரகாளியம்மன் ஆலயப் பிரதமகுருவாக இவர் பணிசெய்யத் தொடங்கினார். இவருடைய அருட்பணி மிகச்சிறப்பாக அமைந்தது.

ஒரு குருவுக்க இருக்க வேண்டிய பண்புகள் யாவும் இவரிடம் இருக்கின்றன. முப்போதும் அம்பாளுடைய அருள் திருமேனி தீண்டிப் பூசனையாற்றி அவளுடைய பேரருளை அடியார்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் குருக்கள் சிவத்தோற்றப் பொலிவுடையவராக இருக்கவேண்டும். "கண்ணன் ஐயா" பூசை செய்வதற்கு ஆலயத்துக்குள் நுழையும் போது அவருடைய சிவத்தோற்றப்பொலிவை அடியார்களுடைய கரம் கூப்ப வைக்கும் தகைமையுடையது அடியார்களுக்கு நம்பிக்கையூட்டும் குருவாக அவர் பணியாற்றி வருகிறார். அவருடைய கையாலே விபூதி பெற வேண்டுமெனப் பல அடியார்கள் விரும்புவதை யாம் அறிவோம்.

ஒரு குருவாயிருக்க வேண்டும் அடியவர்களுக்கு அவர் அருளிலும் கல்வியிலும் முன்னுதாரணமாக இருப்பார் மந்திரக்கல்வி பெற்ற சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் உலகியற் கல்வியினையும் சிறப்புடன் பெற்றிருக்கிறார். பேராதனைப் பல்கலைக்கழகப்பட்டத்தினை (இவரது கலைமாணி) பெற்ற இவர் மதுரை காமராஜ பல்கலைக்கழக முதுமாணிப்பட்டத்தினைப் பெற்றிருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக்கத்திலிருந்து கல்வியில் "டிப்ளோமா" பெற்றுள்ளார். தற்போது பிராந்திய திட்டமிடலில் எம். ஏ. பட்டம் பெறுவதற்கான பயிற்சி நெறியில் சேர்ந்து கல்வி பயில்கிறார். அருள் பணியிலே ஈடுபடும் வேளையில் கல்விப்பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது பாராட்டத்தக்கதாகும்.

சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் பொறுமை, பணிவு ஆகிய குணமுடையவர், பல இன்னல்கள் நேர்ந்தபோதும் அம்பாள் தீர்த்துவைப்பாள் என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையுடன் பொறுமை பேணுபவர் ஆவர். தனக்குக் கல்விகற்பித்தவர்களிடமும், பெரியோர்களிடமும் அவர் எப்போதுமே பணிவுடன் செயற்படுபவர். இத்தகைய குரு 25 ஆண்டுகளாக அருட்பணி ஆற்றிவருகின்றார். அவருடைய அருட்பணி மேலும் சிறப்புற்றமைய அருள்மிகு பத்திரகாளி அம்மனை வேண்டுகிறேன்.

சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் தும்பளை இலட்சுமணன் தோட்டத்திலே அருள்மிகு வீரமாகாளி அம்பாளுக்கு ஓர் ஆலயமமைத்து அதனைச்சிறப்பாக நடத்திவருகிறார். அடியார்களுடைய ஆதரவும் வெளிநாட்டு அன்பர்களுடைய உதவியும் இந்த ஆலயத்திற்கும் கிடைத்துவருகின்றன. அம்பாள் பூசகராகிய சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவளருளாலே அவள் தாள் பணிந்து எல்லாச் சிறப்புகளும் பெறவேண்டும் என அவளை வேண்டி இவ்வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

**பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்**
வாழ்நாட் பேராசிரியர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**இன்சொல்லின் விலை அற்பம்**
**ஆனால் அதன் மதிப்போ அதிகம்**
**– விக்டர் ஹ்யூகோ**

**வாழ்க்கையில் இரண்டு சோகங்கள்தான் இருக்கின்றன**
**ஒன்று, உன் ஆசை நிறைவேறாதது,**
**மற்றொன்று, அது நிறைவேறுவது.**
**– அறிஞன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

நெல்லண்டை தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த பெருமதிப்புக்குரிய சிவஸ்ரீ. தியாகராஜாக் குருக்கள் சோமாஸ்கந்தராஜாக் குருக்களின் 25 வது குருப்பட்டாபிசேக வெள்ளிவிழா இவ்வாண்டு சிறப்பாக நடைபெற திருவருள் கூடியிருப்பதனையறிந்து பெரிதும் மனமகிழ்வு அடைகின்றேன்.

குருத்துவத்திற்குரிய புலமை, அறிவு மற்றும் நல்லொழுக்கம் நிரம்பப்பெற்ற இவர் தமது 20வது வயசிலேயே "குருதத்துவம்" பெற்று இன்று அவரது வெள்ளி விழா நடைபெறுவது சைவ உலகிற்கு பெருமை தருகின்றது.

யாழ்ப்பாணம் குடத்தனை அ. மி. த. க. பாடசாலையின் மதிப்புக்குரிய அதிபராக விளங்கும் இவர். பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைமாணிப்பட்டத்தையும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப்பட்டத்தையும் பெற்று தற்போது யாழ். பல்கலைக்கழகத்தில் பிரதேச திட்மிடல் முதுகலைமானிப்பட்டத்தைப் பயின்றுவருகின்றார்.

ஈழத்தில் குருத்துவத்தோடு இத்தகைய பல்கலைக்கழக பட்டங்களைப் பெற்றவர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். இதனால் இவர் மிகவும் பராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்.

இவருடைய வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளைச் செய்வது சைவப்பெருமக்களுக்குரிய கடமையாகும். உரிய பண்புமிக்க மாணவனாக விளங்கும் இவர், சைவசித்தாந்தக் கல்வி விழுமியக்கல்வி, சித்தவைத்தியம், சோதிடம் வாஸ்து சாஸ்திரம் ஆகியவற்றிலும் ஆழமான அனுபவ அறிவுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது வெள்ளிவிழா சிறப்பாக நடைபெற இறையருளை வேண்டுவதுடன் இக்குருமணி மேலும் வாழ்வும் வளமும் பெற வாழ்த்துக்கூறுகின்றேன்.

**மா. வேதநாதன்**

தலைவர், இந்துநாகரிகத்துறை,
இணைப்பாளர், சைவசித்தாந்த முதுகலைமாணி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் M.A. (கண்ணன் ஐயா) அவர்கள் குருத்துவப் பட்டம் பெற்று வெள்ளிவிழாக் காணும் நாளில்

## வழங்கிய வாழ்த்து

கருத்துள உரைகள் ஆற்றி
காரணன் மாட்சி சொல்வான்
பரத்துவப் பெருமை போற்றி
அம்பிகை உபாசனை செய்வான்
மருத்துவம் நிமித்திகம் தேர்ந்து
மனநலம் சீர்மியம் ஓர்வான்
குருத்துவ வெள்ளிவிழா காணும்
கண்ணனை வாழ்த்து வோமே!

சீர்த்திநிறை நெல்லண் டைப்பதியில்
இத்திமர நீழற்கண் அமர்ந்து
நேர்த்தியாய்ப் படையல் செய்யும்
கூத்தினாற் களியுவகை கொண்டு
கீர்த்திமிகு அற்புதமி யற்றும்
பத்திர காளி அம்மை
பாந்தமாய்ப் பூஜைகள் செய்யும்
கண்ணனார்க்கு வாழ்த்துச் சொல்வாள்.

**கலாநிதி. த. கலாமணி**
கல்வியியல்துறை முதுநிலை விரிவுரையாளர்.
எழுத்தாளர், நாடகக் கலைஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்மையாளுடைய குருமணி

தொன்மைசால் வேதம், ஆகமம், புராணம்
தத்துவத் துறைகரை கண்ட
நம்மையா ளுடைய குருமணி அன்னை
காளியை நாளும், முப் போதும்
உண்மையுள் ளன்பு கொண்டு பூசிக்கும்
ஒருமணி ஸ்கந்தரா ஜப்பேர்க்
கண்மணி வெள்ளி விழாவினைக காணும்
இந்தநாள் இன்பநன் னாளாம்!

செந்தண்மை பூண்ட அறிஞன்பே ரறத்தின்
திகழும் அச்சாணி, ஆசிரியன்
அந்தணன் கல்விப் பணியினுக் காக்கும்
அரியவாழ் நெறியைமேற் கொண்டோன்
செந்தமிழ் அறிவும் சோதிட நூலும்
மருத்துவம் ஆயின தேர்ந்த
இந்துமா நெறியின் காவலன் சோமாஸ்
கந்தராஜக்குரு வாழ்க!

**எழுத்தாளர்,**
**ஆங்கில கவி மொழிபெயர்ப்பாளர்,**
**கவிஞர் சோ. பத்மநாதன்**
பலாலி ஆசிரிய கலாச்சாலை ஓய்வுபெற்ற அதிபர்.
(ஏரகம்)
பொற்பதி வீதி.
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருப்பட்ட அபிஷேக வெள்ளி விழா வாழ்த்துக்கள்

தியாகராஜாக் குருக்கள் சோமாஸ்கந்தராஜக்குருக்கள் B.A, Dip. in Ed. M.A. (தமிழ்) M.A. பிரதேசத்திட்டமிடல் மாணவர்.

அறிவும் ஆற்றலும்
அன்பும் அழகுதமிழ்ச்
சொற் பயனும்
செறிபொருள் ஆன்மீக
வழித்தடத்து ஓங்கலுமென,
பல்துறைப் புலமையுள்
நின்று நிமிர்ந்த
பெருங்கலைப்புலவ!
நின் குருத்துவப்பணி
பல்லாண்டு பல்லாண்டு
எழு பொருள் கொண்டு
எல்லா நலன்களும்
இனிதே சூழ
வாழ்க நின்பணிகள்!

**முன்னாள் நுண்கலைபீட நடனதுறைத் தலைவர்**
**பேராசிரியர் சபா. ஜெயராசா**
யாழ்ப்பாணம் கல்வியியல்துறை
கொழும்பு தமிழ்ச்சங்க தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தக்குருக்கள் குருப்பட்டம் பெற்று இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவடைவதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். குருக்களை நாம் அன்பாக 'கண்ணன்' ஐயா என்றே அழைப்போம்.

கண்ணன் ஐயாவின் குடும்பத்தை நான் நன்கு அறிவேன். கண்ணன் ஐயாவின் தந்தையாரின் வீடு எனது வீட்டிற்கு அடுத்த வீடு. சமயக்கிரியைகளிலும் சடங்குகளிலும் பக்திபூர்வமாக ஈடுபடும் ஒரு குடும்பத்தின் வாரிசாக வந்தவர் குருக்கள். குருக்களின் பேரனார் கந்தையாஐயர் நல்ல பக்திமானாகவும் சிறந்த பூசகராகவும் தருமசிந்தனையுடையவராகவும் வாழ்ந்தவர். வெண்ணீறு பொலியத் தோய்த்துலர்ந்த வெள்ளையுடையுடன் அவர் பூசை புரிவதைப்பார்த்து மெய்மறந்தவர்கள் பலர். கரவெட்டி கிழக்கில் கந்தையா ஐயாவில் கையாலே வீபூதி வாங்கித்தரியாதவரகளே இல்லையெனலாம்.

கந்தையா ஐயாவின் மூத்தமகள் தியாகராஜாஐயர் இந்தியா சென்று குருப்பட்டம் தரித்து வந்து பத்திரகாளிக்கும் பிள்ளையாருக்கும் பூசை செய்தவர். ஆலயக்குருக்கள் ஒருவருக்கு இருக்க வேண்டிய சமய சமூகப் பொறுப்புக்கள் யாவையும் உணர்ந்து செயற்பட்டவர். வழிபாட்டு மரபுகளோடு வைத்தியம், சோதிடம் முதலானவற்றிலும் கைதேர்ந்தவராக விளங்கியவர் நோயாளிகளுக்கும் துன்பப்பட்டவர்களுக்கும் இவர் போடும் வீபுதியும் கட்டும் நூலும் பிரதான ஔடதமாக அமைந்ததை நான்கண்டு அனுபவத்திருக்கிறேன்.

இத்தகைய மரபிலேவந்த தியாக சோமாஸ்கந்தக்குருக்கள் தம்பரம்பரை வழிபாட்டுமுறைமை வழாமல் பணிபுரிந்து வருகின்றார். சக்திவழிபாட்டோடு தன்னை ஒன்றிணைத்துக் கொண்ட குருக்கள் எமது மாணவர். கல்வியில் கரிசனையும் திறமையும் கொண்டவர். தன் சொந்தமுயற்சியால் படிப்படியாக முன்னேறி இன்று அதிபராகப் பணிபுரிகின்றார் ஆலயக்குருவாக இருக்கும் ஒருவர் கல்விமானாகவும் இருப்பது மகிழ்ச்சிக்குரியது மட்டுமன்றிப் போற்றுதற்கும் உரியது சமயமும் சமூகமும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதைச் சிறப்பாகக் கடைப்பிடிக்கும் குருக்கள் அவர்களின் பக்திப்பணி தொடரவேண்டும் என்பதைச் சிறப்பாகக் கடைப்பிடிக்கும் குருக்கள் அவர்களின் பக்திப்பணி தொடரவேண்டு மென வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

தலைவர்,

தமிழ்த்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குரு குலத்தின் ஒளிவிளக்கு

வடமராட்சி, பருத்தித்துறை தும்பளையை வதிவிடமாகக் கொண்ட சைவசித்தாந்த பண்டிதர் அருட்பிரபாகரசீலர், சிவாகம உபதேச வாசஸ்பதி சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள். சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் குருப்பட்டாபிஷேகம் பெற்று இன்று வெள்ளிவிழா கொண்டாடும் நாயகனை வாழ்ததுவதில் மிக மனமகிழ்ச்சியடைகின்றேன். குருகுலத்தின் விழுமியங்கள் யாவற்றையும் பேணிபாதுகாக்கும் வெள்ளிவிழா நாயகன் ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில் இருந்து நான் அவருடன் நெருங்கி பழகும் வாய்ப்பு இருந்தது. பல்வேறு நிகழ்வுகளில் அவர் வழங்குகின்ற ஆசிஉரையில் மிகவும் நுட்பமான கருத்துக்கள் என்பன மிகவும் கலந்திருக்கின்றன. சொற்பதமும், பொருட்பதமும் ஆழ்ந்த உட்கருத்துக்களையும் கொண்டதாக அவருடைய உரைகள் எல்லோரையும் கவரும் சக்தி கொண்டதாகும். மேலும் சமூகத்துடன் இணைந்த விழுமியக் கல்வி சைவசித்தாந்தம் மரபு சார்ந்த கல்வி வாயது. வாஸ்து சாஸ்திர நிலையம் எடுத்தல், சோதிடம், தந்தை வழி மரபு வைத்தியம் போன்ற சமூக சேவைகளுக்கும் தன்னை பெருமளவுக்கு அர்ப்பணித்துள்ளார். குருகுல சேவையில் மாத்திரமன்றி தனது கல்வி வளர்ச்சியிலும் மிகவும் ஆவர்வமாக இருந்து பல பட்டங்களையும் பெற்றிருக்கின்றார்.

கலைப் பட்டதாரியான இவர் தொடர்ந்தும் தனது மேற்படிப்புக்களை மேற்கொண்டு கல்வி டிப்ளோமா பரீட்சையில் தேர்ச்சி பெற்று மேலும் முதுமானி பட்டத்தையும் (M.A. Tamil) பெற்று சிறப்பான ஒரு கல்வி சார் அடித்தளத்தில் இன்று யாழ். குடத்தனை அ. மி. த. க. பாடசாலை அதிபராக சிறப்பாக செயற்பட்டு வருகின்றார். தொடர்ந்தும் உயர்கல்வியில் வலுப்பெறுவதற்காக பிரதேச திட்டமிடலில் (Regional Planing) முதுமானிப் படிப்பை யாழ் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு செயற்பட்டு வருகிறார். குருகுல சேவையுடன் தனது கல்வியையும் மறுபுறம் வளர்த்து எடுக்கும் திறமை ஒரு சிலரிடமே இருக்கின்றது. என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் அயலவர்களுக்கு வழி சமைப்பவராகவும் காணப்படுகின்றார் என்றால் மிகையாகாது.

தனது பெருமுயற்சியால் பல சமய நூல்களை வெயிட்டு இருப்பதுடன் ஆக்கபூர்வமான பல கட்டுரைகளையும் சஞ்சிகைகளில் வெளியிட்டு தமது அறிவினை சமூகத்துடன் பகிர்ந்து கொள்கின்றார். பல இடங்களில் சமயப் பிரசங்கங்கள் நடாத்தி பிரதேச மக்களிடம் நன்மதிப்பைப் பெற்ற நாயகனாக திகழ்கின்றார். அவருடைய சேவைவளர வேண்டும் என வாழ்த்தி தொடர்ந்து பொன்விழா, வைரவிழாக்களையும் அவர் கொண்டாட இறைவன் அருள் புரிய வேண்டும் என அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் மா. நடராஜசுந்தரம்**
முகாமைத்துவ பீடம்
யாழ் பல்கலைக்கழகம்.

**முன்னாள் ஹாட்லிக்கல்லூரி**
பழையமாணவர்
சங்கத்தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

'கண்ணன் ஐயா' என்று எல்லோராலும் அன்போடும் பக்திபூர்வமாகவும் அழைக்கப்படும் சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களை நீண்ட நாட்களாக நான் அறிவேன். அவரது பல பரிமாணங்களையும் நான் அறிவதற்குமுதல் ஒரு ஆலயக்குருக்களாகத்தான் எனக்கு அவர் அறிமுகமானார். அவரது கல்வியும் ஞானமும் வேதசாஸ்திர அறிவும், சோதிட விற்பன்னராக அவர் திகழ்ந்ததும் படிப்படியாக எனக்குத் தெரியவந்தபோது இந்தச் சிறிய உருவத்துக்குள்ளே இப்படியொரு அறிவுக்களஞ்சியமா என்று பிரமித்துப்போனேன். மேற்கூறியவைகளோடு ஒரு மரபுவழி வைத்தியராகவும், சஞ்சிகை ஆசிரியராகவும், சமயசொற்பொழிவாளராகவும் இருப்பது மட்டுமல்லாமல் ஒரு பள்ளியை வழிநடத்தும் நிர்வாகியாகவும் அவர் மிளிருவது ஒரு சாதாரண மனிதனால் நினைத்துப்பார்க்கவும் முடியாத செயல் என்றுதான் நான் கருதுகிறேன். சதாவதானி, அட்டாவதானி என்று சில பெரியார்களைச் சொல்லக் கேட்டிருக்கிறோம். அதற்கு ஒரு நடமாடும் உதாரணம் இவர்தானோ என வியக்கிறேன்.

இதுவரை படித்தது போதாதென்று மீண்டும் பல்கலைக்கழக மாணவராக இருக்கும் இவர் தானே ஒரு பல்கலைக்கழகமாக மாற எத்தனிக்கிறாரோ?

அவருடைய சகல அறிவும் திறமையும் ஒளிவிளக்குப்போல எல்லாருக்கும் பயன்படவேண்டும், பயன்படும் என்றும் எமக்குத்தெரியும். ஆடம்பரம் என்னவென்பதையே அறியாமல் நாடிவரும் அனைவரையும் அரவணைக்கும் எமது "கண்ணன் ஐயா" அவரது குருப்பட்டாபிஷேக வெள்ளிவிழாவில் அடியெடுத்துவைப்பது கல்வித் தாய்க்கு மட்டுமல்ல நான்கு வேதத்தின் அதிபதியான அந்தச் சோமாஸ்கந்தனுக்கும் ஒரு பெருமையல்லவா? கண்ணனின் கீதையைப் போலவும், கந்தனின் அநுபூதியைப் போலவும் அமரகாவியமாக எங்கள் ஐயா வாழ்ந்து ஆலமரம்போல் அறிவுப்பசியுள்ளோருக்கு ஒரு நிழலாக இருந்து ஒரு நல்ல அறிவுள்ள, பக்தியுள்ள சமுதாயத்தைத் தோற்றுவிக்கவேண்டுமென்று இறைவனை இறைஞ்சி இந்த வெள்ளிவிழாவில் மன மார்ந்த ஆசிகளைத் தெரியப்படுத்துகிறேன்.

**திரு. க. பாலசுப்பிரமணியம்**
முன்னாள் உதவிப் பொதுமுகாமையாளர்,
இலங்கை வங்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

குருத்துவ பட்டம் பெற்று 25வது வருட நிறைவை எய்தியிருக்கும் திரு. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் இக்காலப்பகுதியில் ஆற்றிய சமயப்பணிகள் காத்திரமானவை.

நெல்லண்டை அம்மன் ஆலய ஆதீன கர்த்தாவாக இருந்தபோது பல்வேறு நெருக்குதல்களுக்கும், நெருக்கடிகட்கும் ஆளான அவர் தனது துணைவியாரின் உறுதுணையுடன் அவற்றை வெற்றிகொண்டமை இறைவன்பால் அவர் கொண்ட உண்மையான பக்திக்கு எடுத்துக்காட்டாகும். பக்தர்களின் மனமறிந்து அவர்கட்கு திருப்திதரும் வகையில் பூஜைகளை நிறைவேற்றுபவர். அடியார்கள் அவர்மீது காட்டும் அன்பும் பற்றுதலும் அவரது ஆன்மீகப் பணிக்குச் சான்றாக அமையும். சமயப் பணியுடன் தன்னாலியன்ற சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வருபவர். சமயப் போதனையூடாக சமூக விழுமியங்களையும் கலாசாரத்தின் பெறுமானங்களையும் மக்களுக்கு உணர்த்தியவர். அவரது வயதுக்கு மிகையாகவே சமய, சமூகப் பணிகளினூடாக சமூகத்தின் மிகுந்த மதிப்பையும் மரியாதையையும் பெற்றுக் கொண்டவர். ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியபேறு சிறந்த கல்வியை வழங்கியதோடு உயர்வகுப்பு மாணவர்களை சிறப்பாக வழிநடாத்தி அவர்களின் அன்புக்குப் பாத்திரமாக இன்றும் விளங்குபவர். தனது சக ஆசிரியர்களால் பெரிதும் நேசிக்கப்பட்டவர். முரண்பாட்டை தவிர்த்து விலகிவிடும் பண்பாளர். சோதிடக்கலையிலும் விற்பன்னராவார். தற்போது அதிபராகப் பதவியுயர்வு பெற்று பணிபுரியும் அவர் அம்மக்களுக்கு உயர்வான சேவையை வழங்குதல் வேண்டும். சூழலுக்குத் தன்னை இசைவாக்கம் செய்து வாழும் அவர் ஓர் உதாரண குடும்பத்தலைவர். அவர் நட்புக்கு இலக்கணமாகத் திகழும் அவர்பணி மேலும் சிறக்க வாழ்த்துகிறோம்.

**N. தெய்வேந்திரராஜா**
யா/ ஹாட்லிக் கல்லூரி அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பெருமதிப்புக்குரிய சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக் குருக்களின் குரப்பட்டாபிஷேக வெள்ளிவிழா தொடர்பாக வெளியிடப்படும் மலருக்கு இவ்வாழ்த்துச் செய்தியை பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

"முயற்சி கொள்ளாமல்
சாத்தியமாவதில்லை வெற்றி"

சிறுவயதிலிருந்தே கண்ணன் என்று எங்களனைவராலும் செல்லமாக அழைக்கப்பட்டு வரும் சிவஸ்ரீ சோமாஸ்கந்ராஜாக் குருக்களின் வெற்றிகளும் அவருடைய முயற்சிகளின் விளைவுகளே! குழந்தையாகி, சிறுவனாகி, இளைஞனாகி, கணவனாகி, குருக்களாகி, தந்தையாகி, பட்டதாரியாகி, ஆசிரியராகி, எழுத்தாளராகி, பேச்சாளராகி, அதிபராகி, முதுகலைமாமணி பட்டதாரியாகி, பேரனாகி...............என்ற அவரது ஒவ்வொரு நிலைகளையும் அருகில் இருந்து பிரமிப்புடன் பார்த்து மகிழ்ந்து வருகின்றேன்.

ஆபத்துக்காலத்தில் தைரியம், வளர்ச்சியடைந்த காலத்தில் பொறுமை, சபையில் பேச்சுத்திறமை. யுத்தத்தில் பராக்கிரமம், நிலையான புகழில் ஆசை, இன்னும் அதிகமாகப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஏக்கத்தால் ஏற்படும் கவலை இவை பெரியோர்களுக்கு இயற்கையிலேயே அமைந்துள்ள குணங்களாகும்.

மேற்கூறப்பட்ட அனைத்துத் தகைமைகளையும் தன்னகத்தே கொண்டு தும்பளைக் கிராமத்தில் இள வயதிலேயே "பெரியோர்" என்ற முத்திரை பதித்து உலாவரும் எங்கள் குட்டிக் கண்ணனின் வளர்ச்சி கண்டு நான் மட்டுமல்ல ஊரே வியந்து நிற்கின்றது. "ஒரு பெரிய மனிதர் தன்னுடைய பெருந்தன்மையை சிறிய மனிதர்களை நடத்துவதன் மூலம் வெளியில் காண்பிக்கின்றார்" என்று கூறப்படுகின்றது. அதிலும் எமது குருக்கள் தனது பங்கைத் திறமையாக வெளிப்படுத்துகின்றார்.

ஆன்மீகம் சேர்ந்த கல்வி மனித சமுதாயத்துக்குத் தேவை அதனால் ஒழுக்க உயர்வு ஏற்படும் இன்றைய கல்வி பெரும்பாலும் மூளையை வளர்க்கிறதே தவிர மனதைப் பண்படுத்துவதாக இல்லை. அவ்வகையில் குருக்கள் எமது கிராமத்திலுள்ள ஸ்ரீ வடபத்திரகாளியம்மன் விழாக்களில் ஆன்மீகச் சொற்பொழிவுகளைச் சிறப்புடன் ஆற்றுவது மட்டுமன்றி, அச்சொற்பொழிவுகளில் வினாடி வினாப் போட்டிகள் வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளரும் சமுதாயச் சிறுவர்களுக்குப் பரிசுகளும் வழங்கி வருகின்றார். "கல்வியின் பயன் அறிவு அறிவின் பயன் ஒழுக்கம், ஒழுக்கத்தின் பயன் உயர்வு" என்பதைச் சிறுவர்களின் மனங்களில் ஆழப்பதிந்து வரும் அவரது செயற்பாடுகளைப் பாராட்டச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டுப் பெருமையடைகின்றேன்.

நெல்லண்டைப் பத்திரகாளியம்மன், ஸ்ரீ வடபத்திரகாளியம்மனின் சிறந்த குருக்களாக தனது அழகிய பூஜை முறையினால் பக்தர்களின் உள்ளங்களைக் குளிர்வித்து வரும் எமது கண்ணன் குருக்களுக்கு நடைபெறும் வெள்ளிவிழா இளம் சமூகத்தினரிடையே நல்ல விழிப்புணர்வையும், சைவ மக்களிடையே தூய பக்தியுணர்வையும், அம்மன் வழிபாட்டின் பெருமையையும் உண்டாக்கும் என நம்புகின்றேன். வெள்ளிவிழா சிறப்புற இத்திமரத்தின் கீழ் இருந்து நல்லருள் பாலிக்கும் நெல்லண்டைப் பத்திரகாளி அம்மனைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க தமிழ்! வாழ்க.
இறைதொண்டு! வாழ்க.
சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக் குருக்களின் புகழ்!

**பா. சுப்பிரமணியம்**
ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகில இலங்கை திருவள்ளுவர் கோட்ட அமைப்பாளரும் செயலாளரும், அகில இலங்கை காந்திசேவா சங்க உபதலைவரும் ஓய்வுபெற்ற அதிபரும் ஆகிய மதிப்புமிக்க, ஆ. வடிவேலு அவர்களின் வாழ்த்துச் செய்தி

"அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்" என்ற அருட்பிரவாக மொழிக்கு ஒப்ப இலட்சுமணன்தோட்ட தியாக. சோமாஸ்கந்தராஜா ஐயர் அவர்கள் சிறுபராயத்திலேயே நெல்லண்டை வடபத்திரகாளி அம்மன் திருவடியிலே சரணடைந்து அம்பாளின் தொண்டனாகத் தன்னை அர்ப்பணித்துத் தினமும் தவறாது நித்திய பூசையை தானே நடாத்தி வந்தார். அம்பாளின் அருட் பெருங்கருணையாலும், ஆலய பரிபாலன சபையாயின் அதீத முயற்சியினாலும் 1983 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 04ஆம் திகதி தும்பளை நெல்லண்டை பத்திரகாளி திருப்பதியில் இதற்குமுன் யாரும் பெற்றிருக்காத பெரும் சிறப்பிற்குரிய ஆசார்யாபிஷேகம் செய்விக்கப்பட்டு சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜா குருக்கள் என்ற தீக்ஷா நாமத்தோடு போற்றிப் புகழப்பட்டு இன்று இருபத்தைந்து ஆண்டு நிறைவினையொட்டி வெள்ளி விழாக்கொண்டாடும் இப்புனித நல்நாளிலே எனக்குச் சமயதீட்சை தந்து சமயநெறியிலே வாழவழிகாட்டியவரும், என்னால் தினமும் வணங்கப்படுபவருமாகிய எனது குருநாதரை வாழ்த்தக்கிடைத்தமை என் முற்பிறவிப் பயனே.

குருப்பட்டம் பெற்ற நாட்தொடக்கம் இற்றைநாள் வரை கல்வியென்னும் சாகரத்திலே மூழ்கிச் சுழியோடிப் பல பட்டங்கள் என்னும் முத்துக்களை எடுத்து மாலையாகத் தொடுத்து மார்பிலே அணிந்துகொண்டார். அந்தமுத்துக்கள் எப்பொழுதும் ஒளிவீசிக் கொண்டேயிருக்கிறது. அதனால் அவர் செல்லுமிடங்களில் மண்டிக்கிடக்கும் அறியாமை இருள் அகன்று விடுகிறது.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" என்ற குறளைக் கற்றவர் பலர் கற்றபடி நடப்பவர் சிலர். அந்தச் சிலரில் ஒருவர்தான் இவர். வேதாகமங்களில் கூறப்பட்ட விதிமுறைகளை விளக்கியும், விமர்சித்தும் ஆண்டவன் சந்நிதானத்தில் அனைவரும் சமம் என்ற அடிப்படைக் கொள்கையைத் தானே தர்மகர்த்தாவாகச் செயற்படும் இலட்சுமணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டம் வீரமாகாளி அம்மன் வடபத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தில் நிலைநாட்டிவரும் நிர்மலன் என்பது ஊரறிந்த உண்மை.

மனிதன் இப்படித்தான் வாழவேண்டுமென உலகிற்கு வாழ்ந்து காட்டிய உத்தமர்களான திருவள்ளுவர், மகாத்மாகாந்தி போன்றவர்களின் வாழ்வியல் முறைகளிலே அதீத நம்பிக்கை கொண்டவராதலால் அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டத்தின் தலைவராகவும், அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தில் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றி வருகின்றார். பாடசாலை அதிபராக இருக்கின்ற காரணத்தால் படிக்கின்ற இளந்தலைமுறையினரை இந்த நெறிமுறைகளில் வாழப்பழக்கும் பாரிய பொறுப்பையும் ஏற்றுள்ளார்.

எங்கெங்கு சைவசமயம் சார்ந்த மக்கள் சமய நெறிமுறையிலும், வழிபாட்டுமுறையிலும், விரத அநுட்டான முறையிலும் பின்னடைவு கொண்டிருக்கின்றார்களோ அங்கெல்லாம் சமயச் சொற்பொழிவுகள் செய்வதன் மூலம் அவர்களையும் ஆசார சீலர்களாக்கும் அரும்பெரும் தொண்டையும் ஆற்றிவருகின்றார். இத்தகைய மேன்மைக்கும் சிறப்பிற்கும் உரிய குரு அவர்கள் சகல சௌபாக்கியங்களையும் பெறுவதோடு பொன்விழா வைரவிழாக்களைக் காணவேண்டுமென அ. இ. தி. கோட்டத்தின் சார்பாகவும், அ. இ. கா. சே. சங்கத்தின் சார்பாகவும் வாழ்த்துவதோடு நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் வடபத்திரகாளி அம்மனையும் அருள்பாலிக்க வேண்டி வணங்குகின்றேன்.

**என்றும் சேவைக்குரிய அடியவன்**
**ஆ. வடிவேலு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தரும பரிபாலனசபை தலைவரின்

# வாழ்த்துச் செய்தி

சிவஸ்ரீ. தியாகராசாக்குருக்கள் சோமாஸ்கந்தராசாக்குருக்கள் அவர்களின் குருப்பட்டாபிஷேக வெள்ளிவிழா வாழ்த்து.

சிவஸ்ரீ. தியாகராசாக்குருக்கள் சோமாஸ்கந்தராசாக்குருக்கள் இளம் வயதில் துன்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தரும பரிபாலனசபையால் அம்மன் கோவிலில் பூசகராக அமர்த்தப்பட்டார். அவர்கள் தமது கல்வி அறிவை மேம்படுத்த ஆர்வம் காட்டியமையால் அவரை எமது சபை உறுப்பினர்கள் வெளிவாரி மாணவனாகக் கல்வியைத் தொடர ஊக்கமளித்தனர். தமது அயரா முயற்சியால் பட்டங்கள் பல பெற்றார். கல்வித் திணைக்களத்தில் ஆசிரியராகச் சேர்ந்தார். இன்று யா/ குடத்தனை அ. மி. த. க. பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றுகின்றார். சைவசித்தாந்தம் கற்றவர். சமயப் பிரசங்கங்களால் மக்களைக் கவர்ந்தவர். பல கோவில்களில் குருக்களாகக் கடமையில் ஈடுபடுபவர்.

அவர்கள் குருப்பட்டாபிஷேக வெள்ளிவிழா கொண்டாடுவதையிட்டு எமது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கும் இவ்வேளை "கற்கக் கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கிணங்கவும் ஔவைப்பிராட்டியின் "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" என்பதையும் மனதில் இருத்தி மேன்மேலும் கற்று அவற்றைப் பயன்படுத்தி நடந்து வழம்பெற வேண்டும் என பத்திரகாளி அம்மனை வேண்டுகின்றோம்.

**திரு. ஆ. நவரத்தினசாமி**
தலைவர்.
தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்
தர்ம பரிபாலன சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோவில் முகாமையாளரும், சுசீலா ஆபரண மாளிகை உரிமையாளரும் ஆகிய நடராசா சற்குணராஜா அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

அம்பாளுக்கு அன்புருக பூசை செய்து அருள் வேண்டும் அடியார்களது மனக்குறைகளை முன்னரே அறிந்து தீர்த்து வைக்கும் எங்கள் கண்ணன் ஐயா வாழ்க. அடியார்களின் குறைகளை அம்பாளிடம் சொல்லி ஞாபகசக்தியுடன் பூசை செய்யும் போது அர்ச்சனை செய்யும் திறனை அனைவரும் அறிவர் தந்தையாருக்கு பின் நெல்லண்டைப் பத்திரகாளி அம்மனுக்கும் எங்கள் இலட்சுமணன் தோட்டப்பிள்ளையாருக்கும் திருவருள் சுரக்கும் அருட்காட்சியை நேரே அனுபவித்துக் கண்டிருக்கின்றேன். குருப்பட்டாபிஷேக வெள்ளிவிழா சிறப்புற்று அவர்கள் சகல நலன்களையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

**நடராசா சற்குணராஜா**
முகாமையாளர்.
சுசீலா ஆபரண மாளிகை.

எந்த வேலையையும் நேர்த்தியாகவும் விரைவாகவும்
செய்து முடிக்கத் தேவைப்படுவது ஒருமுகப்பட்ட மனம்
- புதுவை அன்னை

விஞ்ஞானம் இல்லாத சமயம் மூடத்தன்மை உடையது,
சமயம் இல்லாத விஞ்ஞானம் அகம்பாவம் நிறைந்தது.
- தத்துவமேதை ராதாகிருஷ்ணன்

வாய்ப்புக்களை எவன் தவற விடுகிறானோ,
அவன் தன்னையே இழக்கிறான்;
தன் வாழ்வையே இழக்கிறான்.
- ஒரு பெரியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சைவசித்தாந்த பண்டிதர், சிவாகம உபதேச வாசஸ்பதி, அருட் பிரகார சீலன் தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள் யா/ குடத்தனை கரையூர் அ. மி. த. க பாடசாலை அதிபர், தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன், தும்பளை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளியம்மன் வடபத்திரகாளி அம்மன் தேவஸ்தான பிரமத குரு அவர்கள் 04.09.2008 அன்று குருப்பட்டம் பெற்று 25 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு நிகழும் "குருப்பட்ட அபிஷேக விழாவினை" யொட்டி வழங்கும்**

# வாழ்த்துரை

மனிதநேயம் மிக்க தியாக சோமாஸ்கந்தராஜ குருக்கள் அவர்கள் குருப்பட்டம் பெற்று இன்றுடன் 25 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இதனையொட்டி எடுக்கப்படுகின்ற குருப்பட்டாபிஷேக விழாவின்போது இதய சுத்தியோடு எனது நெஞ்சம் நிறைந்த உணர்வலைகளை வெளிப்படுத்தலில் பெருமிதம் அடைகிறேன்.

மாணவ பராயந்தொட்டு தந்தைவழி மைந்தனாக நெல்லண்டைப்பதியில் வாழ்ந்து அருள்மிகு தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தின் குருவாக இணைக்கப்பட்டு, ஈடுபடுத்தப்பட்டு, அறிமுகப்படுத்தப்பட்ட சங்கைக்குரிய தியாக சோமாஸ்கந்தராஜா குருக்கள் 25 ஆண்டுகளுக்கு முன் எம்மத்தியில் குருப்பட்டம் பெற்றமை இன்றும் எமக்கு இதயக்கமலமாக மலர்ந்து கொண்டிருக்கிறது.

மிகுந்த சோதனைகளோடும் இப்பகுதியில் வாழ்ந்து வருகின்ற மக்களோடு 25 ஆண்டுகள் மிக உன்னத பிரார்த்தனைகளை செய்துவருகின்ற குருக்கள் ஐயா நெஞ்சில் நிலைநிறுத்தப்பட வேண்டியவர்.

இறையருளோடு 25 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்வுற்ற குருப்பட்ட வைபவத்தில் கலந்துகொண்ட நான் அவரது 25 வது ஆண்டு குருப்பட்ட நிறைவு விழாவின்போது கலந்துகொள்ளும் பாக்கியம் பெற்றமை பெருமைக்குரியது.

சாதி, மத, இன ஏற்றத் தாழ்வுகள் வேறுபாடின்றி அனைத்து அடியவர்களுக்கும் குறிப்பாக வறுமையின் பிடியில் வாழ்ந்துவரும் வடமராட்சி பிரதேச மக்களது துன்பம், துயரம், இடர், கவலை ஆகியவற்றை நீக்க இறைதுணை கொண்டு, பிரார்த்தனை செய்யும் குருக்கள் ஐயா இன்னும் பல்லாண்டு சகல நிறைவுகளோடும் சிறப்பாக வாழ நான் தினமும் வணங்கும் கணக்கிலாவத்தைச் சித்திவிநாயகப் பெருமானின் அருளும், இத்திமரத்தில் கொலுவுற்றிருக்கும் தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கருணையும் கிட்டவேண்டுமென பிரார்த்தனை செய்கிறேன்.

**இங்ஙனம்**

**இராஜரட்ணம் சிவபுண்ணியம்**

(முன்னாள் உதவி அரசாங்க அதிபரும், அகில இலங்கை சமாதான நீதவானும்)

"தமிழகம்"
தும்பளை,
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல்துறை ஆற்றல்மிக்க இருவழிக்குரு

கல்வித்துறை, சமயத்துறை ஆகிய இருவழிவந்த கௌரவத்துக்குரிய குருவாக விளங்குகின்றவர் சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள். இந்த இரு துறைகளிலும் பணிபுரியும் நல்வாய்ப்பு இக்காலத்தில் இலகுவில் எல்லோருக்கும் வந்து சித்திப்பதில்லை. சந்தர்ப்பம் வாய்த்தவர்கள். குருக்கள் அவர்கள்போல இருதுறைகளிலும் தமது பெயரினைப் பதித்தவர்களாக விளங்கவில்லை. குருக்கள் அவர்கள் ஆசிரியராகப் பணிபுரிந்து, இன்று அதிபராகப் பதவி வகிக்கின்றார்கள். உயர்கல்விகற்ற எம். ஏ. பட்டதாரி ஒருவரது அறிவுத்திறன் அவரது உரையாடலினால் மேடைப்பேச்சினால், எழுத்தினால் வெளிப்படுத்தல் வேண்டும். எல்லோருக்கும் குறிப்பிட்ட எல்லாத்துறையும் வசப்படாதபோதிலும், ஏதோவொருதுறை மூலம் அவரது திறன் வெளிப்படவே செய்யும். குறித்த எல்லாத்துறைகளும் வல்லமையான மிகச்சிலருள் குருக்கள் அவர்களும் பெயர் குறிப்பிட்டுச் சொல்லத்தகுந்த ஒருவர் இந்து மதக்குருமாரிடத்தில் எதிர்பார்க்கப்பெறும் ஞானி ஒளியினை உடை ஒருவராக எமது மத்தியில் வாழ்ந்து வருகின்றார் இருவழிக் குருமாரும் மக்கள் மயப்பட்டவர்களாக வாழ்ந்து அரும்பணி ஆற்ற வேண்டியது சமூகத்தின் தேவை. குருக்கள் அவர்கள் மக்களுடன் இணைந்து நிற்கும் அரும்பணியாளர். குருக்களிடத்தில் காணப்பெறும் விழுமியங்களும், தந்தையார் வழிவந்த வாஸ்து சாஸ்திர, சோதிட வைத்திய நுண்ணறிவும் மக்கள் தொடர்புசார்ந்த நெருக்கமான உறவினைத் தோற்றுவித்துள்ளன. இன்று குருப்பட்டாபிசேக வெள்ளிவிழாக் காணும் குருக்கள் அவர்கள், கல்வித்துறையிலும், ஏனைய துறைகளிலும் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று, அதன் பேறாக மக்கள் பணிபுரிந்து பல்லாண்டு வாழ்ந்து இன்னும் பலவிழாக்களைக் கண்டு மேன்மையுற வேண்டுமென அன்புகொண்ட நெஞ்சினால் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

கரணவாய் வடக்கு.
வல்வெட்டித்துறை.

**தெணியான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி

யா/ குடத்தனை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாசாலை அதிபர் சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் குருப்பட்டாபிஷேகம் பெற்ற இருபத்தைந்தாவது அகவையினைக் கொண்டாடுவதையிட்டு உள்ளம் பூரிக்கின்றேன். பல்கலைக்கழகங்களினூடாக பல பட்டங்களையும் அதற்கு வெளியே பல்துறைசார்ந்த புலமையும் கொண்டவராவர்.

முறைசார்ந்த கல்வி, முறைசாராக் கல்வி, முறைமையிற்கல்வி என்ற வகையில் பாண்டித்தியம் பெற்று இன்று பாடசாலையின் சிறந்த முகாமையாளராகவும் பணியாற்றுவது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். தமிழ்மொழி, வடமொழியில் மட்டுமன்றி ஆங்கிலமொழியிலும் புலமைபெற்றவராவர். தமிழ்மொழியின் லாவகமும், நயமும் எளிய நடையில் ஆழ்ந்த பொருளை அடக்கும் அழகும் ஆற்றலும் அவரிடம் நிரம்ப உண்டு. வள்ளுவன் கண்ட சொல்லுதல் வல்லாரும் கம்பன் குறிப்பிடும் ‘சொல்லும் சொல் வல்லாரும்’ சோமாஸ்கந்த குருக்களின் சொற்பொழிவுகளிலே காணலாம். நாட்டு வைத்தியம், சோதிடக்கலை என்பவற்றிலும் நிபுணத்துவம் பெற்றிருக்கின்றார். வெள்ளிவிழாக்காணும் சோமாஸ்கந்தகுருக்கள் மேலும் பொன்விழா, வைரவிழா, பவளவிழா, அமுதவிழா என பலவற்றையும் கடந்து நீடூழி வாழ்க நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

**கிருஷ்ணபிள்ளை நடராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1983 ஆம் ஆண்டில் குருப்பட்டாபிஷேகம் பெற்று 2008.09.04 ஆம் தேதியன்று வெள்ளிவிழாக்காணும் சிவஸ்ரீ.சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் (கண்ணன் ஐயர்) சார்பாக நெல்லண்டைப் பத்திரகாளியை வழுத்துதல்

அம்மா!

1) தாய்க்குத் தலைமகனான கண்ணனைச் சின்னஞ்சிறிய வயதில் கல்வியில் கவனஞ் செலுத்தவைத்தாய். தந்தையின் புறக்கணிப்பைப் பொருட்படுத்தாது படித்துக்கொண்டேயிருக்க வைத்தாய். அவனது புத்திசாலித்தனத்தால் ஆசிரியர்களை வியக்கவைத்தாய்.

2) உயர்கல்வி என்ற ஆர்வம் ஏற்பட்டபோது அருள்நங்கை என்ற மாதுசிரோமணி உருவத்தில் தோன்றி உதவினாய். சின்னக்கண்ணன் தனது செல்லக்கையால் உனக்குப் பூசை செய்விக்க விரும்பினாய். 20 ஆம் வயதில் குருப்பட்டாபிஷேகம் அளித்து அழகு பார்த்தாய்.

3) மலையாள சாதுவால் பிரதிட்டை செய்யப்பட்ட உனக்கு சிதம்பரியார், சின்னையர், சீனி ஐயர், குமாரசாமி, தியாகராசா, சோமாஸ்கந்தராசா என்று நியதிப்படி பாரம்பரிய முறையில் பூசகர்களை நியமித்தாய்.

4) கோவில் அதிகாரிகள் என்ற வேஷதாரிகளின் அநீதிகளுக்கும், அவதந்திரங்களுக்கும் தைரியமாக முகம் கொடுக்க வைத்தாய், எதிர்நீச்சலின் போதும் இன்முகத்துடன் இருக்க வைத்தாய். கோவில் பூசை உரிமைக்காக இருவாரம் சிறைவாசம் அனுபவிக்கவைத்தாய். கண்ணனின் இல்லக்கிழத்தியையும் விளக்கமறியலில் வைத்தாய். அநியாயமாய் நீதிமன்றில் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி வைத்தாய்.

5) உனது கிருபாகடாட்சத்தால் யாழ் உயர் நீதிமன்றில் கண்ணனுக்குப் பூசை உரித்து உத்தரவாதம் அளிக்க வைத்தாய். வெற்றிவந்தபோதும், தோல்வி ஏற்பட்ட போதும் கண்ணன் உன் காலைப்பிடித்தபடியே பக்தி வைராக்கியனாக்கினாய்.

6) இன்று, கண்ணனின் 45 ஆம் வயதில் வித்தியாகுருமாரின் அதிபதியாக்கினாய். தீட்சை அளிக்கும் உனது பிரதமகுருவாக அணைத்து வைத்திருக்கிறாய்.

7) மேலும், மேலும் கண்ணன் சைவத்தையும், தமிழையும் சீராக வளர்க்க நல்லருள் பொழிவாயாக. சகல சௌபாக்கியமும், நிரோகிலாபமும் பொலிந்த இல்லற வாழ்வை வழங்குவாயாக. மதிப்புக்குரிய கண்ணன் ஐயர் நன்றாக விளையாற்ற வல்லவனாகவும், தூய அன்புடையவனாகவும், கூரிய அறிவுடையவனாகவும் விளங்க அருள்புரிவாயாக

**சி. வாமதேவன்**

தும்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஞானமும் கல்வியும் நயந்தவர்

சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் குருப்பட்டாபிஷேகம் பெற்று 04.09.2008 டுடன் 25 வருடங்கள் ஆகின்றன. வெள்ளிவிழா காணும் பாக்கியவான் ஆகின்றார்.

இப்பட்டம் தீஷ்சப் படிமுறைகளில் உயரியது. சமையியார் சமயதீட்சை: விசேடதீட்சை நிர்வாண தீட்சை ஆச்சார்ய அபிடேக (குருப்பட்ட தீட்சை) என வகைப்படும். இவர்கள் தான் ஆன்ம ஈடேற்றத்திற்கு தகைமைசார் தீட்சை கொடுக்கும் அதிகாரிகளாகின்றனர். அத்தகைய சிவபுண்ணியத்திற்கு எம்மை இட்டு வழிகாட்டும் சிவானுபவர்கள் ஆகின்றனர்.

ஞானமும் கல்வியும் நயந்தவர். தானமும் தர்மமும் ஆனவர். வானவர் விரும்பும் வழிநிற்பவர். அவர்களை வழுத்த, போற்ற, நாம் புண்ணியம் செய்திருத்தல் வேண்டும்.

"மனிதத்தின் மேம்பாட்டுத் தெய்வத் திருமகனாய்ப்
புனிதத்தின் புத்தகப் புத்துணர்வின் பெற்றியனால்
குனித்த புருவத்துக் குமுண்சிரிப்பன் கூத்துகந்து, பக்தி
கனிந்துவரப் பூஜித்து எமை ஈடேற்றி நீடுவாழி!

குறிப்பு : புத்தகம் : புத்து + அகம் : நெஞ்சமெனும் புதிய புத்தகம் என்க.

**அன்பன் வ. ஆ. தங்கமயில்**

மாலிசந்தி, வதிரி, கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள் குருப்பட்டம் பெற்ற 25 வது ஆண்டினை மகிழ்வோடு வரவேற்கின்றேன்.

ஐயா அவர்கள் எமது ஆலயத்தின் பிரதமகுருக்களாவார். அலங்கார உற்சவமாய் நடைபெற்றுவந்த விழாவினை மஹோற்சவ விழாவாக்க முனைப்போடு ஆலோசனைகள் வழங்கிச் செயற்படுத்தியவர் அவரே. கடந்த 2002 ஆம் ஆண்டு எமது ஆலயத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தினைப் பிரதமகுருவாயிருந்து சிறப்பாக நிறைவேற்றப் பேருதவிகளைப் புரிந்தவர். மிகவும் சுறுசுறுப்பானவர். இவர் ஆலயத்திற் செய்கின்ற கிரியைகள் பக்தர்களின் பக்தியை மேலோங்கச் செய்யும். சிறந்த சமயச் சொற்பொழிவாளர், தமிழ்வித்தகர். ஒவ்வொரு மஹோற்சவ காலங்களிலும் அவரால் ஆற்றப்படும் சைவப் பேருரைகள் எம்மவர்களைத் தூய்மைப்படுத்தும்

ஐயா, ஆலயத்திற்கு வந்தால் அவரைச் சுற்றி மாணவர் கூட்டம் ஒருபுறம், கல்வியாளர்கள் ஒருபுறம், மெய்யடியார்கள் ஒரு புறம், அந்த அளவிற்கு ஊரவர் யாவரையும் தம்பணியாற் கவர்ந்தவர்.

சைவமும் தமிழும் அழிந்து கொண்டு செல்லும் இத்தருணத்தில் எங்கள் குருக்கள் ஐயா அவர்களது தொண்டுகள் அவற்றைக் காப்பாற்றும் என்பதில் நம்பிக்கையுண்டு.

ஐயா அவர்கள் சைவத்தையும், தமிழையும் மேலோங்கச் செய்ய நீடிய ஆயுளையும், சுகத்தையும், சகல சௌபாக்கியங்களையும் எம்பெருமான் அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோவில் பாலகணபதி வழங்கி, நல்லருள் பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பதோடு இவ்விழா சிறப்பாயமைந்து இன்பம் பயக்க எம் ஆலயசார்பில் மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

**திரு. மா. அனந்தராசன் J.P**
தலைவர்.
அல்வாய் சாமணத்தறை
ஆலடிப்பிள்ளையார் தேவஸ்தான பரிபாலன சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஞான ஒளியுடையோய் நீடு வாழ்க!

எமது ஆன்மீகக் குருவாகவும் மணவர் சமுதாயத்தினரின் கல்வி மேம்பாட்டுக் குருவாகவும் ஜொலித்துக்கொண்டிருக்கும் சைவசமய ஞான சிரோன்மணி தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் B.A. Dip in Education, M.A அவர்கள் இன்று தனது ஆன்மீகக் குருப்பட்டம் பெற்ற இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் வெள்ளிவிழாவினைக் கொண்டிருக்கும் நிலையில் அவரை மேலும் பல்லாண்டுகாலம் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ எம்பெருமான் பாலகணபதி அருள்வேண்டி வாழ்த்துகின்றேன்.

'குரு' என்பவர் ஆன்மீகத்திலும் ஆசிரியத்துவத்திலும் தன்னை ஆகுதியாக்கி மற்றவர்களுக்கு வழிகாட்டுகிறார். இந்நிலையில் எம்மத்தியில் இப்பணிகளில் தன்னை அர்ப்பணித்து ஒழுகிவருபவர். எமது இன்றைய விழா நாயகராகும் இவர் மிகவும் இளவயதுடையவராக இருந்த போதிலும் சமய சமாசாரங்கள், கல்வியியல் நிலை என்பவற்றில் தாம் மிக உச்சமான நிலையை எய்தியவராய் விளங்குவதுடன் தன்னை அண்டியவர்களுக்கு 'குருவாக' இருந்து வழி காட்டியாகவும் விளங்குகிறார். அவருடைய வழிகாட்டலில் நாமெல்லோரும் இறையருள் பெற்று இன்பம் பெறுவோமாக.

**திரு. செ. சதானந்தன் J.P**
ஓய்வுபெற்ற அதிபர்
கரவெட்டி பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலதுறை ஆளுமை நிறைந்த குருக்கள்

இந்து சமயம் இந்து சமுத்திரம்போல் பரந்ததும், ஆழமானதுமான வைதீக நெறியினையும் வாழ்வியல் தத்துவங்களையும் கொண்டது. அது சிந்துவெளி நாகரிகத்திலும், வேதகாலப் பண்பாட்டிலும் தனது உன்னதமான கலாசார விழுமியங்களை உலகத்திற்கு எடுத்துக்காட்டிய சிறப்புமிக்கது. அந்தவகையில் எமது சமயத்தின் உண்மை நெறியினை தமது அனுபவம், ஆராச்சி, அர்ப்பணிப்பு என்பவற்றின் ஊடாக வளர்த்துச் செல்பவர் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் ஆவார்.

முதுகலைமானிப் பட்டதாரியும் பாடசாலை அதிபருமான குருக்கள் ஐயா அவர்கள் வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க சைவமரபிலே தோன்றிய பெருந்தகை ஆவார். இவர் தந்தையின் மரபு வழியிலே வைத்தியம், சோதிடம், ஆலய கிரியைகள் போன்றவற்றில் அனுபவ முதிர்ச்சி பெற்றவராக திகழ்ந்து வருகிறார். அத்துடன் மஹோற்சவம் கும்பாபிஷேகம் போன்ற ஆலயத்தின் பெருவிழாக்களை வேதாகம விதிகளுக்கு அமைவாக நடாத்தி முடிப்பதில் வல்ல "கிரியா பூசணமாக" விளங்குகிறார்.

குருக்கள் அவர்கள் பல நிறுவனங்களின் தலைவராகவும், ஆதீனகர்த்தாவாகவும் ஆலயங்கள் பலவற்றின் பிரதம குருவாகவும் நற்பணி ஆற்றிவருகிறார். ஆறுமுக நாவலரின் பின்பு ஈழத்தில் தோன்றிய சிறந்த சமயச் சொற்பொழிவாளர்களுள் ஒருவராக இவர் காணப்படுகின்றார். எங்கள் அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் ஆலயத்தின் மஹோற்சவகாலத்திலே இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் பற்றி மிகவும் சிறப்புமிக்க உபநியாசம்களைச் செய்து, பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பல்துறைசார்ந்த ஆளுமைகள் நிரம்பிய குருக்கள் ஐயா அவர்கள் தமது இளமைக்காலத்திலேயே "வேதங்கள்" என்னும் நூலை எழுதியுள்ளார். அது பல அறிஞர்களின் பாராட்டுக்களைப் பெற்றது. இவர் இன்னும் பல நூல்களையும், சஞ்சிகைகளையும், சமயப் பிரசுரங்களையும் வெளியிட்டு எமது மக்களுக்கு அரிய பெரிய பணிகளை ஆற்றிவருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் அறிவும், சமய ஞானமும் சிறந்த ஒழுக்கமும், அன்பு கலந்த பணிவும் கொண்ட சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்களின் "குருப்பட்டாபிஷேக வெள்ளிவிழா" சிறப்புறவும், அன்னாருக்கு சகல சௌபாக்கியங்களையும் வழங்க வேண்டு மென்றும் அரசடி விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து அன்புடன் வாழ்த்துகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**இறைபணியில்**
**க. சின்னராஜா BA, JP**
முன்னாள் தலைவர்
வடஅல்வை அரசடி விநாயகர் ஆலயம்.

## மாற்றங்கள்

*பிரகாரம் நுழைந்தவுடன்*
*கனியாகி விடுகிறது*
*எலுமிச்சை....*
*தீர்த்தமாகி விடுகிறது*
*தண்ணீர்....*
*பிரசாதமாகி விடுகிறது*
*திருநீறும் பொட்டும்....*
*எந்த மாற்றமுமின்றி*
*வெளியேறுகிறான்*
*பக்தன் (எனும் மனிதன்)*

-புன்னகை சேது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமுதெணிப் பிள்ளையாரின் மகா கும்பாபிஷேகமும் சிவஶ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக்குருக்களும்.

அருவாய், உருவாய், உளதாய், இலதாய், எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைசக்தியை உருவத்திருமேனியில் ஆவாகனம் செய்து அடியவர்களுக்கு அருள்பாலிக்க வேண்டுவது மகாகும்பாபிஷேகம் எனலாம்.

இந்தவகையில் மங்களம் நிறைதரு தாரண வருடம் ஐப்பசித்திங்கள் 12ம் நாள் வியாழக்கிழமை (28.10.2004) அல்வாய் வடக்கு குமுதெணி ஸ்ரீ அருள்தரு விநாயகப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் இடம்பெற்றது. இக்கும்பாபிஷேகத்தின் போது சிவாச்சாரியாராக நின்று அடியவர்களுக்கு இறையருளைப் பெற்றுத்தருவதில் இவரது செயற்பாடு அளப்பரியது.

கேட்பவர் கேட்டதை மனநிறைவோடு கொடுத்தருளும் அதிசயப் பிள்ளையாரின் கும்பாபிஷேகத்தின்போது சிவாச்சாரியாரின் முக்கியத்துவம் அவசியமானது. மனிதனுடைய வாழ்க்கை தெய்வப் பண்புடையதாய் அமையவேண்டுமானால் முதலில் தக்க குருவை தேர்ந்தெடுப்பது இன்றியமையாதது. அது போல இறைவனை பிரதிஷ்டை செய்ய தகுதிவாய்ந்த சிவாச்சாரியார் ஒருவரை தேர்ந்து எடுப்பது மிக முக்கியமாகும். அச்சிவாச்சாரியார் நல்லொழுக்கம், ஆகமசாஸ்திர அறிவு, பக்தி நிறைந்தவராக இருத்தல் வேண்டும். இத்தகைய மேன்மையான பண்புகளையுடைய சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்களை ஆலயம் தேர்ந்தெடுத்ததன் மூலம் இவரின் சிறப்புக்களை விளங்கிக் கொள்ளலாம். இறைவனின் அனுமதி பெற்று மிகவும் சிறப்பாக கும்பாபிஷேக கிரியைகளை மேற்கொண்டு இறைவனின் தூதராக செயற்பட்டவர்.

படிகநிறம் வாய்ந்த சிவலிங்கம் பாதாளத்திலிருந்து வானளாவப் புவனம் முழுவதும் வியாபித்து நிற்கின்றது. கூடிக்குறையாத பூரண சந்திரன் சிவலிங்கத்தின் சிரசில் விளங்குகின்றது. அதிலிருந்து அமுதநீர் பெருகிக் கொண்டே இருக்கின்றது. இக்காட்சியை சிவாச்சாரியார் உள்ளத்தால் தியானித்துக் கொண்டு அபிஷேகம் செய்யும்போது உண்மையிலேயே கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இதனை எமது குருக்கள் தனது கணீர் என்ற ஒலி, ஆழ்ந்த பக்தி மூலம் செயற்படுத்தியபோது மெய்சிலிர்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட இவரின் சிறப்புக்களானது, குருக்களின் புகழில் இருந்து வெளிப்படுகின்றது. இறையருள் கிட்டியதால் இவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்திலும் வெற்றி பெற்று இன்று MA பட்டதாரியாகவும், குடத்தனை அ. மி. த. க பாடசாலை அதிபராகவும் செயற்படுகின்றார். இவரது அறிவானது சொற்பொழிவுகளில் இன்றும் மிளிர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. சொல்லின் செல்வரான இவரது செயற்பாடுகளால் ஆன்மாக்களின் தெய்வீகநாட்டம் மட்டும் அல்லாது மாணவர்களின் அறிவுத்தாகமும் பூர்த்தியடைகின்றது. இத்தகைய சிறப்புக்களையும் புகழையும் உடைய சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்களுக்கு எமது குமுதெணி விநாயகரும், அவரது குல தெய்வம் நெல்லெண்டைப் பத்திரகாளி அம்மனும் துணைநின்று மென்மேலும் வாழ்க்கையில் உயர வாழ்த்துகின்றோம்.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"



**குமுதெணிப் பிள்ளையார் ஆலய**
**பரிபாலன சபையினர்**
அல்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

குருத்துவம்............
உன்னதமானது - உயர்வானது
அதில் நுழைந்து ஆண்டுகள்
இருபத்தைந்தைப் பூர்த்தி செய்து
வெள்ளி விழாக் காணும் பெரியோய்!
மெய்சிலிர்க்க வைத்திடும்
உங்களின் கிரியாகர்மங்கள்
வாய் உதிர்க்கும் கன்னல் தமிழும்
கவினுறு வேதமந்திரங்களும்
இசை கலந்து வரும் பாங்கு
உயர்வானது - உள்ளம் கவர்வது
எங்கள் ஆலயமண்டபம் தான்
உங்களின் தொடர் உபநியாசத்திற்கான
முதற்களம்
இந்த ஆரம்பம் இன்றோ
வானுயர்ந்த விருட்சம் போல்!
தமிழும் சைவமும் தழைத்தோங்கவும்
ஆன்மீகக் கதிர் எங்கும் ஒளிரவும்
நீவிர் மென்மேலும் அடைவுகள் பல பெற்று
இன்னும் உயர்நிலையை அடையவும்
வாழ்த்தும் வதிரி பூவற்கரைப் பிள்ளையார்
ஆலயம் சார்ந்த அன்பர்கள்.

**மா.கிருஷ்ணகாந்தன்**
தலைவர்
வதிரி பூவற்கரைப் பிள்ளையார்
ஆலய பரிபாலன சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் இருப்பத்தைந்தாவது ஆண்டு குருப்பட்டாபிஷேக வாழ்த்துகையும் ஆத்மீக சிந்தனைகளும்.

மனிதன் வையத்து வாழ்வாங்கு வாழ வழிவகுப்பது மதம். இவ் வழிகாட்டுதல்கள் காலத்திற்குக் காலம், யுகத்திற்கு யுகம் அவதார புருஷர்களினாலும். ஆன்மீக செல்வர்களினாலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதனைக் காண்கிறோம். இத்தகைய மகாபுருஷர்களின் வரிசையிலே வைத்துப் போற்றக்கூடியவர்தான் குருப்பட்டாபிஷேகத்தில் வெள்ளிவிழாக் காணும் சோமாஸ்கந்தராஜாக் குருக்களுமாவார்.

எண்ணிய பிறவிதன்னில் மானிடப்பிறவிதான் யாதினும் அரிது காண். என்றும் அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்றும் இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்றெல்லாம் மானிடப்பிறவிதன்னைப் பெருமைப்படுத்தி உள்ளார்கள் ஞானிகள்.

ஆகவே உலகில் சகல சிறப்புக்களும் ஆலய வளர்ச்சியிலேயே தங்கியுள்ள தென்பதை நன்கறிந்த குருக்கள் நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில் பிரதமகுருக்களாகவும், இலட்சுமணன் தோட்ட ஸ்ரீ வீரமாகாளியம்மன் குருக்களாகவும் எமது உத்திராவத்தை ஞானவைரவர் ஆலய குருக்களாகவும் பூசகராகவும் இருந்து சேவை புரிந்து மானிடப்பிறப்பின் பெறுதற்கரிய பேற்றினைப் பெற்றுள்ளார். என்பதனை அகமகிழ்வுடன் பாராட்டுகின்றோம்.

மேலும் அவரது சேவையானது எமது ஆலயத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகும். ஏனெனில் அவர் எமது கோயில் குருக்களாக மட்டுமல்லாது எமக்கொரு ஆசானாகவும் விளங்குகின்றார் என்றால் மிகையாகாது.

ஆகவே இவ் வெள்ளிவிழா மலரை வெளியிட பேரெண்ணம் கொண்டவர்களுக்கும் சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களுக்கும் எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் காடாட்ஷம் கிடைக்க வேண்டுமென எமது உத்திராவத்தை ஞானவைரவரை பிரார்த்தித்து ஆசியும் கூறுகின்றோம்.

நன்றி

**தலைவர்**

ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்

உத்திராவத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருத்துவப் பட்டம்பெற்று வெள்ளிவிழாக்காணும் திரு. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கட்கு வைபவத்தில் வழங்கிய வாழ்த்துப்பா

துதிபெறு கும்பி முருகன் தூய தொண்டன்
தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்களெனுந் தீரன்
நிதிபெறு குருத்துவப் பட்டம் பெறவந் தனை
நிகர்வார் எவரும் இல்லையெனும் நிலையொடு வளர்
மதியென உயர்ந்து வடபத்திரகாளி அருளொடு
வெள்ளிவிழாக் காணும் இனிய வேளையில் விலை
மதிக்க வொண்ணா வினைத்திறன் அமைந்து மேலும்
வாழ்க பல்லாண்டென வாழ்த்துகின்றோம்.

**வழங்குவோர்**
**கும்பி முருகன் தேவஸ்தானம்**
கற்கோவளம்.

**உண்மையான இன்பம் என்பது**
**கடுமையான உழைப்புக்கு பிறகு ஏற்படும் களைப்புதான்**

**எமது சந்ததிகளுக்குச் சரியான இரண்டு பாதைகளைக் கற்றுக் கொடுப்போம்**
**ஒன்று நேர்மை, மற்றது உழைப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

எங்கள் அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய சிவஸ்ரீ. தி. சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் குருப்பட்டம் பெற்று 25 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அதாவது சைவத்தமிழ் உலகுக்கு எங்கள் ஐயா. வழிகாட்டி நெறிப்படுத்துவதற்குரிய சான்றோர் அங்கீகாரம் கிடைத்து 25 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இத்தருணத்தில் ஐயாவை வாழ்த்துவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன். வாழ்ந்தால் இப்படி வாழ்வது நன்றென ஊரார்க்கு என்னை உதாரணம் காட்டு என்ற கிருஷ்ண கவச வாசகங்களின்படி ஒழுகுபவர் அவர். ஒரு மனிதன் தன்வாழ்நாளில் எத்தனையோ நடிபங்குகளை ஏற்க வேண்டியிருக்கிறது. இவை எல்லாம் சமூக, சமய மறுமலர்ச்சிகளுடன் பின்னப்பட்டுள்ளது என்பதை நன்கு அறிந்து அதன்படி ஒழுகுபவர் என்றால் மிகையில்லை. ஆசிரியராக, அதிபராக, மதகுருவாக, ஜோதிடராக, சீர்மியராக, நண்பராக, பிரசங்கியாக, சமூகத்தலைவராக இவ்வாறு பல நடிபங்குகளுள் ஏற்று ஒவ்வொன்றுக்கும் உரித்தான உன்னதநிலையில் உள்ளார். திருக்குறளில் சீர்மியத்தை கண்டு வெளிப்படுத்திய பெருமைக்குரியவர். சேவையைக் கடந்த செம்மலாக எங்களெல்லோருக்கும் அருள் ஒளியைப் பெற்றுத் தரும் சிவஸ்ரீ. தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் இன்னும் பல பட்டங்கள் பெற்று நீண்ட ஆயுளுடனும் வளங்களுடனும் வையத்துள் வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல ஸ்ரீமத் நாராயணனை வேண்டி இவ் வாழ்த்துரையினை சமர்ப்பிக்கின்றேன்.

**வே. உதயமோகன்**
ஆசிரியர்
யா/ மலீலாகம் ம. வி.

தெய்வம் ஆயிரம் பிழை பொறுக்கும்
தாய் நூறு பிழை பொறுப்பாள்
தந்தை பத்து பிழை பொறுப்பார்
குரு ஒரு பிழையும் பொறுக்கார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்து

எங்கள் உணர்வுக்கு உயிர்தந்த நல்லாசான் சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள் குருப்பட்டம் பெற்று 25 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. இத்தருணத்தின் எம் ஆசானை வாழ்த்தும் பாக்கியம் கிடைத்தமைக்காக முதற்கண் இறைவனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

குருவாய் குலத்தின் கொழுந்தாய் அறிவின்
கருவாய் கருத்தின் தெளிவாய்
தருவாய் சைவநற் தமிழிற் கனியாய்
திருவாய், அன்னையின் படியாய்
உருவாய் குலக்கேடு தறிக்கும் விடிவாய்
உயிராய் எமைச்செதுக்கும் உளியாய்
மருளாய் வருமடியார்க்கின் அருளாய்
மலரெம் ஆசானே வாழி நீ!

எம்மையெல்லாம் வழிப்படுத்தி, வளம்படுத்தி வாழவைத்த எம்மாசான் பட்டங்கள் பதவிகள் மேலும் பெற்று சகல சௌபாக்கியங்களையும் துய்த்து, வளம்பெற்று வாழ எம்மன்னை ஆதிபராசக்தியை வேண்டி நிற்கின்றேன்.

**சிவ. முகுந்தன்**
ஆசிரியர்.

தவறான செயல்களைச் செய்துவிட்டு
அகந்தையின் காரணமாக அதை மறைத்தல் கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவக்குருமார்களிற்கு அணிகலமாக விளங்கும் சிவஸ்ரீ.சோமாஸ்கந்தராஜாக்குருக்கள்

சகல சமயங்களிலும் குருமார்கள் இருக்கின்றார்கள் அவர்கள் குருத்துவக் கல்வி உட்பட பல்வேறு கல்விநெறிகளிலும் அவரவர் திறமை முயற்சிகளுக்கேற்ப தேர்ச்சி பெற்று விளங்குகிறார்கள். சமகால கல்விமுறைகளின் கீழ் பட்டதாரிகளாகவும், முதுமாணிகளாகவும், கலா நிதிகளாகவும் பேராசிரியர்காளகவும் விளங்கிவருகிறார்கள்.

இந்த விகிதாசாரம் ஏனைய சமயங்கள் சார்ந்த குருமார்களோடு ஒப்பிடுகையில் சைவசமயத்தில் மிகவும் குறைந்த விகிதாசாரத்தில் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். இதற்குக் காரணம் எமது குருத்துவக்கல்வியானது நவீன கல்விக் கோட்பாடுகளுக்கமைவாக நிறுவனமயப்படுத்தப்பட்டுக் கட்டமைக்கப்படாமையாகும். ஆயினும் முற்பிறவித் தொடர்ச்சியினாலும் விடாமுயற்சியினாலும், பரந்த முற்போக்கான சிந்தனையாலும் ஒரு சில இந்துசமயக்குருமார்கள் துறைசார்ந்த கல்வித்துறைகளில் முதுமாணி கலாநிதி, பேராசிரியர் போன்ற பட்டங்கள் பதவிகளைப் பெற்று ஈழவள நாட்டில் இந்துசமயக்குருமார்களின் கல்விநிலை குறைவானது அல்ல என்பதை நிரூபித்து இந்துக்களிற்கு பெருமை சேர்த்து வருகிறார்கள்.

அந்தவகையில் பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர், பேராசிரியர் சுப்பிரமணிய ஐயர், பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் போன்றவர்கள் ஈழவளநாட்டில் பிராமண சமூகத்திலிருந்து தேர்ச்சிபெற்று இந்துக்குருமார்களிற்கு அணிகலமாக விளங்குகிறார்கள்.

அதுபோல இந்துசமயக்குருமார்களிடையே (பிராமணர் அல்லாத) சைவக்குருமார் பரம்பரையில் சமகாலத்தில் முதுமாணிப்பட்டம் பெற்று கடந்த 25 வருடமாக ஆலய பிரதமகுருவாகவும் இருந்து தற்போது பாடசாலை அதிபராகவும் விளங்கி சைவக்குருமார்களிற்கு அணிகலமாக சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் விளங்கிவருகிறார்கள்.

முற்போக்கான சிந்தனை, நவீன 21 ஆம் நூற்றாண்டிற்கேற்ப சைவசமயிகளை வழிநடத்தும் திறன், அர்ப்பண மனோபாவம் துணிச்சலான முன்முயற்சிகள் போன்ற பண்புகள் அவரை சைவகுருமார்களிற்கு மட்டுமன்றி சகல இந்துக்குருமார்களிற்கும் அணிகலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஷணமாக விளங்கவைத்துள்ளன.

குருக்கள் அவர்கள் தனது குருத்துவசேவையில் வெள்ளிவிழாக்காணும் வேளையில் அவர் தீர்க்காயுள், சகல சம்பத்துக்களுடன் கல்வித்துறையில் சிறப்புற்று கலாநிதி பேராசிரியர் போன்ற நிலைகளை எட்டவும் இந்துசமயத்தை 21 ஆம் நூற்றாண்டில் ஏனைய சமயங்களிற்கு எவ்விதத்திலும் தளர்வில்லாமல் குருத்துவக்கல்வி, ஆலயக் கிரியைகள் பரிபாலனம் சமூகப்பணி என்பவற்றில் வேண்டிய சீர்திருத்தங்களுடன் முதன்மை மார்க்கமாக விளங்கவைக்கவும் எல்லாம்வல்ல இறையருள் துணைநிற்க வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

சுபம்

**ஈசான சிவாச்சார்யார்,**
**சமயான்தரதாஷண• கேவிதசாசன,**
**சாமசூரி தர்மதீபம்**
**சிவஸ்ரீ. ப.சிவலோகநாத தேசிகர்** (H.N.D.A)
உபதலைவர், சர்வமத சமாதான அமைப்பு - இலங்கை
செயலாளர், சைவக் குருமார் ஒன்றியம் - வவுனியா
செயலாளர், பசுக்கள் இடபங்களை பாதுகாக்கும் - இணையம் - யாழ்.
உப அதிபர், பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை
பிரதமகுரு, அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திர ஆலயம்
மதவடி, அராலித்துறை வீதி, அராலி தெற்கு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

அருட்திரு சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் தமது குருப்பட்டம் பெற்று 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து வெள்ளி விழாக்காணும் இந்நாளில் அவரை மனம் பூரிக்க வாழ்த்துவதுடன் இந்நிகழ்வினை ஒட்டி வெளியிடப்படும் சிறப்பு மலரிற்கு இவ்வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக் குருக்களை அறிவதற்கு முன்பு அவர் தந்தையார் சிவஸ்ரீ கந்த தியாகராஜாகுருக்களை எனது சிறுபராயம் முதல் அறிவேன். வேதாரணியக் குருக்கள் பரம்பரையின் 6வது தலைமுறையைச் சேர்ந்தவர் சிவஸ்ரீ தியாகராஜாக் குருக்கள். இவர் நெல்லண்டைப் பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதமகுருவாக இருந்து பல ஆண்டுகள் சேவை ஆற்றியவர். இவர் அம்பாள் அருள்பெற்ற உபாஷகராக மட்டுமன்றி மக்களின் அன்பும் ஆதரவும் பெற்ற பூசகராகவும் விளங்கினார்.

சிவஸ்ரீ தியாகராஜக் குருக்களின் அடியினைப் பின்பற்றியே அவரது புத்திரன் சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக்குருக்களும் நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் பிரதமகுருவாக அருட்பணியாற்றி வருகின்றார். இவரை கண்ணன் ஐயா என்று அழைத்தால்தான் ஊரில் பலருக்கும் தெரியும். இவர் தனது அம்பாள் பணியினாலும் தனது பண்பாடுமிக்க செயற்பாடுகளினாலும் அம்பாள் அடியார்கள் மத்தியில் பெருமதிப்பும் செல்வாக்கும் பெற்றுத் திகழ்கின்றார்.

இவர் இலட்சுமணன் தோட்டத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு வீரமாகாளி வடபத்திரகாளி ஆலயத்தினை அடியார்கள் உதவியுடன் புனரமைத்து அழகுறு கோவிலாக வடிவமைத்து அதன் தர்மகர்த்தாவாகவும் பிரதமகுருவாகவும் பணியாற்றி வருகின்றார்.

இவர் தனது வாழ்வில் சிறுவயது முதலே பல நெருக்கடிகளினை எதிர் கொண்டாலும் அம்பாளின் பெருங்கருணையினால் அவை அனைத்தையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு ஒரு விடாமுயற்சியும் துடிப்பும் மிக்க அருட்குருவாக திகழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது இறைபணியுடன் மட்டும் திருப்திப்படாது ஆசிரியசேவையில் இணைந்து அதிலிருந்து கொண்டே வெளிவாரியாகப் பயின்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியாகவும், பின்னர் யாழ் பல்கலைக்கழகத்தின் ஆசிரியவாண்மையை விருத்தி செய்யும் நோக்குடன் கல்வியியல் டிப்ளோமா பட்டமும் பெற்றிருக்கின்றார். இந்தியா மதுரை காமராஜா் பல்கலைக்கழக (M.A) பட்டமும் பெற்றதுடன் இவரின் கல்வித்தாகம் இத்துடன் மட்டும் தீர்ந்துவிடவில்லை அதனைத் தொடர்ந்து சைவசித்தாந்தத்தில் கலை முதுமாணிப் பட்டம் பெற்றதுடன் தற்போது பிராந்திய அபிவிருத்திக்கற்கை நெறியில் கலைமுதுமாணிப் பட்டம் பெறுவதற்காக படித்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

சிறந்த சமயப் பிரசங்கியாக விளங்கும் இவர் சோதிடத் துறையிலும் சிறந்த அறிவினைப் பெற்று ஒரு பல்துறை விற்பன்னர் ஆகத்திகழ்கின்றார். தற்போது குடத்தனை கரையூர் அ. த. க. பாடசாலையில் அதிபராக பதவியேற்று அப்பாடசாலையினை திறம்பட நடாத்தி வருகின்றமை அவரது ஆளுமையினை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இவரது அறிவுத்தேடல் இத்துடன் ஓய்ந்து விடப்போவதில்லை. எதிர்காலத்தில் இன்னும் பலப்பல பெருமைகளையும் பட்டங்களையும் தன்பின்னால் இணைத்துக் கொண்டு தமிழும் சைவமும் செழிக்க நற்பணி ஆற்றவேண்டும் என்று எல்லாம் வல்ல நெல்லண்டைப் பத்திரகாளி அம்பாளையும் இலட்சுமணப்பதியுறை வீரமாகாளி வடபத்திரகாளி அம்பாளையும் இறைஞ்சி நிற்கின்றேன்.

**K.P ஆனந்தநடேசன்**
முகாமையாளர்.
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புநிறை வாழ்த்து

தும்பளை, நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயிலில் இறைபணியில் குருவாய் 25 ஆண்டுகள் இன்முகத்துடன் இடைவிடாது தாங்கள் ஆற்றிவரும் பணி ஒப்பற்றது. கனிவான பேச்சு, தூய ஆன்மீகப்பணி, நிறைவான பூசை, சிறப்பான சமயப் பிரசங்கம், உயர்ந்த கல்வி அறிவு, உத்தம குருப்பணி, சகோதர மனப்பாங்கு யாவும் ஒன்றாய் ஒருவனாய் உருப்பெற்று காட்சி தரும் தாங்கள் குருப்பணியில் இன்னும் பல ஆண்டுகள் நற்பணி ஆற்றிட என்றும் என்தாய் இத்திமரத்தாள் நெல்லண்டை பத்திரகாளி துணையிருக்க வேண்டி வாழ்த்துகின்றேன்.

**கனடா**

**சபாரவீந்திரன்** JPUM - **சட்டத்தரணி**

பொருளாளர், தும்பளை நெல்லண்டை

அம்மன் கோயில் தர்மபரிபாலனசபை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருத்துவ வெள்ளிவிழா வாழ்த்து

உலகாண்ட நாயகியாய் காட்சி தந்தாராம்
உக்கிரமாய் தாண்டவமும் ஆடிக்கொண்டாய்
சில காலம் சிவன் நோக்கி நிட்டை கொண்டாய்
சிட்டர்களுக்கு அபயகரம் நீட்டி நின்றாய்
பலவாய தருமங்கள் போதித் தண்டாய்
பக்குவமாய் சிவன் நஞ்சை உண்ண தடுத்து கொண்டாய்
நலஞ்சேரு நற்சோமாஸ் கந்தராஜாக் குருவிற்கு
அன்னை அருள் வேண்டுகின்றோம் அவர் நீடு வாழ்கவே.

சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள் குருத்துவ வாழ்விலும், அன்பிலும், பண்பிலும், அறிவிலும், தெளிவிலும், நல்ஆசிரியனாய் நற்குருவாய் நற்கல்விக்கு சேர் நல் அதிபனாய் நலம் பெறவே அவர் பூசிக்கின்ற நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்மனையும், இலட்சுமணன் தோட்டம் அருள்மிகு சித்தி விநாயகனையும், ஸ்ரீ வீரமாகாளி, ஸ்ரீ வட பத்திரகாளி அம்மனையும் அவருக்கு நோயற்ற வாழ்க்கையையும் குறைவற்ற செல்வத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்க வேண்டும் என்று வாழ்த்தி வணங்குகின்றோம்.

**இங்ஙனம்**
**தும்பளை மேற்கு பிரத்தியங்கரா**
**காளியம்மன் தேவஸ்தான தலைவர்,**
**தம்பு இராமச்சந்திரன்**
இலட்சுமணன் தோட்டம் வீரமாகாளியம்மன் தேவஸ்தானம்
அவர்தம் அன்புக்கினிய மாணவர்கள்.
நண்பர்கள், உறவினர்கள்.

வில்வளை,
தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

சிவஸ்ரீ. தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள் அவர்கள் குரு அவர்கள் "குரு" அபிஷேகம் முடிவுற்று வெள்ளிவிழாக் காணும் நிலை கண்டு பெருமகிழ்வடைகின்றேன். சோமாஸ்கந்தராஜக் குருக்கள் அவர்கள் நிறைந்த தமிழ்புலமையும் ஆழ்ந்த சமய அறிவும் கொண்டு குரு பணியாற்றுவது சைவத் தமிழ் மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

சைவமதத்தில் குருவாகப்பணியாற்றும் பலரிடம் எல்லாப்புலமைகளும் ஒருங்கே அமையாமையால் குரு பணிவு, குருபக்தி என்பன அருகிவருவது வேதனைக்குரியதாகும். இந்நிலையில் தியாக. சோமாஸ்கந்தராஜக்குருக்கள் அவர்கள் சமயரீதியாகக் குருவாக அமரும்வாய்ப்பு ஏற்பட்டுள்ளதுடன் சமயரீதியாக நூல்களில் தெளிந்த அறிவும் புலமையைப் பெற்றுள்ளதுடன் உலகியல் ரீதியாகவும் ஆசிரியப்பணியாற்றி அதிபராக உயர்வடைந்துள்ளமை அவரது குருப்பணிக்கு வலுவூட்டுவதாக அமைந்துள்ளது. சமயரீதியாக கிரியை முறைகளை நன்கு கற்று செயற்படுத்தி அருட்பிரகாரகாரசீலர் சிவாகம தர்ம உபதேசவாசஸ்பதி போன்ற பட்டங்களால் கௌரவிக்கப்பட்டுள்ளதுடன் தமிழ் சமயரீதியாக சைவசித்தாந்த பண்டிதர், B.A, M.A ஆகிய ப்பட்டங்களையும் பெற்றுள்ளமை அவரது குருத்துவப் பணியை வளப்படுத்தியுள்ளது.

எனவே இன்று இந்துசமயத்தேவைக்கு ஏற்ற சகல புலமைகளுடன் அவருக்கு இயற்கையாக அமைந்துள்ள இசையுடன் கூடிய இனிய நாதஒலியும் அடியார்களை பக்திப் பரவசப்படுத்துவதாகவும் இறைவன்பால் ஆன்மாக்களை வழப்படுத்துவதாகவும் அமைந்துள்ளமை நினைவு கொள்ளத்தக்கதாகும்.

இவ்வகையில் குரு அபிஷேகம் நடைபெற்று வெள்ளிவிழாக்காணும் சிவஸ்ரீ. சோமஸ்கந்தராஜக்குருக்கள் அவர்கள் நீண்ட ஆயுளும் பெற்று பொன்விழா வைரவிழா போன்றவற்றையும் காண எல்லாம்வல்ல அம்பிகை அருள்பாலிக்க வேண்டும் என இறைஞ்சி மனமார வாழ்த்துகிறேன்.

**ஆ. சிவநாதன்**
அதிபர்
வல்வை சிவகுரு வித்தியாசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

எங்கள் அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய சிவஸ்ரீ. தி. சோமாஸ்கந்த ராஜாக்குருக்கள் அவர்கள் குருப்பட்டம் பெற்று வெள்ளிவிழா கொண்டாடும் இவ்வேளையில் பல்துறையிலும் சிறந்து வாழ்கவென வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சமய குருவாக நல்ல ஆசரியராக சிறந்த அதிபராக விளங்கும் இவர் சுயநலமற்ற நல்ல சேவையை ஆற்றவேண்டும். அவர் மனைவி மக்கள் சுற்றத்தார் எல்லோரும் போற்ற வாழ வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

கல்வித்துறைக்கும் சமயத்திற்கும் சீரிய தொண்டு சேவை புரிந்து நல்ல மனிதத்தை நேசிக்கும் ஒருவராக விளங்கவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**இங்ஙனம்**

**உயர்திரு. செ. உதயகுமார்**

பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
(கல்வி அபிவிருத்திப் பகுதி)
வலயக்கல்வி அலுவலகம்
வடமராட்சி, புலோலி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறந்த குருமணியே வாழ்க

எனது அன்பிற்கினிய அன்பு, பண்பு, கலை, கலாசாரம் கண்ணன் எனது நண்பனான தியாகராஜக்குருக்களின் மூத்த மகன் எவ்வேளையிலும் ஆன்ம சுத்தியாக ஆலயப் பூசை செய்யும் இவர் சிறந்த மகத்துவம் நிறைந்தவர். அனுபவமும் ஆழ்ந்த அறிவும் மிக்க இவருக்கு நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம் வெள்ளிவிழாக் கொண்டாடும் வேளையில் நானும் வாழ்த்துவதில் பெருமிதமடைகிறேன்.

பிறந்த நாளிலிருந்து இவரையும் இவரது குடும்பத்தாரையும் நன்கறிவேன். குருப்பட்டம் பெற்ற 10வது வருடத்தில் ஆசிரிய நியமனம் பெற்று யா/குடத்தனை அரசினர் தமிழ்கலவன் வித்தியாலத்தில் பணியாற்றினார் அன்பும் அடக்கமும் நிறைந்த இவர் அமைதியான வைராக்கியம் நிறைந்தவர். நெல்லண்டை பரிபாலனசபையோடு முரண்பட்டு சாதனை புரிந்ததும் நான் அறிவேன். எவ்வகையிலும் எவ்வேளையிலும் அவரது வளர்ச்சியில் முதலாவது வாழ்த்து தெரிவிப்பவன் நான் எமது தோட்டத்து ஞானவைரவர் தேவஸ்தானத்தில் உதவிப் பூசகராக இருந்து சிறந்த குருத்துவம் செய்தவர். ஞானவைரவர் கவசம் அடக்கிய அருட்கனி நூல்வெளியீட்டில் என்னோடு அயராது உழைத்தவர். கிரியையிலும் சமயச் சடங்கிலும் சிறந்துவிளங்கும் இவர் எனது தோட்டத்து ஞானவைரவர் தேவஸ்தானத்தில் வடபத்திரகாளியை ஸ்தாபகம் செய்தார். 1993 லிருந்து 2007 வரை எமது ஆலயத்தில் குருவாக விளங்கியவர் சித்தர் பரிபாசைகளை உணர்ந்து ஆன்மீகத்தொண்டு ஆற்றுபவர். இவர் சித்தர் பரம்பரையை சேர்ந்தவர். இவர் சமயக்குருவாக பாடசாலை ஆசிரியராக கல்லூரி முதல்வராக விளங்குவது மட்டுமன்றி மரபுவழி கல்வி, சோதிடம், ஆத்மீகம், மாந்திரீகம் சைவசித்தாந்தம் போன்றவற்றுடன் சமஸ்கிருதம் ஆங்கிலம் போன்ற மொழிகளில் சிறந்தவிற்பன்னராக விளங்குபவர். இவரை நாம் தினமும் பூசிக்கன்ற வல்லிபுர ஆழ்வார், மந்திகை கண்ணகை அம்மன் தோட்டத்து ஞானவைரவர் திருவருளுடன் வாழ்க என வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தஞ்சமென அனுதினமும் உந்தன் பாத
தாமரையை வந்தித்த தூய் மனத்தொண்டன்
வஞ்சமிலா செம்மனத்தான் அடியார் - நேர்மை
வாய்ந்தவொரு கண்ணியத்தான் இப்பிர
பஞ்சமதின் வாழ்வு மேல் ஓங்கும்
சுகவாழ்வு பெறஎண்ணி வாழ்ந்து வந்தான்
அஞ்சலென ஆதரித்து குருத்துவ வாழ்வு சிறந்து வாழ
தோட்டத்து ஞானவைரவரே வாழ்த்தி விடு.

**சிவ அருட்திரு கணபாலசுவாமிகள் (க. வீணுகோபாலு)**

ஓய்வு பெற்ற அதிபர்
புலோலி மந்திகை தோட்டத்து ஞானவைரவர் தேவஸ்தான அதிபதி,
சோதிட ஆய்வாளர்,
வேணி இல்லம் புலோலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யா/ ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் உயர்திரு ஜெ. சந்திரபிரகாசம் M.sc அவர்கள் வழங்கிய அன்பு நிறைந்த வாழ்த்துரை

சிவஸ்ரீ. தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்களின் "குருத்துவ வெள்ளிவிழா" வாழ்த்தினை கொண்டாடும் நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகத்தினரை, முதலில் பாராட்டுகின்றேன். அன்புக்கினிய நண்பர், பிரசங்கம் செய்த காலத்தில் மந்திகை அம்மன் தேவஸ்தானத்தில், முதலில் கேட்டு சந்தித்திருக்கின்றேன். பின்னர் வடமராட்சி மருதங்கேணி கோட்டத்தில், அமைந்த பாடசாலைகளில் ஆசிரிய நியமனம் பெற்று வந்த காலத்தில், அவரை நன்கு அறிவேன். பழகுவதற்கு இனிய நண்பர். அவர்களின் ஆத்மீக பயணம் மற்றோருக்குத் தீங்கு விளைவிக்காத மனப்பக்குவம், உண்மைக்காக போராடும் தன்மை, பக்தி உணர்வலைக்கு அவர் கொடுக்கின்ற மதிப்பு, சக்தி வழிபாட்டினுடைய மகோன்னதம் தாய்மை அன்பின் சிகர ஊற்று, ஆகிய பண்புகள் அம்பிகை பக்தனான என்னையும் ஆட்கொண்டது.

மேலும் யா/ ஹாட்லிக் கல்லூரியில் அவர் கடமையாற்றும் காலத்தில் சக ஆசிரியராக பழகும் பேறும் கிட்டியது. அக்காலத்தில் கல்லூரியில் அவரது சீரிய பணிகளில் குறிப்பாக வெள்ளிக்கிழமை நற்சிந்தனையில் நல்ல சிந்தனைகளை மாணவர்களுக்கு அள்ளி வழங்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. இத்தகைய ஒரு சமய குரு வித்தியா குருவாக இருந்து சகலருக்கும் ஆசீர்வாதம் வழங்குகின்ற முறைமை தனித்துவமானது. மகத்துவமானது எனது அன்பான நண்பனுக்கு வெள்ளி விழா வாழ்த்து வழங்குவதில் பெருமை அடைகின்றேன். அம்பாள் அவருக்கு சகல நலன்களையும் அளிக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்

ந.சந்திரபிரகாசம் M.sc.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகராஜாக் குருக்கள் சோமாஸ்கந்தராசாக் குருக்கள் குருப்பட்டாபிஷேக வாழ்த்துரை

திரு. தியாகராஜாக்குருக்கள் சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் அவர்கள் தனது சேவையின் வெள்ளி விழாவைக் கொண்டாடுவதில் அவருடன் சேர்ந்து தாமும் மகிழ்ச்சியடைகின்றோம். இவரின் சேவைப் பதிவுகள் ஒவ்வொன்றும் சமூக மட்டத்தில் சகலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. இதனை அவர் பெற்றிருக்கும் சமூக அந்தஸ்த்தும் தனது தகமைகளை உயர்த்துதல் ஆகிய பல் படிமானங்களினூடாக நாம் உய்த்துணரக் கூடியதாகவுள்ளது. அவரின் சமூகப்பணி, உயரவும், சமூகம் பல வாய்ப்புக்களை அவரினுடாகப் பெறவும், அவரை ஆட்சிபுரியும் அம்பாள் அருள் பாலித்திட வணக்கிக்கொள்கின்றேன்.

**த. தவேந்திரராசா**
கோட்டக்கல்வியலுவலர்

செம்மலர் நோற்றார் சேரவொட்டார்
அம்மலம் கழியார் அன்பரோடு மாரிய
மாலறநேயம் மரிந்தவர் வேடம்
ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே

சிவஞ்ஞான போதம் 12ம் சூத்திரம்

குரு
"கெடுப்பதூம் கொடுப்பதூம் குரு"
அதாவது அறியாமையைக் கொடுத்து
அறிவைக் கொடுப்பவர் எனக் கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்ல ஆசானும் சிறந்த சமயகுருவும் வாழ்க!

கண்ணன் ஐயா என எல்லோராலும் அழைக்கப்படும் சிவஸ்ரீ. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் சிறந்த கல்விமான். மாணவர்கள் உள்ளத்தில் நின்றும் நீங்காத அன்புடைய குரு. இவர் சிறந்த சமய குருவாகவும் விளங்குபவர்.

எமது வடமராட்சிக் கல்வி வலயத்தில் அடங்கிய பாடசாலை ஒன்றில் சிறந்த அதிபராக கடமையாற்றி வருகின்றார். இவர் தொடர்ந்தும் கல்விவாண்மை விருத்திக்காக உயர்கல்வியில் பிரதேச திட்டங் கற்கையை தொடர்ந்து வருகின்றார்.

மரபு வழிக் கல்வியும், சோதிடம் கணித்தல், சமயப் பிரசங்கங்கள், சமய சடங்குகள் போன்வற்றில் சிறந்து விளங்கும் குருக்கள் ஐயா அவர்கட்கு குருப்பட்டாபிஷேக வெள்ளி விழாவில் வாழ்த்துவதில் நான் பெருமைப்படுகின்றேன்.

**இங்ஙனம்**
**S. புஸ்பலிங்கம்**
பிரதிக் கல்வி பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்
வடமராட்சி, புலோலி.

எண்ணமும் சிந்தனையும் நல்லனவாக வேண்டும்
அறிவு அறிவுடன் உராயும் போதுதான் சிந்தனை பிறக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் எமது கல்விவலய நிறுவனத்தின் யா/குடத்தனை அ.மி.த.க.பாடசாலையில் நல்ல அதிபராகக் கடமையாற்றி வருகிறார். ஊருக்கு நல்ல ஊற்றெடுக்கும் நீருள்ள இடம் நல்ல நீரைத் தரும். அந்த நீர் பல இடத்திற்கு பல வழிகளை அல்லது ஊற்றுக்களை உருவாக்கும். அதுபோல அறிவெனும் ஊருக்கு நல்ல வழிபோல விளங்குபவர் எம் அன்பிற்கினிய கண்ணன் ஐயா அவர்கள். நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தந்தையார் வழி நின்று குருத்துவ கடமையாற்றி வெள்ளிவிழாக்காணும் அவரை வாழ்த்துவதில் பெருமை அடைகிறேன். இதனை நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம் வெளியிடுவது நல்ல பொருத்தமாகும். அவர்களையும் நான் வாழ்த்துகிறேன்.

நல்ல ஆசிரியராகக் கடமையாற்றி சாதனை பல புரிந்து, நூலாராசிரியராகப் பல வெளியீடுகளைச் செய்து, நல்ல குருத்துவ குருவாக இருந்து வடமராட்சி மண்ணின் மக்களின் மனதில் இடம்பிடித்த இவர், எதிர்காலத்தில் பொன்விழா போன்ற பல விழாக்களைக் கண்டு நீண்ட ஆயுளுடன், நிறைந்த செல்வத்துடன் வாழ்க என நெல்லண்டைப் பத்திரகாளி அம்பாளின் அருள்வேண்டி வாழ்த்துகிறேன்.

பா. இரகுநாதன்
பருத்தித்துறைக் கோட்டக்கல்வி அதிகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எமது கழகத்தின் ஆலோசகராக விளங்கும்
### சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்
### அவர்களின் குருத்துவ வெள்ளிவிழாவையொட்டி

# அகில இலங்கை இளங்கோ கழகம்
# வழங்கும் வாழ்த்து

எம் கழகமதன் ஆலோசகராய் இருந்தெமை
வழிப்படுத்தி உயர்த்திய வழிகாட்டியாய்
எம்மை என்றும் ஆசீர்வதிக்கும் நற்குருவாய்
மாணவராய் எமை ஏற்று - எம்
கழகப் பட்டிமன்றங்களிலும் நடுவராய்
கலையோடு தமிழ் வளர்க்க
விலைமதிப்பற்ற உம் அறிவு அருட் பொக்கிசத்தை
எமக்களித்த கண்ணன் ஐயாவே - இன்று
வெள்ளி விழாக் குருவாழ்வு தன்னில்
அள்ளக்குறையா அட்சய பாத்திரமாய்
தெள்ளுதமிழ் சைவப் பெருங்கடலாய் - எம்
உள்ளமதில் உயர்ந்த குருவாய்
அன்னை சக்தியின் அருள்வடிவாய்
அன்புள்ளம் கொண்டுவாழும் உமை
விடுதல் அறியா விருப்போடு
ஆதிமூலம் தாழ்பணிந்து வாழ்த்துகின்றோம்.
என்றும் எம் அருட்குருவாய் வாழ்க பல்லாண்டு.

என்றும் மாறா மதிப்புடன்
***அகில இலங்கை இளங்கோ கழகத்தினர்***
தென்புலோலி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பருத்தித்துறை மாவட்ட நீதிபதியின் வாழ்த்துச் செய்தி

சைவசமயிகளாகிய எம் இனத்தவரின் பாரம்பரியத்தில் குரு என்பவருக்கு முதலிடம் உண்டு. குருத்துவம் என்பதற்குரிய வரைவிலக்கணமே ஒரு தனித்தன்மை கொண்டது. யாவருக்கும் வழிகாட்டியாகவும், முன்உதாரணமாகவும் விளங்கவேண்டியவராக இருப்பவரே குரு. சுருக்கமாகக் கூறின் குருப்பிரம்மா, குரு விஷ்ணு, குருதேவா மகேஸ்வரஹ எனும் பாடலடியினைக் குறிப்பிடலாம். வெள்ளிவிழாக்கண்ட குருவாம் தியாகராசாக்குருக்கள் சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் அவர்களின் குருப்பட்டாபிஸேக வெள்ளிவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் வெள்ளிவிழா மலர் வெளியீட்டிற்கு வாழ்த்துக்கூறும் அதேநேரம் அவர் ஒரு எம்.ஏ.ஆர்.பி பல்கலைக்கழக மாணவனாகவும், எம். ஏ. தமிழாகவும் விளங்குவதுடன் மாணாக்கருக்கு நல்லாசானாகவும் விளங்குவதுடன், பருத்திநகரில் தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளிஅம்மன் ஆலயத்தில் குருத்துவமும் செய்து வருகின்றார். சைவசித்தாந்தமும் சோதிடமும் அவருக்கு இரு கண்கள் போன்றவை. இரண்டிலும் மிகச்சிறந்த தேர்ச்சியுடையவராக விளங்குகின்றார். மேலும் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் சமயத்திட்டப் பணிப்பாளராகவும் கடமைபுரிந்துவரும் இவர் உண்மையிலேயே இவ் வையத்துள் தன்னாலியன்ற பணிபுரிந்து வருகின்றார். குருத்துவத்தில் வெள்ளிவிழாக்காணும் இந்நாயகன் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ வாழ்த்தி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படுவான் என்ற கோட்பாட்டையும் நினைவுறுத்தி மனமார வாழ்த்துகின்றேன்.

**கந்தையா அரியநாயகம்**
*மாவட்ட நீதிபதி/நீதிவான்*
*பருத்தித்துறை*

*04.09.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

வடமராட்சியின் கலை கலாசார விழுமியங்களை இற்றைக்கு 350 வருடங்களுக்கு மேலான பழமைவாய்ந்த எங்கள் நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில் பிரதம குருவாக விளங்கும் சிவஸ்ரீ தியாகராஜாக்குருக்கள் சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் குருத்துவ வெள்ளிவிழாக்காணும் அவரை நட்புடன் வாழ்த்துவதில் பெருமிதம் அடைகிறேன்.

மரபு, விழுமியம், சோதிடம், சித்தாந்தம் போன்றவற்றுடன் பிரதேச திட்டமிடல் முதுகலைமாணி கல்வியினையும் தொடர்ந்து வருகின்ற இவர் கல்வியின் குறிகாட்டியாக பலருக்கு வழிகாட்டியாகவும் விளங்குகிறார். இவரின் கல்வி வளர்ச்சியில் அருகிருந்து உயர்வில் அக்கறையுடையவன் என்ற ரீதியில் இவரின் குருப்பட்டாபிஷேக விழாவை அருகிருந்து பார்த்தவன் என்ற ரீதியிலும் வாழ்த்துவதற்குப் பொருத்தமானவன் என்று சந்தோஷமடைகிறேன். தனது திறன்விருத்தியால், ஆத்ம சிந்தனையால் அவர் செய்யும் குருத்துவத்திற்கு தனியான ஒரு இடத்தைப் பிடித்ததுபோன்று தனது மைந்தனுக்கும் அப்பணியில் சிறப்புக் கையளிப்புக் கொடுத்து தகுதிகாண வைக்கவேண்டும் என்ற வேண்டுகையுடன் வாழ்த்துத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**உயர்திரு. பொன்னையா அரவிந்தன்**
*யா/ஹாட்லிக்கல்லூரி ஆசிரியர்*
*நெல்லண்டை பத்திரகாளியம்மன்*
*தேவஸ்தான தர்மபரிபாலனசபை*
*உபபொருளாளர்.*

*நெல்லண்டை தும்பளை,*
*பருத்தித்துறை*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

இந்துப் பாரம்பரியத்தில் ஆன்மீகம் என்பது பிரிக்கமுடியாததொரு அங்கமாகத் திகழ்ந்து வருகின்றது. இத்தகைய ஆன்மீகம் தொடர்பான சிந்தனைகளை நம் சமூகத்திற்கு வழங்கி வருகின்ற அருளாளர்கள் என்றென்றும் போற்றப்படவேண்டியவர்கள். இறையுண்மையை எமக்குப் புகட்டுபவர்கள், இறைவனுக்கும் எமக்குமிடையே பாலமாக விளங்குபவர்கள். இத்தகைய பெருந்தன்மையாளர்களாகிய இவர்கள் சேவை எமக்கு காலங்காலமாகக் கிடைக்கவேண்டும்.

இன்றை உலகில் உலகியல் வாதம் மேலோங்கிவரும் நிலையில் ஆன்மீக சிந்தனைகளை அழியவிடாது மக்கள் மனதிலே பதியவைக்கும் வகையில் இத்தகைய ஆன்மீக விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றது. அவ்வகையில் கண்ணன் ஐயா என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் தியாகராஜாக்குருக்கள் சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் இந்நாளில் குருப்பட்டம் பெற்று 25 ஆண்டுகள் பூர்த்திசெய்தமையையிட்டு பெருமையடைவதோடு, அவர்களது ஆன்மீகசேவை மென்மேலும் தொடரவேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றேன். அவர் என்னுடைய மாணவனாக இருந்து பட்டப்பின் கல்வி டிப்ளோமநெறியை மேற்கொண்டுவரும் காலத்தில் மிகவும் பண்பான ஒரு மாணவனாகத் திகழ்ந்தார். அத்துடன் தற்போது முதுகலைமாணி கற்கைநெறியினைப் பயின்றுவரும் காலத்திலும் ஒரு சிறந்த மாணவனாகத் திகழ்கின்றார். அவர் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று நீடூழிகாலம் வாழவேண்டும் என்று வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

கலாநிதி (திருமதி) ஜெ. இராசநாயகம்
சிரேஸ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

இந்து சமயி ஒருவனது வாழ்க்கையில் ஆலயங்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன. இவை மக்களின் வாழ்க்கையில் ஆன்மீக இன்பத்தையும் சமூக விழுமியங்களையும் போற்றி வாழுகின்ற செயற்பாட்டை மிகவும் பொறுப்புடன் செய்து வருகின்றன. அத்தகைய ஆலயங்களின் செயற்பாட்டை சிறந்த முறையில் முன்னடத்திச் செல்வதில் சிவாச்சாரியார்களின் பங்களிப்பு மகத்தானது. இத்தகைய சிவாச்சாரியார்கள் இறையருள் பெற்றவர்கள். இவர்களைப் போற்றும் வகையில் எடுக்கப்படும் விழாக்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அத்துடன் அர்த்தம் நிறைந்ததாகவும் விளங்குகின்றன.

கண்ணன் ஐயா என்ற செல்லப்பெயர் கொண்டு அழைக்கப்படும் தியாக. சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் அவர்கள் குருப்பட்டம் பெற்று 25 ஆவது அகவை நாள் இன்று கொண்டாடப்படுவதும், அதற்கு மேலும் மெருகூட்டுவதாக மலரொன்று வெளியிடப்படுவதும் உண்மையில் வரவேற்கத்தக்கது. இவைகள் காலத்தால் அழியமுடியாத காவியங்களாக இடம்பெறவேண்டும். ஆன்மீகப்பாதையில் நாடு செல்லவேண்டுமானால் இத்தகைய விழாக்கள் வழிகாட்டிகளாக அமையவேண்டும்.

இவர்களது ஆன்மீக வாழ்க்கை நெறிகள் வாழ்வதோடு மட்டுமல்லாது கல்விப் பணியிலும் தன்னை ஈடுபடுத்தி வடமராட்சிப் பகுதியில் சிறந்துவிளங்கும் கல்விச் சாலைகளில் ஒன்றான யா/குடத்தனை அ.மி.த.க.பாடசாலையின் சிறந்த அதிபராகவும் செயற்படுவது மேலும் பணியின் சிறப்பை மெருகூட்டுவதாக உள்ளது. தனது ஆன்மீகத்துறை, கல்வித்துறைக்கு மேலாக நிர்வாக செயற்பாட்டிலும் தனது ஆர்வத்தை ஈடுபடுத்தும் முகமாக முதுகலை பிராந்திய திட்டமிடல் கற்கைநெறியினையும் கற்றுவருவது அவரது விடாமுயற்சியையும் ஆர்வத்தையும் வெளிக்காட்டுவதாக உள்ளது.

இவரது பணிகள் யாவும் சிறக்க இறையருள் துணையாக இருப்பதோடு அவர்வாழ் சமூகமும் அவரது பணியால் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**திரு. நா. இராசநாயகம்**
கணக்காளர்,
யாழ்.போதனாவைத்தியாசலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பட்டத்தின் சிறப்புடையவர்க்கு வாழ்த்து

சிவஸ்ரீ தியாகராஜாக்குருக்கள் சோமாஸ்கந்தராஜாக்குருக்களின் ஆச்சாரிய அபிஷேக வெள்ளிவிழாவில் அவருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இந்நாளில் அவரின் சேவையின் மகிமையைக்கூறும் "சோமாஸ்கந்தராஜ தரிசனம்" எனும் நூல் வெளிவருவதற்காகவும், எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். திரு குருக்கள் அவர்கள் முதுமானி பட்டம்பெற்ற ஒரு அதிபர். இவரின் பட்டங்கள் இவருக்கு மேலும் உயர்வை தேடித்தரும் சுலோகங்களாகும். சைவசித்தாந்த பண்டிதர் என்ற பட்டம் தமிழுக்கும் சைவத்திற்கும் சிறப்பைக்கொடுக்கும் முருகனின் அருளைத் தருகின்றது. அருட்பிரபாகரசீலர் என்பது அவரது தெய்வீகப் பணியை உணர்த்துகின்றது. சிவாகம உபதேச வாசஸ் பதி என்பது சிவனின் சிறப்பை உபதேசிக்கும் ஞானி என்ற நிலையைக் கொடுக்கின்றது. சிவாகம வித்தியா பூஷணம் என்பது சிவகிரியைகளை நடாத்தும் ஆற்றல் உடையவராக இருப்பதைக் காட்டுகின்றது.

குருக்களை அவர் சிறுவனாக இருக்கும்போதே நான் அறிவேன். அன்று சிறுவனாக இருந்தபோதே சமயவழிபாடு, கிரியைகள் போன்றவற்றில் எவ்வளவு உறுதியாய் இருந்தார் என்பதை அறிவேன். இவரது தந்தையார் எனது சிறந்த நண்பனாக இருந்தார். ஆயினும் இன்று இவர் எங்கள் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கின்றார். இவரிடம் எங்கள் குறைகளை முறையிட்டால் அது தெய்வத்திற்கு எட்டியதுபோன்ற ஓர் உணர்வு ஏற்படும். இதனால் குறைகள் தீர்ந்து நிறைவுடன் செல்லும் மார்க்கம் ஏற்படும். இவ்வாறான ஒரு சமய வழிகாட்டி, சமூகத் தொண்டன், முகாமைத்துவ முதல்வர் என்ற பல கோணங்களுடன் இவரை நாம் நோக்கும்போது இவரின் முழுப்பலமும் தெரியவரும். இவரின் ஆழ்ந்த அறிவை பலரும் வியந்து பாராட்டுகின்றனர். இவர் ஓர் அறிவுக்களஞ்சியம் என்றால் அது மிகையாகாது. இவ்வாறான ஓர் அறிவாலயத்தின் புகழை அறியச்செய்ய ஒரு மலர்வெளியிடுவது அவசியம்தான். இம்மலர் வெளியீட்டின்மூலம் சைவசமய நெறியாளர்கள் எவ்வாறு இருக்கவேண்டுமென்று ஓர் செய்தி சமுதாயத்திற்குக் கிடைக்கிறது.

எல்லாம்வல்ல நெல்லண்டைப் பத்திரகாளியம்மனும் வீரகாளியம்மனும் என்றும் துணையிருக்க குருக்கள் எங்கள் எல்லோருக்கும் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்வாராக.

அன்பான குருக்களுக்கு என் இதயம் கனிந்த வெள்ளிவிழா வாழ்த்துக்கள்

**ந. குணசீலன்**
ஓய்வுபெற்ற பிரதி அதிபர்,
ஹாட்லிக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சூரிய ஸ்தோத்திரம்

த்யாயேத் ஸுர்ய மனந்தகோடி கிரணம் தேஜோமயம் பாஸ்கரம்!
பக்தானாமபயப்ரதம் தினகரம் ஜ்யோதிர்மயம் ஸங்கரம்!
ஆதித்யம் ஜகதீஸ மச்யுதமஜம் த்ரைலோக்ய சூடாமணிம்
பக்தாபீஷ்ட வரப்ரதம் தினமணிம் மார்த்தாண்டமாத்யம் ஸுபம்!!

1. கணக்கற்ற கோடிக்கணக்கான ஒளிக் கிரணங்களை உடைய, ஒளி மயமாக விளங்கிப் பிரகாசிக்கும் சூரியனைத் தியானம் செய்ய வேண்டும்.

பக்தர்களுக்கு 'பயப்பட வேண்டாம்' என்று அபயத்தை அளிப்பவர், பகல் பொழுதை உருவாக்குபவர், ஜோதிவடிவமானவர், மங்களத்தைச் செய்பவர், அதிதியின் செல்வன் (ஆதித்தன்), உலகங்களின் தலைவர், குறை எதுவும் இல்லாதவர் (அச்யுதன்), பிறப்பற்றவர், மூன்று உலகங்களுக்கும் அணிகலன் ஆனவர், பக்தர்கள் விரும்பும் வரத்தை அளிப்பவர், பகல் நேரத்திற்கு மணியாகத் திகழ்பவர், மார்த்தாண்டர் என்று வழங்கப்படுபவர், முதன்மை இடம் வகிப்பவர், மங்கள மயமானவர் ஆகிய சூரியனைத் தியானம் செய்ய வேண்டும்.

காலாத்மா ஸ்ர்வபூதாத்மா வேதாத்மா விஸ்வதோமுக:!
ஜன்ம ம்ருத்யு ஜரா வ்யாதி ஸம்ஸார பய நாஸன:!
ப்ரம்ம ஸ்வரூப உதயே மத்யாஹ்னேது மஹேஸ்வர:!
அஸ்தகாலே ஸ்வயம் விஷ்ணு: த்ரயீமூர்த்திர் திவாகர:!!

2. கால்ம் என்ற வடிவமானவர்; அனைத்து உயிர்களின் வடிவமானவர்; வேத வடிவமானவர்; எல்லாத் திக்குகளிலும் முகம் உடையவர்; பிறப்பு, இறப்பு, வயோதிகம், நோய், சம்சாரம் முதலியவற்றால் ஏற்படும் பயத்தை அழிப்பவர்; உதிக்கும்போது பிரம்மாவின் வடிவமும், நடுப்பகலலில் சிவபெருமானின் வடிவமும் கொண்டவர்.

ஏக சக்ர ரதோ யஸ்ய திவ்ய: கனகபூஷித:!
ஸோSயம் பவது ந: ப்ரீத: பத்மஹஸ்தோ திவாகர:!

3. மறையும்போது திருமாலாகத் திகழ்பவர். இவ்விதம் திவாகரன் மும்மூர்த்தியாக விளங்குகிறார். அவர் தெய்விகமான, தங்கமயமான ஒரு சக்கரம் கொண்ட ரதத்தை உடையவர்.

பத்ம ஹஸ்த பரம் ஜ்யோதி: பரேஸாய நமோ நம:!
அண்டயோனே மஹாஸாக்ஷின் ஆதித்யாய நமோ நம:!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பகலை உருவாக்கும் (திவாகரன்), கமலத்தைக் கையில் ஏந்திய சூரிய பகவான் எங்களுக்கு மகிழ்ச்சியை அளிப்பவராக.
தாமரையைக் கையில் ஏந்திய மேலான மெய்ச்சுடரே, எல்லோருக்கும் தலைவரே! உங்களுக்கு வணக்கம்.

**கமலாஸன தேவேஸ பானு மூர்த்தே நமோ நம:!**
**தர்மமூர்த்தே தயாமூர்த்தே தத்வமூர்த்தே நமோ நம:!**

5. உலகங்களின் தோற்றத்திற்குக் காரணமான, மேலான சாட்சியாகிய ஆதித்யரே! உங்களுக்கு வணக்கம். தாமரை மலரில் வீற்றிருக்கும், தேவர்களின் தலைவரே! உங்களுக்கு வணக்கம்.

**ஸகலேஸாய ஸூர்யாய சாயேஸாய நமோ நம:!**
**க்ஷயாபஸ்மார குல்மாதி துர்தோஷ வ்யாதி நாஸனம்!!**

6. தர்மம், கருணை, தத்துவம் ஆகியவற்றின் வடிவமானவரே! உங்களுக்கு வணக்கம். எல்லாவற்றிற்கும் தலைவனும், சாயாதேவியின் தலைவனும் ஆகிய உங்களுக்கு வணக்கம்.

**ஸ்ர்வஜ்வர ஹரஞ்சைவ குக்ஷிரோக நிவாரணம்!**
**ஏதத் ஸ்தோத்திரம் ஸிவப்ரோக்தம் ஸ்ர்வ ஸித்திகரம் பரம்!!**
**ஸர்வ ஸ்ம்பத்கரம் சைவ ஸர்வாபீஷ்ட ப்ரதாயகம்!!**

7. க்ஷயம், காக்கா வலிப்பு (அபஸ்மாரம்), குன்மம் (Spleen)என்ற உறுப்பு பெரிதாவது) ஆகிய குறைகளை, நோய்களை அழிப்பதும், ஜ்ூரம், வயிறு உபாதிகளைப் போக்குவதும் ஆகிய இந்த ஸ்தோத்திரம் பரமசிவனால் கூறப்பட்டது; எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றும் மேன்மை உடையது; எல்லாவித செல்வங்களையும் அளித்து, வேண்டிய எல்லாவற்றையும் தரக்கூடியது.

# சூரியாஷ்டகம்

**ஆதிதேவ நமஸ்துப்யம் ப்ரஸீத மம பாஸ்கர!**
**திவாகர நமஸ்துப்யம் ப்ரபாகர நமோஸ்து தே!!**

1. முதற்கடவுளே உனக்கு நமஸ்காரம், ஒளி பொருந்தியவனே அருள் புரிவாய். பகலை உண்டாக்குபவனே உனக்கு நமஸ்காரம். ஒளியைக் கொடுப்பவனே உனக்கு நமஸ்காரம்.

**ஸப்தாச்வ ரதமாரூடம் ப்ரசண்டம் கச்யபாத்மஜம்!**
**ச்வேத பத்மதரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம் யஹம்!!**

2. ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் இருப்பவரும், மிகவும் உஷ்ணமானவரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்யப முனிவருடைய புதுத்திரரும் வெள்ளைத் தாமரையைத் தாங்கியவருமான சூர்ய பகவானை வணங்குகிறேன்.

**லோஹிதம் ரதமாரூடம் ஸர்வலோக பிதாமஹம்!**
**மஹாபாப ஹரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்!!**

3. சிவப்பு நிறமான ரதத்தில் ஏறியவரும், எல்லா உலகங்களுக்கும் பிதாமஹரான வரும், பாவங்களையெல்லாம் போக்குபவருமான அந்த சூரிய பகவானை வணங்குகிறேன்.

**த்ரைகுண்யம் ச மஹாசூரம் ப்ரஹ்ம விஷ்ணுமகேச்வரம்!**
**மஹா பாபஹரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்!!**

4. சத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களை உடையவரும், மிக்க பலசாலியானவரும், பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகளும் இவரே என்று கூறப்படுபவரும், எல்லாப் பாவங்களையும் போக்குபவரும் ஆன அந்த சூரியனை வணங்குகிறேன்.

**ப்ரும்ஹிதம் தேஜ: புஞ்ஜம்ச வாயுமாகாசமேவ ச!**
**ப்ரபும் ச ஸர்வலோகானாம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்!!**

5. வளர்ந்துகொண்டே இருக்கும் ஒளி பொருந்தியவரும், வாயு, ஆகாசம் முதலான பஞ்ச பூதங்களின் தொகுதியானவரும், உலகனைத்துக்கும் அதிபதியானவருமான அந்த சூரிய பகவானை வணங்குகிறேன்.

**பந்தூகபுஷ்ப ஸங்காசம் ஹாரகுண்டல பூஷிதம்!**
**ஏக சக்ரதரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்!!**

6. பந்தூக மரத்தின் பூவைப் போன்ற நிறம் உடையவரும், மாலை, குண்டலங்கள் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டவரும், ஒரே சக்கரத்தைக் கொண்டவருமான சூரிய பகவானை நமஸ்கரிக்கின்றேன்.

**தம் ஸூர்யம் ஜகத்கர்த்தாரம் மஹாதேஜ: ப்ரதீபனம்!**
**மஹா பாபஹரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்!!**

7. உலக படைப்புக்குக் காரணமானவரும், தம் ஒளியால் உலகை இயக்குபவரும் (அல்லது ஞானம் அளிப்பவரும்) எல்லா பாவங்களையும் போக்குபவருமான சூரிய பகவானை வணங்குகிறேன்.

**தம் ஸூர்யம் ஜகதாம் நாதம் ஞானவிஞ்ஞான மோக்ஷதம்!**
**மஹா பாபஹரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்!!**

8. உலகின் தலைவரும், அறிவையும் அறிவின் சுய அனுபவத்தையும் மோட்சத்தையும் அளிப்பவரும் எல்லாப் பாவங்கையும் போக்குபவருமான சூரிய பகவானை வணங்குகிறேன்.

**இதி ஸ்ரீசிவப்ரோக்தம் ஸூர்யாஷ்டகம் ஸம்பூர்ணம்!**

இவ்வாறு சிவபெருமானால் உரைக்கப்பட்ட ஸூர்யாஷ்டகம் முற்றுப் பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய கவசம்

இந்த சூரிய கவசத்தைப் படிப்பதால் நீண்ட ஆயுள், நல்ல ஆரோக்கியம், செல்வம் ஆகியவை கிடைக்கும். எதிரிகளால் ஏற்படும் அச்சம் அகலும். வியாபாரத்திலும் தொழிலிலும் மேன்மை ஏற்படும்.

தியான சுலோகம்:

**ஜபா குஸும ஸங்காசம் த்விபுஜம் பத்மஹஸ்தகம்!**
**ஸிந்தூராம்பர மால்யஞ்ச ரக்த கந்தானுலேபனம்!!**

1. செம்பருத்திப் பூவைப் போன்ற நிறமுள்ளவரும், இரண்டு கரங்களைக் கொண்டவரும், கையில் தாமரை மலரை ஏந்தியவரும், சிந்தூரம் போன்ற சிவந்த ஆடையையும் மாலையையும் அணிந்தவரும், சிவந்த சந்தனத்தைப் பூசிக்கொண்டிருப்பவரும் ஆகிய சூரியனைத் தியானம் செய்ய வேண்டும்.

**மாணிக்ய ரத்ன கசித ஸர்வாபரண பூஷிதம்!**
**ஸப்தாஸ்வ ரத வாஹம் ச மேரும் யாந்தம் ப்ரதக்ஷிணம்!**

2. மாணிக்கம் - ரத்தினம் ஆகியவற்றால் இழைக்கப்பட்ட பல்வேறு ஆபரணங்களை அணிந்தவரும், ஏழு குதிரைகளால் இழுக்கப்படும் ரதத்தில் அமர்ந்திருப்பவரும், மேரு மலையை வலமாக வருபவரும் ஆகிய சூரியனைத் தியானம் செய்ய வேண்டும்.

## கவசம்

**தேவாஸுர வரைர் வந்த்யம் ரஸ்மிபி: பரிவேஷ்டிதம்!**
**ஸுர்யம் த்யாத்வா ஸுவர்ணாபம் படேச்ச கவசம் முதா!!**

3. தேவர்களின் - அசுரர்களின் தலைவர்களால் வணங்கத் தக்கவரும், ஒளி பொருந்திய கிரணங்களால் சூழப்பட்டவரும், தங்கம் போன்று ஒளி மிக்கவரும் ஆகிய சூரியனைத் தியானம் செய்து மகிழ்ச்சியுடன் இந்தக் கவசத்தைப் படிக்க வேண்டும்.

(போருக்குச் செல்பவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, உடலின் முக்கிய பாகங்களைக் கவசத்தால் மறைத்துக் கொள்வார்கள். அதுபோல் இந்த மந்திரம் ஒருவரைப் பாதுகாக்கும் என்பதால் 'கவசம்' என்று அழைக்கப்படுகிறது. சூரியனின் பல்வேறு பெயர்களை இங்கு குறிப்பிட்டு, ஒவ்வொரு பெயரும் உடலின் ஒரு குறிப்பிட்ட பகுதியைக் காக்கட்டும் என்று பிரார்த்தனை செய்யப்படுகிறது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க்ருணி: பாது ஸிரோ தேஸம் ஸுர்ய: பாது லலாடகம்!**
**ஆதித்யோ லோசனே பாது ஸ்ருதீ பாது திவாகர:!!**

4. தலைபாகத்தைக் 'க்ருணி' காக்கட்டும்; நெற்றியைச் சூரியன் பாதுகாக்கட்டும்; கண்களை ஆதித்தன் காக்கட்டும்; காதுகளைத் திவாகரன் காக்கட்டும்.

**க்ராணம் பாது ஸதாபானு: முகம் பாது ஸதாரவி:!**
**ஜிஹ்வாம் பாது ஜகந்நேத்ர: கண்டம் பாது விாவஸு:!!**

5. நாசியை எப்போதும் பானு காக்கட்டும்; ரவி முகத்தைப் பாதுகாக்கட்டும்; நாவை ஜகன் நேத்திரன் (உலகிற்குக் கண்ணாக இருப்பவன்) காக்கட்டும்; விபாவஸு கழுத்துப் பகுதியைப் பாதுகாக்கட்டும்.

**ஸ்கந்தௌ க்ரஹபதி: பாது புஜௌ பாது ப்ரபாகர:!**
**கராவப்ஜகர: பாது ஹ்ருதயம் பாது பானுமான்!**

6. கிரகங்களுக்குத் தலைவன் இரண்டு தோள்களைக் காக்கட்டும்; பிரபாகரன் கரங்களைக் காக்கட்டும்; அப்ஜகரன் இரண்டு உள்ளங்களையும் காக்கட்டும்; பானுமான் இதயத்தைப் பாதுகாக்கட்டும்.

**மத்யம் பாது ஸுஸப்தாஸ்வ: நாபிம் பாது நபோமணி:**
**த்வாதஸாத்மா கடிம் பாது ஸவிதா பாது ஸக்தினீ!!**

7. (நல்ல ஏழு குதிரைகளையும் உடைய) ஸுஸப்தாச்வன் இடையைக் காக்கட்டும்; நாபியை நபோமணி (ஆகாயத்தில் ஒளிரும் மணி) காக்கட்டும்; (பன்னிரண்டு வடிவமாக இருக்கும்) துவாதச ஆத்மா இடுப்பைக் காக்கட்டும்; இடுப்பு, துடை இரண்டும் சேரும் பகுதியை ஸவிதா காக்கட்டும்.

**ஊரு பாது ஸுரஸ்ரேஷ்ட: ஜானுனீ பாது பாஸ்கர:!**
**ஜங்கே மே பாது மார்த்தாண்ட: குல்பௌ பாது த்விஷாம் பதி:!!**

8. (தேவர்களின் சிறந்தவனாகிய) ஸுரச்ரேஷ்டன் துடைகளைப் பாதுகாக்கட்டும்; பாஸ்கரன் முழங்காலைக் காக்கட்டும்; மார்த்தாண்டன் எனது ஆடுதசைகளைப் பாதுகாக்கட்டும்; த்விஷாம்பதி எனது புறங்கால்களைக் காக்கட்டும்.

**பாதௌ தினமணி: பாது பாது மித்ரோ S கிலம் வபு:!**
**ஆதித்ய கவசம் புண்யம் அபேத்யம் வஜ்ரஸந்நிபம்!!**

9. தினமணி (பகல் நேரத்திற்கு மணிபோல் இருப்பவன்) எனது கால்களைக் காக்கட்டும்; மித்திரன் (சிறந்த நண்பன்) என்னுடைய உடல் முழுவதையும் பாதுகாக்கட்டும்.

இந்த ஆதித்ய கவசம் புண்ணியம் நிறைந்தது; பிளக்க முடியாதது; வஜ்ராயுதத்திற்கு நிகரானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோதாரயதி புண்யாத்மா பக்திமான் ஸது மானவ:!
ஸர்வ ரோக பயாதிப்ய: முச்யதே நாத்ர ஸம்சய:!!

10. இதை எவன் பக்தியுடன் படிக்கிறானோ - புண்ணியம் நிறைந்த பக்திமானாகத் திகழும் - அந்த மனிதன் எல்லாவிதமான நோய்களிலிருந்தும், பயங்களிலிருந்தும் விடுதலை அடைகிறான். இதில் சிறிதும் சந்தேகத்திற்கு இடமில்லை.

ஸம்வத்ஸர முபாஸித்வா ஸாம்ராஜ்ய பதவீம் லபேத்!
அநேக ரத்ன ஸம்யுக்தம் ஸ்வர்ண மாணிக்ய பூஷணம்!!

11. ஒரு வருட காலம் இந்தக் கவசத்தை உபாசனை செய்பவன் அரச பதவிக்கு ஒப்பான மேலான நிலையை அடைவான்.

அநேக விதமான ரத்தினங்ளைக் கொண்டதும், எல்லா விதமான மாணிக்கங்களால் அலங்கரிக்கப்பட்டதுமாகிய ஆபரணங்களை உடைய சூரிய பகவானைத் தியானிக்க வேண்டும்.

கல்ப வ்ருக்ஷ ஸமாகீர்ணம் கதம்ப குஸுமம் ப்ரபம்!
அசேஷ ரோக சாந்த்யர்த்தம் ஸூர்யம் த்யாயேத்து மண்டலே!!

12. கற்பக மரங்களால் சூழப்பட்டவரும், கதம்ப மலருக்கு இணையான ஒளி பொருந்தியவரும், சூரிய மண்டலத்தில் இருப்பவருமாகிய சூரிய பகவானை எல்லா நோய்களும் விலகும் பொருட்டு தியானிக்க வேண்டும்.

ஸிந்தூர வர்ணாய ஸுமண்டலாய ஸுவர்ண ரத்னாபரணாய துப்யம்!
பத்மாபிநேத்ராய ஸுபங்கஜாய ப்ரம்மேந்த்ர நாராயண ஸங்கராய!!

13. சிந்தூரம் போன்ற சிவந்த நிறமுடையவரும், அழகிய வட்ட வடிவம் கொண்டவரும், தங்கமும் ரத்தனமும் இழைத்த ஆபரணங்களை அணிந்தவரும், தாமரைப் போன்ற பிரகாசமான கண்களை உடையவரும், அழகிய தாமரையை ஏந்தியவரும், பிரம்மா, இந்திரன், நாராயணன், சங்கரன் ஆகிய வடிவங்களில் இருப்பவருமான சூரிய பகவானே! உங்களுக்கு வணக்கம்.

ஸம்ரக்த சூர்ணம் ஸஸுவர்ண தோயம் ஸ்குங்குமாபம் ஸகுஸம் ஸபுஷ்பம்!
ப்ரதத்த மாதாய ச ஹேம பாத்ரே ஸஹஸ்ரபானோ பகவன் ப்ரஸீத!!

14. ஆயிரம் கிரணங்களுடைய பானுவே! சிவந்த பொடி, பொன்னாலான பாத்திரத்தில் நீர், குங்குமம், தர்ப்பை புல், மலர்கள் ஆகியவற்றை உங்களுக்குப் பொன் தட்டில் வைத்து சமர்ப்பிக்கிறோம். சூரிய பகவானே! இதை ஏற்று தாங்கள் எங்கள் மீது அருள் புரியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மகாகணபதி மங்களமாலிகா ஸ்தோத்திரம்

ஸ்ரீகண்டப்ரேம புத்ராய கௌரீவாமாங்கவாஸிநே!
த்வா த்ரிம்சத்ருபயுக்தாய ஸ்ரீகணேசாய மங்களம்!!

1. நீலகண்டனின் அன்பிற்கு உரிய புதல்வனும், கௌரிதேவியின் இடது மடியில் அமர்ந்திருப்பவரும், 32 வடிவங்களில் திகழ்பவரும் ஆகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்.

ஆதிபூஜ்யாய தேவாய தந்தமோதகதாரிணே!
வல்லபா ப்ராண காந்தாய ஸ்ரீகணேசாய மங்களம்!!

2. முதன்மை ஸ்தானம் கொடுத்த வழிபடத் தக்கவரும், தேவ வடிவினரும், கைகளில் யானைத்தந்தம் - கொழுக்கட்டையை வைத்திருப்பவரும், வல்லபைதேவியின் பிராண நாதரும் ஆகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்.

லம்போதராய சாந்தாய சந்திரகர்வாபஹாரிணே!
கஜாநநாய ப்ரபவே ஸ்ரீகணேசாய மங்களம்!!

3. பெருத்த வயிறு உடையவரும், சாந்தமே வடிவானவரும், சந்திரனுடைய கர்வத்தை அழித்தவரும், யானைமுகம் உடையவரும் ஆகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்.

பஞ்சஹஸ்தாய வந்தியாய பாசாங்குச தராயச!
ஸ்ரீமதே கஜகர்ணாய ஸ்ரீகணேசாய மங்களம்!!

4. ஐந்துகரத்தவர், அனைவராலும் வணங்கத் தக்கவர், பாசம் - அங்குசம் ஆகியவற்றை வைத்திருப்பவர், சீரும் சிறப்பும் (ஸ்ரீ) உடையவர், யானையின் காதுகளைக் கொண்டவர் ஆகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்.

த்வைமாதுராய பாலாய ஹேரம்பாய மஹாத்மனே!
விகடாயாகுவாஹாய ஸ்ரீகணேசாய மங்களம்!!

5. (துர்க்கை, சாமுண்டாதேவி ஆகிய இரண்டு பேரால் வளர்க்கப்பட்டதால்) இரண்டு தாய்மார்களை உடையவர், சிறுவன் போன்ற வடிவம் கொண்டவர், ஹேரம்பர் (மகேஸ்வரனின் அருகில் இருப்பவர்) மகாத்மாவாக இருப்பவர், மூஞ்சுறுவை தனது வாகனமாகக் கொண்டவர் ஆகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்.

ப்ருச்னிச்ருங்காஜிதாய க்ஷிப்ராபீஷ்டார்த்த தாயினே!
ஸித்தி புத்தி ப்ரமேனாய ஸ்ரீகணேசாய மங்களம்!!

6. பிரகாசம் நிறைந்த தந்தத்தை உடையவர், எவராலும் வெல்லப்படாதவர், வேண்டியதை உடனே அளிப்பவர், சித்தி - புத்தி என்ற இரண்டு தேவியர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தத்தை அளிப்பவர் ஆகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்

**விலம்பியக்ஞஸூதராய ஸர்வ விக்னநிவாரிணே!**
**தூர்வாதள ஸூபூஜ்யாய ஸ்ரீகணேசாய மங்களம்!!**

7. (மார்பில் தவழும்) முப்புரி நூலை அணிந்தவர், இடையூறுகள் அனைத்தையும் அகற்றுபவர், அருகம்புல்லைக் கொண்டு வழிபடப்படுபவர் ஆகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்.

**மஹாகாயாய பீமாய மஹாஸேநாக்ரஜன்மனே!**
**த்ரிபுராரிவரோத்தர்த்ரே ஸ்ரீகணேசாய மங்களம்!!**

8. பெரிய சரீரத்தை உடையவரும், வலிமை மிக்கவரும், தேவசேனாபதியாகிய முருகனுக்கு அண்ணனும், முப்புரங்களையும் எரித்த சிவபெருமானிடமிருந்து வரங்களைப் பெற்றவரும் ஆகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்.

**ஸிந்தூரரம்யவர்ணாய நாகபத்தோதராயச!**
**ஆமோதாய ப்ரமோதாய ஸ்ரீகணேசாய மங்களம்!!**

9. குங்குமப்பூவைப் போன்ற நிறம் கொண்டவர், பாம்பை இடுப்பில் சுற்றியிருப்பவர் மிக்க மகிழ்ச்சியும், மேலான ஆனந்தமும் உடையவர் ஆகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்.

**விக்னகர்த்ரே துர்முகாய விக்னஹர்த்ரே சிவாத்மனே!**
**ஸூமுகாயைகதந்தாய ஸ்ரீகணேசாய மங்களம்!!**

10. தீய மனப்பான்மை உடையவர்களுக்குத் தடைகளை ஏற்படுத்துபவர், மங்களகரமான நல்ல மனம் உள்ளவர்களின் இடையூறுகளை அகற்றுபவர், நல்ல வடிவம் உடையவர், ஒற்றைக் கொம்பைக் கரத்தில் ஏந்தியவர் ஆகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்.

**ஸமஸ்தகணநாதாய விஷ்ணவே தூமகேதவே!**
**த்ரிய க்ஷாய பாலசந்த்ராய ஸ்ரீகணேசாய மங்களம்!!**

11. கணங்கள் (சிவபெருமானின் பணியாளர்களான சிவகணங்கள்) எல்லோருக்கும் தலைவர், எங்கும் வியாபித்திருப்பவர், அக்கினி வடிவமாக இருப்பவர், மூன்று கண்களை உடையவர், நெற்றியில் சந்திரனைத் தரித்தவர் ஆகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்.

**சதுர்தீசாய மான்யாய ஸர்வ வித்யாப்ரதாயினே!**
**வக்ரதுண்டாய குப்ஜாய ஸ்ரீகணேசாய மங்களம்!!**

12. சதுர்த்தி (நான்காவது) திதிக்குத் தலைவரும், பெருமைக்க உரியவரும், எல்லாவிதமான வித்யைகளை அளிப்பவரும், வளைந்த துதிக்கையை உடையவரும், குள்ளமாக இருப்பவரும் ஆகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டினே கபிலாக்யாய ச்ரேஷ்டாய ருணஹாரினே!
உத்தண்டோத்தண்டரூபாய ஸ்ரீகணேசாய மங்களம்!!

13. துண்டி (நடனம் செய்யும்) கணபதி - கபில (பழுப்பு நிறமுள்ள) கணபதி என்ற பெயர்களை உடையவரும், சிறந்தவரும், கடனை நீக்குபவரும், தீயவர்களுக்கு மிகவும் பயங்கரமான வடிவம் உடையவரும் ஆகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்.

கஷ்டஹர்த்ரே த்விதேஹாய பக்தேஷ்ட ஜயதாயினே!
விநாயகாய விபவே ஸ்ரீகணேசாய மங்களம்!

14. இன்னல்களைப் போக்குபவர் (யானை, மனிதன் ஆகிய) இரண்டு வித சரீரங்களை உடையவர், பக்தர்கள் விரும்பும் வெற்றிகளைத் தருபவர், விநாயகர் (சிறந்த தலைவர்) என்று போற்றப்படுபவர் அகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்.

ஸச்சிதாநந்தரூபாய நிர்குணாய குணாத்மநே!
வடவே லோககுரவே ஸ்ரீகணேசாய மங்களம்!!

15. சத்-சித்-ஆனந்த சொரூபமானவர், நிர்க்குண (குணங்கள் அற்ற) வடிவினர், (அதேசமயம்) சிறந்த கல்யாண குணங்களை உடையவர், பிரம்மசாரி உலகனைத்திற்கும் குரு ஆகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்.

ஸ்ரீசாமுண்டாஸுபுத்ராய ப்ரஸன்னவதனாயச!
ஸ்ரீராஜராஜஸேவ்யாய ஸ்ரீகணேசாய மங்களம்!!

16. ஸ்ரீ சாமுண்டிதேவியின் புதல்வர், மகிழ்ச்சி ததும்பும் முகம் உடையவர், அரசர்களுக்கெல்லாம் அரசரால் வணங்கப்படுபவர் ஆகிய ஸ்ரீ மகாகணபதிக்கு மங்களம் உண்டாகட்டும்.

## சங்கஷ்டநாசன கணேச ஸ்தோத்திரம்

### (இந்த ஸ்தோத்திரம் ஸ்ரீ நாரத புராணத்தில் உள்ளது)

ஸ்ரீகணேசாய நம:!! நாரத உவாச!!
ஸ்ரீகணேசனுக்கு வணக்கம், நாரதர் சொல்கிறார்:
ப்ரணம்ய சிரஸா தேவம் கௌரீபுத்ரம் விநாயகம்!
பக்தாவாஸம் ஸ்மரேந்நித்யாமாயு: காமார்த்தஸித்தயே!!

1. நீண்ட ஆயுள் - ஆசைகள் நிறைவேறவும், பொருளை அடையவும், தேவராகவும் கௌரியின் புதல்வராகவும், பக்தர்களின் இதயத்தில் வசிப்பவராகவும் இருக்கும் விநாயகரைத் தினமும் வணங்குகிறேன்.

ப்ரதமம் வக்ரதுண்டம் ச ஏகதந்தம் த்விதீயகம்!
த்ருதீயம் க்ருஷ்ணபிங்காக்ஷம் கஜவக்த்ரம் சதுர்த்தகம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. முதலில் வளைந்த துதிக்கை உடையவரையும், இரண்டாவதாக ஒரே ஒரு தந்தம் உடையவரையும், மூன்றாவதாக சிவந்த நிறம் கொண்ட கருவிழிகளை உடையவரையும், நான்காவதாக யானைமுகம் கொண்டவரையும் நினைத்து வணங்க வேண்டும்.

**லம்போதரம் பஞ்சமம் ச ஷஷ்டம் விகடமேவ ச!**
**ஸப்தமம் விக்னராஜம் சதூம்ரவர்ணம் ததாஷ்டகம்!!**

3. ஐந்தாவதாகத் தொந்தி வயிறு உடையவரையும், ஆறாவதாக மதம் நிறைந்த ஜலப்பெருக்கு உடையவரையும், ஏழாவதாக விக்கினராஜரையும், எட்டாவதாகக் கருஞ்சிவப்பு நிறம் கொண்டவரையும் நினைத்து வணங்க வேண்டும்.

**நவமம் பாலசந்த்ரம் ச தசமம் து விநாயகம்!**
**ஏகாதசம் கணபதிம் த்வாதசம் து கஜானனம்!**

4. ஒன்பதாவதாக நெற்றியில் சந்திரனை அணிந்தவரையும், பத்தாவதாக விநாயகரையும், பதினொன்றாவதாக கணபதியையும் (கணங்களின் தலைவரையும்), பன்னிரண்டாவதாக கஜமுகனையும் நினைத்து வணங்க வேண்டும்.

**தவாதசைதானி நாமானி த்ரிஸந்த்யம் ய: படேந் நர:!**
**ந ச விக்னபயம் தஸ்ய ஸர்வஸித்திகரம் ப்ரபோ:!!**

5. மேலே சொல்லப்பட்ட கணபதியின் இந்தப் பன்னிரண்டு பெயர்களையும் தினமும் மூன்று சந்தியா காலங்களில் படிப்பவனுக்கு, எந்த இடையூறாலும் எந்தப் பயமும் ஏற்படாது.

மேலும் அவன் மேற்கொள்ளும் எல்லாச் செயல்களும் நல்ல முறையில் நிறைவேறும்.

**வித்யார்த்தீ லபதே வித்யாம் தனார்த்தீ லபதே தனம்!**
**புத்ரார்த்தீ லபதே புத்ரான் மோக்ஷார்த்தீ லபதே கதிம்!!**

6. கல்வியை விரும்புபவன் கல்வியையும், செல்வத்தை விரும்புபவன் செல்வத்தையும், மகப்பேறு விரும்புபவன் மகப்பேற்றையும், முக்தியை நாடுபவன் முக்தியையும் அடைவார்கள்.

**ஜபேத் கணபதி ஸ்தோத்திரம் ஷட்பிர்மாஸை: பலம் லபேத்!**
**ஸம்வத்ஸரேண ஸித்திம் ச லபதே நாத்ர ஸம்சய: !!**

7. இந்த கணபதி துதியை ஜபம் செய்வதால், ஆறு மாதங்களில் விரும்பிய பலன் கிடைக்கும். தொடர்ந்து ஒரு வருடம் படிப்பதால் சந்தேகத்திற்கிடமில்லாமல் நல்ல பலன்களை (சித்தியை) அடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டப்யோ ப்ராஹ்மணேப்யச்ச லிகித்வா ய: ஸமர்பயேத்!
தஸ்ய வித்யா பவேத் ஸர்வா கணேசஸ்ய ப்ரஸாதத:!!

8. வேதம் அறிந்த எட்டு பேருக்கு இந்தத் துதியை எழுதிக் கொடுப்பவன், கணபதியின் அருளால் எல்லாக் கல்வித் துறைகளிலும் (வித்யைகளிலும்) மேன்மை அடைகிறான்.

# ஸ்ரீ சித்திவிநாயக ஸ்தோத்திரம்

**விக்நேச விக்நசய கண்டன நாமதேய ஸ்ரீசங்கராத்மஜ ஸுராதிப வந்த்ய பாத!**
**துர்க்கா மஹாவ்ரத பலாகில மங்களாத்மன் விக்னம் மமாபஹர ஸித்திவிநாயக த்வம்!!**

1. எல்லா விதமான தடைகளையும் நீக்குபவர் என்று பெயர் பெற்ற விக்கினேஸ்வரரே! உலகத்திற்கெல்லாம் மங்களத்தைச் செய்யும் சிவபெருமானின் புதல்வரே! தேவர்களின் தலைவனான இந்திரனால் வணங்கப்பட்ட திருவடிகளை உடையவரே! பெரிய பெரிய துர்க்கை விரதங்களுக்கெல்லாம் நற்பயனை அளிக்கும் மங்களசொரூபியே! ஹேவிக்னேஸ்வரரே! சித்தி விநாயகரே! எனது வாழ்க்கையிலுள்ள எல்லாத் தடைகளையும் நீக்கி எனக்கு அருள் புரியுங்கள்.

**ஸத் பத்மராக மணிவர்ண சரீர சாந்தி ஸ்ரீ ஸித்திபுத்தி பரிசர்ச்சித குங்கும ஸ்ரீ!**
**தக்ஷஸ்தனே வலயிதாதி மநோக்ஞ சுண்டோ விக்னம் மமாபஹர ஸித்திவிநாயக த்வம்!!**

2. சிறந்த பத்மராகமணி போன்ற பிரகாசம் உள்ள சிவந்த உடலை உடையவரே! சித்தி - புத்தி என்ற இரண்டு தேவிய்களால் பூஜிக்கப்பட்ட குங்குமத்தால் விளங்குபவரே!! வலது மார்பில் வளைந்திருக்கும் மிகவும் அழகான துதிக்கையை உடையவரே! சித்தி விநாயகரே! எனது வாழ்க்கையிலுள்ள எல்லா இடையூறுகளையும் நீக்கி எனக்கு அருள் புரியுங்கள்.

**பாசாங்குசாப்ஜ பரசூம்ச்ச ததச்சதுர்பி: தோர்ப்பிச்ச சோணகுஸுமஸ்ரகுமாங்கஜாத!**
**ஸிந்தூர சோபித, லலாடவிது ப்ரகாசோ: விக்னம் மமாபஹர ஸித்திவிநாயக த்வம்!!**

3. கயிறு, அங்குசம், தாமரை, கோடரி ஆகிய நான்கைம் நான்கு கைகளில் வைத்திருப்பவரே! சிவப்பு நிற மலர்களாலான மாலையை அணிந்தவரே! பார்வதியின் புதல்வரே! நெற்றியில் சிவப்பு பொட்டையும் தலையில் சந்திரனையும் அணிந்து பிரகாசிப்பவரே! சித்தி விநாயகரே! எனது விக்கினங்களைப் போக்கி எனக்கு அருள் புரியுங்கள்.

**கார்யேஷு விக்னசய பீத விரிஞ்சி முக்யை: ஸம்பூஜித ஸுரவரைரபி மோதகாத்யை!**
**ஸர்வேஷு ச ப்ரதமமேவ ஸுரேஷுபூஜ்ய விக்னம் மமாபஹர ஸித்திவிநாயக த்வம்!!**

4. தாங்கள் மேற்கொண்ட காரியங்களில் இடையூறுகள் ஏற்படும் என்ற பயத்தால் பிரம்மா போன்ற முக்கிய தேவர்களாலும், மோதகம் முதலிய நைவேத்தியங்களால் நன்றாகப் பூஜிக்கப்பட்டவரே! எல்லா தெய்வங்கிலும் முதலில் வணங்கப்படுபவரே! சித்தி விநாயகரே! எனது விக்கினங்களைப் போக்கி எனக்கு அருள் புரியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீக்ராஞ்சன ஸ்கலந துங்க ரவோர்த்வ கண்ட ஸ்தூலேந்து ருத்ரகணஹாஸித தேவஸங்க:!
சூர்ப்பச்ருதிக்க ப்ருதுவர்த்துளதுங்க துந்தோ விக்னம் மமாபஹர ஸித்திவிநாயக த்வம்!!

5. விரைவாகவும், விட்டுவிட்டும், உரக்கச் சப்தம் செய்யும் சமயத்தில் மேலே தூக்கிய துதிக்கையை உடையவரே! சந்திரனை முடியில் கொண்ட ருத்திரகணங்களையும், தேவர்களின் கூட்டத்தையும் சிரிக்கச் செய்பவரே! முறம் போன்ற காதுகளையும், பெரிய வயிற்றையும் உடையவரே! சித்தி விநாயகரே! எனது விக்கினங்களை அகற்றி எனக்கு அருள் புரியுங்கள்.

யக்ஞோபவீத பதலம்பித நாகராஜோ மாஸாதி புண்ய தத்ருசீக்ருத ருக்ஷராஜ:!
பக்தாபயப்ரத தயாலய விக்னராஜ விக்னம் மமாபஹர ஸித்திவிநாயக த்வம்!!

6. பாம்பைக் கால் வரையில் தொங்கும் பூணூலாக அணிந்திருப்பவரே! பௌர்ணமி போன்ற திதிகளிலும், மாதப்பிறப்பு நாட்களிலும் பூஜிக்கப்பட்டு பலனை அளிப்பவரே! சித்தி விநாயகரே! பக்தர்களுக்கு அபயமளிப்பவரே! கருணைக்கு இருப்பிடமாக விளங்குபவரே! விக்கினங்களுக்கெல்லாம் அரசரே! எனது விக்கினங்களை நீக்கி எனக்கு அருள் புரியுங்கள்.

ஸத்ரத்நஸாரததி ராஜித ஸத்கிரீட: கௌஸூம்ப சாருவஸநத்வய ஊர்ஜித ஸ்ரீ:!
ஸர்வத்ர • மங்களகர ஸ்மரண ப்ரதாப: விக்னம் மமாபஹர ஸித்தி விநாயக த்வம்!!

7. சிறந்த ரத்தினங்களின் கூட்டத்தால் பிரகாசிக்கும் உயர்ந்த கிரீடத்தை அணிந்தவரும்., மிகவும் அழகாக இருக்கும் சிவப்பு நிறமான இரண்டு பட்டாடைகள் அணிந்து சிறப்பிக்கப்பட்ட காந்தியை உடையவரும், எங்கும் (தன்னை) நினைத்த மாத்திரத்திலேயே மங்களத்தைச் செய்பவர் என்று பெயர் பெற்றவரும் ஆகிய சித்தி விநாயகரே! எனத விக்கினங்களைப் போக்கி எனக்கு அருள் புரியுங்கள்.

தேவாந்தகாத்யஸூரபீத ஸூரார்த்திஹர்த்தா விஞ்ஞான போதந வரேண தமோபஹர்த்தா!
ஆனந்தித த்ரிபுவனேச குமார பந்தோ விக்னம் மமாபஹர ஸித்தி விநாயக த்வம்!!

8. தேவாந்தகன் முதலான அரக்கர்களால் தேவர்களுக்கு ஏற்பட்ட பயத்தையும், துயரத்தையும் நீக்கியவரே! சிறந்த ஆத்மஞானத்தை வழங்கி அஞ்ஞான இருளை அழிப்பவரே! மூன்று உலகிற்கும் தலைவனான முருகப்பெருமானையும் மகழ்வித்தவரே! சித்தி விநாயகரே! எனது விக்கினங்களை நீக்கி எனக்கு அருள் புரியுங்கள்.

## சிவபஞ்சாட்சர ஸ்தோத்திரம்

நாகேந்த்ரஹாராய த்ரிலோசனாய பஸ்மாங்கராகாய மஹேச்வராய!
நித்யாய சுத்தாய திகம்பராய தஸ்மை நகாராய நம: சிவாய!!

1. கழுத்தில் பாம்பை மாலையாக அணிந்தவரும், மூன்று கண்களை உடையவரும், உடல் முழுவதும் திருநீறு பூசியவரும், திசைகளையே ஆடையா உடையவரும், அழிவற்றவரும், தூய்மையானவரும் ஆகிய 'ந' என்ற எழுத்து வடிவமான அந்த சிவபெருமானுக்கு வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்தாகினீ - ஸலிலசந்தன - சர்ச்சிதாய நந்தீச்வர - ப்ரமதநாத - மஹேச்வராய!
மந்தாரமுக்ய - பஹுபுஷ்ப - ஸுபூஜிதாய தஸ்மை மகார - மஹிதாய நம: சிவாய!!

2. கங்கை நீராலும் சந்தனத்தாலும் அபிஷேகம் செய்து, மந்தாரபுஷ்பம் போன்ற பல மலர்களாலும் அர்ச்சிக்கப்படுபவரும், நந்தீஸ்வரர் முதலிய பூதகணங்களுக்கு அதிபதியானவரும், மகேஸ்வரருமாகிய 'ம' என்ற எழுத்து வடிவமான அந்த சிவபெருமானுக்கு வணக்கம்.

சிவாய கௌரீவதனாப்ஜ - ப்ருந்த - ஸூர்யாய தக்ஷாத்வர - நாசகாய!
ஸ்ரீ நீலகண்டாய வ்ருஷத்வஜாய தஸ்மை சிகாராய நம: சிவாய!!

3. மங்களமே வடிவமானவரும், பார்வதியின் தாமரை போன்ற முகத்தை மலரச் செய்யும் சூரியன் போன்வரும், தட்சனின் யாகத்தை அழித்தவரும், ரிஷபக்கொடியை உடையவரும், நீலநிறம் கொண்ட கழுத்துடன் பிரகாசிப்பவரும் ஆகிய 'சி' என்ற எழுத்து வடிவமான அந்த சிவபெருமானுக்கு வணக்கம்.

வஸிஷ்ட - கும்போத்பவ - கௌதமார்ய முனீந்த்ர - தேவார்ச்சித - சேகராய!
சந்த்ரார்க்க - வைச்வாநா - லோசனாய தஸ்மை வகாராய நம: சிவாய !

4. வசிஷ்டர், அகஸ்தியர், கௌதமர் போன்ற சிறந்த முனிவர்காளலும்; இந்திரன் முதலிய தேவர்களாலும் பூஜீக்கப்பட்ட சிரஸை உயைவரும்; சந்திரன், சூரியன் அக்கினி ஆகியவர்களைக் கண்களாக உடையவருமாகிய 'வ' என்ற எழுத்து வடிவமான சிவபெருமானுக்கு வணக்கம்.

யக்ஷ ஸ்வரூபாய ஜடாதராய பிநாகஹஸ்தாய ஸநாதனாய!
திவ்யாய தேவாய திகம்பராய தஸ்மை யகாராய நம: சிவாய!!

5. யட்ச வடிவம் எடுத்துக்கொண்டுவரும், தலையில் ஜடையைத் தரித்தவரும், கையில் பினாகம் என்ற வில்லை வைத்திருப்பவரும், பழமையானவரும், பிரகாசமானவரும், தேவலோகத்தில் இருப்பவரும், திசைகளை ஆடையாகக் கொண்டவரும் ஆகிய 'ய' என்ற எழுத்து வடிவமான சிவபெருமானுக்கு வணக்கம்.

பஞ்சாக்ஷர - மிதம்புண்யம் ய: படேச் சிவ ஸந்நிதௌ!
சிவலோக - மவாப்நோதி சிவேன ஸஹ மோததே!!

சிவபெருமானின் சந்நிதியில் எவன் ஒருவன் இந்தப் புண்ணியம் தரவல்ல பஞ்சாட்சர ஸ்தோத்திரத்தை ஓதுகிறானோ, அவன் சிவலோகத்தை அடைந்து சிவனுடன் சேர்ந்து ஆனந்தத்தை அடைவான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ புஜங்கம்

களத்தாநகண்டம் மிளத்ப்ருங்கஷண்டம்
சலச்சாருசுண்டம் ஜகத்ராணசெளண்டம்!
லஸத்தந்தகாண்டம் விபத்பங்கசண்டம்
சிவப்ரேமபிண்டம் பஜே வக்ரதுண்டம்!!

1. கன்னத்தில் மதஜலப் பெருக்குள்ளவரும், வண்டுக் கூட்டத்தால் சூழப்பட்டவரும், அசையும் அழகான துதிக்கையுள்ளவரும், உலகைக் காப்பவரும், அழகான தந்தம் உள்ளவரும், ஆபத்தைப் போக்குபவரும் சிவனது அன்புக்குப் பாத்திரமானவருமான வக்கிரதுண்ட கணபதியைப் பூஜிக்கிறேன்.

அநாத்யந்தமாத்யம் பரம் தத்த்வமர்த்தம் சிதாகாரமேகம் துரீயம் த்வமேயம்!
ஹரிப்ரஹ்மம்ருக்யம் பரப்ரஹ்மரூபம் மநோவாகதீதம் மஹ: சைவமீடே!!

2. ஆதி அந்தமற்றதும், முதலானதும் சிறந்ததும், தத்துவார்த்தமும் சித்ரூபமும் ஒன்றானதும், துரீய மூர்த்தியும், அறிய முடியாததும், அரியும் அயனும் தேடத்தக்கதும், பரப்பிரம்ம வடிவமும், மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாததுமான சிவ ஜ்யோதிஸ்ஸைத் துதிக்கிறேன்.

ஸ்வசக்த்யாதிசக்த்யந்தஸிம்ஹாஸநஸ்தம் மநோஹாரிஸர்வாங்கரத்நாதிபூஷம்!
ஜடாஹீந்துகங்காஸ் திசச்யர்க்கமெளளிம் பரம் சக்திமித்ரம் நும: பஞ்சவக்த்ரம்!!

3. ஆத்மசக்திமுதல் பராசக்திவரையுள்ள சிம்மாசனத்தில் இருப்பவரும், அழகான ரத்தினாபரணம் அணிந்தவரும், ஜடை பாம்பு எலும்பு கங்கை சந்திரன் சூரியர்கள் ஆகியவர்களைத் தலையாபரணமாகக் கொண்டவரும், சிறந்தவரும், சக்தியுடன் கூடியவருமான ஐந்து முகம் உள்ள சிவனை வணங்குகின்றேன்.

சிவேசாநதத்பூருஷாகோரவாமாதிபிர் ப்ரஹ்மபிர் ஹ்ருந்முகை: ஷட்பிரங்கை;!
அநௌபம்யஷட்த்ரிம்சதம் தத்த்வவித்யாம் அதீதம் பரம் த்வாம் கதம் வேத்தி கோ வா!!

4. சிவம், ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம் என்ற ஐந்து முகங்களுடன், ஹ்ருல்லேகா முதலிய ஆறு அங்கங்களுடன் கூடியவரும், ஒப்பற்ற முப்பத்தாறு தத்துவரூபமான தத்துவ வித்யாதீதமானவருமான உங்களை எப்படி யார் அறிவார்?

ப்ரவாளப்ரவாஹப்ரபாசோணமர்தம் கருத்மந்மணிஸ்ரீமஹச்சயாமமர்தம்!
குணஸ்யூதமேகம் வபுச்சைகமேதத் ஸ்மராமி ஸ்மராபத்திஸம்பத்திஹேதும்!!

5. பவழப் பிரவாகம் போன்ற காந்தியுள்ள பாதியும், கருடப்பச்சை போன்ற காந்தியுள்ள பாதியும், ஆனால் குணத்தாலும் உடலாலும் ஒன்றாக இருப்பதும், மன்மதனது ஆபத்துக்கும் சம்பந்துக்கும் காரணமுமான அர்த்தநாரீச்வர தத்துவத்தை ஸ்மரிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்வஸேவாஸமாயாததேவாஸுரேந்த்ரா நமந்மௌளிமந்தாரமாலாபிஷிக்தம்!
நமஸ்யாமி சம்போ பதாம்போருஹம் தே பவாம்போதிபோதம் பவாநீவிபாவ்யம்!!

6. சம்போ! தனது சேவைக்காக வந்த தேவாசுரர்களின் கிரீடங்களால் அபிஷகம் செய்யப்பட்டதும், சம்சாரக் கடலுக்குத் தோணி போன்றதும், பவானினால் பூஜிக்கப்பட்டதுமான உங்கள் பாதகமலங்களை நமஸ்கரிக்கிறேன்.

ஜகந்நாத மந்நாத கௌரீஸநாத ப்ரபந்நாநுகம்பிந் விபந்நார்த்திஹாரிந்!
மஹஸ்தோமமூர்த்தே ஸமஸ்தைகபந்தோ நமஸ்தே நமஸ்தே புநஸ்தே நமோஸ்து!!

7. ஜகந்நாதா! என் நாதா! கௌரியுடன் கூடியவரே! சரணமடைந்தவர்களிடம் தயையுள்ளவரே! துன்பமடைந்தவர்களின் துன்பத்தை அகற்றுபவரே! ஜோதி சுவரூபியே! எல்லோருக்கும் முக்கிய பந்துவே! உங்களுக்குப் பல முறை நமஸ்காரம்.

மஹாதேவ தேவேச தேவாதிதேவ ஸ்மராரே புராரே யமாரே ஹரேதி!
ப்ருவாண ஸ்மரிஷ்யாமி பக்த்யா பவந்தம் ததோ மே தயாசீல தேவ ப்ரஸீத!!

8. "மகாதேவா! தேவேசா! தேவாதிதேவா! ஸ்மராரே! புராரே! யமாரே! ஹர" என்று சொல்லிக்கொண்டு பக்தியுடன் உங்களை நினைக்கிறேன். ஆதலால் தயை நிறைந்த தாங்கள் என் மீது தயை புரியுங்கள்.

விருபாக்ஷ விச்வேச வித்யாதிகேச த்ரயீமூல சம்போ சிவ த்ர்யம்பக த்வம்!
ப்ரஸீத ஸ்மர த்ராஹி பச்யாவ புஷ்ய க்ஷமஸ்வாப்நுஹீதி க்ஷபா ஹி க்ஷிபாம:!!

9. நெற்றிக் கண்ணுள்ளவரே! விஸ்வேசா! வித்யைகளுக்கு ஈசா! வேதத்திற்கு மூலமானவரே! சம்போசிவா! முக்கண்ணா! என் மீது தயை செய்யுங்கள் என்னை நினையுங்கள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்ப்போம். புண்ணியசீலனே! 'என்னை மன்னியுங்கள், என்னை அடை' என்று கூறி இரவைக் கழிப்போம்.

த்வதந்ய சரண்ய: ப்ரபந்நஸ்ய நேதி ப்ரஸீத ஸ்மரந்நேவ ஹந்யாஸ்து தைந்யம்!
ந சேத் தே பவேத் பக்தவாத்ஸல்யஹாநிஸ் ததோமே தயாலோ தயாம் ஸந்நிதேஹி!!

10. சரணாகதியடைந்தவனுக்கு உங்களைத் தவிர காப்பாற்றுபவர்வேறுயாரும் இல்லை என்று நினைத்தாலே ஏழ்மையைப் போக்குகிறீர்கள். இல்லாவிட்டால் பக்தரிடம்ட அன்புள்ளவன் என்ற உங்கள் பெயருக்குக் குறைவு ஏற்படும். தயையுள்ளவரே! என்னிடம் தயை செய்யுங்கள்.

அயம் தாநகாலஸ் த்வஹம் தாநபாத்ரம் பவாந் நாத தாதா த்வதந்யம் ந யாசே!
பவத்பக்திமேவ ஸ்திராம் தேஹி மஹ்யம் க்ருபாசீல சம்போ க்ருதார்த்தோஸ்மி தஸ்மாத்!!

11. தயையுள்ள சம்போ! இதுதான் சரியான நேரம். நான் தானம் பெறுவதற்கு உரிய பாத்திரம். தாங்கள் தானம் வழங்குபவர். உங்களைத் தவிர வேறு எவரையும் நான் யாசிக்கவில்லை. எனக்கு உங்கள் மீது ஸ்திரமான பக்தியைத் தந்தருளுங்கள். அதனாலேயே நான் உயர்ந்தவன் (கிருதார்த்தன்) ஆவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசும் வேத்ஸி சேந் மாம் த்வமேவாதிருடம் கலங்கீதி வாமூர்த்நி தத்ஸே த்வமேவ!
த்விஜிஹ்வ: புந: ஸோபி தே கண்டபூஷா த்வதங்கீக்ருதா: சர்வ ஸர்வேபி தந்யா:!!

12. என்னை மிருகம் என்று நினைத்தால் நீங்கள் காளை மீது ஏறியிருக்கிறீர்களே! குற்றமுள்ளவன் என்றால் நீங்களெ தலைமீது களங்கமுள்ள சந்திரனை வைத்திருக்கிறீர்களே! இரண்டு நாவுள்ளவன் என்றால் உங்களுடைய கழுத்தில் மாலையாக இங்குள்ள பாம்புதான் இருக்கிறது. உங்களால் அங்கீகரிக்கப்பெற்ற எல்லோருமே மேன்மை பெற்றவர்கள்.

ந சக்நோமி கர்த்தும் பரத்ரோஹலேசம் கதம் ப்ரீயஸே த்வம் ந ஜாநே கிரீச!
ததாஹி ப்ரஸந்நோஸி கஸ்யாபி காந்தா- ஸுதத்ரோஹிணோ வா பித்ருத்ரோஹிணோ - வா!!

13. கிரீசா! பிறருக்குச் சிறிதும் துரோகம் செய்ய என்னால் முடியாது. நீங்கள் எப்படி சந்தோஷப்படுவீர்களோ எனக்குத் தெரியாது. மனைவிக்கும் பிள்ளைக்கும் பிதாவுக்கும் துரோகம் செய்தவருக்கு நீங்கள் அருள் புரிந்தீர்கள் அல்லவா?

ஸ்துதிம் த்யாநமர்ச்சாம் யதாவத் விதாதும் பஜந்நப்யஜாநந் மஹேசாவலம்பே!
த்ரஸந்தம் ஸுதம் த்ராதுமக்ரே ம்ருகண்டோர் - யமப்ராணநிர்வாபணம் த்வத்பதாப்ஜம்!!

14. ஸ்துதி - தியானம் - பூஜை இவற்றை விதிமுறைப்படி செய்யவும். உங்களைப் பூஜிக்கவும் தெரியாமல் உங்களை அடைந்தேன். பயந்து மிருகண்டு புத்திரன் மார்க் கண்டேயனைக் காப்பாற்ற உங்கள் பாதம் யமனது உயிரைப் போக்கவில்லையா?

அகண்டே களங்காத் அநங்கே புஜங்காத் அபாணௌ கபாலாதபாலே அநலாக்ஷாத்!
அமௌளௌ சசாங்காத் அவாமே களத்ராத் அஹம் தேவமந்யம் ந மந்யே ந மந்யே!!

15. கழுத்தில் கறுப்பில்லாதவரும், உடலில் பாம்பில்லாதவரும், கையில் கபாலமில்லாதவரும், நெற்றியில் கண்ணில்லாதவரும், தலையில் சந்திரனில்லாதவரும், இடப்பக்கம் பத்தினி இல்லாதவருமான தெய்வத்தை நான் நினைக்கவே மாட்டேன்.

# பன்னிரு ஜோதிர்லிங்க ஸ்தோத்திரம்

ஸௌராஷ்ட்ரதேஸே விஸதேதிரம்யே ஜ்யோதிர்மயம் சந்த்ரகலாவதம்ஸம்!
பக்திப்ரதானாய க்ருபாவதீர்ணம் தம் ஸோமநாதம் ஸரணம் ப்ரபத்யே!!

1. புனிதமும் அழகும் நிறைந்த ஸௌராஷ்டிர தேசத்தில், ஜோதி மயமாக இருப்பவரும், பிறைச் சந்திரனைத் தலையில் சூடியவரம், எல்லையற்ற கருணை காரணமாக எல்லோருக்கும் பக்தியை அளிப்பதற்காவே அவதாரம் செய்தவரும் ஆகிய சோமநாதர் என்ற சிவலிங்கத்தைச் சரணடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீஸைலஸ்ருங்கே விபுதா திஸங்கே துலாத்ரி துங்கேபி முதா வஸந்தம்
தமர்ஜுனம் மல்லிகபூர்வமேகம் நமாமி ஸம்ஸார ஸமுத்ர ஸேதும்!!

2. மிகவும் உயர்ந்த ஸ்ரீசைலம் என்ற மலையில், அறிஞர்களின் சத்சங்கத்தில் மிகவும் மகிழ்ச்சியோடு வசிப்பவரும், சம்சாரம் என்னும் பெரும்கடலைக் கடப்பதற்கு உதவும் அணைபோன்றவருமாகிய மல்லிகார்ஜுனர் என்ற சிவலிங்கத்தை வணங்குகிறேன்.

அவந்திகாயாம் விஹிதாவதாரம் முக்திப்ரதானாய ச ஸஜ்ஜனானாம்!
அகாலம்ருத்யோ: பரிரக்ஷணார்த்தம் வந்தே மஹாகால மஹாஸுரேஸம்!!

3. நல்லவர்களுக்கு முக்தி அளிப்பதற்காக அவந்திகா (உஜ்ஜைனி) நகரத்தில் அவதாரம் செய்தவரும், தேவர்களுக்குத் தலைவனுமாகிய மகாகாலேஸ்வரர் என்ற சிவலிங்கத்தை, எனக்கு அகால மரணம் நேராமல் இருக்கும் பொருட்டு வணங்குகிறேன்.

காவேரிகாநர்மதயோ: பவித்ரே ஸமாகமே ஸஜ்ஜனதாரணாய!
ஸதைவ மாந்தாத்ருபுரே வஸந்தம் ஓம்காரமீஸம் ஸிவமேகமீடே!!

4. நர்மதை நதி இருக்கும் தூய்மையான இடத்தில், நல்லவர்களைக் காப்பாற்றுவதற்காக எப்போதும் மாந்தாத்ரு என்ற ஊரில் வசிப்பவரும், ஓங்காரேஸ்வரர் என்ற அத்விதீயருமான (இரண்டற்ற) சிவபெருமானை வணங்குகிறேன்!!

பூர்வோத்தரே ப்ரஜ்வலிகாநிதானே ஸதா வஸ்தம் கிரிஜா ஸமேதம்!
ஸுராஸுராராதிதபாதபத்மம் ஸ்ரீவைத்யநாதம் தமஹம் நமாமி!!

5. ஈசான (வடகிழக்குத்) திசையில் கொழுந்து விட்டெரியும் தீ ஜ்வாலை உள்ள மயானத்தில் வசிப்பவரும், எப்போதும் கிரிஜா என்ற பார்வதிதேவியுடன் சேர்ந்திருப்பவரும் தேவர்களாலும் அசுரர்களாலும் வணங்கப்பட்ட திருவடிகளை உடையவருமாகிய ஸ்ரீ வைத்தியநாதர் என்ற சிவலிங்கத்தை நான் வணங்குகிறேன்.

யாம்யே ஸதங்கே நகரேதிரம்யே விபூஷிதாங்கம் விவிதைஸ்ச போகை:!
ஸத்பத்தி முக்திப்ரதமீஸமேகம் ஸ்ரீநாகநாதம் ஸரணம் ப்ரபத்யே!!

6. தென்திசையில் மிகவும் அழகிய ஸதங்கம் என்ற நகரத்தில், நன்கு அலங்கரிக்கப்பட்ட அங்கங்களோடு நிகரற்ற செல்வங்கள் நிறைந்தவரும், உயர்ந்த பக்தியையும், முக்தியையும் வழங்கும் ஒரே தெய்வமாகத் திகழ்பவருமாகிய ஸ்ரீ நாகேஸ்வரர் என்ற சிவலிங்கத்தைச் சரணடைகிறேன்.

மஹாத்ரி பார்ஸ்வே ச தடே ரமந்தம் ஸம்பூஜ்யமானம் ஸ்ததம் முனீந்த்ரை!
ஸுராஸுரைர்யக்ஷ மஹோரகாத்யை: கேதாரமீஸம் ஸிவமேகமீடே!!

7. மேலான இமயமலையின் தாழ்வுப் பிரதேசத்தில் கேதாரம் என்ற இடத்தில் ஆனந்தமாகக் குடிகொண்டிருப்பவரும், எப்போதும் சிறந்த முனிவர்களாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களாலும் அசுரர்களாலும் யட்சர்களாலும், நாகர்காளலும் பூஜிக்கப்படுபவரும், கேதாரேஸ்வரர் என்று போற்றப்படும் அத்விதீயரான (இரண்டற்றவரான) கேதாரேஸ்வரர் என்ற சிவலிங்கத்தைத் துதிக்கிறேன்.

**ஸஹ்யாத்ரி ஸீர்ஷே விமலே வஸந்தம்கோதாவரீதீரபவித்ரதேஸே!**
**யத்தர்ஸநாத்பாதகமாஸு நாஸம் ப்ரயாதி தம் த்ரயம்பகமீஸமீடே!!**

8. புனிதமான ஸஹ்ய மலையில், பவித்ரமான கோதாவரி நதிக்கரையில் எழுந்தருளியிருக்கும் எவருடைய தரிசனத்தால் எல்லாப் பாவங்களும் விலகிவிடுகின்றனவோ, அந்தத் த்ரியம்பகேஸ்வரர் என்ற சிவலிங்கத்தைத் துதிக்கிறேன்.

**ஸுதாம்ரபர்ணீ ஜலராசியோகே நிபத்யஸேதும் விஸிகைரஸங்க்யை:!**
**ஸ்ரீராமசந்த்ரேண ஸமர்பிதம் தம் ராமேஸ்வராக்யம் நியதம் நமாமி!!**

9. தாமிரபரணி நதி கடலில் கலக்கும் இடத்தில் எண்ணற்ற அம்புகளைக் கொண்டு அணையைக் கட்டிய ஸ்ரீராமரால் பிரதிஷ்டை செய்து பூஜிக்கப்பட்ட ஸ்ரீ ராமேஸ்வரர் என்ற சிவலிங்கத்தை நான் முறைப்படி வணங்குகிறேன்.

**யம் டாகினீ ஸாகினிகாஸமாஜே நிஷேவ்யமாணம் பிஸிதாஸனைஸ் ச!**
**ஸதைவ பீமாதி பதப்ரஸித்தே தம் ஸங்கரம் பக்தஹிதம் நமாமி!!**

10. டாகினீ, சாகினீ முதலிய பூதகணங்கள் வசிக்கும் இடத்தில், அரக்கர்களால் வணங்கப்படுபவரும், என்றும் பீமேஸ்வரர் என்று புகழப்படுபவரும், என்றும் பக்தர்களுக்கு நன்மை செய்பவருமாகிய சங்கர பகவானுக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

**ஸானந்தமானந்தவனே வஸந்தம் ஆனந்தகந்தம் ஹதபாபவ்ருந்தம்!**
**வாராணஸீநாதமனாதநாதம் ஸ்ரீவிஸ்வநாதம் ஸ்ரணம் ப்ரபத்யே!!**

11. காசியில் ஆனந்தவனத்தில் பேரானந்தத்துடன் வசிப்பவரும், மகிழ்ச்சிக் குவியலாக விளங்குபவரும், பாவம் அகற்றுபவரும், வாராணசியின் தலைவரும், ஆதரவற்ற அநாதைகளுக்கு நாதனுமாகிய ஸ்ரீ விஸ்வநாதரைச் சரணடைகிறேன்.

**இலாபுரே ரம்யவிஸாலகேஸ்மின் ஸமுல்லஸந்தம் ச ஜகத்வரேண்யம்!**
**வந்தே மஹாதார தரஸ்வபாவம் க்ருஷாணேஸ்வராக்யம் ஸரணம் ப்ரபத்யே!!**

12. அழகாகவும் விசாலமாகவும் இருக்கும் இளாபுரம் என்ற இடத்தில் விளங்குபவரும், உலகம் முழுவதும் போற்றி வணங்குவதற்குரியவரும், பெருங்கருணையைத் தமது இயல்பாகக் கொண்டவரும், கிருஷ்ணஸ்வரர் (குசுருணேஸ்வரர்) என்ற பெயர் பெற்றவருமாகிய பரமேஸ்வரனைச் சரணடைகிறேன்.

**ஜ்யோதிர்மய த்வாதஸ லிங்ககானாம் ஸிவாத்மனாம் ப்ரோக்தமிதம் க்ரமேண!**
**ஸ்தோத்தரம் படித்வா மனுஜோதி பக்த்யா பலம் ததாலோக்ய நிஜம் பஜேச்ச!!**

13. (இந்த ஸ்தோத்திரத்தில்) சிவசொரூபங்களாக விளங்கும் பன்னிரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜ்யோதிர்லிங்கங்களும் முறையே வர்ணிக்கப்பட்டுள்ளன. மனிதன் ஆழ்ந்த பக்தி உணர்வோடு இதைப் படித்தும், இந்த சிவலிங்கங்களைத் தரிசித்தும், மிகவும் உயர்ந்த ஆன்மிக நன்மையை (ஆன்மிக வலிமையை) அடைவான்.

# ஸ்ரீருத்ராஷ்டகம்

**நமா மீசமீசான நிர்வாணரூபம் விபும் வ்யாபகம் பரஹ்ம வேதஸ்வரூபம்!**
**நிஜம் நிர்குணம் நிர்விகல்பம் நிரீஹம் சிதாகாசமாகாசவாஸம் பஜேஹம்!!**

1. மோட்ச ஸ்வரூபமானவரும், பிரம்ம ஸ்வரூபியும், வேத ஸ்வரூபியும், தன்னிலையிலேயே (பூரண ஞானத்திலேயே) நிலைத்திருப்பவரும், மூன்று; குணங்களைக் கொண்ட மாயையைக் கடந்தவரும், பேதமற்றவரும், ஆசையற்றவரும், உள்ளுணர்வேயாகிய ஆகாச ரூபமானவரும், ஆகாசத்தற்கே ஆடை போன்றவருமான ஈசுவரனை வணங்குகிறேன்.

**நிராகார மோங்கார மூலம் துரீயம் கிரா க்யான கோதீதமீசம் கிரீசம்!**
**கராலம் மஹாகால காலம் க்ருபாலம் குணாகார ஸம்ஸாரபாரம் நதோSஹம்!!**

2. உருவமற்றவரும், ஓங்காரத்திற்கே மூலமானவரும், விழிப்பு - கனவு - உறக்கம் என்ற மூன்று நிலைகளுக்கும் அப்பால் இருப்பவரும், வாக்கு - ஞானம் - புலன்களைக் கடந்தவரும், கயிலாசபதியும், பங்கரமான காலனுக்கு காலனாயினும் தயை வடிவமானவரம், எல்லா நற்குணங்களுக்கும் இருப்பிடமானவரும், பிறப்பு - இறப்புச் சுழலைக் கடந்தவரும் ஆகிய பரமேஸ்வரனுக்கு என் வணக்கம்.

**துஷாராத்ரி ஸங்காச கௌரம் கபீரம் மனோபூத கோடிப்ரபா ஸ்ரீ சரீரம்!**
**ஸ்புரன்மௌலி கல்லேலினீ சாரு கங்கா லஸத்பால பாலேந்து கண்டே புஜங்கா!!**

3. எந்த பரமேஸ்வரன் (பனி முடிய) இமயமலையைப் போல் வெண்மை நிறம் உடையவரோ, அந்த மலையைப் போலவே கம்பீரமான தோற்றமுடையவரோ, எவரது உடலில் கோடிக்கணக்கான காமதேவனின் ஜோதியும் எழிலும் விளங்குகிறதோ, எவருடைய சிரசில் அழகிய கங்கை பிரகாசிக்கிறாளோ, எவரது நெற்றியில் இரண்டாம் பிறைச் சந்திரனும் - கழுத்தில் பாம்பும் சேர்ந்திருக்கின்றனவோ (அந்த ஈசுவரனுக்கு வணக்கம்)

**சலத் குண்டலம் ப்ரு ஸு:நேத்ரம் விசாலம் ப்ரஸந்நாநன நீலகண்டம் தயாலம்!**
**ம்ருகாதீச சர்மாம்பரம் முண்டமாலம் ப்ரியம் சங்கரம் ஸர்வநாதம் பஜாமி!!**

4. எவருடைய காதுகளில் குண்டலங்கள் அசைந்து கொண்டிருக்கின்றனவோ, எவருடைய கண்களும் புருவங்களும் அழகாகவும் விசாலமாகவும் இருக்கின்றனவோ, எவர் சிரித்த முகமும் - நீலமான கழுத்தும் கொண்டு தயாளுாகவும் இருக்கிறாரோ, எவர் புலித்தோலை ஆடையாக அணிந்திருக்கிறாரோ, எவர் மண்டை ஓட்டை மாலையாக அணிந்திருக்கிறாரோ அந்த எல்லோருக்கும் பிரியமானவரும், யஜமானரும், மங்களம் செய்பவருமாகிய சங்கர பகவானை நான் வணங்குகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ரசண்டம் ப்க்ருஷ்ட்ம் ப்ரகல்பம் பரேசம் அகண்டம் அஜம் பானுகோடிப்ரகாசம்!
த்ரய: சூல நிர்மூலனம் சூலபாணிம் பஜேSஹம் பவானீப்திம் பாவகம்யம்!!

5. ருத்திர வடிவமானவரும், மிகவும் சிறந்தவரும், சிறந்த ஒளிபோல் பிரகாசிப்பவரும், பரமேஸ்வரரும், ஒன்றேயாகியவரும், பிறப்பற்றவரும், கோடி சூரியன்களின் பிரகாசத்தையுடையவரும், (உடல், இயற்கை, தேவதை ஆகியவற்றால் ஏற்படக் கூடிய) மூன்று விதமான துன்பங்களையும் நீக்குபவரும், கையில் சூலம் ஏந்தியவரும், பக்தியால் அடையப்படுபவரும், பவானியின் பதியுமாகிய பரமேஸ்வரனை வணங்குகிறேன்.

கலாதீத கல்யாண கல்பாந்தகாரீ ஸதா ஸஜ்ஜனானந்ததாதா புராரீ!
சிதானந்த ஸந்தோஹ மோஹாபஹாரீ ப்ரஸீத ப்ரபோ மன்மதாரீ!!

6. கலைகளுக்கெல்லாம் அப்பால் இருப்பவரும், மங்கள ஸ்வரூபமானவரும், கல்பத்தின் முடிவில் பிரளயத்தை ஏற்படுத்துபவரும், நல்லவர்களுக்கு எப்போதும் ஆனந்தத்தைக் கொடுப்பவரும், திரிபுரங்களை எரித்தவரும், சத் - சித் - ஆனந்த வடிவமாகவே இரப்பவரும், மோகத்தைப் போக்கடிப்பவரும், காமதேவனான மன்மதனை எரித்தவருமாகிய பிரபுவே! தங்களை வணங்குகிறேன்.

ந யாவத் உமாநாத பாதாரவிந்தம் பஜந்தீஹ லோகே பரே வா நராணாம்!
ந தாவத் ஸுகம் சாந்தி ஸந்தாபநாசம் ப்ரஸீத ப்ரபோ ஸர்வ பூதாதி வாஸம்!!

7. பார்வதிநாதனாகிய பரமேஸஸ்வரனின் பாதகமலங்களை எந்த மனிதன் வணங்காமலிருக்கிறானோ அவனுக்கு இந்த உலகில் சுகமும் கிடையாது; அமைதியும் கிடையாது; துக்க நிவிருத்தியும் கிடையாது. ஆதலால் எல்லா உயிர்களிலும் அந்தர்யாமியாக இருக்கும் பிரபுவே! ஈஸ்வரனே! மகிழ்ச்சியடைந்து உங்களை வணங்கும் எங்களைக் காப்பாற்றுவீர்களாக.

ந ஜானாமி யோகம் ஜபம் நைவ பூஜாம் நதோSஹம் ஸதா ஸர்வதா சம்பு துப்யம்!
ஜரா ஜன்ம துக்கௌக தாதப்யமானம் ப்ரபோ பாஹி ஆபன்மாமீச சம்போ!!

8. ஹே பிரபுவே! ஒரு வித யோகசாதனையும் நான் அறியேன்; ஜபமோ, பூஜையோ நான் செய்யவில்லை. ஆனால் சதா சர்வ காலமும் ஹே சம்புவே! உங்களையே வணங்கிக் கொண்டிருக்கிறேன். மூப்பு, பிறப்பு, கூட்டம் கூட்டமாக வரும் துக்கம் ஆகியவற்றால் தவித்துக்கொண்டிருக்கும் என்னைக் காப்பாற்றுங்கள். நான் தங்களையே சரணடைந்தேன். சம்போ!

ருத்ராஷ்டகமிதம் ப்ரோக்தம் விப்ரேண ஹரதோஷயே!
யே படந்தி நரா பக்த்யா தேஷாம் சம்பு: ப்ரஸீததி!!

9. பகவான் ருத்திரரைத் துதிக்கும் இந்த ஸ்தோத்திரத்தை எந்த மனிதன் பக்தியுடன் படிக்கிறானோ, அவனிடம் பகவான் சம்பு சந்தோஷமடைந்து அவனைக் காப்பாற்றுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மார்க்கபந்து பஞ்சரத்ன மாலா

மகான் அப்பைய தீட்சிதர் இயற்றிய ஸ்தோத்திரம் இது. ஒப்பற்ற கல்வி, நல்லொழுக்கங்கள், தவம் ஆகியவற்றில் சிறந்து விளங்கிய ஸ்ரீமத் அப்பைய தீட்சிதர்மீத பிற மதஸ்தர்கள் சிலர் பொறாமை கொண்டார்கள்.

ஆதலால் அவர்கள் அப்பைய தீட்சிதரின் உடலுக்கு ஆபத்து விளைவிக்கக் கருதினார்கள்.

எனவே அவர்கள் தீட்சிதர் செல்லும் நடுவிழயில் அவருக்கு ஆபத்து ஏற்படுத்தும் பொருட்டுக் கொடியவர்கள் சிலரை ஏவினார்கள்.

சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் மாலை வழிபாட்டிற்காகத் தீட்சிதர் நதிக்குச் சென்றார். அப்போது நேர்ந்த துர்நிமித்தங்களைக் கொண்டு தீட்சிதர், வழியில் கொடியவர்கள் சிலர் தம்மை மடக்கித் தாக்குவதற்குத் தயாராகக் காத்திருப்பதை உணர்ந்து கொண்டார்.

இந்தத் துன்பத்திலிருந்து தம்மைக் காப்பாற்றும்படி பின்வரும் ஐந்து சுலோகங்களால் அவர் சிவபெருமானைப் பிரார்த்தித்தார்.

சிவபெருமான, தீட்சிதரின் பிரார்த்தனைக்கு இணங்கி மார்க்கசகாயனாக வந்து கொடியவர்களை விரட்டியடித்து மறைந்தார்.

இந்த சுலோகங்களைக் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுத்து தினமும் பாராயணம் செய்யும்படி செய்தால் எந்தவிதமான பயமும் உண்டாகாது.

நித்யம் சிதாநந்தருபம் நிஹ்நு தாசேஷலோகேசவைரிப்ரதாபம்!
**கார்த்தஸ்வராகேந்த்ரசாபம் க்ருத்திவாஸம் பஜே திவ்யஸந்மார்கபந்தும்!!**
**சம்போ மஹாதேவ தேவ, சம்பொ மஹாதேவ தேவேச சம்போ!**

1. எப்போதும் இருப்பவரும், ஞானரூபமாகவும் ஆனந்தரூபமாகவும் இந்திரன் முதலிய லோகபாலகர்களுடைய சத்துருக்களுக்கு உண்டான மேன்மையை அடக்குபவரும், மேருமலையை வில்லாகக் கொண்டவரும், யானைத் தோலை ஆடையாகக் கொண்டவருமான திவ்ய சன்மார்க்கபந்துப் பெருமானைச் சரணடைகிறேன்.

சம்புவே மகாதேவனே தேவனே, சம்புவே மகாதேவனே! தேவர்களுக்குத் தலைவனே சம்புவே!

**அங்கே விராஜத்புஜங்கம், அப்ரகங்காதரங்காபிராமோத்தமாங்கம்!**
**ஹ்ரீம்காரவாடீகுரங்கம், ஸித்தஸம்ஸேவிதாங்க்ரிம் பஜே மார்கபந்தும்!!**
**சம்போ மஹோதேவ தேவ, சம்போ மஹாதேவ தேவேச சம்போ!**

2. உடலில் மிளிர்கிற பாம்புகளை உடையவரும், ஆகாசகங்கையின் அலைகளால் அழகு வாய்ந்த தலையையுடையவரும், ஹ்ரீங்காரம் என்ற தோட்டத்தில் மான் போன்றவரும். சித்தர்களால் வணங்கப்பெறும் பாதங்களையுடையவருமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கபந்துப் பெருமானைச் சரணடைகிறேன்.

**மந்தாரபூதேருதாரம் மந்தராகேந்த்ரஸாரம் மஹாகௌர்யதூரம்!**
**ஸிந்தூரகௌரப்ரசாரம் ஸிந்து ராஜாதிதீரம் பஜே மார்கபந்தும்!!**
**சம்போ மஹாதேவ தேவ, சம்போ மஹாதேவ தேவேச சம்போ!**

3. மந்தாரம் என்ற மரத்தைக் காட்டிலும் அதிகமாகக் கொடுப்பவரும், மந்தாரம் என்ற உயர்ந்த மலைக்குள்ள பலத்த உடையவரும், பெருமையுள்ள பார்வதிதேவியின் பக்கத்தில் இருப்பவரும், பெரிய எருதின் மீத நீண்ட தூரம் சஞ்சரிப்பவரும், சமுத்திரராஜனைக் காட்டிலும் மிகவும் தைரியமுடையவருமான மார்க்கபந்துப் பெருமானைச் சரணடைகிறேன்.

**கந்தர்ப்பதர்ப்பக்நமீசம் காலகண்டம் மஹேசம் மஹோவ்யோமகேசம்!**
**குந்தாபதந்தம் ஸுரேசம் கோடிஸூர்யப்ரகாசம் பஜே மார்கபந்தும்!!**
**சம்போ மஹாதேவ தேவ, சம்போ மஹாதேவ தேவேச சம்போ!**

4. மன்மதனின் கர்வத்தை அடக்கியவரும், உலகத்தை ஆளுபவரும், கறுத்த கழுத்தையுடையவரும், மகேஸ்வரரும், பெரிய ஆகாயத்தைத் தலைமுடியாகக் கொண்டவரும், ஜாதிமலிகைப்பூவின் வர்ணம் போன்ற பற்களையுடையவரும், தேவர்களுக்குத் தலைவரும், கோடி சூரியர்களுடைய ஒளி வாய்ந்தவருமான மார்கக் பந்துப் பெருமானைச் சரணடைகிறேன்.

**பாலப்ரதீவ்யத்கிரீடம் பாலநேத்ரார்ச்சிஷா தக்தபுஷ்பேஷுகீடம்!**
**சூலாஹதாராதிகூடம் சுத்தமர்தேந்துசூடம் பஜே மார்கபந்தம்!!**
**சம்போ மஹாதேவ தேவ, சம்போ மஹாதேவ தேவேச சம்போ!**

5. நெற்றியின்மேல் படிந்த கிரீடத்தை உடையவரும், நெற்றிக்கண்ணின் ஜ்வாலையினால் மன்மதன் என்ற புழுவை எரித்தவரும், சூலம் என்ற ஆயுதத்தினால் சத்துருக் கூட்டங்களை அழித்தவரும், பரிசுத்தமானவரும், பாதிச் சந்திரனைத் தலையில் குடியிருப்பவருமான மார்க்கபந்துப் பெருமானைச் சரணடைகிறேன்.

**அப்பய்யமகிவர்யரசிதம் பஞ்சரத்நஸ்தவம் மார்கபந்தோருதாரம்!**
**நித்யம் படேத் யஸ்து பக்த்யா தஸ்ய முக்தி: கரஸ்தைவ ஸாயுஜ்யரூபம்!!**
**சம்போ மஹாதேவ தேவ, சம்போ மஹாதேவ தேவேச சம்போ!**

அப்பைய தீட்சிதரால் செய்யப்பட்டதும், விரும்பிய எல்லாவற்றையும் கொடுப்பதும், மார்க்கபந்துப் பெருமானுடையதுமான இந்த ஐந்து ரத்தினங்கள் கொண்ட ஸ்தோத்திரத்தை எவர் பக்தியுடன் நாள்தோறும் பாராயணம் செய்கிறாரோ, அவருக்குப் பெருமானுடன் ஐக்கிருபமான முக்தி கையில் இருப்பதாகவே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஆத்ம வீரேஸ்வர ஸ்தோத்திரம்

ஸ்காந்த மகாபுரணத்தின் ஒரு பகுதியாக விளங்குவது காசி கண்டம். இந்தப் பகுதியில் காசி திருத்தலத்தின் மகிமை கூறப்படுகிறது.

'காசி கண்டம்' பகுதியில் இந்த ஸ்ரீ ஆத்ம வீரேஸ்வர ஸ்தோத்திரம்' இடம் பெற்றுள்ளது.

காசியில் கங்கைக் கரையில் 'சிந்தியா காட்' என்ற இடத்தில் வீரேஸ்வரர் கோயில் இருக்கிறது. இந்த வீரேஸ்வரரிடம் தனக்கு ஒரு மகன் பிறக்க வேண்டும் என்று சுவாமி விவேகானந்தரின் தாய் புவனேஸ்வரிதேவி பிரார்த்தனை செய்தார்.

காசியில் எழுந்தருளியிருக்கும் இந்த வீரேஸ்வரரின் அருளால் பிறந்தவர் சுவாமி விவேகானந்தர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தியானம்

**விபூதி பூஷிதம் பாலம் அஷ்டவர்ஷாக்ருதிம் சிசும்!**
**ஆகர்ண பூர்ண நேத்ரம் ச ஸீரக்த தசனச்சதம்!!**

1. விபூதியால் அலங்கரிக்கப்பட்ட எட்டு வயதுள்ளவர் போன்ற உருவம், காது வரை நீண்ட கண்கள், நிர்மலமான பற்கள், சிவந்த உதடுகள்;

**சாரு பிங்கஜடா மௌலிம் நக்னம் ப்ரஹஸிதானனம்!**
**சைசவோசித நேபத்ய தாரிணம் சித்த ஹாரிணம்!!**

2. பழுப்பு (சற்று சிவந்த) நிறமுடைய ஜடாமுடி, ஆடைய எதுவும் அணியாதவர், சிரித்த முகம், இளமை பருவத்துக்கேற்ற அலங்காரங்கள். மனதைக் கவர்பவர்;

**படந்தம் ச்ருதி ஸூக்தானி ஹஸந்தம் ச லீலயா!**
**ஏவம் வீரேச்வரம் த்யாத்வா ஸ்தோத்திரமேதத் ஜபேந்நர:!!**

3. சுருதி - சூக்தங்கள் போன்ற அருள் நூல்களைப் படித்துக்கொண்டிருப்பவர், தனது லீலைகளால் சிரித்துக் கொண்டேயிருப்பவர் என்று வீரேஸ்வரரை இவ்விதம் தியானித்து இந்த ஸ்தோத்திரத்தை ஜபம் செய்ய வேண்டும்.

## ஸ்தோத்ரம்

**ஏகம் ப்ரஹ்மைவா Sத்விதீயம் ஸமஸ்தம் ஸத்யம் நேஹநாநாஸ்தி கிஞ்சித்!**
**ஏகோ ருத்ரோ ந த்விதீயோS வதஸ்தே தஸ்மாதேகம் த்வாம் ப்ரபத்யே மஹேசம்!!**

1. இரண்டற்ற ஒன்றேயாகிய பரபிரம்மம் நீ. பஞ்ச பூதங்களுக்கெல்லாம் மேலான உண்மை நீ. உன்னிடம் சிறிதும் வேற்றுமையில்லை. நீ ஒருவன் தான் ருத்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைத்தவிர வேறொருவன் இல்லை. ஆகையால் ஒன்றேயாகிய மகேஸ்வரனான உன்னை நான் சரணடைகிறேன்.

**ஏக: கர்த்தா த்வம் ஹி ஸர்வஸ்ய சம்போ நாநாரூபேஷு ஏக ரூபோSஸ்ய ரூப:!**
**யத்வத் ப்ரத்யம்ப்வர்க்க ஏகோSபி அநேக: தஸ்மாந்நாண்யம் த்வாம் விநேசம் ப்ரபத்யே!!**

2. சம்போ! நீயே எல்லாவற்றையும் உண்டாக்குபவனாக இருக்கிறாய். ஒரே சூரியன் தண்ணீரில் பிரதிபலிக்கும்போது எப்படி பல சூரியன்களாகக் காணப்படுகிறதோ, அது போலவே நீ ஒருவனே பல்வேறு உருவங்களில் காணப்படுகிறாய்.

**ரஜ்ஜௌ ஸர்ப்ப: சுக்திகாயாம் ச ரௌப்யம் நைர: பூர: ஸ்தன்ம்ருகாக்யே மரீசௌ!**
**யத்வத் தத்வத் விஷ்வகேஷ ப்ரபஞ்சோ யஸ்மிந் ஞாதே தம் ப்ரபத்யே மஹேசம்!!**

3. 'எப்படி கயிற்றில் காணும் பாம்பு உண்மையற்ற தோற்றமோ. கிளிஞ்சலில் காணும் முத்தும் உண்மையற்றதோ. கானல் நீர் உண்மையற்றதோ, அது போலவே இந்தப் பிரபஞ்சம் முழுவதும் உண்மையற்றது (மித்யை) என்று எவரிடமிருந்து அறியப்படுகிறதோ, அந்த மகேஸ்வரனை நான் சரணடைகிறேன்.

**தோயே சைத்யம் தாஹகத்வம் ச வஹ்னௌ தபோ பாநௌ சீத பாநௌ ப்ரஸாத:!**
**புஷ்பே க்தோ துக்த மத்யேச ஸர்ப்பி: யத்தத் சம்போ த்வம் ததஸ்த்வாம் ப்ரபத்யே!!**

4. நீரின் குளுமையும் நீயே, நெருப்பின் சுடும் தன்மையும் நீயே, சூரியனின் ஒளியும் நீயே, மலர்களின் நறுமணமும் நீயே.

பாலிலிருந்து எவ்விதம் நெய் எடுக்கப்படுகிறதோ, அவையெல்லாம் சம்போ நீயேதான்! இவ்வாறு எல்லாவற்றிற்கும் ஆதாரமாக (ஆத்மாவாக) விளங்கும் உன்னை நான் சரணடைகிறேன்.

**சுத்தம் க்ருஹ்ணாஸ்யச்ரவா: ஸ்த்வம் ஹி ஜிக்ரேரக்ராண - ஸ்த்வம் வ்யங்க்ரி ராயாஸஸி - தூராத்!**
**வ்யக்ஷ: பச்யேத்வம் ரஸஜ்ஞோ Sப்யஜிஹ்வ: கஸ்த்வாம் ஸம்யக் வேத்யதஸ்த்வாம் ப்ரபத்யே!!**

5. காது இல்லாமல் நீ நன்றாகக் கேட்கிறாய், மூக்கு இல்லாமல் நீ முகர்கிறாய், கால்கள் இல்லாமல் நீ வெகுதூரம் செல்கிறாய், கண்ணில்லாமல் பார்க்கிறாய், நாக்கு இல்லாமல் சுவை அறிகிறாய், உன்னை யார்தான் நன்றாக அறிவார்? எவராலும் முழுமையாக அறிய இயலாதவனான உன்னை நான் சரணடைகிறேன்.

**நோவேதஸ்த்வாமீச! ஸாக்ஷாந்நஹி வேத நோவா விஷ்ணுர் நோவிதாதாSகிலஸ்ய!**
**நோ யோகீந்த்ரா நேந்த்ரமுக்யாச்ச தேவா: பக்தோ வேத த்வாமதஸ்த்வாம் ப்ரபத்யே!!**

6. ஈசனே! உன்னைப் பற்றிய உண்மையை நேரில் யாரும் அறிந்ததில்லை; விஷ்ணுவும் அறிந்ததில்லை; உலகம் முழுவதையும் சிருஷ்டிக்கும் பிரம்மாவும் அறிந்ததில்லை. உன் பக்தன் ஒருவன் தான் உன்னை அறிகிறான். ஆதலால் உன்னையே நான் சரணடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோ தே கேத்திரம் நாSபி ஜன்மாSபி நாக்யா நோவா ரூபம் நைவ சீலம் ந தேச:!
இத்தம் பூ தோஷபீச்வரஸ்த்வம் த்ரிலோக்யா: ஸர்வான் காமான் பூரயே ஸ்தத் பஜேத்வாம்!!

7. உனக்குக் கோத்திரம் இல்லை. பிறவியும் இல்லை. பெயரும் இல்லை, உருவமும் இல்லை, அழகும் இல்லை, ஓர் இருப்பிடமும் இல்லை. இப்படி இருந்தபோதிலும் ஈசுவரா! மூன்று உலகங்களிலும் இருப்பவர்களின் எல்லா ஆசைகளையும் நீ பூர்த்தி செய்துவிடுகிறாய். அத்தகைய உன்னை நான் வணங்குகிறேன்.

த்வத்த: ஸர்வம் த்வம் ஹி ஸர்வம் ஸ்மராரே த்வம் கௌரீச: த்வம் ச
- நக்னோஷதிசாந்த:!
த்வம் வை வ்ருத்த: த்வம் யுவா த்வம் ச பால: தத் கிம்யத்வம் பாஸ்யதஸ்த்வாம்
- நதோஷஸ்மி!!

8. எல்லாம் உன்னிடமிருந்தே உண்டாகின்றன. நீயே எல்லாமாகவும் இருக்கிறாய். மன்மதனை எரித்தவனே! கௌரியின் கணவனே! நீ ஆடை ஒன்றும் அணிவதில்லை. நீ பரமசாந்தன். நீ வயதில் முதிர்ந்தவன். இளைஞனும் நீயே. குழந்தையும் நீயே. நீ எந்த விதத்தில் வெளிப்பட்டாலும் (பிரகாசித்தாலும்) நான் உன்னை வணங்குகிறேன்.

# இந்திரக்ருத ஸ்ரீஜம்புகேச்வர ஸ்தோத்திரம்

இந்த்ர உவாச - இந்திரன் கூறுகிறான்:
லலாட லோசன ஜ்வாலா நிர்த்க்த ஸ்மரவிக்ரஹ!
நமஸ்தே கரிசம்மாத்வாஸஸே கருத்திவாஸஸே!!
நெற்றிக்கண்ணில் அக்னி ஜ்வாலையால், மன்மதனின் உடலைச் சாம்பலாக்கியவரே, யானைத் தோலைத் தரித்தவரே. அதனால் கிருத்திவாஸன் என்ற பெயருள்ள தங்களுக்கு நமஸ்காரம்.

யச்சார்மணேந பதத: சக்ஷுஷீ நீலலோஹித!
தத்தாம பவதோ நித்யம் ஸதா பச்யந்தி ஸூரய:!!
எந்த தங்களின் ஸ்வரூபத்தைப் புறக்கண்களால் பார்க்க முடியாதோ, அப்படிப்பட்ட தேஜோரூபியாகிய தங்களை, நித்திய முக்தர்கள் எப்போதும் ஞானக் கண்களால் தரிசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஸ்ருஷ்ட்யர்தம் ப்ரம்மரூபஸ்ஸன் ஸ்தித்யர்தம் ஜகதாமபி!
தவைவ ஹரநித்யோSயமாத்மா நாராயண: பர:!!
படைப்பதற்காக பிரம்மாவின் உருவாக இருந்து கொண்டும், ஓ பரமசிவனே! உலகங்களைக் காப்பதற்காகத் தங்களுடைய ஆத்மாவே அளிவற்ற ஸ்ரீமந் நாராயணரூபியாகவும் உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்ருதேச்வர பூதேச ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகாரண!
யத்தவ ஸ்தானமநகம் தத்விஷ்ணோ: பரமம் பதம்!!
ஜலமயமான லிங்கரூபியும், பூதங்களுக்கு ஈசனும், படைத்தல், காத்தல், அழித்தல் இம்மூன்றுக்கும் காரணமானவரான ஓ ஜம்புகேசா! குற்றமற்ற, எந்தவொரு தங்களுடைய ஸ்தானமுண்டோ, அதுவெ செல்ல வேண்டிய பரமபதமாகும்.

பக்தாந்த: கரணாம்போஜ விகாஸனகரத்விஷே!
அம்ருதேச நமஸ்தேSஸ்து ருத்ராய ஸ்திரதன்வநே!!
பக்தர்களின் மனமாகிற தாமரையை மலரச் செய்யும் ஒளியை உடையவரும், எதிரிகளை விரட்டுகின்றவரும், உறுதியான வில்லை உயைவருமான அமிருதேச்வரா! தங்களுக்கு நமஸ்காரம்.

ஜடாமகுட நிஷ்யந்த கங்கா ரிங்கத் ஸுதாம்சவே!!
நமோSம்ருத ஸ்வரூபாய லிங்காயாமல தேஜஸே!!
ஜடையாகிற மகுடத்திலிருந்து பெருகும் கங்கையின் வேகத்தைத் தடுக்கின்ற சந்திரனைத் தரித்தவரும், அம்ருதம் போன்ற உருவமுடையவரும், நிர்மலமான ஒளியுள்ளவரும், லிங்க ரூபியுமான ஜம்புகேச்வர! தங்களுக்கு வணக்கும்.
அமராதிப கோடீர நிர்க்ருஷ்டாங்க்ரி
ஸரோருஹ! ஸ்வபக்தஜநுஷே துப்யம் மஹஸே மஹதே நம:!!
தேவர் தலைவனான இந்திரனின் கிரீடத்தால் உரசப்பட்ட சரண கமலத்தை உடையவரே, பக்தர்களுக்காக லிங்கரூபியாய் ஆவிர்பவித்தவரே, மிகப் பெரிய ஜோதிரூபியான தங்களுக்கு நமஸ்காரம்.

தீவ்யத் ஸுரவதூ ஸீமந்தமணி ரச்மிபி:!
நீராஜிதபதாப்ஜாய தேவாய மஹதே நம:!!
திவ்வியமான தேவ, அசுரப் பெண்களின் சிரசில் உள்ள ரத்தினங்களின் ஒளியினால் தீபாராதனை செய்யப்பட்டபாத கமலங்களை உடையவருமான மஹாதேவருக்கு நமஸ்காரம்.

இதி ஸ்ரீபாத்தேயபுராணே கஜாரண்ய மாஹாத்ம்யே இந்த்ரக்ருத ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்! ஸ்ரீபத்ம புராணத்திலுள்ள இந்திரனால் செய்யப்பட்ட ஜம்புகேச்வர ஸ்தோத்திரம் முற்றிற்று.

# மஹா ம்ருத்யுஞ்ஜய ஸ்தோத்திரம்

## தியான சுலோகம்

சந்த்ரார்க்காக்னி விலோசனம் ஸ்மிதமுகம் பத்மத்வயாந்த ஸ்திதம்
முத்ரா பாச ம்ருகாக்ஷ ஸூரவிலஸத் பாணிம் ஹிமாம் சுப்ரபம்!
கோடீந்து ப்ரகலத் ஸுதாப்லுததனும் ஹாராதி பூஷோஜ்வலம்
காந்தம் விச்வ விமோஹனம் பசுபதிம் ம்ருத்யுஞ்ஜயம் பாவயேத்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன், சூரியன், அக்கினி ஆகியவர்களைக் கண்களாக உடையவரும், புன்சிரிப்புடன் திகழும் முகத்தை உடையவரும், தாமரையின் மத்தியில் அமர்ந்திருப்பவரும், கைகளில் (உபதேசிப்பதைக் குறிக்கும்) சின்முத்திரையைத் தாங்கியவரம், பாசம் (கயிறு), ருத்திராட்ச மாலை ஆகியவைகளால் பிராசிப்பவரும், சந்திரனைப் போன்று பிரகாசமள்ளவரும், கோடி சந்திர மண்டலங்களிலிருந்து பெருகும் அமிருதத்தால் நனைந்த உடலையுடையவரும், முத்துமாலை முதலிய அலங்காரத்தால் பிரகாசிப்பவரும், அழகானவரும், உலகத்தை உமயக்குபவரும், யமனை ஜயித்தவரும், ஆகிய பசுபதி என்று சொல்லப்படும் பரமசிவனை தியானம் செய்கிறேன்.

**ஓம், ருத்ரம் பசுபதிம், ஸ்தாணும் நீலகண்டமுமாபதிம்!**
**நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி!!**

1. ஓங்காரமே வடிவமானவரும், தீயவர்களை அழச் செய்பவரும், எல்லா உயிர்களுக்கும் தலைவரும் அழிவற்றவரும், நீலநிறம் வாய்ந்த கழுத்தையுடையவரும், பார்வதியின் பதியுமாகிய சிவபெருமானைக் கதியற்ற நான் தலையால் வணங்குகிறேன். எங்களை யமன் என்ன செய்ய முடியும்?

**காலகண்டம் காலமூர்த்திம் காலஞும் காலநாசனம்!**
**நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி!!**

2. விஷத்தைக் கழுத்தில் தரித்தவரும், காலமே வடிவமானவரும், காலத்தை அறிந்தவரும், யமனை அழித்தவருமாகிய சிவபெருமானைத் தலையால் வணங்குகிறேன். யமன் எங்களை என்ன செய்ய முடியும்.

**நீலகண்டம் விருபாக்ஷம் நிர்மலம் விமல ப்ரபம்!**
**நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி!!**

3. நீலநிற கழுத்தையுடையவரும், முக்கண்ணரும், தூய்மையானவரும். குற்றங்கள் எதுவுமின்றி பிரகாசிப்பவரும் ஆகிய சிவபெருமானைத் தலையால் வணங்கிறேன். யமன் எங்களை என்ன செய்ய முடியும்?

**வாமதேவம் மஹாதேவம் லோகநாதம் ஜகத்குரும்!**
**நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி!!**

4. அழகுடன் பிரகாசிப்பவரும், உலகத்திற்கெல்லாம் நாதனாக இருப்பவரும், உலக குருவும் ஆகிய மகாதேவனைத் தலையால் வணங்குகிறேன். யமன் எங்களை என்ன செய்ய முடியும்?

**தேவதேவம், ஜகந்நாதம், தேவேசம், வ்ருஷப்த்பஜம்!**
**நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி!!**

5. தேவர்களுக்குத் தெய்வமாக இருப்பவரும், உலகத்தைக் காப்பாற்றுபவரும், தேவர்களால் பூஜிக்கப்படுவரும், காளையை வாகனமாகக் கொண்டவரும் ஆகிய மகாதேவனைத் தலையால் வணங்குகிறேன். யமன் எங்களை என்ன செய்ய முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்காரம் மஹாதேவம் ஸர்வாபரண பூஷிதம்!
நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி!!

6. கங்கையைத் தலையில் வைத்திருப்பவரும், எல்லா விதமான ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவரும் ஆகிய மகாதேவனைத் தலையால் வணங்குகிறேன். யமன் எங்களை என்ன செய்ய முடியும்?

அநாத: பரமானந்தம் கைவல்ய பததாயினம்!
நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி!!

7. எல்லோருக்கும் தலைவரும், பரமானந்த சொரூபமாக இருப்பவரும், மோட்சமாகிய கைவல்யபதத்தை அளிப்பவரும் ஆகிய மகாதேவனைத் தலையால் வணங்குகிறேன். யமன் எங்களை என்ன செய்ய முடியும்?

ஸ்வர்க்காபவர்க்க தாதாரம் ஸ்ருஷ்டி ஸ்தித்யந்தகாரிணம்!
நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஷ்யதி!!

8. சொர்க்கத்தையும் மோட்சத்தையும் அளிப்பவரும், படைத்தல் காத்தல் அழித்தல் என்ற மூன்றுக்கும் காரணமானவருமகிய மகாதேவனைத் தலையால் வணங்குகிறேன். யமன் எங்களை என்ன எய்ய முடியும்?

உத்பத்தி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாரஞ்சேச்வரம் குரும்!
நமாமி சிரஸா தேவம் கிம் நோ ம்ருத்யு: கரிஸ்யதி!!

9. உலகை உண்டாக்கி, காப்பாற்றி, பின்னர் அழிப்பவரும். ஈசுவரனும், எல்லோருக்கும் குருவாக இருப்பவரும் ஆகிய மகாதேவனைத் தலையால் வணங்குகிறேன். யமன் எங்களை என்ன செய்ய முடியும்?

மார்க்கண்டேய க்ருதம் ஸ்தோத்ரம் யா: படேச்சிவஸந்நிதௌ!
தஸ்ய ம்ருத்யு பயம் நாஸ்தி நாக்னி சோரபயம் க்வசித்!!

10. மார்க்கண்டேய மகரிஷியால் செய்யப்பட்ட இந்த ஸ்தோத்திரத்தை சிவனின் சந்நிதியில் எவன் ஒருவன் படிக்கிறானோ அவனுக்கு யமனிடமிருந்து பயம் கிடையாது. அவனுக்கு நெருப்பாலும் திருடர்களாலும் ஏற்படக்கூடிய பயமும் ஒருபோதும் ஏற்படாது.

சதாவர்த்தம் ப்ரகர்த்தவ்யம் ஸங்கடே கஷ்ட நாசனம்!
சுசிர்பூத்வா படேஸ்தோத்ரம் ஸர்வஸித்தி ப்ரதாயகம்!!

11. இந்த ஸ்தோத்திரத்தை ஆபத்து காலத்தில் நூறுமுறை ஜபித்தால் கஷ்டங்கள் நீங்கிவிடும். இதைத் தூய்மையுடன் படிக்க வேண்டும். இந்த ஸ்தோத்திரம் எல்லா சித்தியையும் ஒருவனுக்குக் கொடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ த்ராஹி மாம் சரணாகதம்!
ஜன்ம ம்ருத்யு ஜராரோகை: பீடிதம் கர்மபந்தனை:!!

12. ஓ யமனை ஜயித்தவரே! மகாதேவனே! வினைப்பயன்களால் பிறப்பு, இறப்பு, முதுமை நோய் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டவனும், தங்களையே சரணமடைந்தவனும் ஆகிய என்னைக் காப்பாற்றுங்கள்.

தாவகஸ்த்வத் கத ப்ராண ஸ்த்வசித்தோSஹம் ஸதா ம்ருட!
இதி வஞாப்ய தேவேசம் த்ரயம்பகாக்யம்மனும் ஜபேத்!!

13. "ஓ சுகத்த அளிப்பவரே! நான் உங்களைச் சேர்ந்தவன். எனது உயிரையும் மனதையும் உங்களுக்கே அர்ப்பணம் செய்கிறேன். எப்பேதும் உங்கள் நினைவாகவே இருக்கிறேன்" என்று பரமேசுவரனிடம் பிரார்த்தனை செய்து 'த்ரயம்பகம்' என்ற மந்திரத்தை ஜபம் செய்யவேண்டும்.

நம: சிவாய ஸாம்பாய ஹராய பரமாத்மனே!
ப்ரணதக்லேச நாசாய யோகினாம் பதயே நம:!!

14. அன்னையாகிய பார்வதியுடன் இருப்பவரும், பாவங்களைப் போக்குபவரும், வணங்குபவர்களின் கவலையைப் போக்குபவரும். பரமாத்மாவும், ஞானிகளுக்குத் தலைவரும் ஆகிய பரமசிவனை வணங்குகிறேன்.

(மார்க்கண்டேய மகரிஷியால் செய்யப்பட்ட மஹா ம்ருத்யுஞ்ஜய ஸ்தோத்திரம் நிறை பெறுகிறது)

### த்ரயம்பக மந்திரம்

ஓம் த்ரயம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டிவர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனாந் ம்ருத்யோர் முக்ஷீய மாமம்ருதாத்

இயற்கையான நறுமணம் கொண்டவரும், கருணையால் எல்லா உயிர்களையும் போஷித்து வளர்ப்பவரும், ஞானத்தை அளிப்பவரும் ஆகிய மக்கண்ணனைப் பூஜிப்போமாக. வெள்ளரிக்கொடியிலிருந்து தானாகவே எப்படி வெள்ளரிப்பழம் விடுபட்டு விடுகிறதோ, அது போலவே எங்களை (சிரமமின்றி) மரணத்திலிருந்து விடுவித்து அவர் எங்களுக்கு மோட்சத்தை அளிக்கட்டும்.

## ஸ்ரீநந்திகேஸ்வர அஷ்டோத்தர சத நாமாவளி

1. ஓம் நந்திகேசாய நம : நந்திகேஸ்வரருக்கு வணக்கம்.
2. ஓம் ப்ரஹ்ம ரூபிணே நம : பரப்பிரம்ம சொரூபமான நந்திகேஸ்வரருக்கு வணக்கம்
3. ஓம் சிவத்யான பராயணாய நம: - சிவனை தியானிப்பதையே லட்சியமாகக் கெண்டவருக்கு வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஓம் தீர்க்ஷ்ணேங்கேசாய நம: - நீண்ட புரவரேமத்தை உடையவருக்கு வணக்கம்.
5. ஓம் வெதபாதாய நம: வேதத்தின் பாதமாக இருப்பவருக்கு வணக்கம்.
6. ஓம் விருபாய நம: - உருவமற்றவராக இருப்பவரக்கு வணக்கம்.
7. ஓம் வ்ருஷபாய நம: எல்லா தேவதைகளிலும் மிக சிறந்தவரானவருக்கு வணக்கம் (அல்லது) காளையின் உருவமாக உள்ளவருக்கு வணக்கம்.
8. ஓம் துங்க சைலாய நம: - உயர்ந்த மலைபோன்ற வருக்கு வணக்கம்.
9. ஓம் தேவதேவாய நம: - உயர்ந்த மலை போன்றவருக்கு வணக்கம்.
10. ஓம் சிவப்ரியாய நம: - சிவபெருமானுக்கு மிகவும் பிரியமானவருக்கு வணக்கம்.
11. ஓம் விராஜமானாய நம: - ஒளி நிறைந்தவருக்கு வணக்கம்.
12. ஓம் நடநாய நம: - நடனமாடுபவருக்கு வணக்கம்.
13. ஓம் அக்னிரூபாய நம: - அக்னி உருவமானவருக்கு வணக்கம்.
14. ஓம் தனப்ரியாய நம: - ஞானமாகிற செல்வத்தில் பிரியமுள்ளவருக்கு வணக்கம்.
15. ஓம் ஸித சாமர தாரிணே நம: - வெண்மையான சாமரத்தை அணிந்திருப்பவருக்கு வணக்கம்.
16. ஓம் வேதாங்காய நம:- வேதத்தின் அங்கமாய் இருப்பவருக்கு வணக்கம்.
17. ஓம் கநக ப்ரியாய நம:- தங்க ஆபரணங்களை அணிவதில் பிரியமுள்ளவரக்கு வணக்கம்.
18. ஓம் கைலாஸவாஸினே நம: - சிவபெருமானின் இருப்பிடமாகிற கைலாசத்தில் இருப்பவருக்கு வணக்கம்.
19. ஓம் தேவாய நம: - கடவுளாகப் போற்றப்படுகிறவருக்கு வணக்கம்.
20. ஓம் ஸ்தித பாதாய நம: - உறுதியான பாதங்களை உடையவருக்கு வணக்கம்.
21. ஓம் ஸ்துதி ப்ரியாய நம: - ஸ்தோத்திரத்தில் பிரியமானவருக்கு வணக்கம்.
22. ஓம் ச்வேதோபவீதினே நம: - வெண்மையான பூணூல் தரித்தவருக்கு வணக்கம்.
23. ஓம் நாட்ய தந்தகாய நம: - நாட்டியக் கலையில் களிப்பவருக்கு வணக்கம்.
24. ஓம் கிங்கிணீ தராய நம: - க்ணிங் க்ணிங் என்று ஒலிக்கும்மணிகளைத் தரித்தவருக்கு வணக்கம்.
25. ஓம் மத்த ச்ருங்கிணே நம :- வலுவான கொம்புகளை உயைவருக்கு வணக்கம்.
26. ஓம் ஹாட கேசாய நம: - பொன்நிறமுள்ள தலைமுடியை உடையவருக்கு வணக்கம்.
27. ஓம் ஹேம பூஷணாய நம: - தங்க ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவருக்கு வணக்கம்.
28. ஓம் விஷ்ணு ரூபிணே நம: - எங்கும் பரவியுள்ள சொரூபமாயுள்ளவருக்கு வணக்கம்.
29. ஓம் ப்ருத்வீ ரூபிணே நம: - பூமி வடிவைக் கொண்டவருக்கு வணக்கம்.
30. ஓம் நிதீசாய நம: - எல்லாவிதமான பொக்கிஷங்களுக்கும் ஈச்வரனாக இருப்பவருக்கு வணக்கம்.
31. ஓம் சிவ வாஹனாய நம: - சிவபெருமானின் வாகனமாக இருப்பவருக்கு வணக்கம்.
32. ஓம் குள ப்ரியாய நம: - சிவபெருமானின் வாகனமாக இரப்பவருக்கு வணக்கம்.
33. ஓம் சாருஹாஸாய நம: - அகான சிரிப்புடையவருக்கு வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. ஓம் ச்ருங்கிணே நம: - அழகான கொம்புகள் டையவருக்கு வணக்கம்.
35. ஓம் நவத்ருண ப்ரியாய நம: - புதிதான புல்லைத்தின்பதில் பிரியமுள்ளவருக்கு வணக்கம்.
36. ஓம் வேதஸாராய நம: - வேதத்தின் சாரமாய் உள்ளவருக்கு வணக்கம்.
37. ஓம் மந்த்ர ஸாராய நம: - மந்திரங்களின் சாரமாய் உள்ளவருக்கு வணக்கம்.
38. ஓம் ப்ரத்யக்ஷாய நம: - நேரில் கண்டு தொழும்படி உள்ளவருக்கு வணக்கம்
39. ஓம் கருணாகராய நம: - பக்தர்களுக்குக் கருணையை அருள்பவருக்கு வணக்கம்.
40. ஓம் ஸ்ரீகராய நம: - பக்தர்களுக்குச் செல்வத்தை அளிப்பவருக்கு வணக்கம்.
41. ஓம் லலாம கலிகாய நம: - நெற்றியில் அழகான கோடுகளால் அலங்கரிக்கப்பட்டவருக்கு வணக்கம்.
42. ஓம் சிவ யோகினே நம: - சிவனையே தியானிப்பதால் அவருடன் ஒன்றி இருப்பவருக்கு வணக்கம்.
43. ஓம் ஜலாதிபாய நம: - புண்ணிய தீர்த்தங்களுக்கு அதிபதியாக இருப்பவருக்கு வணக்கம்.
44. ஓம் சாரு ரூபாய நம: - அழகிய உருவமுள்ளவருக்கு வணக்கம்.
45. ஓம் வ்ருஷேசாய நம: - விருஷபங்களுக்கு ராஜாவாக இருப்பவருக்கு வணக்கம்.
46. ஓம் ஸோமஸூர்யாக்னி லோசனாய நம: - சந்திரன், சூரியன், அக்னி இவர்களை இடது, வலது, நெற்றிக்கண்களாக உடையவருக்கு வணக்கம்.
47. ஓம் சுந்தராய நம:- அழகானவருக்கு வணக்கம்.
48. ஓம் ஸோம பூஷாய நம: - பிறைச்சந்திரனை அணிந்திருப்பவருக்கு வணக்கம்.
49. ஓம் ஸுவக்த்ராய நம: - அழகான முகத்தை உடையவருக்கு வணக்கம்.
50. ஓம் கலிசாய நம: - கலியின் தோஷங்களை நாசம் செய்பவருக்கு வணக்கம்.
51. ஓம் ஸுப்ரகாசாய நம: - நல்ல ஒளியுடன் பிரகாசிப்பவருக்கு வணக்கம்.
52. ஓம் மஹாவீர்யாய நம: - பெரும் வீரியம் பொருந்தியவருக்கு வணக்கம்.
53. ஓம் ஹம்ஸாய நம: - ஞானத்தின் (விவேகத்தின்) உருவமாக இருப்பவருக்கு வணக்கம்.
54. ஓம் அக்னிமயாய நம: - தீ வடிவமாகித் தீயதை எல்லாம் எரித்துவிடும் தன்மையாய் உள்ளவருக்கு வணக்கம்.
55. ஓம் ப்ரபவே நம: - எல்லோருக்கும் தலைவராயிருக்கும் நந்திகேச பகவானுக்கு வணக்கம்.
56. ஓம் வரதாய நம: - பக்தர்களுக்கு வேண்டிய வரம் அளிப்பவருக்கு வணக்கம்
57. ஓம் ருத்ரரூபாய நம: - எதிரிகளை எல்லாம் தண்டித்துக் கதற வைக்கும் திறமை உடையவருக்கு வணக்கம்.
58. ஓம் மதுராய நம : - பக்தர்களிடம் இனிமையாயுள்ளவருக்கு வணக்கம்.
59. ஓம் காமிக ப்ரியாய நம: - தன்னை நேசிக்கும் பக்தர்களிடம் பிரியமானவருக்கு வணக்கம்.
60. ஓம் விசிஷ்டாய நம: - மேன்மைபடைத்தவருக்கு வணக்கம்.
61. ஓம் திவ்ய ரூபாய நம: - ஒளிபொருந்திய உருவ முள்ளவருக்கு வணக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. ஓம் உஜ்வலினே நம: - பிரகாசமாக உள்ளவருக்கு வணக்கம்.
63. ஓம் ஜ்வால நேத்ராய நம: - நெருப்பு போல் பிராசிக்கும் கண்களை உடையவருக்கு வணக்கம்.
64. ஓம் ஸம்வர்த்தாய நம: - பிரபஞ்ச லயத்திற்கும் சிருஷ்டிக்கும் காரணமானவருக்கு வணக்கம்.
65. ஓம் காலாய நம: - யமனாக இருப்பவருக்கு வணக்கம்.
66. ஓம் கேசவாய நம: - விஷ்ணுவாய் இருப்பவருக்கு வணக்கம்.
67. ஓம் ஸர்வ தைவதாய நம: - எல்லா வேதைகளின் உருவமாகவும் இருப்பவருக்கு வணக்கம்.
68. ஓம் ச்வேத வர்ணாய நம: - வெண்மை நிறமாய் உள்ளவருக்கு வணக்கம்.
69. ஓம் சிவாஸீநாய நம: - அமர்ந்துள்ள சிவனைத் தாங்குபவருக்கு வணக்கம்.
70. ஓம் சின்மயாய நம: - மெய்யறிவானவருக்கு வணக்கம்.
71. ஓம் ச்ருங்கபட்டாய நம: - கொம்பில் கீரிடம்போல் ஆபரணங்களை உடையவருக்கு வணக்கம்.
72. ஓம் ச்வேத சாமர பூஷாய நம: - வெண்சாமரத்தால் அலங்கரிக்கப்பட்டவருக்கு வணக்கம்.
73. ஓம் தேவராஜாய நம: - தேவர்களுக்கெல்லாம் ராஜாவாக இருப்பவருக்கு வணக்கம்.
74. ஓம் ப்ரபா நந்தினே நம: - ஒளிபொருந்திய நந்தி பகவானுக்கு வணக்கம்.
75. ஓம் பண்டிதாய நம: - நல்ல வித்வானாக இருப்பவருக்கு வணக்கம்.
76. ஓம் பண்டிதாய நம: - பரமேச்வரனாய் இருப்பவருக்கு வணக்கம்.
77. ஓம் நிரூபாய நம: - களங்கமற்ற ரூபமுள்ளவருக்கு வணக்கம்.
78. ஓம் நீராக பராய நம:- மற்றிலும் ஆசையற்றவருக்கு அல்லது ஆறையற்றவர்களிடம் பிரியமுள்ளவருக்கு வணக்கம்.
79. ஓம் சின்ன தைத்யாய நம: - அசுரர்களை ஒட்ட அழித்தவருக்கு வணக்கம்.
80. ஓம் நாஸா ஸூத்ரிணே நம: - மூக்கணாங்கயிறு பூண்டவருக்கு வணக்கம்.
81. ஓம் அநந்தேசாய நம: - எல்லையற்ற ஈச்வரனாக இருப்பவருக்கு வணக்கம்.
82. ஓம் தில தண்டுல பக்ஷணாய நம: - எள், அரிசி முதலியவற்றை உண்பவருக்கு வணக்கம்.
83. ஓம் வர நந்தினே நம: - சிவனைக் களிக்கச் செய்பவர் அல்லது சிவனுக்கு மிகப் பிரியமானவருக்கு வணக்கம்.
84. ஓம் ஸரஸாய நம: - பிரபஞ்சத்திலுள்ள அனைத்தின் சாரமாக, உயிராக விளங்கும் நந்திகேஸ்வரருக்கு வணக்கம்.
85. ஓம் விமலாய நம:- மாசற்றவருக்கு வணக்கம்.
86. ஓம் பட்ட ஸூத்ராய நம: - பட்டாடையை வஸ்திரமாக அணிந்திருப்பவருக்கு வணக்கம்.
87. ஓம் கால கண்டாய நம: - கருப்பு நிறமான கழுத்தை உடையவருக்கு வணக்கம்
88. ஓம் சைலாதினே நம: - சிலாதாரன் என்ற பெயர் கொண்டவருக்கு வணக்கம்.
89. ஓம் சிலாதன ஸூநந்ததாய நம :- தானியங்களைப் பிரித்து உண்டு களிப்பவருக்கு வணக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90. ஓம் காரணாய நம: - (சிருஷ்டிக்கு) காரணமாக இருப்பவருக்கு வணக்கம்.
91. ஓம் ஸ்துதி பக்தாய நம:- சிவனை எப்போதும் பாடும் பக்தனாக இருப்பவருக்கு வணக்கம்.
92. ஓம் வீர கண்டாய நம:- கம்பீரமான கழுத்தை உடையவருக்கு வணக்கம்.
93. ஓம் தன்யாய நம:- சிவபெருமானுக்கு எப்போதும் தொண்டாற்றும் பாக்கியவானுக்கு வணக்கம்.
94. ஓம் விஷ்ணு, நந்தினே நம : - விஷ்ணுவுடன் இருக்கும்போது மகிழ்பவருக்கு வணக்கம்.
95. ஓம் சிவஜ்வாலாக்ராஹிணே நம: - சிவனது உக்கிரமான தேஜஸைத்தான் ஏற்று மட்டுப்படுத்துபவருக்கு வணக்கம்.
96. ஓம் பத்ராய நம :- மங்களமானவருக்கு வணக்கம்.
97. ஓம் அநகாய நம :- பாவமற்றவருக்கு வணக்கம்.
98. ஓம் வீராய நம :- வீரராய் இருப்பவருக்கு வணக்கம்.
99. ஓம் த்ருவாய நம :- திட சித்தமுள்ளவராய் இருப்பவருக்கு வணக்கம்.
100. ஓம் தாத்ரே நம :- எல்லோருக்கும் ஆதாரமாக இருப்பவருக்க வணக்கம்.
101. ஓம் சாச்வதாய நம :- என்றும் நிலைத்தவராய் இருப்பவருக்கு வணக்கம்
102. ஓம் ப்ரதோஷ ப்ரியரூபிணே நம:- பிரதோஷ காலங்களில் பக்தர்களுக்கு மிகப் பிரியமானவருக்கு வணக்கம்.
103. ஓம் வ்ருஷாய நம: - காளை வடிவாக இருப்பவருக்கு வணக்கம்.
104. ஓம் குண்டல த்ருதே நம :- குண்டலங்கள் அணிந்தவருக்கு வணக்கம்.
105. ஓம் பீமாய நம: - எல்லோரையும் தம்மிடம் பயந்து நடுங்கச் செய்பவருக்கு வணக்கம்.
106. ஓம் ஸிதவர்ண ஸ்வரூபிணே நம :- வெள்ளை நிற உருவமுள்ளவருக்கு வணக்கம்.
107. ஓம் ஸர்வாத்மனேநம :- எல்லோருடைய உள்ளத்திலும் ஆத்மாவாக உறைபவருக்கு வணக்கம்.
108. ஓம் ஸர்வவிக்யாதாய நம :- உலகெலாம் பெயர் பெற்றவருக்கு அல்லது எல்லோராலும் புகழப்படுபவருக்கு வணக்கம்.

இதி ஸ்ரீநந்திகேச்வர அஷ்டோத்தர சத திவ்ய நாம ஸ்தோத்திரம் ஸம்பூர்ணம்.

# ஸ்ரீ தட்சிணாமூர்த்தி நவரத்ன மாலிகா ஸ்தோத்திரம்

மூலேவடஸ்ய முனிபுங்கவ ஸேவ்யமானம் முத்ராவிசேஷ முகுளீக்ருத பாணிபத்மம்!
மந்த்ஸ்மிதம் மதுரவேஷமுதாரமாத்யம் தேஜஸ்ததஸ்து ஹ்ருதிமே தருணேந்து சூடம்!!

1. ஆலமரத்தின் அடியில் அமர்ந்து சிறந்த முனிவர்களால் வணங்கப்பட்டவரும், உயர்ந்த ஞானமுத்திரையைக் காட்டி தமரையின் மொட்டு போல் விளங்கும் கரம் உடையவரும், புன்சிரிப்புடையவரும், மனதைக் கவரும் வடிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவரும், கம்பீரமாகவும் அனைவருக்கும் தலைவனாகவும் பிறைச்சந்திரனை அணிந்தவரும், தேஜஸ் வடிவமானவரும் ஆகிய ஸ்ரீ தட்சிணாமூர்த்தி என் இதயத்தில் விளங்கட்டும்.

**சாந்தம் சாரத சந்த்ரகாந்திதவளம் சந்த்ராபிராமானனம்**
**சந்த்ரார்கோபம காந்திகுண்டலதரம் சந்த்ராவதாதாம் ஸுகம்!**
**வீணாபுஸ்தகமக்ஷ ஸுத்ரவலயம் வ்யாக்யானமுத்ராம் கரை:**
**பிப்ராணம் கலயே ஹ்ருதா மம ஸதா சாஸ்தாரமிஷ்டார்த்ததம்!!**

2. சாந்தி நிறைந்தவரும், சரத் கால சந்திரனைப் போன்ற வெண்மைப் பிரகாசம் உடையவரும், சந்திரன் போன்ற அழகான முகம் உள்ளவரும், சந்திரன் சூரியன் தேஜஸிற்கு ஒப்பான பிரகாசம் உடைய குண்டலங்களை அணிந்தவரும், சந்திரனின் நிறம் போன்ற வெண்மை ஆடை அணிந்தவரும், வீணை - புஸ்தகம் - ஜபமாலை - ஞானமுத்திரைகளைக் கரங்களில் தரித்தவரும் வேண்டியதை அளிப்பவரும், காப்பவரும் ஆகிய ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை என்றும் மனதில் தியானிக்கிறேன்.

**கர்பூரகாத்ரமரவிந்த தளாயதாக்ஷம் கர்பூரசீதளஹ்ருதம் கருணாவிலாஸம்!**
**சந்த்ரார்த்த சேகரமனந்தகுணாபிராமம் இந்த்ராதிஸேவ்ய பதபங்கஜமீசமீடே!!**

3. கர்ப்பூரம் போன்ற வெண்மையான மேனியை உடையவரும், தாமரை இதழ்போன்ற நீண்ட கண்களை உடையவரும், கர்ப்பூரம்போல் குளிர்ந்த இதயம் கொண்டவரும், கருணையால் விளங்குபவரும், எல்லையற்ற தெய்விக (கல்யாண) குணங்களால் அழகுடன் இருப்பவரும், தேவேந்திரன் முதலியவர்களால் வணங்கத் தக்க பாதகமலங்களை உடையவரும் ஆகிய ஸ்ரீ தட்சிணாமூர்தத்தியைத் துதிக்கிறேன்.

**த்யுத்ரோரத ஸ்வர்ணமயாஸனஸ்தம் முத்ரோல்லஸத்பாஹு முதாரகாயம்!**
**ஸத்ரோஹிணீநாத களாவதம்ஸம் பத்ரோதிதம் கஞ்சன சிந்தயாம!!**

4. கற்பக மரத்தின் அடியில் தங்க மயமான ஆசனத்தில் அமர்ந்தவரும், கையில் சின்முத்திரை உடையவரும், கம்பீரமான உடல் தோற்றம் கொண்டவரும், ரோகிணியின் நாதனாகிய சந்திரனைத் தனது தலையில் ஆபரணமாகக் கொண்டவரும், மங்களங்கள் அனைத்திற்கும் கடல் போன்றவரும் ஆகிய ஸ்ரீ தட்சிணாமூர்த்தியைச் சிந்திப்போம்.

**உத்யத்பாஸ்கர ஸன்னிபம் த்ரிணயனம் ஸ்வேதாங்கராகப்ரபம்**
**பாலம் மௌஞ்சிதரம் ப்ரஸன்னவதனம் ந்யக்ரோதமூலலேஸ்திதம்!**
**பிங்காக்ஷம் ம்ருகசாபகஸ்திதிகரம் ஸுப்ரம் ஹஸுத்ராக்ருதிம்**
**பக்தாநாமபயப்ரதம் பயஹரம் ஸ்ரீதக்ஷிணாமூர்த்திகம்!!**

5. உதய சூரியனுக்கு நிகரான ஒளி நிறைந்தவரும், மூன்று கண்கள் உடையவரும் கர்ப்பூரம் போன்ற காந்தி நிறைந்தவரும், இளமைத் தோற்றம் உடையவரும், மௌஞ்சி என்ற கயிற்றை அணிந்தவரும், புன்னகை ததும்பும் முகம் உடையவரும், ஆலமரத்தின் அடியில் அமர்ந்தவரும், சிவந்த கண்களை உடையவரும், கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானைத் தரித்தவரும், பக்தர்களுக்கு அபயம் அளிப்பவரும், பயத்தை நீக்குபவரும் ஆகிய ஸ்ரீ தட்சிணாமூர்த்தியைத் தியானிக்கிறேன்.

**ஸ்ரீகாந்தத்ருஹிணோபமன்யு தபன ஸ்கந்தேந்த்ரநந்த்யாதய:**
**ப்ராசீனாகுரவோபியஸ்ய கருணாலேசாத்கதாகௌவரம்!**
**தம் ஸர்வாதிகுரும் மனோக்ஞவபுஷம் மந்தஸ்மிதாலங்க்ருதம்**
**சின்முத்ராக்ருதி முக்தபாணி நளினம் சித்தே சிவம் குர்மஹே!!**

6. ஸ்ரீ மகாவிஷ்ணு, பிரம்மா, உபமன்யு, சூரியன், முருகன், இந்திரன், நந்திதேவர் ஆகியவர்களும், பண்டைய ஆச்சார்யர்களும் தட்சிணாமூர்த்தியின் சிறிதளவு கருணையால் பெருமையடைந்திருக்கிறார்கள்.

எல்லோருக்கும் முதல் குருவாக இருப்பவரும், மனதைக் கவரும் வடிவம் கொண்டவரும், புன்சிரிப்புடன் திகழ்பவரும், சின்முத்திரையுடன் கூடிய தாமரை போன்ற கரம் உடையவரும், மங்களம் நிறைந்தவரும் ஆகிய ஸ்ரீ தட்சிணாமூர்த்தியைத் தியானம் செய்கிறோம்.

**கபர்தினம் சந்த்ரகளாவதம்ஸம் த்ரிணேத்ரமிந்துப்ரதிமாநோஜ்வலம்!**
**சதுர்புஜம் க்ஞானதமக்ஷஸூத்ரபுஸ்தாக்னி ஹஸ்தம் ஹ்ருதிபாவயேச்சிவம்!!**

7. ஜடாமுடியோடு திகழ்பவரும், சந்திரனை சிரசில் ஆபரணமாகக் கொண்டவரும், சந்திரனுக்கு ஒப்பான முகக் காந்தி உடையவரும், நான்கு கரங்கள் கொண்டவரும், ஞானம் தருபவரும், அட்சமாலை - புத்தகம் - அக்கினி ஆகியவற்றைக் கரத்தில் ஏந்தியவரும், சிவபெருமானும் ஆகிய ஸ்ரீ தட்சிணாமூர்த்தியைத் தியானம் செய்கிறோம்.

**வாமோருபரிஸம்ஸ்திதாம் கிரிஸுதாமன்யோன்யமாலிங்கிதாம்**
**ஸ்யாமாமுத்பலதாரிணீம் ஸஸிநிபாஞ்சாலோகயந்தம் சிவம்!**
**ஆஸ்லிஷ்டேன கரேண புஸ்தகமதோ கும்பஸுதாபூரிதம்**
**முத்ராம் க்ஞானமயீம் ததானமபரை: முக்தாக்ஷமாலாம்பஜே!!**

8. பர்வதராஜனின் மகளும், இளமைப்பருவத்தில் இருப்பவளும், நீலோ த்பல மலரைக் கையில் ஏந்தியவளும், சந்திரன் போன்ற முகம் உடையவளும் ஆகிய அம்பாளைப் பார்ப்பவர் சிவபெருமான்.

நல்ல மங்களத்தைச் செய்பவரும், அம்பாளை அணைத்துக் கொண்டகையில் புத்தகமும், அடுத்த கரத்தில் அமுதம் நிரம்பிய நிரம்பிய குடமும் ஏந்தியவரும், மற்ற இரண்டு கரங்களில் ஞானமுத்திரையும், முத்து மயமான ஜபமாலையும் தரித்தவரும் ஆகிய ஸ்ரீ தட்சியணாமூர்த்தியை வழிபடுகிறேன்.

**வடதருநிகடநிவாஸம் படுதர விக்ஞான முத்ரிதகராப்ஜம்!**
**கஞ்சன தேசிகமாத்யம் கைவல்யாநந்த கந்தளம் வந்தே!!**

9. ஆலமரத்தின் அடியில் எழுந்தருளியிருப்பவரும், அழகோடு மிளிரும் ஞானமுத்திரை தாங்கிய தாமரை மலர் போன்ற கரம் உடையவரும், வாக்கிற்கு எட்டாதவரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிகுருவும் பிரம்மானந்தம் கிடைப்பதற்குக் காரணமாக இருப்பவரும் ஆகிய ஸ்ரீ தட்சிணாமூர்த்தியை வணங்குகிறேன்.

# சிவ பக்த லக்ஷணம்

நாத த்வதீயமபிதானமுபாச்ரிதானாம் போதஸ்மராதிக குவ்ருத்திபிசாசிகாபி:!
ஆபி: கதம் பரிபவோ பகவந்தமீஷா(ம்) அந்தர்ஷீததி பவான் கலு சூலபாணி:!!
ஏ நாதனே! உன் திருநாமத்தப் ப்றிக் கோடாகக் கொண்டவர்களுடைய இதயத்தில் நீ சூலம் ஏந்தியவனாக வீற்றிருக்கிறாய். அவ்வாறிருக்க காமம், குரோதம் முதலிய பிசாசுகள் அங்கு எவ்வாறு நுழைய முடியும்?

தர்ப்பஸ்மரப்ரப்ருதி தாவ விதஹ்யமானம் கோகம் விலோக்யக்ருபயேச க்ருபாம் தவாஸ்மின்!
வாஞ்ச்சந்தி யாந்தி சமுதம் வயமேததாபத் த்யக்தா: கிலேதி சரணீக்ருத தாவகாக்யா:!!
காமம், குரோதங்களாகிய காட்டுத்தீயால் எரிக்கப்படும் உலகத்தைக் கண்டு உனது அருளால் உன் திருநாமங்களையே சரணடையந்த நாங்கள் உனது கிருபையை வேண்டுகிறோம். அதன் மூலம் இந்த ஆபத்திலிருந்து விடுபட்டு ஆனந்தமடைகிறோம்.

காயஸ்ய ஹேயநிதிதாம் ம்ருதிருக்ஜரார்த்யா ஹ்யானந்தமேப்யலமவேத்ய விமுக்தஸர்வா:!
சம்போ சரந்தி விருஜஸ்த்வயி பத்தபாவா: யே ஸாதராஸ்தவ ஹி நாத மஹானுபாவா:!!
ஏ சம்போ! பிணி, மூப்பு, மரணம் முதலிய தக்கங்களுக்கு ஆளாகும் உடலை வெறுத்து, அது தொடர்பான அனைத்தையும் விட்டு, உனது நாம சங்கீர்த்தனத்தில் மிகுந்த ருசி கொண்டவர்களே மகானுபாவர்கள்.

த்வந்நாம கீர்த்தன வரௌஷதமாச்ரிதேளுஸ்மின் அஸ்மை கலுஸ்மரஹர ஸ்வதஸேத்வமேக:!
அந்யத்து கிஞ்சிதபி நஸ்வததே ததேததாகண்டலஸ்ய பதமஸ்துவிதே: பதம் வா!!
மன்மதனை எரித்த சிவனே! உயர்ந்த மருந்தாகிய உனது நாமத்தைக் கைக்கொண்டவனுக்கு நீ ஒருவனே சுவையானவன். சொர்க்கமோ, பிரம்பதவியோ அவனுக்குச் சிறிதும் ருசிப்பதில்லை.

ஆகாங்க்ஷிதும் கமலஜாதிபிரய்யலப்ய மாப்தும் சதந்நிருபஹத்யத வர்த்திதும்ச!
ஸன்மௌலிலாலன பதம் பதமீசதேகிம் கௌரீச யே த்வதபிதான ரதாஸ்ததன்யே!!
ஏ கௌரீபதியே! பிரம்மா முதலிய தேவர்களால் அடைய முடியாததும் சாதுக்கள் தலையால் வணங்கப்பட்டதுமான உன் திருவடிகளை ஆசைப்பட்டு அடைந்து, அந்த நிலையை இழக்காமல் தக்க வைத்துத் தகுதி வாய்ந்தவர்கள் உனது நாம சங்கீர்த்தனம் செய்பவர்கள் மட்டுமே ஆவார்கள்.

ஏகம் பவத்பஜனமேவ ஸுகம் ததன்ய தார்யாத்மகம் ஸபலமேததிதி ப்ரபோத்தும்!
ஸ்தாதும் ச முக்தஸகலம் பவதேகதான மீசாஸ்த ஏவ சிவயே தவ நாம்னி ஸக்தா:!!
சிவபெருமானே! உனது பஜனை ஒன்றே சுகம் தரும். பிற அனைத்தும் துக்கமே தரும் என்று அறிவதற்கும். அனைத்தையும் விட்டுவிட்டு வேறு சிந்தனையற்று உனது பக்தியிலேயே நிலைத்து நிற்பதற்கும் சக்தியுடையவர்கள் உன் நாமத்தில் லயித்தவர்கள் மட்டுமே ஆவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**து: காத்மகத்வமகிலஸ்ய தவாதிவேலா நந்தாத்மதாம் ச ஸமவேத்ய ஜடித்யசேஷம்!**
**த்யக்த்வாS நலார்த்த வபுஷ: ஸரஸாவ சம்போ த்வய்யாபதந்தி ஸமுபாச்ரிததாவகாக்யா:!!**
சம்புவே! உலகியல் அனைத்தும் துக்கமென்றும் உனது பஜனை ஒன்றே கரைகாணா ஆனந்தம் என்றும் அறிந்து, தாபமுற்றவர்கள் குளிர்ந்த நீர் நிலையில் மூழ்குவது போல் உனது நாம சங்கீர்த்தனத்தில் மூழ்கித் திளைக்கின்றனர்.

**ஆக்யாபராஸ்தவ விபோபவதாத்மகத்வ மஸ்யாகிலஸ்ய தவ சித்ஸ"கருபதாம்ச!**
**ஆபுத்த்ய பத்தஹ்ருதயாஸ்தவ சர்ம விந்த ந்த்யந்த: கிமப்யகணித த்ருஹிணாதிபோகா!!**
ஏ விபோ! உனது நாமம் ஒன்றையெ லட்சியமாகக் கொண்டவர்கள் உலகம் முழுவதும் உனது சித்ஸ்வரூபம் என்றும், நீயே ஞானானந்தஸ்வரூபன் என்றும் அறிந்து உன்னிடம் அன்பு கொண்டவர்களாய் மோட்சத்தை அடைகிறார்கள். அவர்கள் பிரம்மா முதலிய தேவர்களின் போகங்களைக்கூட மதிப்பதில்லை.
**த்வேஷ்யப்ரியாதிஸகலம் பவதீயரூபம் புத்த்வாத்வயிப்ரணயத: ப்ரணயார்த்ரத்ருஷ்ட்யா!**
**பச்யந்த ஏததவலம்பிததாவகாக்யா: பச்யல்லலாட விசரந்தி ஜகத்புனந்த:!!**
முக்கண்ணப் பெருமானே! உனது நாமத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டவர்கள் விருப்புவெறுப்பின்றி உலகு அனைத்தையும் உனது ரூபமாகவே கருதி அன்புடன் காண்கிறார்கள். அவர்கள் உலகில் சஞ்சரித்து அனைவரையும் பவித்திரமாக்குகிறார்கள்.

**ராகாதிக்ருத் விவிதமேஷ மஹாநட: கல் வாந்ருத்யதீத்தமிதி தத்த்வத்ருசேக்ஷமாணா:!**
**க்ஷோபம் ந யாந்தி தததே சமுதம் ஸ்மரந்த: த்வத்வைபவம் த்வதபிதானநிபத்தபாவா:!!**
உனது நாமத்தில் அன்பு பூண்டவர்கள் இது அனைத்தும் மகா மாயாவியான சாட்சாத் பரமேஸ்வரனின் லீலை, நாடகம் என்று தத்துவ திருஷ்டியுடன் காண்கிறார்கள். அவர்கள் உனது வைபவத்தை நினைந்து சந்தோஷமே அடைகிறார்கள். வருத்தம் அடைவதே இல்லை.

**சம்போ கதம் நு சதுராஸ்தவ நாம்னி ஸக்தா: சச்வத்க்ருதேப்யமத ஏவ பராபவேன்யை:!**
**அஸ்தோத்யமா: ப்ரதிக்ருதாம் வபயாத்வமீஷா மேஷா கதாSS ர்த்திரிதி தேஸ"தயாம் வஹந்தி!!**
ஏ சம்புவே! உனது நாமத்தில் ருசி கண்டவர்கள் காரணமின்றிப் பிறர் ஓயாது அவமானப்படுத்தினாலும் அதற்குப் பதில் கூறுவதில்லை. அது மட்டுமின்றி 'இவர்கள் எனக்காக எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்! என்று அவர்களிடம் கருணையும் கொள்கிறார்கள். என்னே சாமர்த்தியம்!

**த்வந்நாமதேயரஸிகாஸ் தருணேந்து மௌலே துக்கம் ந யாந்தி கிமபீதிஹி வாதமாத்ரம்!**
**தேமீகில ஸ்வவிபதீவ வஹந்தி துக்கம் த்ருக்கோசரம் வ்ரஜதி து: கினி ஜந்துமாத்ரே!!**
சந்திரமௌலீஸ்வரனே! உன் நாமத்தை ரசிப்பவர்கள் துக்கம் அடைவதில்லை என்பது வீண்வாதமே. எந்த உயிர் கஷ்டப்படுவதைக் கண்டாலும், அது தமக்கே வந்த கஷ்டமாகக்கருதி அவர்கள் துன்பப்படுகிறார்கள்.

**ஸர்வத்ர வத்ஸலதயா த்வதவேக்ஷயா சோதாரா மஹாந்த இதி தீநிகலேன முக்தா:!**
**ப்ரேம்ணா கலுத்வயி விபோத்ருணிதாகிலார்த்தா: த்வந்நாமதேயரஸிகா: க்ருதினோ ஜயந்தி!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ விபுவே! உனது நாமசங்கீர்த்தன ரசிகர்கள் உன்னிடமுள்ள அன்பினால் மற்ற புருஷார்த்தங்களைப் புல்லாய் மதிப்பார்களாகவும், எங்கும் உன்னையே காண்பவர்களாகவும் புத்தி என்னும் உபாதியிலிருந்து விடுபட்டவர்களாகவும் உதாரகுணம் கொண்டவர்களாகவும் மகான்காளகவும் பாக்கியவான்களாகவும் உள்ளார்கள்.

**நாத த்வதீக்ஷணவசா தகிலேஷ்வமீஷ நக்வாப்ய கௌரவத்ருகாத்மனிது ப்ரகாமம்!**
**நைச்யக்ரஹஸ்வயி து ரக்திரனர்கலேி க்வாதீதவந்த இதமாத்ருத தாவகாக்யா:!!**
ஏ நாதனே! உனது நாமத்தைப் பஜிப்பவர்கள் உன்னைக் கண்டு உன் வசப்பட்டு அனைவரையும் உனது ஸ்வரூபமாகவே பாவித்து கௌரவிக்கின்றனர்; தம்மை மட்டும் தாழ்ந்தவராகக் கருதுகின்றனர். உன்னிடம் தங்கு தடையின்றி பக்தி செலுத்த இவர்கள் எங்கு கற்றார்கள்?

**அத்யுன்னதிம் விதரநீதி யசோSதிவேல மஸ்யாஸ்சகாஸ்தி சிவ தாவக நாம்னி ஸக்தே:!**
**ஆக்யாய தாம் கிமியமாதனுதே நிதாந்த மானம்ரமேத தகிலேஷுசராசரேஷு!!**
சிவபெருமானே! உனது நாமசங்கீர்த்தனத்தில் கொண்ட ஈடுபாடானது மகோன்னதமான புகழைத் தந்துவிடுகிறது. அகில சராசரங்களிலும் இவர்களுக்கு மிகுந்த மரியாதையையும் வணக்கத்தையும் அளித்து விடுகிறது.

**த்வந்நாம கீர்த்தனஜுஷாSநிசமேகதானா: த்வத்ஸேவனம் விதததோSபி ந தத்ர த்ருப்திம்!**
**இத்யாதி தாவககிராம் கிரிசாஸ்பதம்த்வ தாத்யாபரா: புனரமூனவிதும் க்ஷம: க:!!**
கிரீசனே! நாமம் கூறுபவர் விஷயமாக நீயே, 'பற்றற்ற, சம தரிசனம் கொண்ட என் பக்தனது பாத தூளிக்கு ஆசைப்பட்டு நான் அவனைப் பின்தொடர்கிறேன்' என்ற பின் அவர்களைக் காத்தருள வேறு எந்த தெய்வந்தான் தேவை?

**த்வத்ஸௌஹ்ருதாதிஸுகுணாம்ருத சீதலாஸ்த்வ தாக்யாபரா இதி தவேச யசோபிகோப்தும்!**
**அஸ்மானபி த்வதபிதான ஜுஷோஜுஷஸ்வ ஸ்வச்சம் யசஸ்ததபதே நனு மாSபனைஷீ:!!**
உனது நாமத்தையே லட்சியமாகக் கொண்டவர்கள் எளிதில் அண்டத்தக்க சுகமான உனது நற்குணத்தால் (தாபம் தீர்ந்து) குளிர்ந்தனர் என்ற உனது புழைக் காத்துக் கொள்ள வேண்டுமானால், எங்களையும் உனது நாம சங்கீர்த்தனம் செய்பவர்களாக ஆக்கிவிடு. உனது புகழைக் கெடுத்துக் கொள்ளாதே.

**க்ரோதஸ்மராத்யுபசமம் த்வயிராகிதாம்ச தேஹீசமே ந யதிமே ச்வமுகேப்ய ஏப்ய:!**
**கிம் பேதகம் த்வதபிதாம் மமக்ருஹ்ணதோSஸ்ய பல்குஸ்திதிஸ்த்வதய சோப ரஹேதுரேஷா!!**
ஈசனே! காக்குரோதங்களை நீக்கக்கூடிய உனது பக்தியை எனக்குஅளிப்பாயாக. இல்லையேல் நாய் முதலிய பிராணிகளுக்கும் எனக்கும் என்ன வேற்றுமை? உனது நாம சங்கீர்த்தனம் செய்யும் என்னிடமும் அற்பத்தனம் இருந்தால் அது உனக்குத்தான் இழிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்வந்நாமகீர்த்தன ஸுதாரஸ தாரயாஸ்த விச்சேதயா ப்ருசவிச்ருங்கல ஸௌஹிதீக:!
வேத்யாந்தராண்யகலயன் விசராணி ஸோSஹம் சாந்த: கதா சசிவதம்ஸ தவ ப்ரஸாதாத்!!
ஏ சந்திரசேகரனே! உனது நாமசங்கீர்த்தன ரசப்பிரவாக ஓட்டத்தால் தடையின்றி இடைவிடாது உன்னை தியானம் செய்து கொண்டு உனது திருவருளால் வேறெதையும் பற்றிச் சிந்தியாமல் நிம்மதியாக எப்பொழுது சஞ்சரிப்பேன்?

மத்ப்ராணவல்லப மதீய நிதே மதாத்மன் ஸாம்ப ப்ரபோ சிவ சசாங்கவிபு'ஷணேதி!
த்வந்நாம திவ்யதம்ருதோததி வீசிடோலா ந்தோலைர் விதேஹி விருஜம் க்ருபயா விபோ மாம்!!
ஏ விபுவே! என் உயிர் நாதனே, என் செல்வமே, என்னுயிரே, சாம்பசிவனே, பிறையணிந்த பெம்மானே, பிரபுவே! இவை போன்ற உனது திவ்விய நாமங்களால் ஆகிய அமுதக்கடலின் அலைகளாகிய தொட்டிலில் வைத்து ஆட்டப்படும் துன்பமற்ற சிறுகுழந்தையாக என்னை ஆக்கியருள்வாயே!

# ஸ்ரீ மீனாட்சி பஞ்சரத்தினம்

உத்யத் பாநுஸஹஸ்ஸஹஸ்ர கோஸத்ருசாம். கேயூர ஹாரோஜ்ஜ்வலாம் பிம்போஷ்டீம்
- ஸ்மிததந்தபங்க்தி ருசிராம் பீதாம்ப ராலங்க்ருதாம்!
விஷ்ணுப்ரம்ஹஸுரேந்த்ர ஸேவிதபதாம் தத்வஸ்வரூபாம் சிவாம் மீனாக்ஷீம் ப்ரணதோSஸ்மி
- ஸந்ததமஹம் காருண்யவாராம் நிதிம்!!

ஆயிரம் கோடி சூரியர்கள் உதிப்பதற்கு ஒப்பானவள். தோள்வளைகள், மாலைகள் இவைகளால் துலங்குபவள், கோவைப்பழம் போல இதழை உடையவள். புன்சிரிப்பாலும், பற்களின் வரிசைகளாலும் மிகவும் அழகு பொருந்தியவள். மஞ்சள் நிறமுள்ள பட்டாடைப் புனைந்தவள்.

விஷ்ணு, பிரம்மதேவன், இந்திரன் முதலியவர்கள் வழிபடும் திருவடிகளை உடையவள். உண்மைப் பரம்பொருளாய் இருப்பவள். மங்களமானவள். கருணைக் கடல், அத்தகைய மீனட்சிதேவியை எப்போதும் வணங்குகிறேன்.

முத்தாஹாரலஸத்கிரீடருசிராம் பூர்ணேந்து வக்த்ரப்ரபாம் சிஞ்ஜந்நூபுரகிங்கிணீமணிதராம்,
- பத்ம ப்ரபா பாஸுராம்!
ஸர்வாபீஷ்ட பலப்ரதாம் கிரிஸுதாம் வாணீரமா ஸேவிதாம் மீனாக்ஷீம் ப்ரணதோSஸ்மி
- ஸந்ததமஹம் காருண்யவாராம் நிதிம்!!

முத்து மாலைகளால் அழகு பொருந்திய கிரீடத்துடன் விளங்குபவள். பௌர்ணமி சந்திரன் போன்ற திருமுக ஒளி உடையவள். ஓசை எழுப்புகின்ற சிறிய மணிகளுடன் கூடிய கால் சிலம்புகளை அணிந்திருப்பவள். செந்தாமரைப் பூ போன்ற சிவந்த திருமேனியுடன் ஒளிர்பவள். விரும்பியது அனைத்தும் அளிப்பவள். மலைமகள், கலைமகளாலம் திருமகளாலும் பூஜிக்கப்படுகின்றவள். கருணைக் கடல் அத்தகைய மீனாட்சிதேவியை எப்போதும் வணங்குகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீவித்யாம் சிவவாமபாகநிலயாம் ஹ்ரீங்கார மந்த்ரோஜ் ஜ்வலாம் ஸ்ரீசக்ராங்கித பிந்துமத்யவஸதிம்
- ஸ்ரீமத்ஸபா நாயகீம்!
ஸ்ரீமத்ஷண்முக விக்னராஜஜனனீம் ஸ்ரீமஜ்ஜகன்மோஹினீம் மீனாக்ஷீம் ப்ரணதோSஸ்மி ஸந்ததமஹம்
காருண்யவாராம் நிதிம்!!

ஸ்ரீவித்யா மந்திரத்தின் வடிவமாய் இருப்பவள். சிவனது திருமேனியின் இடது பாகத்தில் நிலையாய் இருப்பவள். 'ஹ்ரீங்கார' மஹாமந்திர மாய் விளங்குபவள். ஸ்ரீசக்ரத்தில் முக்கோணத்தின் நடுவே உள்ள பிந்து ஸ்தானத்தில் கோயில் கொண்டிருப்பவள். ஸ்ரீ மான்களின் அவைக்குத் தலைவியாய் இருப்பவள். திரு நிறைந்த ஆறுமுகனுக்கும், இடர் நீக்கும் மகாகணபதிக்கும் அன்னையாய் இருப்பவள். உண்மைத் தத்துவத்தை உணராதபடி உலகத்தை மயக்கமுறச் செய்யும் திருநிறை தேவி. கருணைக்குக் கடலாக இருப்பவள். அத்தகைய மீனாட்சிதேவியை எப்போதும் வணங்குகிறேன்.

ஸ்ரீமத்ஸுந்தரநாயகீம் பயஹராம், ஞானப்ரதாம், நிர்மலாம் ச்யாமாபாம் கமலஸனார்ச்சிதபதாம்,
- நாராயணஸ்யாநுஜாம்!
வீணா வேணு ம்ருதங்க வாத்யரஸிகாம் நாநாவிதாடம்பிகாம் மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி
- ஸந்ததமஹம் காருண்யவாராம் நிதிம்!!

ஐஸ்வர்யங்களுடன் கூடிய ஸ்ரீசுந்தரேஸ்வரரின் மனைவி (பக்தர்களின்) அச்சத்தை அகற்றுபவள், ஞானத்தை அளிப்பவள், மாசற்றவள், கரிய திருமேனி உடையவள், பிரம்மதேவன் பூஜிக்கும் திருவடிகளை உடையவள், நாராயணனின் சகோதரி. வீணை. புல்லாங்குழல், மிருதங்கம் ஆகிய வாத்திரங்களில் மிகவும் ரசனை உடையவள். பல மங்கள வாத்தியகோஷங்களால் உபசரிக்கப்படுபவள். கருணைக் கடல், அத்தகைய மீனாட்சி தேவியை எப்போதும் வணங்குகிறேன்.

நாநாயோகி முநீந்த்ரஹ்ருந்நிவஸதிம், நாநார்த்த ஸித்திப்ரதாம் நாநாபுஷ்ப விராஜிதாங்க்ரியுகளாம்,
- நாராயணே னார்ச்சிதாம்!
நாதப்ரும்ஹமயீம், பராத்பரதராம், நாநார்த்த தத்வாத்மிகாம் மீனக்ஷீம் ப்ரணதோSஸ்மி ஸந்ததமஹம்
- காருண்யவாராம் நிதிம்!!

பலவிதமான யோகிகள், சிறந்த முனிவர்கள் முதலியவர்களுடைய உள்ளங்களில் நிலையாய் வாசம் செய்பவள். (பக்தர்களுக்கு) விரும்பிய பலவற்றையும் சித்தியையும் அளிப்பவள். பலவிதமான மணமும் நிறமும் நிறைந்த மலர்களால் சோபிக்கின்ற இரு திருவடிகளை உடையவள். மகாவிஷ்ணுவால் பூஜிக்கப்பட்டவள்.

சப்த பிரம்மத்தின் வடிவமாய் இருப்பவள். உலகனைத்திற்கும் மேலான, அதன் காரணமான அவ்யாக்ருத த்துவத்தைக் காட்டிலும் மேலானதும், அதற்கு ஆதாரமாக இருப்பதுமன பரமர்ம ஸ்வருபமாக இருப்பவள். பலவிதமான அர்த்தங்களைக் கொண்ட தத்துவங்களாகவும் இருப்பவள். கருணைக்கடலாக இருப்பவள். அத்தகைய மீனாட்சிதேவியை எப்போதும் வணங்குகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ காமாட்சி ஸ்தோத்திரம்

காமாக்ஷி மாதர் நமஸ்தே - காம தானைகதக்ஷே ஸ்த்திதே பக்தபக்ஷே (காமாக்ஷி)

1. விரும்பியதை அளிக்கும் திறமை உள்ளவரும், பக்தர்களின் பக்கம் இருப்பவளும் ஆகிய காமாட்சி தாயே! உங்களுக்கு வணக்கம்.

காமாரி காந்தே குமாரி - கால காலஸ்ய பர்து: தத்தஹஸ்தே
காமாய காமப்ரதாத்ரீ - காம கோடிஸ்த்த பூஜ்யேகிரம் தேஹி மஹ்யம் (காமாக்ஷி)

2. காமத்திற்கு எதிரியாகிய பரமசிவனின் மனைவியும், (கன்னியா) குமாரியும், காலனுக்குக் காலன் ஆகிய சிவபெருமானின் கரங்களைப் பிடித்தவளும், காமதேவனின் விருப்பத்தை நிறைவேற்றியவளும், துறவிகளால் வழிபடப்படுபவளும் ஆகிய காமாட்சிதேவியே! எனக்கு நல்ல வாக்கைத் தந்தருள்வாய்.

3. ஸ்ரீசக்கரத்தின் நடுவில் வீற்றிருப்பவளும், பூதம் - அரக்கர்கள் - பிசாசுகள் போன்ற துஷ்டர்களைப் போக்குபவளும், ஸ்ரீ காமகோடியில் பிரகாசிப்பவளும், காமத்தை ஒழித்தவர்களால் எளிதில் அடையப்படுபவளும் ஆகிய தங்களைப் பூஜிக்கிறேன். தேவியே! எனக்கு நல்ல வாக்கைத் தந்தருள்வாய்.

இந்த்ராதி மான்யே ஸுதன்யே - ப்ரம்ஹ விஷ்ண்வாதி வந்த்யே கிரீந்த்ரஸ்ய கன்யே
மான்யாம் நமன்பே த்வதன்யாம் - மானி தாங்க்ரிம் முனீந்த்ரைர் பஜே மாதரம்
- த்வாம் (காமாக்ஷி)

4. இந்திரன் முதலிய தேவர்களால் போற்றத் தகுந்தவளும், மேலான பாக்கியம் தருபவளும், பிரம்மா - விஷ்ணு முதலிய தேவர்களால் வழிபடத் தக்கவளும், மலையரசனின் மகளும் ஆகியதங்களைத் தவிர வேறு தெய்வத்தை நான் அறியவில்லை.

பெருமைக்குரிய முனிவர்களால் பூஜிக்கப்பட்ட திருவடிகளை உடைய தாயே! தங்களை வணங்குகிறேன்.

ஸிம்ஹாதி ரூடே நமஸ்தே - ஸாது ஹ்ருத்பத்மகூடே ஹதாக்ஷே மூடே
ரூடம் ஹரத்வதம் கதம் மே - கண்ட சப்தம் த்ருடம் தேஹி வாக்வாதினித்வதம் (காமாக்ஷி)

5. சிம்ம வாகனத்தில் வீற்றிருப்பவளும், சாதுக்களின் இதய தாமரையில் வசிப்பவளும், மூடர்களாகிய அரக்கர்கள் அனைவரையும் அழித்தவளும் ஆகிய வாக்தேவியே! நிலைத்திருக்கும் வியாதியைப் போக்கி, உறுதியான குரல் வளத்தை எனக்குத் தந்தருளுங்கள்.

கல்யான் தாத்ரீம் ஜனித்ரீம் - கஞ்ஜ பத்ராபநேத்ராம்கலாநாதவக்த்ராம்
ஸ்ரீஸ்ந்த புத்ராம் ஸுவஸ்த்ராம - ஸச்ச - ரித்ராம் சிவே த்வாம் பஜே தேஹிவாசம்
- (காமாக்ஷி)

6. நன்மைகளைத் தருபவளும், உலகின் தாயாக விளங்குபவளும், தாமரைப் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களை உடையவளும், சந்திரன் போன்ற முகம் உடையவளும், முருகனைத் தனது மகனாகக் கொண்டவளும், பாட்டாடைகள் அணிந்தவளும், மங்களத்தை அளிக்கும் வரலாற்றை உடையவளும் ஆகிய தங்களை வணங்குகிறேன். தாயே! எனக்கு நல்ல வாக்கைத் தந்தருள்வாய்.

# ஸ்ரீமூக பஞ்ச சதீ

கி. பி 4 ஆம் நூற்றாண்டில் வசித்த ஊமை ஒருவர். அளவற்ற பக்தி கொண்டிருந்ததால் அம்பிகையின் அருளைப் பெற்று 'தாயே' என்று கூப்பிட முயன்றார்.

தன் தகுதிக் குறைவினை நினைத்து வருந்தி அழும் நிலையில், தேவி அவரது எதிரில் கன்னிப்பெண்ணாகத் தோன்றினாள். தன் திருவாயிலிருந்த தாம்பூலத்தை அவரது வாயில் உமிழ்ந்தாள். அக்கணமே பக்திரசம் பொழியும் கவியாக மாறினார் அந்த ஊமை.

அவர் தேவியைத் துதித்துப் பாடிய 500 சுலோகங்களே 'ஸ்ரீமூக பஞ்சசதீ' கி.பி. 398 ஆம் அண்டில் ஸ்ரீகாமகோடி பீடத்தின் 20 வது ஆசாரியராக 'ஸ்ரீமூகசங்கரேந்திர சரஸ்வதீ' என்ற பட்டப் பெயருடன் 39 ஆண்டுகள் பீடாதிபதியாகத் திகழ்ந்தார்.

இந்த மூகபஞ்சசதியில் இருந்து ஒரு சில சுலோகங்களைப் பார்க்கலாமா?

**ஐச்வர்யம் இந்துமௌலே: ஐகாத்ம்யப்ரக்ருதி காஞ்சி மத்யகதம்!**
**ஐந்தவகிசோரசேகரம் ஐதம்பர்யம் சகாஸ்தி நிகமானாம்!!**

சந்திரனைச் சூடிய சிவனுடன் ஐக்கியமான சக்தி சிவபெருமானின் பேராளுமையின் வடிவம் - வேதங்களின் உட்பொருள், பிறைச்சந்திரனைத் தலையில் சூடிக்கொண்டவளுமான சக்தி வாய்ந்த அன்னை காஞ்சியின் நடுவே அமர்ந்து காட்சி தருகிறாள்.

**தரணிமயீம் தரணிமயீம் பவனமயீம் ககனதஹன ஹோத்ரு மயீம்!**
**அம்புமயீம் இந்துமயீம் அம்பாம் அனுகம்பாம் ஆதிமாம் ஈக்ஷே!!**

கம்பை நதிக்கரையில் அருகில், பூமி, சூர்யன், வாயு, ஆகாயம், அக்னி, வேள்வி புரிபவர், நீர், சந்திரன் என எட்டு உருவங்களில் ஆதி அன்னையைக் காண்கிறேன்.

விளக்கம் : தேவியே உலகம். பஞ்ச பூதங்களே மூலப்பொருள். இவை ஸ்தூல, சூக்ஷ்ம சரீரங்களாயின. சூரியனும் சந்திரனும் காலத்தைக் கட்டுப்படுத்துபவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் சலனம் காலத்திற்குட்பட்டதே. பௌதிக உலகத்தையும் காலத்தையும் நல்லிணைப்புச் செய்வதற்கே வேள்விகள். அந்த வேள்விகள் புரிந்து உலகத்தையும் தெய்வத்தையும் தொடர்பு செய்பவரே மாந்தருள் உயர்ந்தவர். ஆகவே இந்த எட்டு பேரும் சிவனுக்கும் பார்வதிக்கும் மூர்த்திகள் என்பதால் தேவியின் உருவை இந்த எட்டிலும் காணலாம்.

**சிவசிவ பச்யந்தி ஸமம் ஸ்ரீகாமாக்ஷீ கடாக்ஷிதா: புருஷா:!**
**விபினம் பவனம் அமித்ரம் மித்ரம் லோஷ்டம் ச யுவதி பிம்போஷ்டம்!!**

சிவ சிவ! (இது என்ன ஆச்சரியம்) ஸ்ரீகாமாக்ஷியின் அருளுக்குப் பாத்திரமானவர்கள் காட்டையும் வீட்டையும், எதிரியையும் நண்பனையும், கோவைப் பழம்போன்ற சிவந்த உதட்டை உடைய பெண்ணையும் ஒட்டாஞ்சல்லியையும் சமமாகப் பார்க்கிறார்களே!

**வித்யே விதாத்ருவிஷயே காத்யாயனி காளி காம கோடி கலே!**
**பாரதி பைரவி பத்ரே சாகினி சாம்பவி சிவே ஸ்துவே பவதீம்!!**

உலகைப் படைக்கும் சக்தியான வித்யையே, சரஸ்வதியே, காத்யாயனியே, காளியே, காமகோடி கலையே பாரதியே, பைரவியே, பத்திரையே, சாகினியே, சாம்பவியே, சிவையே (பார்வதி) உன்னைத் துதிக்கிறேன்.

**ப்ரணதஜனதாபவர்கா க்ருதபஹுஸர்கா ஸஸிம்ஹ ஸம்ஸர்கா!**
**காமாக்ஷி முதிதபர்கா ஹதரிபுவர்கா த்வமேவ ஸா துர்கா!!**

காமாக்ஷியே! தன்னை வணங்கியவருக்கு முக்தி தருபவளும், பல வகை உயிரினங்களைப் படைத்தவளும், சிங்கத்துடன் இருப்பவளும், சிவனை மகிழ்விப்பவளும், எதிரிக்கூட்டத்தை அழித்தவளுமான நீயே துர்க்கை அல்லவா?

**வதனாரவிந்த வக்ஷோவாமாங்க தடீவசம்வதீபூதா!**
**புருஷத்ரிதயே த்ரேதா புரந்த்ரி ரூபா த்வமேவ காமாக்ஷி!!**

காமாட்சியே! பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியவர்ளிடத்தில் முறையே தாமரை போன்ற முகம். நெஞ்சு, மடி என்ற இடங்களில் பதிவிரதையாக நீயே இருக்கிறாய்.

சரஸ்வதியும் லக்ஷ்மியும் பார்வதியுமாகத் தோன்றுபவள் காமாக்ஷியே.

**ஹ்ருத்பங்கஜம் மம விகாஸயது ப்ரமுஷ்ணன் உல்லாஸமுத்பலருசேஸ் தமஸாம் நிரோத்தா!**
**தோஷானுஷங்கஜடதாம் ஜகதாம் துனான: காமாக்ஷி வீக்ஷணவிலாஸதினோதயஸ்தே!!**

காமாக்ஷி! உன் பார்வையின் அழகாகிற பகல் (ஸூர்ய) உதயவேளை, கருநெய்தல் பூவின் ஒளியை மங்கச் செய்வதாக இருட்டைத் தடைசெய்வதாக (உள்ளத்து இருளாகிய அஜ்ஞானத்தை நீக்குவதாக) இரவின் தொடர்பால் ஏற்படுகிற அயர்வை நீக்குவதாக (பாப வினைத் தொடர்பால் நேர்ந்த செயலாற்றல் குறையை நீக்குவதாக) உள்ளது. என் இதயமாகிய தாமரையை அது மலரச் செய்யட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உர்வீதரேந்த்ர கன்யே தர்வீபரிதேன பக்தபூரேண!
குர்வீம் அகிஞ்சனார்த்திம் கர்வீகுருஷே த்வமேவ காமாக்ஷி!!
மலையரசனின் மகளே! காமாக்ஷியே! உணவு பரிமாறக் கரண்டியில் எடுத்த அன்னத்தின் மிகுதியால் ஏழைகளுக்குப் பெரும் துயரைத் தரும் பசியின் கொடுமையைப் போக்கிய அன்னபூரணி நீயே.

விமலபட கமலகுட புஸ்தகருத்ராக்ஷசஸ்தஹஸ்தபுட!
காமாக்ஷி பக்ஷ்மலாக்ஷீ கலிதவிபஞ்சீ விபாஸி வைரிஞ்சீ!!
காமாக்ஷியே! தூய ஆடை அணிந்தவள், தாமரையில் குடி இருப்பவள், புத்தகமும் ருத்ராக்ஷ மாலையும் தாங்குகிற அழகிய உள்ளங்கை உள்ளவள், இமை மயிர் செறிந்த கண்கள் உள்ளவள், அழகிய வீணை ஏந்திய கைகளை உடையவள், பிரம்மாவின் பத்தினி - இந்த சரஸ்வதி தேவியாக நீ விளங்குகின்றாய்.

த்வமேவ ஸதிசண்டிகா த்வமததேவி சாமுண்டிகா த்வமேவ பரமாத்ருகா த்வமஸி யோகிநீரூபிணீ!
த்வமேவ கில சாம்பவீ த்வமிஹ காமகோட ஜயா த்வமேவ விஜயா த்வயித்ரிஜகதம்ப கிம் - ப்ருமஹே!!
ஸதிதேவியே, மூவுலகத்தின் தாயே, நீதான் சண்டிகா, நீயே சாமுண்டி, நீயே மாத்ருகாதேவி, நீயே யோகினி வடிவு உடையவள். நீயே சாம்பவி, நீ அல்லவோ ஜயாவும் விஜயாவும்! என்னால் வேறென்ன சொல்ல முடியும்!

# ஸ்ரீ அம்பா ஸ்தோத்திரம்

துர்வாச மகரிஷியால் இயற்றப்பட்ட ஆர்யாத்விசதீ அல்லது, லலிதா ஸ்தவரத்னம் எனப்படும் ஸ்தோத்திரத்திலிருந்து சில சுலோகங்கள்:
வந்தே கஜேந்த்ரவதனம் வாமாங்காருட வல்லபாச்லிஷ்டம்!
குங்கும பராக சோணம் குவலயினீஜாரகோரகாபீடம்!!
1. இடது மடியிலுள்ள தன் பத்தினியாகிய வல்லபதேவியால் ஆலிங்கனம் செய்யப்பட்டவரும், செங்கழுநீர் புஷ்பத்தை மலரச் செய்யும் சந்திரனைச் சிரசில் தரித்தவரும், குங்குமத்தூள் போன்ற சிவந்த நிறமுள்ளவரும், யானை முகமுடையவருமான மஹா கணபதியை நமஸ்கரிக்கிறேன்.

லலிதா பாது சிரோ மே லலாடமம்பா ச மதுமதீரூபா!
ப்ருயுக்மம் ச பவானீ புஷ்பசரா பாது லோசனத்வந்த்வம்!!
2. எனது சிரசை லலிதாதேவி ரக்ஷிக்க வேண்டும். மதுமதியின் உருவம் கொண்ட அம்பிகை நெற்றியைக் காக்க வேண்டும். பவானியானவள் எனது புருவங்களை ரக்ஷிக்க வேண்டும். மலர்களைப் பாணமாகக் கொண்ட அம்பாள் இரு கண்களையும் காக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயாந்நாஸாம் பாலா ஸுபகா தந்தாம்ச்ச ஸுந்தரீ ஜிஹ்வாம்!
அதரோஷ்டமாதிசக்திச்சக்ரேசீ பாது மே சிரம் சிபுகம்!!

3. பாலையானவள் என் மூக்கையும், பற்களை ஸௌபாக்கியம் வாய்ந்த அம்பிகையும், நாக்கை சுந்தரியும் கீழ் உதட்டை ஆதிசக்தியும், மகவர்க்கட்டையை சக்ரேசியும் வெகு காலம் ரக்ஷிக்க வேண்டும்.

காமேச்வரீ ச கர்ணௌ காமாக்ஷீ பாதுகண்டயோர்யுகளம்!
ச்ருங்காரநாயிகாவ்யாத்வதனம் ஸிம்ஹாஸனேச்வரீ ச கலம்!!

4. காதுகளை காமேச்வரியும் இரு கன்னப்பிரதேசங்ளை காமாட்சியும் சிருங்கார நாயகியானவள் முத்தையும் சிம்மாசனேச்வரி கழுத்தையும் ரக்ஷிக்கட்டும்.

ஸ்கந்தப்ரஸூச்ச பாது ஸ்கந்தௌ பாஹூச பாடலாங்கீ மே!
பாணீ ச பத்மநிலயா பாயாதனிசம் நகாவலீர்விஜயா!!

5. ஸ்ரீஸ்கந்தனின் தாயானவள் என் இரண்டு தோள்களையும், கைகளைப் பாடலாங்கியும், கரதலங்களைப் பத்மத்தில் வசிப்பவளும் (பத்மநிலயா என்றவளும்), நகங்களின் வரிசையை விஜயை ஆனவளும் எப்போதும் ரக்ஷிக்கட்டும்.

கோதண்டினீ ச வக்ஷ: குக்ஷிம் சாவ்யாத் குலாசலதனூஜா!
கல்யாணீ ச வலக்னம் கடிம் ச பாயாத்கலாதரசிகண்டா!!

6. மார்பை கோதண்டினியும், வயிற்றை பர்வதராஜகுமாரியும், கல்யாணியானவள் நடுபாகத்தையும் சந்திரபிம்பத்தைத் தலை ஆபரணமாகக் கொண்டவள் இடுப்பையும் ரக்ஷிக்கட்டும்.

ஊருத்வயம் ச பாயாதுமா ம்ருடானீ ச ஜானுனீ ரக்ஷேத்!
ஜங்கே ச ஷோடசீ மே பாயாத்பாதௌ ச பாசஸ்ருணிஹஸ்தா!!

7. உமையானவள் எனது இரு தொடைகளையும், ம்ருடானீயானவள் இரு முழங்கால்களையும், ஜங்கப்பிரதேசத்தை ஷோடசியும், பாசம், ஸ்ருணி இவைகளைத் தரித்த அம்பாள் கால்களையும் ரக்ஷிக்கட்டும்.

ப்ராத: பாது பரா மாம் மத்யான்ஹே பாது மணிக்ருஹாதீசா!
சர்வாண்யவது ச ஸாயம் பாயாத்ராத்ரௌ ச பைரவீ ஸாக்ஷாத்!!

8. பராபட்டாரிகை காலையிலும், பகலில் மணிமயமான கிருஹத்திற்கு நாயகியும். மாலையில் சர்வாணியும், இரவில் ஸாக்ஷாத் பைரவியும் (வாராஹி) என்னை ரக்ஷிக்கட்டும்.

பார்யாம் ரக்ஷது கௌரீ பாயாத் புத்ராம்ச்ச பிந்துக்ருஹபீடா!
ஸ்ரீவித்யா ச யசோ மே சீலம் சாவ்யாச்சிரம் மஹாராக்ஞீ!!

9. எனது பத்தினியை கௌரியானவள் ரக்ஷிக்கட்டும். எனது புத்திரர்களை பிந்துக்ருஹதில் அமர்ந்தவள் ரக்ஷிக்கட்டும். எனதுகீர்த்தியை ஸ்ரீவித்யையும், எனது நடத்தையை மஹாராக்ஞியானவளும் எப்போதும் ரக்ஷிக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவனமயி பாவகமயி க்ஷோணீமயி ககனமயி க்ருபீடமயி!
ரவிமயி சசிமயி திங்மயி ஸமயமயி ப்ராணமயி சிவே பாஹி!!

10. காற்று, தீ, பூமி ஆகாசம், நீர், சூரியன், சந்திரன், திசைகள், எமன், பிராணன் என்ற இந்த எல்லா உருவங்களாகவும் உள்ள ஓ மங்களமானவளே, என்னைக் காக்க வேண்டும்.

காளி கபாலினி சூலினி பைரவி மாதங்கி பஞ்சமி த்ரிபுரே!
வாக்தேவி விந்த்யவாஸினி பாலே புவனேசி பாலய சிரம் மாம்!!

11. காளி கபாலினி, சூலினி, பைரவி, மாதங்கி, பஞ்சமி, த்ரிபுரை, வாக்தேவி, விந்த்யவாசினி, பாலை, புவனேச்வரி என்று பல பெயர்களை உடைய ஹே, அம்பிகையே! என்னை நீ எப்போதும் காக்க வேண்டும்.

அபிநவஸிந்தூராபாமம்ப த்வாம் சிந்தயந்தி யே ஹ்ருதயே!
உபரி நிபதந்தி தேஷாமுத்பலநயனா கடாக்ஷகல்லோலா:!!

12. எவர்கள் தங்களது இருதயத்தில் புதிதான குங்குமம் போல் சிவந்த நிறமுள்ள தங்களைத் தியானம் செய்கின்றார்களோ அந்தப் பக்தர்களின் பேரில் ஸ்ரீமகாலக்ஷ்மியின் அருள் அலைகள் எப்போதும் விழுந்து கொண்டிருக்கும்.

வர்காஷ்டகமிலிதாபிர்வசினீ முக்யாபிராவ்ருதாம் பவதீம்!
சிந்தயதாம் ஸிதவர்ணாம் வாசோ நிர்யாந்த்யயத்நதோ வதனாத்!!

13. அ, க, ச, ட, த, ப, ய, ச என்ற வர்க்காஷ்டகங்களோடு கூடிய வசினீ முதலியவர்களால் சூழப்பட்ட வெண்ணிறமான தங்களைத் தியானிக்கிறவர்களுடைய முகத்திலிருந்து அழகிய சொற்கள் வெளிவருகின்றன.

கனகசலாகாகௌரீம் கர்ண வ்யாலோலகுண்டலத்விதயாம்!
ப்ரஹஸிதமுகீம் ச பவதீம் த்யாயந்தோ யே த ஏவ பூதனதா:!

14. பொன் கம்பி போன்ற நிறமும், காதுகளில் அசையும் குண்டலங்களும், சிரித்த முகமும் உடைய தங்களை எவர்கள் தியானம் செய்கிறார்களோ, அவர்கள் பூமியில் வசிக்கும் குபேரர்கள் ஆவார்கள்.

சீர்ஷாம்போருஹமத்யே சீதளபீயூஷ வர்ஷிணீம் பவதீம்!
அனுதினமனுசிந்தயதாமாயுஷ்யம் பவதி புஷ்கலமவன்யாம்!!

15. சிரசின் நடுவில் சீதமான அமிர்தத்தை பொழிந்து கொண்டிருக்கும் தங்களை அன்றாடம் தியானிப்பவர்களுக்கு அளவற்ற ஆயுள் இவ்வுலகில் உண்டகிறது.

மதுரஸ்மிதாம் மதாருணநயனாம் மாதங்ககும்பவக்ஷோஜாம்!
சந்த்ராவதம்ஸினீம் த்வாம் ஸவிதே பச்யந்தி ஸுக்ருதின: கேசித்!!

16. மதுரமான சிரிப்பை உடைய, மதத்தினால் சிவந்த கண்களை உடைய, யானையின் தலைபோல் கடினமான ஸ்தன பாரத்தை உடைய, சந்திர கலையைத் தரித்தவளான தங்களைப் புண்ணியசாலிகளான சில உபாசகர்கள் தமது பக்கத்திலேயே காண்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லலிதாயா: ஸ்தவரத்னம் லலிதபதாபி: ப்ரணீதமார்யாபி:!
ப்ரதிதினமவனௌ படதாம் பலானி வக்தும் ப்ரகல்பதே ஸைவ!!

17. லலிதமான பதங்களுடைய ஆர்யா விருத்தத்தில் செய்யப்பட்ட ஸ்ரீலலிதாதேவியின் ஸ்தோத்திர ரத்னமாகிய இந்த ஸ்துதியை இவ்வுலகில் தினமும் படிப்பவர்களுக்கு என்ன பலன் ஏற்படும் என்பதைச் சொல்வதற்கு அந்த லிலிதாதேவியே தகுதி உள்ளவளாக ஆகிறாள்.

# ஷட்பதி ஸ்தோத்திரம்

ஆவிநய மபநய விஷ்ணோ தமய மந: சமய விஷய ம்ருக த்ருஷ்ணாம்!
பூத தயாம் விஸ்தாரய தாரய ஸம்ஸார ஸாகரத:!

ஹே விஷ்ணுவே! எனது அடக்கமில்லாமையைப் போக்குவாயாக. உள்ளே எழுகிற எண்ணத்தையே அடக்கிவிடு. கானல்நீரைத் தேடி ஓடிஓடிப் போய்க்கடைசியில் வெயில் தாளாமல் உயிரை விடுகின்ற மான்கள் போல் என் இந்தரியங்கள் பலவிதமான அல்பசுகங்களைத் தேடித்தேடி வீணாகாமல் காப்பாற்றுவாயாக. அதாவது புலன்களின் வேட்கையை அடக்குவாயாக.

உயிர்க்குலம் முழுவதிடமும் என் அன்பையும் தயையையும் விரிவாக்குவாய். சம்சாரமாகிற (பிறப்பு - இறப்புச் சுழலிலிருந்து) கடலிருந்து கரையேற்றுவாய்!

திவ்ய துனீ மகரந்தே பரிமள பரிபோக ஸச்சிதானந்தே!
ஸ்ரீபதி பதார விந்தே பவபய கேதச்சிதே வந்தே!!

சச்சிதானந்தனான ஆகாச கங்கையான தேனைப் பொழிந்து கொண்டும், சுகந்தமாக மணம் வீசிக் கொண்டிருப்பதும் சம்சார பயத்தையும், துக்கத்தையும் சிதைத்து அழிப்பதுமான ஸ்ரீபதியின் தாமரை போன்ற பாதங்களை நமஸ்கரிக்கின்றேன்.

ஸத்யபி பேதாபகமே நாத தவாஹம் ந மாமகீனஸ் த்வம்!
ஸாமுத்ரோஹி தரங்க: க்வசந ஸமுத்ரோ ந தாரங்க:!!

பகவானே! நீயும் நானும் வேறாக இருக்கிறபேதம் போய்விட்டாலும்கூட நான் உடைமை - நீ உடைமையாளன். நீ என்னைச் சார்ந்து என் உடைமையாக இருப்பதில்லை. அலை இல்லாமல் சாந்தமாகக் கடல் இருக்கலாம் ஆனால் கடல் இல்லாமல் அலை இருக்கமுடியாது. அதுபோல் நீ இல்லாமல் நான் இல்லவே இல்லை.

உத்த்ருதநக நகபிதனுஜ தனுஜகுலாமித்ர மித்ரசசி த்ருஷ்டே!
த்ருஷ்டே பவதி ப்ரபவதி ந பவதி கிம் பவதிரஷ்கார:!!

கிருஷ்ணாவதார காலத்தில் இந்திரனின் கர்வத்தை அடக்கி அவனை அடிபணிய வைக்க கொவர்த்ன மலையைத் தூக்கியவரே! வாமன அவதாரத்தில் அதே இந்திரனுக்குச் சகோதரனாகப் பிறந்து மகாபலியை அடக்கி, இந்திரனுக்குத் தேவலோக ஆதிபத்தியத்தை மீட்டுக் கொடுத்தவரே! அசுர குலத்திற்குப் பகைவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனையும் சந்திரனையும் கண்காளகக் கொண்டவரே! தங்களிடத்தில் எங்கள் திருஷ்டி ஏற்பட்டுவிட்டால் (உங்கள் தரிசனம் கிடைத்துவிட்டால்) இந்த உலகத்தில் பிறப்பு - இறப்புச் சுழலாகிற சம்சாரத்திலிருந்து நீக்கம் உண்டாகாமல் இருக்கலாமா?

**மத்ஸ்யாதிபிரவதாரைரவதாரவதாSவதா ஸதா வஸு"தாம்!**
**பரமேச்வர பரிபால்யோ பவதா பவதாபபீதோஹம்!!**

இப்படியே உலகத்தை மத்ஸ்யம் (மீன்) முதலான அவதாரங்களால் எப்போதும் காப்பாற்றுகிற பரமேச்வரா! சம்சார தாபத்தினால் பயந்து கிடக்கின்ற நானும் உன்னால் ரக்ஷிக்கப்பட வேண்டியவனல்லவா?

**தாமோதர குணமந்திர ஸு"ந்தர வதநாரவிந்த கோவிந்த!**
**பவ ஜலதி மதந மந்தர பரமம் தரமபநய த்வம்மே!!**

6. ஹே தாமோதரா! அனந்த கல்யாண குணங்கள் யாவும் கூடியவனே! தாமரை போன்ற அழகான முகம் படைத்தவனே! சகல ஜீவராசிகளையும் ரட்சிக்கிற கோவிந்தா! சம்சாரக் கடலைக் கடைகிற மந்தர மலையாக இருப்பவனே! என் மகா பயத்தைப் போக்குவாயாக.

**நாராயண கருணாமய சரணம் கரவாணி தாவகௌ சரணௌ!**
**இதி ஷட்பதீ மதீயே வதநஸரோஜே ஸதா வஸது!!**

7. நாராயணனே! கருணை வடிவானவனே! உனது இரு பாதங்களை அடைக்கலமாகக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஷட்பதீ ஸ்தோத்திரமான வண்டானது எனது வாயாகிய தாமரையில் எப்பொழுதும் நிலைத்து இருக்கட்டும்.

# ஸ்ரீ கிருஷ்ண அஷ்டோத்திரம்

1. ஓம் ஸ்ரீ க்ருஷ்ணாய நம : - கருமை நிறம் கொண்ட பகவானுக்கு வணக்கம்.
2. ஓம் கமலாநாதாய நம :- லக்ஷ்மியின் பதியான நாராயணனே மனித உடலில் கிருஷ்ணனாக அவதரித்ததால் இந்தப் பெயர்.
3. ஓம் வாஸு"தேவாய நம :- அனைத்திலும் இருந்தும், மாயையால் மறைத்து வைத்தும் விளையாடுபவர்.
4. ஸநாதனாய நம :- அனாதியாகக் கால வடிவமாக இருப்பவர்.
5. வஸு"தேவாத்மஜாய நம :- வசுதேவருக்கு மகனாகப் பிறந்தவர்
6. புண்யாய நம :- எல்லாப் பாவங்களையும் போக்கும் தூய்மையே வடிவெடுத்தவர்.
7. லீலாமானுஷ விக்ரஹாய நம :- அவதார நோக்கத்திற்காக விளையாட்டாக மனித உடல் எடுத்தவர்.
8. ஸ்ரீவத்ஸ - கௌஸ்துபதராய நம :- மார்பில் ஸ்ரீவத்ஸம் என்ற அடையாளத்தையும், கழுத்தில் கௌஸ்துபமணி மாலையையும் அணிந்தவர்.
9. யசோதாவத்ஸலாய நம :- யசோதையின் அன்பிற்குரிய குழந்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஹரயே நம :- பிறப்பு இறப்பு என்ற சுழலிலிருந்து விடுதலை அளிப்பவர்.
11. சதுர்ப்புஜாத்த - சக்ராஸி கதா சங்காத்யுதாயு தாய நம :- நான்கு கைகளில் சக்கரம், வாள், கதை, சங்கு ஆகியவற்றை ஆயுதமாக ஏந்தியிருப்பவர்.
12. தேவகீநந்தனாய நம :- தேவகியின் மகனாகப் பிறந்தவர்.
13. ஸ்ரீசாய நம :- எல்லாச் செல்வத்திற்கும் யஜமானர்.
14. நந்தகோப - ப்ரியாத்தமஜாய நம :- நந்தகோபரின் அன்பு மகன்
15. யமுனாவேக ஸம்ஹாரிணே நம :- யமுனை நதியின் வேகத்தை (கர்வத்தை) அடக்கியவர்.
16. பலபத்ர ப்ரியானுஜாய நம :- பலராமரின் அன்பார்ந்த தம்பி.
17. பூதனாஜீவிதஹராய நம :- பூதனை என்ற அரக்கியின் உயிரைப் பறித்தவர்.
18. சகடாஸுர பஞ்ஜனாய நம :- சகடன் என்ற அசுரனை அழித்தவர்.
19. நந்தவ்ரஜ - ஜனானந்தினே நம :- நந்தகோபன் முதலிய இடையர் கூட்டத்திற்கு மகிழ்ச்சியை அளித்தவர்.
20. ஸச்சிதானந்த :- விக்ரஹாய நம :- சச்சிதானந்த வடிவமானவர்.
21. நவநீத - விலிப்தாங்காய நம :- வெண்ணையை உண்ணும்போது உடல் முழுவதும் பூசிக்கொண்டவர்.
22. நவநீத நடாய நம :- கோபிகைகளின் வீடுகளில் வெண்ணையைத் திருடும்போது ஒன்றும் அறியாதவர்போல் பலவிதமாக நடித்தவர்.
23. அனகாய நம :- புதிதாகக் கடைந்த வெண்ணையைச் (சுவைத்து) சாப்பிடுபவர்.
24. நவநீத - நவாஹாராய நம :- புதிதாகக் கடைந்த வெண்யையைச் (சுவைத்து) சாப்பிடுபவர்.
25. முசுகுந்த ப்ரஸாதகாய நம:- முசுகுந்தன் என்ற இட்சுவாகு வம்ச அரசனுக்கு அருள் புரிந்தவர்.
26. ஷோடசஸ்த்ரீ ஸஹஸ்ரேசாய நம :- பதினாறாயிரம் பெண்களைத் திருமணம் செய்து கொண்டவர்.
27. த்ரிபங்கி - மதுராக்ருதயே நம - (பக்தர்களின் பத்திக்குக் கட்டுப்பட்டு குழலூதும் கண்ணனாக) மூன்று இடங்களில் வளைந்து மனதைக் கவரும் மிகவும் அழகிய உடலைக் கொண்டவர்.
28. சுகவாகம்ருதாப் தீந்தவே நம :- சுகமுனிவரின் வாக்கு என்ற அமுதக்கடலில் சந்திரன்போல் பிரகாசிப்பவர்.
29. கோவிந்தாய நம :- கோவர்த்தன மலையைத் தூக்கியதால் கோவிந்தன் என்று பெயர் பெற்றார். (அல்லது, வேத வாக்கியங்களால் அறியப்படுபவர் என்பதால் கோவிந்தன் என்று பெயர்.
30. யோகினாம்பதயே நம :- யோகிகளுக்குத் தலைவராக இருப்பவர்.
31. வத்ஸவாடசராய நம :- கன்றுகளை மேய்த்துக் கொண்டு காட்டில் சஞ்சரித்தவர்.
32. அனந்தாய நம :- எங்கும் வியாபித்திருபதாலும், எக்காலத்திலும் அழியாதிருப்பதாலும், எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருப்பதாலும், இடம், காலம், பொருள் ஆகிய மூன்றாலும் அளவிட இயலாதவர்.
33. தேனுகாஸுரமர்த்தனாய நம :- தேனுகாசுரனைக் கொன்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. **த்ருணீக்ருத - த்ருணாவர்த்தாய நம** :- திருணாவர்த்தனம் என்ற அரக்கனைத் துரும்புபோல் அழித்தவர்.

35. **யமலார்ஜுன - பஞ்ஜனாய நம** :- இரட்டை மருத மரங்களை முறித்து (நாரதரின் சாபத்தால் மருத மரங்கள் ஆகியிருந்த) நளகூபர மணிக்ரீவர்களுக்கு சாபவிமோசனம் அளித்து அனுக்கிரகம் செய்தவர்.

36. **உத்தாலதாலபேத்ரேனாய நம** :- தேனுகாசுரனைக் கொல்லும்போது, உரயமான பனை மரங்களை முறித்து வீழ்த்தியவர்.

37. **தமால ச்யாமலாக்ருதயே நம** :- தமாலமரம் போன்ற கறுப்பு நிறம் கொண்ட உடலை உடையவர்.

38. **கோப - கோபீச்வராய நம** :- கோபர்களுக்கும், கோபிகைகளுக்கும் தலைவனாக இருந்து அருள் புரிந்தவர்.

39. **யோகினே நம** :- ஞானயோகத்தால் அடையப்படுபவர். (அல்லது, சிறந்த யோகியாகத் திகழ்பவர்)

40. **கோடிஸூர்யஸமப்ரபாய நம** :- கோடி சூரியன்கள் ஒன்று சேர்ந்ததைப்போன்ற பிரகாசம் உள்ளவர். (இது விஸ்வரூபத்தில் அர்ஜுனனுக்குக் காட்டிய வடிவம்)

41. **இலாபதயே நம** :- பசுக்களைக் காப்பாற்றுபவர் (அல்லது பூமி, நீர், முதலிய பஞ்சபூதங்களை உண்டாக்கியவர்)

42. **பரஸ்மைஜ்யோதிஷே நம** :- எல்லாவற்றிற்கும் மேலான பரப்பிரம்மமாகப் பிரகாசிப்பவர்.

43. **யாதவேந்த்ராய நம** :- யது வம்சத்தின் சிறந்த தலைவர்.

44. **யதூத்வஹாய நம** :- யது குலத்தைச் சிறப்படையச் செய்தவர்.

45. **வனமாலினே நம** :- வைஜயந்திமாலையை அணிந்திருப்பவர்.

46. **பீதவாஸஸே நம** :- மஞ்சள் நிற ஆடையை அணிந்தவர்.

47. **பாரிஜாதாபஹாரகாய நம** :- சத்யபாமாவின் விருப்பத்தின் பேரில் தேவலோகத்திலிருந்து பாரிஜாத மரத்தை வேருடன் பிடுங்கி (இந்திரனின் எதிர்ப்பைத் தவிர்த்துவிட்டு) துவாரகைக்கு எடுத்து வந்தவர்.

48. **கோவர்த்தனாசலோத்தர்த்ரே நம** :- கோவர்த்தன மலையைத் தூக்கிக் குடையாகப் பிடித்தவர்.

49. **கோபாலாய நம** :- பசுக்களை நன்றாகப் பரிபாலித்தவர்.

50. **ஸர்வபாலகாய நம** :- எல்லோருடைய நலன்களையும் (யோகக்ஷேமங்களையும்) கவனித்து பாதுகாப்பவர்.

51. **அஜாய நம** :- பிறப்பற்றவர்.

52. **நிரஞ்ஜனாய நம** :- மாசற்றவர் (களங்கமற்றவர்)

53. **காமஜனகாய நம** :- பக்தர்களின் உள்ளத்தில் நல்ல விருப்பங்களைத் தோற்றுவிப்பவர். (அல்லது, 'காமன்' என்னும் பிரத்யும்னனின் தந்தை)

54. **கஞ்ஜலோசனாய நம** :- நீரில் தோன்றும் நீலோத்பலமும் தாமரையும் போன்ற கண்களை உடையவர். (அல்லது, தன் பார்வையால் பிரம்மாண்டத்தைச் சிருஷ்டித்து காப்பாற்றுபவர்.)

55. **மதுக்னே நம** :- மது என்ற அரக்கனைக் கொன்றவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. மதுராநாதாய நம :- மதுராபுரியின் தலைவர்
57. த்வாரகாநாயகாய நம :- துவாரகையை ஸ்தாபித்தவர்.
58. பலினே நம:- மிகவும் வலிமை பொருந்தியவர்.
59. ப்ருந்தாவனாந்த ஸஞ்சாரிணெ நம :- பிருந்தாவனத்தில் (மாடு, கன்றுகளை மேய்த்து) சஞ்சரித்தவர்.
60. துளஸீதாம - பூஷணாய நம :- துளசிமாலையால் அலங்கரிக்கப்பட்டவர்.
61. ஸ்யமந்தகமணேர்ஹர்த்தே நம :- சியமந்தக மணியைத் திருடினார் என்று தவறாகக் குற்றம் சாற்றப்பட்டு, அந்த மணியை ஜாம்பவானிடமிருந்து மீட்டு வந்து, அதன் சொந்தக்காரரான சத்ரஜித்துக்குக் கொடுத்தவர்.
62. நரநாராயணாத்மகாய நம :- நர நாராயணர்களாக அவதரித்தவர்.
63. குப்ஜாக்ருஷ்டாம்பரதராய நம :- கம்சனின் வேலைக்காரியின் கூனை நிமிர்த்தி, அவள் அளித்த வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொண்டவர்.
64. மாயினே நம :- பக்தர்களுக்கும் மாயையைக் கொடுத்தும் நீக்கியும் அருள் புரிபவர்.
65. பரமபூருஷாய நம :- எல்லா உயிர்களிலும் குடிகொண்டிருப்பவர்.
66. முஷ்டிகாஸுர சாணூர மல்யுத்த விசாரதாய நம :- முஷ்டிகாசுரன், சாணூரன் என்ற இரண்டு மல்யுத்த வீரர்களை மல்யுத்தத்தில் சாமர்த்தியமாக வென்றவர்.
67. ஸம்ஸார வைரிணே நம :- பக்தர்களின் உலகப் பற்றுக்களுக்குப் பகைவனாக இருந்து, அந்தப் பற்றுகளை அழிப்பவர்.
68. கம்ஸாரயே நம :- கம்சனுக்குப் பகைவர்
69. முராரயே நம :- முரன் என்ற அரக்கனைக் கொன்றவர்
70. நரகாந்தகாய நம :- நரகாசுரனை வதம் செய்தவர்.
71. அநாதிப்ரஹ்மசாரிணே நம :- பிரம்மசரிய விரதத்தை எப்போதும் கடைப்பிடித்தவர்.
72. க்ருஷ்ணாவ்யஸன - கர்சகாய நம :- திரௌபதியின் துன்பங்களைப் போக்கியவர்.
73. சிசுபாலசிரச்சேத்ரே நம :- சிசுபாலனின் தலையை வெட்டி வீழ்த்தியர்.
74. துர்யோதன - குலாந்தகாய நம :- துரியோதனின் குலத்தை அழித்தவர்.
75. விதுராக்ரூர - வரதாய நம :- சிறந்த பக்தர்களான விதுரருக்கும், ஆக்ரூரக்கும் வரமளித்தவர்.
76. விச்வரூப - ப்ரதர்சகாய நம :- அர்ஜுனனுக்கு விஸ்வரூபத்தைக் காட்டியவர். (அல்லது, யசோதைக்குத் தனது எங்கும் பரவியிருக்கும் தெய்விக வடிவத்தைக் காட்டியவர்.
77. ஸத்யவாசே நம :- கொடுத்த வாக்கை நிறைவேற்றுபவர்.
78. ஸத்யஸங்கல்பாய நம :- சத்தியத்தையே விரதமாகக் கொண்டவர்
79. ஸத்யபாமாரதாய நம :- சத்யபாமாவுக்குப் பிரியமானவர். (அல்லது, சத்யபாமாவிடம் மிகவும் பிரியமுள்ளவர்)
80. ஜயினே நம :- எப்போதும் வெற்றி பெறுபவர். (அல்லது, எல்லோருடைய மனதையும் கவர்பவர்)
81. ஸுபத்ராபூர்வஜாய நம :- சுபத்திரைக்கு முன் பிறந்தவர். (சுபத்திரையின் அண்ணன்)
82. விஷ்ணவே நம :- எங்கும் வியாபித்திருப்பதால் விஷ்ணு என்று பெயர் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. **பீஷ்மமுக்தி - ப்ரதாயகாய நம** :- பீஷ்மருக்கு முக்தியை அளித்தவர்.
84. **ஜகத்குரவே நம** :- உலகத்திற்கு (முதல்) குருவாக விளங்குபவர்.
85. **ஜகந்நாதாய நம** :- உலகிற்கெல்லாம் அதிபதி.
86. **வேணுநாத விசாரதாய நம** :- புல்லாங்குழல் ஊதுவதில் திறமைசாலி.
87. **வ்ருஷபாஸுரவித்வம்ஸினே நம** :- காளை வடிவத்தில் வந்த அசுரனைக் கொன்றவர்.
88. **பாணாஸுரகராந்தகாய நம** :- பாணாசுரனின் கைகளை வெட்டி வீழ்த்தியவர். (சிவபெருமான் கேட்டுக்கொண்டதால் பாணாசுரனின் உயிர் காப்பாற்றப்பட்டது)
89. **யுதிஷ்டிர - ப்ரதிஷ்டாத்ரே நம** :- யுதிஷ்டிரரை அரசராக நிலைக்கச் செய்தவர்.
90. **பர்ஹிபர்ஹாவதம்ஸகாய நம** :- மயில்பீலியைத் தலையில் ஆபரணமாகக் கொண்டவர்.
91. **பார்த்தஸாரதயே நம** :- அர்ஜுனனுக்குத் தேரோட்டியாக இருந்தவர்.
92. **அவ்யக்தாய நம** :- யாராலும் அறிந்து கொள்ள முடியாத சூட்சும சொரூபமுள்ளவர்.
93. **கீதாம்ருத மஹோததயே நம** :- பகவத்கீதை என்ற அமுதத்தைப் பெரிய கடல் போன்று பொழிந்தவர்.
94. **காளீயபணி - மாணிக்ய - ரஞ்ஜித ஸ்ரீபதாம்புஜாய நம** :- காளியன் என்ற பாம்பின் மீது நடனமாடியபோது, அதன் தலையில் இருக்கும் மாணிக்கங்களின் ஒளியால் சிவப்பு நிறமாகப் பிரகாசிக்கும் அழகியே தாமரைப் போன்ற பாதங்களை உடையவர்.
95. **தாமோதராய நம** :- யசோதையால் வயிற்றில் கயிற்றால் கட்டப்பட்டவர்.
96. **யக்ஞ - பொக்த்ரே நம** :- யாகத்தை அனுபவிப்பவர்.
97. **தானவேந்த்ர விநாசகாய நம** :- தானவர் என்ற அசுரக் கூட்டத்தின் தலைவனை அழித்தவர்.
98. **நாராயணாய நம** :- நாராயணன் என்றும் அழைக்கப்படுபவர்.
99. **பரப்ரஹ்மணே நம** :- ஒன்றேயாகிய பரப்பிரமம்மம்.
100. **பன்னகாசன வாஹனாய நம** :- கருடனை வாகனமாகக் கொண்டவர்.
101. **ஜலக்ரீடாஸமாஸக்த கோபீவஸ்த்ராய ஹாரகாய நம** :- நீரில் விளையாடிக் கொண்டிருந்த கோபிகைகளின் ஆடைகளை அபகரித்து, அவர்களின் உடல்பற்றை நீக்கி அருள் புரிந்தவர்.
102. **புண்யச் லோகாய நம** :- பெயரைச் சொன்னமாத்திரத்திலேயே பாவத்தைப் போக்குபவர்.
103. **தீர்த்தபாதாய நம** :- தன் பாதம் படும் இடம் எல்லாவற்றையும் புனிதமாக்குபவர்.
104. **வேதவேத்யாய நம** :- வேதத்தில் அறியப்படுபவர். (அல்லது, வேதத்தை நன்கு அறிந்தவர்)
105. **தயாநிதயே நம** :- தயை நிறைந்தவர்.
106. **ஓம் ஸர்வபூதாத்மகாய நம** :- எல்லா உயிர்களிலும் ஆத்மாவாக இருப்பவர்.
107. **ஓம் ஸர்வக்ரஹரூபிணே நம** :- விராட சொரூபத்தில் எல்லா கிரகங்களின் வடிவமும் ஆனவர்.
108. **ஓம் பராத்பராய நம** :- எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கிருஷ்ணாஷ்டகம்

ச்ரியா ச்லிஷ்டோ விஷ்ணு: ஸ்திர சர குருர் வேதவிஷயோ
தியாம் ஸாக்ஷீ சுத்தோ ஹரிரஸுர ஹந்தாSப்ஜநயன:!
கதீ - சங்கீ - சக்ரீ விமல வனமாலீ ஸ்திரருசி:
சரண்யோ லோகேசோ மம பவது க்ருஷ்ணோSக்ஷிவிஷய:!!

1. லக்ஷ்மி தேவியால் ஆலிங்கனம் செய்து கொள்ளப்பட்டவர்; எங்கும் இருப்பவர்; குருவானவர்; வேதங்களால் விளக்கப்பட்டவர்; புத்தியின் விருத்திக்குச் (போக்குக்கு) சாட்சியாக விளங்குபவர்; நிர்மலமானவர்; பாவங்களைப் போக்குபவர்; அசுரர்களை வதைப்பவர்; தாமரை போன்ற கண்களை உடையவர்.

சங்கு, சக்கரம், கதை எனும் ஆயுதங்களை ஏந்தியவர்; தூய வனமாலையில் நாட்டம் உடையவர்; புகலிடமாக ஏற்கத்தக்கவர்; உலகங்கள் அனைத்துக்கும் ஈசுவரன் இப்படிப்பட்ட ஸ்ரீகிருஷ்ணன் என் கண்களுக்குப் புலனாகட்டும். (எனக்குத் தரிசனம் அளிப்பாராக)

**யத: ஸர்வம் ஜாதம் வியதநில முக்யம் ஜகநிதம்**
**ஸ்திதௌ நிச்சேஷம் யோSவதி நிஜ ஸுகாம்சேன மதுஹா!**
**லயே ஸர்வம் ஸ்வஸ்மின் ஹரதி கலயா யஸ்து ஸவிபு:**
**சரண்யோ லோகேசோ மம பவது க்ருஷ்ணோSக்ஷிவிஷய:!!**

2. ஆகாசம், வாயு முதலிய பஞ்ச பூதங்களாலான இந்த உலகம் முழுவதையும் படைத்தவர் கிருஷ்ணரே. மது என்ற அசுரனை வதைத்தவரும் அவரே. தனது ஆனந்தத்தின் ஒரு பகுதியைக் கொண்டே (சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்னும்) மூன்று செயல்களில் ஸ்திதி காலத்தில் ஒன்றுவிடாமல் அனைத்தையும் காப்பாற்றுபவர் அவரே.

தமது ஓர் அம்சத்தால் பிரளய காலத்தில் எல்லாவற்றையும் தம்முள் அடக்கிக் கொண்டவரும் அவரே. அனைத்திலும் பரவியிருப்பவரும். அவரே, புகலிடமாக ஏற்கத்தக்கவர்; உலகங்கள் அனைத்திற்கும் ஈசுவரன் - இப்படிப்பட்ட கிருஷ்ணன் எனக்குத் தரிசனம் அளிப்பாராக.

**அஸுநாயம் - யாதௌ யம நியம முக்யை: ஸுகரணை:**
**நிருத்த்யேதம் சித்தம் ஹ்ருதி விலயமானீய ஸகலம்!**
**யமீட்யம் பச்யந்தி ப்ரவர மதயோ மாயினமஸௌ**
**சரண்யோ லோகேசோ மம பவது க்ருஷ்ணோSக்ஷிவிஷய:!!**

3. சிறந்த புத்தியுள்ளவர்கள் முதலில் பிராணனை அடக்குகிறார்கள். பின்னர் யமம், நியமம் முதலிய சிறந்த சாதனங்களால் மனதைத் தடுத்து நிலைநிறுத்துகிறார்கள். எண்ணங்கள் எல்லாவற்றையும் இதயத்தில் லயமடையச் செய்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிச் செய்து அவர்கள் மாயாவியான, துதிப்பதற்குரிய கடவுளைக் காண்கிறார்கள். அவரே புகலிடமாக ஏற்கத் தக்கவர்; உலகங்கள் அனைத்துக்கும் ஈசுவரன் இப்படிப்பட்ட கிருஷ்ணன் எனக்குத் தரிசனம் அளிப்பாராக.

**ப்ருதிவ்யாம் திஷ்டன்யோ யமயதி மஹீம் வேத நதரா**
**யமித்யாதௌ வேதோ வததி ஜகதாமீசமமலம்!**
**நியந்தாரம் த்யேயம் முனி ஸுர - ந்ருணாம் மோக்ஷதமஸௌ**
**சரண்யோ லோகேசோ மம பவது க்ரஷ்ணோSக்ஷிவிஷய:!!**

4. பூமியில் இருந்து கொண்டு பூமியை ஆள்பவர்; ஆனால் பூமி தேவியால் அறியப்பட மாட்டாதவர்; வேதம் இவரையே உலகங்களுக்கு நாயகன்; தோஷங்கள் அற்றவர்; (அனைத்தையும்) அடக்குபவர், தியானிக்கத்தகுந்தவர், முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் மனிதர்களுக்கு முக்தியைத் தருபவர் என்றெல்லாம் வர்ணிக்கிறது. அவரே புகலிடமாக ஏற்கத்தக்கவர்; உலகங்கள் அனைத்துக்கும் ஈசுவரன். இப்படிப்பட்ட ஸ்ரீகிருஷ்ணன் எனக்குத் தரிசனம் அளிப்பாராக.

**மஹேந்த்ராதிர் தேவோ ஜயதி திதிஜான்யஸ்ய பலதோ**
**ந கஸ்ய ஸ்வாத்ந்த்ர்யம் க்வசிதபி க்ருதௌ யத் க்ருதிம்ருதே!**
**பலாராதேர் கர்வம் பரிஹரதி யோSஸௌ விஜயின:**
**சரண்யோ லோகேசோ மம பவது க்ருஷ்ணோSக்ஷிவிஷய:!!**

5. இந்திரன் முதலான தேவர்கள் அவரது பலத்தினாலே அசுரர்களை வெல்கிறார்கள். அவரது பிரயத்தனம் இல்லாமல் எவருக்கும் ஒருகாரியத்திலும் சுதந்திரம் கிடையாது. பலாஸுரனுக்கு சத்துருவான ஜயசீலரான இந்திரனின் அகங்காரத்தையும் போக்குபவர் அவரே. அவரே புகலிடமாக ஏற்கத்தக்கவர், உலகங்கள் அனைத்துக்கும் ஈசுவரன். இப்படிப்பட்ட ஸ்ரீகிருஷ்ணன் எனக்குத் தரிசனம் அளிப்பாராக.

**வினா யஸ்ய த்யானம் வ்ரஜதி பசுதாம் ஸுகரமுகாம்**
**வினா யஸ்ய ஞானம் ஜனி ம்ருதி பயம் யாதி ஜனதா!**
**வினா யஸ்ய ஸ்ம்ருத்யா க்ருமி சதஜநிம் யாதி ஸ விபு:**
**சரண்யோ லோகேசோ மம பவது க்ருஷ்ணோSக்ஷிவிஷய:!!**

6. அவரது தியானம் இல்லாவிடில் மக்கள் சமூகம் பன்றி முதலான மிருகப் பிறவிகளை அடைகிறது. அவரது ஞானம் இல்லாவிடில் பிறப்பு, இறப்பு ஆகிய பயங்களைஅடைகிறது. அவருடைய நினைவு இல்லாவிடில் நூற்றுக்கக்கான முறை புழுக்களின் பிறவியை அடைகிறது. அவரே பிரபு. அவரே புகலிடமாக ஏற்கத்தக்கவர்; உலகங்கள் அனைத்துக்கும் ஈசவரன். இப்படிப்பட்ட கிருஷ்ணன் எனக்குத் தரிசனம் அளிப்பாராக.

**கநச்யாமோ வாமோ வ்ரஜ சிசு வயஸ்யோSர்ஜுன - ஸக:!**
**ஸ்வயம்பூர் பூதானாம் ஜனக உசிதாசார ஸுகத: சரண்யோ லேகேசோ மம**
**- பவது க்ருஷ்யோSக்ஷிவிஷய:!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஸ்ரீகிருஷ்ணன் மனிதர்களின் பயத்தைப் போக்குபவர். தமது பாதாரவிந்தங்களை அடைக்கலமாக அளிப்பவர். மோகத்தை நீக்குபவர். மேகம் போல் கறுத்த நிறமுள்ளவர். அழகானவர். கோகுலத்துச் சிறுவர்களுக்குத் தோழர் அர்ஜுனனின் நண்பர். தானாகவே தோன்றிய சுயம்பு.

சகல ஜீவராசிகளுக்கும் தந்தை, அவரவர் நடத்தைக்குத் தக்க வாக்கையையும் சுகத்தையும் அளிப்பவர். அவர் புகலிடமாக ஏற்கத்தக்கவர். உலகங்கள் அனைத்துக்கும் ஈசுவரன். இப்படிப்பட்ட கிருஷ்ணன் எனக்குத் தரிசனம் தருவாராக.

**யதா தர்ம - க்லாநிர் பவதி ஜகதாம் க்ஷோபகரணீ**
**ததா லோக ஸ்வாமீ ப்ரகடித வபு: ஸேதுத்ருதஜ:!**
**ஸதாம் தாதா ஸ்வச்சோ நிகம - கண கீதோ வ்ரஜபதி:**
**சரண்யோ லோகேசோ மம பவது க்ருஷ்ணோऽக்ஷிவிஷய:!!**

8. உலகம் கலங்கும்படி தர்மத்துக்கு நலிவு ஏற்படும் போதெல்லாம் தமது சரீரத்தை வெளிப்படுத்துபவர். ஆனால் உண்மையில் பிறப்புக்கு உட்படாதவர். உலக நியதிகளைத் தாங்கி நிலை நிறுத்துபவர். உலகங்கள் அனைத்திற்கும் எஜமானர்.

நல்லோரைப் போஷிப்பவர். களங்கமற்றவர், வேதங்கள் அனைத்தையும் போற்றுபவர். கோகுலத்துக்குத் தலைவன். அவர் புகலிடமாக ஏற்கத்தக்கவர்; உலகங்கள் அனைத்திற்கும் ஈசுவரன். இப்படிப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணன் எனக்கு தரிசனம் அளிப்பாராக.

# ஸ்ரீ ஆஞ்சநேய கவசம்

**ஸ்ரீராமசந்த்ர உவாச ஹனுமான் பூர்வத: பாது தக்ஷிணே பவனாத்மஜ:!**
**ப்ரதீச்யாம் பாது ரக்ஷோக்ன: ஸௌம்யாம் ஸாகரதாரண:!!**

1. கிழக்குத் திசையில் ஸ்ரீ ஹனுமானும், தெற்குத் திக்கில் வாயுவின் மைந்தனும் மேற்குத் திசையில் அரக்கர்களை அழித்தவனும், வடக்குத் திக்கில் கடலைத் தாண்டியவனும் என்னைக் காக்கட்டும்.

**ஊர்த்வம் மே கேஸரீ பாது விஷ்ணு பக்தஸ்து மேஹ்யத:!**
**லங்காவிதாஹக: பாது ஸர்வாபத்ப்யோ நிரந்தரம்!!**

2. மேலே உள்ள ஆகாயத்தில் என்னைக் கேஸரியும், கீழ்ப் பகுதியில் திருமாலின் பக்தனும், என்னை எப்போதும் எல்லாத் துன்பங்களிலிருந்தும் இலங்கையை எதிர்த்தவரும் பாதுகாக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸுக்ரீவ ஸ சிவ: பாது மஸ்தகே வாயுநந்தன:!
பாலம் பாது மஹா வீர: ப்ருவோர்மத்யே நிரந்தரம்!!

3. சுக்கிரீவனின் மந்திரி என் தலையையும், என் நெற்றியை வாயுவின் மகனும், மகாவீரர் என் புருவங்களின் மத்தியையும் என்றும் காக்கட்டும்.

நேத்ரோ சாயாபஹாரீச பாதுமாம் ப்லவகேச்வர:!
சுபோலௌ கர்ணமூலேது பாது மே ராமசிங்கர:!!

4. (ஒருவனின் நிழலைப் பிடித்து ஈர்த்து அழிக்கும் சக்தி படைத்த) சாயாக்ராஹி என்ற பூதத்தை அழித்தவன் என் கண்களையும், வானரங்களின் தலைவர் என் கன்னங்களையும், ஸ்ரீராமரின் தொண்டன் எனது காதின் கீழ்பாகத்தையும் எப்போதும் பாதுகாக்கட்டும்.

நாஸாயாமஞ்ஜனாஸுனு: பாது வக்த்ரம் ஹரீச்வர:!
பாது கண்டஞ்ச தைத்யாரி: ஸ்கந்தௌ பாது ஸுரார்சித:!!

5. அஞ்சனாதேவியின் மைந்தன் என் நாசியையும், வானரங்களின் அதிபர் என் முகத்தையும், அசுரர்களின் எதிரி என் கழுத்தையும், தேவர்களால் வழிபாடு செய்யப்பட்டவர் என் தோள்களையும் பாதுகாக்கட்டும்.

புஜௌ பாது மஹா தேஜா: கரௌது சரணாயுத:!
நகான் நகாயுத: பாது குக்ஷௌ பாது கபீச்வர:!!

6. மேலான எழில் உடையவர் (மகாதேஜஸ்வி) எனது புஜங்களையும், தனது கால்களையே ஆயுதமாகக் கொண்டவர் என் கைகளையும், தன் நகத்தையே ஆயுதமாக உடையவர் என் நகங்களையும், குரங்குகளின் தலைவர் என் வயிற்றையும் பாதுகாக்கட்டும்.

வக்ஷோ முத்ராபஹாரீச பாது பார்ச்வே மஹா புஜ!
ஸீதா சோகப்ரஹர்தாச ஸ்தனௌ பாது நிரந்தரம்!!

7. ஸ்ரீராமரின் ( முத்ரா) மோதிரத்தை அடையாளமாக எடுத்துச் சென்றவர் என் மார்பையும், பெரும் கைகளை உடையவர் என் பக்கங்களையும், சீதையின் மனக்கவலையை நீக்கியவர் என் மார்பு பகுதியையும் எப்போதும் காக்கட்டும்.

லங்காபயங்கர: பாது ப்ருஷ்டதேசே நிரந்தரம்:!
நாபிம் ஸ்ரீராமசந்த்ரோ மே கடிம் பாது ஸமீரஜ!!

8. இலங்கைக்குப் பெரும் பயத்தை உண்டாக்கியவர் என் பின்பகுதியையும், ஸ்ரீராமச்சந்திரனின் சேவகன் என் நாபியையும், வாயுவின் மைந்தன் என் இடுப்பையும் பாதுகாக்கட்டும்.

குஹ்யம் பாது மஹாப்ராக்ஜ: ஸக்தினீ ச சிவப்ரிய:!
ஊரூச ஜானுனீ பாது லங்கா ப்ராஸாத பஞ்ஜன:!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பெரும் அறிவாளியாகிய ஆஞ்சநேயர் எனது மறைவு பகுதியையும், சிவனுக்குப் பிரியமானவர் என் தொடைகள் சேரும் பகுதியையும், இலங்கையின் மாளிகைகளை உடைத்து எறிந்தவர் என் தொடைகளையும் - முழங்கால்களையும் பாதுகாக்கட்டும்.

ஜங்கே பாது கபிச்ரேஷ்ட: குல்பம் பாது மஹாபல:!
அசலோத்தாரக: பாது பாதெ பாஸ்கர ஸன்னிப!!

10. வானரங்களின் சிறந்தவர் என் ஆடுதசைகளையும், என் கணைக்கால்களை மிகுந்த பலம் வாய்ந்தவரும் காக்கட்டும். சூரியனுக்கு ஒப்பான ஒளி பொருந்தியவரும், சஞ்சீவி மலையைத் தூக்கிக் கொண்டு வந்தவரும் ஆகிய ஹனுமான் எனது கால்களைப் பாதுகாக்கட்டும்.

அங்கான்யமித ஸத்வாட்ய: பாது பாதாங்குளீஸ்ஸதா:!
ஸர்வாங்காநி மஹாஸுர: பாது ரோமாணிசாத்மாவான்!!

11. எல்லையற்ற வலிமை பெற்றவர் எனது அங்கங்களையும், என் கால் விரல்களையும் எப்போதும் பாதுகாக்கட்டும்.
பெரும் வீரரான ஹனுமான் எனது அனைத்து உறுப்புகளையும், தனது மனதை அடக்கியவர் என் ரோமங்களையும் பாதுகாக்கட்டும்.
("ஒருவருடைய உடலில் உள்ள ஒவ்வொரு பகுதியையும் ஹனுமான் பாதுகாக்க வேண்டும். கவசமாக இருந்து ரட்சிக்க வேண்டும்" என்று மேலே குறிப்பிட்ட சுலோகங்களில் பிரார்த்தனை செய்யப்பட்டது. இந்த ஹனுமான் கவசத்தைப் படிப்பதால் கிடைக்கும் பலன்களை அடுத்து வரும் சுலோகங்கள் விளக்குகின்றன.)

ஹனுமத் கவசம் யஸ்து படேத் வித்வான் விசBன:!
ஸ ஏவ புருஷச்ரேஷ்ட: புக்திம் முக்திஞ்ச விந்ததி!!

12. நன்கு கற்றவனும், ஆராய்ச்சித் திறனும் உடைய அறிஞன் இந்த ஹனுமான் கவசத்தைத் தரிசிப்பதால் (படிப்பதால் அவன்) மனிதர்களில் சிறந்தவனாகவும், மேலான போகங்களையும், முக்தியையும் அடைபவனாகவும் ஆகிறான்.

த்ரிகாலமேககாலம்வா படேன் மாஸத்ரயம் நர:!
ஸர்வான் ரிபூன்Bணாஜ்ஜித்வா ஸ புமான் ச்ரியமாப்னுயாத்!!

13. எவன் தினமும் ஒரு முறை அல்லது மூன்று முறை இதனைத் தொடர்ந்து மூன்று
மாதங்கள் படிக்கின்றானோ, அவன் தன் பகைவர்கள் அனைவரையும் ஒரு கண நேரத்தில் வென்று, மேலான செல்வங்களையும் அடைவான்.

அர்தராத்ரௌ ஜலேஸ்தித்வா ஸப்த வாரம் படேத்யதி
Bயாபஸ்மார குஷ்டாதி தாபத்ரய நிவாரணம்

14. ஒருவன் நடுஇரவில் தண்ணீரில் நின்று, இதை ஏழு முறை படித்தால், Bயரோகம், வலிப்பு, குஷ்டரோகம் முதலியவற்றிலிருந்தும், மூன்று விதமான தாபங்களிருந்தும் விடுதலை பெறுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்வத்தமூலேர்கவாரே ஸ்தித்வா படதி ய: புமான்!
அசலாம் சரியமாப்னோதி ஸங்க்ராமே விஜயீபவேத்!!

15. ஞாயிற்றுக்கிழமை அரச மரத்தின் அடியில் அமர்ந்து இதைப் படிப்பவன், குறைவற்ற செல்வத்தைப் பெற்று, போரில் வெற்றியும் அடைவான்.

ஸர்வரோகா: Bயம் யாந்தி ஸர்வஸித்திப்ரதாயகம்!
ய: கரே தாரயேந்நித்யம் ராமரB ஸமன்விதம்!!

16. ஸ்ரீராம ரைBயுடன் கூடிய இந்த ஹனுமத் கவசத்தைத் தனது கைகளில் அணிந்திருப்பவன், எல்லா வியாதிகளும் நீங்கப் பெற்றும், எல்லாக் காரியங்களும் நிறைவு பெற்றும் வாழ்வான்.

ராமரBாம் படேத்யஸ்து ஹனுமத் கவசம் வினா:!
அரண்யே ருதிதம் தேன ஸ்தோத்ரபாடஞ்ச நிஷ்பலம்!!

17. ஹனுமானின் கவசம் இல்லாமல், ராமரைBயை மட்டும் படிப்பவனுக்குக் காட்டில் கதறி அழுவது போன்று, எத்தகைய பலனும் கிடைக்காமல் போய்விடும்.

ஹர்வது: கபயம் நாஸ்தி ஸர்வத்ர விஜயீ பவேத் !
அஹோராத்ரம் படேத்யஸ்து சீசி: ப்ரயதமானஸ:!!

18,19. (இந்த ஸ்ரீ ஆஞ்சநேய கவசத்தைப் படிப்பவனுக்கு) எல்லாவிதமான துக்கங்களால் ஏற்படும் எந்த ஒரு பயமும் கிடையாது. எங்கும், எல்லா இடத்திலும் அவன் வெற்றி பெறுவான்.
தூய்மையும் கட்டுப்பாடும் உள்ள மனதுடன் இரவும், பகலும் இதைப் படிப்பவன் சிறைவாசத்திலிருந்து நிச்சயம் விடுதலை பெறுவான்: இதில் ஐயமில்லை.

இதை மேலும் படிப்பவன் சந்தேகத்திற்கு இடமின்றி பாவங்கள் - அவற்றுடன் தொடர்பால் ஏற்படும் பாதகங்கள் - போன்ற எல்லாவற்றிலிருந்தும் விடுபடுகிறான்.
யோவாரந்நிதிமல்பபல்வவலமிவோல்லங்க்ய ப்ரதாபான்வித: வைதேஹீ கனசோகதாபஹரணோ

வைகுண்டபக்திப்ரிய:! அBக்னோஜிதராBஸேச்வர மஹாதர்பாபஹாரீரணே ஸோயம் வானரபுங்கவோவது ஸதாத்வஸ்மான் ஸமீராத்மஜ:!!

20. பெரும் கடலை ஒரு சிறிய குட்டை போல் தாண்டி, சீதைக்கு மிகுந்த சோகத்தால் ஏற்பட்ட தாபத்தைப் போக்கிய மிகுந்த பெருமை உடையவர் ஹனுமான். அவர் வைகுண்டபதியிடம் மிகுந்த பக்தி உடையவர்: அட்சகுமாரனைக் கொன்றவர். அவர் போரில் அரக்கனாகிய ராவணனின் கர்வத்தைப் போக்கியவர். அத்தகைய வாயு குமாரனும், வானரங்களில் ஒப்பற்றவரும் ஆகிய ஸ்ரீ ஹனுமான் நம்மை எப்போதும் பாதுகாக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரி மந்திரங்கள்

## பிரஹ்ம காயத்ரீ

ஓம் வேதாத்மனாய வித்மஹே ஹிரண்யகர்பாய தீமஹி!
தன்னோ பிரஹ்ம ப்ரசோதயாத்!!

ஓம், வேதமூர்த்தியாகிய பிரம்மாவை அறிந்துகொள்வோமாக ஹிரண்யகர்பன் என்றும் பெயருடைய அவரைத் தியானம் செய்வோமா, பிரம்மாவாகிய அவரே நம்மை நல்வழியில் தூண்டி அருள் புரிவாராக.

ஓம் சதுர்முகாய வித்மஹே, கமண்டலுதராய தீமஹி!
தன்னோ பிரஹ்ம ப்ரசோதயாத்!!

ஓம், நான்முகனான பிரம்மாவை அறிந்துகொள்வோமாக, கமண்டலத்தைக் கையில் ஏந்திய அவரைத் தியானம் செய்வோமாக. அந்த பிரம்மா நம்மை நல்வழியில் தூண்டி அருள்புரிவாராக.

## விஷ்ணு காயத்ரீ

ஓம் நாராயணாய வித்மஹே, வாஸுதேவாய தீமஹி!
தன்னோ விஷ்ணு: ப்ரசோதயாத்!!

ஓம், அந்த நாராயணனை அறிந்து கொள்வோமாக. வாசுதேவன் என்றும் பெயருடைய அவரைத் தியானம் செய்வோமாக. விஷ்ணுவாகிய அவர் நம்மை நல்வழியில் தூண்டி அருள் புரிவாராக.

## சிவ காயத்ரீ

ஓம் ஸதாசிவாய வித்மஹே, ஸஹஸ்ராக்ஷாய தீமஹி!
தன்னோ ஸாம்ப: ப்ரசோதயாத்!!

ஓம். எப்போதும் மங்களகரமாக இருக்கும் சதாசிவனை அறிந்துகொள்வோமாக. அந்த ஆயிரம் கண்கள் உடைய சிவபெருமானைத் தியானம் செய்வோமாக. அந்த சாம்பசிவனே நம்மை நல்வழியில் தூண்டி அருள் புரிவாராக.

## சூர்ய காயத்ரீ

ஓம் பாஸ்கராய வித்மஹே, மஹாத்யுதிகராய தீமஹி!
தன்னோ ஆதித்ய: ப்ரசோதயாத்!!

ஓம் ஒளி பொருந்திய பாஸ்கரன் என்ற பெயரைக் கொண்ட சூரிய பகவானை அறிந்து கொள்வோமாக. மகத்தான ஒளியை வீசும் அவரை தியானம் செய்வோமாக. ஆதித்யராகிய அவரே நம்மை நல்வழியில் தூண்டி அருள் புரிவாராக.

ஓம் ஆதித்யாய வித்மஹே, ஸஹஸ்ரகிரணாய தீமஹி!
தன்னோ பானு: ப்ரசோதயாத்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்துகொள்வோமா. ஆயிரம் கிரணங்கள் கொண்ட அவரைத் தியானம் செய்வோமாக. பானு என்ற பெயர் கொண்டு பிரகாசிக்கும் அவரே நம்மை நல்வழியில் தூண்டி அருள் புரிவாராக.

**ஓம் ப்ரபாகராய வித்மஹே, திவாகராய தீமஹி!**
**தன்னோ: ஸுர்ய: ப்ரசோதயாத்!!**
ஓம், பிரபாகரன் என்ற பெயருடைய சூரிய பகவானை அறிந்துகெள்வோமாக. பகலை உண்டாக்கும் திவாகரன் என்ற பெயர் கொண்ட அவரைத் தியானம் செய்வோமாக. அந்த சூரிய பகவான் நம்மை நல்வழியில் தூண்டி அருள் புரிவாளாக.

## ஷண்முக காயத்ரீ

**ஓம் தத்புருஷாய வித்மஹே, மஹாஸேனாய தீமஹி!**
**தன்னோ ஷண்முக: ப்ரசோதயாத்!!**
ஓம் அந்தப் புருஷனாகிய சண்முகனை அறிந்துகொள்வோமாக. மகாசேனாதிபதியாகிய அவரைத் தியானம் செய்வோமாக. சண்முகராகிய அவரே நம்மை நல்வழியில் தூண்டு அருள்புரிவாராக.

## குரு காயத்ரீ

**ஓர் குருதேவாய வித்மஹே, பரப்ரஹ்மணே தீமஹி!**
**தன்னோ குரு: ப்ரசோதயாத்!!**
ஓம் நமது குருதேவரை அறிந்துகொள்வோமாக. அந்தப் பரப்பிரம்மமாகிய குருவைத் தியானம் செய்வோமாக அந்த குருவே நம்மை நல்வழியில் செலுத்தி அருள் புரிவாராக.

## ஹம்ஸ காயத்ரீ

**ஓம் பரமஹம்ஸாய வித்மஹே, மஹாதத்வாய தீமஹி!**
**தன்னோ ஹம்ஸ: ப்ரசோதயாத்!!**
ஓம் பரமஹம்சரை அறிந்து கொள்வோமாக. மகா தத்துவ ஞானியாகிய அவரைத் தியானம் செய்வோமாக. அந்தப் பரமஹம்சரே நம்மை நல்வழியில் செலுத்தி அருள்புரிவாராக.

## பத்ம காயத்ரீ

**ஓம் மஹா லக்ஷ்மியை ச வித்மஹே போகதாயை ச தீமஹி!**
**தன்ன: பத்மா ப்ரசோதயாத்!!**
ஓம் ஓங்கார ஸ்வரூபியாகிய மகாலக்ஷ்மியை அறிந்துகொள்வோமாக. எல்லா சுகபோகங்களையும் அளிப்பவள் என்று அவளைத் தியானம் செய்வோமாக. பத்மா என்ற பெயருடைய அந்த மகாலக்ஷ்மியே அந்தத்தியானத்தில் நம்மைச் செலுத்தி அருள் புரிவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷண்முக காயத்ரீ

ஓம் ஷண்முகாய வித்மஹே, மஹாசேனாய தீமஹி!
தன்னோ ஸ்கந்த: ப்ரசோதயாத்!!
ஓம் அந்த சண்முகனை அறிந்துகொள்வோமாக. (தேவர்களின்) மகாசேனாதிபதியாகிய அவரைத் தியானம் செய்வோமாக. அந்த ஸ்கந்த பகவான் நம்மை நல்வழியில் செலுத்தி அருள் புரிவாராக.

## ராம காயத்ரீ

ஓம் தாசரதாய வித்மஹே, ஸீதாவல்லபாய தீமஹி!
தன்னோ ராம: ப்ரசோதயாத்!!
ஓம் தசரதனின் மகனான ராமரை அறிந்துகொள்வோமாக. சீதையின் கணவரான ராமரைத் தியானம் செய்வோமாக. அந்த ராமரே நம்மை நல்வழியில் செலுத்தி அருள் புரிவாராக.

## கிருஷ்ண காயத்ரீ

ஓம் தேவகீ நந்தனாய வித்மஹே, வாஸுதேவாய தீமஹி!
தன்னோ: க்ருஷ்ண: ப்ரசோதயாத்!!
ஓம் தேவகியின் மகனான கிருஷ்ணரை அறிந்துகொள்வோமாக. வாசுதேவன் என்ற பெயரும் கொண்ட அவரைத்தியானம் செய்வோமாக. அந்த கிருஷ்ணரே நம்மை நல்வழியில்.

## நரசிம்ம காயத்ரீ

ஓம் வஜ்ரநகரவ வித்மஹே, தீக்ஷ்ணதம்ஷ்ட்ராய தீமஹி!
தன்னோ ந்ருஸிம்ஹ: ப்ரசோதயாத்!!
ஓம் வைர நகங்கள் படைத்த நரசிம்ம பகவானை அறிந்துகொள்வோமாக. கூரிய பற்கள் உடைய அவரைத் தியானம் செய்வோமாக. நரசிம்ம பகவானாகிய அவர் நம்மை நல்வழியில் செலுத்தி அருள்புரிவாராக.

## நரசிம்ம காயத்ரீ

ஓம் ந்ருஸிம்ஹாய வித்மஹே, வஜ்ரநகாய தீமஹி!
தன்னோ சிம்ஹ: ப்ரசோதயாத்!!
ஓம், அந்த நரசிம்மசுவாமியை அறிந்துகொள்வோமாக. வைர நகங்கள் கொண்ட அவரை தியானம் செய்வோமாக. சிங்கத்தின் முகம் கொண்ட அவர் நம்மை நல்வழியில் செலுத்தி அருள் புரிவாராக.

## ருத்ர காயத்ரீ

ஓம் தத்புருஷாய வித்மஹே, ஸஹஸ்ராக்ஷஸ்ய மஹாதேவஸ்ய தீமஹி!
தன்னோ ருத்ர:. ப்ரசோதயாத்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் அந்த ஆயிரம் கண் படைத்த புருஷனை அறிந்துகொள்வோமாக. அந்த மகாதேவனின் பெருமையை தியானம் செய்வோமாக. (பக்தர்களின்) துன்பங்களை நீக்கும் அந்த ருத்திரனே நம்மை நல்வழியில் செலுத்தி அருள் புரிவாராக.

**ஓம் தத்புரஷாய வித்மஹே, மஹாதேவாய தீமஹி!**
**தன்னோ ருத்ர: ப்ரசோதயாத்!!**
ஓம் அந்த (பிரசித்தி பெற்ற) புருஷனை அறிந்துகொள்வோமாக. அந்த மகாதேவனாகிய சிவபெருமானை தியானம் செய்வோமாக. அந்த ருத்திரனே நம்மை நல்வழியில் செலுத்தி அருள் புரிவாராக.

## ஹனுமான் காயத்ரீ

**ஓம் ஆஞ்சனேயாய வித்மஹே, வாயு புத்ரய தீமஹி!**
**தன்னோ ஹனுமான் ப்ரசோதயாத்!!**
அஞ்சனையின் மகனாகனான ஹனுமானை அறிந்துகொள்வோமாக. வாயுவின் மகனான ஓம் அந்த புருஷனை அறிந்துகொள்வோமாக. அந்த மகாதேவனாகிய அவரை தியானம் செய்வோமாக. அந்த ஹனுமன் நம்மை நல்வழியில் செலுத்தி அருள்புரிவாராக.

## கோபால காயத்ரீ

**ஓம் கோபாலாய வித்மஹே, கோபீஜன வல்லபாய தீமஹி!**
**தன்னோ கோபால: ப்ரசோதயாத்!!**
ஓம். பசுகளிடம் பால் கரக்கும் கோபாலனை அறிந்துகொள்வோமாக. கோபிகைகளின் அன்பிற்குரிய கிருஷ்ணனை தியானம் செய்வோமாக. அந்த கோபாலன் நம்மை நல்வழியில் செலுத்தி அருள் புரிவாராக.

## அக்கினி காயத்ரீ

**ஓம் வைச்வாராய வித்மஹே, லாலீலாய தீமஹி!**
**தன்னோ அக்னி: ப்ரசோதயாத்!!**
ஓம் வைஸ்வாநரன் என்று பெயருடைய அக்கினி தேவனை அறிந்துகொள்வோமாக. அதன் பொருட்டு கொழுந்துவிட்டு எரியும் அக்கினியை தியானம் செய்வோமாக. அந்த அக்கினி பகவான் நம்மை நல்வழியில் செலுத்தி அருள் புரிவாராக.

**ஓம் பாவகாய வித்மஹே, ஸப்த ஜிஹ்வாய தீமஹி!**
**தன்னோ வைச்வாநர: ப்ரசோதயாத்!!**
ஓம் பாவகன் என்ற பெயருடைய அக்கினி பகவானை அறிந்துகொள்வோமாக. அதன் பொருட்டு ஏழு விதமான ஜ்வாலையுடன் எரியும் அக்கினியை தியானம் செய்வோமாக. வைஸ்வாநரன் என்ற பெயர் கொண்ட அந்த அக்கினி பகவான் நம்மை நல்வழியில் செலுத்தி அருள் புரிவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரசுராம காயத்ரீ

ஓம் ஜாமதக்னியாய வித்மஹே, மஹாவீராய தீமஹி!
தன்னோ: பரசுராம: ப்ரசோதயாத்!!

ஓம் ஜமதக்கினி முனிவரின் புதல்வரான பரசுராமரை அறிந்துகொள்வோமாக. மகாவீரரான அவரை தியானம் செய்வோமாக. அந்தப் பரசுராமர் நம்மை நல்வழியில் செலுத்தி அருள்புரிவாராக.

### ஹம்ஸ காயத்ரீ

ஓம் ஹம்ஸ ஹம்ஸாய வித்மஹே, பரமஹம்ஸாய தீமஹி!
தன்னோ ஹம்ஸ: ப்ரசோதயாத்!!

ஓம் அன்னப்பறவை போன்று விவேகமுள்ள பரமஹம்சரை அறிந்து கொள்வோமாக. அந்தப் பரமஹம்சரை தியானம் செய்வோமாக. அந்தப் பரமஹம்சர் நம்மை நல்வழியில் செலுத்தி அருள் புரிவாராக.

### கௌரீ காயத்ரீ

ஓம் ஸுபகாயை வித்மஹே, கமல மாலின்யை தீமஹி!
தன்னோ கௌரீ ப்ரசோதயாத்!!

ஓம், ஸ்ரீ, நல்ல விருப்பங்கள், மகாத்மியம்., வீரியம், நன்முயற்சி, புகழ் போன்ற சௌபாக்கிய வடிவமாகிய கௌரியை அறிந்துகொள்வோமாக. தாமரை மாலையை அணிந்திருக்கும் அவளைத் தியானம் செய்வோமாக. அந்த கௌரீயே அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி அருள் புரிவாளாக.

### ஜயதுர்க்கா காயத்ரீ

ஓம் நாராயண்யை வித்மஹே, துர்க்காயை ச தீமஹி!
தன்னோ கௌரீ ப்ரசோதயாத்!!

ஓம் நாராயணீ என்ற பெயர் கொண்ட ஜயதுர்க்கையை அறிந்துகொள்வோமாக. எல்லாத் தடைகளையும் நீக்கி ஆபத்திலிருந்து காப்பாற்றுவதால் துர்க்கை என்ற பெயருடைய அவளைத் தியானம் செய்வோமாக. கௌரீ என்றும் அழைக்கப்படும் அந்த ஜயதுர்க்கை அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி அருள் புளிவாளாக.

### மீனாக்ஷி காயத்ரீ

ஓம் உந்நித்ரியை வித்மஹே, ஸுந்தரப்பிரியாயை ச தீமஹி!
தன்னோ மீனாதேவி ப்ரசோதயாத்!!

ஓம். எப்போதும் விழித்துக்கொண்டும், மலர்ந்த முகத்துடனும் விளங்கும் 'உந்நித்ரை' என்ற பெயருடைய மீனாக்ஷிதேவியை அறிந்துகொள்வோமாக. ஸ்ரீ சுந்தரேஸ்வரரின் பிரியையான அவளைத் தியானம் செய்வோமாக. அந்த மீனாக்ஷிதேவியே அந்தத் தியானத்தில் நம்மைத்தூண்டி அருள் புரிவாளாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரிபுரஸு/ந்தரீ காயத்ரீ

ஓம் ஐம் த்ரிபுராதேவ்யை வித்மஹே, க்லீம் காமேச்வர்யை ச தீமஹி!
ஸௌ: தன்ன: க்லிணா ப்ரசோதயாத்!!

ஓம் ஐம், க்லீம், ஜௌ: என்ற பீஜாக்ஷரங்களுடன் உச்சரிக்கப்படும் நாமங்களை உடைய திரிபுராதேவியை அறிந்துகொள்வோமாக. காமேஸ்வரி என்று அழைக்கப்படும் அந்தத் தேவியைத் தியானம் செய்வோமாக. எப்போதும் தயை காரணமாக உள்ளத்தில் ஈரம் கொண்டிருப்பதால் க்லிணா என்ற பெயருடைய அந்தத் திரிபுரசுந்தரிதேவியே அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி அருள் புரிவாளாக.

## காலிகா காயத்ரீ

ஓம் காலிகாயை வித்மஹே ச்மசானவாஸின்யை தீமஹி!
தன்னோ அகோரா ப்ரசோதயாத்!!

ஓம் காலதேவதையை அறிந்துகொள்வோமாக, சுடுகாட்டில் வசிக்கும் அந்தக் காளிதேவியைத் தியானிப்போம். அந்தத் தேவதை - (கோர வடிவம் எடுக்க முடிந்தபோதிலும் - கோரமற்ற சாந்த வடித்தோடு) நம்மைத் தியானத்தில் தூண்டி அருள் புரிவாளாக.

## அன்னபூர்ணா காயத்ரீ

ஓம் பகவத்யை ச வித்மஹே, மஹேச்வர்யை ச தீமஹி!
தன்னோ S அன்னபூர்ணா ப்ரசோதயாத்!!

ஓம் பகவதி லட்சணங்களைக் கொண்ட அன்னபூர்ணேஸ்வரியை அறிந்துகொள்வோமாக. மகேஸ்வரியான அவளைத் தியானம் செய்வோமாகு. அந்த அன்னபூர்ணேஸ்வரியே அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி அருள் புரிவாளாக.

## லக்ஷ்மி காயத்ரீ

ஓம் மஹா தேவ்யை ச வித்மஹே, ஸர்வஸித்யை ச தீமஹி!
தன்னோ லக்ஷ்மீ: ப்ரசோதயாத்!!

ஓம். மகாதேவியாகிய லக்ஷ்மியை அறிந்துகொள்வோமாக, அவளை 'எல்லா விருப்பங்களையும் பூர்த்தி செய்பவள்' என்று தியானம் செய்வோமாக. அந்த லக்ஷ்மிதேவியே அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி அருள்புரிவாளாக.

## சக்தி காயத்ரீ

ஓம் ஸர்வ மோஹின்யை வித்மஹே விச்வ ஜனன்யை தீமஹி!
தன்ன: சக்தி: ப்ரசோதயாத்!!

ஓம். எல்லோரையும் மயக்கும் அந்த சக்திதேவியை அறிந்துகொள்வோமாக. ஜகன்மாதாவாகிய அவளைத் தியானம் செய்வோமாக. அந்தச் சக்தி தேவதையே அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி அருள்புரிவாளாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராசக்தி காயத்ரீ

ஓம் தசவனாய வித்மஹே, ஜ்வாமாலயை ச தீமஹி!
தன்ன: பராசக்தி: ப்ரசோதயாத்!!

ஓம் பத்து முகங்களை உடைய பராசக்தியை அறிந்துகொள்வோமாக. ஜோதியை மாலையாக்க் கொண்ட அவளைத் தியானம் செய்வோமாக. அந்த பராசக்தியே அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி அருள் புரிவாளாக.

## மஹாசக்தி காயத்ரீ

ஓம் தபோமய்யை வித்மஹே, காமத்ருஷ்ட்யை ச தீமஹி!
தன்ன: மஹாசக்தி: ப்ரசோதயாத்!!

ஓம் ஓங்கார ஸ்வரூபமாகவும், தவத்தின் வடிவமாகவும் விளங்கும் மகாசக்தியை அறிந்து கொள்வோமாக. விரும்பியவற்றையெல்லாம் வழங்கும் பார்வையை உடையவள் என்றும் அவளைத் தியானம் செய்வோமாக. அந்த மகாசக்தியே அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி அருள் புரிவாளாக.

## லக்ஷ்மி காயத்ரீ

ஓம் மஹா தேவ்யை ச வித்மஹே, விஸ்ணுபத்னியை ச தீமஹி!
தன்னோ லக்ஷ்மீ: ப்ரசோதயாத்!!

ஓம். மகாதேவியாக விளங்கும் லக்ஷ்மியை அறிந்துகொள்வேமாக. விஷ்ணுவின் பத்தினியான அவளைத் தியானம் செய்வோமாக. அந்த லக்ஷ்மிதேவியே அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி அருள் புரிவாளாக.

## ஸ்ரீதேவி காயத்ரீ

ஓம் மஹா லக்ஷ்ம்யை ச வித்மஹே, ஸ்ரீதேவ்யை ச தீமஹி!
தன்ன: ஸ்ரீ: ப்ரசோதயாத்!!

ஓம், ஓங்கார ஸ்வரூபமாகிய மகாலக்ஷ்மியை அறிந்துகொள்வோமாக. அவளை 'எல்லாச் செல்வங்களையும் நலத்தையும் அளிப்பவள்' என்று தியானம் செய்வோமாக. அந்த ஸ்ரீ தேவியே அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி அருள் புரிவாளாக.

## தனலக்ஷ்மி காயத்ரீ

ஓம் தம் தனதாயை வித்மஹே, ஸ்ரீம் ரதிபிரியாயை ச தீமஹி!
ஹ்ரீம் ஸ்வாஹா சக்தி: ப்ரசோதயாத்!!

ஓம், 'தம்' என்ற பீஜாக்ஷரத்துடன் செல்வத்தை அளிக்கும் தனலக்ஷ்மியை அறிநதுகொள்வோமாக. 'ஸ்ரீம்' என்ற பீஜாக்ஷரத்துடன் ரதிப்ரியை என்ற பெயருடைய லக்ஷ்மியைத் தியானம் செய்வோமாக. 'ஹ்ரீம்' என்ற பீஜாக்ஷரத்துடன் சேர்ந்து ஸ்வாஹா என்ற பெயராலும் அழைக்கப்படும் அந்தத் தேவியே அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி அருள் புரிவாளாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரஸ்வதி காயத்ரீ

**ஓம் வாக் தேவ்யை ச வித்மஹே, காமராஜாய தீமஹி!**
**தன்னோ தேவீ ப்ரசோதயாத்!!**

ஓம். வாக்கு தேவதையாகிய சரஸ்வதியை அறிந்துகொள்வோமாக. விருப்பங்களுக்கெல்லாம் அதிபதியான அவளைத் தியானிப்போமாக. அந்த சரஸ்வதிதேவியே அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி அருள் புரிவாளாக.

### சாரதா காயத்ரீ

**ஓம் கலாமய்யை ச வித்மஹே, புத்திதாயை தீமஹி!**
**தன்ன: சாரதா ப்ரசோதயாத்!!**

ஓம். ஓங்காரத்தின் வடிவமாகவும், கலையின் வடிவமகவும் திகழும் சாரதாதேவியை அறிந்துகொள்வோமாக. புத்தியை அளிப்பவள் என்று அவளைத் தியானம் செய்வோமாக, அந்த சாரதாதேவியே அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி ஆருள் புரிவாளாக.

### வாணீ காயத்ரீ

**ஓம் நாதமய்யை வித்மஹே, வீணா தராயை தீமஹி!**
**தன்னோ வாணீ ப்ரசோதயாத்!!**

ஓம். சப்தமயமான வாணீதேவியை அறிந்துகொள்வோமாக. வீணையை ஏந்தியிருக்கும் அவளைத் தியானம் செய்வோமாக. அந்த வாணீதேவியே அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி அருள் புரிவாளாக.

**ஓம் மந்த்ரரூபாயை வித்மஹே, தேவமாத்ரே ச தீமஹி!**
**தன்ன: ஸ்ரஸ்வதீ ப்ரசோதயாத்!!**

ஓம், மந்திரமே வடிவமாகிய சரஸ்வதிதேவியை அறிந்து கொள்வோமாக. வேதமாதாவாக விளங்கும் அவளைத் தியானம் செய்வோமாக. அந்த சரஸ்வதிதேவியே அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி அருள் புரிவாளாக.

### பாரதீ காயத்ரீ

**ஓம் ஞானாகாராயை வித்மஹே, வித்யாம்ய்யை தீமஹி!**
**தன்னோ பாரதீ ப்ரசோதயாத்!!**

ஓம் ஞானசொரூபமான பாரதியை அறிந்துகொள்வோமாக. அறிவின் வடிவமாகிய அவளைத் தியானம் செய்வோமாக. அந்த பாரதியே அந்தத் தியானத்தில் நம்மைத் தூண்டி அருள் புரிவாளாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் ஸ்தோத்திரம்

இந்த ஸ்தோத்திரம் 'குமார தந்திரம்' என்ற நூலில் 'ஸ்ரீசுப்பிரமண்ய மூலமந்தரஸ்தவம்' என்ற பெயரில் இடம் பெற்றுள்ளது.

**அதாத: ஸம்ப்ரவக்ஷ்யாமி மூலமந்த்ரஸ்தவம் சிவம்!**
**ஜபதாம் ச்ருண்வதாம் ந்ருணாம் புக்திமுக்தி ப்ரதாயகம்!!**

1. இப்போது திருமுருகனுடைய மூல மந்திரம் என்ற மங்களம் நிறைந்ததும், படிக்கும் - கேட்கும் மனிதர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதும், முக்தியைத் தரக்கூடியதும் ஆகிய ஸ்தோத்திரத்தைச் சொல்லப் போகிறேன்.

**ஸர்வசத்ரு க்ஷயகரம் ஸர்வரோக நிவாரணம்!**
**அஷ்டைச்வர்யப்ரதம் நித்யம் ஸர்வலோகைக பாவனம்!!**

2. இந்த ஸ்தோத்திரம் எதிரிகள் அனைவரையும் (உன்னிடம் இருக்கும் எல்லாத் தீய குணங்களையும்) நாசம் அடையச் செய்யும்; அனைத்து வியாதிகளையும் நீக்கும்; எட்டுவிதமான செல்வங்களையும் அளிக்கும்; அனைத்து உலகங்களையும் பரிசுத்தப்படுத்தும்.

**சராரண்யோத்பவம் ஸ்கந்தம் சரணாகத பாலகம்!**
**சரணம் த்வாம் ப்ரபன்னஸ்ய தேஹி மே விபுலாம் ச்ரியம்!**

3. சரவணம் என்ற காட்டில் தோன்றி சரணடைந்தவர்களைக் காப்பாற்றும் ஸ்கந்தனே! உங்களையே சரணடைந்த எனக்கு அளவற்ற செல்வத்தை அளிப்பீர்களாக.

ராஜராஜஸகோத்பூதம் ராஜீவாயத லோசனம்!
ரதீசகோடி ஸௌந்தர்யம் தேஹி மே விபுலாம் ச்ரியம்!!

4. அரசர்களுக்கு அரசரான குபேரனின் தோழனாகிய பரமசிவனிடமிருந்து தோன்றியவரே, தாமரை இதழ் போன்ற நீண்ட கண்களைக் கொண்டவரே, கோடி மன்மதனுக்கு நிகரான அழகு பொருந்திய முருகனே! எனக்கு அளவற்ற செல்வத்தை அளிப்பீர்களாக.

பலாரிப்ரமுகைர்வந்த்ய வல்லீந்த்ராணி ஸுதாபதே!
வரதாச்ரித லோகானாம் தேஹி மே விபுலாம் ச்ரியம்!!

5. இந்திரன் முதலிய தேவர்களால் வழிபடத் தக்கவரும், வள்ளி - தேவசேனையின் கணவரும், தன்னைச் சரணடைந்தவர்களைக் காப்பவரும் ஆகிய முருகனே! எனக்கு அளவற்ற செல்வத்தை அளிப்பீர்களாக.

நாரதாதி மஹாயோகி ஸித்தகந்தர்வ ஸேவிதம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவவீரை: பூஜிதாங்க்ரிம் தேஹிமே விபுலாம் ச்ரியம்!!

6. நாரதர் முதலிய சிறந்த யோகிகளாலும் சித்தர்களாலும் கந்தர்வர்களாலும் வணங்கப்பட்டவரும், வீரபாகு முதலிய ஒன்பது வீரர்களால் வழிபடப்பட்ட திருவடிகளை உடையவரும் ஆகிய முருகனே! எனக்கு அளவற்ற செல்வத்தை அளிப்பீர்களாக.

பகவன் பார்வதீஸுநோ ஸ்வாமின் பக்தார்திபஞ்ஜன!
பவத் பாதாப்ஜ்யோர்பக்திம் தேஹி மே விபுலாம் ச்ரியம்!!

7. பார்வதியின் மகனாகிய சுவாமியே! பக்தர்களின் துயரை அழிக்கும் சுவாமியே, தங்களுடைய பாத கமலங்களில் பக்தியும், அளவற்ற செல்வமும் எனக்கு அளிப்பீர்களாக.

வஸுதான்யம் யச: கீர்திம் அவிச்சேதம் ச ஸந்ததே:!
சத்ருநாசனமத்யாஸு தேஹி மே விபுலாம் ச்ரியம்!!

8. பொன், தான்யம், இந்த உலகிலும் மறு உலகிலும் புகழ், அறுபடாத சந்ததியினர், எதிரிகளின் அழிவு ஆகியவற்றை உடனே எனக்கு அளித்து, அளவற்ற செல்வத்தையும், தந்தருளுங்கள்.

இதம் ஷடக்ஷரம் ஸ்தோத்ரம் ஸுப்ரம்மண்யஸ்ய ஸந்தகம்!
ய: படேத்தஸ்ய ஸித்யந்தி ஸம்பதச்சிந்திதாதிகா:!!

9. ஆறு ஏழுத்து மந்திரமாகிய சுப்பிரமணிய ஸ்தோத்திரத்தை எவன் எப்போதும் படிக்கிறானோ, அவன் விரும்புவதற்கும் அதிகமாக அவனது எண்ணங்கள் நிறைவேறுகின்றன.

ஹ்ருதப்ஜே பக்திதோ நித்யம் ஸுப்ரம்மண்யம் ஸ்மரன் புத:!
யோ ஜபேத் ப்ராதருத்தாய ஸர்வான் காமானவாப்னுயாத்!!

10. காலையில் எழுந்து இதயகமலத்தில் பக்தியுடன் முருகனைப் தியானம் செய்து, இந்த ஸ்தோத்திரத்தை ஜபம் செய்யும் அறிவாளியின் எல்லா விருப்பங்களும் ஈடேறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிசங்கரரின் சுப்ரமண்ய புஜங்கம்

ஆழிக்கரை அருகே நாழிக்கிணறு கொண்ட கோழிக் கொடியோன் குடிகொண்டிருக்கும் தலம், திருச்செந்தூர்.

'கடல் அலையென வரும் துன்பமும் துயரமும் எனைப் புணிந்திடும் பக்தர்களை நெருங்காது காப்பேன்' என்பதுபோல், சமீபத்தில் வந்த சுனாமி அலைகள் கூட இந்த சுப்ரமண்யம் ஆலயத்தினை நெருங்காது பின்னோக்கிச் சென்றது கண் கூடு.

இந்த ஆறுமுருகனின் அருளாற்றலை உணர்ந்தே, ஆதிசங்கர மகான், இங்கு வந்து வழிபட்டு, 'சுப்ரமண்ய புஜங்கம்' எனும் அற்புதமான துதியை பாடியுள்ளார்.

அதில் ஒரு பாடலில், 'எத்தகைய பேரலையும் என் கோயில் வாசலை அடைந்ததும் ஒடுங்கிப்போய்விடும் என உணர்த்தும் இறைவனே', என்று ஆதிசங்கரமாகான், முருகனைப் பாடியிருப்பது, எத்தகைய தீர்க்க தரிசனம்! என வியக்க வைக்கிறது.

புஜங்கம் என்றால், பாம்பு என்று பொருள். பாம்பு என்பது ஊழ்வினையைக் குறிக்கும் அடையாளம். அதனைத் தன் காலடியில் போட்டு அடக்கி வைத்திருக்கும் முருகனைப் போற்றி, காலடி மகான் எழுதிய அந்தப் பாடல்களைப் படியுங்கள்.

சமஸ்கிருதம் தெரியாதவர்கள், துதிகளின் பொருளை மனம் ஒன்றிப் படியுங்கள்.

ஆறுமுருகன், அல்லல்கள் அனைத்தையும் தீர்த்து வைப்பான். அதுமட்டுமல்ல, இந்தத்துதியினைச் சொல்வோர், மணப்பேறு. மகப்பேறு, தனம், தான்யம், கல்வி, ஆரோக்யம், ஆயுள் என அனைத்தையும் பெறுவர் என்று ஆதிசங்கர மகானே சொல்லியிருக்கிறார்.

இதோ, அந்த இணையற்ற துதியைப் படியுங்கள். இன்பங்கள் யாவும் பெறுங்கள்.

1.ஸதா பாலரூபாபி விக்நாத்ரி ஹந்திரீ
மஹா தந்தி வக்த்ராபி பஞ்சாஸ்ய மான்யா!
விதீந்த்ராதிம்ருக்யா கணேஸாபிதாமே
விதத்தாம் ஸ்ரியம் காபி கல்யாண மூர்த்தி!!

எக்காலத்திலும் பால வடியும் பாலகனின் உருவமாக இருந்தாலும் தடைகள் என்கிற மலைகளைப் பிளக்கக் கூடிய வரும், பெரிய யானை முகத்தோடிருந்தாலும் சிங்கமாகிய பரமசிவனாலேயே துதிக்கப்படுபவரும், பிரம்மா, இந்திரன ஆகியோராலும் தேடப்படுபவரும், இப்படி இன்னவிதமாக இருப்பாரென்று அறுதியிட்டுக் கூற முடியாதவரும், எங்கும் எதிலும் எப்போதும் முள்ளவரும் மங்களமான உருவ முடையுவரும், கணேசன் என்ற பெயரையுடையவருமான அவர், எனக்கு வளமளிக்கட்டும்.

2. ந ஜானாமி ஸப்தம் ந ஜானாமி சார்த்தம்
ந ஜானாமி பத்யம் ந ஜானாமி கத்யம்!
சிதேகாஷடாஸ்யா ஹ்ருதிக் யோததேமே
முகாந்நிஸ்ஸரஸ்தே கிரஸ்சாபி சித்ரம்!!

ஒலியறியேன், பொருளொன்றறியேன், பதமறியேன், உரையறியேன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியிருக்க, ஆறுமுக ஒளி என்னிதயத்தல் தோன்றியவுடனேயே சொற்கள் என் வாக்கிலிருந்து பிரவாஹிக்கின்றன.

3. மயூராதிருடம் மஹாவாக்ய கூடம்
மனோஹாரிதேஹம் மஹச்சித்த கேஹம்
மஹாதேவ தேவம் மஹாவேத பாவம்
மஹாதேவ பாலம் பஜே லோகபாலம்

மயில் வாகனத்தை உடையவர், மஹாவக்கியத்தின் உள்ளார்ந்த பொருளானவர், மனதைக் கொள்ளை கொள்ளும் அழகுடையவர், அடியவர்களின் இதயவீட்டில் வசிப்பவர், தேவாதி தேவனானவர், வேதங்களால் பூஜிக்கப்படுபவர், வேதப்பொருளானவர், மஹாதேவனின் பாலகர், உலகையே காப்பவர் என்கிற பெருமைகளைக் கொண்ட தங்களை வணங்குகிறேன்.

4. யதா ஸந்நிதானம் கதா மானவாமே
பவாம் போதி பாரம் கதாஸ்தே ததைவ!
இதிவ்யஞ்ஜயன் ஸிந்து தீரேய ஆஸ்தே
மீடே பவித்ரம் பராசக்தி புத்ரம்!!

மனிதர்கள் எப்போது என் ஸந்நதியை அடைந்து விடுகிறார்களோ, அக்கணமே வாழ்க்கைக் கடலின் கரையை அடைந்து விடுகிறார்கள். அது அவர்களுக்கு இயலுமென்பதைக் காட்டவே நான் கடற்கரையில் வசிக்கிறேன். அப்படிப்பட்ட பக்தர்களின் கஷ்டங்களைத் தீர்க்கவே நான் இங்கிருக்கிறேன் என்று சொல்வதைப்போல் அமர்ந்திருக்கும், அந்த ஆதி பராசக்தியின் புத்திரனைத் துதிக்கிறேன்.

(கரையைக் கடக்க ஓடம் தேவை. அந்த ஓடத்தைச் செலுத்தும் ஓடக்காரன் கரையின் அருகெதானே இருக்க வேண்டும்? அதனால்தான் செந்தில் கரையருகில் ஓடக்காரனாக அமர்ந்திருக்கிறான், முருகன் என்கிறார்)

5. யதாப்தேஸ் தரங்காலயம் யாந்தி துங்கா
ததைவாபத: ஸந்நிதௌ ஸேவதாம்மே!
இதீவோர்மி பங்க்தீர் ந்ருணாம் தர்ஸயந்தம்
ஸதாபாவயே ஹ்ருத்ஸரோஜே குஹம்தம்!!

எத்தகைய பேராழிப் பேரலையும் என்கோயில் வாசலையடைந்ததும் அடங்கி ஒடுங்கிப்போய் விடும். அதேபோல், என் பக்தர்களின் பெரிய பெரிய ஆபத்துகளும் என் கோயில் வாசலுக்கு அவர்கள் வந்தவுடனேயே விலகிடு மென்பதை, அலைகளைக் காட்டுவதன் மூலம் உபதேசிக்கின்ற தங்களை, மனமாரத் துதிக்கிறேன்.

6. கிரௌ மந்நிவாசே நராயேயதிருடா:
ததா பர்வதே ராஜதே தேயதிருடா!
இதீவ ப்ருவன் கந்த ஸைலாதிருடா:
ஸதேவோ முதே மே ஸதா ஷண்முகோஸ்து!!

நான் இருக்கும் மலையேறி வந்தால், பக்தர்கள் கைலாய மலையை அடைந்ததைப்போல, உணர்வார்கள். அவர்களுக்கு அத்தகைய பலன் கிட்டுமென்று கூறுவதைப்போல, கந்தமாதன மலையல் அமர்ந்திருக்கும் அந்த ஷண்முகப் பெருமானை வணங்குகிறேன்.

7. மஹாம்போதி தீரே மஹாபாபசோரே
முனீந்த்ரானு கூலே ஸுகந்தாக்ய சைலே!
குஹாயம் வஸந்தம் ஸ்வபாஸா லஸந்தம்
ஜனார்த்திம் ஹரந்தம் ஸ்ரயாமோ
- குஹம்தம்!!

மிகக் கொடிய பாவங்களைப் போக்கும் மஹா சமுத்ரக் கரையிலிருப்பதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமுனிகளின் தவத்துக்கு ஏற்றதும், சுகந்தம் வீசுவதுமான மலையின் குகையில் வசிப்பவரும், தனது பிரகாசத்தால் ஜொலிப்பவரும் மக்களின் குறைகளை அறவே களைபவருமான குகனை வணங்குகிறேன்.

8லஸத் ஸ்வர்ணகேஹே ந்ருணாம் காமதோஹே
ஸுமஸ்தோம ஸஞ்ச்சன்ன மாணிக்ய மஞ்சே!
ஸமுத்யத் ஸஹஸ்ராக்க துல்ய ப்ரகாசம்
ஸதா பாவயே கார்த்திகேயம்
- ஸுரேஸம்!!

எந்தெந்தப் பொருளையெல்லாம் பக்தர்கள் வேண்டுகிறார்களோ அதையெல்லாம் கொடுக்கக்கூடிய இறைவன் இருக்கும் காரணத்தால், பொன்மயமாக ஒளி வீசும் ஆலயம் செந்தில் அந்தக் கோயிலில் உள்ள மாணிக்க மயமான கட்டிலில் குவியல் குவியலாக பூக்கள் கொட்டப்பட்டுள்ளன. அதில் ஆயிரக் கணக்கான சூரியர்கள் ஒருசேர உதித்திட்டது போன்ற ஒளிக்கு ஒப்பான காந்தியுடன் பிரகாசிக்கிறவரும் தேவர்களுக்கெல்லாம், தேவராக விளங்குபவருமான கார்த்திகேயனை எப்போதும் த்யானம் செய்கிறேன்.

9. ரணத்தம் ஸகே மஞ்சுளே அத்யந்த
- ஸோணே
மனோஹாரி லாவண்ய பீயூஷ பூர்ணே!
மனஷ்ஷட்பதோ மே பவக்லேஸ தப்த:
ஸதா மோததாம் ஸ்கந்த தே பாதபத்மே!!

தங்களின் பாதத்தில் உள்ள சரம் எப்போதும் ஒலித்துக் கொண்டேயிருக்கும். அது அழகானது. தங்கள் பாதம் சிவப்பானது. அது மனதைக் கவரும் லாவண்யமுடையது. அதனால், அந்தப் பாத கமலத்தில் (தாமரையில்) சம்ஸார பந்தத்தால் தவிக்கின்ற என்மனதுமாகிய வண்டு எப்போதும் ரமிக்கட்டும்.

10. ஸுவர்ணாபதிவ்யாம் பரைர் பாஸமானாம்
க்வணத் கிங்கிணி மேகலா ஸோப மானாம்!
லஸத்தேம பட்டேன வித்யோதமானாம்
கடிம்பாவயே ஸ்கந்த தேதீப்யமானாம்!!

கந்தப் பெருமானே! தங்களுடைய இடுப்பில் உள்ள ஆடைகள் மிகவும் ஒளி மயமானவை. அதன்மேல் அணிந்திருக்கும் மேகலை (ஒட்டியானம்) யில் உள்ள சலங்கைகள், மிகமிகப் பிரகாசமானவை. எப்போதும் சப்திக்கின்றவை. அந்த மேகலையில் உள்ள தங்கப்பட்டமும் மிக்க ஒளியுடையது. இத்தகைய பிரகாசங்களுடன் கூடிய தங்களின் இடுப்பை, வணங்குகிறேன்.

11. புலிந்தேஸ கன்யாக நாபோக துங்க
ஸ்தனா லிங்க நாஸக்த காஸ்மீர ராகம்!
நமஸ்யாம்யஹம் தாரகாரே தவோர:!
ஸ்வ பக்தாவனே ஸர்வதா ஸானுராகம்!!

தாரகாசுரனை வதம் செய்த பிரபோ! வேட ராஜனின் பெண்ணான வள்ளி தேவியின் ஆலிங்கனத்தால் தங்கள் மார்பு குங்குமப்பூவைப் போல் சிவந்தள்ளது. அதோடு, பக்தர்களை எப்போதும் காக்க வேண்டுமென்ற தணியாத ஆசையால் மேலும் சிவக்கும் தங்களது திருமார்பை வணங்குகின்றேன்.

12. விதௌ க்லுப்த தண்டான் ஸ்வலீலா
- த்ருதாண்டான்
நிரஸ்தே பசுண்டான் த்விஷத் கால தண்டான்!
ஹதேந்த்ராரி ஷண்டான் ஜகத்ராண
- சௌண்டான்
ஸதாதே ப்ரசண்டான் ஸ்ரயே
- பாஹுதண்டான்!!

கந்தப்ரபோ, தங்களுடைய மகா சக்திவாய்ந்த கரங்களை எப்போதும் பணிகிறேன். அவைகள், விதிமுறைப்படி நடக்கவில்லை யென்பதற்காக விளையாட்டகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மனை தண்டித்தன. பிரமாண்டங்களைத் தரித்தன. அவை, யானையின் துதிக்கைகளைவிட பருத்தவை. எதிரிகளுக்கு கால தண்டம் போன்றவை. அநேக அசுரர்களைக் கொன்றவை. உலகைக் காப்பதில் மிகத் திறமை வாய்ந்தவை.

**13.ஸதா சாரதா: ஷண்ம்ருகாங்கா யதி ஸ்யு: ஸமுத்யந்த ஏவ ஸ்திதாச்சேத் ஸமந்தாத்! ஸதா பூர்ணபிம்பா: கலங்கைஸ்ச ஹீனா: ஸ்ததா த்வன் முகானாம் ப்ருவே ஸ்கந்த - ஸாம்யம்!!**

ஆறு சரத்கால சந்திர மண்டலங்களை தங்கள் முகங்களுக்கு உபமானமாகச் சொல்லலாமென்றால் இயலவில்லை. ஏனென்றால், அவை எங்கும் எப்போதும் உதித்துக் கொண்டிருப்பவைகளாகவும், எப்போதும் பூர்ண பிம்பங்களாகவும், களங்க மற்றவைகளாகவும் இருப்பதில்லை. (ஆறுமுகனின் ஆறு முகங்களும் களங்கமற்று சதா சர்வகாலமும் ஜொலித்துக் கொண்டிருக்கக்கூடிய ஆறுசரத் கால சந்திர மண்டலங்களுக்கு ஒப்பானவை)

**14. ஸ்புரன் மந்த ஹாஸை: ஸ ஹம் ஸானி - சஞ்சத் கடாக்ஷாவளி ப்ருங்க ஸங்கோஜ்வலானி! ஸுதாஸ்யந்தி பிம்பாத தராணிஸஸுனோ தவா லோகயே ஷண்முகாம் போருஹாணி!!**

சிவகுமாரா, பிரகாசிக்கின்ற அன்னங்களுக்கு ஒப்பான மென்மையான புன்சிரிப்புகளுடன் கூடியவைகளாகவும் பக்தர்களை இமையாது பார்த்துக் கொண்டிருப்பதால் அசையாமலிருக்கும் கடாக்ஷங்களின் கூட்டங்களால் கருவண்டுக் கூட்டங்களோடு ஒப்பிடக் கூடியவைகளாகவும், அமுதத்தைப் பொழிகின்ற கோவைப் பழம் போன்ற உதடுகளை உடையவையுமாக தங்களுடைய ஆறுமுக அரவிந்தங்களை நான் காண்கிறேன்.

**15.விஸாலேஷு கர்ணாந்த தீர்க்கேஷ் வஜஸ்ரம் தயாஸ்யந்திஷு த்வாதஸாஸ் வீக்ஷணேஷு மயீஷத் கடாக்ஷ: ஸக்ருத் பாதி தஸ்சேத் பவேத்தே தயாசீல காநாமஹானி!!**

ஹே தயாசீலா, தங்களுடைய கண்கள் பன்னிரண்டும் கருணைப் பெருக்கோடு கூடியவை. காதுவரை நீண்டு உள்ளவை. அந்தப் பன்னிரு கண்களில் ஒரே ஒரு கண்ணின் கடைக்கண் பார்வை என்மேல் பட்டால் தங்களுக்கு என்ன நஷ்டம்?

**16. ஸுதாங்கோத்பவ மேஸி ஜீவேதி ஷட்தா ஜபன் மந்த்ரமீசோ முதா ஜிக்ரதேயான்! ஜகத் பாரப்ருத்யோ ஜகந்நாத தேப்ய: கிரீடோஜ்வ லேப்யோ நமோமஸ்த கேப்ய:!!**

'குமாரா, என்னிலிருந்து உண்டானவன் நீ, சிரஞ்சீவியாக ஜீவித்திரு' என்ற மந்திரத்தை ஆறுமுறை ஜபம் செய்து கொண்டு, பரமசிவன் மகிழ்ச்சியுடன் உச்சி முகர்ந்து பார்க்கின்றவையும் உலகத்தைக் காக்கின்றவையும் கிரீடங்களால் பிரகாசிக்கின்றவைகளுமான தங்கள் சிரங்களுக்கு நமஸ்காரம்.

**17. ஸ்புரத் ரத்ன கேயூர ஹாராபி ராம ஸ்சலத் குண்டல ஸ்ரீலஸத் கண்ட பாக:! கடௌ பீதவாஸா: கரே சாரு ஸக்தி புரஸ்தான் மமாஸ்தாம் புராரேஸ்தனூஜ!!**

திரிபுரங்களைத் தன் சிரிப்பால் சம்ஹாரம் செய்த பரமனின் குமாரன், என் முன்னர் காட்சியளிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாசமான ரத்ன மயமான தோள்வளை, கழுத்தில் முக்தாஹாரம், அசைகின்ற குண்டலங்களால் மேலும் பிரகாசப்படுத்தப் படுகிற கன்னப் பிரதேசம் உடையவனாய், இடுப்பிலே பீதாம்பரம் தரித்தவனாய், அழகிய வேலைப் பிடித்தவனாக முருகன் என் முன்னே எழுந்தருளட்டும்.

18. இஹாயாஹி வத்ஸேதி ஹஸ்தான் - ப்ரஸார்யா
ஹ்வயத்யாதராச்சங்கரே மாதுரங்காத்!
ஸமுத்பத்ய தாதம் ஸ்ரயந்தம் குமாரம்
ஹராஸ்லிஷ்ட காத்ரம்பஜே பாலமூர்த்திம்!!

"ஹே குழந்தாய், இங்கே வா" என்று தந்தை பரம் அன்புடன் அழைத்தவுடன், தாயின் மடியிலிருந்து துள்ளி ஓடிவந்து தகப்பனாரின் மடியில் அமர்கிறவரும், குழந்தை உருவமுடையவருமான முருகனுக்கு வந்தனம் செய்கிறேன்.

19. குமாரேஸ ஸூனோ குஹ ஸ்கந்த - ஸேனா
பதே ஸக்திபாணே மயூராதிருடா!
புளிந்தாத்மஜா காந்த பக்தார்திஹாரின்
ப்ரபோ தாரகாரே ஸதா ரக்ஷமாம் த்வம்!!

குமாரா, ஈசபுத்ரா, குகா, ஸ்கந்தா, சேனாபதே வேலாயுதனே, மயில் வாகனனே, வள்ளி மணாளா, பக்தர்களின் மனக்கவலையைப் போக்குபவனே, பிரபுவே தாரகனைக் கொன்றவனே, எப்பொழுதும் நீ என்னைக் காப்பாற்ற வேண்டும்.

20. ப்ரஸாந்தேந்திரியே நஷ்டஸம்க்ஞே - விசேஷ்டே
கபோத்காரிவக்த்ரே பயோத்கம் பிகாத்ரே!
பிரயாணோன்முகே மய்யநாதே ததானீம்
த்ருதம்மே தயாளோ பவாக்ரே குஹ த்வம்!!

ஹே தயாளனே! கதியற்றவனாய், புலன்கள் ஒடுங்கி நினைவிழந்து, அசையாமல், வாயிலிருந்து கபத்தைக் கக்கிக்கொண்டு, பயத்தால் நடுங்கும் சரீரத்தையுடையவனாய் இருந்து கொண்டு நான் உயிர்விடும் காலத்தில், குகனாகிய நீங்கள், என் முன்னே சீக்கிரமாக எழுந்தருளிக்காக்க வேண்டும்.

21. கிருதாந்தஸ்ய தூதேஷு சண்டேஷு - கோபாத்
தஹச் சிந்தி பிந்தீதிமாம் தர்ஜயித்ஸு'
மயூரம் ஸ்மாருஹ்ய மாபீ ரிதித்வம்
புர: ஸக்தி பானீர் மமாயாஹி ஸீக்ரம்!!

பயங்கரமான யமதூதர்கள் கோபத்தோடு பொசுக்கு, வெட்டு, பிள என்று என்னை அதட்டும் பொழுது, மயிலேறிய வாகனனாய் வேலாயுதத்துடன், 'அஞ்சேல்' என்று கூறிக்கொண்டு என் முன்னே சீக்கிரமாக நீவிர் வந்து ஆதரிக்க வேண்டும்.

22. ப்ரணம்யாசக்ருத் பாதயோஸ்த்தே பதித்வா
ப்ரஸாத்ய ப்ரபோ ப்ரார்த்தயே அனேக வாரம்!
நவக்தும் க்ஷமோஹம் ததானீம் க்ருபாப்தே
நகார்யாந்தகாலே மனாகப்யுபேக்ஷா!!

ஹே பிரபோ, அப்போதைக்கு இப்போதே தங்கள் கால்களில் வணங்கி மன்னிப்புக் கேட்டு பலமுறை பிரார்த்திக்கின்றேன். அப்போது பேச இயலாது, வாய் குளறும். என் மரணத் தருவாயில் தங்கள் வராமல் கொஞ்சமும் அலட்சியப் படுத்திவிடக் கூடாது.... நான் உமக்கு அபயம்.

23. ஸஹஸ்ராண்ட போக்தா த்வயா - ஸூரநாமா
ஹதஸ்தாரக: ஸிம்ஹவக்தஸ்ச தைத்ய:!
மமாந்தர் ஹ்ருதிஸ்தம் மனக்லேஸ மேகம்
நஹம்ஸிப்ரபோ கிம்கரோமி க்வயாமி!!

ஹே பிரபோ, ஆயிரம் பிரமாண்டத்தை ஆண்ட சூரபத்மன், தாரகன், சிம்ஹவக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரன் போன்ற அசுரர்கள், தங்களால் கொல்லப்பட்டார்கள். கேவலம் என்னுடைய மனக்கவலையைத் தங்களால் அழிக்க முடியவில்லையெனில், நரன் என்ன செய்வேன்? எங்கே போவேன்?

24. அஹம் ஸர்வதா துக்க பாராவஸன்னோ
பவான் தீனபந்துஸ்த்வ தன்யம் ந யூாசே!
பவத் பக்திரோதம் ஸதாக்லுப்த பாதம்
மமாதிம் த்ருதம் நாஸ யோமாஸுதத்வம்!!

உமாசுதனே, நான் எப்போதும் துக்கம் என்ற சுமையால் அழுத்தப்படுபவன். நீரோ தீனபந்து. தங்களைத் தவிர நான் வேறுயாரிடமும் யாசிக்க மாட்டேன். பக்திக்குத் தடையாக நிற்பதுவும், சதா தொந்தரவு கொடுப்பதாகவுமிருக்கின்ற என்மனக் கவலையை, தாங்கள் தான் நாசம் செய்ய வேண்டும்.

25. அபஸ்மார குஷ்ட க்ஷயார்ஸ: ப்ரமேஹ
ஜ்வரோன்மாத குல்மாதிரோகா மஹாந்த:!
பிஸாசாஸ்ச ஸர்வே பவேத் பத்ர பூதிம்
விலோக்ய க்ஷணாத் தாரகாரே த்ரவந்தே!!

தாரகனைக் கொன்றவரே, வலிப்பு, பெருநோய், காசநோய், சிறுநீர் உபாதை, காய்ச்சல், மனநோய், வயிற்று வலி முதலிய மகா ரோகங்களும், எல்லா பிசாசங்களும், தங்கள் பாதத்தில் வைத்துக் கொடுக்கப்படும் பன்னீர் இலை விபூதியைக் கண்டு பயந்து ஓடுகின்றன. (செந்தூராண்டவன் சந்நதியில் விபூதிப் பிரசாதம் பன்னீர் இலையில் வைத்தே தரப்படும்).

26. த்ருஸி ஸ்கந்தமூர்த்தி: ஸ்ருதௌ ஸ்கந்த
- கீர்த்தி
முகேமே பவித்ரம் ஸதா தச் சரித்ரம்!
கரே தஸ்ய க்ருத்யம் வபுஸ்தஸ்ய ப்ருத்யம்
குஹே ஸந்து லீனா மமா சேஷ பாவா:!

எனது கண்களில் ஸ்கந்தனின் மூர்த்தி, காதில் ஸ்கந்தனின் கீர்த்தி நாவில் எப்போதும் புனிதமான அவன் சரித்திரமும், கையால் அவனுக்கு அர்ச்சனை செய்வதும், சரீரத்தால் அவனுக்குப் பணிவிடை செய்தலும் எப்போதும் நிலைத்து இருக்கட்டும்.

27. முனீனா முதாஹோ ந்ருணாம்
- பக்திபாஜா
மபீஷ்டப்ரதா: ஸந்தி ஸர்வத்ர தேவா:!
ந்ருணா மந்த்ய ஜானா மபிஸ்வார்த்த தானே
குஹார்த்தைவ மன்யம் ந ஜானே ந ஜானே!!

முனிவர்களுக்கும், பக்தர்களுக்கும் கோரும் பொருளைக் கொடுக்கின்ற வர்களாக தேவர்கள் இருக்கின்றார்கள். ஆனால், பக்தியே அறியாப் பாமரருக்கும் கூட கோரிய பொருளைக் கொடுக்கக் கூடிய தெய்வம், குகனைத் தவிர வேறு நானறியேன்.

28. களத்ரம் ஸுதா பந்துவர்க: பஸுர்வா
நரோ வாத நாரீ க்ருஹே யே மதீயா!
யஜந்தோ நமந்த: ஸ்துவந்தோ பவந்தம்
ஸ்மரந்தஸ்ச தே சந்து ஸர்வே குமார!!

ஹே குமாரா, என் மனைவி, மக்கள், உறவினர்கள், பசுக்கள், மற்றுமுள்ள ஸ்த்ரீ புருஷர்கள் என, எனைச் சார்ந்துள்ள யாவரும், தங்களை பூஜிக்கின்றவர்களாகவும் நமஸ்கரிக்கின்றவர்களாவும், ஸ்தோத்திரம் செய்பவர்களாகவும் தியானிக்கின்றவர் களாகவும் இருக்க வேண்டும்.

29. ம்ருகா: பக்ஷிணோ தம்ஸகாயே
- சதுஷ்டா:
ஸ்ததா வ்யாதயோ பாதகாயே மதங்கே!
பவச் சக்தி தீக்ஷ்ணா க்ர பின்னா ஸுதூரே
விநஸ்யந்துதே சூர்ணித க்ரௌஞ்ஸைலே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்ரௌஞ்ச மலையைப் பொடிப் பொடியாகச் செய்த ஸ்கந்தப்பிரபோ, பொல்லாத மிருகங்கள், பறவைகள், ஈக்கள் மற்றும் என்னுடலை பாதித்துக் கொண்டிருக்கும் கொடிய வியாதிகள் என்று இவைகள் எல்லாமே தங்கள் சக்தி (வேல்) யின் கூர்மையான நுனியால் குத்தப்பட்டு தொலை தூரத்துக்கு அப்பால் தள்ளப்பட்டு நாசமடைய வேண்டும்.

**30. ஜநித்ரி பிதா ச ஸ்வபுத்ராபராதம்**
**ஸஹேதே நகிம் தேவஸேனாதிநாத!**
**அஹம் சாதி பாலோ: பவான் லோகநாத:**
**க்ஷமஸ்வாபராதம் ஸமஸ்தம் மஹேஸ!!**

ஹே தேவஸேனாபதே, குழந்தைகள் செய்யும் குற்றத்தை அன்னையும் தந்தையும் பொறுத்துக் கொள்வதில்லையா? நானோ சின்னக் குழந்தை. தாங்களோ லோகத்திற்கெல்லாம் பிதா. மஹேஸ்வரனாகிய முருகா, என் குற்றங்களை யெல்லாம் மன்னித்து அருள் பாலிக்க வேண்டுகிறேன்.

**31. நம: கேகினே ஸக்தயே சாபி துப்யம்**
**நமஸ்சாக துப்யம் நம: குக்குடாய!**
**நம: ஸிந்தவே ஸிந்து தேஸாய துப்யம்**
**புன: ஸ்கந்தமூர்த்தே நமஸ்தே நமமோஸ்து!!**

ஸ்கந்தனின் வாகனமாகிய மயிலே, உனக்கு வணக்கம். அவருடைய மிகச் சக்தி வாய்ந்த ஆயுதமாகிய வேலே, வணக்கம். ஒரு சமயத்தில் அவருக்கு வாகனமாயிருந்த ஆடே, உனக்கு நமஸ்காரம். கொடியாக விளங்கும் சேவலே, உனக்கு வணக்கம். கடலே உனக்கு வணக்கம். கடற்கரையே உனக்கு நமஸ்காரம். ஸ்கந்தப் பெருமானே. தங்களுக்குப் பலப்பல வணக்கங்கள்.

**32. ஜயநந்த பூமன் ஜயாபார தாமன்**
**ஜயா மோக கீர்த்தே ஜயா நந்த மூர்த்தே**
**ஜயா நந்த ஸிந்தோ ஜயாஸேஷ பந்தோ**
**ஜயத்வம் ஸதாமுக்தி தானேஸ ஸுனோ**

ஆனந்தத்திற்கு இருப்பிடமானவரே போற்றி! அளவற்ற காந்தி உடையவரே போற்றி! அமோகமான பலனைக் கொடுக்கும் வல்லமை உடையவரே போற்றி! ஆனந்தத்தைக் கொடுக்கும் உருவத்தை உடையவரே போற்றி! எல்லோருக்கும் ப்ரியமானவரே போற்றி! முக்தியளிக்கும் ஈசனின் புத்ரா போற்றி!

**33. புஜங்காக்ய வ்ருத்தேனே க்லுப்தம்**
**- ஸ்தவம்ய:**
**படேத் பக்தியுக்தோ குஹம் ஸம்ப்ரணம்ய**
**ஸபுத்ரான் களத்ரம் தனம் தீர்க்க மாயுர்**
**லபேத் ஸ்கந்த ஸாயுஜ்ய மந்தே நரஸ்ஸ:!!**

புஜாங்க ப்ரயாதம் என்ற விருத்தத்தில் இயற்றப்பட்ட இந்தத் துதியினை எவர் பக்தியுடன் பாராயணம் செய்கிறாரோ, அவர் நல்ல மனைவியையும் புத்திரர் களையும், தனத்தையும், ஆரோக்கியத் துடனான நீண்ட ஆயுளையும் அடைந்து, முடிவில் ஸ்கந்தனின் திருவடிகளை அடைவர்.

**இதி ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம் ஸம்பூர்ணம்.**

ஆதி சங்கரர் இயற்றிய ஸ்ரீ சுப்பிரமண்ய புஜங்க ஸ்தோத்திரம் நிறைவு பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சுப்பிரமணிய பஞ்சரத்னம்

ச்ருதிசத நுதரத்னம் சுத்தஸத்வைகரத்னம்
யதிஹிதகரரத்னம் யக்ஞஸம்பாவ்யரத்னம்!
திதிஸுதரிபுரத்னம் தேவஸேநேசரத்னம்
ஜிதரதிபதிரத்னம் சிந்தயேத் ஸ்கந்தரத்னம்!!

1. நூற்றுக்காணக்கான வேதங்களால் போற்றப்பட்ட ரத்தினம் போன்றவரும், தூய்மையான சத்வ குணத்தை ரத்தினமாகக் கொண்டவரும், துறவிகளுக்கு நன்மை செய்யும் ரத்தினமாக விளங்குபவரும். யாகத்தில் வழிபாடு செய்யப்படும் ரத்தினம் ஆனவரும், திதியின் புதல்வர்களாகிய அசுரர்களுக்கு எதிரியாக விளங்கும் ரத்தினம் போன்றவரும், தேவசேனைக்குச் சிறந்தரத்தினம் ஆனவரும் ஆகிய மன்மதனை வெற்றிக் கொண்டரத்தினமாகத் திகழும் ஸ்கந்தன் (கந்தன்) என்ற ரத்தினத்தைத் தியானம் செய்ய வேண்டும்.

ஸுரமுகபதிரத்னம் ஸூக்ஷ்மபோதைக ரத்னம்
பரமஸுகதரத்னம் பார்வதீஸூநுரத்னம்!
சரவணபவரத்னம் சத்ருஸம்ஹாரரத்னம்
ஸ்மரஹரஸுதரத்னம் சிந்தயேத் ஸ்கந்தரத்னம்!!

2. தேவர்களின் படைக்குத் தலைவனாகிய ரத்தினமும், உயர்ந்த (சூட்கம) ஞான வடிவமாகிய ரத்தினமும், மேலான இன்பத்தை அளிக்கும் ரத்தினமும், பார்வதிதேவியின் மகன் என்ற ரத்தினமும், நாணல் காட்டில் (சரவணம்) தோன்றிய ரத்தினமும் பகைவர்களை அழிக்கும் ரத்தினமும், மன்மதனை எரித்த சிவபெருமானின் மகனாகிய ரத்தினமும், ஆகிய ஸ்கந்தன் (கந்தன்) என்ற ரத்தினத்தைத் தியானம் செய்ய வேண்டும்.

நிதிபதிஹிரத்னம் நிச்சிதாத்வைதரத்னம்
மதுரசரிதரத்னம் மாநிதாங்க்ரி அப்ஜரத்னம்!
விதுசதநிபரத்னம் விச்வஸந்த்ராணரத்னம்
புதமுநிகுருரத்னம் சிந்தயேத் ஸ்கந்தரத்னம்!!

3. செல்வத்திற்குத் தலைவனாகிய குபேரனுக்கு நன்மை செய்யும் ரத்தினமும், ஈடற்றது என்று (அத்வைதம்) உறுதியாக்கப் பட்டரத்தினம், இனிமையான வரலாற்றை உடையவரத்தினமும், எண்ணற்ற அடியார்களால் வழிபடப்பட்ட சரண கமலத்தை உடையரத் தினமும், நூறு சந்திரனின ஒளிப் பிரகாசத்திற்கு ஒப்பான தெய்விக ஒளியை (காந்தியை) உடைய ரத்தினம், உலகத்தை நல்ல முறையில் பாதுகாக்கும் ரத்தினமு், தேவரிஷி நாரதருக்கு குருவான ரத்தினமும் ஆகிய ஸ்கந்தன் (கந்தன்) என்ற ரத்தினத்தைத் தியானம் செய்ய வேண்டும்.

அபயவரதரத்னம் சாப்தஸந்தானரத்னம்
இபமுகயுதரத்னம் ஈசசக்த்யைகரத்னம்!
ஸுபகரமுகரத்னம் ஸுரஸம்ஹாரரத்னம்
உபயகதிரத்னம் சிந்தயேத் ஸ்கந்தரத்னம்!!

4. அச்சத்தைப் போக்கி வரங்களை அருளும் (அபயவரதம்) ரத்தினமும், விரும்பும் குழந்தைப் பேற்றை அளிக்கும் ரத்தினமும், யானைமுகத்தை உடையவனுடன் சேர்ந்திருக்கும் ரத்தினமும், ஈசுவரனுடைய சக்தியாகும் ரத்தினமும், மங்களங்களைத் தரும் கைகளையும் முகங்களையும் உடைய ரத்தினமும், சூரபத்மனை அழித்த ரத்தினமும், இம்மை மறுமை ஆகிய இரண்டிற்கும் நன்மையைத் தரும் ரத்தினமும் ஆகிய ஸ்கந்தன் (கந்தன்) என்ற ரத்தினத்தைத் தியானம் செய்ய வேண்டும்.

ஸுஜந ஸுலபரத்னம் ஸ்வர்ணவல்லீசரத்னம்
பஜனஸுகதரத்னம் பாநுகோட்யாபரத்னம்!
அஜசிவகுருரத்னம் சாத்புதாகாரரத்னம்
த்விஜகணநுதரத்னம் சிந்தயேத் ஸ்கந்தரத்னம்!!

நல்லவர்களுக்கு எளிதில் கிடைக்கும் ரத்தினமும், பொன் போன்ற மேனி உடைய வள்ளியின் தலைவன் என்ற ரத்தினமும். தன்னை வழிபடுபவர்களுக்கு சுகத்தை அளிக்கும் ரத்தினமும், கோடி சூரிய பிரகாசம் உடையரத்தினமும். பிரம்மன் - சிவபெருமான் ஆகியவர்கள் இருவருக்கும் குருவான ரத்தினமும், அற்புதமான வடிவம் உடையரத்தினமும், சான்றோர்களின் குழுவால் போற்றப்பட்ட ரத்தினமும் ஆகிய ஸ்கந்தன் (கந்தன்) என்ற ரத்தினத்தைத் தியானம் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சுப்பிரமணிய அஷ்டோத்திரம்

1. ஓம் ஸ்கந்தாய நம :
2. ஓம் குஹாய நம:
3. ஓம் ஷண்முகாய நம :
4. ஓம் பாலநேத்ரஸுதாய நம:
5. ஓம்ப்ரபவே நம :
6. ஓம் ப்ரபவே நம :
7. ஓம் க்ருத்திகாஸுநவே நம :
8. ஓம் சிகிவாஹநாய நம :
9. ஓம் த்விஷட்புஜாய நம :
10. ஓம் த்விஷண் ணேத்ராஜா நம:
11. ஓம் சக்திதராய நம :
12. ஓம் பிசிதாசப்ரபஞ்ஜனாய நம :
13. ஓம் தாரகாஸுர ஸம்ஹாராய நம :
14. ஓம் ரக்ஷோபல - விமர்த்னாய நம :
15. ஓம் மத்தாய நம :
16. ஓம் ப்ரமத்தாய நம :
17. ஓம் உன்மத்தாய நம :
18. ஓம் ஸுரஸைஸ்ய ஸுரக்ஷகாய நம:
19. ஓம் தேவஸேனாபதயே நம :
20. ஓம் ப்ராஜ்ஞாய நம :
21. ஓம் க்ருபாலவே நம :
22. ஓம் பக்தவத்ஸலாய நம :
23. ஓம் உமாஸுதாய நம :
24. ஓம் சக்திதராய நம :
25. ஓம் குமாராய நம :
26. ஓம் க்ரௌஞ்சதாரணாய நம
27. ஓம் ஸேனான்யே நம :
28. ஓம் அக்னிஜன்மனே நம :
29. ஓம் விசாகாய நம :
30. ஓம் சங்கராத்மஜாய நம :
31. ஓம் சிவஸ்வாமினே நம
32. ஓம் கணஸ்வாமினே நம :
33. ஓம் ஸர்வஸ்வாமினே நம :
34. ஓம் ஸநாதனாய நம :
35. ஓம் அனந்தசக்தயே நம :
36. ஓம் அக்ஷோப்யாய நம :
37. ஓம் பார்வதீ-ப்ரிய-நந்தனாய நம :
38. ஓம் கங்காஸுதாய நம :
39. ஓம் சரோத்பூதாய நம :
40. ஓம் ஆஹுதாய நம :
41. ஓம் பாவகாத்மஜாய நம :
42. ஓம் ஜ்ரும்பாய நம :
43. ஓம் ப்ரஜ்ரும்பாய நம :
44. ஓம் உஜ்ஜ்ரும்பாய நம :
45. ஓம் கமலாஸன -ஸம்ஸ்துதாய நம:
46. ஓம் ஏகவர்ணாய நம :
47. ஓம் த்விவர்ணாய நம :
48. ஓம் த்ரிவர்ணாய நம :
49. ஓம் ஸுமனோஹராய நம :
50. ஓம் சதுர்வர்ணாய நம :
51. ஓம் பஞ்சவர்ணாய நம :
52. ஓம் ப்ரஜாபதயே நம :
53. ஓம் அஹஸ்பதயே நம :
54. ஓம் அக்னிகர்ப்பாய நம :
55. ஓம் சமீகர்ப்பாய நம :
56. ஓம் விச்வரேதஸே நம :
57. ஓம் ஸுராரிக்னே நம :
58. ஓம் ஹரித்வர்ணாய நம :
59. ஓம் சுபகராய நம :
60. ஓம் வடவே நம :
61. ஓம் படுவேஷப்ருதே நம :
62. ஓம் பூஷ்ணே நம :
63. ஓம் கபஸ்தயே நம :
64. ஓம் கஹனாய நம :
65. ஓம் சந்த்ரவர்ணாய நம :
66. ஓம் கலாதராய நம :
67. ஓம் மாயாதராய நம :
68. ஓம் மஹாமாயினே நம :
69. ஓம் கைவல்யாய நம :
70. ஓம் சங்கராத்மஜாய நம :
71. ஓம் விச்வயோனயே நம :
72. ஓம் அமேயாத்மனே நம
73. ஓம் தேஜோநிதயே நம :
74. ஓம் அனாமயாய நம :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75. ஓம் பரமேஷ்டினே நம :
76. ஓம் பரப்ரஹ்மணே நம :
77. ஓம் வேதகர்ப்பாய நம :
78. ஓம் விராட்ஸுதாய நம :
79. ஓம் புலிந்தகன்யாபர்த்ரே நம :
80. ஓம் மஹாஸாரஸ்வதாவ்ருதாய நம :
81. ஓம் ஆச்ரிதாகிலதாத்ரே நம :
82. ஓம் சோரக்னாய நம :
83. ஓம் ரோகநாசனாய நம :
84. ஓம் அனந்தமூர்த்தயே நம :
85. ஓம் அனந்தாய நம :
86. ஓம் சிகண்டினே நம
87. ஓம் டம்பாய நம :
88. ஓம் பரமடம்பாய நம :
89. ஓம் மஹாடம்பாய நம :
90. வ்ருஷாகபயே நம :
91. ஓம் காரணோபாத்ததேஹாய நம :
92. ஓம் காரணாதீதவிக்ரஹாய நம :
93. ஓம் அநீச்வராய நம :
94. ஓம் அம்ருதாய நம :
95. ஓம் ப்ராணாய நம :
96. ஓம் ப்ராணாயாம - பராயணாய நம :
97. ஓம் விருத்தஹந்த்ரே நம :
98. ஓம் வீரக்னாய நம :
99. ஓம் ரக்தச்யாமகலாய நம :
100. ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம :
101. ஓம் குஹாய நம :
102. ஓம் ப்ரீதாய நம :
103. ஓம் ப்ரஹ்மண்யாய நம :
104. ஓம் ப்ராஹ்மணப்பரியாய நம :
105. ஓம் வம்சவ்ருத்திகராய நம :
106. ஓம் வேதவேத்யாய நம :
107. ஓம் அபயபல - ப்ரதாய நம :
108. ஓம் ஸ்ரீ வள்ளி தேவஸேனா ஸமதே ஓம் ஸ்ரீ ஸுப்ரஹ்ம்மண்யாய நம :

# ஸ்ரீ குக பஞ்சரத்தினம்

ஆபத்துக்களிலிருந்து அன்பர்களைக் காப்பதில், ஆறுமுகனுக்கு ஈடான தெய்வம் இல்லை என்பது, ஆன்மிகப் பெரியோர் பலரின் வாக்கு.

அந்த வகையில், குறையாவும் தீர்க்கும் குமரனைப் பணிந்து பாடப்பட்ட, 'குக பஞ்சரத்தினம்' எனும் ஐந்து பாடல்கள், மிகவும் சக்தி வாய்ந்தவை.

அற்புதமான அந்தத் துதிகளைப் பாடி முருகனைப் பணிவது, முன்வினை நீக்கி, முழு நிம்மதி தரும்.

ஓம்கார நகரஸ்த்தம் தம்
- நிகமார்தவனேஸ்வரம்!
நித்ய மேகம் சிவம் சாந்தம் வந்தே
- குஹம் உமாசுதம்!!

ஓங்காரம் என்கிற நகரத்தில் வசிப்பவனும் வேதாந்தம் என்கிற வனத்திற்கு அதிபனும், நிரந்தரமானவனும், தன்னுள் அனைத்தும் அடங்கி, எல்லாமும் தானான ஒன்றானவனும், மங்களத்தைத் தருபவனும், சாந்தமானவனும், உமாதேவியின் புத்திரனுமான குஹனை நமஸ்கரிக்கின்றேன்.

வாசாம கோசரம் ஸந்தம் சிதுத்யான
- விஹாரிணம்!
குருமூர்த்திம் மனோஸ்தம் வந்தே
- குஹம் உமாசுதம்!!

வாக்கிற்கு எட்டாதவனும், ஸ்கந்தனும், சித்து என்கிற பூங்காவில் வசிக்கின்றவனும், குருமூர்த்தியும், தந்தையான ஈசனுக்கும் ஈசனான மகேசனும், உமாதேவியின் மைந்தனுமான குஹனை, பணிகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸச்சிதானந்த ரூபேசம் ஸம்ஸாரத்வாந்த - தீபகம்!
சுப்ரஹ்மண்யம் அனாத்யந்தம் வந்தே - குஹம் உமாசுதம்!!

சத்து சித்து ஆனந்தத்தின் உருவமானவனும், பந்தமாகிய இருளைக் கடக்க உதவும் ஒளியானவனும், சுப்ரமண்யம் என்று வேதங்களால் போற்றப்படுபவனும், ஆதி அந்த மில்லாதவனும், உமாதேவியின் புதல்வனுமாகிய குஹனை வணங்குகின்றேன்.

ஸ்வாமிநாதம் தயாசிந்தும் பவாப்தே: - தாரகம் ப்ரபும்!
நிஷ்களங்கம் குணாதீம் வந்தே குஹம் - உமாசுதம்!!

தந்தையாகிய பரமனுக்கே பாடம் சொன்ன சுவாமிநாதனும், தயையில் கடலைப் போன்றவனும், உலகவாழ்க்கை என்கிற சாகரத்தைத் தாண்டவைப்பவனும், மேலானவனும், குறையேதும் இல்லாதவனும், சத்வம், ராஜஸம், தாமஸம் என்ற மூன்று குணங்களுக்கும் அப்பால் உள்ளவனும், உமாதேவியின் மகனுமான குஹனை துதிக்கின்றேன்.

நிராகாரம் நிராதாரம் நிர்விகாரம் நிராமயம்!
நிர்த்வந்தவம் ச நிராலம்பம் வந்தே குஹம் உமாசுதம்!!

உருவமில்லாதவனும், வேறொருவரை ஆதாரமாகக் கொள்ளாதவனும், அழகில் களங்கமில்லாதவனும், அழிவு இல்லாதவனும், தனக்கு இணையாகக் கூறவேறொருவர் இல்லாத ஒன்றானவனும் பற்றில்லாதவனும், உமாதேவியின் பிள்ளையுமான குஹனை வேண்டுகிறேன்.

செல்வம் பெருகும், ரோகங்கள் விலகும், வாழ்வு வளம் பெறும், ஸ்ரீ சுப்ரமண்ய பிரஸன்ன மாலா மந்திரம் என்கிற கிரந்தத்திலிருந்து எடுக்கப்பட்ட மந்திரங்கள் இவை. சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்த ராம தீட்சிதர் அவர்களால் ஜெய மங்கள ஸ்தோத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ள பெருமையும் இதற்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரையியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சால்பு ஊன்றிய தூண்

-கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் -

வையத்தில் வாழும் வகையைத் தெளிவாக எடுத்துக்கூறும் நூல் திருக்குறளாகும். ஈரடி வெண்பாவால் ஞாலத்திற்கு வேண்டிய அனைத்து விடயங்களையும் 1330 குறளில் அடக்கிய அறநூலும் இதுவேயாகும். குறள் காட்டும் வாழ்வியல் எல்லோருக்கும் ஏற்றது அதனால் 'உலகபொதுமறை' என்ற சிறப்புப் பெயரையும் இந்நூல் பெற்றுள்ளது. திருக்குறளை இயற்றிய வள்ளுவரது உலகநோக்கு மிகவும் சிறப்பானது அறிவுடமையால் உலகத்தையே ஒருவர் தமக்கு நட்பாக்கிக் கொள்ளமுடியும் என்பது வள்ளுவர் கருத்து. அறிவு என்னும் ஆற்றல் உடையவர். வரப்போகும் நிகழ்வுகளை முன்கூட்டியே அறியவல்லவர்.

இத்தகைய அறிவு எத்தகையது என்பதை வள்ளுவரிடத்து தெளிவாக விளக்கியுள்ளார் ஒருவர் தான் சொல்லுகின்ற கருத்தைக் கேட்பவருக்கு மிக எளிமையாக விளக்கி மனதிலே பதியும் வண்ணம் சொல்லக்கூடியவராக இருப்பின் அவரே அறிவுடையவர். பிறர் சொல்கின்ற கருத்தையும் தெளிவாக விளக்கிக்கொள்ளக்கூடிய ஆற்றலும் அறிவுடையோரிடம் இருக்கும். சொற்களின் நுண்ணிய பொருளைக் காண்பதற்கு அறிவு துணைசெய்யும் மனத்தை அதன்போக்கிலே அலையவிடாது நல்ல வழியிலே செலுத்தும் ஆற்றலையும் அறிவு தரும். எனவே தீயவழியில் செல்லாமல்தடுத்து நிற்பதும் அறிவேயாகும்.

துன்பம் வருவதற்கு முன்னரே அதனை அறிந்து அதிலிருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்கே எல்லோரும் விரும்புவர். அதற்கு அறிவைத்தேடவேண்டும். மேலும் வந்த துன்பத்தைத் தாங்கும் ஆற்றலையும் அறிவு தரவல்லது. அறிவை ஒருவர் கல்வியாலும் கேள்வியாலும் பெற்றுக்கொள்ளமுடியும் கற்கவேண்டிய நூல்களைக் கற்றுக்கல்வியறிவைப் பெறலாம். ஒழுக்கம் உடையவர்களுடைய சொற்களைக் கேட்பதன் மூலம் ஒருவர் பெறும் அறிவு செவியால் பெறும் செல்வமாகும். ஒருவர் அறிவைத் தனது முயற்சியாலும் பெறலாம். பிறருடைய அறிவுரையாலும் பெறலாம்.

அறிவினால் ஒழுக்கம், மெய்மை, நாண் என்னும் மூன்று குணங்களும் உருவாகும். மனிதவாழ்வியலில் செம்மையான செல்நெறி ஒன்றை இக்குணங்கள் காட்டி நிற்கும். திருக்குறள் இம்மூன்று குணநலன்களையும் மூன்று அதிகாரங்களில் விளக்கியுள்ளது. ஒழுக்கமுடைமை, வாய்மை, நாணுடைமை என்னும் அதிகாரங்களில் 30 குறள் இதனை விரிவாய்க் கூறுகின்றன. இம்மூன்று குணவியல்பையும் மிக எளிமையாக வள்ளுவர் விளக்கியுள்ளார். வாய்மை என்று சொல்லப்படுவது எதுவெனில் பிறருக்குத்தீமை சிறிதும் தராதசொற்களைப் பேணுதலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாய்மை எனப்படுவது யாது எனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்" (குறள் : 291)

நல்லொழுக்கம் மனிதருக்கு இன்பம் தரும். தீயொழுக்கம் எப்பொழுதும் துன்பம் தரும். இவ்வாறு வள்ளுவர் கூறும் விளக்கம் ஒழுக்கத்தினால் ஏற்படும் நன்மையைத் தெளிவாகக் காட்டுகிறது.

"நன்றிக்கு வித்(து) ஆகும் நல்ஒழுக்கம் தீ ஒழுக்கம்
என்றும் இடும்பைத் தரும்" (குறள் : 138)

உணவு, உடை, மற்றவை எல்லாம் உயிர்களுக்குப் பொதுவானவை ஆனால் நாணம் என்பது நன்மக்களுக்குச் சிறப்பானதொரு குணமாகும்.

"ஊண் உடை எச்சம் உயிர்க்கு எல்லாம் வேறு அல்ல
நாண் உடைமை மாந்தர் சிறப்பு" (குறள் : 1012)

வள்ளுவர் காட்டும் இக்குண இயல்புகளுடன் மனித வாழ்க்கை என்னும் மண்டபம் நிலைத்து நிற்க முடியாது. இக்குணஇயல்புகளோடு பிறிதொரு உயர்ந்த வாழ்வியலுக்குத் தேவையான பண்பு நலன்களையும் வள்ளுவர் எடுத்துரைத்துள்ளார்.

வாழ்க்கை என்பது ஓர் உறுதியான மண்டபம் போன்றது. அது உடையாமல் நிலைத்து நிற்க வேண்டுமாயின் அந்த மண்டபத்திற்கு மிகவும் உறுதியான தூண்கள் தேவை. தூண்களின் மேல் 'சால்பு' என்னும் கூரையை வேய்ந்து விட்டால் மண்டபம் பொலிவுடன் நீண்ட காலம் நிலைத்து நிற்கும். வாழ்க்கையை வள்ளுவர் இவ்வாறு உருவகித்துக் கூறுவது அவருடைய முதிர்ந்த பட்டறிவைக் காட்டுகிறது. மனிதனுடைய குண இயல்புகளே அவனை உயர்ந்த பண்புடையவனாக உலகில் வாழவைக்கும். 'சான்றோன்" என்று சிறப்புப் பெறவைக்கும் சான்றோர் நலமென்பது குணங்களால் பெறப்பட்ட நலமே அந்த உயர்ந்த குணங்களை ஒரு குறளிலே வள்ளுவர் வரையறை செய்துள்ளார்.

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்து சால்(பு) ஊன்றிய தூண்" (குறள் : 983)

இக்குறளில் வள்ளுவர் கூறியுள்ள 5 குணத்தையும் தனித்தனியாகவும் 5 அதிகாரங்கள் அமைத்துக் கூறியுள்ளார். அன்புடைமை, நாணுடைமை, ஒப்புரவறிதல், கண்ணோட்டம், வாய்மை என்னும் அதிகாரங்களாக அறத்துப்பாவிலும் பொருட்பாவிலும் அவ்வதிகாரங்கள் அமைந்துள்ளன. சான்றாண்மை என்னும் அதிகாரத்தில் ஒரு குறளில் இப்பண்புகளைத் தொகுத்துக் கூறியிருப்பது நோக்குதற்குரியது.

ஒருவரிடம் தனித்தனியாக இக்குணங்கள் செறிந்திருக்கலாம். அதனை வளர்த்துக் கொள்ளவும் ஒருவர் முயற்சி செய்யலாம். எனவே அவற்றைத் தனித்தனியாக வள்ளுவர் விளக்கியுள்ளார். வையத்தில் வாழ்வாங்கு ஒருவர் வாழ்வதற்கு மேலே தொகுத்துச் சொல்லிய குணநலங்கள் அவரிடம் செறியவேண்டும். எனவே 'சான்றாண்மை" என்ற உயர்ந்த குணநலத்தை அடைவதற்கு முதலில் இவ்வைந்து குண இயல்பினையும் பெற்றிருக்க வேண்டுமென வள்ளுவர் விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வைந்து குணத்தினையும் ஓரொழுங்கிலே பெற்றுக் கொள்ளலாம் என்பதே வள்ளுவருடைய கருத்தாகும். இல்லறவியலில் அன்புடைமை என்னும் அதிகாரத்தில் அன்பினை விளக்கிக் கூறுகிறார். அன்பு என்னும் குணநலம் ஒருவருக்கு மிகவும் இன்றியமையாதது. அதனைப் பற்றி வள்ளுவர் 10 குறளில் விரித்துக் கூறும்போது அக்குணநலம் உடையவருடைய பண்பை ஒரு குறளில் மிகத்தெளிவாகக் கூறியுள்ளார்.

"அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர் அன்பு உடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" (குறள் : 72)

அன்பு இல்லாதவர் எல்லாவற்றையும் தமக்கே உரியது என்ற நினைவுடன் சுயநலத்துடன் வாழ்வர். ஆனால் அன்புஉடையவர் தமது உடலையும் பிறருக்காகக் கொடுக்கும் பரநலத்துடன் வாழ்வர். தனது நலத்தைப் பற்றி எண்ணாமல் பிறர்நலத்தையே எண்ணிவாழும் பண்புடையவர்தான் சான்றோராக உருவாகும் தகுதியுடையவராவர்.

நாணுடைமை என்பது இழிந்த செயல்களுக்காக மனம் ஒடுங்குவது சான்றோருக்கு இப்பண்பு ஓர் அழகு என்று வள்ளுவர் கூறுகிறார். சான்றோர் நாணத்தை ஓர் அணிகலனாகக் கொண்டிருப்பார் இது அவருடைய நடைக்கு ஒரு மேலதிக சிறப்பைக் கொடுக்கும். அவரை தனித்துவமாக இனங்காட்டி நிற்கும். ஒப்புரவு என்பது பெருந்தன்மையென தற்காலத்தில் வழங்கப்படுகின்றது. ஒப்புரவு உடையவர் பிறருக்கும் நன்மை செய்வார். ஒருவருக்கு செய்யவேண்டிய வற்றை எண்ணிப் பார்த்து செய்கின்ற இயல்புடையவரே ஒப்புரவானவர் ஆவார். இப்பண்பு அன்பினாலும் நாணுடைமையாலும் ஒருவரிடம் இயல்பாகவே வந்தமையாலும் சிறப்பாக செல்வம் உடையவர்களிடம் இப்பண்பு உளதானதால் பலர் பயன்பெற முடியும். ஊர் நடுவே பயன் தரும் பழமரம் ஒன்று பழுத்தால் எல்லோரும் பயனடையலாம் அதைப்போன்றே ஒப்புரவானதாகும். கண்ணோட்டம் என்பது ஒருவருடைய கண்ணுக்கு அணிகலம் போன்றது. கண்ணோட்டம் இல்லாதவர் கண் இல்லாதவர் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். கண்ணோட்டம் எனும் குணவியல்பு கொண்டவரிடம் மன உணர்வை வள்ளுவர் குறளில் தெளிவாக விளக்கியுள்ளார்.

"பெயரைக் கண்டும் நஞ்சு உண்(டு) அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர் (குறள் : 580)

நன்றாக பழகியவர் தனக்கு நஞ்சை தருவதை அறிந்த பின்னரும் அதை உண்டு மீண்டும் அவரோடு நட்போடு பழகும் இயல்பு கண்ணோட்டம் உடையவருக்கே சாத்தியமாகும். தனக்கு அவமானம் தரும் செயல்களை நெருங்கியவர் செய்கின்ற போது அதைப்பொறுத்து வாழும் பண்பு நலனே மனிதவாழ்வியலுக்கு இன்றியமையாதது. இது எல்லோராலும் முடியாத காரியம் தம்மை தண்டிப்பவரையும் பொறுத்துக்கொள்ளும் பண்பு கண்ணோட்டம் ஆகும். அன்பும், நாணுடைமையும் ஒப்புரவும் இருப்பின் இக்குணம் இயல்பாகவே வந்துசேரும் என்பதே வள்ளுவருடைய கருத்தாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து இந்த நான்கு குணங்களும் ஒருங்கிணைந்து செய்யப்படுவதற்கு வாய்மை என்னும் பண்பு நாண் இன்றியமையாதது என வள்ளுவர் கருதியுள்ளார். வாய்மை என்னும் அதிகாரத்தில் ஒருவருடைய வாய்மை எத்துணை சிறப்பைத் தரும் என விளக்கிக் காட்டுகிறார்.

"உள்ளத்தால் பொய்யாத(து) ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளள்" (குறள் : 294)

மனம் அறியப் பொய் கூறாதவன் உலகத்தாரின் மனங்களின் எல்லாம் இருப்பான் என வள்ளுவர் கூறுவது எண்ணிப்பார்க்க வேண்டியது பொய்மை இல்லாதவன் உள்ளம் கள்ளம் கபடமற்றற பொய்மை உள்ளவன் உள்ளமோ வஞ்சனைக்கும் அஞ்சாதது ஒரு செயற்பாட்டில் பல பொய்கள் கூறவேண்டிய நிலை அவனுக்கு ஏற்படும். ஒருவனுடைய உடல் நீரினால் தூய்மை அடையும் அதேபோல் மனத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டுமாயின் வாய்மையை கடைப்பிடிக்க வேண்டும். உலகத்திற்கு ஒளிதரும் விளக்குப் போன்றது சான்றோரது வாய்மையாகும். சான்றோரது மனத்திலே படிந்திருப்பதற்கு வாய்மை என்னும் பொய்யா விளக்கே உதவுகின்றது இதனால் வாய்மை சிறந்ததோர் அறமாக போற்றப்படுகின்றது.

வள்ளுவர் வாழ்க்கையில் நல்லவாறு வாழும் ஒரு நெறியாகவே காட்ட முயன்றுள்ளார். வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கருத்து நிலையும் உருவாகியது. ஆனால் வாழ்கின்ற முறைமை ஒன்று அதற்கு தேவை அதையே வள்ளுவர் திருக்குறளில் வரையறை செய்து காட்டியுள்ளார் எனலாம். மனிதனின் இயல்பான குணங்களை சிறப்புற வைப்பதற்கு வழிகாட்டியுள்ளார். "சால்பு" என்னும் திண்மை ஒருவருக்கு வந்துவிட்டால் அவருடைய வாழ்வும் உறுதியான செய்நெறி ஒன்றைப் பெற்றுக் கொள்ளும். மேலும் சான்றோராக மக்களை உருவாக்கச் செய்ய வேண்டும். நல்ல எண்ணமும் வள்ளுவருக்கு இருந்தது நல்லவராக வல்லவராக வாழவைப்பதில் நூல்களின் பங்களிப்பும் உண்டு. நூல்கள் கூறும் நல்ல கருத்துக்களை அறிவுரைகளை உள்வாங்கும் ஆற்றல் எல்லோருக்கும் தேவை ஆனால் அக்கருத்துக்களை தெளிவாக எடுத்துக்கூற ஒரு நூல் வேண்டும். இதையே வள்ளுவர் திருக்குறளை இயற்றும் போது இலக்கு ஆக்கியுள்ளார்.

திருக்குறள் பதினெண்கீழ்க்கணக்கு என்னும் தொகுப்பில் அடக்கப்பட்டுள்ளது. அறநிதி நூல்களே இத்தொகுப்பில் அமைந்துள்ளது. வள்ளுவருடைய நூல் மிகக் குறுகிய செய்யுள் வடிவத்திலே அறக்கருத்துக்களை எடுத்துரைக்கின்றது. இன்று உலகறிந்த நூலாகவே பல மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டு எல்லோரும் எடுத்துப் படிக்கும் நூலாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளுக்கு ஓர் உரை

"தெய்வம் தொழாஅள் கொழுநற் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

பிறதெய்வம் தொழாது தன்தெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயிலெழுவாள் பெய்யென்று சொல்ல மழை பெய்யும் இது பரிமேலழகர் உரை.

இக்குறள் வாழ்க்கைத் துணை நலம் என்னும் அதிகாரத்தில் ஐந்தாவது குறளாக அமைந்துள்ளது. இவ்வதிகாரம் குடும்பப்பெண்ணின் இயல்பும், சிறப்பும், பெருமையும் அக்குடும்பத்தை எவ்வாறு நலம்பெற வைக்கிறது என்பதை விளக்குகின்றது. இதற்குமுந்திய இல்வாழ்க்கை என்ற அதிகாரம் ஆண் இல்லாளோடு கூடிவாழ்தலின் சிறப்புகள் கூறுமிடத்து பெரும்பாலும் ஆணினுடைய கடமைகள் பொறுப்புகள் பற்றியே பெரிதும் பேசப்படுகிறது. எப்படியிருந்த போதிலும் வீட்டிற்கு நல்ல பெண் அமையவில்லை என்றால் அது வீடாகாது அடவிகாடே. அதனாற்தான் "வீட்டிற்கு நல்லவளை வை" என்ற பேச்சு வழக்குப் பெருமைக்குரியதாக மதிக்கப்படுகின்றது.

இல்வாழ்க்கை என்பது கணவன் மனைவியுடன் சேர்ந்து வாழும் வாழ்க்கை.. அன்றும் இன்றும் மனைவியுடன் மரியாதையாக வாழ்வதற்காகவே கணவன் இல்லத்தை அமைக்கிறான். எனவே இல்லத்தை அமைக்கும் பொறுப்பு கணவனுக்குரியது. ஆயினும் இல்லான் என்ற சிறப்புப் பெயர் அவனுக்கு இல்லை. இருந்தால் ஒன்றுமில்லாதவன் என்ற பொருளையே தரும் இல்லத்திற்குரியவள் பெண் என்பதனால் 'இல்லாள்'' என்று மனைவி சிறப்பாக அழைக்கப்பட்டாள். எனவேதான்.

''இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை'' என ஔவையும்.

"இல்லதென் இல்லவள் மாண்பானால்" என வள்ளுவரும் வாழ்த்தியிருப்பதைக் கொண்டு உணரமுடியும். எனவே ஓர் ஆண் எவ்வளவு பெரிய பட்டம் பதவி அந்தஸ்த்து உடையவனாக இருப்பினும் அவன் தான் தனித்து வாழ்வதற்காகச் சிறப்பான இல்லம் அமைத்த வரலாறு என்றுமே இருந்ததில்லை. அது உலக வாழ்க்கையும் இல்லை. ஆண் பெண்ணோடு கூடிவாழும் வாழ்க்கையே பெருமைக்குரியது. அதனையே.

"தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தாள் பெரும்பித்தன் காணேடி
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி விடுவார்காண் சாழலோ"

என்று மாணிக்கவாசகரும்

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்லகுதுறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே"

என்று திருஞானசம்பந்தரும் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள். எனவே ஆண் பெண் உறவு என்பது தனித்து மனிதப்பிறவிக்கு மட்டும் உரியதல்ல. உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் அடிப்படையானது. அந்த உறவு இல்லையேல் இனவிருத்தியே இல்லை. உலக நிலைபேறும் இல்லாமற் போய்விடும். விஞ்ஞான விந்தைகள் இதற்குப் போட்டியாய் அமைந்தாலும் நடைமுறைச் சாத்தியம் அற்றதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே ஆண் பெண் உறவு அவசியமானது. "சக்தி என்றோ அன்றே சிவம் உண்டு. சிவம் என்றோ அன்றே சக்தி உண்டு'' இரண்டும் உயர்வு தாழ்வின்றி ஒத்து உலக உயிர்களை இயக்குகின்றன. என்கிறது. சிவஞானசித்தியார். "சிவமின்றிச் சக்தியில்லை சக்தியின்றிச் சிவமில்லை" என்பதும் சிந்திக்கறபாலதே. எனவே ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் பெருமைக்குரியதே. ஓர் ஆணுடைய பேருக்கும் புகழுக்கும் பின்னால் ஒரு பெண்ணுடைய பெருமை பேசப்படுகிறது. காப்பியங்களிலே எவ்வாறு இராமனுக்குச் சீதையும், கோவலனுக்குக் கண்ணகியும், பாண்டவர்க்குப் பாஞ்சாலியும், சத்தியவானுக்குச் சாவித்திரியும், அரிச்சந்திரனுக்குச் சந்திரமதியும் என்று பேசப்படுகிறதோ; அதே போல இல்வாழ்க்கையிலும் ராமகிருஷ்ணருக்குச் சாரதாதேவியும், வள்ளுவருக்கு வாசுகியும், காந்திக்குக் கஸ்தூரிபாயும், காந்திமாஸ்ரருக்கு இராசநாயகியும் என்று பேசப்படுவதும் பெருமைக்குரியதே.

இத்தகைய பெருமைக்குரிய மனிதவாழ்வியல் முறையை வரையறை செய்து முறைப்படி கூறிய சிறப்பிற்குரிய நூல் திருக்குறள் ஒன்றே. இந்நூல் நூற்றுமுப்பத்துமூன்று (133) அதிகாரங்களைக் கொண்டு அமைந்துள்ள போதிலும், ஒழுங்குமுறைப்படி மனித வாழ்விற்கு அதிகமுக்கியமான கடவுள் வழிபாடு, மழையின்தேவை, நீத்தவர் பெருமை, அறத்தின் அவசியம், இல்வாழ்வின் இன்றியமையாமை, ஆண் பெண் துணை நலம் என முதல் ஆறு அதிகாரங்களாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆறு அதிகாரங்களையும் அவதானிக்கும் போது ஆறு சமயங்களையும் மறந்துவிட முடியாது. சைவம், வைஷ்ணவம், சாத்தம், சௌரம், காணபத்தியம், கௌமாரம் என்ற ஆறு உட்சமயங்களும்; பௌத்தம், சைனம், பைரவம், காளாமுகம், உலோகாயதம், மாயாவாதம் என்ற புறச்சமயங்கள் ஆறும் மனிதவர்க்கத்தால் போற்றப்படுவனவே. இந்தச் சமயங்கள் ஆறும் மனிதகுலத்திற்கு ஆண்டவன் பெயரால் ஆறு கட்டளைகளை வழங்கியுள்ளதாகக் கவிஞர் கண்ணதாசன் அவர்கள்.
"ஆறு கட்டளை ஆறு அது ஆண்டவன் கட்டளை ஆறு'' எனப்பாடியுள்ளமை பலரும் அறிந்த விடயமே. சமயத்தின் பேரால் ஆண்டவன் எவ்விதம் கட்டளை விடுத்தாரோ, அதேபோல திருக்குறள் முதல் ஆறு அதிகாரங்கள் மூலம் மனிதகுலத்தின் வழ்விற்கு வள்ளுவரும் ஆறு கட்டளைகளை வழங்கியுள்ளார் என்பதை.

"ஆறு சமயம் ஆறு அவை
ஆற்றிடும் கட்டளை ஆறு
வாழப்பிறந்த மனிதன் மகிழ
வள்ளுவன் கட்டளை ஆறு" என்னும்

புதிய பாடலைப்படிக்கும்போது புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் வாழ்க்கைத் துணைநலம் என்னும் ஆறாவது அதிகாரம் தொடக்கம் ஊடல் உவகை என்னும் இறுதி அதிகாரம் வரை உள்ள நூற்று இருபத்தெட்டு (128) அதிகாரங்களிலும் மனிதகுலத்தின் இன்பதுன்பம், நல்லது கெட்டது. விரும்புவது வெறுப்பது, என்று வாழ்வின் அநுபவங்களே வரையறை செய்யப் பட்டுள்ளது. அதனாலேதான் உலகம் முழுவதும் திருக்குறளைச் சிறந்த நூலாக ஏற்றுக் கொண்டுள்ளது. வாழ்க்கைக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான எல்லா விடயங்களுமே சொல்லப்பட்டுள்ளன. சொல்லாத விடயம் என்று எதுமே இல்லை. இத்தகைய சிறந்த நூல் தமிழ் மொழியிலேயே உருவானது. அதனால் தமிழர்களின் பாரம்பரியம், பழக்க வழக்கம், பண்பாடு என்பவற்றை உருப்படியாகக் கொண்டுள்ள தனித்துவம் மிக்கது. எத்தனையோ மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதால் அவரவர் தமக்குரிய மொழிகளில் வாங்கிக் கற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது. மொழிபெயர்ப்பு நூல்களைப் பார்ப்பவர்கள் அநேகமாக உரையைக் கொண்டுதான் குறளை உணர்கின்றனர்.

டாக்டர் உ. வெ. சாமிநாத ஐயர் அவர்கள் திருவள்ளுவரும் திருக்குறளும் என்ற கட்டுரையிலே குறிப்பிட்ட விடயம் இந்த இடத்திலே மிகவும் பொருத்தமானதாகும். "தமிழ் மணம் எங்கெங்கே உண்டோ அங்கெல்லாம் திருக்குறளின் நறுமணம் வீசிக்கொண்டே இருக்கும். குறள் மணம் எங்கெங்கே உண்டோ அங்கெல்லாம் தமிழ்மணம் வீசிக்கொண்டே இருக்கிறது என்று கூறுவதே பொருத்தமானதாகும். ஏனெனில் தமிழ் வழங்காத பிறநாடுகளில் உள்ள அறிஞர்கள் திருக்குறள் மொழி பெயர்ப்புகளைப் படித்து இன்புறுகின்றனர். அங்கே தமிழ்மணம் ஏது? நாமெல்லாம் தமிழை அறிந்து அதன்மூலம் குறளை அறிகின்றோம். அவர்களெல்லாம் குறளின் பொருளை அறிந்து அதன்மூலம் 'தமிழைப்பற்றி அறிகின்றார்கள்' என்று அழகாக எடுத்துக் கூறியுள்ளார். இன்று உலகெங்கும் தமிழர்கள் நிரந்தரமாகவும், அகதிகளாகவும் பரந்துபட்டு வாழ்கின்றார்கள். அங்கெல்லாம் அவர்கள் தங்கள் பாரம்பரியமான பண்பாட்டைப் பேணிக்காத்தும் வருகின்றார்கள். "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தாம் குடியிருக்கும் இடமெல்லாம் இந்துக் கோயில்களை அமைத்து இடையறாது இருபாலாருக்கும் வழிபட்டு வருகிறார்கள். இதையெல்லாம் நேரடியாக அவதானிக்கும் அந்நிய நாட்டவர்கள் குறளையும் குறள் உரையையும் பார்க்கும்போது ஆழமாக நுணுகி ஆராய்ந்து சிந்திக்கும் ஒருவர் மேலே தரப்பட்ட குறளின் உரையைக் கொண்டு திருக்குறள் தமிழில் எழுந்த நூலுமல்ல, தமிழரின் பாரம்பரிய பண்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட நூலுமல்ல என்று வாதிடமுனைந்தால் அதுதவறாகவும் இருக்க முடியாது. "முதற்கோணல் முற்றும் கோணல்" என்ற பழமொழியும் பக்கத்துணையாகிவிடும். திருக்குறளின் முதல் அதிகாரமே கடவுள் வழிபாடு. அந்த வழிபாட்டுமுறை இக்குறளின் மூலம் மறுக்கப்படுகிறது என்பது எவருக்கும் தெளிவாகிறது.

ஒருமுறை உரையைப் பார்த்து விட்டால் அது புரிந்துவிடும். தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள் பெய் என பிறதெய்வம் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயில் எழுவாள் பெய்யென்று சொல்ல; மழை பெய்யும் மழைபெய்யும். எனப் பரிமேலழகர் உரை தந்துள்ளார். இங்கே பிறதெய்வம் தொழாது என்று கூறப்பட்டதற்கும் கடவுள் வாழ்த்திலே பரிமேலழகர் கூறியஉரைக்கும் நிறைய வேறுபாடு உண்டு. கடவுள் வாழ்த்தில் முதலாம், ஒன்பதாம் குறள் தவிர்ந்த ஏனைய எட்டுக் குறள்களிலும் தொழார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தார், நீடுவாழ்வார், சேர்ந்தார்க்கு, புகழ்புரிந்தார், நெறிநின்றார், நீடுவாழ்வார், தாள்சேர்ந்தார், தாள்சேர்ந்தார் நீந்துவர், நீந்தார், அடிசேராதார் என இருபாலார்க்கும் உரிய பன்மை விகுதிச் சொற்கள் பன்னிரண்டு (12) பயன்படுத்தப் பட்டுள்ளது. இதனால் கடவுள் வழிபாடு இருபாலார்க்கும் உரியதென்பது பரிமேலழகராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. இதற்கு எந்த மறுப்பும் கூறுவதற்குத் திருக்குறளில் இடமில்லை. ஆண்பாலைக் குறிப்பதற்கு ஆண்பால் ஒருமை விகுதியும், பெண்பாலைக் குறிப்பதற்குப் பெண்பால் ஒருமை விகுதியும், பலர்பாலைக் குறிப்பதற்குப் பலர்பால் பன்மை விகுதியும் குறள்கள் தோறும் வள்ளுவர் கையாண்டிருப்பது கண்கூடு.

ஓர் உதாரணத்தை மட்டும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

**"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தானோ டூர்ந்தான் இடை"**

அறத்து ஆறு இது என வேண்டா - அறத்தின் பயன் இதுவென்று யாம் ஆகம அளவையான் உணர்தல் வேண்டா; சிவிகை காவுவானோடு செலுத்து வானிடைக் காட்சியளவை தன்னாலே உணரப்படும். எனப்பரிமேலழகரே உரை தந்துள்ளார். சிவிகை நான்குபேர் காவுவதுதான் நடைமுறை வழக்கம் எக்காரணங்கொண்டும் தனித்து ஒருவனால் காவப்படுவதில்லை. ஆனால் இங்கே சிவிகை பொறுத்தான என்று ஆண்பால் ஒருமை விகுதியை வள்ளுவர் பயன்படுத்தி இருப்பதும் பரிமேலழகர் ஏற்று உரைசெய்திருப்பதும் அவதானிக்க முடிகிறது. எனவே கடவுள் வழிபாடு இருபாலார்க்கும் அவசியம் என்பதை வலியுறுத்தவே பலர்பால் பன்மை விகுதிச் சொற்களை வள்ளுவர் பயன்படுத்தி உள்ளார் என்பது தெட்டத்தெளிவாவதோடு; பரிமேலழகரும் ஏற்று உரைசெய்துள்ளார் என்பதும் உணரமுடிகிறது.

காலங்காலமாகப் பெண்கள் கடவுள் வழிபாடு செய்துவந்திருக்கிறார்கள் என்பதற்கு கடுகளவும் மறுப்பிற்கு இடமில்லை. கல்வி ஆரம்பித்த காலத்திலேயே

"மாதா பிதா குரு தெய்வம் அவர்
மலரடி தினம் தினம் வணங்குதல் செய்வோம்"

என இசையோடு கூடிய பாடலாகவே பாடி இன்புற்றவர்கள் படிக்கின்ற காலத்திலே ஆசிரியரையும், விஷேடதினங்களிலே தாய் தந்தையரையும், காலம் முழுக்கக் கடவுளையும் வழிபட்டு வருகின்றார்கள். "தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற பழமொழிக்கொப்ப சிறுவயதில் எதனைக் கற்றுக் கொண்டாரகளோ அதனை வாழ்நாள்முழுக்கக் கடைப்பிடிப்பதுதானே கல்வியின் சிறப்பு இதனை

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (391)

என்ற திருக்குறள் தெளிவுபடுத்துகின்றது. கற்பவை கசடு அறக் கற்க - ஒருவன் கற்கப்படும் நூல்களைப் பழுதறக் கற்க; கற்றபின் அதற்குத்தக நிற்க - அங்ஙனங் கற்றால் அக்கல்விக்குத் தக அவை சொல்லுகின்ற நெறிக்கண்ணே நிற்க என்றும்; விளக்கவுரையிலே "கற்பவை" யென்றதனான். அறம், பொருள், இன்பம், வீடெனும் உறுதிப்பொருள் உணர்த்துவனவன்றிப் பிறபொருளுணர்த்துவன சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினார்க்கு ஆகாவென்பதும் பெற்றாம். "கசடறக் கற்ற"லாவது விபரீத வையங்களை நீக்கி, மெய்ப்பொருளை நல்லோர் பலருடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகாலும் பயிறல் என்று பரிமேலழகரே உரைதந்துள்ளார். மெய்ப்பொருள் எது என்பது எல்லோரும் அறிந்ததே. என்றும் அழிவில்லாத மெய்ப்பொருளாகிய கடவுளைப் பிறதெய்வம் என்றும், அத்தகைய தெய்வத்தைத் திருமணமாகிய பெண் வழிபடக் கூடாதென்றும், முன்னுக்குப்பின் முரணாக பரிமேலழகர் கூறுவது எவ்வாறு பொருந்தும்.

பெற்றோருடன் இருக்கும் காலத்தில் பெண்பிள்ளைகள் தங்களுக்கு நல்ல சுகம் வேண்டும் நல்ல கல்வி வேண்டும், நல்ல வளம் வேண்டும், நல் வாழ்வு வேண்டும் என்று கடவுளை வேண்டி வழிபடுவர். திருமணமானபின் தங்கள் நலத்தை மறந்து கணவனுடைய நலத்திற்காகவும், பிள்ளைகளின் நலத்திற்காகவும் கடவுளைவேண்டி வழிபடுவது மட்டுமல்ல ஓயாது விரதங்களை ஒழுங்காக அநுஷ்டிப்பது சிறந்த குடும்பப் பெண்களின் மரபாகவே மதிக்கப்படுகிறது. தமிழ்ப் பெண்களில் பெரும்பாலானோர் இந்த வண்ணமே வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறிருக்கக் குடும்பப் பெண்கள் கடவுளை வழிபடாதவர்கள் என்று பரிமேழலகர் கூறுவதன் மூலம் பெண்களைப் பரிகாசம் பண்ணுவதோடு பழிவாங்குகின்றார்.

இஸ்லாமியமதப் பெண்கள் மட்டும் கடவுள் வழிபாடு செய்யும் வழக்கற்றவர்கள். ஏனைய மதங்கள் சார்ந்த பெண்கள் பெரும்பாலும் கடவுளை வழிபடும் கட்டாயம் உடையவர்களே. அதிலும் தமிழ்ப் பெண்களில் சைவசமயம் சார்ந்தவர்களோ வருடத்தில் முக்கால்வாசி நாட்களும் விரதம் அநுட்டிக்கும் நாட்களாகவே அமைவதுண்டு வீடுகளிலும் ஆலயங்களிலும் ஏன் வீதியோரங்களில் மரத்தின்கீழ் இருக்கும் கல்லைப் பிள்ளையார் என்றும், சூலத்தை வயிரவர் என்றும் கையெடுத்துக் கும்பிடும் கடமைப்பாடும் உடையவர்கள்.

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க் காயிரம்
திருநாமம் கொட்டிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"
என்ற திருவாச அடிகளைத் தினமும் உண்மைப்படுத்தி உயிர்த்துடிப்பாக்கிக் கொண்டிருப்பவர்கள் இந்தப் பெண்கள் தானே. ஏன் பெண்களுக்கென்றே தனித்துவம் நிறைந்த சிறப்பான வழிபாட்டு முறைதானே பாவை நோன்பு, வீடுகள் தோறும் கும்பம் வைத்தும், பாவை கொலுவைத்தும் ஒன்பதுநாளும் விரதமிருந்து கணவனும் சேர்ந்து வழிபடுவது உலகறிந்த உண்மையல்லவா? திருவெம்பாவையிலே பத்தொன்பதாவது பாடலில்
"எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க"
என்பதன் மூலம் எமது கைகள் உமக்கல்லாது வேறு எப்பணியும் செய்யக்கூடாது. இரவு பகலாக எமது கண்கள் உம்மையன்றி வேறெதையும் காணக்கூடாது என்று எவ்வளவு பக்திபூர்வமாகப் பெண்கள் கடவுள் வழிபாடு செய்கிறார்கள் என்பதைத் திருவாசகம் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. " திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசத்திற்கும் உருகார்" என்பது பழமொழி "தேவர்குறளும் திருவாசகமும் ஒருவாசகம் என்றுணர்" என்பதும் ஆன்றோர் வாக்கு. இத்தனையையும் சிந்தியாமலா பரிமேலழகர் இந்த உரையைச் செய்தார் என்று எண்ணத்தோன்றும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கும் அவருக்கு ஓர் உள்நோக்கம் இருந்திருக்கலாம். பிராமணர்கள் இறைதொண்டு செய்ய வென்றே இறைவனால்ப்படைக்கப் பட்டவர்கள். இவர்கள் இந்தக் கருமத்தில் இருந்து சிறிதும் விலகமுடியாதவர்கள்.

"மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றகட கெடும்" என்ற திருக்குறளும்
"காலையும் மாலையும் நான்மறை ஓதா அந்தணர் என்போர் அனைவரும் பதரே" என்ற ஔவை வாக்கும் இதனை நன்கு விளக்குவதாகும். ஆதலால் அந்தணர்கள் ஆலயத்தொண்டாற்றும்போது முற்றிலும் தன்னை மறந்து தன்வீட்டை மறந்து மனைவி மக்களை மறந்து கரும அநுட்டான முறைகளிலேயே கருத்தூன்றி நின்று செயற்படுவர். கிரியைமுறைகளில் எந்தச் சிறிய தவறும் ஏற்படாது இறைவனுக்குப் பிரீதி உடையதாக இருக்கவேண்டும். அப்போதுதான் நாடு நலம் பெறும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்தான் பரிமேலழகர். இதனால் சிவாச்சாரியர்களின் மனைவிமார் ஆலயம் செல்வதால் அவர்களின் கிருத்திய முறைகளில் தவறுகள் ஏற்படவும் கூடும். அத்துடன் சிவாச்சாரியாரின் மனைவியாக இருந்தாலும் தரிசன மண்டபத்தைத் தாண்டி உள்ளே செல்லமுடியாது. வீட்டிலே திரைச்சீலைக்கு உள்ளே நின்றுகொண்டு வெளியில் நிற்பவர்களுடன், உரையாடும் வழக்கத்தை உடையவர்கள் ஆலயங்களில் அனைவருடைய பார்வைப் பொருளாக இருப்பது அழகல்ல என்றெல்லாம் பரிமேலழகர் எண்ணியிருக்கலாம். அத்தகையவர்களை ஆலயம் வராமல் தடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கலாம் அவர்களை மட்டும் தனிமைப்படுத்தி அவ்விதம் செய்தால் பலமாதிரியான எதிர்ப்புகளை அவர்களிடமிருந்து பெற்றிருக்கவும் கூடும். மனுஸ்மிருதி பெண்களைப் பற்றி பெரிய அளவில் குறை கூறியிருப்பதையும் மனதிற் கொண்டு எல்லாப் பெண்களுமே ஆலயம் போகாதிருப்பதுதான் நல்லவழி என்று எண்ணியும் இருக்கலாம். அதனை நிறைவேற்றுவதற்கு இந்தக் குறளையே சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

பிறதெய்வங்களை வழிபடாது தன்தெய்வமாகிய கொழுநனை தொழுதெழும் பெண் பெய்யென்று சொல்ல மழை பெய்யும் என்று உரை செய்ததன் மூலம் இருபாலாரிடத்திலும் பெரும் பாராட்டையும் பெற்றார். தன்தெய்வம் என்று கணவன் மதிக்கப்படுவதால் ஆண்பாலாரின் பாராட்டும், பெய்யென்று சொல்ல மழைபெய்யும் என்ற கற்பின் உயர்ந்த நிலைக்கு மனைவி உயர்த்தப்பட்டதால் பெண்பாலாருடைய பாராட்டும் பெறக்கூடியதாக இருந்தது. ஒருகல்லில் இரண்டு காய்கள் என்று சொல்வதுபோலப் பரிமேலழகரும் ஒரு சொல்லில் இரண்டு காய்களை விழுத்திவிட்டார். "கனியிருப்பக் காய்கவர்ந்தற்று" என்று குறள் கூறுவது போல இங்கே நல்ல இரண்டு கனிகள் இருந்தும் முற்றாத இரண்டு காய்களல்லவா விழுந்துவிட்டது என்றுமே கனியாத நிலையில் அவை இருப்பதால் யாருக்கு என்ன நன்மை?

கணவன் என்பவன் கடவுள் என்ற நிலைக்கு உயர்ந்திருக்கிறானா? அவ்வாறு கடவுளாக மதிக்கப்பட்டால் ஏன் மனைவியை ஆலய வழிபாட்டிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துச் செல்லவேண்டும். பரிமேலழகர் உரையை ஏற்றுக்கொண்டால் பிறதெய்வ வழிபாடு செய்யாத பெண்கள் ஏன் ஆலயம் வழிபடச் செல்லவேண்டும்? ஆலயம் வழிபடச் செல்வதால் கணவனைக் கடவுளாக வழிபடவில்லை என்பது அர்த்தமா? அல்லது கண்கண்ட தெய்வம் என்பதால் கணவனையும் வழிபட்டுக் கடவுளையும் வழிபடுகிறோம். என்பதை வெளிக்காட்டவா? அல்லது கணவனை மட்டும் தொழுகின்ற பெண்ணுக்குத்தான் சொன்னவுடன் மழை பெய்விக்கின்ற கற்பு நிலை உண்டு என்ற சோதனையில் இருந்து தம்மை விடுவிக்க ஆலயம் செல்கின்றார்களா? பரிமேலழகரின் இந்த ஒரு குறள் உரையால் பெண்களின் கடவுள் வழிபாடு என்பது குழப்பமான நிலைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

கடவுள் வழிபாடு என்பது உலகத்தின் அடி அத்திவாரம் அந்த அத்திவாரத்திலே தான் இன்றும் உலகம் நிலைத்து நிற்கிறது. இடையறாது இயங்கி வருகிறது. எத்தனையோ சந்தர்பங்களில் விலங்குகள், பறவைகள், சிறிய பூச்சிகள் கூட கடவுள் வழிபாடு செய்த காரணத்தால் முத்தியடைந்த நிலைகள் கூறப்படுகின்றனவே. அப்படியிருக்க பரிமேலழகரினால் பெண்களுக்கு மட்டும் தெய்வவழிபாடு மறுக்கப்பட்டமை நீதியானதா? இல்லை நியாயப்படுத்தத் தான் முடியுமா? சைவசமயத்தின் பிரகாரம் குழந்தைகளுக்குப் பால் பருக்குவது, வித்தியாரம்பம் செய்வது அனேகமாக ஆலயங்களிலேதான். தாய் குழந்தையைக் கொண்டு செல்லாமல் இவை நடப்பது சாத்தியமாகுமா? ஐந்து வயதுமட்டும் குழந்தை தாயைவிட்டுப் பிரிவதில்லை. தாய் எங்கு சென்றாலும் குழந்தையும் கூட்டியே செல்கின்றாள். சிறுவயதில் இருந்து ஆலயம் செல்லும் பழக்கம் தாய்மாராலேயே ஏற்படுகின்றது. ஆலயம் வரமாட்டேன் என்று அடம்பிடிக்கும் பிள்ளைகளையும் ஆசைவார்த்தை கூறி ஆலயம் அழைத்துச் செல்லும் மிகப்பெரும் காரியத்தை பொறுப்போடு செய்பவள் தாய்தான் அவ்வாறு குழந்தைப் பராயத்திலே தாய் பழக்கி வைத்தமையால்தான் வளர்ந்த பின்பும் மறக்காமல் ஆலயம் செல்லும் வழக்கமே உண்டானது. எவ்வாறு குழந்தைக்கு நேரகாலமறிந்து பாலை ஊட்டுகின்றாளோ, அதேபோல நல்ல பழக்கங்கள் எல்லாம் தாயின் மூலமே பிள்ளை கற்றுக் கொள்கிறது. இதனால்தான் "எல்லாக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே" என்ற படப்பாடல் அழகாக அறிவுறுத்துகின்றது. இதைத்தான் "பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" என்று தன்னை ஆட்கொண்ட இறைவனை மணிவாசகர் வியந்து பாடுகின்றார். கடவுளுடைய கருணை எப்படிப்பட்டது என்பதை உலகத்தில் வேறு எந்த உதாரணங் கொண்டும் விளக்கமுடியாது. பசிவேளை அறிந்து பாலூட்டும் தாயுள்ளந்தான் தக்க ஆதாரம் என்று போற்றப்படும்போது பெண் எத்தகைய பெருமைக் குரியவள் என்பது சொல்லுந்தரமன்று. அத்தகைய பெண் இனத்தை ஆலயம் செல்விடாது தடைபோடுவது எவ்வளவு பாதகமானது.

"வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்னும் வரிக்கொப்ப கண்வன் கடவுளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்த்தப்பட்டிருப்பது சிறப்பென்றாலும், கடவுள் கணவனை விடத்தாழ்நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பிறதெய்வம் எனப்பேசப்பட்டிருப்பது எவ்வளவு பெரும் பாதகம் " தனக்குவமை இல்லாதான்" எனக் கடவுள் வாழ்த்திலே போற்றப்பட்ட கடவுள் இக்குறளின் மூலம் எந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். "தன்தெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்றாள்" என்று நிலைநிறுத்தப்படுவதால் கடவுள் அவளுக்குத் தெய்வம் அல்ல என்பது நிரூபணமாகின்றது. அப்படியாயின் "உலகுறை பலரென்றாலும் உள்ளுறை தெய்வம் ஒன்றே" என்று தாயுமானவர் குறிப்பிடும் தெய்வம் யார்? சர்வ உலகத்தையும் படைத்துக் காத்து அழிக்கும் ஆதியும் அந்தமும் அற்ற பரம்பொருளாகிய இறைவனா? அல்லது பிறந்து வருத்த துன்பங்களுக்கு உட்பட்டு இறந்து போகும் கணவனா? உண்மையான தனது கடவுள் யார் என்று தீர்மானிக்கும் பொறுப்பு பரிமேலழகருடையதா அல்லது பெண்களுடையதா என்பதே இப்போதைய தேவை.

பெண்களும் நிறையக் கற்றவர்கள் பல நூல்களையும் ஆய்ந்தவர்கள். ஆதலால் தாங்கள் வழிபடக்கூடிய கடவுள் யாரென்பதைத் தீர்மானிக்கும் தகுதிபெற்றவர்கள். உலகம் முழுவதற்கும் எவர்கடவுளோ அவர்தான் தமக்கும் கடவுளாக இருப்பார் என நினைப்பதில் தவறு இருக்க முடியாது. "ஆதி பகவன் முதற்றே உலகு" என வள்ளுவர் வணங்கும் கடவுளும், "உலகம் உவப்ப" என நக்கீரர் நாடிய கடவுளும், "உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்" எனச் சேக்கிழார் சேவித்த கடவுளும், "உலகம் யாவையும் தாமுளவாக்கலும்" எனக் கம்பன் கருதிய கடவுளும், "உலகெலாம் சோதியாய் நிறைந்தான்" என சம்பந்தர் சாற்றிய கடவுளும ஒரே கடவுள் என்றால், அந்த ஒரு கடவுள் தான் எமக்கும் கடவுளாக இருக்க வேண்டும் என்று பெண்கள் எண்ணுவதுதானே நியாயமானது. இவை எல்லாவற்றிலும் மேலாக நீண்ட நாள் வாழ்ந்து இறைவனின் திருவருட் கருணையை அநுபவித்த அப்பர் சுவாமிகள் "புந்திவட் டத்திடைப் புக்குநின் றானையும் பொய்யென் பனோ"என்று மிக அற்புதமாக அருளிச் செய்யும் போது, சிறுவயதில் இருந்தே ஆலயத்தில் எழுந்தருளியிருந்த கடவுளைத் தமது உள்ளத்திலே இருத்தி வழிபட்டுவந்த பெண்கள் எப்படி அவரைப் பிறதெய்வம் என்று புறந்தள்ளிக் கணவனை அந்த இடத்தில் இருத்துவது. பரிமேலழகர் ஒரு பெண்ணாக இருந்தால் இதை ஏற்றுக் கொள்வாரா? மேற் குறிப்பிட்ட வீபரீதங்களுக் கெல்லாம் காரணமாக அமைவது தொழாதுஅள் என்ற சொல்லுக்குத் தொழாது என்று பரிமேலழகர் பொருள் கூறியதே ஆகும்.

வேறொருவகையிலும் இந்தக் குறளை நோக்குவது பொருத்தமாகும். சோதிடத்தில் நம்பிக்கை உண்டோ இல்லையோ அதிஷ்ட விஞ்ஞானத்தில் அதிகமானவர்க்கு ஈடுபாடும் நம்பிக்கையும் உண்டு. எண்களை அடிப்படையாகக் கொண்டு பலன் கூறுவதே அதிஷ்ட விஞ்ஞானம். மேற்குறிப்பிட்ட குறள் 55 என்ற இலக்கத்தைக் கொண்டுள்ளது. இந்த எண் சிருஷ்டி, சம்ஹாரம் இரண்டையும் ஒரே சக்தியால் செய்யக்கூடும் என்பதை உணர்ந்துகின்றது. சத்ரு ஜெயத்தைத் தருவதாக மந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் கூறுகின்றன. கிரேக்க வீரர்கள் யுத்தத்திற்குப் போகுமுன் 55 என இரண்டு ஐந்து எண்களை மாத்திரம் ஒரு தகட்டில் எழுதித் தரிப்பார்களாம். இது மனோபலத்தையும் சூக்ஷ்ம அறிவையும் குறிக்கும். இதனால் குறிக்கப்பெறுவோர் எல்லோரையும் அறிவினால் பிரமிக்கச் செய்து வெற்றி பெறுவர். அறிஞர் என்று ஒப்புக்கொள்ளப்படுவர். மேதாவிலாசம் உண்டாகும். அறிவு மின்னல் போன்ற ஒளி வீசும் என்று கூறப்பட்டுள்ளது. இவை பண்டிட் சேதுராமன் அவர்களின் அதிர்ஷ்ட விஞ்ஞானம் அல்லது நீங்களும் மிக்க அதிர்ஷ்டசாலிகளாகலாம் என்ற நூலின் 83 ஆம் பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளது. 1330 குறள்களில் 55 வது இலக்கமுடைய குறளின் இலக்கப்பலன் எப்படி என்று பார்த்தோம். சிருஷ்டி, சம்ஹாரம் இரண்டையும் ஒரு சக்தியால் செய்யக்கூடும் என்பது உணர்த்தப்பட்டது. இல்வாழ்க்கை ஆண் பெண் இருவரையும் கொண்டது. ஆண் சிவம் என்றால் பெண் சக்தி. இந்த பெண் என்ற சக்திதான் ஆக்குதல் அழித்தல் ஆகிய இரண்டையும் செய்கிறது. இல்லங்கள் தோறும் உணவு ஆக்குதலும் அதற்குரிய பொருள்களை அழித்தலும் தினமும் பெண்ணினாலே செய்யப்பட்டு வருகிறது. "ஆவதும் பொண்ணாலே அழிவதும் பெண்ணாலே" என்ற பாடல்வரி எவ்வளவு பொருத்தமாக உள்ளது 55 என்ற இலக்கம் மனோபலத்தையும் சூக்கும அறிவையும் கொண்டதென்பதற்கு ஆண் மனோபலம் உடையவனாகவும் பெண் சூக்குமமாகிய நுண்மை அறிவு கொண்டவளாகவும் விளங்குவது யாவருமறிந்த விடயம். இந்த எண்ணுக்கு எல்லோரையும் பிரமிக்கச் செய்யும் ஆற்றல் உண்டென்பதும் எவ்வளவு பொருத்தமாக அமைந்துள்ளது. சாதாரணமாக ஓர் ஆடவன் திருமணமான உடனேயே கடவுளாக மாறிவிடுகிறான் என்றால் பெரிய பிரமிப்புத்தானே. அதைவிடக் கணவனைக் கடவுளாக நினைத்த மாத்திரத்திலேயே பெய்யென்று சொன்னவுடனே மழைபெய்யும் வல்லமை பெண்ணுக்குக் கிடைக்கிறதென்றால் அது ஆகப்பெரிய பிரமிப்பல்லவா. இத்தனையும் அதிஷ்டவிஞ்ஞானம் தந்த உண்மைகள்.

ஆனால் இதற்கு மேலாக 55 என்ற எண்ணை நோக்கும்போது இந்தக் குறளிலே இன்னும் சில உண்மைகளை உணரக்கூடியதாக உள்ளது. இரண்டு எண்களின் கூட்டுத்தொகை ஒன்றாக மாறும் இலக்கங்கள் 19, 28, 37, 46, 55, 64, 73, 82, 91 என்பனவாகும். இவற்றிலே மத்தியில் இருக்கும் 55 என்ற இலக்கத்தில் உள்ள இரண்டு எண்களும் ஒத்ததோற்றம், சமமான வலு அல்லது பெறுமானம், இடப்பெறுமானத்தில் எப்படி மாறினாலும் அந்த இடத்தை அப்படியே அலங்கரிக்கும் தன்மையும் சிறப்பாக அமைந்து காணப்படுகிறது. அதேபோல் ஒரு குடும்பத்தில் ஆணும் பெண்ணும் ஒத்த உயரம், ஒத்த நிறம், ஒத்த அழகு, ஒத்த குணம், ஒத்த கல்வி, ஒத்த அந்தஸ்து. ஒத்த வருமானம் உடையவர்களாக இருப்பின் இவர்களுக்குள் என்ன பேதம் யார் வணங்குபவர்? யார் வணங்கப்படுபவர்? விரும்பினால் இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கலாம். இந்த வண்ணம் அமையும் குடும்பம் ஒன்பதுக்கு ஒன்று இனி ஏனைய இலக்கங்களைக் கொண்ட குடும்பங்களையும் பல கோணங்களில் அவதானிக்க முடியும். விரிவுக்கஞ்சி ஒரு விடயத்தை மட்டும் அவதானிப்போம். ஒவ்வொரு இலக்கமும் ஒவ்வொரு குடும்பம் எனக்கருதலாம். இதில் முதல் எண் ஆண் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது எண் பெண் என்றும் கொள்ளவேண்டும். வீட்டுப்பணி அல்லது வீட்டுப்பொறுப்பு என்னும் விடயத்தை எடுத்துக்கொண்டால் எல்லாக் குடும்பத்திலும் பத்துவிகிதம் அமைகிறது. உழைப்பவர் வீட்டுப்பொறுப்பைப் பார்க்கமுடியாது உழைக்காதவர்தான் வீட்டிற்குப் பொறுப்பாளி ஆகிறார். முதலாவது குடும்பத்தை எடுத்துக் கொண்டால் உழைப்பில்லாத பெண் ஒன்பது விகிதம் வீட்டுப்பணியைச் செய்கிறாள். உழைக்கின்ற கணவனால் ஒருவிகிதம் மட்டுந்தான் வீட்டுப்பணிசெய்ய முடிகிறது. அதுபோலக் கடைசிக் குடும்பத்தை எடுத்தால் உழைப்பில்லாத ஆண் ஒன்பது விகிதம் வீட்டுப்பணி செய்கிறான். உழைக்கின்ற பெண் ஒருவிகிதம் தான் வீட்டுப்பணி செய்கிறாள். எனவே 55 என்ற இலக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எந்தத்துறையிலும் ஆணையும் பெண்ணையும் சமமானவர்களாகக் கருதிக்கொண்டு ஏனைய குடும்பங்களின் இலக்கப்பெறுமானங்கொண்டு எந்தத் துறையில் அவதானித்தாலும் அனேகமாக சரியாகவே இருக்கும். திருக்குறளும் அதிஷ்டவிஞ்ஞானம் போன்று பெரும்பாலும் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். ஒவ்வொரு திகதியிற்ப் பிறந்தவர்களின் குண இயல்பு, விருப்பு, வெறுப்பு, செயன்முறை என்பவற்றை வெளிக்காட்டும் வகையிலேயே திருக்குறளின் அதிகார அமைப்பு அமையப்பெற்றுள்ளது என்பது அற்புதமானதே.

இனி விடயத்திற்கு வருவோம் இந்த உலகில் பிறந்தவர்கள் எல்லாம் அதிகமாக விரும்புவது இன்பம் ஒன்றையே.அந்த இன்பம் சிற்றின்பம் பேரின்பம் என இருவகைப்படும். காதலைப் போற்றி சிற்றின்பத்தை அநுபவித்த பின் பேரின்பத்தைநாடுவதே பெருமைக்குரியது. அதனாலே தான்

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும் ஒண்டோடி கண்ணே யுள'' என்று திருக்குறளும்

"குருநாண் மலர்ப்பொழில் சூழ்தில்லைக்
கூத்தனை ஏந்தலர் போல்
வருநாள் பிறவற்க வாழியரோ
மற்றென் கண்மணி போன்
றொருநாள் பிரியா துயிரிற்
பழகி யுடன் வளர்ந்த
வருநா ணழிய அழர்சேர்
மெழுகொத் தமிகின் றதே" என்று
திருக்கோவையாரும்.

"ஆயுந் தொறுந் தொறும் இன்பந்
தருங் கல்வி யாங் கறிவு
மாயுந் தொறுந் தொறும் இன்பந்
தரும் வள்ளல் வார் கழல்கள்
தேயுந் தொறுந் தொறும் இன்பந்
தருஞ் சத்து தேங் குழலில்
தோயுந் தொறுந் தொறும் நேராத
இன்பம் சுரந் திடுமே'' என்று
திருத்தணிக்கைப் புராணமும்,

"பெண்ண லத்தினைப் பெறாதவர்
மகவினைப் பெறாதார்
பெண்ண லத்தினைப் பெற்றவரே
மகப் பெற்றார்
பெண்ண லத்தினான் மகவுபெற்
றிருமையும் பெறுவார்
பெண்ண லத்தினா லன்றியோர்
பெறும் பொரு ளுண்டோ" என்று
பிரமோத்தர காண்டமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பண்டுநிகழ் பான்மையினால் பசுபதிதன்
- னருளாலே
வண்டமர்பூங் குழலாரை மணம்புரிந்த
- வன்றொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட
- நூநலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றமர்ந்திருந்தார
- காதலினால்''

என்று சேக்கிழார் பெரியபுராணமும் செப்பிய காரணங்களைக் கொண்டு பெண் நலமே பெரிதென்பது தெளிவாகின்றது. இதனையே திருக்குறளும் வலியுறுத்துகின்றது. மனித வாழ்வியலுக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் ஒவ்வொரு அதிகாரமாக வரையறை செய்த வள்ளுவரால் அறத்துப்பாலிலே ''வாழ்க்கைத் துணை நலம்'' என்ற அதிகாரத்தில் ஆரம்பித்து, இன்பத்துப் பாலில் இருபத்தைந்து அதிகாரங்களுமே பெண் நலம் பற்றிப் பெரிதாகப் பேசப்பட்டுள்ளது. பெண்ணின் பெருமை உலகறிய வேண்டும் என்னும் உன்னத நோக்கும், பெண்ணடிமைத்தனம் அழிந்தொழிய வேண்டுமென்ற அணையாத வேட்கையும், பெண்கள் விடுதலை பெற்று வீரநடை போடவேண்டும் என்றவீறும் கொண்டே விரித்துரைக்கப்பட்டது.

அந்த வேகத்தில் விளைந்த ஒரு முத்துத்தான்

''தெய்வம் தொழாஅள் கொழுநற்
- றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'' என்ற

குறளாகும். ஆரியரின் ஆதிக்கமும், மனுஸ்மிருதியின் மாறுபட்டகொள்கையும், மானுடப் பெண்களின் மகத்துவத்தைப் படிப்படியாகக் குறைப்பதைக் கண்டு பொறுக்காது, பெண்களுக்குத் தெய்வவழிபாட்டை வலியுறுத்தும் நோக்கில் தெய்வம் தொழாள் என்று எதிர்மறையாக அழுத்திக் கூறினார். திருக்குறளில் வள்ளுவர் இரண்டே இரண்டு இடங்களில் மட்டும் எதிர்மறையைப் பயன்படுத்தியுள்ளார். அந்த இரண்டும் காலங்காலமாக இலக்கியங்கள் எடுத்துக்கூறிய விடயங்கள்தான். அவை ஆண் பெண் இருபாலாரிடத்திலும் பேணப்படுவதும் உலகம் எதிர்பார்ப்பதுமாகிய உயர்ந்த விழுமியங்களே. ஒன்று ஆணின் வீரம் மற்றது பெண்ணின் தெய்வவழிபாடு.

தெய்வவழிபாடு தினமும் செய்கின்ற பழக்கம் எவரிடம் உண்டோ அவரிடம் அன்பு, இரக்கம், பணிவு, ஒழுக்கம், ஈகை, வாய்மை, கொல்லாமை, வெ·.காமை ஆகிய எட்டுக்குணங்களும் இயல்பாகவே அமைந்துவிடும். எண் குணத்தான் என்று எவ்வாறு இறைவன் போற்றப்படுகின்றாரோ அதேபோல எண்குணங்கள் மனிதரிடத்திலும் வளர்க்கப்பட வேண்டும் என்று வள்ளுவர் விரும்பினார். இந்த எட்டுக் குணங்களையும் மனிதகுலம் கடைப்பிடிக்குமாக இருந்தால் அது தேவகுலத்தைப் போற்றும் சிறந்த குலமாகும் என எதிர்பார்த்தார் இதனைப் பெண்களாற்றான் வளர்த்தெடுக்க முடியுமென நம்பினார். தெய்வவழிபாடு இருபாலார்க்கும் உரியதென்று கடவுள் வாழ்த்திலே பொதுவாகக் கூறியவர், வாழ்க்கைத்துணைநலம் என்ற அதிகாரத்திலே பெண்களுக்கு மிகவும் அவசியம் என்பதால் ''தெய்வம் தொழாஅள்'' என்று எதிர்மறையாக அழுத்திக் கூறினார். இதேபோல வேறெந்த இடத்திலும் ஆண்களுக்கு வழிபாடு அவசியம் என்று அழுத்திக் கூறியது கிடையாது.

இந்த உலகம் பெண் தெய்வங்களிடத்தில் இருந்தே வாழ்வும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமும் அன்று தொடக்கம் இன்றுவரை பெற்றுக்கொண்டிருக்கிறது. நிலத்திற்குப் பூமாதேவி என்றும், நீருக்குக் கங்காதேவி என்றும், செல்வத்திற்கு இலக்குமிதேவி என்றும், கல்விக்கு சரஸ்வதிதேவி என்றும் காலம் முழுக்கப் போற்றுகின்றனர். ஏன் அஷ்டலக்குமி வழிபாடு இன்றைக்கும் நடைமுறையில் இருப்பது கண்கூடல்லவா? பெண் தெய்வங்களைப் பெண்களே வழிபடவில்லை என்றால் அத்தெய்வங்களின் பெருமை என்னவாகும். பிச்சைபோடுபவள் பெண்தான். அதிலும் பெண்களுக்கென்றால் மன இரக்கத்தோடும் பெருவிருப்பத்தோடும் கொடுப்பவள், அதனால் இந்த உலகம் தேவையான அனைத்தையும் பெண் தெய்வங்களிடம் இருந்து பெண்களாலே தான் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் எனஎண்ணித் ''தெய்வம் தொழாஅள்'' என்று கூறிவைத்தார். இவர்மட்டும் என்ன? "அரனை மறவேல்", "ஆலயம் தொழுவது சாலவும் நன்று", வைகல் தோறும் தெய்வம் தொழு" என்று ஔவையும் அழகாக அதுவும் சிறுபராயத்தினர்க்காகவே கூறினாரல்லவா? இது ஆண்பிள்ளைகளுக்கு மட்டுமா? இல்லவே இல்லை இருபாலார்க்குமே உரியது. ஔவையே அழுத்திக் கூறும்போது பெண்கள் தெய்வம் தொழாமல் இருக்கமுடியுமா? எல்லோருமே பெண்களுக்குத் தெய்வவழிபாடு அவசியம் என்னும்போது பரிமேலழகர் மட்டும் அதனை மறுதலிப்பதேன்? அதிலும் வள்ளுவர் வலிந்து கூறிய இந்த ஒரு இடத்தை மட்டும் பரிமேலழகரும் வலிந்து மறுப்பதேன். அவருக்குத் தெரியும் திருக்குறளின் உயிர்த்துடிப்பு இந்த ஒரு குறளிலேதான் தங்கியுள்ளது. இந்தத் துடிப்பை அடக்கிவிட்டால் அது மெல்ல மெல்லச் செத்துவிடும் என அவர் எதிர்பார்த்திருக்கவும் கூடும். பரிமேலழகர் காலத்திலேயே பெண்கள் தெய்வ வழிபாடு செய்துகொண்டு வந்தது அவர் அநுபவத்தில் கண்ட உண்மை. அது எக்காலத்தும் மாறாது என்பதும் அவர் எதிர்ப்பார்த்த தன்மை. ஆதலால் இப்படி ஒரு கருத்தை வள்ளுவர் கூறியதாகவே வருவித்துக் கொண்டால் நடைமுறைக்கும் குறள் மொழிக்கும் இடையில் பாரிய வேறுபாட்டை அனைவரும் நேரடியாகக் காணக்கூடியதாகவரும். அப்போது தமிழ்மொழியிலே உருவான தலைசிறந்த தனித்துவம் மிக்கத் திருக்குறள், அதுவும் தாழ்ந்த குலத்தவரால் ஆக்கப்பட்ட இக்குறள் காலப்போக்கில் கதை இழந்துபோகும் எனக்கற்பனை செய்தும் இருக்கலாம். இன்று அதன் தாக்கம் நடைமுறையிலும் உண்டு.

"நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி" என்பது அன்றைய அமுதவாக்கு. இன்று நாள்முழுக்க நடக்கும் முத்தமிழ் விழாக்கள், இலக்கிய விழாக்கள், ஆலயவிழாக்கள், நூல்வெளியீட்டு விழாக்கள், திருமண விழாக்கள், சிறப்பு விழாக்கள், பாடசாலை விழாக்கள், பாராட்டுவிழாக்கள் என்று நாடுமுழுக்க நாளாவட்டம் நடந்து கொண்டே இருக்கிறது. அங்கெல்லாம் ஒருவர் மூன்று மணித்தியாலத்திற்கு மேல் தொடர்ந்து பேசுகிறார். ஒரே மேடையில் முப்பது பேர்வரை இருந்து பேசுகிறார்கள். ஆனால் ஒருவருடைய வாயிலிருந்தாவது ஒரு நாலடியாரோ அல்லது ஒரு திருக்குறளோ உதாரணத்திற்காயினும் வெளிவர வில்லையே. நாலடியாரும் திருக்குறளும் நெட்டுருப் போட்டுப் பாடம்பண்ணிய கல்விமான்களின் கதி இன்று இந்த மாதிரி என்றால், கொம்பியூற்றர் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிகட்டிப்பறக்கும் இந்தக் காலத்திலே கற்றுக்கொள்பவர்கள் எதிர்காலத்தில் எதைச் சொல்வார்கள் என்பதற்கு "கையிற் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா" என்ற கதைதான் பொருத்தமான தாகும்.

இன்று திருக்குறள் உதாரணமாக எடுத்துப் பேசப்படாதமைக்கு இரண்டு காரணங்கள் முக்கியமானதாக இருக்கலாம். ஒன்று பரிமேலழகர் செய்த உரைகளிற்சில பொருத்தப்பாடு அற்றதாக இருப்பதால் படித்தவர்கள் சபையில் எடுத்துக்கூறத்தயக்கம் அடைகிறார்கள். இரண்டாவது திருக்குறள் மனித வாழ்வியல் முறைகளை வரையறை செய்து வகுத்துக் கூறும் சட்டநூல். அந்தச் சட்டதிட்டங்களைச் சரியான முறையில் வாழ்க்கையில் கடைப்பிடிக்காத எவரும் அதனை எடுத்துக் கூறத்துணிய மாட்டார்கள். அதாவது முதுகிற்புண் உள்ளவன் காடு நுழையப் பயப்படுவது போன்றதாகும். இரண்டாவது காரணம் எப்படியிருந்த போதிலும் முதலாவது காரணம் மிகமுக்கியமானதாகும். தெய்வம் தொழாஅள் என்பது தெய்வம் தொழுவாள் எனப்பொருள் தந்திருக்கவேண்டும். பிறதெய்வம் தொழாது எனப்பரிமேலழகர் உரை தந்திருப்பதை ஊன்றிக்கவனிக்க வேண்டியுள்ளது. வள்ளுவர் இன்னொரு இடத்திலே எதிர்மறையாகக் கூறியதைப் பரிமேலழகர் எவ்வாறு உரைசெய்துள்ளார் என்பதை அவதானிக்க வேண்டியுள்ளது.

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்" (774)

தன்கைப்படையாய வேலைத் தன்மேல் வந்த களிற்றோடு போக்கி, வருகின்ற களிற்றுக்கு வேல்நாடித்திரிவான்; தன்மார்பின் கணின்ற வேலைக்கண்டு பறித்து மகிழும் எனப்பரிமேலழகர் உரைதந்துள்ளார். எது வலியுறுத்தப் படவேண்டுமோ அது எதிர்மறையாகக் கூறுவதே பொருத்தமானதும் சிறப்பானதும் என்பதை பரிமேலழகர் முற்றுமுழுதாக ஏற்றுக் கொண்டார். அதனால் வள்ளுவர் உடன்பாடாகக் குறிப்பிட்ட அறுபத்தேழு (67) இடங்களில் பரிமேலழகரே எதிர்மறையாகச் சிறப்பித்து அழுத்திப் பொருள் தந்துள்ளார். அத்தனை குறள்களையும் எழுத இடம் போதாதாகையால் குறள் இலக்கணமும் வள்ளுவர் குறிப்பிட்ட உடன்பாட்டுச் சொல்லும், பரிமேலழகர் தந்த எதிர்மறைக் கருத்தும் தரப்பட்டுள்ளது.

| குறள் இலக்கம் | உடன் பாட்டுச்சொல் | எதிர்மறைக் கருத்து |
|---|---|---|
| 55 | தொழுது | தொழாநின்று |
| 451 | அஞ்சும் | அஞ்சாநிற்கும் |
| 495 | அடும் | வெல்லா நிற்கும் |
| 527 | உண்ணும் | உண்ணாநிற்கும் |
| 542 | வாழும் | உளவாகா நிற்கும் |
| 570 | பிணிக்கும் | கூட்டாநிற்கும் |
| 571 | உண்டு | உண்டாகா நின்றது |
| 659 | போம் | போகாநிற்கும் |
| 667 | உருள் | உருளாநிற்கும் |
| 837 | பசிப்பர் | பசியாநிற்பர் |
| 848 | ஏவவும் | சொல்லாநிற்கவும் |
| 863 | அஞ்சும் | அஞ்சா நிற்கும் |
| 978 | அணியும் | புனையாநிற்கும் |
| 980 | மறைக்கும் | மறையாநிற்கும் |
| 994 | பாராட்டும் | கொண்டாடாநிற்கும் |
| 996 | உண்டு | உண்டாய் வாராநின்றது |
| 1030 | வீழும் | வீழாநிற்கும் |
| 1040 | நகும் | நகாநிற்கும் |
| 1069 | உருகும் | உருகாநிற்கும் |
| 1070 | போம் | கோகாநிற்கும் |
| 1085 | உடைத்து | உடைத்தாயிரா நின்றது |
| 1094 | நோக்கும் | நோக்கா நின்றது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1095 | நகும் | மகிழாநின்றது |
| 1099 | உள | உளவாகா நின்றது |
| 1104 | தெறும் | சுடாநிற்கும் |
| 1119 | தோன்றல் | தோன்றாதொழி |
| 1128 | அஞ்சும் | அஞ்சாநிற்கும் |
| 1129 | எண்ணும் | சொல்லா நிற்கும் |
| 1130 | எண்ணும் | சொல்லா நிற்கும் |
| 1132 | ஏறும் | ஊரக்கருதா நின்றது |
| 1134 | உய்க்கும் | கொண்டுபோகாநின்றது |
| 1136 | உள்ளுவேள் | கருதா நிற்பேன் |
| 1139 | மறுகும் | சுழலா நின்றது |
| 1140 | நகுப | நகாநின்றது |
| 1145 | இனிது | இனிதாகா நின்றது |
| 1147 | நீளும் | வளரா நின்றது |
| 1150 | எடுக்கும் | எடாநின்றது |
| 1161 | மறைப்பேன் | மறையாநின்றேன் |
| 1162 | நாணுத்தரும் | நாணினைத் தராநின்றது |
| 1167 | நீந்தி | நீந்தாதேனல்லேன் |
| 1169 | கொடிய | கொடுமை செய்யாநின்றது |
| 1182 | ஊரும் | செலுத்தா நின்றது |
| 1184 | உள்ளுவன் | நினையாநிற்பேன் |
| 1204 | உளரே | உளரேயாயிராநின்றார் |
| 1207 | உள்ளினும் | உள்ளாநிற்கவும் |
| 1207 | சுடும் | சுடாநின்றது |
| 1209 | விளியும் | கழியாநின்றது |
| 1213 | உண்டு | உண்டாகா நின்றது |
| 1214 | உண்டாகும் | உண்டாகா நின்றது |
| 1219 | நோவர் | நோவாநிற்பர் |
| 1223 | வரும் | வாரா நின்றது |
| 1224 | வரும் | வாரா நின்றது |
| 1227 | மலரும் | மலரா நின்றது. |
| 1234 | சோரும் | கழலா நின்றது |
| 1235 | உரைக்கும் | சொல்லாநின்றது |
| 1236 | நோவல் | நோவாநின்றேன் |
| 1246 | காய்தி | காயாநின்றாய் |
| 1251 | உடைக்கும் | முறியாநின்றது |
| 1252 | தொழில்ஆளும் | தொழில்கொள்ளா நின்றது. |
| 1253 | தோன்றிவிடும் | வெளிப்பட்டே விடா நின்றது. |
| 1254 | மன்றுபடும் | மன்றின் கண்வெளிப்படா நின்றது. |
| 1262 | இலங்கு | விளங்காநின்றது |
| 1271 | உண்டு | உண்டாயிரா நின்றது |
| 1295 | அஞ்சும் | அஞ்சா நின்றது |
| 1298 | உள்ளும் | நினையாநின்றது |
| 1313 | காயும் | வெகுளா நிற்கும் |
| 1320 | காயும் | வெகுளா நிற்கும் |

என்று இவ்வாறு எல்லாம் பொருள் தந்தவர், 774 வது குறளில் பறியாநகும் எனவந்த எதிர்மறையைப் பறித்துமகிழும் என உடன்பாடாக உரைதந்தவர், தொழாஅள் என்ற ஓர் இடத்தில் மட்டும் உடன்பாடாக ஏற்றுக்கொள்ள மறுத்ததேன்? விஞ்ஞானம் வளர்ச்சியுறும் என்பதும் அதன் வளர்ச்சியால் போர்முறையில் மாற்றம் வரும் என்பதும் தனது ஞான அறிவினால் புரிந்து கொண்டவர்தான் பரிமேலழகர். அதனால் மார்பிலே வேல்பதிவதும் அதனைப் பறித்து மகிழ்வதும் எதிர்காலத்தில் நடக்கப் போவதில்லை அது வெறும் பழங்கதை ஆகும் என்பதை அன்றே உணர்ந்தவர். அதுபோலப் பெண்களும் காலம் முழுக்கக் கடவுளை வழிப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். எக்காரணங்கொண்டும் அதிலிருந்து விலகமாட்டார்கள் என்பதையும் நன்றாக உணர்ந்தவர். எனவே வள்ளுவரின் பொய்யாமொழி என்பது உலகம் முழுக்க வெளிப்படையாக இந்த ஒருகுறளின் மூலமே பொய்க்கப் பண்ணவேண்டும் என்னும் பெரிய எதிர்ப்பார்ப்போடு பிறதெய்வம் தொழாது என்று வள்ளுவர் சொல்லியதாகவே சொல்லிமுடித்து விட்டார். திருக்குறளில் மட்டுமல்ல வேறுபல இலக்கியங்களிலும் உண்மைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்திக் கூறும் இடங்களில் எதிர்மறையாக எடுத்துக் கூறப்பட்டுள்ள தற்குப் பல ஆதாரங்கள் உண்டென்னும் ஒரு சிலதை உதாரணத்திற்கு இங்கு குறிப்பிடலாம். திருத்தொண்டர்தொகை மூன்றாவது பாடல் ஐந்தாவது அடியில் "மெய்மையே திருமேனி வழிபடா நிற்க" என்பதில் வழிபடா என்பது வழிபட்டு என உணர்த்துகின்றது. திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் "அறுவகை அடிசில் வறிதினி தருந்தா" என்பதில் அருந்தா என்பது அருந்தி என அறிவுறுத்தி நின்றது. நன்னெறி நான்காவது பாடல் இறுதி அடியில் "பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு" என்பதில் பெய்யா என்பது பொழியும் எனப் பொருள் கொள்ளப்பட்டது. இவற்றை எல்லாம் ஒப்புநோக்கும் போது பறியா என்பதைப் பறித்து என உரைதந்த பரிமேலழகர் தொழா என்பதைத் தொழுது எனப் பொருள் கொள்ளாமல் விட்டது பெரியதோர் சதியாகுமெனக் கூறு இடமுண்டு.

"தெய்வந் தொழ கொழுநற்
- றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

எனக்குறள் அமைந்திருந்தால் கொழுநற் றொழு தெழுவாள் தெய்வம் தொழ - கணவனைத் தொழுது கொண்டு துயிலெழுபவள் தெய்வம் தொழ; பெய்யெனப் பெய்யும் மழை - பெய்யென்று சொல்ல மழை பெய்யும் என்று எல்லோர்க்கும் இலகுவிலே புரிந்து கொள்ளக் கூடியதாக உரை அமைந்திருக்கும். பரிமேலழகரின் திரித்துக் கூறலுக்கு இடமே இருந்திருக்காது ஆனால் யாப்பருங் கலகாரிகையில் கூறிய வெண்பா விதிமுறைக்கமைய வெண்சீர் வெண்தளை, வெண்சீர் இயற்றளை, இயற்சீர் வெண்தளை அமைதல் வேண்டும். அதாவது நேர்முன்நேரும், நேர்முன்நிரையும், நிரைமுன் நேரும் அசையாக இருப்பது அவசியம் "தொழ கொழுநற்" என்று சீர் அமைந்தால் நிரைமுன்நிரை அசையாக அமைவது விதிமுறைக்குப் பொருந்தாது. நிரைமுன் நேர்வருவதற்காக "அள்" என நேர் அசைவருவிக்கப்பட்டது. இங்கே தான் தொல்காப்பியச் சூத்திரத்தின் பிரகாரம் அகரமுதன் மொழி வருமொழியாய் வருங்காலத்து ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்து என்பதற்கமைய தொழ என்பது தொழா என நீண்டு நின்றது இதனை

"அகர ஆகாரம் வருஉங் காலை
யீற்றுமிசை யகர நீடலு முரித்தே"
(தொல் : 311)

என்ற சூத்திரம் வலியுறுத்துகின்றது. எனவே வள்ளுவர் எண்ணியதும் எழுதியதும் இதுவேதான் என்பது உறுதியாகின்றது உரைச்சிறப்பும் பாயிரத்திலே

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ - நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி"

என்று கூறப்படுவதன் மூலம் நூலிலே திருக்குறளும் உரையிலே பரிமேலழகர் உரையும் சிறப்பித்துக் கூறப்பட்டது அனேகமாக வள்ளுவர் எண்ணியது போலவே உரைதந்த பரிமேலழகர் சிலகுறள்களுக்கு மட்டும் வேறுவிதமாகப் பொருள் கூறியதால் வள்ளுவர் வகுத்த குறளா அல்லது பரிமேலழகர் தொடுத்த உரையா எது ஏற்புடையது என்று எண்ணத்தோன்றுகிறது. இந்தநிலை இருவேறுபட்ட பஞ்சாங்கங்களின் தன்மைக்கு ஒப்பானது. பஞ்சாங்கம் உண்மைக்கும் நம்பிக்கைக்கும் உரியது. பஞ்சாங்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட வண்ணமே அனைத்து விடயங்களையும் மக்கள் கடைப்பிடித்து வருகின்றனர். வான்வீதியிலே சூரியனைச் சுற்றி ஏனைய கிரகங்கள் வலம்வரும்போது ஏற்படும் கிரகநிலைகள். அதனால் ஏற்படும் வாரம், திதி, கரணம், நஷத்திரம், யோகம் எனப்படும் ஐந்து விடயங்களையும் பஞ்சாங்கத்தைக் கொண்டே அறிகிறார்கள். இவை அனைத்தும் உண்மைதானா என்பதற்கும் நம்பிக்கை வைப்பதற்கும் எல்லோரும் பிரத்தியட்சமாகக் காணக்கூடிய சூரிய சந்திர கிணங்களே தக்க சான்றாக அமைகின்றது. எந்தப் பஞ்சாங்கத்தில் குறிப்பிட்ட காலநேரத்திற்குத் தவறாமல் கிரகணம் தோற்றப்படுகிறதோ அந்தப் பஞ்சாங்கமே உண்மைக்குரியதாகும். அதே நேரம் கிரகணம் பற்றித் தவறாகக் குறிப்பிட்டிருப்பினும் கூட முற்றாக அதனை ஒதுக்கிவிடவும் முடியாது. ஏனைய பல விடயங்கள் சரியாகவே அமைந்துள்ளன.

அதுபோலவே வள்ளுவரின் குறளுக்கும் பரிமேலழகர் உரைக்கும் இடையில் ஒருசில முரண்பாடு இருப்பினும் மிகப்பெரிய அளவில் இருவருக்கும் உடையில் உடன்பாடு உண்டு. இக்குறளிலே "தெய்வம் தொழாஅள்" என்பது தெய்வம் தொழுது என வள்ளுவர் கருதுவதும், பிறதெய்வம் தொழாது எனப் பரிமேலழகர் உரைப்பதுமாக இருக்கிறது. இருவரது நிலைப்பாட்டிலும் உலகம் வெளிப்படையாகக் கண்டு கொள்வது என்ன என்பது தான் முக்கியம். இஸ்லாம் சமயம் சார்ந்த பெண்களைத் தவிர உலகில் உள்ள ஏனைய சமயம் சார்ந்த பெண்கள் பெரும்பாலோர் ஆலய வழிபாடு செய்கிறார்களா? இல்லையா? கணவன்மாரே அழைத்துச் செல்கிறார்களா? எல்லோரும் செல்கிறார்கள் வழிபடுகிறார்கள் என்பது உலகறிந்த உண்மை. இதனால் வள்ளுவர் கருத்து நிலைநாட்டப்படுகிறது. இந்த விடயத்தில் பரிமேலழகர் உரை எடுபடவில்லை என்பதும் நாடறிந்த உண்மை.

குறள் தோன்றிய காலத்தில் இருந்து உரைசெய்தவர்களும், 'உரைக்கு உரைசெய்தவர்களும், பதவுரை, பொருளுரை, தெளிவுரை, கருத்துரை, விளக்கவுரை, ஆய்வுரை, புதியஉரை, புதைபொருள் உரை, இனிய உரை, எளிய உரை, மக்கள் உரை, வாழ்வியல் உரை என்றெல்லாம் நூற்றுக்கணக்கில் அரங்கேற்றியவர்கள் எல்லாம் பரிமேலழகரைப் பின்பற்றிப் பிறதெய்வம் வழிபடாது என்றே ஒருமனதாக உரைசெய்தார்கள் ஆனால் உலகில் நடந்த நடந்துகொண்டு இருக்கும் நிகழ்வுகள் எதனை நிருபிக்கின்றன என்பதே நிதர்சனமானது. "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" அதாவது பிறதெய்வம் தொழாது தன்தெய்வமாகிய கணவனையே தொழாநின்று துயிலெழுவாள் என்று எல்லோரும் ஏகமனதாகக் கூறிய கருத்திற்கு வரலாறுகளும் சமகாலச் சம்பவங்களும் தரும் சான்றுகளையும் சற்று அவதானிப்பது அவசியமாகிறது. அன்று கட்டிய கணவன்மார் கண்திறந்து பார்த்துக் கொண்டிருக்க பல ஆண்கள் கூடியிருந்த சபையிலே துச்சாதனன் பாஞ்சாலியின் துகிலினை உரிந்தபோது அவள் கணவன்மாரை வணங்கினாளா? அல்லது கடவுளை வணங்கினாளா? எது உண்மை. இரு கரங்கள் கூப்பிக் கோவிந்தா! கோபாலா!! என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூக்குரலிட்டு அழுதபோது கண்ணபிரானின் கருணையால் மட்டும் அவள் மானம் காப்பாற்றப்பட்டாள் என்பது உண்மையா? அல்லது பொய்யா? கோடிகோடியாகத் துகில் வளர்ந்து கொண்டேயிருந்தமையால் உரிந்த துச்சாதனன் களைத்து மயங்கி வீழ்ந்தான் என்கிறது வரலாறு. அதுமட்டுமா "அற்றைக்கும் என்மானம் ஆர்வேறு காத்தாரே" என்று பாஞ்சாலி வினாவெழுப்பியதாகப் பாரதம் கூறியதை யாருமே பார்க்கவில்லையா.

மதுரையிலே ஆட்சிபுரிந்த பாண்டியன் நெடுமாறன் என்ற அரசன் சமணர்களின் போதனையால் சமணசமயத்திலே சேர்ந்து கொண்டான். "மன்னனெப்படி மன்னுயிரப்படி" என்னும் பழமொழிப்படி நாட்டுமக்களும் அச்சமயத்தையே நாடினர். மனைவி மங்கையர்க்கரசியோ மாறவில்லை. ஒன்று தன்தெய்வம் அதிலும் கண்கண்ட தெய்வம் வணங்கவேண்டியவன், இரண்டு அரசன் இறைக்குச் சமமானவன். இந்த இரண்டு வழிகளாலும் வழிபடவேண்டிய வளாக இருந்தும், திருவாலவாய் இறைவனுக்கல்லா தினமும் பணிசெய்து வழிபட்டுவந்தாள். இவளே "மங்கையர்க்கரசி வளவர் கோன்பாவை" என்று சம்பந்தரால் தேவாரத்திலே சிறப்பித்துப் பாடும் பெருமையும் பெற்றாள்.

புனிதவதி என்ற பெயருக்குரியவர் பிறந்த ஊருக்கே பெருமை சேர்த்துக் காரைக்கால் அம்மையார் என அழைக்கப்பட்டார். இவள் கணவன் பரமதத்தன் அனுப்பிய இரண்டு மாங்கனிகளில் ஒன்றைச் சிவனடியாருக்குச் சோற்றுடன் திருவமுது செய்யக் கொடுத்தார். கணவனுக்கு உணவின்போது மறுகனியைக் கொடுத்தார். சுவையாக இருந்தமையால் மறு கனியையும் கொண்டு வா என்று கணவன் கேட்டான். கொண்டுவரச் செல்பவர்போலப் போய் நின்று கொண்டு உற்றவிடத்து உதவும் பரமசிவனுடைய திருவடிகளைத் தியானித்தார். உடனே அக்கடவுளுடைய கருணையால் அதிமதுரமான ஒருமாங்கனி அவர்கையில் வந்திருந்தது. அதனை உண்டவன் "இது முன்பு நான் தந்த கனியன்று மூவுலகிலும் பெறுதற்கரியது" இதனை நீ எங்கே பெற்றாய்" என்றான். வருந்தி நின்று பின் நிகழ்ந்தவடி சொல்வரே கடன் என்று துணிந்து, "நீர் தந்த கனிகளில் ஒன்றைச் சிவனடியாருக்குக் கொடுத்துவிட்டமையால் அதற்கு நான் யாது செய்வேன் என்று கவன்று பரமசிவனைத் தியானித்து நின்றேன். அவருடைய திருவருளால் இக்கனி என்கையில் வந்திருந்தது" என்றார். பரமதத்தன் நம் பாதவனாகி "இன்கனி சிவனுடைய திருவருளாற் கிடைத்ததாயின் இன்னொரு கனி அவருடைய திருவருளால் அழைத்துத் தா" என்றான் புனிதவதியார் அவ்விடத்தை விட்டுச் சென்று தனிமையிலே நின்று பரமசிவனைத் துதித்து இன்னுமொரு கனி தந்தருளீராகில், அடியேனுடைய வார்த்தை பொய்யாகி விடும்" என்று விண்ணப்பம் செய்ய, அவர் திருவருளால் ஒருமாங்கனி அவர்கையில் வந்திருந்தது. அதைக் கணவன் கையிற் கொடுக்க அவன் ஆச்சரியமடைந்து வாங்கினான். வாங்கிய பழததைப் பின் காணாதவனாகி மிகுந்த பயங்கொண்டு மனந்தடுமாறி அப்புனிதவதியாரைத் தெய்வமென்றே நினைத்தான். அவரை விட்டுப் பிரிந்தான். சிலகாலங்களின் பின் பரமதத்தன் புனிதவதியாரின் பாதங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினான் என்பதெல்லாம் பெரியபுராணத்தில் பேசப்படவில்லையா? எவரும் பார்த்த தில்லையா? கேட்டதில்லையா?

பரிமேலழகர் உரைக்கும் புனிதவதியார் நிலைக்கும் நிறையவே வேறுபாடு உண்டு. இறைபக்தி குருபக்தி பதிபக்தி நிறைந்த புனிதவதியார் மனதாலே கணவனை வணங்கியிருக்கலாம், அதை மறுப்பதற் கில்லை. ஆனால் தெய்வத்தையும் சிவனடியாரையும் பெரிய அளவிலே மதித்து வழிபட்டுள்ளார் என்பது மட்டும் மாற்றமுடியாத உண்மை. இங்கே உள்ள சிறப்பு என்னவென்றால் ஆலயம் செல்லாது வீட்டிலே இறைவனை வரவழைத்து அவர் திருவருளால் ஒருமுறைக்கிருமுறை மாங்கனி வேண்டிய மாபெரும் அற்புதம் புனிதவதியாரினால் புரிந்துகாட்டப்பட்டதே. பிறதெய்வம் தொழாது கணவனை மட்டும் தொழுது எழுபவள் பெய்யென்று சொன்னால் மழை பெய்யும் என்பது பரிமேலழகர் கருத்தாயின், கடவுளையும் கணவனையும் தொழும் பெண்ணிடம் அந்தவல்லமை இல்லை, அதனால் கற்பும் இல்லை என்பது தானே அவரின் மறுபக்கக் கருத்து அதற்குப் புனிதவதியார் முற்றுப்புள்ளி வைத்து விட்டார். இதைவிட மேலான இன்னொரு புதுமை என்ன வென்றால், கணவனைத் தொழுவதற்கு மட்டுமே பெண் பிறந்தாள் என்பது பரிமேலழகரின் பகுத்தறிவும் கொள்கை. பெண்ணை விழிபட ஆணும் பிறந்தான் என்பதை அம்பலத்திற்குக் கொண்டு வந்ததே புனிதவதியாரின் புனிதமான கொள்கை.

"நீயும் தொழுதகை மெய்ம்மை" (அகம் : 310 · 8) என்ற செய்யுள் வரி சங்ககாலத்தில் மனைவி கணவனைத் தொழுதது போலவே கணவனும் மனைவியைத் தொழுதான் என்பதை விளக்குகின்றது. இதற்குக் காரணம் வணங்கப்படுபவர் யாராக இருப்பினும் அவர்களிடம் கடவுள் வழிபாடும் ஒழுக்கமும் ஒருங்கே அமைந்திருக்க வேண்டும். இதுதான் வள்ளுவரின் எதிர்பார்ப்புமாகும். அன்னை சாரதாதேவி கடவுளையும் கணவனையும் வழிபட்டவர். ஆனால் அன்னை திரேசாவும் அன்னை அப்பாக்குட்டி தங்கம்மாவும் கடவுளை மட்டும் வழிபட்டதோடு ஒழுக்கத்தையும் உயிர்போலப் போற்றியவர்கள். அதனால் உலகில் உள்ள அனைவராலும் வளம் கொடுக்கும் மழையாகவே மதிக்கப் பட்டார்கள். அதுமட்டுமல்ல அக்காலத்தில் அத்தகைய பெயரால் மழை பெய்தது என்பதை.

"வேதம் ஓதிய வேதியர்க்கு ஓர்மழை
நீதி மன்னர் நெறியினுக்கு ஓர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க்கு ஓர்மழை
மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே"
(விவேகசிந்தாமணி : 22)

என்ற பாடல் விளக்குவதாய் அமைந்துள்ளது. மாதம் மூன்று மழைபெய்த காலம் மாறி வருடம் மூன்று மழை பெய்யாதோ என்று வேண்டி நிற்கும் காலமிது. மழையினது அருமையும் பெருமையும் கடவுள் வாழ்த்திற்கு அடுத்தபடியாக வான்சிறப்புப் பற்றிக் கூறப்படுவதில் இருந்து புரிந்து கொள்ளலாம். இந்த உலகம் நிலை பெறுவதற்கு மழையே அமிழ்தம் ஆகிறது என்பதை.

"வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று"
(குறள் : 11)

என்று கூறியவர், எவ்வகை மேம்பாட்டார்க்கும் நீரின்றி உலகியல் அமையாதாயின், அந்நீர் இடையறா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுகும் ஒழுக்கும் வானையின்றி அமையாது என்றார். நிலத்தில் கிணறு குளமும் மலையிலிருந்து நதியும் நீரைவற்றாது வழங்குதற்கு மழையே காரணம் ஆகிறது. இன்னொரு சிறப்பு மழை பெய்யும்போது மட்டும் ஒழுக்கு என்ற பதம் மக்களாற் பயன்படுத்தப் படுகிறது. வீட்டுக்கூரையிற் காணப்படும் சிறு துவாரத்தினூடாக நீர் சிந்தப்படும் போது அதனை ஒழுக்கென்று அழைப்பர். அந்த ஒழுக்கு ஒரு நியமமான நேர ஒழுங்கு கட்டுப்பாடு தவறாத மனித நடத்தையே ஒழுக்கம் அல்லது கற்பு என்று கூடக் கருதலாம். இதனையே

**"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
**வானின் றமையா தொழுக்கு"**

(குறள் : 20)

என்ற குறள் குறிப்பிடுகின்றது. உலகின் ஒழுங்கான நடைமுறைக்கு நீர் இன்றியமையாதது என்பதனாலேதான் புராண இதிகாசங்களும் நதிவளங்களைப் போற்றியுள்ளது. கந்தபுராணத்தில் பாலாறும், திருவிளையாடற் புராணத்தில் வைகை நதியும், பெரியபுராணத்தில் காவிரி நதியும், இராமாயணத்தில் சரயு நதியும், பாரதத்தில் கங்கை நதியும் கருத்தில் கொள்ளப்பட்டது.

வான்சிறப்பொடு வள்ளுவர் மழையை மறந்து விடவில்லை. மழையினால் எவ்வாறு உலகம் நிலைபெறுகின்றதோ அதேபோல் கற்புடைய பெண்களாலும் உலகம் நிலைபெறுகிறது என்பதை நிலைநாட்டவே வாழ்க்கைத்துணைநலம் என்ற அதிகாரத்தில்

**"தெய்வம் தொழாஅள் கொழுநற்**
**- றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை"** எனப் பெண்ணையே மழையாக உருவகம் செய்து சிறப்பித்தார் தவறாத மழையும் சிதறாத கற்பும் நிலைக்க வேண்டுமாயின், மன்னனின் செங்கோல் வளையாதிருக்க வேண்டும். அதற்கும் மழைவேண்டு மென்பதை வற்புறுத்தியே

**"வானோக்கி வாழும் உலகெல்லாம்**
**- மன்னவன்**
**கோனோக்கி வாழும் குடி"**

(குறள் : 542)

என்று குறிக்கப்பட்டது உலக நிலை பேற்றுக்கு மழையே முக்கியம் என்றவர் உலகம் மழையாலேயே அழிகிறது என்பதையும் மறைக்கவில்லை.

**"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்**
**- மற்றாங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை"**

(குறள் : 15) என்றார்.

பெய்யென்று சொல்ல மழை பெய்யுமானால் அதுதான் கற்புடைய பெண்ணினது ஆற்றல் என்றார் பரிமேலழகர். அதனை அடியொற்றி ஆசிரியர் ஜெகவீரபாண்டியன் திருக்குறட்குமரேச வெண்பாவில்

**"பண்டுமழை பெய்யப் பணித்தாள் அநசூயை**
**கொண்டு பெய்த தென்னே குமரேசா -**
**உண்டான**
**தெய்வந் தொழாஅள் கொழுநற்**
**- றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை"** என்ற பாடலின் மூலம் அநசூயையின் கற்புநிலை களங்கமின்றிக் காட்டப்பட்டுள்ளது. காமதம் என்ற வனத்திலே அத்திரி முனிவரின் பத்தினி அன்று மழை பெய்வித்தாள் என்பது உண்மையில் உண்மை. திருக்குறள் எக்காலத்திற்கும் உரியநூல். ஆகவே இன்று வரை நாட்டிலே ஆராவது ஒரு பெண்ணாவது மழைபெய்வித்த வரலாறு உண்டா? மழைபெய்விக்கும் வல்லமை பெண்களிடம் இருந்திருந்தால் நாடு நாளாந்தம் பலதுன்பங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபவித்திருக்கும். தான்தோன்றித் தனமாக ஒவ்வொரு பெண்ணும் போட்டிக்கு மழைபெய்வித்து உலகையே வெள்ளத்தில் மூழ்கடித்திருப்பார்கள்.

"உள்ளங் கவர்ந்தெழுந் தோங்குசினங் - காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க - வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரை தான்பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு"

என்ற நன்னெறிப்பாடல் நல்லதோர் படிப்பனையைத் தருகிறது. வெள்ளத்தைக் கரைபோட்டுத் தடுப்பது அரிய காரியமா? அல்லது கரையை உடைத்து விடுவது அரிய காரியமா? என்பது ஒளவையின் வினா. கரைபொட்டுத்தடுப்பது அரியகாரியம் என்பதும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே. வருமுன் காப்பதா? வந்தபின் காப்பதா? எது சிறந்தது என்றால், வருமுன் காப்பதே சிறந்த தென்பதும் எல்லோர்க்கும் ஏற்புடையதே. இதுகருதியே வள்ளுவரும் வருமுன் காத்துக்கொண்ட வராதலால் பெய்யென்று சொல்ல மழைபெய்யும் என்ற கருத்துப் படச் சொல்லாது விரும்பியவேளை பெய்கின்ற மழையைப் போன்றவள் பெண் என்ற கருத்துப்படவே கூறிவைத்தார்.

வந்த வெள்ளத்தைத் தடுப்பது அரிய காரியமென்றால், அந்த வெள்ளத்திற்கே காரணமாகிய மழையைத் தடுப்பது எவ்வளவு அரியபெரிய காரியம். எமது நாட்டிலே காலங்காலமாக எமது பெண்கள் அதனைச் செய்திருக்கிறார்கள். அனைவரும் அதனை அறிந்தும் இருக்கிறார்கள். வானம் இருண்டு கறுத்து இடிஇடித்து இரைச்சலொடு காற்றும் வீசி இதோ பெரியதோர் மழைபெய்யப் போகிறதென்ற எதிர்பார்ப்பு நாட்டில் உள்ள பெண்கள் எல்லாம் நாலுபக்கமும் ஓடிஓடிக் கொடியிலும் கோடியிலும் முற்றத்திலும் பக்கத்திலும் காயப்போட்ட துணி மணி விறகுதடி பெட்டி குட்டான் சட்டி பானை எல்லாவற்றையும் தடல்புடலாய் எடுத்தெடுத்து "கெட்டமழை சனியன்மழை ஏனிப்ப வருகுது'' என்று பேசியது எல்லோர் செவியிலும் கேட்டதுண்டு ஆனால் ஒரு துளி மழை கூட வீழாது வானம் வெளுத்துக் கலைந்ததுண்டு. இது எல்லாப் பெண்களுமே கற்புடையவர்கள் என்பதை களங்கமற எடுத்துக்காட்டும் ஒரு நிகழ்வாகும். இதற்கு ஆதாரமாக

"காண்டகைய தங்கணவ ரைக்கடவு - ளார்போல்
வேண்டலுறு கற்பினர்தம் மெய்யுரையில் - நிற்கும்
ஈண்டையுள தெய்வமும் மாமுகிலும் - என்றால்
ஆண்டகைமை யோர்களும் அவர்க்கு - நிகரன்றே''

என்ற கந்தப்புராணச் செய்யுள் அமைந்துள்ளது. அதாவது கண்ணிற காணக்கூடிய தமது கணவன்மாரைக் கடவுளைப்போல வழிபடுகின்ற கற்புள்ள பெண்களின் உண்மையான சொல்லுக்குக் கட்டுப்பட்டு இங்குள்ள கடவுள்களும் மழைமுகிலும் நிற்கும் என்றால் எத்தகைய ஆண்களும் அவர்களுக்கு நிகராக மாட்டார்கள். மேற்படி பாடலிலே மிகப்பெரிய பொருத்தப்பாடும், சிறப்பும் அமைந்துள்ளன. மழை பெய்யும் என்றால் மழை வரும் என்பது அர்த்தம். நிற்கும் என்றால் கட்டுப்படும், வராது, பெய்யாது என்பது அர்த்தம். "மாதர் கற்புடை மங்கையர்க்கு ஓர்மழை'' என்னும் போது கற்புள்ள பெண்களின் பெயரால் கடவுளே மாதம் ஒருமழை பெய்வித்துக் கொண்டிருக்கும் போது பெண்களாக மழை பெய்விக்க வேண்டியதேவை இல்லை. ஆனால் கேட்டின் பொருட்டு நாட்டிலே பெய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையைத் தடுக்கின்ற பொறுப்பு கற்புடைய பெண்களையே சார்ந்தது.

"வரிசை தப்பிய மன்னவர்க்கு ஓர்மழை
புருஷனைக் கொன்ற பூவையர்க்கு - ஓர்மழை
அரிசி விற்றிடும் அந்தணர்க்கு ஓர்மழை
வருஷம் மூன்று மழையெனப் பெய்யுமே"

என்ற விவேகசிந்தாமணிச் சிலேடைப் பாடலும், "கெடும்பதூஉம் மழை" என்ற வள்ளுவர் வாய்மொழியும் கெடுதிக்குரிய மழை பெய்யும் என்பதை உறுதிப்படுத்து கின்றது. இவ்வாறு ஒருவரால் நாட்டிற்குக் கேடுவரும்போது அதனைத் தடுத்து நிறுத்துவதே கற்புடைய பெண்களின் கடமை. மழை பெய்வித்தல் அல்ல என்பது தெளிவாகிறது. அத்துடன் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்னும் ஒளவையின் கொன்றைவேந்தன் வரிகள் அறிவுறுத்துவதும் அவதானிக்க வேண்டியது. மகளிர் நிறை எனப்படுவது கணவன் சொல் தட்டாது நடத்தல் என்றால் இதுஎல்லாவகையிலும் பொருந்தாது. நல்ல பண்பான கணவனின் சொல்லை எந்தப் பெண்ணும் தட்டக் கூடாது. ஆனால் குடிப்பழக்கம் உள்ள கணவன் மனைவியையும் குடி என்று சொன்னால் அதைத் தட்டாது குடிப்பதுதான் மாதர்கற்பா? அதுவல்ல அதற்கு வேறு பொருள் உண்டு. சொற்றிறம்பாமை என்பது ஒருமுறை சொன்ன சொல் காலம் முழுக்க மாறாதிருத்தல். அதுவே கற்பு மனித வாழ்வில் ஒருமுறை நடக்கும் நிகழ்வு திருமணம் அத்திருமணத்தின் போது கூறிய வார்த்தை மாறாதிருத்தலே கற்பு. அது இருபாலார்க்கும் பொதுவானது.

1. "கன்னியாம் கனக சம்பந்தாம் கனகாபரண பூஜிதம்" 2. "மாங்கல்யம் தந்து நானீம் மம ஜீவன கேதுனாம்" முப்பத்துமுக்கோடி தேவர்கள் சாட்சியாகவும், அக்கினி சாட்சியாகவும், ஆச்சாரியர் சாட்சியாகவும், சபையோர் சாட்சியாகவும், பார்வதி, பரமேஸ்வரர் சாட்சியாகவும், கன்னிகாதானமும், மாங்கலியதாரணமும் நடைபெற்ற வேளையில் திருமணம் செய்துகொள்ளும் இருவரும் எக்காலத்தும் உன்னை விட்டுப்பிரியேன் என்று கூறிய வார்த்தை மாறாதிருப்பதையே சொற்றிறம்பாமை என்று ஒளவை கூறியிருக்க வேண்டும். அவ்வாறு மாறாதிருத்தலே கற்பு நெறியாகும். இதனையே கிறீஸ்தவ மதத்திலும் வார்த்தைப்பாடு என்று அழைக்கப்படுகிறது. அதைவிடுத்து மழைபெய்வித்தலுக்கும் கற்பிற்கும் எந்தத் தொடர்பும் கூறமுடியாது.

"கொழுநற் றொழுதெழுவாள்" என்பதற்குத் தன்தெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயிலெழு வாள் என்று பரிமேலழகர் உரைதந்துள்ளார். இங்கே தொழுது எழுவதா? எழுந்து தொழுவதா? என்பது ஐயப்பாட்டிற் குரியதாக அமைகின்றது. "பின்தூங்கி முன்னெழும் பேதையே" என வள்ளுவர் கூறியது போன்று முதலிலே துயிலெழும மனைவி துயில் கொண்டிருக்கும் கணவனின் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்வதுதான் வழிபாட்டு மரபு இந்த மரபு முறைக்கு மாறாகத் தொழுது எழுவாள் என்பது எப்படிப் பொருந்தும். ஆனால் பெண்ணினுடைய கற்பைக் களங்கமின்றிக் காட்டுவதற்காகவே "கொழுநற் றொழுதெழுவாள்" என வள்ளுவர் வலிந்து புகுத்தினார். காலம் முழுக்கக் கணவன் மனைவி அன்றிலும் பெடையும் போல இணைவிரியாது வாழ்ந்த குடும்பங்கள் நாட்டில் அதிகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. அவர்கள் பெரும்பாலும் விவசாயிகளே. அந்தக் குடும்பங்களில் இந்த வழிபாடு சாலப் பொருந்தும். ஆனால் முக்கியமான பல குடும்பங்களில் அன்றும் இன்றும் கணவன்மார் கடமையின் நிமித்தம் மனையைப் பிரிந்து தூர இடத்திலே சிலகாலம் தங்க வேண்டிய நிலை ஏற்படுவதும் உண்டு.

திருக்குறள் தோன்றிய காலம் விஞ்ஞான வளர்ச்சியற்ற போக்கு வரத்து மிகவும் மந்தகதியில் நடந்தகாலம் அத்தகைய காலத்திலும் கூடத் "திரைகடலோடித் திரவியம் தேடு" என்ற பொன்மொழியைப் போற்றி நடந்த காலம் கடல வாணிபம் செய்பவர்கள் பண்ட மாற்று முறையிலே தமது நாட்டு விளைபொருட்களைப் பாய்க்கலங்களிலே ஏற்றிச் சாதகமான பருவக்காற்றின் துணைக்கொண்டு வேற்று நாடுகளுக்குச் செல்வர். ஏறக்குறைய ஆறுமாதமோ ஒரு வருடமோ அந்த நாட்டிலே தங்கி நின்று தமது நாட்டிற்குத் தேவையான பொருட்களைக் கலங்களிலே ஏற்றி அடுத்த பருவக்காற்று மாறிய பின் வீடு வந்துசேருவர். அதேபோல் நாட்டின் படைத்துறை சார்ந்தவர்களும் வேற்று நாட்டின் மீது படையெடுத்துச் சென்று போர்க்களத்திலே போர்புரிந்து வெற்றிவாகை சூடி நாடுவந்து சேரப்பல மாதங்கள் கூட ஆகலாம். எனவே இந்தத் தனைவந்தூகிய வணிகரும் படைத்தளபதிகளும் அரசனின் இரண்டு கண்கள் போன்றவர்கள். "மேழிபிடிக்கும் கை வேல்வேந்தர் நோக்கும் கை" என்று கூறப்பட்டிருப்பினுங் கூட அரசனோடு வணிகர் தளபதிகளுக்கு இடையில் இருந்த உறவும் மதிப்பும் போல உழவரோடு இருந்ததாகக் கூறமுடியாது. காரணம் நாட்டிற்காக அவர்கள் தமது ஆசாபாசங்களைத் தியாகம் செய்தகின்றமையே ஆகும். திருமண மேடையில் மாலையிடும் போதே போர்முரசு கேட்டுப்போர்க்கோலம் பூண்டு போர்க்களம் செல்லும் தளபதிகளும், கல்யாணம் நடந்த கையோடு பருவக் காற்றுமாறக் கலமேறிக் கடல்கடக்கும் வணிகரும் தியாகம் செய்வதால் மற்றவர்களை விட ஒருபடி உயர்ந்தே நிற்கிறார்கள். "உலகெனப்பட்டது உயர்ந் தோர் மாட்டே" என்பது இவர்களுக்கும் நன்கு பொருந்தும். அது அன்று என்றால் இன்று என்ன நடக்கிறது. ஆயிரமாயிரம் குடும்பத்தலைவர்கள் குடித்தனத்தை விட்டுக் குவைற்றிலும் அரபு நாடுகளிலும் அந்நியச் செலவாணியை ஈட்டும் நோக்கில் ஆண்டுக் கணக்குகளாக அலைமோதுகின்றார்கள் என்றால் உண்மையில் இவர்களும் தியாகிகள் தான். இவர்களின் மனைவியரும் தியாகிகள் தான். ஆசையை அடக்கி ஆசை நாயகனைக் கண்ணாலும் காணாது கற்பைக் காத்துக் கடவுளையே தொழுது கொண்டிருக்கும் பெண் எத்தகையவள் உலகம் போற்ற வேண்டிய உத்தமிகளே.

இங்கேயும் வள்ளுவரின் பொய்யாமொழி புலனாகிறது. கணவனைப் பிரிந்து தனித்துவாழும் இத்தகைய பெண்கள் உண்ணும்போதும் உறங்கும் போதும் அவர் நினைவாகவே இருக்கின்றார்கள். காலம் முழுக்கத் தொலைபேசியில் தொடர்பு கொள்வதைத் தவிர வேறுவழிபுரியாதவர்கள். நெஞ்சம் நிறைந்த நிலையில் உறங்கும்போது அவர் நினைவாகவே உறங்கியவள் துயில் எழும்பும் போதும் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவோடுதானே துயில் எழுவாள். இதனாற்றான் "கொழுநற் தொழுதெழுவாள்" என்று வள்ளுவர் கூறினார். இதைத்தான் அகவணக்கம் என்று அழைப்பதுண்டு. அவர்வயின் விதும்பல் என்ற அதிகாரத்திலே

"ஒருநாள் எழுநாள்போல் செல்லும் சேண் - சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு"
(குறள் : 1269)

என்ற குறளும் குறிப்பறிவுறுத்தல் என்ற அதிகாரத்தில்

**"நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமும் எழுநாளேம் மேனி பசத்து"** (குறள் - 1287)

அவர்கள் மனநிலையைப் படம்பித்துக் காட்டுவதாக அமைந் துள்ளது. சேணிடைச் சென்றதம் காதலர் மீண்டுவரக் குறித்த நாளை உட்கொண்டு அதுவருந் துணையும் உயிர்தாங்கி வருந்தும் மகளிர்க்கு; ஒருநாள் பலநாள் போல் நெடிதாகக் காட்டும் என்று முதற்குறளும், "எம் காதலர் பிரிந்து கோயினார் பெருநற்றே. அப்பிரிவிற்கு யாமும் மேனி பசந்து ஏழுநாளுடையோ மாயினேம்: என்று அடுத்த குறளும் பொருள் கூறுகிறது. இன்று குடிபோதையிலே மதிமயங்கி மூடிமொட்டாக்கிட்டு எட்டுமணிமட்டும் நித்திரை செய்யும் கணவனையோ, மனைவியின் சுகநலம், இன்பதுன்பம் எதிலுமே எள்ளளவும் கரிசனை இல்லாது, தனது சுகபோகததில் மட்டும் துளியளவும் விட்டுக்கொடுக்காது துயில் கொள்ளும் கணவனையும் தினம் தொட்டுக் கும்பிடுவது எவ்வாறு "வேண்டாப்பெண்டிர் கைபடக்குற்றம் கால்படக்குற்றம்" பெண்ணினுடைய கால்பட்டது என்றால் அது மாபெருங் குற்றந்தான். ஆனால் இது அப்படியல்ல கணவனுடைய காலிற்தானும் பெண்ணுடைய கைபட்டால் குற்றம் அந்த நிலையில் தொட்டுக் கும்பிடுவது எங்ஙனம். "கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்" என்று போற்றும் கற்புள்ள பெண்கள் கணவனை மனதில் நினைக்கவும், அவர் நலம் வேண்டிக் கடவுளை வழிபடவும் மறப்பதில்லை. எனவே தான் இத்தகைய பெண்களுக்கும், தூரதேசங்களில் கணவன்மார் இருக்கும் பெண்களுக்கும், கொழுநற் தொழுதெழுவாள் என்னும் வாழ்வியல் முறையை வகுத்துக் கூறினார்.

திருக்குறள் எவ்வாறு கடவுளையும் கணவனையும் வழிபடவேண்டும் என்று வழிகாட்டியதோ, அதேபோலவே கந்தபுராணமும் கண்ணால் காணமுடியாத கடவுளை எவ்வாறு வழிபடுகின்றாயோ அதேபோலக் கண்கண்ட தெய்வமாகக் கணவனையும் வழிபடு என்று பெண்ணை நெறிப்படுத்தியுள்ளது. திருக்குறளும் கந்தபுராணமும் தோன்றிய காலத்தில் வாழ்ந்து கணவன்மாருக்கும், இக்காலம் வாழ்ந்து கொண்டிருக்கும் கணவன் மாருக்கும் இடையில் நிறைய வேறுபாடு உண்டு. அதேபோல அன்றைய பெண்களுக்கும் இன்றைய பெண்களுக்கும் ஏறத்தாழ வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது.

அன்றைய கணவன் பெண்ணை உடலாலும் உள்ளத்தாலும் அனிச்சம் பூவிலும் பார்க்க மிகவும் மென்மை உடையவள் என்றே எண்ணினான். அதனால் மனைவி மனையியலும் நிழலிலும் நிரந்தரமாகவும் நிம்மதியாகவும் இருக்க வேண்டும் என்றும் விரும்பினான் இதனால் வெயில் கானல் மழை என்று பாராது வெளியிற் சென்று தின்மும் தானே உழைக்க வேண்டும் என்ற இலட்சியமும் கொண்டான். அதே வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி கற்பிலே மிகுந்த திண்மை உடையவளாக இருக்க வேண்டும்' என்றே எதிர்பார்த்தான். கற்பு நிறைந்த மனைவியை விட உயர்ந்த பொருள் உலகத்தில் வேறெதுவும் இல்லை என்னும் நிலைப்பாடும் கொண்டவனாகவே திகழ்ந்தான் என்பதை

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள - கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்''
(குறள் : 54)

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்''
(குறள் : 1137)

என்னும் குறள்களின் மூலம் உணர்ந்து கொள்ள முடியும். எனவே இத்தகைய கணவன் வழிபடக்கூடிய தகுதி பெற்றவன் ஆகின்றான்.

ஆனால் இன்று காணப்படும் கணவன்மாரில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர், இரண்டு மூன்று குழந்தைக்குத் தாயான பின்பும் அர்த்தசாமம் என்றும் பாராது. பெற்றோரிடம் சென்று சீதனத்தைப் பெற்று வா என்று அடித்துத் துரத்தும் துரோகிகளாகவும், கட்டிய மனைவிக்கு கர்ப்பத்தடை செய்வித்துக் கடல்கடந்து கண்ணுக்கெட்டாத் தூரதேசத்திற்கு உழைத்துவா என்று உளம்விரும்பி அனுப்பும் உலுத்தர்களாகவும், மனைவியின் உழைப்பிலே ஓயாது குடிக்கும் ஊதாரியாகவும், பொழுது முழுக்கக் குடித்த போதையில் அரை வயிற்று உணவிற்கே அல்லாடும் மனைவியை அடித்து உழக்கும் அறிவிலியர்களாகவும், நடக்கும் போது எந்தப் பெண்ணால் கணவனாக நினைக்கவோ, அல்லது கடவுளாக மதிக்கவோ முடியும். ஒரு பானை சோற்றுக்கு ஓர் அவிழ் பதம் என்பது போல இத்தகையவர்களால் ஆண் இனத்திற்கே பெரும் தலைகுனிவுதான் இந்த நிலையில்.

''பெண்ணின் பெருமையை நல்ல - படியாகப்
பேணியே நூல்களை ஆக்கி வைத்தார் - இன்று
பெண்களைப் பெற்றோர் பெரும்பாவி - என்கின்ற
பேரும் பெற்றாரடி ஞானப்பெண்ணே - கண்ணில்
நீரும் விட்டாரடி ஞானப்பெண்ணே''

என்ற புதிய ஞானக்கும்மிப் பாடல்தான் நாட்டிற்குத் தேவையாகின்றது.

இதேபோல அன்றைய பெண்களை எடுத்துக் கொண்டால் கல்வியறிவு குறைந்தவர்களாயினும், கண்ணியம் நிறைந்தவர்களாகவும், கற்பின் கலங்கரை விளக்குகளாகவும், பெண்மையைக் காக்கும் பெருந்தகைகளாகவும், நடுநிலையால் தம்மை அழகு செய்த ஆரணங்குகளாகவும், கணவனுக்காகவே வாழ்ந்த பதிவிரதைகளாகவும், ஆண்டவனை வேண்டி வழிபட்ட அடியவர்களாகவும், இரக்கசிந்தை கொண்டவர்களாகவும், இல்லத்தரசிகள் ஆகவும், ஏன் எந்தக் காலத்திலும் நாடுசெழிக்கப் பெய்த நல்ல மழையாகவுமே போற்றப்பட்டார்கள்.

இன்றுள்ள பெண்களோ கல்வியறிவில் கரைகண்டவர்களாகவும், கண்ணியம் மிக்கப் பெரும் பதவிகளை வகிப்பவர்களாகவும், எத்துறையிலும் ஆண்களோடு போட்டிபோடும் ஆற்றல் மிக்கவர்களாகவும், ஆண்களைப் போல் உடை அணியும் ஆர்வம் மிக்கவர்களாகவும், தனிவழிப் பயணங்களை மேற்கொள்ளும் துணிவுடையவர்களாகவும், வெளிநாடு செல்லும் விருப்பம் உடையவர்களாகவும், திருமணம் பற்றித் தாமே முடிவெடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநிலை கொண்டவர்களாகவும், மேலைத்தேச நாகரிகத்தில் ஈடுபாடு உடையவர்களாகவும், குற்றச்செயல்களைக் கூச்சமின்றிச் செய்யும் தற்துணிவு உடையவர்களாகவும், ஆண் வர்க்கத்தை எள்ளிகையாடுவதில் இன்பம் காண்பவர்களாகவும், இன்றைய இளந் தலைமுறையில் ஒரு குறிப்பிட்ட வீதத்தினர் இவ்வாறு நடந்து கொள்ள விழைவதும் நாடறிந்த உண்மையே.

எத்தனை மனக்குழப்பங்கள் போராட்டங்கள் இருந்தபோதிலும் ஆலய வழிபாட்டில் ஆண்களைவிடப் பெண்களே அதிக ஈடுபாடும் நம்பிக்கையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள் ஆலயங்களில் நடைபெறும். உற்சவங்கள், விஷேட வழிபாடுகள், விரத அநுட்டானங்கள் போன்றவற்றில் வயது வேறுபாடின்றிப் பெருந்தொகையினராகப் பெண்களே காணப்படுகின்றனர். அத்துடன் எந்தக் காலத்திலும் எந்த ஒரு பெண்ணாவது ஆண்டவனைப் பற்றியோ அல்லது ஆலய வழிபாடு பற்றியோ ஆட்சேபமாக ஒருவார்த்தை கூட உரைத்ததாக அறியக்கிடைக்கவில்லை. ஆனால் காலத்திற்குக் காலம் ஆண்வர்க்கத்தினர் ஆண்டவனைப் பற்றியும் ஆலயம் பற்றியும் ஆட்சேபித்த வரலாறு அதிகம் உண்டு. சித்தர்கள் என்றிருந்தவர்கள் இதில் சிறப்பிடம் பெற்றுள்ளார்கள்.

"நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுஷ்பம்
- சாற்றியே
சுற்றி நின்று மளமளென்று சொல்லு
- மந்திர மேதடா
நட்டகல்லுப் பேசுமோ நாதன்உள்
- இருக்கையில்
சுட்டசட்டி தட்டுவம் கறிச்சுவை அறியுமோ"

**கோயிலாவ தேதடா குளங்களா தேதடா
கோயிலும் நம்மனதுளே குளங்களும்
நம்மனதுளே''**

என்று பாடிச்சென்றனர். சமகாலத்தில் இளமைத்துடிப்பும் இரத்த முறுக்கும் கொண்டு சிலர் கடவுள் இல்லை என்றும், கடவுள்வழிபாடு மூடக்கொள்கை என்றும் குறைகூறினர். முதுமை அடைய அதுபற்றிச் சிந்திக்க முடியாத நிலையில் மௌனமாகி விட்டவர் பலர். இத்தகைய வர்களுக்கு பரிமேலழகர் உரையும் ஓர் உதாரணமாக அமைந்திருக்கலாம் பெண்களுக்கு கணவன்தானே கண்கண்ட தெய்வம். அவனைத்தானே அவர்கள் வழிபடவேண்டும். பிறதெய்வங்களைக் கண்டவர் யார்? காட்டக் கூடியவர் யார்? கடவுள் வழிபாடு என்பதெல்லாம் அறியாமையின் அடையாளம். என்றெல்லாம் மாக்ஸிசவாதிகள் மறுதலித்தனர். இதைவிடப் பகுத்தறிவாளர் என்று தம்மை இனங்காட்டிக் கொண்டவர்களும், ஆலயங்களில் நடக்கும் அட்டூழியங்கள், அடக்குமுறைகள், புறக்கணிப்புகள், போட்டிகள், புரிந்துணர்வின்மைகள், பாகுபாடுகள், பலியிடல்கள் போன்ற நடைமுறைச்சம்பவங்களைக் கொண்டு கடவுள் பெயரால் இவை அனைத்தும் நடைபெறுமாயின் அந்தக்கடவுளும் போலி, வழிபடுபவர்களும் போலி என்று வாதிட்டனர். ஆயினும் அவை எதுவும் எடுபடவும் இல்லை. ஒருவர் மனதில் இடம்பெறவும் இல்லை. இதற்கு மாறாகத் தேவார முதலிகள் காலந்தொட்டு இன்றுவரை எண்ணில் அடங்காத ஆண்வர்க்கத்தினர் ஆண்டவனைப் பற்றியும் ஆலய வழிபாடு பற்றியும் ஆணித்தரமாகப் பாடிவைத்தனர். விரிவுக்கஞ்சி அவை விடுக்கப்படுகிறது.

அன்றும் இன்றும் பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிப்பாலாருடைய இடையூறுகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக் கடவுளுடைய துணையே கதியென்று நம்பியிருக்கின்றார்கள். ஆயினும் உலகமகளிர்தினம் உருவாக்கப்பட்டு அன்றைய தினம் அரங்குகள் தோறும் பெண் அடிமைத்தனம் விலகிடவேண்டும். ஆணாதிக்கம் அழிந்தொழிய வேண்டும் என்று பெண்ணியல் வாதிகள் பெருமுழக்கம் இடுவதுண்டு. அதேநேரம் திருக்குறளில் இருந்து பெண்வழிச்சேறல் (அதி : 91) வரைவின் மகளிர் (அதி : 92) ஆகிய அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும். இவை பெண்களைப் பெரிதும் பழிவாங்கி அவமானப்படுத்தும் அதிகாரங்களே என்று ஆவேசத்துடன் அறைகூவும் அறிவியல் வாதிகளான பெண்களில் ஆராவது ஒருவர்தானும் வாழ்க்கைத் துணைநலம் (அதி : 06) என்ற அதிகாரம்பற்றி வாய்திறப்பதும் இல்லை. "தெய்வம் தொழாஅள் கொழுநற் தொழுதெழுவாள்" என்று கூறியதன்மூலம் பெண்களின் தெய்வவழிபாடு மறுக்கப்பட்டுள்ளது. கணவனையே வழிபடவேண்டும் என்று கட்டாயப்படுத்தப் பட்டுள்ளது. பெண்ணடிமை அந்தக் குறளிற்தானே பெரிய அளவிற் புதைந்துகிடக்கிறது. குறள்தோன்றி எவ்வளவு காலம் உரைதோன்றி எத்தனை காலம். இதுகாலவரை பெண்ணியல்வாதிகள் ஏன் இதுபற்றி எதுவுமே கூறாமல் இருந்தார்கள். அதற்குக் காரணம் அடுத்தவரியின் மூலம் பரிமேலழகர் அவர்களைப் பப்பாசிமரத்தில் ஏற்றிவிட்டுவிட்டார் அல்லவா? தெய்வம் தொழுதாலென்ன? தொழாவிட்டாலென்ன? கொழுநனையையும் தொழுதாலென்ன? தொழாவிட்டாலென்ன? பெய்யென்று சொன்னவுடன் மழையே பெய்கின்ற மாபெரும் வல்லமையைப் பரிமேலழகர் அல்லவா நமக்கு வாரிவழங்கியுள்ளார். என்ற நன்றிக் கடனுக்காக முதல்வரியின் கருத்தையிட்டு அவர்கள் எதுவுமே அலட்டிக்கொள்ளவில்லை. ஆனால் இந்த ஒரு குறளின் மூலமே பரிமேலழகர் தமிழ் இனத்தின் பாரம்பரியம், பண்பாடு, பழக்கவழக்கம் அத்தனையையும் குழிதோண்டிப் புதைத்து, உலக அரங்கிலே கடவுளை வழிபடாத இரணிய பரம்பரை பெண்குலம் என்றும், காலம்முழுக்கப் பெண்களை அடிமைகளாக வைத்திருக்கும் அரக்கர் கூட்டந்தான் ஆணினம் என்றும், மழைபெய்விக்காத வரையில் கற்பென்று உச்சரிக்கும் உரிமை கூட அற்றவர்கள் பெண்ணினம் என்றும் எல்லோரும் எண்ணக்கூடிய அளவிற்கு எல்லாவற்றையும் வெளிபகிரங்கமாக்கிக் பூலிய்சீசரைக் காட்டிக் கொடுத்த புரூட்டஸ் போலவும், இயேசுபிரானைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் கரிமோஸ்போலவும், வள்ளுவரைக் காட்டிக்கொடுத்த பரிமேலழகர் இந்தக் குறளிலே பசுத்தோல் போர்த்த புலியாக மிகப்பக்குவமாகவே நடித்துக் கொண்டார். அதுமட்டுமல்ல இதையெல்லாம் வள்ளுவர்தான் கூறினார் என்று சொல்லும் வண்ணம் அவர் தலையிலே அரைப்பைவைத்து அவரைக் குடியோடு முழுகவும் வைத்தார்.

ஆயிரத்து முன்னூற்று முப்பது குறள்களுக்கும் இந்த ஒருகுறளே அடிஅத்திவாரமாக அமைந்துள்ளது. இந்தக் குறளும் குறளின் உரையும் எக்காலத்திற்கும் ஏற்புடையதாக இல்லையென்றால், அதுவும் சமகாலத்தில் குறளும் உரையும் நடைமுறையும் ஒத்திசைவு இல்லையெனில் எதிர் காலத்தில் எந்தக் குறளும் வழக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்காது என்று எதிர்வுகூறுவதில் எந்தத் தவறும் இருக்காது. வேறுஎந்தக் குறளுக்கும் இல்லாத நிலைப்பாடு இந்தக்குறளுக்கு மட்டுந்தான் ஏற்பட்டுள்ளது. அது என்னவெனில் இக்குறளின் முதலாவது அடிக்குப் பரிமேலழகரில் இருந்து அனைவரும் ஒரேவிதமான உரையையே தந்துள்ளார்கள். ஆனால் இரண்டாவது அடிக்கு உரைதங்தவர்கள் இரண்டுவிதமாகக் கூறியுள்ளனர். பரிமேலழகரும் அவர்சார்ந்த பலரும் "பெய்யெனப் பெய்யும் மழை" என்பதற்குப் பெய்யென்று சொல்ல மழை பெய்யும் என்று உரைதந்துள்ளனர். இந்த உரை உண்மையாயின் அநசூயையைத்தவிர இந்த உலகத்தில் கற்புள்ள பெண்கள் ஒருவருமே இல்லையா? இருந்திருந்தால் பருவமழை தப்பி பயிரினங்கள் அழிந்து படுவது கண்டு ஆண்வர்க்கம் மழைவேண்டிக் கொடும்பாவி கட்டியெரிப்பதைப் பெண்வர்க்கம் காணவில்லையா? கணவன்மார் இவ்வாறு கஷ்டப்படுவது கண்டு மனைவிமாருக்கு சிறிதளவு இரக்கந்தானும் பிறக்கவில்லையா? ஒரு பெண்சொன்னாலே மழைபெய்திருக்கும். ஊரில் உள்ள அத்தனை பெண்களும் ஒன்றாகச் சேர்ந்து சொன்னால் எவ்வளவு பெருமழைபெய்து வெள்ளமே பாய்ந்திருக்கும். ஏன் நடக்கவில்லை. அந்தவல்லமை பெண்களிடம் பெரிய அளவில் இல்லை. அண்டவனும் அதைக் கொடுக்க வில்லை. மூவுலகும் போற்றும் முத்தேவிகள் கூடத்தம்முள் போட்டி போட்டவரலாறுகளும், கடலைவறுத்த கதைகளும் உண்டு. நல்லவேளை காட்டிலே அநஞயைக்குப் போட்டியாக ஆரும் இருக்கவில்லை. இருந்திருந்தால் கதை வேறுவிதமாக மாறியிருக்கும். நாட்டிலே ஒரு பெண் புதிதாக ஒரு சேலைகட்டினால் அதே மாதிரிச்சேலை அடுத்த வீட்டுப்பெண்ணுக்கும் அவசியம் தேவை. புதுமாதிரியான நகை ஒரு பெண் அணிந்தால் அடுத்த பெண்ணுக்கும் அதுவே வேண்டியிருக்கிறது. இப்படியான வர்களிடம் மழைபெய்விக்கும் வல்லமை மட்டும் இருந்தால் காலம் முழுக்க நாடு வெள்ளத்திலேதான் மூழ்கும்.

09.12.2007 ஆந் திகதி உதயன் பத்திரியையின் ஐந்தாம் பக்கத்தில் மழை வேண்டி இப்படியும் வழிபாடு என்ற செய்தி அமைந்திருந்தது. சென்னையில் கணபதி பாளையத்தில் இருபதாயிரத்திற்கு மேற்பட்ட விவசாயிகள் வாழும் பகுதியில், பருவமழை பெய்யாது பொய்த்ததால் விவசாயம் பாதிக்கப்பட்டது. ஊரிலும் விநாயகர் ஆலயத்தில் பொங்கலிட்டு வழிபாடு செய்ததோடு இரவு ஒன்பது மணிக்குப்பின் வயதான பெண்கள் எல்லாம் ஊரைவிட்டு வெளியேறி, மூதாட்டிகள் இராப்பிச்சை எடுத்துக் காட்டுப்பகுதியிற் சென்று அமர்ந்தனர். ஒருநாட்கழித்து ஊரார் சென்று சமாதானம் செய்து அழைத்து வந்தனர். இச்செய்தியில் இருந்து அறிந்து கொள்ளும் விடயம் இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட விவசாயிகள் வாழும் பகுதியில் பெண்கள் ஆகக்குறைந்தது பதினைந் தாயிரம் பேராவது இருந்திருக்கலாம். இத்தனை பேரில் ஒருவருக்கும் மழைபெய்விக்கும் வல்லமை இல்லை என்ற உண்மை தெளிவாகிறது. அத்துடன் அத்தனை பேரும் அந்தப்பகுதியில் இருந்தால் மழை பெய்யாதென்றும், வெளியேறிச் சென்றால் மழை பெய்யு மென்ற ஐதீகமான ஒரு நம்பிக்கையும் வளர்க்கப்பட்டிருக்கிறது. இந்த நம்பிக்கையின் பேரால் அதனை பெண்களும் அவமானப்படுத்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிவாங்கப்படுகிறார்கள் என்பதை ஆண்வர்க்கம் சிந்திக்கத் தவறிவிட்டார்கள். இது தமிழர் பாரம்பரியம் பண்பாடுகளுக்கும் தெய்வ நம்பிக்கைக்கும், திருக்குறளின் சீர்மியத்திற்கும் விழுந்த அடியாகும். பெண்களால் மழைபெய்விக்க முடியும் என்பதும், பெண்கள் இருந்தால் மழைபெய்யாது என்பதும் நேர்எதிர்மாறான கருத்தாகும். இந்தச் சம்பவத்தின் ஊடாக மழைபெய்வித்தலுக்கும் மகளிர்கற்புக்கும் எவ்வித சம்பந்தமும் எக்காலத்தும் இருக்கமுடியாது என்பதும் கணபதி பாளையத்தில் நடந்த சம்பவம் நிரூபணம் ஆக்கியுள்ளது.

உரோமபதன் என்ற அரசன் ஆட்சிபுரிந்த காலத்தில் மழைவளம் குறைந்து அவனுடைய நாடு பெருங்கேடைந்தது. மழைபெய்வித்து நாட்டை வளம் படுத்துதற்காகக் கலைக்கோட்டு முனிவரை உரோமபதன் தன் நாட்டிற்கு அழைத்துவந்தான். அம்மாதவன் வருகையால் மழைவளம் சுரந்தது. மானிலம் செழித்தது கேடு நீங்கிற்று என்பதனை

**"வளநகர் முனிவரன் வருமுன் வானவன்**
**களனமா கடுவெனக் கருதி வான்மிசைச்**
**சளசள வெனமழைத் தாரை கான்றன**
**குளனொடு நதிகள்தம் குறைகள் தீரவே"**

(இராமாயணம்)

என்ற பாடல் சித்திரித்துக் காட்டுகின்றது. கலைக்கோட்டு முனிவர் மழைபெய் வித்தமைக்கு அவரிடம் இருந்த தவவலிமையும் அதன் மூலம் பெற்ற இறையருளுமே காரணமாக அமைந்ததன்றி வேறெதுவும் இல்லை. அதுபோலவே அநசூயையும் அத்திரிமுனிவருடன் சேர்ந்து காமதம் வனத்திலே கடும் தவம் இயற்றிய காரணத்தால் மழைஇன்றி உலகம் வருந்தியபோது பெய்யென்று சொல்லி மழை பெய்வித்தார். அது தவத்தின் வலிமையேயன்றிக் கற்பின் பெருமை அல்ல. தவத்தின் வலிமையை

**"ஒன்னார்த் தெறலும் உவந்தாரை**
**- அக்கலும்**
**எண்ணின் தவத்தாள் வரும்"**

(குறள் : 264)

என்றகுறள் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

இதுவரை பார்த்ததைக் கொண்டு "பெய்யெனப் பெய்யும் மழை" என்ற அடிக்குப் பரிமேலழகரும் அவர்சார்ந்த வர்களும் தந்த உரை பெண்களையும் பெண்கள் கற்பையும் கேள்விக்குறி அக்கியுள்ளது. இரண்டாவது வகையினரின் உரை ஓரளவு பொருத்தப்பாடாக உள்ளது. அதாவது பிறதெய்வத்தை வழிபடாது கண்கண்ட தெய்வமாகிய கொழுநனைத் தொழாநின்று துயிலெழு பவள் விரும்பிய போது பெய்யும் மழைபோல்வாள் என்று முதன்முதலாக கவிஞர் பாரதிதாசன் அவர்கள் உரை தந்துள்ளார்கள். வள்ளுவர் எவ்வாறு ஒரு பெண்ணை வேண்டியபோது பெய்யும் மழையாக உருவகம் செய்து குறளை எழுதினாரோ அந்த எண்ணக்கருவை வெளிக்கொணர்ந்த பெருமை அவரைச்சாரும். இவரைவிட ஒருபடி உயர்ந்து நின்று முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் குறளோவியம் என்ற நூலிலே இந்தக் குறளுக்குத் தந்த உரை அதிசிறப்பு வாய்ந்தது. அதாவது பிறதெய்வம் தொழாது கண்கண்ட கடவுளாகிய கொழுநனையே தொழா நின்று துயிலெழுபவள் விவசாயி ஒருவன் விரும்பிய போது பெய்கின்ற மழையைப் போன்றவள் என்றார். இதில் உள்ள சிறப்பு என்ன வென்றால் மழையினுடைய அருமை பெருமை அநுபவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்தவன் விவசாயிதான். நெற்பயிர் நீரின்றி வாடி வதங்கிச் சோர்ந்து நிற்கும்போது இதற்கு இப்பொழுது ஒருமழைபெய்தால் நல்லாயிருக்குமே என்று மனதில் நினைத்த உடனேயே மழைபெய்யுமாக இருந்தால் அந்த விவசாயி அடையும் ஆனந்தத்திற்கும் மகிழ்ச்சிக்கும் அளவுகணக்கு இருக்காதோ அதேபோல கணவனுக்கு மகிழ்ச்சிக்குரியவளாக அப்பெண் இருப்பாள என்று கூறியுள்ளார். இரண்டாவது அடிக்கு இவர்கள் இருவரும் தந்த உரை வள்ளுவரின் எண்ணக்கருவை ஓரளவிற்குப் படம்பிடித்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. அதே நேரம் உலக அரங்கிலே பெண்களின் கற்பிற்குச் சவால் விட்டு அவமானப்படுத்தி கேள்விக் குறியாக்கிக் கேவலப்படுத்திய பரிமேலழகர் உரைக்கு முற்றுப்புள்ளி வைத்தும், பெண்களின் கற்பினுக்கு ஏற்பட்ட களங்கம் துடைத்தும், அவர்களின் குனிந்த தலை நிமிரவைத்தும், உலகெங்கும் உள்ள பெண்ணினத்தைக் காத்த பெருமையும், உலகமக்களை உணரவைத்த அருமையும் இவர்கள் இருவரையுமே சாருமென்றால் அது மிகையாகாது.

ஆனால் இக்குறளின் முதலாவது அடிக்குப் பரிமேலழகர் தந்த உரையையே இவர்களும் உரைத்திருப்பது சமகால நிகழ்வுகளோடு ஒவ்வாமை கொண்டுள்ளது. அதாவது பெண்கள் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் ஆலயம் சென்று வழிபடுகின்றார்கள். கூடவே கணவன் மாரும் செல்கின்றார்கள். சொந்த நாட்டில் உள்ள ஆலயங்கள் மட்டுமல்ல தூரதேசங்களில் உள்ள யாத்திரைத் தலங்களுக்குமே குடும்பமாகவும் கூட்டங்கூட்டமாகவும் செல்வது காலம் முழுக்க நடைபெற்று வருகிறது. ஆலய உற்சவகாலங்களிலும் விஷேடவழிபாட்டு நாட்களிலும் கடவுள் மகிமை பற்றியும் வழிபாட்டின் சிறப்புப் பற்றியும், அடியவர் பெருமைபற்றியும் பெண்கள் பேசுவதையும் ஆண்வர்க்கம் அமைதியாக இருந்து கேட்பதையும் நாடறியும் கடல் கடந்த நாடுகளிலும் பெண்ணினம் சமயச் சொற் பொழிவுகள் செய்கின்றமையை உலகறியும். வானொலியிற் பெண்கள் வழங்கும் இறைஉணர்வை வாயுபகவான் தானும் அறிவான். தொலைக்காட்சி ஊடே கொத்தரிக்கும் பெண்குலத்தைக் கதிரவனும் கண்டிருப்பான். வாரந்தோறும் வலம்புரி வழங்கும் நற்சிந்தனையில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் காட்டும் அருளுரையை யாரறியார்? இவை எல்லாம் காலத்தின் பதிவுகளே.

ஆதலினால் பெண்தெய்வம் தொழாதவள் என்று சொல்வது உண்மையல்ல அது ஆண்வர்க்கத்திற்கு அழகும் அல்ல. இதுவரை காலமும் எந்தக் கணவனாவது தன்னையே கடவுளாக் வணங்கும்படி கேட்ட வரலாறும் இல்லை. இனி மேலுந்தான் கேட்கும் நிலைக்கு அவர்கள் வரப்போவதும் இல்லை. திருமணப்பேச்சு ஆரம்பித்த நாளில் இருந்தே அவனை நினைந்து. அவனுக்காக அனைத்தையும் இழந்து. இறுதியில் தன்னையும் மறந்து வாழ்ந்தவன்தான் தமிழ்ப்பெண் என்பதனை

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்ந்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே
- நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்
- தானே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் மணிவாசகரின் திருவாசகம் ஒரு பெண்ணினுடைய மனநிலையையும் வாழ்க்கை முறையையும் நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றது. நின்றும் இருந்தும் கிடந்தும் நினைப்பது அவனையே என்றால் எழும்போது எந்த நினைவோடு எழும்புவாள் என்பது சொல்லிப் புரிய வேண்டியதில்லை. சிறப்பாகக் கூறவேண்டியதைச் சிறப்பாகவும், பொதுவாகக் கூறவேண்டியதைப் பொதுவாகவும் மயக்கமேற்படாதவாறு கூறுபவர்தான் சிறந்த புலவராக இருக்கலாம். இங்கே தொழல் என்ற ஒருபதம் சிறப்பிற்கும் பொதுவிற்கும் வள்ளுவரால் எடுத்தாளப்பட்டுள்ளது. தொழல் என்றால் வழிபடுதல் வணங்குதல் என்று பொருள் வணங்குதல் இரண்டு வகைப்படும். ஒன்று அகவணக்கம் மற்றையது புறவணக்கம்.

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" என வள்ளுவர் ஒரு பெண்ணுக்கு இரண்டு வணக்கங்களை இக்குறள் மூலம் வலியுறுத்திஉள்ளார். பரிமேலழகர் இந்த அடிக்குத் தந்த உரை பொருத்தமற்றது எனப்பலமுறை வலியுறுத்தப்பட்டது. ஆதலால் வள்ளுவர் என்ன நோக்கோடு குறளை எழுதினாரோ அதேநோக்கோடு உரையைப் பார்ப்பது நல்லது. பெண்களுடைய குடும்ப வாழ்விலே பெரும்பாலும் மூன்று வகையான வாழ்க்கை முறையை அவதானிக்கலாம். ஒன்று ஒருபெண் கணவனுடன் சேர்ந்து ஒன்றாக இல்லத்தில் வாழ்வது. இரண்டு ஏதுகாரணத்தினாலோ கணவன் மனைவி பிரிந்து தனித்தனியாக வாழ்வது. அல்லது ஒரு மனையிலேயே ஒருவரை ஒருவர் தீண்டாது வாழ்வது. மூன்று கணவன் தொழில் நிமித்தமோ, அல்லது கல்வியின் பொருட்டோ, அன்றி வேறுகாரணங்களினாலோ தூர நாட்டில் தங்கியிருக்க மனைவி தனித்து வாழ்வது. அல்லது கணவன் சிறையில் இருக்க மனைவி தனித்து வாழ்வது. அல்லது கணவன் இறந்தபின் மனைவி தனித்து வாழ்வது எனப்பல வகைப்படும். கணவன் மனைவி சேர்ந்து வாழுமிடத்து மனைவி கணவனை வழிபடும் முறைக்கும் வேறுபாடு உண்டு. தொழாநின்று எனப்பரிமேலழகர் வலியுறுத்தியுள்ளார். அந்தவகையில் கணவனுடன் சேர்ந்து வாழும் மனைவி கணவனுடைய பாதங்களைத் தொட்டு வழிபடலாம். அல்லது ஏதோ ஒருவகையில் வழிபடலாம். கணவன் மனைவி பிரிந்து வெவ்வேறு இடத்தில் வாழும் போதும், ஒருவரை ஒருவர் தீண்டாத நிலையில் ஒரே வீட்டில் வாழும் போதும், தூரதேசத்தில் கணவன் வாழும்போதும், சிறையில் கணவன் இருக்கும் போதும் கணவன் இறந்து மனைவி தனித்து வாழும்போதும் எப்படி இவர்கள் கணவனின் பாதத்தைத் தொட்டு வழிபடுவது எது எவ்விதம் இருந்த போதிலும் எல்லாப் பெண்களும் கணவனை மனதில் நினைத்துக் கொண்டே அன்றும் வாழ்ந்தார்கள் இன்றும் அதே மனநிலையோடுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். வள்ளுவரும் இதனை நன்றாக உறுதிப்படுத்தியுள்ளார்.

"அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்"

(குறள் : 1160)

"தனியே இருந்து நினைத்தக்கால் - என்னைத்
தினிய இருந்ததென் நெஞ்சு"

(குறள் : 1296)

என்ற குறள்கள் நன்கு விளக்குகின்றது. மனைவி கணவனுக்குச் செய்யவேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துப் பணிவிடைகளையும் செய்து கொண்டு உடலால் ஒருவரைஒருவர் தீண்டாது வாழும் குடும்பங்கள் நாட்டிலே பல உண்டு. ஆனால் பலருக்கும் அது தெரியாது. இதற்குப் பெரியபுராணம் கூறும் திருநீலகண்ட நாயனார் வரலாறு சிறந்த உதாரணமாகும். சிதம்பரத்திலே வாழ்ந்த இந்த நாயனார் ஒருநாள் அவ்வூரிலே ஒரு வேசியிடத்துச் சென்று வீடு திரும்பியதைக் கற்பிலே சிறந்த அவர் மனைவியார் அறிந்துகொண்டார் மனதிலே எழுந்த கோபத்தை அடக்கி இல்வாழ்க்கைக்குரிய எல்லாப் பணிகளையும் அற்றி உடலுறவிற்குமட்டும்இசையாதவராக இருந்தார். நாயனார் எத்தனையோ இரப்புரைகூறி அவரைத் தீண்டப்போம் போது "நீர் எம்மைத் தீண்டுவீராகில் திருநீலகண்டம்" என ஆணையிட்டார். இளமைக்காலம் இடப்பட்ட இந்த ஆணையைக் கடவாது வாழ்ந்து வயோதிபம் உற்றனர். இவ்வடியார் மகிமையை உலகறியச் செய்ய இறைவன் திருவருள் புரிந்து இருவரும் சிவலோகம் அடைந்து பேரின்பத்தை அனுபவித்து வாழ்ந்திருந்தனர் என்று பெருமைப்படுத்தப்பட்டது. கற்புடைய ஒரு பெண்ணால் அவள் கணவன் மட்டுமல்ல இருவருடைய மரபும் சுற்றமும் சுவர்க்கலோகம் செல்வர் என்பதைக்

**"கற்பு மேய கனங்குழை மாதரைப்**
**பெற்று ளோர்தம் மரபும் பெருந்தவக்**
**கற்பி னாட்கொண்ட காதலன் ஆருயிர்ச்**
**சுற்றம் யாவும் துறக்கத்தில் எய்துமால்"**

எனக் காசி காண்டத்தில் வரும் பாடல் வரிமூலம் காணக்கூடியதாக உள்ளது.

ஒரே மனையில் இருந்தவர்களின் வாழ்க்கை முறையும் வழிபடு நிலையும் இத்தகையதென்றால், மனையிலே கணவன்மார் இல்லாது வாழ்ந்து கொண்டிருக்கும் மனைவியரின் வழிபாட்டு நிலை எப்படி அமையும் என்பதுசிந்திக்க வேண்டியதே. இதனை நன்கு சிந்தித்த காரணத்தினாலேதான் கொழுநற் தொழுதெழுவாள் என்று வள்ளுவர் கூறிவைத்தார். கணவனை மனிதிலே நினைத்து வணங்கிக் கொண்டு நித்திரை விட்டெழுவாள் என எல்லாப் பெண்களுக்கும் பொதுவானதும், செய்யக்கூடியதும், செய்து கொண்டிருப்பதுமாகிய அகவணக்கத்தை வலியுறுத்தினார். அடுத்து அன்றும் பெண்கள் ஆலயங்களில் தெய்வவழிபாடு செய்தார்கள் என்பதும், இன்றும் எல்லாப் பெண்களும் தெய்வவழிபாடு செய்கிறார்கள் என்ற உண்மையும் இக்கட்டுரையில் பல இடங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே பெண்கள் பிறதெய்வவழிபாடு செய்வதில்லையெனக் கண்மூடித்தனமாக யாரும் கூறவும் முடியாது. அதையாரும் ஏற்றுக்கொள்ளவும் முடியாது. இப்படி யெல்லாம் பெண்கள் வழிபாடு செய்வது தங்களுடைய நலம்வேண்டியல்ல. கணவனுடையதும் குடும்பத்தில் உள்ளவர்களுடையதும் நலம்வேண்டிய வழிபட்டுவருகின்றார்கள் ன்பதும் நாடறிந்த உண்மை எல்லாவற்றிலும் மேலாக ஆண்டவனே அதை அறிவான்.

குடும்பத்தில் எத்தனை கருத்து முரண்பாடுகள், கவலைகள், மனமுறிவுகள், மனக்கசப்புகள், தகாத செயல்கள் எனப்பல காரணங்களால் பிரிந்து வாழ்ந்தாலும் கூடக் கற்புடைய பெண்கள் கணவன்மாரின் நலன் வேண்டிக் கடவுளை வழிபட்டார்கள் என்பதற்குக் கண்ணகி, சாவித்திரி, நளாயினி, மங்கையற்கரசி, புனிதவதியார் போன்ற பெண்களின் வரலாறுகள் தக்க சான்றாகும். இவர்கள் வழிபட்டிருக்கிறார்கள் என்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் எல்லாப் பெண்களுமே கடவுளை வழிபட்டிருக்கிறார்கள் என்பது சொல்லாமலே புரிந்திருக்கும். நிகழ்காலத்தில் எல்லாப் பெண்களும் ஆலயம் செல்வதும் வழிபாடு செய்வதும் அனைவராலும காணக்கூடியதாக இருக்கும்போது பெண்கள் தெய்வவழிபாடு செய்வதில்லை என்று சொல்பவர் யார்? ஒருவருமே இல்லை. இந்த உண்மையைத்தான் அன்றைக்கே வள்ளுவர் அறுதியிட்டுத் தெய்வம் தொழாஅள் எனக்கூறிவைத்தார். இது பெண்களுக்குரிய புறவழிபாடாகும். கணவனை மனதிலே நினைத்து வணங்கிக்கொண்டு நித்திரை விட்டெழும்பு கின்ற பெண் தனது காலைக்கடன்களை எல்லாம் முடித்துக் கொண்டு வீட்டில் உள்ள சுவாமி அறையிலோ, அல்லது அயலில் இருக்கம் ஆலயத்திற்குச் சென்றோ கணவனின் நலம்வேண்டி வழிபாடு செய்வது பெண்ணினுடைய புறவழிபாட்டுக் கடமையாகும். இதில் இருந்து அவர்கள் என்றைக்கும் விலகியதும் இல்லை. இனி விலகப் போவதும் இல்லை.

அடுத்து இக்குறளின் இரண்டாவது அடியாக அமைந்த பெய்யெனப் பெய்யும் மழை என்பதற்குப் பரிமேலழகரின் உரையின் பிரகாரம் அண்மைக் காலத்திலும் நிகழ்காலத்திலும் எந்தப் பெண்ணாலும் சாதிக்க முடியாமையால் உண்மைத்தன்மை அற்றதென ஓரங்கட்டப் பட்டது. ஆனால் விரும்பிய நேரம் பெய்தமழை எப்படி மகிழ்ச்சியைக் கொடுக்குமோ அதேபோலக் கணவனுக்கு அந்தப் பெண் மகிழ்ச்சிக்குரியவளாக இருப்பாள் என்று பாரதிதாசனார் அவர்கள் கந்த உரையும்; விவசாயி ஒருவன் வேண்டிய நேரத்தில் மழை பெய்தால் அவன் எப்படி மகிழ்ச்சி அடைவானோ அதேபோலக் கணவனுக்கு அந்தப் பெண் மழையைப்போல மகிழ்ச்சி அளிப்பாள் என்று கலைஞரும் எரைதந்துள்ளனர். இவர்கள் இருவரின் உரையினாலும் பெண்குலம காப்பாற்றப்பட்டது. ஆனால் வள்ளுவர் இதைவிட இன்னும் எவ்வளவோ உயர்வாக எண்ணியே அந்த அடியை எழுதியுள்ளார், ஒரு பெண்ணினுடைய பாத்திரம் கணவனுக்கு மனைவியாவதுடன் மட்டும் முடிந்து விடுவதில்லை. அதன்பின்புதான் அவள் பிள்ளைகளுக்குத் தாயாகவும், மருமக்களுக்கு மாமியாகவும், மருமக்களின் பெற்றோருக்குச் சம்பந்தியாகவும், பேரப்பிள்ளைகளுக்குப் பாட்டியாகவும், அயலவர்களுக்கு அநுதாபியாகவும், துறவிகளுக்குத் தொண்டு செய்பவளாகவும், இரப்பவர்க்குக் கொடையாளியாகவும், வீட்டுப்பிராணிகளுக்கு எசமானியாகவும் இன்னும் சந்தர்ப்பத்திற் கேற்ற எத்தனையோ பாத்திரங்களாகக் காட்சி கொடுக்கின்றாள். எனவே இவர்கள் எல்லாம் எதைக் கேட்டார்களோ அதை உடனே கொடுத்தும், எதைவிரும்பினார் களோ அந்தக் காரியத்தை உடனே செய்தும் கொடுக்கின்றபோது அவர்கள் அனைவருக்கும் விரும்பியபோது பெய்த மழையாக அமைகின்றாள். ஒருவரின் விருப்பத்தின் பேரில் மழைபெய்தால் அந்த மழை இன்னொருவருக்கு விருப்பமற்றதாக அல்லது பயனற்றதாக அல்லது கேடுவிளைவிப்பதாகவும் அமையலாம். ஒரு விவசாயி அன்றிப் பல விவசாயிகளின் வேண்டுதலில் பெய்யும் மழைகூட ஏனைய தொழில் சார்ந்தவர்களுக்கு இடர்பாடுடையதாகவும் மாறலாம் ஆகவேதான் அனைவரது வேண்டுதலின் பேரில் பெய்யும் மழை தான் அனைவருக்கும் பயன்பாடுடையதாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவர்மனதிலும் மகிழ்ச்சி உண்டாக்கு வதாகவும், இருக்கும் இதைத்தான்

"நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் - வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லோர்க்கும் பெய்யும் மழை"

என்று மழையினது பெருமையை ஒளவையார் மிக அழகாக எடுத்துக்கூறி உள்ளார். இங்கே மழை பெய்யக் காரணமாக இருந்த நல்லார் ஒருவரும், அவர்பொருட்டால் பெய்த மழையும் வெவ்வேறாகவெ நினைக்கப்படுகிறது மதிக்கப்படுகிறது. ஏனெனில் மழை பெய்து கொண்டிருக்கும்போது மழையைப் பெருமையாக எண்ணி மகிழ்ச்சி அடைகின்றோம். அதே நேரம் நல்லார் ஒருவர் இருந்தபடியால்த்தான் இந்தமழை பெய்ததென்று நம்புகின்றோம். ஆனால் அவர் ஆர் என்பது ஒருவருக்குமே தெரியாது. ஒரு சில நாட்களில் மழையையும் மறந்து எவர்பொருட்டால் பெய்த தென்பது தெரியாமையால் அவரையும் மறந்து இறுதியாக மழையைத்தருபவர் கடவுள்தானே என்று அவரையே காலம்முழுக்க நினைக் கின்றோம், வணங்குகின்றோம்.

ஆனால் வள்ளுவர் பெய்யெனப் பெய்யும் மழை எனக் குறிப்பிடுவது மிகவும் அற்புதமானது. பெண்ணையே மழை ஆகஉருவகித்து விட்டார். அதனால் பெண்வேறு மழை வேறு என்று கருதமுடியாது. மழையானது சில நாட்கள் தான் பெய்ய வேண்டும் அதைத்தான் எல்லோரும் விரும்புவர் நாட்டுக்கும் நன்மை தரும். தினமும் மழை பெய்வதை யாரும் விரும்பமாட்டார்கள். அதுநாட்டிற்கும் கேடுவிளைவிக்கும் ஆனால் வள்ளுவர் குறிப்பிட்ட இந்த மழையோ எல்லோரும் விரும்பும் மழை. எல்லோரையும் மகிழ்கவிக்கும்மழை. தினமும் பெய்ய வேண்டிய மழை பெய்து கொண்டே இருக்கும் மழை. இந்த உலகத்தையே நிலைபெறச் செய்யும் மழை ஒருநாட் பெய்யாவிடினும் கூட உலகெங்கும் பசியும் பட்டினியும் தலைவிரித்தாடும் தயையும் கொடையும் தருமமும் இறையுணர்வும் தடுமாறும். எனவேதான் இந்த உலகை வாழவைப்பது கற்புடைய பெண்ணென்னும் இப்பெரு மழையே என்று மிகவும் ஆணித்தரமாக வள்ளுவர் கூறிவைத்தார்.

இறுதியாக இக்குறளை வள்ளுவர் எந்த எண்ணக்குருத்தோடு எழுதிவைத்தார் என்பதை முழுமையாக ஒருமுறை அவதானிப்பது அர்த்தமுடையதாகும்.

"தெய்வம் தொழாஅள் கொழுநற் - றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

கொழுநன் தொழுது எழுவாள் - கணவனை மனதில் நினைத்து வணங்கிக் கொண்டு நித்திரை விட்டெழும் கற்புடைய பெண் தெய்வம் தொழாஅள் - கணவனதும் மற்றெல்லோரதும்நலம் வேண்டிக் கடவுளை வழிபாடு செய்பவள்; பெய்யெனப் பெய்யும் மழை - எல்லோரும் விரும்பியபோது பெய்த மழையாவாள்.

இதுதான் மனித வாழ்வியலும் வரலாற்று விழுமியமும் என்றால் மிகையாகாது.

"வாழ்க குறள்
வளர்க ஓர் உரை"

ஆய்ந்தோன்
**ஆ. வடிவேலு**
ஓய்வுபெற்ற அதிபர்
அகில இலங்கை வள்ளுவர் கோட்டம் - செயலாளர்,
அகில இங்கை காந்தி சேவாசங்கம் - உபதலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


01. திருக்குறள் பரிமேலழகர் உரை
02. திருக்குறள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் உரை
03. திருக்குறள் குமரேச வெண்பா ஜெகவீரபாண்டியன்
04. திருக்குறள்  உரைக்கொத்து வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமிதம்பிரான்
05. திருக்குறள் உரை ஊ.வே. சாமிநாதஐயர்
06. திருக்குறள் தெளிவுரை டாக்டர் மு.வரதராசனார்
07. திருக்குறள் தெளிவுரை டாக்டர் ம.வி.சுதாகர்
08. திருக்குறள் தெளிவான எளிய உரை தி.ஸ்ரீநிவாசன் எம்.ஏ.எம்எல்
09. திருக்குறள் தெளிவான எளிய உரை இரா.இராமச்சந்திரன்
10. திருக்குறள் எளிய இனிய உரை பேராசிரியர் ப.முருகன்
11. திருக்குறள் புதிய உரை புலியூர்க் கேசிகன்
12. திருக்குறள் புதிய உரை சுஜாதா
13. திருக்குறள் மக்கள் உரை கு.மோகனராசு
14. திருக்குறள் வாழ்வியல்உரை மதுரை இளங்குமரனார்
15. திருக்குறள் மூலமும் உரையும் பேராசிரியர் எம்மார்ட் அடைக்கலசாமி
16. திருக்குறள் பாட்டும் பொருளும் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை
17. திருக்குறள் பாட்டும் கருத்தும் திரு. வி. கலியாணசுந்தரனார்
18. திருக்குறள் பாட்டும் கருத்தும் பேராசிரியர் கோ. சங்கரராசன்
19. திருக்குறள் கோனார் பொன்னுத்துரை
20. திருக்குறள் புதைபொருள் முத்தமிழ்காவலர் கி.ஆ.பெ.விஸ்வநாதம்
21. குளளோவியம் கலைஞர் மு.கருணாநிதி
22. திருக்குறளில் பெண்ணியம் ஆய்வுக் கட்டுரைகள் க.சி. அகமுடைநம்பி
23. தொல்காப்பியம் எழுத்ததிகாரம்
24. கந்தபுராணம்
25. அகநானூறு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிர்வாதம்

வாதவூர் அடிகளின் வாக்குக்கு அமைய ஔவைப் பாட்டியின் கூற்றுக்கு அமைய பிறப்புக்கள் பதினான்கு வகை யெனவும் அதில் அதிக தத்துவம் நிறைந்த எண்ணாகிய ஒன்பதின் மகிமையை புலப்படுத்தும் ஒன்பதாகிய மானிடப் பிறப்பைப் பெற்ற நாம் ஏன் இப்பூவுலகில் பிறந்தோம், என்ன செய்தோம் என்ன செய்கிறோம் என்ன செய்யப்போகிறோம் எனச்சிந்திக்க வேண்டும்.

**"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று"**

என்னும் குறளுக்கமைய ஏதாவது செய்தோமா எனச்சிந்தித்து இனியாவுதல் பொன்னான காலத்தை வீணாக்காது செயல்பட வேண்டும். உயர்ந்த அரிய மேல்ப் பிறப்பாகிய தேவர்கள், முனிவர்கள் அசுரர்கள், கணங்கள், பேய்கள் ஆகியவையும், தாம் செய்யும் தவறுகளினால் அதற்குரிய தண்டனையைப் பெற்று அனுபவித்து விமோசனம் பெறும் பொருட்டு ஆராய்ந்தறியும் ஆறாவது அறிவுடைய அருமையான மானிடப் பிறப்பை பெற்றே நன்னிலை யடைகின்றன. விமோசனம் பெறுகின்றன. அதேபோல் கீழ்ப்பிறப்பாகிய புல் பூண்டு தொடக்கம் கல்வரையுள்ள பிறப்புக்களைப் பெற்று அனுபவித்துப் படிப்படியாக ஈடேறும் பொருட்டு மேல்நோக்கி பெறுதற்கரிய மானிடப் பிறப்பைப் பெற்று ஈடேற வளி சமைக்கின்றன. இந்நிலையிலேயே நாம் மூதோர் சித்தர்கள் அறிஞர்கள், அருளாளர்கள் கூறிய கூற்றுக்கு உரையாளர்களால் கூறப்படும் கருத்துக்களை நாம் அப்படியே ஏற்க்க வேண்டும் என்ற நியதி இல்லை. ஆகவேதான்

**கற்றறிவாளர் கருதிய காலத்து**
**கற்றறிவாளர் கருத்திலோர் கண்ணுண்டு**
**கற்றறிவாளர் கருதி உரை செய்யும்**
**கற்றறி காட்டக் கயலுனவாக்கமே.**

திருமூலர் பாடிய திருமந்திரத்திற்கு அமைய கற்ற நிலைக் கேற்ப தமது கருத்தினை கூறியுள்ளார். அதன்படியே வள்ளுவரின் குறளுக்கு பத்துப் பேர் தமது சக்திக்கேற்ப உரை செய்தனர். பாடல்களைப் பாடிய சித்தர்கள், முனிவர்கள், புலவர்கள், அருளாளர்கள் தமது பாடல்களுக்கு உரை செய்ய வில்லை ஏன் என்பதை சற்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக என்னும் குறளுக்கமைய நாம் செயல் படவேண்டும் உரைகள் உரையாளர்களுக்கேற்ப மாறுபடுகின்றன. எனவே நாம் ஒரு குறளை எடுத்து அதுபற்றி சற்று சிந்திப்போமானால் நன்கு புரியும் அறிய முடியும்.

'மழித்தலும் நீட்டலும் வேண்டா
உலகம் பழித்தது ஒழித்து விடின்"

தவம் செய்வார்க்குத் தலைமயிரை மழித்தலும் சடையாக்கலும் ஆகிய வேடம் உயர்ந்தோர் தவத்திற்கு ஆகாதென்று குற்றம் கூறும் கூடாவொழுக்கத்தை கடிந்து விடின் தலைமயிரை மொட்டை அடித்தலும் தாடி வளர்த்தலும் சடையாக்கலும் வேண்டாம் எனின் குளைப் பாடிய வள்ளுவரின் தோற்றத்தை எப்படிச் சித்தரித்தனர். அவருக்கு உச்சிக்குடுமி, தாடி இரண்டும் உண்டு அல்லவா. ஆகவே இக்குறளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை சற்று ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். மழித்தல், நீட்டல் என்பவை செயற்கைச் செயல்பாடே, இயற்கைச் செயற்பாட்டிற்கமையவே வள்ளுவரின் உருவம் சித்தரிக்கப்பட்டள்ளது என்பதை நாம் அவதானிக்க வேண்டும். சிந்திக்க வேண்டும். இந்த நிலையில் அவர் தாடி வளர்க்கக்கூடாது என்று கூறியிருக்க முடியாது. இயற்கைக்கு மாறுபாடாக செயற்கைச் செயற்பாடு வேண்டாம் என்று கூறியிருப்பார் போலும், புலவர்கள், பாவவர்கள் பாடும்போது தனித்து அன்றி இருபாலர்களையும் சேர்த்தே பாடுவர். அதன்படி மற்றவர் கேலி செய்வர்கள் பழிப்பார்கள் என்பதற்காக இயற்கையாக வளரும் தாடியை மழித்தும் பெண்கள் இயற்கையா உள்ள கூந்தல் காணாது என எண்ணி முடிமயிர் வைத்து நீட்டுகின்றனர். மற்றவர்பழிக்காது விட்டால் ஆண்கள் மழிக்கவும் வேண்டாம். பெண்கள் நீட்டவும் வேண்டாம். எமது சிந்தனைக்காகவே பாடல்கள் பாடிய புலவர்கள் சித்தர்கள் முனிவர்கள் அருளாளர்கள் தங்களின் பாடல்களுக்கு உரைசெய்யவில்லைப் போலும், காலத்திற்கேற்ப நாமே நன்கு சிந்தித்து தெளிந்து செயற்பட வேண்டும் என்பதற்காக எனத்தோன்றுகிறது. இப்படியான சிந்தனையாளர்களை செயல்படுபவர்களைத் தொடர்ந்து சமூகத்திற்கு தமிழுக்கு சமயத்திற்கு பல வழிகளில் அரும்பணி ஆற்ற வேண்டி நாம் ஆசிர்வதிக்க வேண்டும். அல்லவா, அப்படி ஆசிரிவாதம் கொடுப்பவர் எப்படிப் பட்டவராக இருக்க வேண்டும் எனச்சிந்திக்க வேண்டும். நெஞ்சிலே வஞ்சகம், சூது கரவு போட்டி, பொறாமை அற்றவராக இருதயசுத்தியுடையவராக நல்ல உள்ளம் படைத்தவராக அறிவாற்றல் உடையவராக வயது வந்த பூரண நிலையை அடைந்தவராக அருள் ஆட்சியுடையவராக இருத்தல் சிறந்தது. இப்படியானவர்கள் ஆசிர்வதிக்கும் தத்துவ ரீதியில் ஆசிர்வதிப்பர். ஆசிர்வாதம் இருவகைப்படும். ஆலயத்தைப் பிரதட்சணம் செய்யும்போது அவர்கள் தகமை நிலைக்கேற்ப வலப்பக்கம் இடப்பக்கம் என இருவகையில் செல்வர்.

**அருளில்லார்க் கவ்வுலகமில்லை**

**பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லையாங்கு...** என்னும் குறளுக்கு அமைய இராகு கேது, தாம்பெற்ற சாபத்த நீக்கும் பொருட்டு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து அவ்வுலகம் வேண்டி இடது பக்கமாக பிரதட்சணம்செய்து வணங்கி சிவபூசை செய்ததின் காரணமாக மேல்நிலையடைந்ததுடன் அமிர்தம் உண்டு அருள் பெற்றமையால் கிரகநிலையில் இடம்பெற்றமையால் சப்ததகிரகங்களுடன் இணைந்து நவக்கிரகங்களாகின. இவர்களுக்கு சொந்தவீடு கிடையாது. சூரியனுக்கு ஒருவீடு (சிங்கம்) சந்திரனுக்கு ஒருவீடு - (கடகம்) மாகவும் செல்வாய்கிரகத்திற்கு 2 வீடும் (மேடம், விருட்சிகம்) புதனுக்கு மிதுனம், கன்னியாகிய இருவீடுகளும் குரு பகவானுக்கு தனு, மீனம் ஆகிய இரு வீடுகளும், சுக்கிரபகவானுக்கு இடபம் துலாம் ஆகிய இருவீடும், சனிஸ்வரனுக்கு மகரம் கும்பம் ஆகிய இருவீடுகளும் உண்டு. ஆனால் இராகு, கேது ஆகிய இருவரும் அமிர்தம் உண்டமையால் கிரக நிலைக்கு வந்தமையால் சொந்த வீடு இல்லாதநிலை யாருடைய வீட்டில் இருக்கிறார்களோ அவர்களின் செயற்பாடே இவர்கள் செய்யமுடியும். சூரியன், சந்திரன், செவ்வாய், புதன். வியாழன், வெள்ளி, சனி, ஆகிய ஏழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகங்களும் வலதுபக்கமாகவும் இராகு கேது ஆகிய இருவரும் இடதுபக்கமாகச் சுற்றுவதை சாதகங்களில் காணலாம். பஞ்சாங்ககங்களில் பார்த்தால் புரியும்.

அது போலவே நன்மையான விடயங்களுக்குப் பூரண கிரிகையும் தீமையான விடயங்களுக்கு அபர கிரிகையும் செய்வர். இப்படி கிரிகை செய்யும் இடங்களில் மாவிலை, தோரணம் கட்டுவர், அபரகிரிகை செய்யும்போது மாவிலை புறம்நோக்கியும் தோரணம் பின்னும் போது விண்ணோக்கியும் பின்னிக்கட்டுவர். பூர்வகிரிகையின் போது தூபதீபம் வலதுபக்கமாகவும் அபரகிரிகைக்கு இடது பக்கமாகவும் காட்டுவர், இதன்படி பூமியில் பூரணமாக ஆண்டனுபவிக்க வேண்டியவர்களுக்கு பூர்வக்கிரியையும் ஆண்டனுபவித்து விமோசனம் பெற்று மேற்பிறப்பை அடையும் பொருட்டு மேல்நோக்கிச் செல்பவர்களுக்கு அபரகிரிகையும் இப்பூமியின்கண் எல்லாச் சிறப்புக்களையும் பெற்று வாழ வேண்டியவர்களை உச்சியிலிருந்து பாதம் நோக்கியும், (சிலர் சிரசில் மட்டும்) மேலிருந்து பூமியை நோக்கியும் சகலதையும் ஆண்டனுபவித்தவர்களுக்கு மேல்நோக்கியும் (பாதத்திலிருந்து தலைவரையும்) ஆசிர்வதிப்பர்.

பூமியில் வாழ வேண்டியவர்களுக்கு ஆசிர்வதிக்கும்போது ஆசிர்வதிப்பவர் தங்கள் நிலைக்கேற்ப அறுகு - அரிசியாலும் மலர்களாலும், சிவசின்னமாகிய விபூதியாலும் அருட்கரங்களாலும் ஆசிர்வதிப்பர். இறந்தவர்களுக்கும் இறக்கும் தறுவாயில் இருப்பவர்களுக்கும் பாதத்திலிருந்து தலையை நோக்கி ஆசிர்வதிப்பர். மணமக்களை ஆசிவதிக்கும்போது உச்சியிலிருந்து பாதம்வரையும் அல்லது சிரசில் மட்டும் அறுகரிசி இட்டு ஆசிர்வதிக்கலாம். இறந்தவர்களுக்கு பாதத்திலிருந்து மேல்நோக்கி படிப்படியாக வாயில் வாக்கரிசி இடலாம். தவறின் வாயில்மட்டும் இடலாம். மணமக்கள் சகல சீர்சிறப்புப்பெற்று இன்பமாக வாழும் படியும் இறந்தவர்களின் ஆவி சாந்தி அடையும் படியும் ஆசிர்வதிப்பர்.

**கானமயிலாட கண்டிருந்த வான்கோழி**
**தானுமதுவாக தன் பொள்ளாச் சிறகை**
**விரித்தாடுவது போல்** மற்றவர் செய்கிறார் என்பதால் தாமும் செய்ய வேண்டும் என எண்ணி செய்யக்கூடாது.

செய்யும்போது அதன் பொருளுணர்ந்து தத்துவம் அறிந்து செய்ய வேண்டும். அப்படிச் செய்யின் அதில் பலன் உண்டு. சிறப்பைத் தரும், மற்றும் படிபலனும் இல்லை சிறப்பும் இல்லை காலமும் பணமும் சிரமமும் வீண்பயன்.

இறையருள் யாவருக்கும் கிடைக்கப் பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளின் பாதை

திருத்தில்லைத் தலத்துத் தோன்றல் வழியினர் யாழ்ப்பாணம் வடமராட்சிப் பருத்தித்துறைசார் தும்பளையூரரும், புலோலி பசுபதீசுரர் ஆலய குருவழியினரும் அவர்தம் உதிரத்தோன்றதுமான ஸ்ரீ சபாபதி ஐயருக்கு மங்களம்மாவின் பால் மங்களமான மகப்பேறு பெற்றவர் சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

17.02.1875ல் ஜனனம் இடம் பிராமண ஒழுங்கை, பெருவெட்டி, தும்பளை (பிற்காலத்தில் கலாநிதி அழுத்தக் ஒழுங்கை)
தக்கவயதில் உபநயனம்

மகாதேவக்குருக்களிடம் (பாட்டனாரிடம்) ஏடாரம்பம் வடமொழி தென்மொழிப் புலமை அவரிடம் கற்றுணர்ந்து ஆரிய திராவிட மகாபண்டிதர் பிரமஸ்ரீ முத்துக்குமார சுவாமிக் குருக்களிடம் தமிழிலக்கணம், இலக்கியம், வடமொழித் தருக்கம், வியாகரணம், சோதிடம் முதலியவை ஐயம் திரிபறக் கற்றுணர்ந்தனர். வடமொழிச் சோதிட "சித்தாந்த சிரோன்மணி, சூரிய சித்தாந்தம் முதலாயவற்றைத் தமிழிலுள்ள சோதிட, கணித நூல்கள் முதலாய பலவற்றையும் ஆராய்ந்து அத்துறை போந்தவரானார். இதன் நுண்மாண் நுழைபுலப் பேராண்மையால் சாஸ்திரிகள் எனும் அடையைப் பெற்றார்.

மேலைப்புலோலிச் சைவ வித்தியாசாலை ஈராண்டுவரை இவரின் ஆசிரிய சேவையால் பயனுற்றது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பல பஞ்சாங்கள் கணிக்கப்பட்ட பொழுதிலும் சில கால வர்த்தமான சம்ஸ்காரங்களுக்கு ஈடு இலாமை கண்டு அக்குறை நீங்க பருத்தித்துறையில் ஆண்டுதோறும் (1894 / 95 ஐ ஆண்டில் இருந்து) வெளிவந்தது.

அடுத்து "சாதகரத்னாகரம்", பாலசிக்ஷாமஞ்சரி, சம்ஸ்கிருத பாலபாடம், இருதுசாதகம், சிவராத்திரி மகிமை முதலியவைகள் பதித்து வெளியிட்டனர். 1904ன் பின் பதிப்பகம் தம் சொந்தமாக கலாந்தியந்திரசாலையில்" தமிழ், சமஸ்கிருதம் ஆங்கில எழுத்துக்கள் சகிதம் விஸ்தரித்துப் பதிப்பு வேலைகளைச் செவ்வென நடத்தினர்.

இவர்தம் இரு மொழிப்புலமைகள், சாஸ்திரநுண்ணிதம், சைவசித்தாந்த ஆழுமை; நன்னூல்களும் நல்லாசிரியர் தகைமை; ஆறுமுகநாவலர் கந்தபுராணக்கலாசார புராணபடன விதி தவறா தொழுகும் பெற்றி முதலியவற்றை அறிந்த சைவப்பெரியோர் பலர் இவரது உரைவன்மையை கண்டு கேட்டு நயந்து வியந்து யாவரும் பயனுறவேண்டிக் கந்தபுராண உற்பத்திகாண்டத்திற்கு உரையைப் பகுதி பகுதியாக எழுதுவித்தும் முழுவதுமாக்கியும் பதிப்பிக்க ஊக்குவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கால மதுரைத் தமிழ்ச்சங்கத் தொடர்புறு தொண்டுசால் புலவரும் புரவலரும் ஆய திருவாளர் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் உடன், தமிழிலக்கியம் மறைந்தொழிந்து போகாது தன் வாழ்நாளை சென்னைப் பிரசிடென்சிக் கல்லூரித் தமிழ்ப்பண்டிதரும் டாக்டருமாய உ. வே. சாமிநாதையர் அவர்களும் எம் சாஸ்திரிகளின் விருத்தி உரை சொற்பணிகண்டு தெளிவும் அமைப்பும் பதவுரைப் பாங்கும் அவர்களை ஈர்த்துவிட இப்பணியைப் பூரணமாகச் செய்து தரல் வேண்டுமென்று ஊக்குவித்ததன் பலனால், அடுத்த காண்டங்களாகிய அசுர காண்டத்திற்கும்.

மகேந்திர காண்டத்திற்கும் முழுமையாக எழுதுவித்து நூல் உருவாக்குவித்தனர். முதலாம் ஐரோப்பிய மகாயுத்தக் குறுக்கீட்டால் 4வது யுத்தகாண்ட உரை இடையில் நின்றுவிட்டது. பகுதிதான் வெளியாகியது.

பிள்ளையார் புராணம், உரை, நீதிவெண்பாவிரிவுரை, கந்தருனுபூதி உரை, ஏகாதசிப்புராண குறிப்பு, சொற்பொருள் விளக்கக் கையடக்க தமிழ் அகராதி முதலியவை செய்தும்; கோவில்களில் புராண படன உரை, விளக்கவுரை, விரிவுரை செய்தும், கேட்போர் எத்திறத்தவராயினும் மனம் கொண்டு உவக்குமளவு இலகுவாய், இனிமையாய் தெளிவாய் மனதிற்கு ஆனந்தமாக வசனிக்கும் வசனிப்பின் வசீகரம் அவர்க்கு அவரே நிகர். அவர் கசடறக் கற்று அதற்குத் தக நின்றவர்.

அவரின் வாழ்வியல், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சபாபதி நாவலர், குமாரசாமிப்புலவர் போன்றோரைப் படியெடுத்தது எனின் மிகை இல. அவரின் விளக்கம், சமய சம்பிரதாயத் தெளிவு ஏன் சைவசித்தாந்தக் கருவூலம் சிவானுபரவாகிய அவரின் வாய்சொல்லமிர்தம் அவர் தெருவெல்லாம் மணக்கும் செவிமடுத்தோர் தெவிட்டா இன்பில் திழைப்பர். இவர் சொற்பிரயோக சுவைக்கு வடமொழிப் பாண்டித்தியம் கைகொடுத்ததில் வியப்பில.

திருநெல்வேலி ஞானப்பிரகாச சுவாமிகளின் வடமொழி சிந்தாந்தப் பிரமாண நூலாகிய பிரமாண தீபிகை விருத்தி, சிவஞானபோத விருத்தி சிந்தாந்த சிந்தாமணி முதலாய நூல்களை நல்லூர் த. கைலாசபிள்ளையவர்கள் அச்சிடுவதற்குப் பிழையறப் பரிசோதித்து பிரம்மஸ்ரீ ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்களுடன் எம் சாஸ்திரிகளும் உடன் இருந்து பரிசோதித்தமை; "ஆபஸ் தம்ப அபரப்பிரயோகம்" எனும் வடமொழி நூலைப் பரிசோதித்தமையும் (இதைப் பதிப்பித்தவர் சங்கானை அண்ணாசாமிக் குருக்கள் என்னும் அருணாசலச் சாஸ்திரிகள் ஆவர்) அந்நூல் முகவுரை கூறியுள்ளது. நால்வேதம் ஆகமம் (பிரதானமானவை) முதலியவை மக்கள் மனமறியக் கற்குமுகமாக "வித்யா விருத்தி நூல் நிலையம்" தன் இல்லத்தமைத்துத்தேக்கி வைத்து அறம் செய்யத் தரும சாதனம் செய்ததை அவ்வூரவர் இன்றும் மறவார்.

ஆரிய திராவிடபாசா அபிவிருத்திச்சங்கம் முகாஸ்திரம் சாதசிவஐயர் (1882 - 1950) அவர்களால் நிறுவப்படுகின்றது. அவர் கலாநிதி என்ற சஞ்சிகையையும் ஆசிரியராக இருந்து வெளியிடுகிறார். அவர் சுங்கப் பரீட்சகராக பல்லாண்டுகாலம் எம்சாஸ்திரிகள் பரீட்சைகளுக்குப் பரிசோதகராக இருந்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் பஞ்சாங்கப்பணி 1927 ல் இருந்து இவரின் அபிமானத்திற்குரிய இவரின் நெறியுட்டப்பட்ட வைத்யநாத சாஸ்திரிகள் அவர்களுக்கு அவர்தம் பஞ்சாங்கக்கணிப்பு, மூகூர்த்த நிர்ணயச் சிறப்புகள் கண்டு அவருக்கு உத்தரவு கொடுத்து அவரைக்கொண்டு ஆவன செய்வித்தார்.

இவர் மனைவி மண்ணுலகை அதே ஆண்டு விட்டகன்றார். இவர் மாமனார் பிரம்மஸ்ரீ. ம. முத்துக்குமாரசுவாமிகள் 1935 ல் தேகமுகுத்துச் சிவபதமடைகிறார். இவரின் அபிமான சோதிடக் கணிப்புனர் வைத்தியநாதர் சாஸ்திரிகள் தாம் திருட்டாந்தம் கூறியவாறு யாரும் கண்டுகொளமுடியாவகை நாடகன்றார். பெறமகன் பிரிவு சாஸ்திரிகளைப் பாதித்தது உண்மை. எனினும் அவ்வாண்டுப் பஞ்சாங்கப்பணி நடைபெற்றது. பின் அவர் நோய் அவரின் தம்பியரின் மனைவி முதலியோரின் இறப்பு பேரிழப்பாக சோமசுந்தரக்குருக்களின் ஊக்கக்குறைவால் பஞ்சாங்கப்பதிப்பு உதவிகள் குறைய நின்றேவிட்டது.

விரோதி ஆண்டு (1949 / 2 இல்) மார்கழியில் சாஸ்திரிகளும் எம்மைவிட்டகன்றாலும் அச்சகம் அழிந்து போயினும் சந்ததி இல்லாமையால் அவர் பணிகள் தொடரமுடியாமல் போயினும் கந்தபுராண உற்பத்தி காண்ட, அசுர காண்ட, மகேந்திர காண்ட உரைகள் உள்ளவரை; ஆரிய திராவிட பாசா அபிவிருத்திச் சபை இருக்கும்வரை; யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம் இருக்கும்வரை அவர் தம் உரை நன்றிமறவா அறநெறியாகி யாழ்.மண்ணில் சிவநெறியே இருக்கும் என்பது திண்ணம்.

கந்தபுரா ணம்உள்ள காலம்எம் சாஸ்திரிகள்
நந்தா விளக்காக நின்றொளிர்வர் - அந்தக்
கணமும் சுத்திபெறக் கற்றுணர்ந்த வாறு
தாரணமாம் இன்றெம் தவம்.

சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்களின் "சோமாஸ்கந்தராஜ தரிசனம்" நூலுக்கு இவ்விடயம் தர எனதன்புக் குருக்களுக்கும், எமக்கும் இருந்த பலவாண்டு ஆன்மிகத் தொடர்பூடு ஏற்பட்ட கல்விப்பரிமாற்றமோ; கல்விப்பரிமாற்றத்தாலேற்றப்பட்ட ஆன்மிகத் தொடர்போ ஓர் அற்புதத் தொடர்பு நீரடித்து நீங் பிரியாச் சம்பந்தமாக்கி உள்ளத்து நிகழ்வுகளின் நெகிழ்ச்சிகளாக நிழலாடுகின்றது. அவர் ஓர் நிறைகுடம். அது அறமாய் நன்றியாய் என்றும் நிலைக்கக் கடவது.

இவண்
வ. ஆ. தங்கமயில்
LICENSED SURVEYOR,
LEVELLER.
AMSST LONDON, LSI
B.A. SRILANKA
சித்தாந்த பண்டிதர், சைவ புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தமதானசற்குருவின் பாதையில்

பால் மணம் மாறாத பாலகனாய் அகவை நாற்பதுகளை தாண்டி பக்குவமும் முதிர்ச்சியும் மிக்க குருவாக, கல்வியியல்லாளனாக இன்று காணும் ஒருவரைப் பற்றிய நினைவுகளை மீட்டுப்பார்ப்பதற்கு எனக்கு வயதில்லை. ஆனால் அவற்றையெல்லாம் சிறியதொரு கட்டுரை வடிவிலே வடிந்துவிடுவது எளிதான செயலன்று. தெளிவு குருவின் திருமேனி காண்டல், அவர் திருநாமம் செப்பல், திருவார்த்தை கேட்டல், சிந்தித்தல் என்கின்ற திருமூலரின் திருமந்திர அடிகளை இவ்விடத்தில் நினைவு கூர்ந்து அவரது குருப்பட்ட வாழ்வு சமய வளர்ச்சியில் பதித்த முத்திரை, யாது என்பதை இவ்விடத்திலே குறிப்பிடப்பாலது எனது கடன்.

சிவபூமி என திருமூலரால் வழங்கும் ஈழமணிதிருநாட்டில் ஆதிசைவ குலத்தில் சைவநெறிசாயாது, சிவம் வளர்க்கும் செந்தமிழும் சிறந்தோங்கும், கலைவளம் மிகுந்த யாழ்ப்பாணத்தின் வடக்கே இலட்சுமணன் தோட்டப் பகுதியில் தியாகராஜாக் குருக்களுக்கும் அவர்தம் பத்தினி இராஜலட்சுமியம்மாவிற்கும் பூர்வ புண்ணிய பயனால் சிறப்புமிகு சோமாஸ்கந்தராஜாக்குருக்கள், விஜலட்சுமி, வேதையா, வியோமகேசர், நகுலேஸ்வரன், அமிர்தகடீசர், இராமையா, வரலட்சுமி, நவலக்சுமி ஆகியோர் வந்து தவழ்ந்தனர். நவநிதிகள் போல் மிளிர்ந்தனர். ஆனாலும் வாழ்க்கையில் விதிவிளையாடியது அன்பும் அறமும் பெற்று வாழ்ந்து வரும் இளமைப்பருவத்திலே தருவேஸ்வரன், இராமையா, நவலக்சுமி, அபிர்தகடீசன், வேதையா ஆகியோர் விதியென்னும் சுழியில் அகப்பட்டு இறைபதம் அடைந்தனர். (1963.4.24) அன்று தோன்றிய நன்மகனே கண்ணன் ஐயா என செல்லமாக அழைக்கப்படும் சோமாஸ்கந்தக்குரு அவர்கள்.

**சோமையாவின் ஆரம்பக்கல்வி - உயர்கல்விப்பின்புலங்கள்.**

அகவை ஐந்து நிரம்பிய ஐயா அவர்கள் பள்ளிப்பருவத்திலே கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக யா/ தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் பெற்று இவரது ஆரம்பக்கல்விக்கு உரமூட்டியவர்கள் இன்று அமரராகி விட்டார்கள். அவ்வரிசையில் கல்லூரி அதிபர்களாக விளங்கிய சிவஞானசுந்தரம், கணபதிப்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சிறிய தந்தையார் சோமசுந்தரம் போன்றோரையும் நன்றியோடு நினைவுகூருகின்றார் ஐயா அவர்கள்.

இடைநிலைக்கல்வி, உயர்கல்வியினை பெறுவதற்காக தன்னை யாழ் புதிய உயர்கல்லூரியில் அருள்நங்கையின் வழிகாட்டலில் இணைத்துக்கொண்டார். க.பொ. த. உயர்தரம் கற்று பல்கலைக்கழக வெளிவாரி மாணவனாக தன்னை அர்ப்பணம் செய்து (1990) களில் கலைமானிப்பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். இக்காலப்பகுதியிலே இதற்கு முன்னதாக நெல்லண்டைப் பத்திரகாளி ஆலய பூசகராகவும் தன்னை இணைத்துக்கொண்டார்கள். 1993 இல் பட்டதாரி ஆசிரிய நியமனம் பெற்று ஆலயகுருவாகவும் அதேசமயம் வித்தியாலய குருவாகவும் சேவைபுரிந்து நன்மாணாக்கர் பலரை உருவாக்கிய சிற்பியாகவும் மிளிர்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லாசிரியர் ஆகின்றார்.**

1990 இல் பொதுக்கலைத்தேர்வில் சித்தியடைந்து தனது ஆசிரிய கற்பித்தல் பணியினை (1993 - 1996) யா/ குடத்தனை அ.த.க. பாடசாலையிலும் (1996 - 1997) பின் அம்பன் அ. த. க. பாடசாலையிலும் பின் யா/ ஹாட்லிக்கல்லூரியிலும் (1998 - 2008) பின் மீண்டும் குடத்தனை அ.மி.த.க. பாடசாலையில் (2008.04.07) பாடசாலை முதல்வராகவும் பணியில் இணைகின்றார்.

**இல்லறத்தில் நல்லறம்.**

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கு
நல்லாற்றில் நின்ற துணை"

குழலினிது யாழினிது என்பர் - தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர் - என்ற

வள்ளுவத்தினை நினைவு கூர்ந்து வாழ்ந்து வருபவர். தன் ஆருயிர்துணைவியாக புவனேஸ்வரியம்மாவைக் கரம்பிடித்து பிரபாலினி, ஜீவிதனி, தனஞ்சயன், சங்கீர்த்தனி, சிற்பவன் ஆகியோரை மழலைச் செல்வங்களாகப் பெற்றுக்கொண்டார். பிரபாலினி அண்மையில் மணவாழ்வு கண்டு இனிதே வாழ்ந்து வருகின்றார். ஏனையோர் கல்வித்துறையில் சிறப்புற்று விளங்குகின்றனர்.

**தமிழியல் முதுமானி ஆகின்றார்.**

"யாதாயினும் நாடாமல் உளராமல் என்தனாருவன்
சாந்தொருவன் கல்லாதவாறு" என்ற வாய் மொழியின் உண்மையை உணர்ந்து வாழ்வை செம்மைப்படுத்தியவர், செம்மைப்படுத்துபவர் தனது தொழில் சார்வான்மையை வளர்த்தல் பொருட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வியியல் டிப்ளோமாவையும் பின் மதுரை காமராசர் பல்கலையில் தமிழியல் முதுமானிப்பட்டப்படிப்பையும் நிறைவு செய்தவர் ஆகின்றார். இதற்கு உரமூட்டியவர்களாக திருமதி அருள்நங்கை சண்முகநாதன், பேராசிரியர் சபாஜெயராசா, அ. சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி கண்மணி ஆகியோர் விளங்குகின்றனர்.

**குருப்பட்டம் பெற்று குருசேவை ஆற்றல்**

1983 இல் வணக்கத்திற்குரிய சிவபாதசுந்தரக் குருக்களிடம் குருப்பட்டம் எனும் குருப்பட்டத்தினைப் பெற்று தந்தைவழிப் பரம்பலாக நெல்லண்டை பத்திரகாளி ஆலய அர்ச்சகராக முப்போதும் அம்பாளின் திருமேனி தீண்டி அர்ச்சிக்கும் பாக்கியம் பெற்றவராக இவரை கருதவைக்கிறது. இன்று இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு பெறும் வேளையிலும் ஏனைய சைவாலயங்களின் மகோற்சவ, கும்பாபிஷேக கிரியைகளை நியமம் தவறாது ஆற்றி வருபவர். தொண்டர் குலமே தொழுகுலம், சாதி இரண்டொழிய வேறு இல்லை. கற்றோர் உயர்ந்தோர் கல்லாதவர் இழிகுலத்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்ற மகுட வாக்கியங்களுக்கு ஏற்ப ஏனையோர் பின் நிற்கும் வேளையிலும் செல்வனே தனது பணியினை ஆற்ற முன்வருபவர். ஆலயத்தோடு இணைந்து நாவலர் வழியிலே பிரசங்கமரபு, ஊஞ்சல் பா இயற்றுதல், திருமறைகள் ஓதல் முதலிய அரிய பணிகளையும் செய்து வருகின்றார்.

### மாந்திரீகவித்துவத்தில் சிறப்பு நிலை.

அதர்வண வேதம் கூறும் மாந்திரீகதந்திரங்கள், வினைநீக்கம், பார்வை பார்த்தல், வெற்றிலை போடுதல் முதலாய வழக்கங்களையும் ஏனையோர் புகழும் வண்ணம் செய்து வருகின்றார். இதிலிருந்து விடுதலை பெற்றவர்களாக பலர் விளங்குவதனையும் காணமுடிகின்றது. எனவே வேதங்கள் கூறுகின்ற ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறு கடமைக்கு முத்திரை பதித்தவராக இவரைக் குறிப்பிடமுடிகிறது.

### நூலாசிரியராக அமர்தல்

அறுவகை சமயநெறி, வேதங்கள், ஆலயவழிபாடும் தத்துவமும், கோயிற்கிரியைகள், சைவகுலதீபம், முதலாய நூல்களை வெளியிட்டு வெளியீட்டாளராகவும் இவர் அமைந்து காணப்படுகின்றார். மேலும் சமூகத்தில் தீண்டாமை எனும் புற்றுநோயை ஒழிப்பதற்காக பாடுபடும் செம்மலாகவும் இவரைக் கருத முடிகிறது. சக்தி உபாசராக பூசை ஆற்றும்போது பகவான் இராமகிருஷ்ணரைப் போன்று இவரும் அம்பிகையோடு ஒன்றித்து நிற்பது போல் இருக்கும். பக்திவலையில் நம்மையெல்லாம் கொண்டு வீழ்த்தும் அரிய பூசைநெறியினை இவரிடத்தில் இன்றும் காணமுடிகின்றது.

கடமையாவன தன்னைக்கட்டுதல், பிறர்துயர் தீர்த்தல் பிறர் நலம் வேண்டல், அறம், பொருள், இன்பம், வீடு எனும் முறையே தன்னையாரும் சமர்த்தெனக்கருள்வாய் என பாரதி வேண்டுவது போன்று உலகெலாம் ஓர் பெருங்கனவு அஃதுளே உண்டு உறங்கி இடர் செத்திடும் கலக மானிடப்பூச்சிகள் வாழ்க்கையோ கனவிலுங் கனவாகும் என்ற பாடலடிகள் இவ்விடத்தில் சிந்திக்கத்தக்கன.

எனவே நல்லதொரு பண்பாளன், புரட்சியாளன், நூலாசிரியன், கல்வியாளன், சக்தி உபாசகன் என பல வேறு நியமங்களிலே இவரை இவரது ஆளுமைப்பணியினை நாம் வகையீடு செய்ய முடிகின்றது.

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்..

**அனுசரணை**
**தும்பளை நாவலடி சக்தி அம்மன் ஆலயம்**
**தும்பளை மனோன்மணி அம்மன் ஆலயம்.**

**மகேசு பங்கயன்** [B.A.(Cey)]
**மகேசு பகீரதன் (தும்பளை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி

நவம் என்பது ஒன்பதைக் குறிக்கும். இவ்வெண் மற்ற எண்களைவிட மிகவும் அதிசயமும் சக்தியையும் கொண்டது. இவ்வெண் விகடகவிபோல் வேறு எந்த எண்ணுடன் கூடக்கூட்டினால் அதே எண்தான் வரும். வேறு இரு எண்களைக் கூட்டினால் அதன் கூட்டுத்தொகை வேறு எண்ணாக வரும். உதாரணம் $9+5=14=5$. இதேபோல் வேறு இரு எண்களைக் கூட்டினால் $7+4=11=2$ ஆகவே வேறு எண் வருகின்றது. இதிலிருந்து ஒன்பதின் மகிமை வெளிப்படுகின்றது. அன்றியும், கிரகங்கள் ஒன்பது. இரத்தினம் ஒன்பது, சக்தியும் ஒன்பது. நவசக்திகளுக்காக ஒன்பது இரவுகள் நவராத்திரி விழாவாகக் கொண்டாடுகிறார்கள். இவ்விழா வருடத்தில் ஒருமுறைதான் பெருவிழாவாகக் கொண்டாடப் படுகிறது. ஆனால் இவ் நவராத்திரி வருடத்தில் ஆறுமுறை வருகிறது. இருமாதங்களுக்கு ஒரு முறையாக சித்திரை வைகாசி ஆகிய இரு மாதங்களும் சேர்ந்து வசந்த நவராத்திரி எனவும்; தொடர்ந்து கிஷ்ம, வருஷ; சர; ஹேமந்த; சிசிர என ஆறுவகையாகும். இவற்றில் சித்திரையில் வரும் வஷந்த நவராத்திரியும், புரட்டாதியில் வரும் வருஷ நவராத்திரியுமே விஷேசமானது. அதிலும் எல்லா மக்களாலும் அதிவிசேடமாக புரட்டாதி (கன்னி) மாதத்தில் வரும் நவராத்திரியே கொண்டாடப் படுகின்றது.

நவராத்திரி ஒவ்வொன்றும் வளர்பிறைப் பிரதமை தொடக்கம் நவமி வரையுள்ள ஒன்பது திதிகளும் விரதமிருந்து கொண்டாடி தசமித் திதியில் பாரணம் செய்வார்கள்.

சிவனுக்கு ஒரு இராத்திரி (சிவராத்திரி)யும், சக்திக்கு ஒன்பது இராத்திரி (நவராத்திரி)யும் ஆகும். சிவன் ஒடுக்குவதைக் குறிக்கும். சக்தி (அம்பாள்) பெருக்குவது (பரப்புவது) ஆகும். இது பரப்பிரமமாகும். ஒரு விதையிலிருந்து ஒரு மரம் உண்டாகி வளர்ந்து பல கனிகளைக் கொடுக்கிறது. இக்கனிகளின் விதைகளிலிருந்து எத்தனையோ மரங்கள் உற்பத்தியாகின்றன, பரவுகின்றன. ஆகவேதான் ஒடுக்கநிலைக்குச் சிவன் எனவும், பெருக்க நிலைக்குச் சக்தி (அம்பாள்) எனவும் கொள்ளும் நிலை. சிவமும் சக்தியும் இணைந்த நிலையில் சிவசக்தி லிங்கம் + ஆவுடையார் இரண்டும் சேர்ந்த நிலையில்தான் சிவலிங்கத்தை அமைத்து பூசிக்கின்றனர். சிவபூசை, தவம், ஜெபம் ஆகியவற்றிற்கு சிவலிங்கத்தையே பிரதிஷ்டை செய்து வணங்குகின்றனர். சிவலிங்கத்திலிருந்து பல சீவன்கள் சீவாத்மாக்களை உற்பத்தியாக்கும் மாயையே மகாசக்தியாவாள்.

எல்லா மாக்களாலும் விசேடமாகக் கொண்டாடப்படும் வருஷ நவராத்திரி புரட்டாதி மாதத்தில் வரும் பூர்வபக்கப் பிரதமை தொடக்கம் நவமி வரை கொண்டாடப் படுகிறது. இப்புரட்டாதி மாதத்தை கன்னி மாதம் என்றும், மாயை மாதம் என்றும் கூறுவர். இம் மாதத்தில் வரும் அமாவாசைத் தினத்தன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திதி தெரியாமலோ, திதியைத் தவறவிட்டோ மற்றும் எமது பரம்பரைப் பிதிர்கள் அனைத்திற்கும் சேர்த்துத் திவசம் செய்வர். சூரியன் கன்னி இராசியில் நிற்கும் காலத்தில்தான் யாவருக்கும் பகிர்ந்தளிக்கப்படுவதாகக் கூறுவர். இன்னும் பல காரணங்கள் உண்டு. அவற்றில் சிலவற்றைப் பின்னால் கூறுவோம்.

இந்த ஒன்பது இரவும் தினமொரு சக்தியாக, ஒன்பது சக்தியாக வழிபடுவர். அதிலும் முதல் மூன்று சக்திகளையும் சேர்த்து வீரம் வேண்டி துர்க்கா பூசையாகவும், அடுத்துவரும் மூன்று சக்திகளையும் சேர்த்து செல்வம் வேண்டி இலக்குமியாகவும், அடுத்த மூன்று சக்திகளையும் சேர்த்து கல்விஞானம் வேண்டி சரஸ்வதியாகவும் எண்ணிப் பூசை செய்வர். இறுதி பத்தாம் நாள் இவ்வொன்பது சக்திகளையும் சேர்த்து மகாசக்தியாக வழிபட்டு வெற்றிவிழாவாகக் கொண்டாடுவர். ஒன்றில் ஆரம்பித்து ஒன்பதாகப் பெருக்கமடைந்து, ஒன்றும் பூச்சியமும் சேர்த்து பத்தாக வெற்றிவிழாக் கொண்டாடப் படுகின்றது.

ஒன்று என்பது ஆரம்பத்திற்கு காரணமாக அமைகின்றது. 0 என்பது பெறுமதியற்றதுபோல் காட்சியளித்தாலும் அதன் பெறுமதியே இணையற்றது. அது இணையும்போது அபாரமாகிறது. ஒன்றுக்கு பத்தில் அருகாமையில் அமரும்போது பத்தாகிறது. இங்கு ஒன்று சிவமாகவும் 0 சக்தியாகவும் காட்சியளிக்கிறது. இதை நாம் சிவத்தைத் தலைவனாகவும், சக்தியைத் தலைவியாகவும் காட்சியளிப்பதைக் காணப்பதால் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் உரிய சிவலிங்கமாக வழிபடுகின்றோம்.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தனர். அமிர்தம் பெறுவதற்காக மேருமலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் பாவித்து, ஒருபுறம் தேவர்களும், மறுபுறம் அசுரர்களும் நின்று கடைந்தனர். அமிர்தம் திரண்டுவரும் நேரத்தில் நோ தாங்கமாட்டாது வாசுகி விசத்தைக் கக்கியது. இதனால் கக்கிய விசம் அமிர்தத்துடன் கலந்து கலந்து பெருக்கெடுத்தது. இதனால் தங்களை அழித்துவிடும் என அஞ்சி தேவர்களும், அசுரர்களும் அஞ்சி சிவனிடம் காப்பாற்றும்படி சரணடைந்தனர். சிவன் தன்முன்னால் இருந்த கண்ணாடியை (பளிங்குச்சுவர்) பார்த்தார். அங்கே அவரின் விம்பம் தோன்றியது. அவ் விம்பத்தைப் பார்த்த சிவன் ஆக என்ன சுந்தரம் (அழகு) சுந்தரா என அழைத்தார். அங்கு சுந்தரர் தோன்றினார். உடன்சென்று ஆலகால விசத்தை எடுத்துவா என்று கூறினார். உடனே சுந்தரர் சென்று வாசுகி கக்கிய விசம் அனைத்தையும் ஒன்றுதிரட்டி எடுத்துவந்து சிவனிடம் கொடுத்தார். சிவன் அவ்விசத்தை தன்வாயில் போட்டு விழுங்கினார். இதனைக்கண்ட சக்தியாகிய உமாதேவி விசம் உட்சென்று தன் நாயகனைக் கொன்றுவிடும் என்று எண்ணி சிவனின் கழுத்தை நெரித்துப்பிடித்தார். இவர் கழுத்தை நெரித்துப் பிடித்தமையால் விசம் மேலே செல்லாமல் கழுத்திலேயே தங்கியது. விசம் அமிர்தமாக மாறியது. கழுத்து நீல நிறமாக மாறியது. கறைக்கண்டன், திருநீலகண்டன் என்னும் நாமம் உண்டாயிற்று. தனது நாயகனின் அளவுகடந்த அன்பின் நிலையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டும்பொருட்டுத்தான் பெண்களுக்குத் தாலிகட்டும் நிலை உருவாகியது. தாலி கணவனின் உயிரைப் பாதுகாத்து அவனுக்கு ஏதும் நிகழாவண்ணம் அன்னை பராசக்தி பாதுகாப்பாள் என்பதை ஞாபகமூட்டும். கணவனுக்குத் தீங்கு நிகழும்போதும், தீங்கு செய்யும்போதும் ஞாபகமூட்டுவதே பெண்கள் கழுத்தில் அணியும் தாலியாகும்.

அன்பின் உறைவிடம், கருணையின் இருப்பிடம் என்று போற்றும் தாய் தனது குழந்தையை அரவந்தீண்டும் நிலையைக் கண்டதும் பாய்ந்து சென்று பாம்பை அதன் கழுத்தைப்பிடித்துத் தூக்கி எறிந்து குழந்தையைப் பாதுகாக்கிறாள் எனின் அவளுக்கு எங்கிருந்து வீரம் வந்தது. கூக்குரல் இட்டால் மற்றவர்கள் வரமுன் அரவம் தீண்டிவிடும். அடித்துத் துரத்தவோ அல்லது கொல்லவோ எனில் தடிதேடி எடுக்கமுன் அரவம் தீண்டிவிடும் எனவேதான் எதையும் சிந்தியாது தானே பாம்பைப்பிடித்தாள். பிடிக்கும்போது அது தன்னையும் தீண்டாதமுறையில் அதன் கழுத்தைப்பிடித்தாள்; தூக்கி எறிந்தாள். இங்குதான் வீரம் அடங்கியிருந்து வெளிப்படுகின்றது. ஆகவேதான் வீரத்திற்குரிய சக்தியை பராசக்தியாக, காளியாக, தூர்க்காவாக முதல் மூன்றுநாளும் வணங்குகிறோம். வீரத்தை வேண்டிப் பராசக்தியை ஒவ்வொரு இடங்களிலும் வெவ்வேறு நாமங்களுடன் மனோன்மணியாக, மீனாட்சியாக, காமாட்சியாக, விசாலாட்சியாக, அபிராமியாக, காந்திமதியாக, திரிபுர சுந்தரியாக, கற்பகமாக, பார்வதியாக, உமாதேவியாக, முத்துமாரியாக, மகமாரியாக, மகாகாளியாக, வீரமாகாளியாக வழிபடுகின்றனர். துர்க்கை என்பது துர்க்கம் எனின் உறுதி வலிமை என்பதே. அகழி எனின் கோட்டையைச் சுற்றி அகழி அமைத்திருப்பார்கள். இதை ஜலதுரக்கம் என்றும், அக்கினியைச் சுற்றிவர அமைத்திருந்தால் அக்கினி துர்க்கம் என்றும், இதுபோல் சுற்றிவர காவலுக்காக எதை அமைக்கிறார்களோ, உருவாக்குகிறார்களோ அவற்றின் பெயரால் அழைக்கப்படும், வழங்கப்படும்.

தாமரைஇலை நீர்போல தளம்பாது உறுதியாக வலிமையாக இருப்பதே வீரம் நிறைந்தது. கலங்கித் தெளிந்து உறுதியாக நிலைக்கு வரவேண்டும். இந்நிலையை வள்ளுவர் பெருமான் ''எண்ணியாங் கெய்துப எண்ணியார், கிண்ணியராகப் பெறின்"(67ம் அதிகாரம் 6ம் குறள்) வேண்டியதை இஷ்டப்பிரகாரம் வழங்கக் கூடியவள் பராசக்தி. துர்க்கைக்குப் பத்துக் கரங்களும், சரஸ்வதிக்கு எட்டுக்கரங்களும் இவை இரண்டையும் சேர்த்து மகாலட்சுமிக்கு பதினெட்டுக் கரங்கள் கொண்டவளாகக் காட்சியளிக்கின்றாள். துர்க்கையாக கைடதர் என்னும் அசுரர்களை வதம் செய்தாள் துர்க்காவான சண்டீஸ்வரி. அம்பாள் தாமதகுணமுடையவள். கோபம் வரும்போது இந்நிலையை அடைகிறாள். கோபம் ஆறியதும் கருணைபொழியும் கண்களையுடைய அம்பாள் அன்பின் அடிப்படையாக இஷ்டப்பிரதாபியாக வேண்டிய வரங்களை வாரி வழங்கும் உரிந்திர இராணியாக, ஜெகன் மாதாவாக, அன்னை பராசக்தியாகக் காட்சி தருகிறாள். பிரமதேவனுடன் மூத்தவளாகவும், மகாவிஷ்ணுவுடன் சேரும்போது புஷ்பரூபினியாகவும், உருத்திரனுடன் சேரும்போது உரித்திரராணியாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்படுகிறாள். இந்நிலையிலேயே நவராத்திரி காலத்தில் முதல் மூன்று தினங்களும் துர்க்காபூசை நடைபெறுகிறது. உணவைச் சமைப்பதற்கும், அவ்வுணவைப் பரிமாறுவதற்கும் அவ்வுணவை உண்பதையும் குறிப்பது படைத்தல். அவ்வுணவைப் பரிமாறும் வரை எதுவிததீங்கும் ஏற்படாது காவல் செய்வதைக் குறிப்பது காத்தல். அவ்வுணவை உண்டுமுடிப்பதை இல்லாமல் செய்வதைக் குறிப்பது அழித்தல். இவை படைத்தல், காத்தல், அழித்தலுக்குச் சமனாகும். இவையாவற்றிற்கும் மூலப்பொருள் ஒன்றே. கற்பப்பையில் கர்ப்பம் உற்பத்தியாகி வளர்கின்றது. அப்பிள்ளை சுகமாக வளர்வதற்கும், சுகமாக உணவு உள்ளெடுப்பதற்கும் கர்ப்பப்பையில் நீர் இருக்கிறது. பூமி ஆகிய பூமாதேவி சகல ஜீவராசிகளையும் தன் கர்ப்பப்பையில் வைத்து (பூகர்ப்பம்) அடக்கி அவை சுகமாக வாழ்வதற்கு நீர் (கடல், ஆறு, சமுத்திரம், குளம், குட்டை) உருவாக்கிப் பாதுகாத்து வருகிறாள். பூமாதேவி புவனத்திற்கு அதிபதியாக இருப்பதால் புவனேஸ்வரியாகவும், பவானியாகவும், நாராயணியாகவும், நீலியாகவும், கறைக்கண்டனுக்கு (களை - நஞ்சு; கண்டம் - கழுத்து) மூத்தவளாகவும் மூவா முகுந்தனுக்கு இளையவளாகவும் காட்சியளிக்கிறாள் பூமகள்.

அன்னை பராசக்தி மஹாலட்சுமியாக தடாகத்தில் செந்தாமரை மலரில் நின்று செல்வத்தைக் கொடுக்கிறாள். அன்னை மகாலட்சுமி தடாகத்திலுள்ள செந்தாமரை மலரில் நிற்பதால் அழகு. மலர் காலத்தில் இதழ்களை உதிர்த்திவிடும். ஆனால் நடுவே இருக்கும் காய் சிறிதுகாலத்தில் முற்றி விதைகளைத் தரும். தாமரை மலர் வளர்வதற்கு நீர் தேவை. தடாகத்தில் நீர் உண்டு. ஆகவே செந்தாமரை மலரின் நிலைஅழகு நிலைப்பதில்லை என்பதையும், செல்வம் நிலையற்றது என்பதையும் குறிக்கும். தடகாத்திலிருப்பதால் நீருக்கு குறைவில்லை என்பதைக் குறிக்கும். மலரிலிருந்து விதைகள் உண்டாவதால் ஓரிடத்தில் நிலைக்காது பல இடங்களுக்கும் பரவிப் பெருகும் என்பதைக் குறிக்கும். யானைக்குத் தீனிபோட்டு அண்டாது என்பர். இருபக்கமும் யானைகள் இருப்பதால் உணவுக்குப் பஞ்சமில்லை என்பதைக் குறிக்கும். எனவேதான் செல்வத்திற்கு அதிபரி மகாலட்சுமியே.

ஆச்சிரம வாழ்க்கை என்பது தினமும் யாசித்து உண்பதுவே. அது அரசிளங்குமரனும்சரி, ஆண்டியாகினும் சரி, அறிஞனாகினும் சரி, எந்த இனத்தைச் சேர்ந்தவனாயினும் சரி யாசித்து உண்பதும், இறைவழிபாடும் குருத்தொண்டுமே ஆகும். ஆதிசங்கராச்சாரியார் ஆச்சிரம வாழ்க்கைத் தொடங்கி யாசித்து உண்டு வந்தார். ஒருநாள் காலையில் ஏகாதசிக்கு அடுத்ததினம் துவாதசித்தினம் யாசிக்கச் சென்றார். பிச்சை கேட்டார், அளவு கடந்த வறுமையின் கொடுமையில் வாடிய அக்குடும்பத்திலிருந்த அம்மணி நேற்றுமுழுவதும் பட்டினியாகவிருந்து இன்றுகாலை விரதம் முடிப்பது அல்லவா. என்ன செய்வது உணவு கொடுப்பதற்கு வீடு முழுவதும் ஓடி ஓடித் தடவினாள். ஒன்றுமே கிடைக்கவில்லை. இறுதியில் ஒரு நெல்லிக்கனி கிடைத்தது. அதைக்கொண்டுவந்து கொடுத்துவிட்டு தன்நிலையை நினைந்து வேதனைப்பட்டாள். அழுதாள், நில்லாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்துவிட்டாள். அந்தத் தாயின் நிலையை உணர்ந்த சங்கராச்சாரியார் மகாலக்சுமியை நினைந்து தோத்திரம் பாடினார். என்ன அதிசயம் பொன்மாரி பொழிந்தது. வறுமையின் கொடுமையிலும் மனம் தளராது உறுதியுடன் நம்பிக்கையின் அடிப்படையில் இருதய சுத்தியுடன் வழிபட்டமையால் இந்நிலை கிடைத்தது. ஆச்சிரம வாழ்க்கை இருவகையாகும். யாசகன், அஜாகன்ஆகும். யாசகன் எப்போதும் யாசித்தே உண்பான். அஜாகன் யாசியாது போகுமிடத்தில் கிடைக்கும், அகப்படும் உணவுப்பொருட்களைக் கொண்டு சமைத்து உண்பான். யாராவது விரும்பி, தேடிக்கொண்டுபோய் கொடுக்கும் உணவுப்பொருட்களை மறுக்காது வாங்கிச் சமைத்து உண்பான். எங்கும் தேடி யாசிக்கமாட்டான். தெய்வகடாட்சத்தால் இவர்களுக்கு பசிப்பிணி வாட்டுவதில்லை. அகங்காரம் அழிந்துவிடும்; அறிவு மேலோங்கும். துர்க்கை தனது வாகனமாக சிங்கம் புலி ஆகிய வீரமுள்ள காட்டு விலங்கையே ஏற்றுள்ளாள். இது அவளின் வீரத்தைக் குறிக்கும். மகாலட்சுமியோ தனது இருக்கையை செந்தாமரை மலராக ஏற்றுள்ளாள். இது அழகு, குளிர்மை, செல்வம் முதலியவற்றைக் குறிக்கும். சரஸ்வதியோ தனது இருக்கையை கல்லாகவே ஏற்றுள்ளாள். இது கல்விச்செல்வம் என்றும் அழியாது நிலைத்து நிற்பதைக் குறிக்கும். துர்க்கை, மகாலட்சுமி ஆகியோரின் கையில் ஆயுதங்கள் உண்டு. சரஸ்வதியின் கையிலோ யாழ், செபமாலை, ஏடு போன்றவை உண்டு. ஆயுதமில்லாத தெய்வமாக வழிபடும் தெய்வம் சரஸ்வதி ஒன்றே. படைத்தல் கடமையைச் செய்யும் பிரமதேவரின் சக்தியாக சரஸ்வதியாகவும், அறிவு ஞானத்தைக் கொடுப்பவளாகவும், காத்தல் கடமைசெய்யும் மகாவிஷ்ணுவின் சக்தியாக மகாலட்சுமியும் விளங்குகின்றாள். இவள் உயிர்வாழ்வதற்கு செல்வம் வழங்குபவளாக இருக்கிறாள். நரகாசுரன் தாயாகிய மகாலட்சுமியால் அன்றி வேறு எவராலும் மரணமேற்படாத வரத்தைப் பெற்றிருந்தான். இவள் தான்பெற்ற வரத்தினால் ஆணவச் செருக்கடைந்து மூவுலகையும் தன்னாட்சிக்குக் கொண்டுவந்ததுடன் தேவர்களைத் தன்னடிமையாக்கிக் கொடுமைபுரிந்து வந்தான். இக்கொடுமைகளைத் தாங்கொணாத தேவர்கள் திருமாலிடம் முறையிட்டனர். துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்து வருபவர்கள் எல்லாம் என்னுருவங்களே. காத்தல் கடமையை நிறைவேற்றும் பொருட்டு நகராசுரனைச் சங்காரம் செய்யும்பொருட்டு ரதத்தில் போர்க்கோலம்கொண்டு ஏறினார். அவரின் சக்தியாகிய மகாலட்சுமி ரதத்தைச் செலுத்த போர்முனைசென்று போர் செய்தார். தனக்குச் சற்றும் சளைக்காது போர்செய்யும் அவ்வசுரனின் நிலையைக் காணவேண்டி ஞானதிருஷ்டியால் பார்த்தார். அவனை அவனின் தாயாகிய சக்தி ஒருத்தியாலன்றி வேறெவராலும் கொல்லமுடியாது என்று உணர்ந்த அவர் மயங்கி வீழ்வதுபோல் மயக்கநிலை அடைந்தார். இதைப்பார்த்த தேரோட்டிவந்த மகாலட்சுமிக்கு கோபாவேசம் ஏற்பட்டு கையில் வில்லம்பு எடுத்து சரமாரியாக அம்புகளைச் செலுத்தினார். விதிவசப்படி அவளின் அன்பு அவனது மார்பில் பாய்ந்தது. தான் செய்த தவத்தின் மகிமையையும் விதிவசத்தால் தனக்கேற்பட்ட ஆணவச் செருக்கும் அறிவிழந்து செய்தவற்றை உணர்ந்து, தாயின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி மன்னிப்புக் கோரினான். அம்மா தாயே! இவ்வளவு காலமும் எனது அகங்காரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டால் மக்கள், தேவர் அனைவரும் இருள் சூழ்ந்த துன்பத்தை அனுபவித்தனர். ஆகவே துன்பமெல்லாம் நீங்கி இருளகன்று ஆனந்தமாக வாழவேண்டி இன்றைய தினம் புனித நீராடிப் புத்தாடை புனைந்து ஞானஒளி பெறும் பொருட்டு தீபங்கள் ஏற்றி வழிபடும்படி வேண்டிக்கொண்டான். அப்படியே அவனுக்கு வரம் கொடுத்து ஆட்கொண்டாள். அவனுடைய வேண்டுகோள்படி இன்றைய தினத்தை தீபத்திருநாளாக தீபமேற்றி வழிபட்டு நன்னிலை அடைவோம். நரகாசுரனுக்குக் கொடுத்த வாக்குப்படி அன்னை பராசக்தி அவனின் வேண்டுகோளுக்கமைய அருள் பாலிப்பாள்.

சரஸ்வதி கையில் செபமாலை வைத்திருப்பது ஜெபம், தியானம் செய்வதால் இறைவனிடம் வரங்களைப் பெறலாம் என்பதை அறிவுறுத்துகிறது. அசுரர்கள் கடும் தவம், ஜெபம் செய்தே பிரமதேவரிடம் பலவிதமான பெறமுடியாத வரங்களைப் பெற்றார்கள். இவர்களின் ஜெபதவத்தில் இரங்கி பிரமதேவர் தோன்றினால் வரமளிக்காமல் விடமாட்டார். ஆகவே பிரமதேவரை நினைத்து ஜெபம், தவம் செய்பவன் நிச்சயம் வரம்பெற முடியும் என்பதை அவரின் சக்தியே உணர்த்துகிறார். இது தாயின் கருணையுள்ளமாகும். அவரின் அருகில் மயில் இருக்கிறது. இது இனிய நடனம், அழகு, கவர்ச்சி மனோகரமான கால சூழ்நிலையைக் காட்டுகின்றது. யாழ், வீணை ஒலியைக் கேட்கும் பிராணிகள் மட்டுமன்றி மரம் செடிகொடிகள் கூட செழிப்பாக வளர்ந்து காய்த்துக் குலுங்கும்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

என்னும் திருப்பதிகத்திலிருந்து சரஸ்வதி இருக்கும் இடம் எல்லாம் அமைந்திருக்கும். ஆகவேதான் ஆணவமின்றி, அதிகாரமின்றி அன்பு, அறிவு, ஆதரவு, இனிமை அனைத்தையும் உள்ளடக்கியே சரஸ்வதிதேவி தோற்றமளிக்கிறாள்; அருள் பாலிக்கிறாள். இவை எல்லாவற்றிற்கும் மூலமாக நவசக்திகளான மகாசக்தி ஆதிபராசக்தியே காட்சியளிக்கிறாள். ஆகவே இருதய சுத்தியோடு நவசக்தியாக விளங்கும் ஆதிபராசக்தியை வணங்கி ஜெப, தவ தொண்டுகள் செய்து உய்வோமாகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமாஸ்கந்தராஜ தரிசனவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி -IV

## சோமாஸ்கந்தராஜா தரிசனவியல்

## சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் ஆற்றிய சமூகப்பணிகள்:

| | | |
|---|---|---|
| 1. | இந்து மாமன்ற ஆலோசகர் | 1984.04.06 - 1997.07.31 வரை |
| 2. | தென்றல் உதவுகரம் | 1983 - 1994 வரை |
| 3. | மாணவர் பொதுப்பணி மன்றம் | 1984 -1995 வரை |
| 4. | அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டம் (தலைவர்) | 1993.12.10 இன்றுவரை |
| 5. | நெல்லண்டை பத்திரகாளியம்மன் வழிபடுவோர் சங்கம் | 1988.09.18 - 2001.07.31 வரை |
| 6. | அகில இலங்கை காந்திசேவா சங்கம் (யாழ்ப்பாணம் செயற்குழு உறுப்பினர்) | 2000 - இன்றுவரை |
| 7. | அகில இலங்கை சைவசித்தாந்த பண்டிதர் சங்கம்(பொருளாளர்) | 2001 - 2003 வரை |
| 8. | சைவ வித்தியா அபிவிருத்தி சமய திட்டப்பணிப்பாளர் | 2000 - 2002 வரை |
| 9. | நெல்லண்டை ஸ்ரீ வீரமாகாளி ஸ்ரீ வடபத்திரகாளி அம்மன் தேவஸ்தான ஆதீன கர்த்தா | 2001.05.27 - இன்றுவரை |
| 10. | நெல்லண்டை பத்திரகாளியம்மன் ஆலய பிரதமகுரு | 1983.05.23 - இன்றுவரை |
| 11. | நெல்லண்டையான் வெளியீட்டுக்கழகம் (உரிமையாளர், ஸ்தாபகர்) (சமய பிரசாரங்கள், வெளியீடுகள், சஞ்சிகைகள், நூல் வெளியீடுகள் ஆகியன பிறவும்) | 1993.09.04 - இன்றுவரை |
| 12. | தந்தைவழி வைத்தியம் | 1988 - இன்றுவரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 13. | சோதிட குருமார் பிரம்மஸ்ரீ<br>சதாசிவக்குருக்கள் (மட்டுவில்)<br>ஸ்ரீமான் உயர்திரு<br>ச.கு. அம்பலவாணப்பிள்ளை (தும்பளை)<br>(ஓய்வுபெற்ற ரயில் நிலைய அதிகாரி)<br>ஸ்ரீமான் உயர்திரு சோமசுந்தரம்<br>(ஆத்தியடி) பிரபல சோதிடர் | 1983 - இன்றுவரை |
| 14. | சமஸ்கிருத மொழி வல்லமை<br>கோயில் குருத்துவம்<br>பிரம்மஸ்ரீ சதாசிவ குருக்கள் சிட்சாநிபூண<br>(மட்டுவில்) நியாய சிரோன்மணி பிரம்மஸ்ரீ<br>சுப்பிரமணிய சாஸ்திரிகள் பிரம்மஸ்ரீ<br>நாராயண சாஸ்திரகள்) | 1980 - இன்றுவரை<br>(சமஸ்கிருத குருமார்) |
| 15. | குருப்பட்டாபிசேகம் | (1983.09.04) தீட்சாகுரு<br>கிரியா வித்தகர்<br>சிவஸ்ரீ கந்த சிவபாதகந்தகுருக்கள்<br>(மயிலிட்டி தெற்கு) |
| 16. | அகில இலங்கை சைவகுருமார்<br>அர்ச்சகர் சங்கம் | 1983 - இன்றுவரை (உறுப்பினர்) |
| 17. | அகில உலக சைவக்குருமார்<br>அர்ச்சகர் பேரவை ஒன்றியப்<br>பொருளாளர் | 1995 - இன்றுவரை |
| 18. | இந்துக்குருமார் ஒன்றியம்<br>பருத்தித்துறை கிளை பொருளாளர் | 1990 - 1997 வரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழாநாயகனின் கல்வித் தகைமைகள் :

- 1980 O/L 1982 , 1984 A/L
- 1990 பேராதனை பல்கலைக்கழகம் கலைமாணி (B.A)
- 2000 , 2002 யாழ். பல்கலைக்கழக கல்வியியல் டிப்ளமோ
- 2000 சைவ சித்தாந்த பண்டிதர் யாழ்ப்பாண சைவபரிபாலனசபை
- மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் 2002 - 2004 முதுகலைமாணி (M.A TAMIL)
- யாழ் பல்கலைக்கழக 2007 - 2008 FGS/MA/RP/2007/34 முதுகலைமாணி பிரதேச திட்டமிடல் (Regional planing student)

## குருத்துவ சேவை விபரம்

- 1970.08.24 சமயதீட்சை யா/குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை சமய தீட்சாகுரு சிவஸ்ரீ கந்தையா குருக்கள் தியாகராஜாக்குருக்கள் (தகப்பன்) 1972.01.18 சிவதீட்சை நாகர்கோவில் பெரியதம்பிரான் ஆலயம் சிவதீட்சாக்குரு தியாகராஜக்குருக்கள் (தகப்பன்) நெல்லண்டை பத்திரகாளிஅம்மாள் தேவஸ்தான உதவி அர்ச்சகர் 1972 - 1983.05.23 வரை.

1983.05.23 தொடக்கம் 1983.09.04 வரை தந்தையயார் நெல்லண்டை பத்திரகாளியம்மன் பூசைப் பொறுப்புகளைக் கையளித்தார்.1983.09.04 அன்று சிவஸ்ரீஸ்கந்த சிவபாத சுந்தரக்குருக்கள் அவர்களால் குருப்பட்டம் பெற்றார்.

1983.09.04 அன்று 10ம் ஆண்டு குருப்பட்ட நிறைவுவிழா பருத்தித்துறை பார்பந பத்தினி மண்டபத்தில் 'ஆலய வழிபாடும் தத்துவமும்' நூல் வெளியீட்டுடன் நடைபெற்றது. இதனை நெல்லண்டையான் கழகம் செய்தது. 2008.09.04 வியாழக்கிழமை குருப்பட்டாபிசேக 25வது வருட நிறைவு வெள்ளிவிழா நடைபெற்றது இதனது வெள்ளிவிழா மலர் வெளியீடு நெல்லண்டையான் வெளியீட்டுக்கழகம் யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலத்தில் குருக்கள் அவர்களின் வித்தியா குருமார் சிவாச்சாரியார் குருமார் ஆசிரியர்கள் மாணவர்கள் அன்புநிறை நண்பர்கள் ஆர்வலர்கள், அன்பர்கள், அறிஞர்கள், சான்றோர்கள், உறவினர், அயலார் மத்தியில் (22.01.2009 இன்று பெருவிழா நடைபெற்றமை)

## ஆசிரிய சேவை விபரம்

- யா/குடத்தனை அ.த.க பாடசாலை 1993.09.01 - 1996.0427
- யா/அம்பன் அ.த.க பாடசாலை 1996.0428 - 1997.12.31
- யா/ஹாட்லிக்கல்லூரி 1998.01.01 - 2008.03.31
- யா/குடத்தனை அ.மி.த.க பாடசாலை (அதிபர்) 2008.04.01 - இன்றுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக்குருக்கள் (கண்ணன் ஐயா) பெற்ற பட்டங்களும் வழங்கியவர்களின் விபரமும்:

1. அன்னை அருளாளர் - தும்பளை தெற்கு மக்கள் சார்பில் திருவள்ளுவர் சனசமூக நிலையம்
2. சிவாகம உபதேச வாசஸ்பதி - கிளிநொச்சி இந்துமாமன்றம் 1995
3. அருட்பிரபாகர சீலர் - காந்தியூர் கண்ணகை அம்மன் தேவஸ்தானம்
4. அருளுரை வேந்தன் - பூவற்கரை பிள்ளையார் தேவஸ்தானம்
5. சைவ சித்தாந்த சாகரம் - மந்திகை கண்ணகை அம்மன் தேவஸ்தானம்
6. அன்னையருட் செல்வர் - வியாபாரிமூலை நாச்சியார் தேவஸ்தானம்
7. திருவருட் செல்வர் - வியாபாரிமூலை நாச்சிமார் தேவஸ்தானம்
8. சிவாகம வித்தியா பூசணம் - உத்திராவத்தை ஞானவைரவர் தேவஸ்தானம் (கலாநிதி வேதநாதன்)
9. இலக்கிய மகுடம் - தும்பளை தெற்கு மனோன்மணி அம்மன் தேவஸ்தானம்
10. சக்தி உபாஷக தீரர் - மித்திரன் அம்மன் தேவஸ்தானம்
11. ஆசிரியமணி - சிறிஸ்கந்தராஜா செயளாலர் நெல்லண்டை பத்திரகாளியம்மன் தேவஸ்தானம்
12. சொற்பொழிவு நாயகன் - வியாபாரிமூலை இன்பருட்டி பிள்ளையார் தேவஸ்தானம்
13. அம்பிகை வாசன் - பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்களால வழங்கப்பட்டது
14. சைவசித்தாந்த பண்டிதர் - சைவபரிபாலன சபை (2000)
15. சித்தாந்தசாகரி - மந்திகை கண்ணகை அம்மன் தேவஸ்தானம்
16. சித்தாந்த சேகரம் - மாதனை கண்ணகி அம்மன் தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 17. | பெரியபுராண சொல்வாருதி | - | வீரபத்திரர் தேவஸ்தானம் (வியாபாரிமூலை) |
| 18. | ஓங்கார தரிசனரூபன் Prof சபா ஜெயராஜா | - | இணுவில் (செகராஜா பிள்ளையார் தேவஸ்தானம்) |
| 19. | கிரியாக்கிரம ஜோதி | - | சிவஸ்ரீ இ. பாலகிருஷ்ண குருக்கள் (கொம்மான்துறை மனோன்மணி அம்மன் தேவஸ்தானம்) |
| 20. | கும்பாபிசேக துரந்தரர் | - | சதாசிவ குருக்கள் (மட்டுவில்) |
| 21. | செந்நெறிப்புரவலர் | - | அவ்வொல்லை பிள்ளையார் தேவஸ்தானம் |
| 22. | சமய சாதனா செந்நெறியாளன் | - | பிரத்தியங்கிரா தேவஸ்தானம் தும்பளை மேற்கு |
| 23. | குருமணி | - | மாற்கண்டு சுவாமிகள் மானிப்பாய் முருகன் தேவஸ்தானம் |
| 24. | சிவாச்சாரிய திலகம் | - | அகில உலக சைவக்குருமார் சம்மேளனம் சார்பாக சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணி தேசிகர் அவர்கள் |
| 25. | அருட்பிரபாகர சாகரம் | - | தும்பளை தெற்கு நாவலடி சக்தியம்மன் தேவஸ்தானம் சார்பாக திருவருட்ஜோதி ஆ.வடிவேலு ஓய்வுபெற்ற அதிபர் நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. நந்தகுமார் அவர்களால் பாராட்டப்பெற்றது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் விழாக்கள், பிரசங்கங்கள்

1. 17.01.1999 (தை அமாவாசை) அபிராமிப்பட்டர் விழா கிரியையும் பிரசங்கமும்
2. பன்னையம்பதி பிள்ளையார் கோவில் 19.12.1993 விடயம் (சுழி)
3. வல்வெட்டித்துறை மானாங்கனை மகோற்சவம் (12.07.2005)
4. வல்வெட்டித்துறை மானாங்கனை தீர்த்த உற்சவம் (21.07.2005) தொடர்சொற்பொழிவு - (தேவிமகிமை)
5. 2001 - 2008 வரை தும்பளை நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம் வீரமாகாளியம்மன் அலங்கார உற்சவம் , தொடர் சொற்பொழிவு

| | | |
|---|---|---|
| விழாக்களின் தத்துவம் | - | 2001 |
| கிரியைகளின் தத்துவம் | - | 2002 |
| தேவி பாகவதம் | - | 2003 |
| தேவி மான்மியம் | - | 2004 |
| திருமுறைகளின் பெருமை | - | 2005 |
| மகாபாரதம் | - | 2006 |
| திருவிழாக்களின் தத்துவம்(27) | - | 2007 |
| அன்னைதயை (சமஸ்காரம்) | - | 2008 |

6. 07.04.2001 "சித்தாந்த சாகரம்" பட்டம் மாதனை கண்ணகை அம்மன் கோவில் வழங்கியது - சுரேஸ்வர குருக்கள் பண்டிதர் சிங்காரவேலு
7. 29.06.1994 துன்னாலை மித்திரன் கண்ணகை அம்மன் மண்டலாபிஷேக பூர்த்தி சொற்பொழிவு - மந்திரங்களின் பெருமை

**2001.04.07 ஸ்ரீ செகராஜசேகர பிள்ளையார் கோவில் தொடர் சொற்பொழிவு - ஓங்கார தரிசனம் (சபா ஜெயராஜா தலைமையில்)**

8. 2005.08.22 கும்பாபிசேக விழா பூரணாபுஷ்கலாதேவி சமேத ஐயனார் கோவில் (சுழிபுரம்)
9. 2008 - 2008 திருவாசக முற்றோதல். வீரமாகாளி அம்மன் கோவில் தும்பளை (திருவாசக பேருரை , ஆசிரியுரை , தலைமை உரை)
10. 1993 - 1999 வரை மந்திகை கண்ணகை அம்மன் கோவில் தொடர் சொற்பொழிவு
    விடயம் - மகாபாரதம் , இராமாயணம் , தேவிபாகவதம் , பெரியபுராணம் , தேவியின் திருவிளையாடல்கள்)

**பெற்ற பட்டங்கள்** : 'சைவசித்தாந்த சாகரம்'
'விரிவுரை வேந்தன்'
'சொல்லின் செல்வர்'
'சிவாகம உபதேச வாசஸ்பதி'

**கௌரவிப்பு** : தங்கபதக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. 1994 -1999 வரை பூவக்கரை பிள்ளையார் தேவஸ்தானம்

**தொடர் சொற்பொழிவு** : மகாபாரதம் , இராமாயணம் , விநாயகபரத்துவம், பிள்ளையார் பெருமை சோதிடத்தில் விநாயன் , வேதங்களில்விநாயகன்.

**பெற்ற பட்டங்கள்** : **அருள் உரை வேந்தன்**

**கௌரவிப்பு** : **தங்கபதக்கம்**

12. 1995 - 2006 வரை அல்வாய் சாமனான்தறை பிள்ளையார் தேவஸ்தான மகோற்சவகால பிரதமகுரு கும்பாபிசேக பிரதமகுரு ,

**தொடர் சொற்பொழிவு** : கிரியைகளும் தத்துவவிளக்கமும் , பிள்ளையார் பெருமை , பன்னிரு திருமுறைப் பெருமை ,விநாயக பரத்துவம் கொடியேற்றத் தத்துவம் கொடிக்கவி உரைநூல் வெளியீடு.

13. 1991 - 1997 மாறாம்புலம் பிள்ளையார் தேவஸ்தானம்

**தொடர் சொற்பொழிவு** : மகாகவி காளிதாசரும் காளிகா தேவியும்,பாரதியாரும் மகாசக்தியும் கவிஞர் கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

14. 1994 - 1997 அல்வாய் அரசடிப் பிள்ளையார்

**தொடர் சொற்பொழிவு** : மகாபாரதம் , இராமாயணம் , ஆலய வழிபாடும் தத்துவங்களும் , கிரியைகளும் தத்துவமும்.

15. 1991 - 1996 வரை மாயக்கை பிள்ளையார் தேவஸ்தானம்

**தொடர் சொற்பொழிவு** : தேவி பாகவதம் , விநாயக பரத்துவம்

16. 1994 - 1996 வத்தளை கண்ணகை அம்மன் தேவஸ்தானம்

**சொற்பொழிவு** : மகாபாரதம் , இராமாயணம் , தேவிபாகவதம் .

**பட்டம்** : 'அருட்பிரபாகர சீலர்' சுவாமி சித்ரூவானந்தா அவர்கள் வழங்கியது.

**கௌரவிப்பு** : தங்கமோதிரம் , தங்கபதக்கம்

17. 1996 - 1999 வியாபாரிமூலை நாச்சிமார் அம்மன் தேவஸ்தானம் **நவராத்திரி**

**தொடர் சொற்பொழிவு** : கிரியைகளின் தத்துவம்,நவராத்திரி பெருமை , அன்னையின் அருள்.

18. 1998 - 2000 வரை ஸ்ரீ.முதலிஅம்மன் தேவஸ்தானம்

**தொடர் சொற்பொழிவு** : கந்தபுராணம் , தேவி பாகவதம் பெரியபுராணம்.

**கௌரவிப்பு** : தங்கபதக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. 1990 - 2004 வரை மூச்சம்பலம் சிவன்கோவில் மகாசிவராத்திரி விழா பிரதமகுருவும் , விசேட சொற்பொழிவும்.
20. 1993 - 1999 வரை உதய கதிர்காம முருகன் தேவஸ்தானம் சமய பொது விடயங்கள்.
21. 1998 - 1999 வியாபாரிமூலை வீரபத்திரர் தேவஸ்தானம்

| | | |
|---|---|---|
| **தொடர் சொற்பொழிவு** | : | பெரியபுராணம்,<br>திருவிளையாடற் புராணம். |
| **பட்டம்** | : | 'திருவருட் செல்வர்'<br>பெரிய புராண வாருதி. |

**2002 அவ்வொல்லை பிள்ளையார் உற்சவமூர்த்தி பிரதிஷ்டை**

22. 1996 - 2008 வரை கற்கோவளம்கும்பி முருகன் தேவஸ்தானம் கும்பாபிசேக குரு , உற்சவகால குரு

| | | |
|---|---|---|
| **தொடர் சொற்பொழிவு** | : | முருகன் பெருமை , முருகனும் அன்னையும் , தேவிபாகவதம் , குமாரதந்திரம் , கிரிகைகளும் அதன் தத்துவமும்,திருமுறைகளின் பெருமை , கந்த புராணத் தொடர் சைவ தித்தாந்த சாதனைகள் |

23. 2006ம் ஆண்டு கடுக்காய் ஞானவைரவர் (சிங்கை நகர்) கும்பாபிசேகம்
24. 2001ம் ஆண்டு வரணி மாசேரி உதிர மாகாளிஅம்மன் கும்பாபிசேகம்.
25. 2008 உத்திராவத்தை ஞானவைரவர் தேவஸ்தானம் கும்பாபிசேகம்.

| | | |
|---|---|---|
| **தொடர் சொற்பொழிவு** | : | விழாக்களின் தத்துவம் , வழிபாட்டின் தேவையும். |
| **பட்டம்** | : | பேராசிரியர் Dr. வேதநாதன் விதந்துரைப்பின் பெயரில் ஆலய பரிபாலன சபையின் சார்பில் வே. உதய மோகன் அவர்களால் "சிவகாம வித்தியா பூசணம்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. |

26. 1996ம் ஆண்டு அவ்வொல்லை பிள்ளையார் தேவஸ்தானம் "கும்பாபிசேக துரந்தரர்" என்ற பட்டம் Dr. கதிரவேற்பிள்ளை அவர்களால் வழங்கப்பட்டது.
27. 1985 -1998 வரை பருத்தித்துறை சிவன் தேவஸ்தானம்

| | | |
|---|---|---|
| **தொடர் சொற்பொழிவு** | : | சிவபெருமான் அருட்செயல் , வேதாந்த தெளிவு சைவ சித்தாந்தம் , ஆதிசங்கரர் பெருமை , ஆதிசங்கரரும் அத்வைதமும் , ஆதிசங்கரரும் பராசக்தி பீடங்களும் , யார் இழக்க வல்லார், ஆடவல்லவர் , |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம் வளர்த்த அம்பிகை ,
ஏகாம்பரநாதர் , அன்னபூரணியும்
பிச்சாடுநரும்.

28. 1983 - 1999 வரை நெல்லண்டை பத்திரகாளி தேவஸ்தானத்தில் கந்தசஷ்டி காலங்களில் தொடர்சொற் விடயம் : ஏறுமுகம் ஏறிவிளையாடு முகம் என்ற தொடர் ஆறு பொழிவு.

29. 1995 - 2008 வரை சன்நிதியான் ஆச்சிரமம் வருடத்தில் இருமுறை சொற்பொழிவும் 'ஞானசுடர்' வெளியீட்டு உரையும் கும்பாபிசேக விழா.

## மேற்படி குருக்கள் ஐயாவினால் புனராவர்த்தன பிரதிஷ்டா கும்பாபிஷேக குடமுழுக்குக் கண்ட ஆலயங்கள்

1. குடாரப்பு தூவில் அம்மன்
2. செம்பியன்பற்று முருகன்
3. நாகர்கோவில் மாணிக்கபிள்ளையார்
4. குடத்தனை தூவில்கண்ணகை அம்மன்
5. குடத்தனை ஆயிலடிப் பிள்ளையார்
6. மருதங்கேணி முருகன்
7. உடுத்துறை முத்தத்து பத்து பிள்ளையார்
8. பளை மசேரி முத்துமாரி அம்மன்
9. குடத்தனை மணற்காட்டு ஞான வைரவர்
10. உடுத்துறை புதுவளைப் பிள்ளையார்
11. புளியம் பொக்கனை நாகதம்பிரான் (புதூர்)
12. கும்பி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
13. மாவடி முருகன் தேவஸ்தானம்
14. கும்பி முருகன் தேவஸ்தானம்
15 2ம் குறுக்குத்தெரு ஞான வைரவர் தேவஸ்தானம்
16. வரத்துப்பளை கண்ணகாதேவி தேவஸ்தானம் (ஈஸ்வரன் கோவில்)
17. கொள்ளெல்லை முச்சந்தி பிள்ளையார் தேவஸ்தானம்
18. கற்கோவளம் கடற்கரை விஷ்னு கோவில்
19. அல்வாய் சாமணந்தரை பிள்ளையார் தேவஸ்தானம்
20. வில்வளை பிரத்தியங்கரா காளிகா தேவஸ்தானம்
21. இலட்சுணம் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளியம்மன் தேவஸ்தானம் (தும்பளை)
22. கடுக்காய் ஞானவைரவர் தேவஸ்தானம்
23. உத்திராவத்தை ஞானவைரவர் தேவஸ்தானம்
24. அச்சுவேலி தம்பாலை வீரபத்திரர் தேவஸ்தானம்
25. அச்சுவேலி வளளாய்வீதி பிள்ளையார் தேவஸ்தானம்
26. புத்தூர் காளிகாதேவி தேவஸ்தானம்
27. ஆரியகுளம் புதிய உயர்கலைக்கல்லூரி பிள்ளையார் தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. பேராசிரியர் சண்முகதாஸ் கோகுலம் இல்லத்தில் வரசித்தி விநாயகர்
29. தேவஸ்தானம்
30. அல்வாய் குமுதெனி பிள்ளையார் தேவஸ்தானம்
31. அல்வாய் வடக்கு வத்தியாவத்தை அன்னமார் தேவஸ்தானம்
32. அல்வாய் நரசிங்க வைரவர் தேவஸ்தானம்
33. தும்பளை முத்துமாரி அம்மன் எழுந்தருளி
34. தும்பளை தெற்கு மனோன்மணி அம்மன் தேவஸ்தானம்
35. தும்பளை தெற்கு நாவலடி சக்தி அம்மன் தேவஸ்தானம்
36. தும்பளை தெற்கு வைரவர் தேவஸ்தானம்
37. திகிரி பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்
38. திகிரி வீரபத்திரபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்
39. மானாங்கனை அம்மன் தேவஸ்தானம்
40. கரவெட்டி தல்லையப்புலம் அருள்மிகு பத்திரகாளி தேவஸ்தான நவக்கிரக மகாகும்பாபிசேகம்
41. கிளாலி கடற்கரை வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
42. தோட்டக்கடவை ஞானவைரவர் தேவஸ்தானம்
43. நாகர்கோவில் பெரியதம்பிரான் தேவஸ்தானம்
44. மருதங்கேணி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
45. புளியகுளம் முருகமூர்த்தி தேவஸ்தானம்
46. மணக்காடு செட்டியார் வைரவர் தேவஸ்தானம்
47. உடுத்துறை பிள்ளையார் தேவஸ்தானம்
48. மாமுனை அம்மன் தேவஸ்தானம்
49. கெக்கறாவே அம்மன் தேவஸ்தானம்
50. அத்திப்பறவை வைரவர் தேவஸ்தானம்

## வழங்கிய வாழ்த்துப்பாக்கள்

1. அண்ணாவியர் மு.ந.சிவசுப்பிரமணியம் (சிவப்பண்ணா) மணிவிழா வாழ்த்துப்பா (25.07.1999)
2. 1992.02.21 திருமாங்கல்ய மங்கள நல்வாழ்த்து லோகசிங்கம் , சாரதாதேவி (வராத்துப்பளை)
3. 1999.06.15 பொ.வேணுகோபால வாணிதாஸன் பிரியாவிடை வாழ்த்துப்பா
4. 2001.03.07 பேராசிரியர் சண்முகதாஸ் மணிவிழா வாழ்த்துப்பா
5. 2008.03.20 திரு.மா.சின்னத்தம்பி மணிவிழா வாழ்த்துப்பா
6. 2005.09.05 ஆச்சாரி அபிசேக வாழ்த்துப்பா சட்டநாதக்குருக்கள் , யோகசம்மந்தர்
7. 2005.03.07 பிரியாவிடை வாழ்த்துப்பா சின்னத்துரை ஞானேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. 2005.05.09 பிரியாவிடை வாழ்த்துப்பா
வேலுப்பிள்ளை பத்மநாதன் (ஹாட்லிக் கல்லூரி அதிபர்)

9. 2006.08.09 பட்டமளிப்பும் வாழ்த்துப்பாவும்
இந்திரராஜக் குருக்கள்

10. 2005.09.17 பிரியாவிடை வாழ்த்துப்பா
ந.குணசீலன் (ஹாட்லிக் கல்லூரி உபஅதிபர்)

11. 2006.02.02 உபநயனதாரண வாழ்த்துப்பா
புருசோத்தமகுரு ராஜாராம சர்மா

12. 2001.01.21 மணிவிழா வாழ்த்து
பேராசிரியர் அ.சண்முகதாஸ்

13. 1997.05.25 பிரியாவிடை வாழ்த்துப்பா
திரு.உதயமூர்த்தி (அம்பன் உபஅதிபர்)

14. 2005.01.19 ஆச்சாரி அபிசேக வாழ்த்துப்பா
முருகையாக் குருக்கள்

15. 2000 - 2008 வரை பிறந்ததின வாழ்த்து
'சந்துதன்'சண்முகநாதன் அருள்நங்கை

16. 2000.03.19 சதா அபிசேக வாழ்த்துப்பா
மதுரை பண்டிதர் ராமசாமி நமச்சிவாய தேசிகர்

17. 2000.02.27 மணிவிழா வாழ்த்துப்பா
கலாநிதி சபா ஜெயராஜா

18. 1999.12.27 மணிவிழா வாழ்த்துப்பா
கவிஞர் சோ.பத்மநாதன்

19. 2002.10.26 பாராட்டுவிழா வாழ்த்துப்பா
கலாநிதி அ.சோமசுந்தரம் பிள்ளை

20. 1993.10.10 கலாநிதி க.குணராஜா அவர்கட்கு வாழ்த்துப்பா

21. 1995.12.10 அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டம் சார்பாக
வித்துவான் சந்திரசேகரம் ஓய்வுபெற்ற அதிபர் அவர்கட்கு வாழ்த்துப்பா

22. 2002 ஆவணி ஓய்வபெற்ற அதிபர் ஆ.வடிவேலு வழங்கிய வாழ்த்துப்பா

23. 2005.05.25 கலாபூசணம் தணிகாசலம் அண்ணாவியர் அவர்களிற்கு
வாழ்த்துப்பா

## பெருவிழா

1. 1995.03.16 அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டம் திருவள்ளுவர்
விழா. (தலைமை பட்டிமன்ற நடுவர்)

## ஆசியுரை

1. பொலிகண்டி கந்தவனம் மகோற்சவ விஞ்ஞாபனம் (ஆசியுரை)
'பாஞ்சாலி சபதம்' (பஞ்சலிங்கம்)
2001.10.28 - ஆசியுரை
2001.'அமைதியான பிரேத அடக்கம்' நூல் வெளியீடு (இரா.பஞசலிங்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 2005.08.05 'தேடல்' சஞ்சிகை வெளியீடு
ஆசியுரை (ஹாட்லிக்கல்லூரி)
3. 2001.10.20 'கலாதரிசனம்' (புதிய உயர்கலைக்கல்லூரி)
முதல்பிரதியும் , ஆசியுரையும்
4. 2006.06.09 பண்டத்தரிப்பு கிழவி கலட்டியம்பதி
ஸ்ரீ.பாலசுப்ரமணியர் தேவஸ்தானம் (ஆசியுரை)
5. 2005.09.09 வதிரி பஞ்சதோட்டம் மாவடி அன்னமார் ஆலய
தேவஸ்தானம் ஆசியுரை.
6. கௌரவிப்பும் , பாராட்டுஉரையும் திரு.க.அருளானந்தம்
7. 2008.12.03 திருகோணமலை சாம்பல்தீவு மகா மாரியம்மன்
தேவஸ்தானம் வாழ்த்துரை.
8. 2007. ஆவணி வாழ்த்துரை.
சிதம்பரபிள்ளைக் குருக்கள் , இந்திரராசக் குருக்கள்
பட்டம் - சக்தி உபாசகதீரர்.
9. 1998.01.01 பாராட்டுஉரை.
கலாநிதி. கலாமணி அவர்கட்கு.
10. அமெரிக்க நாட்டு இந்து சமயதுறவி ஸ்ரீமத்.தந்திரதேவா மகாராஜ்
வதிரி பூவக்கரை பிள்ளையார் ஆலய விஜயம் - ஆசியுரை.

## நூல் வெளியீடு

1. சைவ குலதீபம்.
2. அமிர்த கடீஷம்.
3. யோக சித்து.
4. வேதங்கள்.
5. ஆலய வழிபாடும் தத்துவமும்.
6. கேதார கௌரி மகிமை
7. அறநெறி.
8. விக்கிரவியல்.
9. கிரியைகள்.
10. அன்னைதயை.
11. அறிவுச்சுடர்.
12. அறுவகைச் சமயநெறி.

குருத்துவ நெறியில் வீட்டுக்கிரியைகளில்
302ற்கும் மேற்பட்ட திருமணக்கிரியைகளையும்
100ற்கு மேற்பட்ட ருது சாந்திகளையும்
350ற்கு மேற்பட்ட புதுமனைப்புகு விழாக்களையும்
1500ற்கு மேற்பட்ட வீட்டு சாந்திகளையும்
செய்து வைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் ஐயா அவர்கள் சிவாச்சாரியராக இருந்து குருப்பட்டம் செய்துவைத்த குருமாரின் விபரம்

ஆச்சாரிய அபிஷேக நிர்வாண தீட்சை
சிவஸ்ரீ தியாக வியோமகேசக் குருக்கள்
சிவஸ்ரீ க. முருகையாக் குருக்கள்
சிவஸ்ரீ தியாக அமிர்தகடீசக் குருக்கள்

## மேற்படி குருக்கள் அவர்கள் சர்வபோதக ஆசிரியராக இருந்து கும்பாபிஷேகம் நடாத்தி வைத்த கோவில்களின் விபரம்

கூளாவடி திகிரி கண்ணகை அம்மன் தேவஸ்தானம்
மிருசுவில் படித்த மகளீர் அருள்மிகு பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்
சாவகச்சேரி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
சாவகச்சேரி பழனியாண்டவர் தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீர்மங்களம் நிறைதரு சர்வதாரி வருடம் 04.09.2008 நடைபெற்ற வெள்ளிவிழாவின் போது

## சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்மீது திருவடிப் பதிகத்தை அவர்தம் மாணவன் சிவமுகுந்தன் B.A அவர்கள் பாடி உவந்தளித்தது.

அருளாய் அமரர்க் கறிவாய் ஒளியாய்
அணையா விளக்கின் சுடராய்
உருவாய், இடர்தீர் வடிவாய் செறிவாய்
உணர்வுக் கென்றும் உயிராய்
தருவாய் தணியா இசையாய், பதியாய்
தவிக்கும் மனத்திற்(கு) துணையாய்
திருவாய், அன்பிற்(கு) அருவாய் இணையாய்
திகழும் திருவே வாழீ! (1)

துன்பமும் இன்பமும் வாழ்க்கையின் சுழற்சி
தூயவனே உம்வாழ்வில் தொடர்ந்துநாம் காண்போம்
இன்முகம் மட்டுமே எமக்கென்றும் தந்தாய்
துன்பத்தை உள்ளத்தில் ஆழத்திலே புதைத்தாய்
பண்பும் பணிவும் வாழ்வியலில் உயர்ச்சி
பாவலனே உன்வாழ்வில்நாம் தெளிந்தே கொண்டோம்
பண்பினால் சான்றோர் உள்ளத்தில் நிறைந்தாய்
பணிவினால் மாந்தர்தம் இதயத்துள் நுழைந்தாய். (2)

கிரியை முறைமையில் புதுமைகள் கண்டாய்
கீதனாய் இசையின் வடிவே ஆனாய்
சிரிப்பில் அம்பிகையின் அருளினைத் தந்தாய்
சீரினில் தூயநல் உள்ளமே தந்தாய்
எரியா நினைவுகளை எம்முடன் பகிர்ந்தாய்
ஏகனாய் எம்முள்ள கமலத்தில் அமர்ந்தாய்
வரிகள் எமக்கில்லை வாழ்த்துக்கள் கூற
வாயு மின்று சுவைக்கிறது உம்புகழ் கூறி (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் உயர்ந்தாய் உயிரிலே கலந்தாய்
உலகத்திலே உன்புகழை நிறைத் தாய்
வெள்ளத்தில் அள்ளாக் கல்வியை தந்தாய்
வேகமே உருவாகி நின்றாய்
கள்ளத்தில் ஊறும் மாணவர்கள் தமக்கு
கரையாத செல்வத்தை தந்தாய்
பள்ளத்தில் விழுமெம் சமூகந் தனக்கு
பதியாகி நின்றாய் சற்குருவே! (4)

பேச்சில் மட்டும் சமூகப் பற்று
உயிர்மூச்சில் இன்று எங்கும் இல்லை
பேச்சும் செயலும் கலந்தே இன்று
புதுயுகத்தை படைத்தே சிற்பி நீரே
பேச்சில் மட்டுமே தானா இனிமை
பழக்கத்தில் கூட என்றும் செழுமை
பேச்சில் என்றும் கலந்தே நிற்பாய்
மாணவர் தம்மூச்சில் உணர்வே ஆவாய். (5)

மந்திரம் தந்திரம் யந்திரம் அறிந்தாய்
மற்றவர் தமக்கு மதியூகி ஆனாய்
சந்திரன் போலநல் ஒளியினைத் தந்தாய்
சரித்திரம் போற்றும் நாயகனு மானாய்
பந்துகள் உமக்கு நற் புத்தகம் தானே!
பற்றுதல் உமக்குக் கற்பதுவே தானே
நிந்தனை செய்வதற்(கு) மடைக்கலம் தந்தாய்
நித்தியம் சீர்பெற்(று) வாழிபல்லாண் டிங்கே! (6)

சாதித்தீ என்றும் சமய மென்றும்
சபகாப் பிரிவினைகள் உடுப்பெற்ற போதும்
சாதித்தே காட்ட வந்த வன்நீர்
சாதிப் பிரிவினைகள் உம்மிடத்தில் இல்லை
நாதியற்ற சமூகம் நசித்த போதும்
நீதி தவறாது நின்றவன் நீர்
ஓதிய மறையும் ஓர்நாள் உன்னை
ஓடி வந்துநின் றுன்புகழ் பாடும். (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தம் அன்றுநின்ற எம்சமூகம் தழைக்க
சம்மந்த ராய்வந்து அவதரித் தவரே
உம்பந்தம் ஏற்றிநிற்க மற்றவரும் போற்ற
உன் மத்தம் கொண்டுதழை கழைந்து நின்றீர்
இம்மண்ணில் இனிதுவாழ உபதேசம் புரிந்தீர்
அம்மண்ணில் நாம்வாழும் ஆயத்தம் செய்தீர்
எம்மண்ணில் சென்றாலும் சமயத்தை விதைத்தீர்
எம்மண்ணின் அறுவடையை இன்றுகண் கின்றோம். (8)

மனத்தால் ஒருமை கணடீர் அதனால்
மாநிலம் பெருமை பெற்றீர்
குணத்தால் செழுமை பெற்றீர் அதனால்
சீர்பெறு வாழ்வு பெற்றீர்
பணத்தால் உதவி செய்தீர் அதனால்
மாண்புறு மக்கள் பெற்றீர்
மனத்தால் தூய்மை பெற்றீர் அதனால்
அம்பிகை குமரன் ஆனீர். (9)

செல்வத்தின் திறத்தைநன் கறிந்தவர் நீரே!
செல்லாத வாழ்வினைப் புரிந்தவர் நீரே!
நில்லாத செல்வத்தை நிலைபெறச் செய்ய
நிரையாக ஏடுகள் சேர்த்தவர் நீரே!
சொல்லாமலும் முடியாது பெற்றசீர் கூற
சொல்லியும் அடங்காது உன்திரு நாமம்
தொல்பதியும் அறியும்உன் திருவடி வதனை
தொல்லைகளும் அகலுமுன் திருவடி நிழலில் (10)

வளத்தக்க இல்லாள் பெற்றீர் அதனால்
சோமாஸ் கந்த மூர்த்த மானீர்
நலத்தக்க செல்வம் பெற்றீர் அதனால்
நிலையான புகழும் பெற்றீர்
நிலமளக்கும் பட்டம் பெற்றீர் அதனால்
நிலை யான சுற்றம் பெற்றீர்
குலமளக்கும் நாயக னாவீர் அடியேன்
சிவத்திரு முகுந்த னார்வாழ்த்(து)கின்றேன். (11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வாய் வடக்கு வியாபாரிமூலை
அருள்மிகு பத்திரகாளி சமேத ஸ்ரீ ஆதிசிவ வீரபத்திரசுவாமி
தேவஸ்தானத்தில் (1998)
ஈசுர வருட மகோற்சவ காலம் முழுவதும்
**'திருவருட் செல்வர்'**
என்னும் தொடரில் சமய சிறப்புச் சொற்பொழிவு ஆற்றியமைக்காக
தும்பளை நெல்லண்டை அருள்மிகு பத்திரகாளி அம்மன் ஆலய
பிரதமகுருவும், ஹாட்லிக்கல்லூரி ஆசிரியருமான
**சிவஸ்ரீ.தியாக. சோமஸ்கந்தராஜக்குருக்கள் B.A அவர்களுக்குப்**
**"பெரியபுராண செஞ்சொல் வாருதி"** எனப்
பட்டமளித்துப் பாராட்டி

## வழங்கிய பாராட்டு இதழ்

தும்பை நகரிடத் தம்பிகை முன்பென்ற
தும்பி முகவன் தன்னோர - அம்பிகைதன்
போற்றிய பொன்னடிகள் பூக்கொண்டு எப்போதும்
போற்றுவார் எங்கள் குரு.

விதிமுறை தவறா வழிவழி
பூசைகள் இயற்றும் நெல்லண்டைப்
பதிவாழ் பத்திரகாளி யம்மன்
ஆலயச் சைவகுரு மரபில்
தியாகராசர் மைந்தனாய்த் தோன்றி
நல்லநடைமுதற் பயின்று
தியாக சிந்தையோடு வித்தைபல
கற்றார் எங்கள் குருவே.

வேதமோ டாகமும் வேறுபல
புராண மோடி காசமும்
மேன்னை யுறவே கற்றுணர்ந்து
அதனால் ஏற்ற முறவே
பேராதனைப் பல்கலைக் கழகப்
பட்டதரி ஆனார் இவரே
மேலும் சிவகாம நூலறிவால்
"சிவகாம வாசஸ்பதி ஆனார்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோய் 'ஆசிரியப் பெருந்தகையே'
உணர்வாய் புராணங்களிலே
பெரிய புராணம் என்னும்
திருத்தொண் டர்புரா ணத்தை
பெரிதும் எமக்கெடுத் துரைத்தாய்
நாமிதற் கிலதோர் கைமாறு
"பெரிய புராண செஞ்சொல்
வாருதி" என்று போற்றுவமே!
நெல்லண்டைப் பதிவாழ் அம்பிகைதன்
திருப்பணிகள் முதலாகத் தொட்டு
நல்லாசி ரியர்க்கான பணிகள்
எல்லாம் ஆற்றி ஆற்றி
நல்லாசி ரியர்க்கு இலக்கணமாய்
மாணவர்க்கு ஒளிவிளக்காய்
இல்லத்தில் எல்லாம் பெற்றுப்
பல்லாண்டு வாழி! வாழி!!

## வாழ்த்திப் பாராட்டி வழங்குவோர்

பங்குனித் திங்கள், 29ம் நாள், 1998
வியாபாரி மூலை ,
அல்வாய் வடக்கு.

ஆலயவழிபடு மக்கள் சார்பில்
ஆலய அறங்காவற் சபையினர்
அருள்மிகு பத்திரகாளி சமேத
ஸ்ரீ ஆதிசிவ வீரபத்திர சுவாமி
தேவஸ்தானம்,
வியாபாரிமூலை,
அல்வாய் வடக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விராட் விஸ்வப் பிரமனே நம :

மாதனை ஸ்ரீ காளியம்மன் கோவிலில் நடைபெற்ற அலங்கார உற்சவ காலத்து.

தேவி மான்மியம் பற்றிச் சொற்பெருக்கு ஆற்றிய

**சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் B.A**

அவர்களைப் பாராட்டி "சித்தாந்த சாகரம்" என்ற பட்டமளித்து பரிபாலன சபையாரால் அளிக்கப்பட்ட

# நல்வாழ்த்து நல்லிதழ்

பேரோங்கு புகழ்பருத்தித் துறையி லென்றும்
பெருமைபெறு நெல்லண்டைப் பதியில் வாழ்ந்த
சீரோங்கு தியாகரா சக்கு ருக்கள்
தெரிவையாம் ராசலட் சுமியம் மாமுன்
ஏரேங்கச் செய்திற்ற றவத்தின் பேறாய்
ஏழிலோங்கு மகனாகத் தோன்றி யுற்ற
தாரோங்கு மன்னருமே மதிக்க மிக்க
தமிழினொடு வடமொழியாங் கிலமுங் கற்று.

உற்றவருங் கோயிற்பூ சகராம் பேறும்
உரிமைபெற பலகலையுங் கற்ற பேறும்
மற்றெவரும் நிகரிலா வண்ணம் பெற்று
மாண்பாரும் கலைப்பட்ட தாரி யாகி
பெற்றவருங் கல்விதனைப் பிறருங் கற்கப்
பேசரிய ஹாட்லிக்கல் லூரி தான்செய்
நற்றவத்தால் ஆசிரிய னாய மைந்து
நலமார்சித் தாந்தபண் டிதனாக வந்து

ஒப்பரிய சமயம்நல் லிலக்கி யங்கள்
உற்றிடுநல் வேதங்கள் ஓது கின்ற
செப்பரிய உண்மைகளை உலகோர் ஏற்கச்
சிறப்புடனே பொழிந்துவரு தன்மையாலே
தப்பதிராச் சான்றோர்கள் தாம்முன் வந்து
தாவிலாச் சொற்செல்வன் அம்பிகைநல் வாசன்
துப்பாரும் சிவாகமோ பதேச வாசன்
தோமிலா சித்தாந்த சாகரியினோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லிசையார் அருட்பிர பாகரநற் சீலர்
நலமார்சித் தாந்தசே கரத்தி னோடு
வல்லமையா ருரைவேந்தன் போற்று கின்ற
வாகரும் பெரியபுரா ணச்சொல் வாரி
எல்லையிலா விலக்கியத்தின் மகுடமென்னும்
ஏழிலாரும் பட்டங்கள் சூட்டி நின்றார்
சொல்லரிய நூல்கள்வெளி யிட்ட சோமாஸ்
கந்தரா ஜாக்குருக்கள் எமது கோயில்

வல்லமையார் தேவிமான் மியத்தைப் பத்து
நாட்சொல்லக் கேட்டுமிக மகிழ்ச்சி கொண்டு
சொல்லரிய சித்தாந்தசா கரமாம் பட்டம்
சூட்டியே இன்றுபோல் என்றும் உற்ற
நல்லபணி தனைச்செய்து ஞாலம் போற்ற
நற்குணமார் மனைவியொடு மக்கள் சுற்றம்
எல்லையிலா இன்பமது பொங்கி ஓங்க
இறையருளால் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

07-04-2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

யாழ்ப்பாணம் வடமராட்சி

சிவஸ்ரீ க. தியாகராஜக்குருக்கள் அவர்களின் செல்வப்புத்திரரும்,
நந்திகேஸ்வரகோத்திர வழித்தோன்றலும், வேதாரணியம்
குருமரபின் ஆறாவது (06) பரம்பரையினரும்,
யா/ குடத்தனை அ.மி.த.க. பாடசாலை அதிபருமாகிய
சிவஸ்ரீ தி.சோமஸ்கந்தராஜாக்குருக்கள் M.A அவர்களது
ஆச்சாரியாபிஷேக 25வது வருடநிறைவு, வெள்ளிவிழா
மலரிற்கு

அவரது கெழுதகை நண்பன்
தம்பு – இராமச்சந்திரன்
எழுதி வழங்கிய

மங்கல உபசார வாழ்த்துப்பாக்கள்

அன்னை அம்பிகைக்கும் ஐங்கரற்கும் ஆறுமுகற்கும்
முன்னை அடிபணிந்துமுறை சார்கிரியைகளை - பின்னமிலான்
சோமாஸ் கந்த ராசகுரு தருகின்றான்
மாமாயி மாகாளி துணை.

எல்லாமா யொன்றாகி எங்கும் நின்று
இருள்கெடுக்கும் பரஞ்சுடராம் ஈச னுக்கு
ஒல்லாதே தீபங்கள் கையிற் கொண்டு
ஓங்கார வடிவாகச் சிரசு நெற்றி
நல்லாரம் திகழ்மார்பு நளின பாதம்
நவிலுமிந்த அங்கங்கள் நேர்முன் னாகச்
சொல்பொருளாஞ் சுருதிமணி யோசை யோடும்
சுற்றுகின்ற சோமையா வாழி! வாழி!!

அன்றலர்ந்த பூக்கொய்து மாலை செய்து
அருள்வள்ளல் சிரசின்மேல் தூநீர் பெய்து
மன்றல்கமழ் வடிவீரம் துணியா லொற்றி
வனப்புமிகும் பட்டாடை உடைகள் சாத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றல்தரு சந்தணம்பொன் மேனி பூசித்
திருநுதல்மேல் நீறணிந்து திலக மிட்டுப்
பொன்றுமிருள் ஒழிதீப தூபம் காட்டும்
புண்ணியனாம் சோமையா வாழி வாழி!!

அருகதையாய்த் தான்விரும்புங் காத லிக்கு
ஆகாரம் அருத்துதற்கு ஆவல் கொண்டு
பெருகுமொரு காதலனுந் தனக்குத் தானே
பிரியமுள்ள பொருளவட்கும் பிரிய மென்று
உருகுமன்பு கொண்டவட்கு ஊட்டல் போல
உதிக்கின்ற காதலின்பால் **நெல்ல ண்டையாட்கு**
பருகநல்ல பழரசங்கள் பால்கற் கண்டு
படைக்கின்ற சோமையா வாழி! வாழி!!

விரிகின்ற இருதயமாங் கமலந் தன்னில்
விரும்பிமிக ஈஸ்வரியை யாவா கித்துத்
புரிகின்ற மானதமாம் பூசை தானும்
பூர்வத்தில் வெளிப்பூசை செய்தே செய்யும்
தெரிகின்ற புஸ்பங்கள் கொண்டர்ச் சித்தும்
திருமேனிக் கபிஷேகம் சீராய் செய்தும்
எரிகின்ற தீபமொடு தூபங் காட்டும்
இறைகுருவாம் சோமையா வாழி! வாழி!!

மனிதர்க்கு உதயத்தில் ஐந்தோன் பானில்
வான்குருவும் வீற்றிருந்தே ஆட்சி செய்யின்
புனிதமனங் கசிந்துருகி யன்பு கொள்வர்
புண்ணியத்தா னாதிபனும் வியத்தில் மேவக்
கனிவுகொளு முதவிய வேந்தர் கூடிக்
காதலித்தே பாக்கியத்திற் பலமாய் நிற்கப்
பனிதருநன் மனங்கசிந்து பக்தி செய்யும்
பகுத்தறிவாளன் சோமையா வாழி! வாழி!!

மங்களஞ்சேர் செந்தமிழை ஆய்ந்து கற்றாய்
மாண்புடைய வடமொழியாம் கலை ஞானத்தால்
வீங்குபுகழ் வல்லுனனென் றுலக மேத்தும்
வித்தகனாம் சோமையா நல்லோய் வாழி!
நீங்கரிய நற்குணமே பண்பாய் கொண்டாய்
**நாமெல்லாம் செய்நன்றி மறப்போ மல்லோம்**
பாங்குடைய பத்திரகாளிதாள் பணிகின்றோம், உன்நாமம்
வாழிநீ பல்லாண்டு மல்கி வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசுடனே நெல்லண்டையான் கழகம் வாழி!
கலைகளுடன் மேலான வலிமை ஓங்க
ஆசியுடன் தொண்டுபுரி அறிஞர் வாழி!
அவர்புகழ வீற்றிருந்தே அதிபர் ஆகி
நேசமுடன் பதவிபல உயர்வும் பெற்று
நிலவுலக மேத்தியுறச் **சோமாஸ் கந்த**
**ராசகுரு என்னாறில் ஏந்தல்** வாழி!
இவர் துணைவி **புவனேசம்மா வாழி! வாழி!!**

குணமென்னும் குன்றேறி நின்று குருவாய்
மணம்வீசும் மைந்தன் **தனஞ்சயனுடன்** ஒருங்கிருந்து
கணமும் கவலைகளற்றுப் பெருவாழ்வு வாழ்கவென
குணமனையாட்டி விஜிதாராம னோடுமை வாழ்த்தினமே.

அன்புடன்
தம்பு - இராமச்சந்திரன்
வில்லளை ஸ்ரீ மஹா பிரத்தியங்கிராகாளி அம்மன் ,
தேவஸ்தானம்.

வில்வளை,
தும்பளை,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது வித்யாகுருவின் ஆச்சாரியாபிஷேக வெள்ளி விழா மலரிற்கு நல்வாழ்த்துக்கள்

"சரஸ்வதி நமஸ்துப்யம் வரதே காமரூபிணி
வித்யாரம்பம் கரிஷ்யாமி
சித்தி; பவதுமே சதா"

என்கிற மந்திரத்தைச் சொல்லி அட்சராப்யாசம் செய்து எனது கல்வியை ஆரம்பித்து வைத்த எனது **வித்தியாகுருவின்** ஆச்சாரியாபிஷேக 25வது வருட நிறைவு, வெள்ளி விழா மலரிற்கு எனது நல்வாழ்த்துக்கள்.

ஆழப்பரிய ஆழ்கடலில் ஆழ்ந்து நல்ல
ஆணிமுத்து எடுத்துப்பயன் படுத்தல் போலத்
துளக்கரிய நற்கருத்து பலவுங் கொண்ட
சொல்லரிய இவ் **"வெள்ளி விழா"** மலரிதனை
விளக்கமுடன் நெல்லண்டையாள் அருளி னாலே
வெளியிட்டுத் தருகின்ற நெல்லண்டை யான்
விள்ளரிய தழிழ்புலவன் மேன்மை கொண்ட
வித்தகனாம் **சோமாஸ்கந்த ராஜன்** வாழ்க!



அன்பு நனியார்ந்த,
டக்ஷிகா - இராமச்சந்திரன்
யா/தும்பளை சிவப்பிரகாச மகா
வித்தியாலய தரம் 5 மாணவி.

வில்வளை,
தும்பளை,
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தும்பளை இலட்சுமணன் தோட்டம் அருள்மிகு பிள்ளையார் மீது**

**சைவ சித்தாந்த பண்டிதர், அருட்பிரபாகரசீலர், சிவாகம வித்தியா பூசணம், உபதேசவாசஸ்பதி,**

**சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜாக்குருக்கள்(M.A) அவர்கள் பாடி உவந்தளித்த**

## திருவூஞ்சற்பா

### காப்பு

செந்தமிழும் சிவமதமும் தெளிந்த சிந்தை
சீரியர் வாழ் தும்பளையைச்சேர்ந்த தெய்வ
கந்தமுறும் இலட்சுமணந் தோட்டப் பதிமேவும்
முழுமுதற் பொருள் பிள்ளையார் மீது
சந்தமுறும் திருவூஞ்சல் தமியன் பாடச்
சங்கரனார் முதற் சேயாய்த் தந்தஏக
தந்தனெனும் நெல்லண்டை விநாயகன் பொற்
சரனார் விந்தந்தற் தருளும் காப்பு

பொன் மருவு நால்வேதம் தூண்களாகப்
பொள நிறைதரு சிவாகமமே விட்டமாக
மன்று மெழிற் கலைஞானம் கயிறதாக
மாண்பு மிகு ஓங்காரமே பீடமாக
வன்னமெழிற் றங்குமூஞ்சல் தன்னில்வைது
வரமெல்லாம் எமக்கரும் தெய்வமும் நீயே
நன்னகராம் இலட்சுமணன் தோட்டமேவும்
நாயகராம் விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.

நால்புறமும் மாவிலைகள் வாழைநாட்டி
நல்வர்ணம் போல் மேலே பட்டாடைத்
தோற்றமுறும் மலர்மாலை இடையே சூடித்
தோரணங்கள் தம்மோடு கலந்து தொங்கப்
போற்றிடும் அடி யார்கள் மகிழ்ந்து நிற்கப்
புதுமுறையில் கும்பாபிடேகம் நடைபெற்றே
ஆற்றியநல் கந்தபூத பண்டாரம் சூழும்
இலட்சுமணப் பிள்ளையாரே ஆடீர் ஊஞ்சல்

சுந்தரஞ்சேர் அகிலன் வெண் கவரிவீச
சூரியனும் சந்திரனும் குடைபிடிக்கச்
சந்தனகுங் குமஞ் சுமக்கும் சரஸ்வதிலட்சுமியே
வல்லபை சித்தி புத்தி அருகே உடைவாள் ஏந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தனத்தில் எழில் ஒளிர் விடும் தீபம்
இருகரத்தால் அக்கினி தேவன் பிடிக்க
அந்தணராகுதி நல்க அருள் இலட்சுமணன் தோட்ட
விநாயகரே ஆடீர் ஆடீர் ஊஞ்சல்

அன்னை உமா தேவியப்பன் மகிழ்ந்தே நோக்க
ஆரிஜயனும் இந்திரனும் அர்ச்சனைகள் செய்ய
நன்னயமார் தேவரெல்லாம் கண்டோ மென்ன
நாரதர் தம்வீணை தனை மீட்டி நின்று
பின்னகமில்லா இசை கூட்டிப்படி வாழ்த்தப்
பிறதேவர் பல்லாண்டு கூறி போற்ற
அன்ன கிளிமைனா ஆக்கள் சேரும் நகரில்
இலடசுமணன் தோட்ட விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

வானவரை வதை செய்து வாட்டும் கயமுகனை
ஒற்றைக் கொம்பொடித்து வீழ்த்தியே
தானவனே ஓர் எலியாக வுனைச் சுமக்கத்
தலமெலாந் தனிப்பூசை பெற்றுத்
தேனவல் கடலை பயறு மோதகங்கள்
தேங்காயு மளிக்கு மடியார்தம் அச்சம்
ஆனவெலாம் நீங்கியருள் ஆக்கும் இலக்குமணன்
தோட்டமேவும் விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

ஓங்காரத் தத்துவ சுழியு மாதியெங்கும்
உள்ளொளியை அள்ளித்தரும் குலகுருவே
பங்காக நின்று பணிகந்தபூத பண்டரத்திற்கு
பலமேறுங் கிட்டச் செய் பரமனாகி
நீங்காத வைகுடி எல்லோர் உள்ளத்தி நாளும்
நின்னறிவை பெருக்கும் தெய்வமுமாகி
ஆங்காரம் பொத்தியருள் தரும் இலட்சுமணன்
தோட்ட விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

செப்பு மிகு நாதசரத் தவில் பறையே யாகும்
தெய்வீக வாத்தியங்கள் சேர்ந்தே பஞ்சமணி
ஒப்புவமையில்லா கனகமணியுடன் பெரியமணியும்
ஓங்கார ரீங்காரம் செய்து பாட
செப்பவரு வேதத்தை சைவ குருமறையோர் ஓதத்
திருஞான சம்பந்தர் அப்பர் ஆருரர்
எப்பவும் சொலும் தேவார ஒலிசேர் இலட்சுமணன்
தோட்ட விநாயகரே ஆடீர் ஊஞ்சல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவஞ்சேர் தேவர்களை கொடுமை செய்த
கயமுகாசுரனை பூதவாகனத்தேறியே
மாபூதகனாம் படைசூழ முறிதொருகையேந்தி
கொம்பதனால் மாய்த்து சுமக்கவே
நாதனவன் உமையோடு வாழ்த்தவே
செருகுற்ற சந்திரனை வாட்டியே
சீதவளர்சேர் தேவர் சூழ்ந்து பூசைசெய்இலட்சுமணன்
தோட்ட விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

கருணைமிகு நெகிழ்ச்சியினால் ஓடிவந்தே
பூசைசெய் அவ்வைக்கு கையிலை காட்டியே
பெருமையோடு உவந்து அருள்செய்தாயே அப்ப
பிள்ளையாரே உம் மிருகரத்தால் குட்டியே
அருள் வேண்ட பரிவுடனே வழங்கும் வள்ளலே
மண்ணவரும் விண்ணவரும் எல்லை காணாவருளே
பொருளை ஆல்சரசு மா வேம்பு தேமா சூழும் பதிமேவு
இலட்சுமண விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

திரிபுவன தத்துவரே ஆடீர் ஆடீர் ஊஞ்சல்
தீவண்ண மேனியரே ஆடீர் ஆடீர் ஊஞ்சல்
அரியுமரனும் எவரும் போற்றவே ஆடீர் ஊஞ்சல்
ஆதிபராசக்கி மைந்தனே ஆடீர் ஊஞ்சல்
பரிவுடைய பரமன் மகனே ஆடீர் ஆடீர் ஊஞ்சல்
பார் முழுதும் ஆனவரேஆடீர் ஆடீர் ஊஞ்சல்
விரியால்லரசு மா நிழலில் மேவினவரும் இலட்
சமணன் தோட்ட சிநாயகரே ஆடீர் ஊஞ்சல்

முப்பொதும் வந்து பணிஅடியார் வாழ
முறையாக விழாச் செய்வார் முயற்சிவாழா
தப்ப விடா தாண்டுதோறும் சேர்ந்தே அன்ன
தானஞ்செய் பரிபாலன சபையும் நீடு வாழி
ஒப்பரிய கோவில் மதில் கட்டிமடங்கள் கட்டி
உயர் மணிக்கோபுரங்கள் கட்டி வைத்தோர் வாழ
அப்பரமேஸ்வரர் முதலிலளித்த இலட்சுமனை
தோட்ட விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

## எச்சரிக்கை

அரியவன் மருமகனே விநாயகா எச்சரிக்கை
அமராதிபார் துதிரிரும் விநாயகா எச்சரிக்கை
அழகான எலிவாகன விநாயகா எச்சரிக்கை
அயன் மாயன் போற்றும் நாயகா எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான் சிவமகனே நாயகா எச்சரிக்கை
பேரின்பம் அருளும் விநாயகா எச்சரிக்கை
கருமாமிடி யகற்றும் கயவாகனரே எச்சரிக்கை
இலட்சுமனந் தோட்ட விநாயகா எச்சரிக்கை

## பராக்கு

கூ கூ கணபதி ஏவல் செய்தாய் பராக்கு
எய்தியவர் பிணிகளையும் இறைவா பராக்கு
சித்திபுத்திசக்தி நல்கும் நாயகா பராக்கு
விக்கிரமாதித்தன் பத்தினிக் கருளியவரே பராக்கு
கருதுபவரின் மனமலரின் கண்ணாய் பராக்கு
எத்திசையும் அருளும் இலட்சுமனண் தோட்ட
அருள் விநாயகரே எம் தலைவா பராக்கு

பருவமழை பெய்தினிதே வானம் வாழி
பயனுதவும் பயிர்கள் செழித்து பரந்து வாழி
தரும உயர்நீதிநெறியும் தழைத்து வாழி
தமிழ்மொழியும் சிவமதமும் சிறந்தே வாழி
திருநீறும் கண்டிகையும் உபநயனமும் வாழியே
திசைதோறும் மெய்யடியார்கள் செறிந்து வாழி
அருளுடையோர் பெருகிடும் இலட்சுமண தோட்ட
அருள் விநாயகரே வாழி வாழியே

## மங்களம்

விக்கின விநாயகரே மங்களம்
வீராதி வீரனே சுபமங்களம்
மாறாதி மாறனே மாணிக்கமே - என்
மன்றும் மருக்கோமுன்னதே மங்களம்

## அனுபல்லவி

விக்கின விநாயகருக்கும்
வேலன் வள்ளி குஞ்சரிக்கும்
சித்தி ஞான வைரவருக்கும்
சேருபதி நாகலிங்கருக்குமே
மங்களம் சுபமங்களம்
மங்களாதி மங்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பருத்தித்துறையைச் சார்ந்த தும்பை நகரில் விளங்கும் வில்வளைப்பதியிலிலெழுந்தருளியிருக்கும் உத்தர பிரத்தியங்கிராகாளி அம்பாள் திருவடிப்பதிகம்

*********

## விநாயக வணக்கம்

## காப்பு

****

பொல்லா அசுரர்களை பூண்டோடு ஒழிப்பவளை
நல்லாரைக் காத்தருளும் நாயகியை - வில்வளையில்
குடிகொண்ட பிரத்தியங்கிரா காளியைப் பாட
அடிதொழுதேன் ஆனைமுக வா!

## பதிகம்

****

காலகா லன்தனது காலடியில் வீழ்ந்திடக்
காளிகா தேவிநின்றாய்!
கரமாலை இடையிலும் சிரமாலை தோளிலும்
கட்டாக நீபுனைந்தாய்!
கோலவான் மேனி , இரு கொங்கைகள் ததும்பவே
"கோகோ" எனக்குதிப்பாய்!
கொடுவாள் குறைதலை ஒருபாலும் அபயவரம்
கொண்டதொரு பாலும் ஆவாய்!
சூலமாய்க் கண்கள் சுழற்றி, சிவந்தநாத்
தொங்கச் சினம் விளைப்பாய்!
சூடும் பிறைச்சென்னி பாடுவார் வல்வினைத்
தொந்தம் களைந்தொழிப்பாய்!
சாலநின் பாதம் தலைக்கொள்ளும் என்னையும்
தாங்குவாய் மலைநீலியே!
சங்கமமாய் வில்வளையில் குடிகொண்ட சக்தி,
உத்தரப் பிரத்தியங்கிராகாளிதாயே! (1)

ஒன்றில்ஒன் றாய்ப்பூதம் ஐந்துமே லயமாகி
ஒழியும் மயான ஊழி!
உக்ரமய ருத்ரனும் சக்தியில் லயமாக
உலவும்உத் தண்டகாளி!
அன்றன் றெனத்தள்ளி நின்றபிர மம்கொண்ட
ஆவேச ரூபதேவி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டகோ ளங்களைச் சுண்டிவிளை யாடிவரும்
அம்மை, நீ வாழி! வாழி!
இன்றும்என் றென்றும்நீ நின்றால் சிவம் , விலகி
ஏகினால் சவமல்லவோ?
எம்மான் சிவபதம் அம்மாஉன் பார்வையால்
எய்திடும் வரமல்லவோ?
தன்னலால் யாரும் தனக்குநிகர் இல்லாத
தத்துவ மகாசக்தியே!
சங்கமமாய் வில்வளையில் குடிகுாண்ட சக்தி,
உத்தரப் பிரத்தியங்கிராகாளிதாயே! (2)

பேயோடும் காட்டிலே ஓயாமல் இவ்வாறு
பெண்பாவை ஆடலாமோ?
பித்தான போதிலும் , கணவனை மிதித்தேறும்
பெண்டாட்டி ஆகலாமோ?
மாயா விகாரமான பரிபாகம் அல்லாமல்
மற்றொரு மயானம் ஏதோ?
வருக்லப காலம் சிவத்தினில் வெளிப்படும்
மாசக்தி கோலம்ஈதோ?
தூயரின் நெஞ்சிலே , தோளிலே , தொடையிலே
தோன்றும் மாசக்தியே!
தொலையா அகந்தைகள் தொலைந்தபர வெளியிலே
துள்ளும் பரஞ்சோதியே!
தாயாய் எனைத்தாங்கும் தத்துவ மலர்ப்பாதம்
தந்தருள் மகாதேவியே!
சங்கமமாய் வில்வளையில் குடிகொண்ட சக்தி,
உத்தரப் பிரத்தியங்கிராகாளிதாயே! (3)

ஆறு, குளம், கண்மாய் அடங்கலாம்; எவ்விதம்
ஆழிக்குக் கரைபோடலாம்?
ஆகாயம் பூமியை அளந்தஉனை எதுகொண்(டு)
அளந்துநான் உடைதேடலாம்?
சேறுபடு பூமியை உழலாம்; விதைக்கலாம்;
செந்தீயை யார்தீண்டலாம்?
தேவாதிதேவி, திரு ஆபரணம் எதனைநான்
தேர்ந்துனக் கேசூட்டலாம்?
நீறுபடும் ஊழியில் யாரையும் விழுங்குவாய்
நிவேதனம் எதுசெய்யலாம்?
நின்னைச் சரண்புகும் பிள்ளைஎன் கலிதீர
நீஎன்னை ஆட்கொள்ளலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாறுகிழி மாவில் ஒரு நூறுபயிர் விளைகின்ற
ஈழமண் டலராணியே!
சங்கமமாய் வில்வளையில் குடிகொண்ட சக்தி,
உத்தரப் பிரத்தியங்கிராகாளிதாயே! (4)

கண்ணிலே ஒளியாய்க் கலந்தவள் நீ! எனது
காதில்ஒலி யானவள்நீ!
கவியாய் உரைகளாய்ச் சுவையூறி, நாவிலே
காலடி பதித்தவள்நீ!
எண்ணிலே நில்லாத கலைஞானம் பலவாக
என்னுளே வாழ்பவள் நீ!
இம்மைக்கும் ஏழேழு பிறவிக்கும் துணையாக
என்பெரும் தெய்வதன்நீ!
மண்ணிலே கை, கால், புலன், பொறிக ளோடெனை
வாழ்விக்கும் தேவதேவி!
வல்லமை குறைந்து, யம வாதனையில் **வீழாது**
மைந்தனை ஏற்றருள்நீ!
தண்ணிலா தும்பைச் சடாமகுட தாரியே!
சாம்பசிவ னார்தோழியே!
சங்கமமாய் வில்வளையில் குடிகொண்ட சக்தி,
உத்தரப் பிரத்தியங்கிராகாளிதாயே! (5)

அட்டாங்க யோகம் அகண்டயா கம்புரியும்
ஆசையும் அறிவும்இல்லை!
அரைகால் எனைச்சேர்த்த பொருளையும் யார்க்கும்
அளிக்கின்ற ஈகையில்லை!
செட்டாய் இரண்டுகனி தீபம்இவை தவி, ஒரு
ஸ்ரீசக்ர பூஜையில்லை!
சித்ர விதானமுடன் முத்துநகை, வாகனம்
செய்துதரும் வசதியில்லை!
கட்டாயம் உன்முகம்காணும் அவா, வேட்கை
கவலையோ கொஞ்சமில்லை!
கலிகால பக்தனாம் அடியேனை எவ்விதம்
காப்பாயோ தெரியவில்லை!
தட்டாமல் யாவும் தரும்காம தேனுவே!
தாருவே! கொடைமேருவே!
சங்கமமாய் வில்வளையில் குடிகொண்ட சக்தி,
உத்தரப் பிரத்தியங்கிராங்காளிதாயே! (6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளால் அரண்செய்து காப்பாற்றுவாய்! தலை
மாலையால் காப்பாற்றுவாய்!
வட்டவிழி யால் குருதி சொட்டும் நா, பற்களால்
மைந்தனைக் காப்பாற்றுவாய்
தோளால் பகைவென்று காப்பாற்று வாய்! இடை
தொடைகளால் காப்பாற்றுவாய்!
தொங்கிய நெடுங்கூந்தல், தூக்கிய கரங்களால்
சூழ்ந்தெனைக் காப்பாற்றுவாய்!
ஆளாய் அடைந்தனன்; அந்தி, பகல், நிசியிலே
அகலாது காப்பாற்றுவாய்!
அடியேன் அகம், புறம், குடி, மாதர், பதவி, நலன்
அத்தனையும் காப்பாற்றுவாய்!
தாளால் சரண்தந்து காப்பாற்று வாய்! எனைச்
சந்ததம் காப்பாற்றுவாய்!
சங்கமமாய் வில்வளையில் குடிகொண்ட சக்தி,
உத்தரப் பிரத்தியங்கிராங்காளிதாயே! (7)

புத்திவடி வானவும் சக்தியே சிவஞான
போதவடி வானசக்தீ!
போகவடி வானவும் சக்தியே, ஐவகைப்
பூதவடி வானசக்தீ!
வித்தைவடி வானவும் சக்தியே, வீரமுடன்
வெற்றிவடி வானசக்தீ
வெட்கவடி வானவும் சக்தியே, பக்வ
விநயவடி வானகச்தீ!
பக்திவடி வானவும் சக்தியே, நித்திரை
பசியின்வடி வானசக்தீ!
பாசவடி வானவும் சக்தியே, பசுவோடு
பதியின்வடி வானசக்தீ!
சத்தின்வடி வானவும் சக்தியே, சிற்பர
சதானந்த ஓம்சக்தீயே!
சங்கமமாய் வில்வளையில் குடிகொண்ட சக்தி,
உத்தரப் பிரத்தியங்கிராங்காளிதாயே! (8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயதே வி,சிரோ தேவி, சிகாதேவி
ஈடிலா நேத்ரதேவி
இருமைக்கும் உதவிடும் கவசதே வீ,பகை
எய்திடும் அஸ்த்ரதேவி!
உதயதே வீ, ராத்ரீ தேவி, சந்த் யாதேவீ
ஓராறு பருவதேவி!
ஓங்கார தேவி, ஸ்ரீம் ஹ்ரீமாதி பீஜத்தில்
உலவும் க்லீம் காரதேவீ
புதியதே வீ, பழையதேவீ, தனம் தான்யம்
போற்றுசந் தானதேவி!
பூத, பை தீக, ரச வாத பே தங்களாய்ப்
பூத்துப் பொலிந்ததேவீ!
சதமாய்ப் புகுந்தனள் சௌபாக்ய, சேம, நலம்
தந்துநீ வாழி! வாழி!
சங்கமமாய் வில்வளையில் குடிகொண்ட சக்தி,
உத்தரப் பிரத்தியங்கிராகாளிதாயே! (9)

திருவடிகள் வாழி! திண்திண்ணென ஒலித்திடும்
சீரார் சிலம்பு வாழி!
செம்மாந்த மேனியுடன் அம்மா, உன்கண்களும்
சினமே கலந்து வாழி!
வருபகை துணித்தெறியும் வாள்வாழி! எமதுநல்
வாழ்வினை உவந்து வாழி!
வஞ்சனை, வினை, சூது, நஞ்சினை உறிஞ்ம்நா
மணிவாய், சிவந்து வாழி!
கருதிவரும் யாவும் கனிந்தருளும் ஆலயம்,
கனதனம் சிறந்துவாழி!
காலகா லன்பீடம் வாழி! அதில் கால்கொண்ட
கனல், அருள் சுரந்துவாழி!
தருமமுடி சூடிய தயானந்த வல்லீ, எம்
தாய்வாழி! தாய்வாழி!
சங்கமமாய் வில்வளையில் குடிகொண்ட சக்தி,
உத்தரப் பிரத்தியங்கிராகாளிதாயே! (10)

வில்வளை ஸ்ரீ மஹா பிரத்தியங்கிராகாளியம்பாள் திருவடிப்பதிகம்
முற்றிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக்குருக்கள்

அவர்களின் இன்புறுசேவையைப் பாராட்டி தும்பளை தெற்கு

அருள்மிகு ஸ்ரீ மனோன்மணியம்மன் தேவஸ்தானம்

உவந்தளித்த

பாராட்டிதழ்

*******

### வாழ்த்துப்பா

கல்வியின் உயர்வறிந்து கடமையாய் நடந்து
பல்கலை பலவும் கற்றுப் பாண்டித்தியம் மிக்கவராய்
சொல்லிய பெருமையோடு மானிப்பட்டமும் பெற்றோன்
நல்லவன் வல்லவன் என்றும் இனியவன் அவனே

உருத்திராக்கமுடன் உன்னத நீறு இலங்க
அருள்பொழி வதனமாக அன்புடன் மேடையேறி
மருளது ஒங்கும் காலை மகிழ்வுடன் அதைநிறுத்தி - திரு
வருள் வளர்சேவையாற்றும் வள்ளலே வாழி! வாழி!

வள்ளுவர் கோட்டத்தில் வளர்பிறையாக நின்று
அள்ளிய உணர்வையெல்லாம் நூல்வடிவாகத் தந்து
நள்ளிருள் வேளை நல் சூரியனென நின்று
வெள்ளையாய்ச் சேவையாற்றும் வித்தகா வாழி! வாழி!

கற்றாங்கு ஒழுகி கடிமலர்தூவும் கனிமொழியாளனாக
சொற்றுறை வள்ளலாகச் சோர்விலாத் தலைவனாக
நற்பிரசங்கியாக நயம்விகு விமர்சகனாக
பற்பலரும் போற்றும் பண்புறு சீலருக்கு

## 'இலக்கிய மகுடம்'

என்னும் இன்புறு விருது
மாவட்ட வைத்திய அதிகாரி, வைத்திய கலாநிதி
திரு.எஸ்.கதிரவேற்பிள்ளை
அவர்களால் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

தலைவர்
திரு.க. சின்னத்தம்பி

செயலாளர்
திரு.ஏ.பரராஜசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்பொழிவின் நாயகனே

தியாக சிறி சோமஸ்கந்தராஜக் குருக்களே
திரண்ட அன்பிற்கு அணிகலனே
திரண்டு நிற்கும் மக்களிற்கு நல்ல நெறி போதித்தீர்
திருவருட் செல்வர் காட்டிய வழியினைக் காட்டினீர்
தமிழ் வாழத் தான்வாழும் தமிழ்வள்ளலே வாழ்க

பேதங்கள் ஏதுவுமற்ற தூய அன்பிற்கு - உங்கள்
பெயர் சொல்ல அதுபோதுமோ நாம்
பெயர் சொல்லி மாணவர் உலகமே உங்களை வியக்க
பெயரிற்கும் புகழிற்குமே வாழாத தமிழறிஞனே வாழ்க
பேரன்பினால் கற்றவர் சபையே உங்களைப் புகழும்.

மேடையில் நாடகம் ஆடி முடித்து
மேதையாய் வாழ்பவர் அல்லர் நீங்கள்
மேன்மையான குறிக்கோளில் என்றுமே தவறாதவர்
மேதையாய் பேசினாலும் பேதையையும் வாழவைக்கும்
பெருமேதையே உங்கள் நாமம் என்றுமே வாழும்.

சதிகொண்ட உலகமெல்லாம் விதிமாற்றி
சரித்திரம் நன்றே உருவாக்கும் வரலாற்று நாயகனே
சாலச்சிறந்தோங்கும் தமிழ்த்தென்றலின் கலங்கரை விளக்கமே
சமுத்திர விழாவினிலே பெருந்திரள் மக்கள் மத்தியில்
சொல்லிவைத்த அன்பு நெறி என்றும் மறையாது

கருவில் உருவாகும் குழந்தையும் - நாண
கலங்காது இவர் தமிழதை எடுத்தியம்பும் - தமிழிற்கோர்
கல்விக்கூடமாம் வள்ளுவர் கோட்டம் அதனையும்
கல்விக் கடலாய் தலை நிமிர தமிழ் வாழத்தான்வாழும்
கல்விமானே நீங்கள்பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்க.

தமிழ்த் தென்றல் கல்விநிலையம்
வியாபாரிமூலை.

உபயகாரர்கள்
வியாபாரிமூலை
வீரபத்திரர் ஆலயம்.
1998.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து மடல்
## வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய பரிபாலனசபை - சைவசமய பாதுகாப்பு சபை
# "அருளுரை வேந்தன்"
# சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் B.A
## அவர்களைப் பாராட்டி வழங்கிய
## வாழ்த்துப்பாடல்

இன்னறுங் கனிகளின் சாறு பிளிந்தே
இனியநற் சுவைதரு தேனுங் கலந்தே
நன்றருங் கருத்தெல்லாம் நாளும் பொதிந்தே
நன்மணிக் குரல்நடை தமிழிற் சொரிந்தே
சின்னவ ராற்றலின் பெரியவ ரென்றே
சிறப்புரை வதிரிபூ வற்கரை வந்தே
என்னவர் யுறையென எம்பிணி யறுத்தே
எமக்கருள் கிட்டிட வந்தநற் குருவே

அம்மனின் அருள்பொலி வாகி நின்றவர்
அன்னையமர் நெல்லண்டை ஆலய அர்ச்சகர்
செம்மையா சிரியநம் பணியென நிற்பவர்
செந்தமிழ் இந்து நாகரீகம் உரைப்பவர்
தம்மநம் பணிதனை தலந்தோறும் புரிபவர்
தகமைசேர் பட்டதாரியாய் ஆனவர்
இமைப்பொழுதாகிலும் இயன்(று) உழைப்பவர்
இமையின் கண்ணே கற்று விளைந்தவர்

அருளுரை ஆலய அமைப்பெனும் உண்மை
ஆங்கெலாம் பக்தர்கள் வழிபடும் முறைமை
பெருமைசேர் பிள்ளையார் பக்தியின் நன்மை
பிறந்திடும் மனிதரின் முழுமுதற் கடமை
அறன்வழி நின்றலின் ஆகிடும் பெருமை
அறிந்திடச் சோதிடம் காட்டிடும் தன்மை
நறுமலர்ப் பூக்களால் தொழுதிடும் வழமை
நமக்கெலாம் பத்துநாள் முத்தெனும் நன்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமொடு நாளும் வாழ்த்திட வாழி
வள்ளுவர் கோட்டத் தலைவரே வாழி
அளப்பெரும் ஆற்றலே பெருகிட வாழி
அன்னையின் அருளொடு உயர்வுற வாழி
வள்ளலான் பூவற்கரையான் அருளும்
வழங்கிட வேண்டினோம் ஐயரே வாழி
தொழுமுறையுரைத்த அருளுரை வேந்தன்
சோமஸ்கந்தராஜக்குரு வாழி

பாடல் ஆக்கம் : கோ. லோகநேசன். ஆசிரியர்.
வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய பரிபாலனசபை
சைவசமய பாதுகாப்பு சபை
1994 - 07 -21


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திராவத்தை அருள்மிகு ஞான வைரவர் ஆலயத்தில் 10.09.2008 - 22.09.2008 வரை நடைபெற்ற மகாகும்பிஷேக நிகழ்வுகளை சிறப்புற நடாத்தி நிறைவுறுத்திய தேவஸ்தான கும்பாபிஷேக பிரதம குருக்கள்

**சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்களை**

நன்றியுடன் வாழ்த்தி,

**"சிவாகம வித்யா பூசணம்"** என்னும் கௌரவ பட்டத்தினை வழங்கி கௌரவமளித்து வழங்கிய

## பாராட்டு பாமாலை

சீரோங்கு ஈளவள நாட்டினிலே சிறப்புடனே
உருத்திராவத்தை அருள்மிகு ஆலயப் பதிதனிலே
செழுமை மிகு ஆலரசு சோலை தனிலே
சீரும் திருவும் பொலிய அருளாட்சி புரிகின்ற
ஞானத்தின் திருவுருவா காவற் புரிகின்ற
ஞான வைரவர் ஆலயத்தில்

பட்டங்கள் பல பெற்று பாரினிலே மிளிர்கின்ற ஞானச் சுடரொளியாம் சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாச் சிவாச்சாரியார் சிந்தை மகிழ சிறப்புடனே ஆற்றிட்ட கும்பாபிஷேகமதனை நினைவுகூர்ந்து தெய்வத் தூதனாம் சோமாஸ்கந்தராஜாக்குருக்களை உளமர வாழ்த்துகின்றோம்.

நானிலத்தில் புகழ்பூத்த ஞானவித்தகர்
பெற்ற பட்டங்கள் பலவுடனே தங்கள்
குருத்துவ வெள்ளிவிழா ஆண்டில் இச்சிறப்புறு நன்நாளில்
அருள்மிகு ஞான வைரவர் ஆலய பரிபாலன சபையினரால்
**'சிவாகம வித்தியா பூசணம்'** என்ற மாண்புமிகு பட்டமதனை
மாட்சியுடன் வழங்குகின்றோம்.
ஏற்றிடுவீர் மகிழ்வுடனே.

ஆலய பரிபாலன சபை

வாசித்து அளித்தவர் : **திரு.வே.உதயமோகன் B.B.A(HONS).Dip.in.Ed.**
உபசெயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பாராட்டு பாமாலை

அருட் பிரபாகரசீலர் சிவாகம உபதேசவாசஸ் பதி

**'சிவாகம வித்தியா பூஷணம்'**

**சைவ சித்தாந்த பண்டிதர்**

**சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் M.A அவர்கட்கு**

**வடமராட்சி வடக்கு உருத்திராவத்தை**

அருள்மிகு ஸ்ரீஞானவைரவர் தேவஸ்தானத்தில் சுபமங்களம் நிறைதரு சர்வதாரி வருடம் ஆவணிமாதம்

11.09.2008 - 22.09.2008 வரை நிகழ்ந்த மகா கும்பாபிஷேக கைங்கரியம் சிறப்புடன் நடாத்தி எங்கள் அனைவருக்கும் வளம் நிறைந்த தொண்டாற்றிய பெருமதிப்புக்குரிய குரு நடத்தை போற்றி இந்து இளைஞர்கள் வழங்கிய பாராட்டுப் பத்திரம்.

அவைதனில் முந்தியே அருட்திறத்துடன் சேவைதனை செய்திட்ட
எங்கள் ஐயா கோவை போல் பல செய்திகளால் எங்கள்
ஊர் மகிழ்வுடன் உவப்ப ஞானவைரவர்க்கு அருள்ஒளி
விளங்க கும்பாபிஷேகம் செய்து உங்கள் குருத்துவ இருபத்தைந்து வருடசேவையினில் குறிப்பிட்ட எங்கள் ஆலயத்தில் **"சிவாகம வித்தியா பூஷணம்"** பட்டம் பெற்றவரே இளையவர்கள் இளைஞர் நாம் ஒன்றாகி வாழ்த்துகின்றோம் பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவே!

உருத்திராவத்தை
புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை,
26.09.2008.

இங்ஙனம்
உருத்திராவத்தை
ஞானவைரவர்
இந்து இளைஞர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

இணுவில் மேற்கு திருவருள்மிகு, செகராசசேகரப் பிள்ளையார் திருக்கோயில் வருடாந்த மகோற்சவ கால (2001) இரவுச்சிறப்பு நிகழ்ச்சியாக கலாநிதி - சபா ஜெயராசா (தலைவர், யாழ் - பல்கலைக்கழக நுண்கலைப்பீடம்) அவர்களின் தலைமையில் ஆன்மீகத் தொடர் சொற்பொழிவு ஆற்றிய **சிவஸ்ரீ. தி. சோமாஸ்கந்தராஜாக்குருக்கள்,** அவர்களின் சமய , சமூகப்பணிகளைக் கௌரவித்து , மேற்படி ஆலய சமூகத்தினர் அன்புடன் வாழ்த்தி வழங்கிய

# பாராட்டுப் பாமாலை

கல்வியில் உயர்தலோடு
கருணை, காருண்யம் மிக்க
சொல்லோடு செயலும் - உள்ளம்
சோர்ந்திடா(து) உறுதி சேர்க்கும்
வல்லமை மிகுந்த ஞான
வழியினில் பெரியோர் கண்ட
உண்மைகள் சேர்ந்தவாறும்
உரைசெய்(து)எமது உள்ளம் கொண்டீர்!

அறிவினில் ஆழம் காணும்
ஆற்றலும், மரபுசார்ந்த
நெறியினில் தூய்மையோடு
நேரிய வழியில் நாளும்
உயரிய பெரியோரோடு
ஒன்றிடக் கூடிவாழும்
இளைஞரே! இறைதொண்டாற்று
இதயமே நீடுவாழி!

அந்தணர்- அறவோர் என்ற
அரும்பொருள் சிறக்க - முன்னோர்
செந்நெறி அறிவில் சேர்த்த
செழுமை கொண்(டு) இனிமையாக
எங்களின் கோயில் வந்து
ஏற்ற நற்கதைகள் தந்த
நன்மனத் தொண்டர்- தெய்வ
நாவன்மை இனிது வாழி!

தந்தை, தாய் போற்றும் - எங்கள்
சமயம் செய் தவத்தின் பேறாய்
சிந்தையில் தெய்வ அன்பும்
சீரிய குணமும் கொண்டு
நன்மை செய் குருவாய் ஆசி
நயந்தவர், அறிஞர், சான்றோர்
கண்ட நல்வழியில் நாளும்
கலையுள்ளம் கொண்டீர் வாழி!

ஊர், அயல் , சுற்றம் - எங்கள்
உறவுகள் சிரித்து வாழச்
சேரிடர் நீங்கி - இன்பம்
செழித்து இவ்வையம் ஓங்க
மாரிபெய் குளிராய் - எங்கள்
மனதும் மெய் இன்பமாக
ஓதிய மொழிகள் யாவும்
ஒளிதரும்! வாழ்த்துகின்றோம்!

மூவர் தமிழாய்
முழுமை தரு வாசகமாய்
ஆதி இதிகாசப்
புராண அருமறையாய்
ஓதும் மெய் யோகர்
ஒழுக்க 'நற்சிந்தனை' யாய்
வாரியார் சொல்வளமாய்
'வள்ளலார்' கவிமொழியாய்
வாழும் திருநாவலராய்
வளரும் பயிர் என நாம்
காண - அருள்புரியக்
கணபதியே துணையாக...!

பேராசிரியர். சபா ஜெயராசா அவர்களால் ஓங்கார தரிசனரூபன் என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இங்ஙனம்
ஆலய சமூகத்தினர்,
செகராசசேகரப் பிள்ளையார் கோவில்
இணுவில்

ஆக்கம் : நாக சிவசிதம்பரம்
08.05.2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வொல்லை விநாயகர் ஆலயம்
புலோலி மத்தி
பருத்தித்துறை.
21.02.1996.

## அவ்வொல்லை விநாயகர் ஆலய
## கும்பாபிஷேகம்

முதல்வன்
அகிலனின் புதல்வன்
அழகன் முருகனின் தமயன்
இழகிய மனத்தானெம் இதயங்களின் காவலன்
விதியையும் மாற்றுவான் விநாயகன் எங்கள்
மண் செய்த பாக்கியம் எம்மருட்
புண்ணியன் எம்முள்ளுறைவது
உணர்வீர்.

எவ்வினையும் நீக்கியெம் இல்லமெலாம் திகழ
எவ்வமெனும் சாகரத்தில் எம்மவர்கள் மூழ்கிடாது
பவ்வியமாய்க் காக்கும் எங்கள் அருட் தெய்வம்
அவ்வொல்லை விநாயகன் பொன்னருள் பொழிகின்றான்.

எம்மிறையோன் இன்னருளை எம்மவர் பெற்றிடவே
பல்சிரம மத்தியிலும் நல்மனங் கொண்டவராய்த்
தன்னருள் வலிகொண்டு பிரசாதித்துத் தரும்
நல்லோர் அருட்பிரபாகர சீலர் வாழ்க.

சொல்லின் செல்வர் பல்கலைக் கலைஞர்
சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜாக் குருக்கள் வாழ்க
சுவைமிகு சொற்பொழிவால் எம்மண் அழுக்ககற்றும்
சிவாகம உபதேச வாசஸ்பதி வாழ்க.

1996.02.07 முதல் எமது அருள்மிகு அவ்வொல்லைப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக வைபவத்தினைச் சிறப்புற நிகழ்த்தி விநாயகர் பெருமை, ஆலய வழிபாட்டு நெறிகள், எனும் விடயங்கள் பற்றிச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தி எமது ஊர்சிறக்கப் பணிபுரிந்த சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள் அவர்கட்கு **'சைவசெந்நெறிப் புலவர்'** எனும் பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்துவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். அத்திருவருட் காரியங்களை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம சுவாமிகள் சித்ருவானந்தா அவர்கள் கருணையுடன் ஆற்றலுள்ளத்தில் மேலும் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

நன்றி.

சுவாமி சித்தரூபானந்தா
21.02.1996.

ஆலய நிர்வாகிகளும்,
அவ்வொல்லை விநாயகர் அடியார்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "என் குருஅருட்சக்தி" – அன்பு மாணவன்
## வேல் நந்தகுமார் (B.S.Hons) யா/ தேவரையாழி இந்துக்கல்லூரி

என்னை நிமிர வைத்த
நிமிர்வுகளில் இவரும் ஒருவர்
எப்போது போனாலும்
அன்போடு வரவேற்று
அறிவோடு பரிமாறி
ஆசிர்வதித்து அருள்சொல்லி
ஒரு மனிதரைச் சந்தித்து
வந்தேன் என்று சொல்ல
முடியா உணர்வுடன்
ஒரு அரசனுக்குமப்பால்
அறிவுக் களஞ்சியத்தை
அன்னையின் அருட்சக்தியை
தரிசித்த சந்தோசம்
மனம் நிறைக்க
வீடுவரும் காலங்கள்
இப்போதும் நெஞ்சுக்குள் பசுமையாய்
இன்றும் தொடர்ச்சியாய்
அந்தணர் என்றால்
பொதுவாய் அருகிருந்துபேசார்
யாவருடனும் பழகார் என்ற
அர்த்தங்களை உடைத்து
புதிய தரிசனமாய் எங்கள்
கண்ணன் ஐயா சாதி மத
வெளிதாண்டிக் கூட
மனிதரோடு பழகுவார்
இடையிடையே சில்லடையாய்
காமத்துப்பாலில் கதை சொன்னாலும்
அறத்துப்பாலை என்றும் மறப்பதில்லை
ஓயாத தேடலும் வாசிப்பும்
பன்முக அறிவும் எதிர்காலம் பற்றிய
தீர்க்க தரிசனமும் சோதிடமும்
சாத்திரமும் மந்திரமும் சக்தியும்
ஒன்றாய் இருக்கும் இடம் அவரிடம்தான்
அவர்வீட்டு புத்தக அடுக்குகளை
எண்ணிப் பார்த்தே வியந்திருக்கின்றேன்
ஒரு நூலகமாய் எத்தனை புத்தகங்கள்
அந்தநாள் முதல் இந்தநாள்வரை
வெளிவந்தஅத்தனையும் அங்கு
காட்சியாய்
அவரது அறிவாழத்தின் சாட்சியாய்
அவற்றில் பலதை அவர் அன்போடுகூற
படித்து உயர்ந்திருக்கிறேன்
புத்தகங்களை நேசிப்பவர்களை நானும்
அதிகமாய் நேசிக்கிறேன்
அதனால அவரோடு நேசம் அதிகம்
சைவமும் தமிழும் பிரிக்க முடியாப்
பிணைப்பு என்று படித்திருக்கிறோம்
கண்ணன் ஐயாவில்தான் அதைக்
கண்டு உணர்ந்திருக்கிறோம்
இத்தனை வயதுக்குள்
எத்தனை சாதனைகள்
வெளிவாரி மாணவனாய் தொடங்கிய
பயணம் இன்று
உயர்பட்டங்கள்வரை உயர்ந்தபடி
சித்தாந்தபண்டிதராய் சைவப்புலவராய்
தமிழ்முதுகலைமானியாய் அதிபராய்
கல்வியியல் திட்டமிடல் என எத்தனை
அறிவுக் கலசங்கள் ஒன்றாகிய
முடிசூடல்கள்
அருள்வடிவாய்க் குருவடிவாய்
ஆராதனை செய்கையிலே அந்த
நெல்லண்டையாளே நேரில் வந்ததுபோல்
வீரமாகாளியே வீற்றிருப்பதுபோல்
பக்திப்பரவசத்தில் மெய்சிலிர்க்கும்
எத்தனை பிரச்சனைகளோடு வந்திடினும்
எல்லாம் தீர்த்து வைக்கும் சீர்மியராய்
அன்னையின் அருள்வடிவாய்
அரியவர்க்கு அரியவராய்
எளியவர்க்கு எளியவராய்
பட்டிமன்றங்கள் பலதில்
அவர் நடுவராய்
வள்ளுவர் கோட்டத்தின் வழிகாட்டியாய்
இளங்கோ கழகத்தின் ஆலோசகராய்
இளையோரை உயர்த்திவிடும் ஏணியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பேச்சாளராய் சிறக்க எம்
அறிவைத் தீட்டிவிட்ட கூருக்கு
அழியாத எழுத்தால் நன்றி
சொல்கின்றேன்
நெல்லண்டையான் வெளியீட்டுக்
[கழகமதன்
செயளாலராய் எனை உயரவைத்த
மதிப்புக்கு நன்றி சொல்கின்றேன்
அறிவை தொற்ற வைப்பதும்
அடுத்த தலைமுறைக்கு கையளிப்பதும்
அவர் குருநாதர்கள் அவருக்கு
கற்றுத்தந்த பாடங்கள் - இன்று
நாம் பெற்றுக் கொள்ளும் ஓடங்கள்
எப்போதும் புத்தகமும் புது அறிவும்
வித்தகமே இல்லா விவேகமும்
அவர் சொத்தெனவே விளங்க
மரபும் நவீனமும் கலந்துவரும்
அவர் சிந்தனைகள்
வாழ்த்துப்பாக்களுள்ளும்
கண்ணீர் அஞ்சலிகளுள்ளும்
கரைந்துருகும் அவர் கவியுள்ளம்
கண்டு மெய்சிலிர்க்கும்
சொல்வாக்கும் செல்வாக்கும்
கொண்ட அவர் வாழ்விலும்
எத்தனையோ சோதனைகள், இழப்புகள்
அன்னையவள் அருளாள்
அத்தனையும் தாண்டி இன்று சாதனைகள்
சாதிகளுக்கு அப்பால்
ஆன்மாக்களை நேசிக்கும்
அருள் வடிவமே
அவர்தம் தனிப்பெருமை
அறிவும் ஆற்றலும் அருளும்
ஒன்றுகூடி அற்புதம் புரியும்
அந்தணர்க்கு அவரே சாட்சி
பரம்பரை ஞானமும் பக்குவத்தேடலும்
சிரம்தொழு தெய்வமும்
வரம்பல பெற்றவர்
வாழ்வதன் ரகசியம்
சங்க இலக்கியம் திருக்குறள்முதல்
இன்றைய நவீனத்துவ உலகமயமாக்கல்
[வரை
அத்தனை நோக்கும் அறிந்த
அறிவுப் பொக்கிசமாய்
நல்ல குருநாதர்களின் அறிவும்
ஆசியும் பெற்ற அறிவாலயமாய்
மிளிரும் அவருக்கு
மாணவனாய், சனத்குமாரனாய்
மனம்மகிழ்கின்றேன்
நந்தா என அழைத்து
சிந்தாமல் சிதறாமல்
அவர் சொல்லும் சீர்மியங்கள்
என்னை நெறிப்படுத்திய ஆகமங்கள்
ஆலயத்தின் பக்திமிகு பூசகராய்வீட்டிலே
பாசமிக்க தந்தையாய்
மனையாளின் அன்புமிகு கணவராய்
மாணவர்க்கு நல்ல ஆசானாய்
கடமையிலே நல்ல அதிபராய்
வீடுவரும் பக்தர்க்கு
அருட்சக்தித் தெய்வமாய்
நண்பருக்கு நண்பராய்
அன்பருக்கு அன்பராய்
யாவையுமாய் எல்லையுமாய்
தோன்றாப் பெருமையராய்
ஈர்த்தென்னை ஆண்கொண்ட
எந்தைக்குரு அருட்சக்தியாய்
சோமஸ்கந்த தரிசனமாய்- இன்று
அந்தண வாழ்வில் வெள்ளிவிழா
கண்டு வாழும் வயதால்
பொன்விழா காணவுள்ள
தோற்றச் சுடரொளியே
சொல்லாத நுண்ணுணர்வே
கிரியை நெறியால் உயர்ந்த
அரிய அருளாளரே
இன்னும் பொன்விழா வைரவிழா
நூற்றாண்டுவிழா கண்டுவாழ
ஏற்றி வைத்த அறிவுத்தமிழாலே
ஏற்றமுடன் போற்றுகின்றேன்
வாழ்க பல்லாண்டு
வளர்க உம் தொண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி துணை

தும்பளை தெற்கு , நாவலடி திருவருள்மிகு சக்தி அம்மன் தேவஸ்தான புனராவர்த்தன மகாகும்பாபிஷேகத்தை 30.11.2008லும் அதனைத் தொடர்ந்து சங்காபிஷேகத்தை 21.12.2008லும் கும்பாபிஷேக பிரதிஷ்டா குருவாக ஆகம முறைப்படி நடாத்திய

## சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் M.A

### அவர்களுக்கு மேற்படி தேவஸ்தானம் ''ஆகம அருட்பிரவாக சாகரம்'' என்னும் பட்டம் வழங்கி கௌரவித்த போது

### இவர்ந்தளித்த இனியவிதழ்

சீர்பெற்ற இலட்சமணன் தோட்டம் என்றும்
சிறப்புற்று நலம்பெற்றுத் திக்கு எட்டும்
பார்உற்ற நாடெல்லாம் பரவச் செய்ய(ப்)
பகலவன்போல் இம்மண்ணில் உதித்து நல்ல
பேர்பெற்ற தியாக சோமாஸ்கந்த ராஜா
பெருங்குருவே திருவுருவே தங்கள் கையாலே
ஊர்போற்ற நாவலடி சக்திஅருள் பொழிய
உற்ற குடமுழுக்கை உயர்வாகச் செய்தோய்

எல்லா நிலைகளிலும் ஏற்றமுறு எங்குருவே
ஏழை எளியவரின் சைவ விழுமியமே
நல்ல ஆகமவிதியை நாடறியச் செய்பவரே
நாமகளாம் வாணியருள் நாவினிலே உற்றவளே
வல்ல அம்மன்அருளால் வாடாத தாமரையே
வள்ளுவ காந்திய வழிறையில் வாழ்பவரே
எல்லை இல்லாதிப்பிறப்பில் எல்லவரும் இவர்ந்தளித்த
ஏற்றமுறு பட்டங்கள் எத்தனை எத்தனையோ

"அன்னை அருளாளன்" "அருட்பிரபாகர சீலர்"
"அருளுரை வேந்தன்" "ஆசிரிய மணி"
"அன்னை அருடசெல்வர்" "அம்பிகை வாசன்"
அரும் "சொற்பொழிவு நாயகன்" "செந்நெறிப்புலவர்"
முன்னைய "சித்தாந்த பண்டிதர்" "சித்தாந்தசாகரி"
முடிவிலா "சிவாகம உபதேச வாசஸ்பதி"
தன்னை மறந்த "சித்தாந்த சேகரம்"
தாழாத "சிவாகம வித்தியா பூசணம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலம் கண்ட "இலக்கிய மகுடம்"
"சைவ சித்தாந்த சாகரம்' மன்னும்
"சமய சாதனை செந்நெறி யாளன்'
"சக்தி உபாசகதீரர்" "திருவருட் செல்வர்"
சமமான "ஓங்கார தரிசனரூபர்" "குருமணி"
சதா "கும்பாபிஷேக துரந்தரர்" "சொல்லின் செல்வர்"
சமகம் நீங்காத "கிரியாக் கிரமசோதி"
சபை உவக்கும் "பெரியபுராண சொல்வாருதி"

சகமதில் குருவாகி இரண்டுபத்து ஐந்தாண்டு
மனுநீதி கண்டசோழ மகராசன் போல
மகவை நினைத்துருகும் வேளையிலும் மார்க்கநெறி
மாறாக் கிரியைமுறைக் கிவரின்றி வேறெவரும்
தகவாய் இருப்பரெனச் சாற்றரிது என்பதனால்
தகுதிபெறு சான்றோன் சாஸ்திர வல்லுநர்க்கு
**"ஆகம அருட்பிரவாக சாகரம்"** ஆம்பட்டத்தை
அளிக்கிறது நாவலடி சக்தி தேவஸ்தானம்

நெல்லண்டையாள் தந்த நீண்டபுகழ் கொண்டவரே
நேரிய கொள்ளையில் நிலையாக நிற்பவரே
வல்லபல பட்டங்கள் வாங்கிக் குவித்தவரே
வாழ்நாள் முழுதும்கலை வாணியருள் பெற்றவரே
நல்லநாவல் சக்திக்கு நாளும் பணிசெய்து
நாடறிந்த தெய்வமென நாலுபேர் நாவுரைக்க
எல்லையிலா இன்பமுடன் ஏற்றமுறு வாழ்வுபெற்று (ப்)
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு வாழியவே.

சுபமங்களம்

ஆக்கம் :
திருஅருள்ஜோதி
ஆ.வடிவேலு

நாவலடி சக்தி அம்மன் தேவஸ்தானம்
21.12.2008.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம்

## அறிவித்தல்



### எமது குரு சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்

அவர்களின் குருத்துவ வெள்ளிவிழா பி.ப.4.00 மணிக்கு ஸ்ரீநெல்லண்டைப் பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் விசேட பூசையுடன் ஆரம்பமாகி 4.30 மணியளவில் நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன், வடபத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தில் விசேட பூசையுடன் நிறைவுற்று "இராஜலட்சுமி வாசா" இலட்சுமணன் தோட்டம் நெல்லண்டை, தும்பளை அவரது இல்லத்தில் பெரியோர்களின் ஆசியுடன் வெகு சிறப்பாக நடைபெறும்.

குறிப்பு:- நூல் வெளியீடும், பெரு விழாவும் நடைபெறும் திகதி பின்ன அறிவிக்கப்படும்.

அன்பர்கள், ஆர்வலர்கள், மாணவர்கள் மற்றும் உதவி செய்ய விரும்புவோர் நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகத் தலைவர், செயலாளர், பொருளாளருடன் மேற்படி முகவரியில் உடன் தொடர்புகொள்ளவும்.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| ..இராமச்சந்திரன் | வே.நந்தகுமார் | ர.ராஜீஸ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24.05.2003
பொன்னாலை
சுழிபுரம்

பெருமதிப்பிற்கும் வணக்கத்திற்குமுரிய **சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்** அவர்கட்கு, ஐயா

தாங்கள் வழக்கம்பரை ரங்கநாதன்மூலம் அனுப்பிய "யோகசித்து" நூல் கிடைக்கப்பெற்று மகிழ்ச்சியடைந்தேன். இக்காலத்தில் கிடைத்தற்கரிய சிறந்த நூல்களில் திரட்டிய விடயங்கள் அனைத்தும் இக்காலத்துக்கு பெரும்பயன்தரத்தக்கன. பசுவைப்பற்றிய நூல் சமீபத்தில் கிடைத்தது வாசித்திருந்தேன் அதனையும் இணைத்திருப்பது நூலுக்கும் பெருமை வாசிப்பவருக்கும் பெரும்பயன்

சிலவாரங்களுக்கு முன் உங்கள் உறவினரும் எனது பேரன்பரும் ஆகிய சிவதர்ம வள்ளல் சச்சிதானந்தம் அவர்கள் ஒரு "யோகசித்து" நூலை அன்பர் ஒருவர் மூலம் அனுப்பியிருந்தார். பின் அவரைச் சந்தித்த போது நீங்கள் தன் உறவினர் என்றும் அந்த நூல் நீங்களே அவர்மூலம் அனுப்பப் பெற்றுக் கொண்டதாக உங்களுக்கு ஒரு கடிதம் எழுதும்படி கேட்டிருந்தார். நானும் சம்மதித்திருந்தேன் ஆனால் எங்கள் ஆலயத்தில் முதன்முதலாக மகோற்சவம் செய்ய வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டிருந்ததால் அவர் விருப்பம்படி என்னால் கடிதம் எழுதப்படவில்லை. அப்படி எழுதாது இன்னுமொரு புத்தகம் எனக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பாகிவிட்டது!

"கண்ணில்லான் பெற்று இழந்தான்" என்று ஒரு தொடர் கம்பராமாயணத்தில் உள்ளது என்று கருதுகிறேன். பிறவிக்குருடன் கண் இல்லாமல் கஷ்டப்படுவான், அப்பிறவிக் குருடனுக்கு கண்பார்வை கிடைத்து பின் அதனை இழக்கும் நிலைவந்தால் அவன் படும் கஷ்டங்களும் வேதனையும் கூறிமுடியாது. இயல்பாகவே பிள்ளைஇன்றி கவலைப்படுவது ஒன்று. ஒருநாள் அழகிய ஆண்குழந்தையைப் பெற்று இழப்பது என்பது மிகத் துன்பமான ஒரு நிகழ்வு. இப்படியான ஒரு துன்பம் என்றென்றைக்கும் மனத்தை அரித்துக் கொண்டே இருக்கும் என்பது உறுதி. அப்படியிருக்கவும் அப்பிள்ளையின் நினைவாக இப்படி ஒரு நூலை வெளியிட்டு ஆறுதலடையவோ - அப்பிள்ளைக்கு ஆன்மசாந்தி ஏற்படவோ முயன்ற உங்கள் தந்தை உள்ளத்தை பாராட்டாமலிருக்க முடியாது. அதே சமயம் உங்கள் சோகத்திலும் பங்கு கொள்கின்றேன்.

எம் கடவுளாகிய சிவபெருமான் உலகில் ஒவ்வொருவரும் இருவினை ஒப்பு சத்திநி பாதம் எய்த விரும்பி ஐந்தொழில் செய்கின்றாரேயன்றி ஒவ்வொருவரும் இவ்வுலக வாழ்வில் 16ம் பெற்று திருப்தியாக வாழ சங்கற்பித்திருக்கவில்லை. ஆதலால் வாழ்வில் ஏற்படும் துன்பம் இன்பம் எல்லாவற்றையும் நமக்கு இருவினை ஒப்பு உண்டாக சிவபெருமான் தருகின்றார் எனக் காணமுயன்று ஆறுதலும் சிவனருளும் பெறுவோமாக.

- கூடியவிரைவில் நேரில் - கடிதத்தில் சந்திப்போமாக.

அன்பன்
தி.பொன்னம்பலவாணர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சகஸ்ரவதனாயை நம:

**தும்பளை ஸ்ரீ நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் பிரதமகுரு**

**சிவஸ்ரீ தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் ஐயாவுக்கு 04.09.2008 (சர்வதாரி ஆவணி 19 வியாழன்) அவர்தம் ஆச்சாரியபிஷேக இருபத்தைந்தாம் வருட நிறைவு வெள்ளிவிழா மகோத்ஸவ நிகழ்விற்கு**

தும்பளை, வில்வளை, அருள்மிகு

ஸ்ரீ மஹா பிரத்தியங்கிராகாளி அம்மன் தேவஸ்தான

பரிபாலன சபைத் தலைவர்

தம்பு - செல்வராசா அவர்களால்

மகிழ்ந்து வரைந்தளித்த

**நன்றி பாராட்டு நல்வாழ்த்து இதழ்.**

திருமாலின் தங்கையரை சிந்தையிலும்
சிரத்தினிலும் தினமும் சூடிப்
பெருகார்வத் துடன்அன்பர்க் குபகாரம்
பெருமையுடன் புரிந்து வாழும்
திருவாகத் திகழ்கண்ணனையா எனும்
செம்மனத்துச் செல்வர் எங்கள்
உருவாகும் புவனேஸ்வரியின் உறுதுணையாம்
உத்தமர்தாம் வாழ்க! வாழ்க! 1

அன்னாரின் நன்மனைவி அருங்குணங்கள்
உறைவிடமாம் துணைவி யாவாள்
என்னாளும் கணவர்போல் இயல்புடை
உறவினர்க்கும் விருந்தி னர்க்கும்
பொன்னான உதவிபல ஆர்வமுடன்
புரிகின்ற பொற்பு வாய்ந்தாள்
தன்நிகரில் தம்பதிகள் தரணியிலே
பல்லாண்டு வாழ்க! வாழ்க! 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணமெலாம் இனிக்கின்ற எமது
கண்ணன்ஐயா எனும்ஏந்தல் இந்நாள்
மண்ணவர்கள் புகழ்ந்திடவே இருபத்தைந்
தாம் ஆண்டாம் ஆச்சாரியாபிஷேக நாளைக்
கண்குளிரக் கொண்டாடும் காட்சியினைக்
களிப்புடனே கண்டு கண்டு
நண்பர்களும் சான்றோரும் **"நலமுடனே
வாழ்க"** என வாழ்த்து கின்றார். 3

அன்னையினைப் போலெங்கள் வாழ்வினிலே
அளவிலா அன்பு காட்டும்
மன்னியநல் லன்பரவர் மகிழ்ச்சியுடன்
மனமகிழ்ந்தே ஏற்றி வைத்த
இன்னொளிசேர் தீபந்தான் பிரகாசிக்
கிறதென்றும் எமதில் லத்தில்
எந்நாளும் அவர்செய்த நன்றியினை
இதயத்தில் இருத்தி வாழ்வோம். 4

அன்னையவள் நெல்லண்டைப் பத்திர
காளித்தாயின் சமேத னாகத்
துன்னியபே ரருளாளன் வீரபத்
திரப்பெருமான் அருளால் என்றும்
குன்றேபோல் செல்வமெலாம் குவித்துயரும்
நோயில்லா வாழ்கை கூடி
இன்னுமோர் நூற்றாண்டிங் கின்புடனே
அன்புடனே இவர்கள் வாழ்க. 5

நெல்லண்டை கிழக்கு,
தும்பளை,
பருத்தித்துறை.

இங்ஙனம்,
அன்பும், ஆதரவும் மறவாத
தம்பு - செல்வராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் வயநமசி

# தும்பளை நெல்லண்டைப்பத்திரகாளி அம்மன் அஷ்டோத்தரம்

1. ஓம் வகார தர்சினையை நம:
2. ஓம் திரிசூலியை நம:
3. ஓம் ரூபானிந்தியை நம:
4. ஓம் ஆனந்த நடன பைரவியை நம:
5. ஓம் கண்ட துண்ட மகிட சங்காரியை நம:
6. ஓம் மகாமாயியை நம:
7. ஓம் காளியை நம:
8. ஓம் மதங்கியை நம:
9. ஓம் மாதங்கியை நம:
10. ஓம் சாமுண்டியை நம:
11. ஓம் பத்திரகாளியை நம:
12. ஓம் சத்துரு சங்காரியை நம:
13. ஓம் மித்துரு பரிபாலினியை நம:
14. ஓம் ஈஸ்வரியை நம:
15. ஓம் திரிபுர நயனியை நம:
16. ஓம் சர்வபிரமராக்ஷசங்காரியை நம:
17. ஓம் சர்வ வசீகரியை நம:
18. ஓம் சர்வலோக நாயகியை நம:
19. ஓம் சாமவேதப்பிரிய நாயகியை நம:
20. ஓம் சற்கிணியை நம:
21. ஓம் நிற்குணியை நம:
22. ஓம் சகல மோட்ச காருணியை நம:
23. ஓம் மகேஸ்வரியை நம:
24. ஓம் மகா பரமேஸ்வரியை நம:
25. ஓம் ஏக மாதங்கியை நம:
26. ஓம் ஏக பரமேஸ்வரியை நம:
27. ஓம் மாய சொரூபியை நம:
28. ஓம் ஞானானந்த சொரூபியை நம:
29. ஓம் நளின பரிமளியை நம:
30. ஓம் நாத ஓங்கார மந்திரியை நம:
31. ஓம் யோகாசனத்தியை நம:
32. ஓம் புவன வசீகரியை நம.
33. ஓம் மாயகுண்டலியை நம:
34. ஓம் விகற்ப ரூபியை நம:
35. ஓம் மதுமாங்கிஷ பட்சணியை நம:
36. ஓம் கிருபாதயாபரியை நம:
37. ஓம் நாலுவேத சொரூபியை நம:
38. ஓம் வேத வேதாந்தியை நம:
39. ஓம் சர்வ இதிகாச புராண சொரூபியை நம:
40. ஓம் அஷ்டகாலானாந்த சொரூபியைநம:
41. ஓம் சகலதன்ம சொரூபியை நம:
42. ஓம் ஓங்கார சக்தியை நம:
43. ஓம் சமய நாயகியை நம:
44. ஓம் சங்கு சக்ர பாடாயி நம:
45. ஓம் நித்தியாயி நம:
46. ஓம் நீலகண்டாயி நம:
47. ஓம் இடபத்துவசாயி நம:
48. ஓம் ஆங்காரியை நம:
49. ஓம் சிவானந்தியை நம:
50. ஓம் பரம சொரூபியை நம:
51. ஓம் ஐம்பத்தொரட்சர சொரூபியை நம:
52. ஓம் ஏகாட்சரியை நம:
53. ஓம் திரியாட்சரியை நம:
54. ஓம் பீஜாட்சரியை நம:
55. ஓம் பஞ்சாட்சரியை நம:
56. ஓம் சடாட்சரியை நம:
57. ஓம் சப்பாட்சரியை நம:
58. ஓம் அஷ்டாட்சரியை நம:
59. ஓம் நவாட்சரியை நம:
60. ஓம் ஏகாதாசாடசரியை நம:
61. ஓம் துவாதாசாட்சரியை நம:
62. ஓம் பரப்பிரம்ம சொரூபியை நம:
63. ஓம் விசுவ சொரூபியை நம:
64. ஓம் விசுவானந்த சொரூபியை நம:
65. ஓம் அநேக தந்திர மகாதந்திர சொரூபியை நம:
66. ஓம் பரமானந்தியை நம:
67. ஓம் உச்சிட்ட சண்டாளியை நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. ஓம் லிங்க நமசிவாயி நம:
69. ஓம் நமோ நமசிவாயி நம:
70. ஓம் நமோ நாராயணா சொரூபியை நம:
71. ஓம் நமோ பகவதேயி நம:
72. ஓம் உன்மத்த பகவதேயி நம:
73. ஓம் ஆதிபகவதேயி நம:
74. ஓம் ஆனந்த பகவதேயி நம:
75. ஓம் அரூப பகவதேயி நம:
76. ஓம் சொரூப பகவதேயி நம:
77. ஓம் சண்ட பகவதேயி நம:
78. ஓம் பிரசண்ட பகவதேயி நம:
79. ஓம் குரு குரு பகவதேயி நம:
80. ஓம் திருதி பகவதேயி நம:
81. ஓம் அல்லுக்கொரு பகவதேயி நம:
82. ஓம் வில்லுக்கொரு பகவதேயி நம:
83. ஓம் மல்லுக்கொரு பகவதேயி நம:
84. ஓம் சொல்லுக்கொரு பகவதேயி நம:
85. ஓம் பிர்மா சொரூபியை நம:
86. ஓம் விஷ்ணு சொரூபியை நம:
87. ஓம் ருத்ர சொரூபியை நம:
88. ஓம் மகேஸ்வர சதாசிவ சொரூபியை நம
89. ஓம் பஞ்சார்ந்த சொரூபியை நம:
90. ஓம் துர்க்காயை நம:
91. ஓம் மகாதுர்க்காயை நம:
92. ஓம் விஷ்ணு துர்க்காயை நம:
93. ஓம் பீம துர்க்காயை நம:
94. ஓம் ஆகாச துர்க்காயை நம:
95. ஓம் கிரியா சாமுண்டியை நம:
96. ஓம் விஷ்ணு சாமுண்டியை நம:
97. ஓம் பிரசண்ட மகாதேவியை நம:
98. ஓம் காருண்ய சவுந்தரானந்தியை நம:
99. ஓம் சர்வ பூஷணாயி நம:
100. ஓம் பகீரதியை நம:
101. ஓம் அகோர பூஷணியை நம:
102. ஓம் சிவகாளியை நம:
103. ஓம் சரஸ்வதியை நம:
104. ஓம் லட்சுமியை நம:
105. ஓம் கௌரியை நம:
106. ஓம் சரவணபவாஜி நம:
107. ஓம் ஸ்ரீ பத்ரகாளியை நம:
108. ஓம் "வயநமசி" யை நம:

கண்ணன் ஐயரின் வேண்டுகைக்கு
இணங்கத் தொகுத்தவர் :-
சி.வாமதேவன்
பதிவுத்தரவு பெற்ற நில அளவையாளர்
"கோவில் வாசல்"
இணுவில் தென்மேற்கு,
சுன்னாகம்.
2009-01-01
(வியாழக்கிழமை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனவியல் - 1

## ஆலயத்திற்கு அர்ச்சகனே ஆதாரம்

நம்முடைய நாடு ஆலயங்களின் இருப்பிடம். நமது பண்பாட்டில் ஆலயங்களின் பங்கு தவிர்க்க முடியாததொன்று.

ஆலயம் என்றதும் நம் கண்முன் நிற்கும் பொருள்கள் மூன்று
அவை கோயில், இறைவன், அர்ச்சகர், இவற்றில் முதலிடம் அர்ச்சகருடையதே.

"அர்ச்சகரே கஸ்த்துஹரி: சாஷாத்
சரரூபோ ந ஸம்சய:" - இது சாத்திர வாக்கியம்.

இதனையே எளிய பாமரர்களின் மொழியில் சொன்னால் அர்ச்சகர் "பேசும் தெய்வம்" என்று குறிப்பிடலாம்.

ஆகம நூல்களின்படி அர்ச்சகரே முக்கியமானவர் "அர்ச்சகஸ்து சாஷா தரிசேவ நஸம்சய:" என்று சொல்லப்பட்டுள்ளது. அர்ச்சனைக்குரிய மூர்த்தி பரோஷம் (அதாவது கண்ணுக்கெட்டாதது). ஆர்வமுள்ள பக்தனுக்கு அர்ச்சனாமூர்த்தியின் அருளும், காட்சியும் சரியான அர்ச்சகரின் வாயிலாகவே கிட்டவேண்டும் என்பது ஆகம விதி: எனவே முதல்பூஜை - நேரடியாக இறைவனின் ஸாந்நித்தியம் பெற்ற அர்ச்சகருக்கே உரியதல்லவா? இந்த வார்த்தையின் நிரூபனம் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் ஐயா, மற்றும் பிரம்ம தேஜஸ் உள்ள, உலக நலத்தையே விரும்பும் அர்ச்சகரால்தான் நடந்து வருகிறது.

விழாநாயகர் இளங்கலைமாணி, முதுகலைமாணி, சைவசித்தாந்த பண்டிதர் மட்டுமல்லர்; சிறந்த பக்தர். இறைவனின் நித்திய கல்யாண குணங்களில் மூழ்கியவர்.

சொல்பொருளாகஞ் சுருதி மணிஓசையுடன் எனது குருநாதன் நிகழ்த்தும் பூஜை ஓர் தனி இடத்தைப் பெற்று விடுகிறது. இதனை நாடே அறியும். அவர் தொடர்பு எனக்கோர் பேறு.

அவரது பணி நமது பண்பாட்டைக் காக்கும் இலக்கினை நோக்கி உறுதியாக நகர்ந்து கொண்டிருக்கிறது.

இப்படிப் பேரும் புகழும் பெற்றுச் சீரும் சிறப்புமுற்று வையமெல்லாம் மணம்கமழ்ந்த எம் மனம் கவர்ந்த குருக்கள் ஐயாவின் ஆச்சாரியபிஷேக 25 ஆவது வருட நிறைவு, வெள்ளிவிழா நடைபெறும். இந்நன்நாளில் நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்பிகா ஸமேத வீரபத்திரப் பெருமான், அவருக்கு நீண்ட ஆயுளையும் நிறைவான மனத்தையும் அருளிக் காக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன.

அன்பன்
தம்பு - இராமச்சந்திரன்
வில்வளை ஸ்ரீ மகா பிராத்தியங்கிரா காளி
அம்மன் தேவஸ்தான நிரந்தர செயலாளர்

***வில்வளை, தும்பளை***
***பருத்தித்துறை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோமஸ்கந்தராஜ தரிசனவியலூடாக ஆலயம் - வழிபாடு - ஆற்றவேண்டிய சமூகப்பணிகள் சில புதிய தரிசனங்கள்

ஒரு தொன்மைச் சிறப்பு மிக்க வழிபாட்டு மரபுப்பண்பாட்டை கொண்டு விளங்கும் எமது சமய வழிபாட்டில் ஆலயம்சார் பண்பாடும் வழிமுறைகளும் முதன்மை இடத்தினைப் பெறுகின்றன. ஆகமம் சார்ந்த இந்த ஆலய வழிபாட்டு மரபு வருவதற்கு முன்னரே **'நம்பிக்கை'** என்ற அடிப்படையில் எம்மிடையே ஆகமம் சாராத ஒரு கிராமிய நிலைப்பட்ட வழிபாடு மிக எளிமையான, இயற்கையோடு இணைந்த ஒரு வழிபாட்டு மரபாக இருநதுள்ளதை இன்றும் எஞ்சியுள்ள எமது கிராமிய வழிபாட்டு நம்பிக்கைகளினூடாகவும், யாழ்ப்பாண மன்னர் காலத்தில் கிடைக்கும் இலக்கிய ஆதாரங்களுடாகவும், பிறநாட்டார் குறிப்புகள், அகழ்வாய்வுகள் கல்வெட்டு ஆதாரங்களின் அடிப்படையிலும் அறிய முடிகின்றது. வைரவ வழிபாடு, கண்ணகி வழிபாடு, நாச்சிமார் வழிபாடு, காளி வழிபாடு, மரவழிபாடு, குலதெய்வ வழிபாடு, காத்தான் வழிபாடு, அண்ணமார் வழிபாடு என இவ்வழிபாட்டின் வகைகளை தெய்வீக நிலைப்படுத்தி இனங்காண முடிகிறது. இக்கிராமிய வழிபாட்டினூடாக கிராமியப் பண்பாடு, நம்பிக்கைகள், சடங்குகள் தனித்துவங்கள் என்பனவும் பல்வேறுபட்ட கிராமியக் கலைகளும் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளதையும் அறிய முடிகின்றது. பொங்கல், மடை, நேர்த்திக்கடன், கரகம், காவடி, கற்பூரச்சட்டி, என இவ்வழிபாட்டின் தனித்துவங்கள் இனங்காணப்படுகின்றன.

இவ்வாறிருந்த எமது ஆதி வழிபாட்டு முறைக்குள் சமண, பௌத்த மதநெறிகளின் எழுச்சியில் இருந்து அழிந்து கொண்டிருந்த சைவ, வைணவ நம்பிக்கைகளைக் காக்கின்ற இறைவழிபாட்டின் உறைவிடங்களாகவே பல்லவ மன்னர்களால் பல்லவர் காலத்தில் கல்லைக் குடைந்து கலைக் கோயில்கள் அமைக்கப்பட்டன. சிற்ப ஓவிய கலை வளர்ச்சியூடாக இறைவிக்கிரகங்களும் உருவாக்கப்பட்டன. இதனடியாகவே உருவவழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புமிக்க ஆகமம் சார் வழிபாட்டு முறைசார்ந்த ஆலயங்களும் தோற்றம் பெற்றன. இவ் ஆலயங்களில் எழுந்தருளியுள்ள இறைவனை மெய்தீண்டி பூசிக்கும் பூசகர்களாக அந்தணர்கள் சைவக்குருமார்கள் வடமொழிசார் மந்திரங்களைக் கற்றும் வர்ணாச்சிரமதர்ம கோட்பாடு, வடநாட்டு செல்வாக்கு, பிராமணிய எழுச்சி என்பவனிற்றினூடாக தோற்றம் பெற்றனர். நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் ஆலயங்கள் வழிபடப்பட்டு அவற்றின் மீதான துதிப்பாடல்களாகப் பதிகங்களும் பாசுரங்களும் தோற்றம் பெற பக்தி ஒரு இயக்கமாகி மன்னர்கள், மக்கள், பெரியோர் என அனைவரும் தம்மிடம் உள்ள பேதங்கள் மறந்து வைதீக பக்தியை வளர்த்தனர். பக்தியின் மொழி தமிழாகி பக்தி இலக்கியங்கள் பல தோன்றி இறை அனுபவ வெளிப்பாட்டிற்கும் வழிகாட்டலுக்கும் துணை நின்றன. நாயன்மாாகளின், ஆழ்வார்கள், சமூக வாழ்வே, ஒரு எடுத்துக்காட்டான பக்தி வாழ்வாக பரிமளித்தது. இவ்வாறு கலையும் நிலையும் சிலையும் இணைந்து பக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலையை உருவாக்கின. இதனூடாக மிகப்பெரிய ஆலயங்கள் தோன்றி அதனூடாக அதனை மையப்படுத்திய வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், விரத விழாக்கள், ஆலயப்பண்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறதொரு சமய நம்பிக்கைத் தேவையோடு எமது சமயச் சூழலில் தோற்றம் பெற்ற ஆலயங்களில் அதன் ஆரம்ப காலத்தில் இன்று இருப்பதைப் போன்ற நிதி, நிர்வாக அமைப்பு முறைகள் காணப்படவில்லை அத்துடன் ஆரம்ப காலத்தில் அவை இறைவழிபாட்டு நம்பிக்கையை வளர்த்ததோடு மட்டுமின்றி சமூகத்தின் நிலைக்களமாக விளங்கி பல சமூக, கலைப்பணிகளை ஆற்றியுள்ளதையும் அறியமுடிகின்றது. ஆனால் பிற்காலத்தில் ஆலயங்களின் சமூகப் பங்களிப்புகள் குறைவடைய அவை வெறும் ஆன்மாக்களின் லயத்திற்குரிய வழிபாட்டிடங்களாக மட்டுமே மாறின. இன்றைய சூழலில் எம்மிடையே நிறைய ஆலயங்கள் உள்ளன. அவ் ஆலயங்கள் பலவற்றிலே நிறைய நிதிவளமும் உள்ளது. ஆனால் அதனை அவை தாம் சார்ந்த சமூகத் தேவைகளுக்காக பயன்படுத்துகிறவா என்பதும் , இன்றைய ஆலயத்தில் நிலவுகின்ற ஒரு வகையான வணிகமயப்பட்ட சூழலும் , தனிமனிதர்களை முதன்மைப்படுத்தும் ஆவணத்தன்மைகளும் எந்தளவிற்கு அவை சமூக அக்கரை உடைய அல்லது சமூகப் பண்பாட்டின் நிலைக்களன்களாக தொழிற்படுகின்றன என்பதைக் கேள்விக்குள்ளாக்கி வருகின்றன.

ஆரம்பத்தில் சிறு குடிசைகளாக கவனிப்பாரற்று சிறிய வழிபாட்டிடங்களாக இருந்த ஆலயங்கள் பின்னர் கட்டிட, வள விடயங்களில் பெரிதானபோது அதனை பராமரிக்க வேண்டியதொரு தேவை ஏற்பட்ட ஆலய முகாமை என்ற அமைப்பு தோன்றியது. பின்னர் அவ்வமைப்போடு ஆலயத்துள் அதிகமாக வரத் தொடங்கிய பணப்பிழக்கம், திருப்பணி, அருச்சனை, அந்தணர் சன்மானம், திருவிழாக்கள், உபயங்கள் போன்ற பல மாற்றங்களால் ஆலயத்தினுள் ஒருவகை முகாமையோடும், பரிபாலனத்தோடும் இணைந்த நிர்வாகக் கூட்டமைப்பு தோற்றம் பெற்றது. ஆரம்பத்தில் இது ஆலயத்தின் செம்மையான வளர்ச்சிக்கு வித்திட்டாலும் இன்று இவ் அமைப்பின் குறைபாடுகள், பதவிப்போட்டிகள், ஊர்பேதங்கள் போன்ற பலவற்றால் ஆலயங்களுக்குள் பல பிரச்சனைகள் தோன்றி அவை ஆலய வழக்குகளாக நீதிமன்றம் வரை சென்று தீர்க்கப்படாமல் தொடர்வதையும் காணமுடிகின்றது. ஆலயத்துள் நின்றவாறு நான் எனது என்றும் என்ரை கோயில், எங்கட திருவிழா என்றும் சிந்திக்கும் போதே அடிமுடி தேடியும் கண்டடைய முடியாத கடவுள் காணாமற் போய்விடுகிறார். ஆலய வாசலில் பிச்சைக்காரன் கையேந்தி நிற்க கற்பூரமும் அர்ச்சனைத் தட்டமும் கொண்டு அர்ச்சனை பற்றுச்சீட்டையம்கொண்டு அர்ச்சனை செய்யும் போதே ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பது பொய்த்துப் போய்விடுகின்றது. இவ்வாறு இன்றைய எமது ஆலய நடைமுறைகளுக்குள் பல்வேறுபட்ட குறைபாடுகளை , குருட்டுத்தனமான பின்பற்றல்களை எம்மால் அவதானிக்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சில காலத்தில் சில சமூகப்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் ஆலயங்களுக்குள் நுழைவதே இன்று தடுக்கப்பட்டிருந்தது. இன்று அந்நிலை குறைவு அதுவே சமூகம்சார், ஊர்சார் கோயில்கள் தோன்றக் காரணமாயிற்று. எமது சூழலை நோக்கினால் எத்தனையோ மக்கள் எத்தனையோ வகைப்பட்ட சொல்லமுடியாத துயரங்களாலே பல்வேறுபட்ட இன்னல்களை அனுபவிக்கிறார்கள். படிக்க வசதியில்லாத பிள்ளைகள், முதிர் வயதில் பராமரிப்பை இழந்த பெற்றோர்கள், சாப்பிட வசதியில்லாத வறியவர், இயற்கை பேரழிவுகளால் பாதிக்கப்படுவோர், இடம்பெயர்நது அல்லற்படும் அகதிகள் , தாய் தந்தையரை இழந்த பிள்ளைகள், இப்படி எத்தனையோ தேவையுடையோர் கடவுளின் உயிர்களாக ஆன்மாவாக எம்மை சூழ இருக்க இங்கிருக்கின்ற எத்தனை சைவ ஆலயங்கள், ஆலயம்சார் அமைப்புகள் இவற்றுக்கு உதவுகின்றன.

அந்த ஆலயங்கள் தாம் வைத்திருக்கும் பெருந்தொகையான நிதியிலே வருடாவருடம் ஒரு சிறு தொகையையாவது இத்தகைய சமூக அவலங்களைப் போக்கும் பணிகளுக்காக ஏன் செலவழிக்கக்கூடாது. இதை விடுத்து தேவையற்ற ஆடம்பரமான ஆலயத்திருப்பணிகளுக்கும், திருவிழாவுக்கும் ஏனையவற்றை முடக்கியும் ஏன் வைத்திருக்க வேண்டும். இந்த இடத்தில்தான் இன்றைய எமது சைவ ஆலயங்கள் தமது சமூகப் பணிகளில் இருந்து தாம் சார்ந்த சமூக அக்கறையில் இருந்து விலகி நடக்கின்றனவா. இந்தப் போக்கு ஆரோக்கியமானதா என்ற கேள்வி எம்முன் எழுகிறது. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதுதான் எம் சமய நோக்கு இது ஏன் புரியாமல் போனது. இந்த இடத்தில் கிறிஸ்தவ சமய நிறுவனங்கள் , சமயப் பெரியோர்கள், சாயி சமித்தியை சேர்ந்தவர்கள் செய்கின்ற சமூகத்தொண்டினை நாம் போற்றித்தான் ஆகவேண்டும்.

வேறெங்கும் உண்மைகள் தேடத் தேவையில்லை அண்மையில் யாழ்குடாநாட்டைத் தாக்கி சேதப்படுத்திய த. **'நிஷா'** சூறாவளி அனார்த்தத்தின் போது தமது வீடு வாசல் இழந்த மிகவும் கஷ்டப்பட்ட அந்த மக்களின் துயர் துடைக்க எத்தனை சைவ ஆலயங்கள் உதவ முன்வந்தன. ஆனால் அப்போது யாழ்பாணத்து கிறிஸ்தவ தேவாலயங்களும், அமைப்புகளும் குரு முதல்வர்களும், பங்குத் தந்தையரும் ஆற்றிய பணிகளை மதம் கடந்த மனிதநேயப் பணிகளை யாரும் மறக்கமுடியாது. எனவே எமது சமயத்தின் சமூகத்தளம் மிகவும் வளம் இருந்தும் பலவீனப்பட்டுப் போய் இருப்பதையே இது காட்டுகிறன்றது. இந்நிலையில் மாற்றம் வேண்டும் அப்போதுதான் சமூகத்தின் வலிமையான நம்பிக்கைக்குரிய மரியாதைக்குரிய ஒன்றாக எமது சமயம் மாறமுடியும். அதுவரையிலும் வெறும் சடங்குகளுக்குள்ளும் , வழிபாட்டு, மந்திரங்களுக்குள்ளுமே அது வாழமுடியும்.

காலத்திற்கு காலம் எமது சமய வரலாற்றில் தோன்றிய பல சீர்திருத்த சிந்தனைவாதிகளும் இதனையே வலியுறுத்தி எமது வழிபாட்டு மரபுகளில், ஆலய வழிபாட்டு, நடைமுறைகளில் பல மாற்றங்களை ஏற்படுத்திச் சென்றுள்ளபோதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட இன்றைய சூழலில் எமது ஆலயங்களின் சமூகப் பணிகளின கனதி என்பது சமூகத்தின் தேவைகளோடும் அவலங்களோடும் ஒப்பிடும்போது மிகவும் போதாமையுடையனவாகவே விளங்குகின்றது. தயானந்த சரஸ்வதி, ராமகிருஸ்ணர், விவேகானந்தர், ஆறுமுகநாவலர், கதிரைவேற்பிள்ளை, தங்கம்மா அப்பாக்குட்டி என்ற பல சமய சீர்திருத்தவாதிகள் காலத்திற்கு காலம் தோன்றி எமது சமயத்தினை நெறிப்படுத்தி பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை நாம் மறுக்கமுடியாது. ஆயினும் அவர்களின் கனவுகளில் பல இன்னமும் மெய்ப்படவில்லை என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

இக்கட்டுரையின் நோக்கு இன்றுள்ள ஆலய அமைப்பு முறையை முற்று முழுதாய்க் குற்றச்சாட்டுவதோ, அவை எதுவும் தேவையில்லை என்று சிந்திப்பதோ, அவை எதுவுமே செய்யவில்லை என்று கூறுவதோ அல்ல அந்த அமைப்பு முறைமை சமூகமாக்கப்பட்டு இன்னமும் சிறப்பிக்கப்பட வேண்டும் என்பதனை சிந்திப்பதே ஆகும். இந்த வகையில் பலரும் பல மாற்றங்களைப்பெற்று பல பணிகள் ஆற்றவேண்டியது அவசியமாகின்றது. குற்றச்சாட்டுகளைத் தவிர்த்து எல்லாரும் ஒன்றிணைவதன் மூலமே இது சாத்தியமாகும்.

ஆலயத்தில் பூசை செய்யும் பூசகர்கள் இது விடயத்தில் தமக்குள் ஒன்றுபட்டு முன்னுதாரணமானவர்களாக விளங்க வேண்டியது அவசியமாகும். ஆலயத் திருவிழாக்களில் அதிகரித்து வருகின்ற வணிகமயச்சூழல், பக்திக்கு புறம்பான செயற்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும், ஆலயத் திருவிழாக்களில் இடம்பெறும் பண்பாட்டு சீரழிவுகள், திருட்டுகள், கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஆலய பரிபாலன சபைகள் சமூகத்தின் அனைவரையும் பிரதிபலிக்கின்ற வகையில் அமைக்கப்பட வேண்டும் அத்துடன் அவை சமூகத் தேவைகள் உணர்ந்து செயற்பட வேண்டும். இன்றைய பொருளாதார நெருக்கடிச் சூழலில் எம்மிடம் உள்ள மிகவும் பலம்பொருந்திய சுதந்திரமான நிதி நிறுவனங்களாக ஆலயங்களே விளங்குகின்றன. எனவே அவை சமூகத்தின் அவலங்களைத் துடைக்கவும், எமது பண்பாட்டு விழுமியங்களைக் காக்கவும் மாறிவரும் புதிய உலக சவால்களுக்கு முகம் கொடுத்து வாழும் ஆற்றல்களை, நம்பிக்கைகளை வளர்க்கவும், மதங்கடந்த மனிதநேய மனித ஒருமைப்பாட்டுச் சிந்தனையை உருவாக்கவும் பாடுபட வேண்டும். அத்துடன் புராணபடனம், பண்ணிசை, கிராமியக் கலைகள், அருகிவரும் வழிபாட்டுமுறைகள் போன்றவற்றை அழியவிடாது மீட்டெடுத்து அடுத்த தலைமுறையிடம் கையளிக்கும் முயற்சிகளிலும் ஈடுபடவேண்டும்.

இன்று எல்லாமே ஏதோ ஒரு வகையான அரசியலுக்குள் சிக்கித் தவித்து சீரழிந்து கொண்டிருக்கின்ற வேளையில் மனிததுவத்தின் மாண்பை நிலைநிறுத்தும் கடைசி நம்பிக்கையாக சுதந்திரவெளியாக விளங்குகின்ற ஆலயங்களும் அதற்கு பலியாகாமல் செயற்பட வேண்டியது அவசியமாகும். இன்றைய சூழலில் மடங்கள் மூலம் விருந்தோம்பல் என்ற வகையில் ஆலயங்கள் பல ஆற்றிவரும் பணிகள் போற்றுதற்குரியன, ஆயினும் இதனையும் கடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றவேண்டிய பல சமூகப் பணிகள் இன்னமும் நிறையவே உள்ளன. ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு, கல்விப்பணி, சமய இலக்கியப் பரவலாக்கம் சமூகசமத்துவ உருவாக்கம், பேதங்களை மறந்து ஒன்றினைவு, சமூக சீர்குலைவைத் தடுத்தல், அறக்கட்டளை உருவாக்கி ஏழைகளுக்கு உதவுதல் எனப் பலவற்றை கூறலாம். இது விடயத்தில் எமது சூழலில் இன்று துர்க்காதுரந்தரியின் கனவுக் கோயிலான தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தை அதை நெறிப்படுத்திய துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டியின் சிந்தனைகளை முன்னுதாரணமாகக் குறிப்பிடலாம். இது பற்றிய சிந்தனைகள் இதற்காகப்பாடுபடும் நபர்கள், அமைப்புகள் எம்மிடம் இல்லாமல் இல்லை ஆயினும் இவை ஒன்றினைக்கப்பட்டு வலிமையாக்கப்பட வேண்டும். ஆலய நடைமுறைகளில் அவசியமான மாற்றங்களை ஏற்றுச் செயற்படும் மனமாற்றமுள்ள மனிதர்கள் வேண்டும்.

பக்தியின் பெயரால் நிகழும் மூடத்தனங்கள் களையப்பட்டு சமூகஅறிவியல் நோக்கில் ஆலயமும் வழிபாடுகளும் மாற்றம் பெற வேண்டும். ஒவ்வொரு உயிர்களிலும் இறைவனைக் காணவேண்டும். இன்றுநாம் எமது குருத்துவ நெறியில் வெள்ளிவிழா நாயகன் நடாத்தும் ஆலயம் நெல்லண்டைப்பத்திரகாளி கோவில், இலட்சுமணன் தோட்டம் வீரமாகாளியம்மன் வடபத்திரகாளியம்மன் தேவஸ்தானம் ஆகியன புதிய மாற்றம் கொண்டு, சமூக, மக்கள் குறைதீர்க்கும் நிலையங்களாக செயற்படும் தன்மையைக் காணமுடிகின்றது. மேலும் மூலஸ்தானம் வரையும் செல்லும் சாதிமத பேதமற்ற மனிதநேயமுள்ள ஆலயங்களாக இது விளங்குவதைக் காணலாம். அதற்கு இத்தரிசனத்தின் ஊடாக எமது குருவிற்கு என்றும் என் நன்றியை எமது நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகத்தின் ஊடாக செலுத்துகின்றோம். சமூக சமயப்பணிகளை மேற்கொள்ளுவோம். ஆகுக. இவையே ஆலயவழிபாடுபற்றிய புதிய தரிசனங்களாகும்.

நன்றே செய்வோம் ,அதை இன்றே செய்வோம்.
ஆலயங்களை சமூகத்தின் பொதுச் சொத்தாக மதிப்போம்.
அவற்றின் சமூகப்பணிகளை விரிவாக்குவோம்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காள மணிவிளக்கே

"ஆலயம் தொழுவது சாலமும் நன்று"
"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்"

ஆக்கம்
ஆசிரியர்
வேல். நந்தகுமார் (B.A. Hons)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குலதெய்வம் இலட்சுமணன்

தோட்டம் பிள்ளையார்

மூலமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனைத்துலக சிவாச்சாரிய பீடாதிபதி
சிவஸ்ரீ முத்துக்குமாரசாமிக் குருக்கள்
அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் உருத்திரா

கோவில் சம்மந்தமான அனைத்து
சட்ட பிரச்சனைகளுக்கும் சட்டபூர்வமான
தீர்வுகளை வழங்கி வாதாடி பெற்றுத் தந்தார்.
உயர்திரு இராமசாமி உருத்திரா அவர்களுக்கு
எமது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

நெல்லண்டையான்
வெளியீட்டுக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
எமது நெஞ்சம் நிறைந்த நிறைவஞ்சலியைச்
செலுத்துகின்றோம்

நெல்லண்டையாள்
வெளியீட்டுக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர்திரு. சி. சிவஞ்ஞானசுந்தரம்

அவர்களுக்கு அஞ்சலி

(யா / தும்பளை

சிவப்பிரகாச ஓய்வுபெற்ற அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணியம். கணபதிப்பிள்ளை அதிபர்
யா/ தும்பளை சிவப்பிரகாசம்
மகா வித்தியாலய அதிபர் அவர்கட்கு
எமது அஞ்சலிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகில இலங்கை திருவள்ளுவர்

கோட்ட உபதலைவர்

செபமாலை அவர்கள் (அமரர்)

ஓய்வு பெற்ற அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருவின் இல்லத்தில்
விழாநாயகன்
குடும்பத்தினர்



விழாநாயகன் மகனுடனும்
அன்பு மாணவர்களுடனும்
அன்பு உள்ளங்களுடனும்



விழாநாயகன் அன்பு மாணவன்
சற்குணராஜா ரஜீந்திரன்,
ரவிதாஸன் தினேஷ் ஆகியோருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழா நாயகன் தன் ஆரம்பகால குருவுடனும் (ஆ.வடிவேலு)
மாணவனுடனும் ( சிவமுகுந்தன்)



விழாநாயகன் திருதிருமதி
அருள்நங்கை, சண்முகநாதன்
அவர்களின் பொன்விழாவின் போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழாநாயகனுக்கு
ஆகம அருட்பிரபாகர சாகரம்
என்ற பட்டத்தை வடமராட்சி
உதவிக் கல்விப் பணிப்பாளர்
பி .நந்தகுமார்
வழங்கிக் கௌரவித்தபோது




அஞ்சலி அகத்தில்
குருப்பட்டாபிஷேகத்தின் போது
பொன்னாடை போர்த்தி
கௌரவித்தபோது



கலாநிதி க. குணராஜா
(செங்கையாழியன்)
அவர்களிற்கு
பாராட்டுப் பத்திரம் வழங்கியபோது



யா /ஹாட்லிக்கல்லூரியில் A/L ,O/L,
தமிழ் இலக்கியம் 100% சாதனைக்காக
கல்விப்பேரவை நடாத்திய பரிசளிப்பு
விழாவில் உதவிக் கல்விப் பணிப்பாளர்
இராஜேந்திரன் அவர்களிடம் வெற்றிக்
கேடயம் பெற்றபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழாநாயகனின்
அன்பு மாணவன்
முல்லை க.யோகநாதன்



யா/குடத்தனை கரையூர்
அ.மி.த.க.பாடசாலை அதிபர்
விழாநாயகனுடன் ஆசிரியர் குழாம்.



04.09.2008 விழாநாயகன் இல்லத்தில் ஓய்வுபெற்ற பிரதேச செயலர்
சிவபுண்ணியம் அவர்களின் தலைமையில்
விழா நடைபெற்றபோது அன்பு மாணவன் சற்குணராஜா, ராஜேந்திரன்,
மஹாலட்சுமி வாணிப அதிபர் பொ.இராசதுரை உடன்
சாவகச்சேரி முத்துமாரி அம்மன் பிரதமகுரு பாலன் குருக்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞர்
சோ. பத்மநாதனின்
மணிவிழாவின்போது
விழாநாயகன் பாராட்டு
பத்திரம் வழங்குகின்றார்



விழாநாயகனை
கௌரவித்தபோது மானிப்பாயூர்
மார்க்கண்டு சுவாமி



அகில இலங்கை திருவள்ளுவர்
கோட்ட பெருவிழா நடந்த வேளை
பண்டிதர் வித்துவான் சந்திரசேகரம்
அவர்களுக்கு பேராசிரியர்
அ.சண்முகதாஸ் பொன்னாடை பொற்கிழி
வழங்கியபோது விழாநாயகன்
தலைமையில் நடைபெற்றது.
95 மார்கழி திருவாதிரை நட்சத்திரம்



விழாநாயகனின் வேதங்கள் நூல்
வெளியீட்டீன்போது பேராசிரியர்
சண்முகதாஸிடம் இருந்து
டாக்டர் முருகானந்தம்
முதற்பிரதி பெற்றபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராதனை பல்கலைக்கழக B.A பட்டம் பெற்றபோது



விழா நாயகனுக்கு யாழ் பல்கலைக்கழகத்தில்
டிப்ளோமா பட்டம் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
அவர்கள் வழங்கியபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழாநாயகனுக்கு
உயர்கல்விக் கண் தந்து
உருவாக்கிய அன்னை
திருமதி அருள்நங்கை சண்முகநாதன்



பேராதனை பல்கலைக்கழகத்தில்
விழாநாயகன் உடன் விரிவுரையாளர்
அருள்நங்கை, குமாரவேல்,
குழந்தைவேல் உடன்



விழாநாயகனுடன் மைந்தன்
தனஞ்சயன், மனைவி புவனேஸ்வரி
அன்பு மாணவர்கள் ர.தினேஷ்,
ர.ராஜீஸ் தாய் காந்திமதி உடன்



விழாநாயகனின் அன்பு நண்பன்
தம்பு ராமச்சந்திரன்
விழாநாயகன் மனைவி புவனேஸ்வரி
உடன் மைந்தன் தனஞ்சயன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விழாநாயகன் பேரன்
வியூசனுடன்



விழாநாயகன்
மூத்தமகள் பிரபாலினி
சுந்தரலிங்கக்
குருக்கள் சம்பந்தி
இராமலிங்க குருக்கள் சகிதம்



விழாநாயகனின் குடும்பசகிதம்
எடுக்கப்பட்ட புகைப்படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நமசிவாயக் குருக்கள்



வீரமாகாளியம்மன் வேட்டைத்திருவிழாவின் போது
பேராசிரியன் அ.சண்முகதாஸ்
கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ் அவர்களுடன்



விழாநாயகன் தலைமையில் தும்பளை இலட்சுமணன் தோட்ட
வீரமாகாளியம்மன் தேவஸ்தானத்தில்
திருவாசக முற்றோதலின் போது (2007)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடபத்திரகாளி தேவஸ்தான
ஊஞ்சற் திருவிழா
நடைபெற்றபோது
விழாநாயகன்




விழா நாயகனுடன்
அன்புத்தம்பியார்
பாலமனோன் குருக்கள்



விழாநாயகன் தம்பியார்
செல்வராஜா குருக்களுடன்
மைந்தன்
தனஞ்சஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழாநாயகனை
நெறிப்படுத்திய ஆசான்
உயர்திரு. ச.சந்திரசேகரம்
(ஓய்வு பெற்ற அதிபர்)

விழாநாயகனின்
கல்விக்கண்திறந்த அபிமான ஆசான்
உயர்திரு R.கார்த்திகேசு
(ஆசிரியர்)





விழாநாயகன் ஆசிரிய நியமனம் பெற்றபோது
01.09.1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தித்துறை
கோட்டுவாசல் அம்மன்
கோவிலின் தேவஸ்தானத்தின்
விழாநாயகனின் சகபாடி
பிரம்மஸ்ரீ. வாசுதேவக்குருக்கள்

விழாநாயகன் தந்தையார்
தியாகராஜக்குருக்கள்
உருவாக்கிய தும்பளை லட்சுமணனன்
தோட்டம் ஸ்ரீவீரமாகாளியம்மன்
வடபத்திரகாளியம்மன்
தேவஸ்தானம்





கிளாலி வீரசித்திவிநாயகர்
கும்பாபிஷேகத்தின்போது
விழாநாயகனின்
மைந்தன் தனஞ்சயகுருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாவினோதன் வில்லிசை
சக்கரவர்த்தி கலாபூசனம்
கணபதிப்பிள்ளையுடன் (சின்னமணி)
விழாநாயகன்



04.09.2008 அன்று வெள்ளிவிழா
நிகழ்ந்த வேளை
மைந்தன் தனஞ்சயகுருவுடன்
விழாநாயகன்



விழாநாயகனின் சகோதரன்
பியோமகேசக் குருக்கள்



விழாநாயகனின் தெய்வம்
நெல்லண்டை பத்திரகாளி அம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழாநாயகனுடன்
அனைத்துலக சைவக்குருமார்
பேரவையின் பீடாதிபதி
சிவஸ்ரீ. முத்துக்குமாரசுவாமி
குருக்களும்
பேரவையின் செயலாளர்
சோமசுந்தரக் குருக்களும்



விழாநாயகனின்
சகோதரன்
அமிர்தகடீசக்
குருக்களுடன்



நெல்லண்டை பத்திரகாளி
தேவஸ்தானத்தில்
அன்பு அடியார் அன்னமக்காவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழாநாயகன்
O/L மாணவனாக இருந்தபோது



விழாநாயகன்
A/L மாணவனாக



விழாநாயகன் A/L படித்த காலத்தில்
யா / தும்பளை சிவப்பிரகாச
மகாவித்தியாலயத்தில் பாலிய நண்பர்கள்
அன்ரனி வின்சன், இரத்.யோகமூர்த்தி,
சிவசோதி, திருச்செல்வம்,
பாலகிருஷ்ணன் (ஆசிரியர்)



பாலிய சிநேகிதர்
இரத்.யோகமூர்த்தியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழாநாயகனின் பூட்டி
தங்கம்மா ஆச்சி



விழாநாயகனின் பேத்தி
சிவகங்கை அம்மா
(இரத்தின ஆச்சி)



விழாநாகன் தீட்சாகுருவுடன் (தந்தை)
தியாகராஜக் குருக்களுடன்



விழாநாயகனின் தந்தையார்
ஆயுள்வேத டாக்டர் பட்டம்
பெற்றபோது மனைவியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ.சு. சிவக்கொழுந்து அவர்களுடன்
விழாநாயகன் 1980ல் நெல்லண்டைப் பத்திரகாளி
அம்மன் கந்தபுராண நிறைவின்போது



விழாநாயகனின்
குருபட்டாபிஷேகத்தின் போது
1983.09.04



சைவ சித்தாந்த பண்டிதர்
பட்டம் பெற்ற போது
இளம் பண்டிதர் சிவமுகுந்தன்
மாணவனுடன்



விழாநாயகனின் 10வது ஆண்டு
குருப்பட்டாபிஷேக தினத்தின் போது
எடுத்த படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/குடத்தனை அ.மி.த.க.
விழா நாயகன்
பாடசாலை ஆசிரியர் சகிதம்



யா/ஹாட்லிக் கல்லூரியில்
உலக ஆசிரியர் தின
ஆசியுரையின் போது



விழாநாயகன் மூத்தசகோதரன்
வேதையா குருக்கள் அவர்களின்
சிரார்த்த திதி செய்தபோது

விழாநாயகன்
பேரா. சண்முகதாஸ் மனோன்மணியுடன்
*M.A* சித்தி எய்திய போது
(மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்)





விழாநாயகன் அதிபர் பதவி ஏற்றபோது
2008.04.01 அன்று பேராதனை
பல்கலைகழக மாணவான்
ர.ராஜீஸ் உடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன்
மகா கும்பாபிஷேகத்தின்
போது அவரது குரு
சிவஸ்ரீ. கந்த சிவபாத சுந்தரக்குருக்களுடன்



விழாநாயகன்
சட்டதரணி இராமசாமி ருத்ரா
அவர்களுக்கு
கௌரவித்தபோது



விழாநாயகனின் புத்திரனின்
பூநூல் சடங்கின் போது



விழாநாயகன் மகனுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா / ஹாட்லிக் கல்லூரி அதிபர்
உயர்திரு. மு. ஸ்ரீபதியுடன்
சரஸ்வதி பூசை
செய்தபடியே விழாநாயகன்
கண்ணன் ஐயா
2002



சைவ சித்தாந்த பண்டிதர்
சித்தியெய்திய பின்பு
திருமதி அருள்நங்கை
சண்முகநாதனுடன்



விழாநாயகன்
புதிய உயர்கலைக் கல்லூரி
அதிபர்
திருமதி அருள்நங்கை
சண்முகநாதனுடனும்,
யா / ஹாட்லிக் கல்லூரி
அதிபர் N - தெய்வேந்திரராஜாவுடன்.
(2007)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருத்துவ நண்பன்
பணடட்த்தரிப்பு நடராஜக்குருக்கள்
(மைத்துனர்)
அவர்களுடன் விழாநாயகன்



காந்தி ஜெயந்தி தினம் அகில இலங்கை
காந்திசேவா சங்க உபதலைவர்
ஆ.வடிவேலுவுடன் விழாநாயகனும்
அவர்தம் மாணவன் ர.நிகாஷ்
(யாழ் பல்கலை மாணவன்)



மீனாட்சி சுந்தரம்பிள்ளை பல்கலைக்கழக
துணைவேந்தர் க.ப.அறவாணருடன் விழாநாயகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனைத்துலக சைவக்குருமார் அர்ச்சகர்
பேரவைத் தலைவரும் பீடாதிபதியுமான
பண்டிதர், ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்
சிவஸ்ரீ.கை.நமசிவாய குருக்கள் அவர்களுக்கு
ஆத்மார்த்த அஞ்சலிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லண்டை ''அஞ்சலி'' அகம்
அமைப்பாளர் இயக்குனர்



## அருட்திரு. டேமியன் அடிகளார் (அ.ம.தி)

3வது வருட குருத்துவ நெறிய
அன்புறு சீர்மிய, இனிய அன்பருக்கு
நெல்லண்டையான் வெளியீட்டுக்கழகத்தினரின்
வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழாநாயகனின்
ஐந்து குழந்தைகள்



விழாநாயகன் குடும்பத்துடன்
அன்பர் சி.வாமதேவன்





விழாநாயகன் உடன் மகள் பிரபாளினி
மருமகன் சுந்தரலிங்க குரு உடன்
சம்மந்தியர் இராமலிங்க குருக்கள்
சத்தியலட்சுமி மற்றும் விழாநாயகன்
மனைவி புவனேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2003 - 2005
யா/ஹாட்லிக்கல்லூரி அதிபர்
வே.பத்மநாதன் அவர்களுக்கு
நிறைவுடன் நல்வாழ்த்துக்கள்



தமிழ் விரிவுரையாளர்
குழந்தைவேலுடன்
விழாநாயகன்



விழாநாயகன் குருத்துவபட்ட
பத்தாம் ஆண்டின் நிறைவின்போது



விழாநாயகன் மடியில் சங்கரத்தை
பேத்தி எங்கட பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விழாநாயகனின் அன்பு நண்பர்கள்

தம்பு. இராமச்சந்திரன்,

இரத். யோகமூர்த்தி அவர்களுடன்




நெல்லண்டை பத்திரகாளி கோவில்

முன்னாள் செயலாளர், வழிபடுவோர் சங்க செயலாளர்,

சி. வாமதேவன் உடன் மனைவி சகுந்தலா

தனஞ்சயன் ஐயர்

(பூனூல் சடங்கின்போது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெல்லண்டை அம்மன் துதி

அம்மா அம்மா என்றுநாம் அழுவோமே
அம்மா அம்மா என்றுநாம் அழலைப்போமே
சும்மா இருந்து சுமக்கும் சுமங்கலையே
தும்மாளன் கனல் இடுப்பு போலே
எம்மல் இயன்றது எதுவுமே இல்லை
எம் நெல்லை அம்மாள் செம்மாண்
திருவடிக் கீழே சும்மா கிடப்போமே!

## மங்களம்

ஐந்து கரத்தனுக்கு ஜெயமங்களம்
அம்மையுடன் அப்பனுக்கு ஜெயமங்களம்
கந்த வடிவேலனுக்கு ஜெயமங்களம்
காளி புவனேஸ்வரிக்கு ஜெயமங்களம்
இந்திராதி தேவருக்கு ஜெயமங்களம்
ஈசன் அடியவர்க்கு ஜெயமங்களம்
வந்திருந்து பார்த்தவர்க்கு ஜெயமங்களம்
ஜெயமங்களம் ஜெயமங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசுடனே நெல்லண்டையான் கழகம் வாழி!
கலைகளுடன் மேலான வலிமை ஓங்க
ஆசியுடன் தொண்டுபுரி அறிஞர் வாழி!
அவர்புகழ வீற்றிருந்தே அதிபர் ஆகி
நேசமுடன் பதவிபல உயர்வும் பெற்று
நிலவுலக மேத்தியுறச் சோமாஸ் கந்த
ராசகுரு என்னாநில் ஏந்தல் வாழி!
இவர் துணைவி புவனேசம்மா வாழி! வாழி!!

– வெள்ளி விழா 01.09.2008 –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org